கலைஞரின்
கடிதங்கள்

8

03.07.1979 - முதல்
18.08.1980 - வரை

சீரகப் பதிப்பகம்

கலைஞரின் கடிதங்கள்

தொகுதி - 8

03.07.1979 -18.08.1980

தி.மு.க. பொதுக்குழு
அய்வக நூல்
நிலையம்
சென்னை-18
அறிவாலயம்

தலைவர் கலைஞர்

சீதை பதிப்பகம்,
சென்னை-05. ☎ 97907 06549/97907 06548

நூல் கிடைக்குமிடம் :

AVAILABLE @ :

கௌரா புத்தக மையம்

9, செயின்ட் ஜான் சர்ச்சு வணிக வளாகம், ராக்கின்ஸ் சாலை,
திருச்சி - 620 001.
9952034876 / 9943428994
04312419584.

GOWRA PUTHAGA MAIYAM

9, SAINT JOHN CHURCH COMPLEX,
ROCKINS ROAD, TRICHY - 620 001
99520 34876 / 04312419584.
gowraputhagamaiyam@gmail.com

கௌரா ஏஜென்ஸீஸ்

எண்.1 சாமி தெரு,
(சாய் பாபா கோவில் பின்புறம்)
திருவல்லிக்கேணி, சென்னை - 05.
9790706548 / 9790706549
044 28443791.

GOWRA AGENCIES

NO : 1 SAMY STREET,
(SAI BABA TEMPLE BACK SIDE)
TRIPLICANE, CHENNAI - 05.
9790706548 / 044 28443791.
gowra09@gmail.com

கலைஞரின் கடிதங்கள்

KALAIGNARIN KADITHANGAL

விலை : ரூ.**300.00** CODE :**2300**

எழுதியவர் : **கலைஞர்**
தொகுப்பாசிரியர்கள் :
கோ.சண்முகநாதன் M.com BGL
முனைவர் கி. இராஜமாணிக்கம் IAS ஓய்வு
(கலைஞரின் செயலாளர்கள்)
பொருள் : கடிதம்
© உரிமை :
பதிப்பாசிரியர் :
எஸ். கௌமாரீஸ்வரி M.A., M.L.I.S.,
பதிப்பு :
முதற் பதிப்பு – 2022
வெளியீடு :
சீதை பதிப்பகம்
6ஏ/4, பார்த்தசாரதி சாமி தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை – 600 005
பக்கம் : 400
ஒளி அச்சு : ஜெய் ஜீனா
அச்சிட்டோர் :
கிளாசிக் பிரிண்டர்ஸ், சென்னை–2.
ISBN :

AUTHOR : KALAIGNAR
EDITORS:
K. SHANMUGANATHAN M.COM BGL
DR K. RAJAMANIKAM IAS
SUBJECT : EPISTLE
© RIGHTS :
PUBLISHER :
S.GOWMAREESWARI M.A., M.L.I.S.,
EDITION :
1ST EDITION - 2022
PUBLISHED @ :
SEETHAI PATHIPPAGAM
6A/4, PARTHASARATHI SAMY STREET,
TRIPLICANE,
CHENNAI-600 005.
PAGES : 400
TYPESET BY : JAIJEENA
PRINTED @ :
CLASSIC PRINTERS, CHENNAI - 2.
ISBN :

தி.மு.க. அறிக்கட்டளை
பேராசிரியர்
அன்பழகன் நூல்
நிலையம்
சென்னை-18
அன்னாரது அறிவாலயம்



அம்மாவுக்கு...

கௌரா பதிப்பகக் குழுமம்

மு.க. ஸ்டாலின்
தமிழக முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை – 600 009.

அணிந்துரை அல்ல இது; மிகவும் பணிந்துரை!

“கலைஞரின் கடிதங்கள்” அனைத்தையும் அச்சியற்றி, வெளியிடுவதென முடிவெடுத்து, அந்த முடிவு கனிந்து, இப்போது கடிதங்கள் அனைத்தும் 54 தொகுதிகளாக வெளிவருகின்றன.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மீது கொண்டிருக்கும் மாறாத பற்றாலும், மதிப்பாலும், மரியாதையினாலும், கழக வரலாற்றில் சிறப்பு வாய்ந்த இந்த அரிய - பெரிய பணிமுழுவதையும் ஆற்றிட முன்வந்திருக்கும் சென்னை - சீதை பதிப்பகத்தார்க்கும், அதன் உரிமையாளர் அருமை நண்பர் திரு. இராஜசேகரன் அவர்களுக்கும், நெஞ்சார்ந்த நன்றியையும், மகிழ்ச்சியையும், பாராட்டுதல்களையும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், இங்கே பதிவு செய்வது என்னுடைய முதல் கடமை ஆகும்.

இந்தத் தொகுதிகள் வெளிவருவதற்குப் பின்னணியில் இருந்து, பல்லாற்றானும் உதவிய, தலைவர் கலைஞர் அவர்களின் செயலாளர்கள் - பாசம் மிகுந்த எனது அண்ணன்மார், திரு. கோ.சண்முகநாதன், முனைவர் கி.இராஜமாணிக்கம் ஆகிய இருவர்க்கும் என்னுடைய நன்றியையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. இராஜசேகரன் அவர்கள் என்னிடம், “கலைஞரின் கடிதங்கள்” தொகுதிகளுக்கு, அணிந்துரை வழங்கிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். தந்தைக்குத் தனயன் “அணி”யாகத் திகழ்ந்திட முடியுமே அன்றி; அணிந்துரை அளித்திடத் துணிவது, அதிகப்படியான செயலாக ஆகிவிடும்.

தலைவர் கலைஞர் அவர்களின் எழுத்துக்கு அணிந்துரை வழங்கிடும் உயரம் எனக்கு நிச்சயமாக இல்லை என்பதை நானறிவேன். அதனாலே அணிந்துரைக்குப் பதிலாக "பணிந்துரை" தருகிறேன் என்று சொன்னேன். அதன்படி, இது அணிந்துரை அல்ல; மிகவும் பணிந்துரை!

எழுதுவதை உயிர்மூச்சாகக் கொண்டு இயங்கிய தலைவர் கலைஞர் அவர்கள், வாழ்ந்த காலம் முழுவதும் எழுதி எழுதி இமயம்போல் குவித்தவர். அவர் எழுத்து வேந்தர்; சொல்லேருழவர்; கருத்துக் கருவூலம்; வண்ணமயமான எண்ணங்களின் வற்றாத ஊற்று!

தலைவர் கலைஞர், கழக உடன் பிறப்புகளுக்குக் கடிதம் எழுதத் தொடங்கி, மொத்தம் 4051 கடிதங்கள் எழுதியிருக்கிறார்.

ஏ அப்பா, கேட்கவே மலைப்பாக இருக்கிறது அல்லவா!

ஒரு நாளைக்கு ஒரு கடிதம் என்று வைத்துக் கொண்டாலும், தொடர்ந்து 11 ஆண்டுகள், 1 மாதம் 6 நாட்கள் கடிதம் எழுதியிருக்கிறார். இப்படி எழுதுவது தனியொரு மனிதருக்குச் சாத்தியப்படுமா என்றால்; சாத்தியப்படாத எதையும், எந்தத் துறையாக இருந்தாலும், அதை எடுத்துச் சாத்தியப்படுத்திச் சாதனை செய்து சரித்திரம் படைத்தவர் கலைஞர்!

முடியுமா, நேரம் கிடைக்குமா, உடல் நலனுக்கு ஒத்துவருமா - என்ற கேள்விகளின் முனைமுறித்துப் போட்டவர் கலைஞர். பெரும்பாலும், காலை எழுந்ததும் கடிதம் எழுதுவது, கலைஞர் தவறாது தொடர்ந்து இறுதிவரை ஆற்றிய கடமையாகவே இருந்தது. இந்த அளவுக்கு, நான்கு ஆயிரத்திற்கும் மேற்பட்ட கடிதங்கள் எழுதி வெளியிட்டிருக்கும், ஒரே அரசியல் தலைவர் அகில உலகத்திலும் அவர் ஒருவரேதான்!

கடிதம் எழுதுவது என்பது, கிரேக்கத்திலிருந்து தொடங்குகிறது. டையோஜெனீஸ் (கி.மு.412 - 323) என்ற கிரேக்க ஞானி, தன்னைக் காண அலெக்சாந்தர் விரும்பியதாக அவருடைய நண்பர் அரிஸ்ட்டிப்பஸ் எழுதிய கடிதத்திற்கு, அனுப்பிய பதில் கடிதம் பிரபலமானது.

கிரேக்க தத்துவ ஞானி சாக்ரட்டீஸின் 9 கடிதங்கள் வரலாற்றில் இடம்பெற்றிருப்பவை. இயேசுநாதரின் சீடர்கள்

எழுதிய கடிதங்கள், விவிலியத்தின் புதிய ஏற்பாட்டில் பொறிக்கப்பட்டுள்ளன. சிசரோ, ரோமாபுரியின் வரலாற்றை 835 கடிதங்களாக எழுதி வைத்திருக்கிறார்.

லியோ டால்ஸ்டாய், ஹோரஸ் வால்போல், மெக்காலே, கோல்ட் ஸ்மித், பைரன், கீட்ஸ், பெர்னாட்ஷா போன்ற அறிஞர்கள் பலரும் எழுதிய கடிதங்கள் கடித இலக்கியத்தில் முக்கியமான பங்கு வகிக்கின்றன.

கலையரசி மாதவி, கோவலனுக்கு இரண்டு கடிதங்கள் அனுப்பியதாகச் சொல்கிறது சிலப்பதிகாரம். விவேகானந்தர், அமெரிக்கா சென்றிருந்தபோது அவருடைய நண்பர்களுக்கு எழுதிய கடிதங்கள், அண்ணல் காந்தி அடிகள் பல்வேறு சூழ்நிலைகளில் எழுதிய எண்ணற்ற கடிதங்கள், பண்டித நேரு அவர்கள் சிறையில் இருந்தவாறே அவருடைய மகள் இந்திரா காந்தி அம்மையாருக்கு எழுதிய கடிதங்கள் (உலக வரலாறு) ஆகியவை கடித இலக்கியமாகப் பார்க்கப்படுகின்றன.

மறைமலை அடிகளாரின் நாவல் "கோகிலாம்பாள் கடிதங்கள்", இலக்கியச் சுவையும் தரமும் உடையது. கடிதக் இலக்கியத்தை கருத்துச்செறிவுடன் கையாண்டவர் டாக்டர் மு.வரதராசனார் அவர்கள் ஆவார்கள். அவருடைய "அன்னைக்கு', "தம்பிக்கு", "நண்பர்க்கு', "தங்கைக்கு" ஆகியவை

ஒருகட்டத்தில் மொத்தத் தமிழ் மக்களின் கவனத்தையும் கவர்ந்தவை.

அந்த வரிசையில் வைத்துப் போற்றிப் புகழத் தக்கவை, புகழ்ந்து நினைவிலே வைத்து எப்போதும் பாதுகாத்திடத் தக்கவை, பாதுகாத்துப் பாரம்பரியமாகப் படித்துப் பயன்பெறத் தக்கவை, பேரறிஞர் அண்ணா அவர்களின் "தம்பிக்கு" கடிதங்களும்; அண்ணா அவர்களைப் பின்பற்றி, தலைவர் கலைஞர் எழுதிய "உடன்பிறப்புக்கு" கடிதங்களும் ஆகும்.

தந்தை பெரியார் அவர்கள் எதிலும், எப்போதும் அறிவியல்பூர்வமான அணுகுமுறையைப் பின்பற்றியவர் என்றால்; பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும், அடிப்படையில் கலை உணர்வு மிக்கவர்கள் என்பதால், அறிவியல் உண்மைகளையே, கவித்துவ நடையில் எடுத்து இயம்பியவர்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும், அன்றாட அரசியல் பிரச்சினைகளையும், உலக நிகழ்வுகளையும், கட்சித் தோழர்களுக்கு எடுத்துச் செல்லவும், ஏற்றபடி தொகுத்துச் சொல்லவும், கடித வடிவத்தைக் கைக்கொண்டார்கள்; அந்தக் கடிதங்களை இலக்கியத் தேனில் தோய்த்து, திகட்டாத தெள்ளுதமிழில் வாரி வழங்கினார்கள். அவற்றைப் படித்துப் படித்து, தம்பிமார்களும், உடன்பிறப்புகளும், விவரங்களை அறிந்து, விழிப்புணர்ச்சி வளர்ந்திடப் பெற்றார்கள்.

அண்ணா - கலைஞர் கடிதங்கள், "வீழ்ச்சியுற்ற தமிழினத்தில் எழுச்சி வேண்டும்; விசை ஒடிந்த தேகத்தில் வன்மை வேண்டும்; சூழ்ச்சிதனை வஞ்சகத்தைப் பொறாமைதன்னைத் தொகையாக எதிர் நிறுத்தித் தூள்தூளாக்கும் காழ்ச்சிந்தை மறச்செயல்கள் மிகவும் வேண்டும்; கடல்போலச் செந்தமிழைப் பெருக்க வேண்டும்;" என்ற உயரிய, உன்னத நோக்கில் எழுதப் பட்டவை.

பேரறிஞர் அண்ணா அவர்களின் கடித இலக்கியத்தில், இல்லாததே இல்லை என உறுதியாகச் சொல்லலாம். உலக நாடுகளின் வரலாறு, இந்திய வரலாறு, சங்கத் தமிழ், இலக்கியங்கள், அரசியல் நிகழ்வுகள் என எல்லாவற்றையும்;

தமது தம்பிமார்கள் அறிந்திருக்க வேண்டும்; அறிந்திருப்பவற்றை அய்யம் திரிபறத் தெரிந்திருக்க வேண்டும்; தெரிந்து கொண்டவற்றைத் தெருக்கள்தோறும், திண்ணைகள்தோறும் கொண்டுசென்று விளக்கி உரைத்து, இன - மொழிப் பெருமையை மீட்டெடுக்க வேண்டும்; தமிழர்கள் மானமும் அறிவும் வளர்த்து மாமனிதர்களாக உயர்ந்திட வேண்டும்; என்ற பேரவாவுடன் எழுதப்பட்டவை அந்தக் கடிதங்கள்!

பேரறிஞர் அண்ணா அவர்களைப் போலவே, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும், உடன்பிறப்புகளுக்குக் கடிதம் எழுதும் முன்; அன்று தலையாயதான எந்தப் பிரச்சினையைப் பற்றி எழுத வேண்டும் என்பதைத் தீர்மானித்து, அந்தப் பிரச்சினையின் முழுப் பரிமாணங்களையும் அறிந்து, சிந்தித்து, சொல்ல வேண்டியவற்றை மன ஏட்டில் வரிசைப்படுத்தி; படிப்போர் வியக்கும்படி எழுதி முடிப்பதில், ஈடு இணை இல்லாதவர் என்பதை, ஒவ்வொரு கடிதத்திலும் நிரூபித்துக் காட்டி விடுவார்.

அதுமட்டுமல்ல; ஒரு கடிதத்தை எழுதியதற்குப் பிறகு, அவரே ஒரு முறை அதை நுட்பமாகப் படித்துப் பார்த்து விடுவார்; அத்துடன் விட்டு விடுவாரா? இல்லை; தமது செயலாளரைக் கூப்பிட்டுப் படிக்கச் சொல்வார்; ஏதாவது சந்தேகம் இருக்கிறதா என்று கேட்பார்; சந்தேகம் என்றால், அந்த இடத்தை எளிதில் புரிந்து கொள்ளும்படி மாற்றம் செய்வார்; அத்துடன் முடிந்ததா என்றால், இல்லை; கடிதம் அச்சியற்றப்பட்டு, "ப்ரூஃப்" வந்ததும், மீண்டும் ஒருமுறை அவரே படித்துப் பார்ப்பார் அல்லது தன்னுடைய செயலாளரை படிக்கச் சொல்லி ஊன்றிக் கேட்பார்; பின்னர் அன்றைய "முரசொலி" இதழ் முழுமையாகி வந்ததும், ஒரு முறை படிப்பார்; மாலையில் வெளியூர் - இதழ் கைக்குக் கிடைக்கும்போது, அண்ணன் ஆர்க்காட்டாரோ, அண்ணன் துரைமுருகனோ, முனைவர் பொன்முடியோ, அல்லது நானோ பக்கத்தில் இருந்தால், இதழைக் கொடுத்துப் படிக்கச் சொல்லிச் செவிமடுப்பார்.

மறுநாள், அறிவாலயத்திலோ, அல்லது இல்லத்திலோ, கழகத் தோழர்கள் யாரும் எதிர்ப்பட்டால், "கடிதம் படித்தாயா?" என்றுதான் முதலில் கேட்பார்.

இவை அனைத்தையும் அருகிருந்து நான் பார்த்திருக்கிறேன். ஒவ்வொரு முறையும் அவருடைய முகத்தில் அலுப்போ, சலிப்போ தோன்றாது. படிக்கப் படிக்க உற்சாகம் கொள்வார். கடிதத்தில் எழுதி இருப்பதை அப்படியே நினைவில் செதுக்கி வைத்திருப்பார்; எத்தனை மாதங்கள் ஆனாலும் கடிதத்தில் எழுதிய கருத்தை அப்படியே திருப்பிச் சொல்வார்; நாங்கள் அவருடைய கருத்தை, நினைவாற்றல் பிசகு காரணமாக, மாற்றிச் சொல்ல நேரிடும்போது, திருத்துவார்.

அப்பப்பா; அப்படி ஒரு தலைவரை, இன்னொரு முறை வாழ்நாளில் காண முடியுமோ? "இங்கிவரை யாம் பெறவே என்ன தவம் செய்து விட்டோம்!".

கலைஞர் ஒரு பன்முகங்கொண்ட பேராளுமை. கடித இலக்கியம், அவரது ஒரு முகம், ஒப்பிலாத் திருமுகம்!

1968-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 22-ஆம் நாள் முதல், 1977-ஆம் ஆண்டு பிப்ரவரி 13-ஆம் நாள் வரையில்

கலைஞரின் கடிதங்கள், பத்துத் தொகுதிகளாக 1986-ஆம் ஆண்டில் வெளிவந்தன; அதைத் தொடர்ந்து, 11 மற்றும் 12-ஆவது தொகுதிகள், 1993-ஆம் ஆண்டில் வெளிவந்தன.

22.10.1968-இல் தலைவர் கலைஞர் எழுதிய முதல் கடிதத்திலிருந்து, 15.11.2016 அன்று எழுதிய கடைசிக் கடிதம்வரை அனைத்துக் கடிதங்களையும் வெளியிட முடிவுசெய்து; இப்போது, சீதை பதிப்பகத்தார் வெளியிடுகிறார்கள்.

கலைஞர் கடிதங்கள் ஏற்கனவே 12 தொகுதிகளாக வெளியிடப்பட்டபோது, "என்னுரை" என்ற பகுதியில், தலைவர் கலைஞர் அவர்கள் எழுதி அளித்த முன்னுரை, அப்போதும் இப்போதும் முக்கியத்துவம் வாய்ந்தது மட்டுமல்லாமல்; வெளிவரவுள்ள "கலைஞரின் கடிதங்கள்" ... தொகுதிகள் அனைத்திற்கும் முன்னுரை - அறிமுக உரையாகக் கொள்ள வேண்டும்.

தலைவர் கலைஞரின் அந்த "என்னுரை"யில், "நண்பா" என விளித்துத் தொடங்கியும், "உடன்பிறப்பே" என விளித்துத் தொடங்கியும், இங்ஙனம் "மறவன்" என முடித்தும் "அன்புள்ள மு.க.'' என முடித்தும், "மறவன் மடல்" வார இதழிலும், "நம் நாடு" வார இதழிலும் மற்றும் பெரும்பாலும், நாள்தோறும் அல்லது வாரத்தில் நாலைந்து முறை "முரசொலி' நாளிதழிலும் நான் எழுதிய கட்டுரைகளின் வடிவமே "கலைஞர் கடிதம்" என்று தலைவர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டது, இப்போது வெளிவரும் "கலைஞரின் கடிதங்கள்" தொகுதிகளுக்கும் மெத்தப் பொருந்தும்.

மேலும் அந்த "என்னுரை"யில்: "என் கடிதங்கள் காலை ஏழு மணிக்குப் பிறப்பெடுக்கும்; ஒவ்வொரு நாளும்! பொதுவாழ்வில் இதுவரை; பாசறை - போர்க்களம் - பதவிப் பொறுப்பு - பணியாற்றும் வாய்ப்பு - இப்படி மாறி மாறி வரினும் சந்தித்த; இன்னமும் சந்தித்துக் கொண்டிருக்கிற சோதனைகள் எண்ணிலடங்கா!"

"குமுறல் - கொந்தளிப்பு - கவலை - கலக்கம் - ஏமாற்றம் - துரோகம் - இப்படி எத்தனையோ ஈட்டிகள் என் இதயத்தில் பாய்ந்து ரணமாக்கியுள்ளன". அந்த ரணம் ஆற்றிடும் மருந்தாகத்தான் எனது எழுத்துகள் எனக்குப் பயன்பட்டிருக்கின்றன!"

“எனது கடிதத் தொகுப்புகளில் பல செய்திகள், நிகழ்ச்சிகள், மதிப்புமிக்க தலைவர்கள், அன்புக்குரிய நண்பர்கள் விமர்சிக்கப்பட்டிருக்கலாம். அது; அந்தக் காலகட்டத்து அரசியல் தட்பவெப்பத்தைக் காட்டுவதாகவே எடுத்துக்கொள்ள வேண்டுமெனப் பணிவன்புடன் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்” என்று தலைவர் கலைஞர் அவர்கள் விளக்கிச் சொன்னதை, இந்தத் தொகுதிகளைப் படிக்கும்போது, கவனமாகக் கருத்தில் இருத்திக் கொள்ள வேண்டுமென்று விரும்பி வேண்டுகிறேன்.

தலைவர் கலைஞர், 22.10.1968 - அன்று, “அன்பு நண்பா !” என விளித்து, “ஜாக்குலின்கள்” என்று தலைப்பிட்டு எழுதிய முதல் கடிதம், அவர் எவ்வளவு

அதிசயிக்கத்தக்க நுட்பமான ஆற்றலாளர் என்பதை எடுத்துக் காட்டும்.

அமெரிக்க ஜனாதிபதி கென்னடியின் மனைவி ஜாக்குலின், தனது கணவர் கல் நெஞ்சன் ஒருவனின் துப்பாக்கிக்கு இரையானதற்குப் பின்னர், அய்ந்தாண்டுகள் பொறுத்திருந்து, தனது 39 வயதில், ஒனாசிஸ் என்ற 68 வயது கோடீஸ்வரனை, மறுமணம் செய்துகொண்டார்; இந்தத் திருமணத்தை அமெரிக்க நாட்டிலேயே பெரும்பாலானோர் விரும்பவில்லை; என்பது செய்தி.

இந்தச் செய்தியை கழகத் தோழர்கள் அறிந்துகொள்ள வேண்டும் என எண்ணிய தலைவர் கலைஞர், அந்தச் செய்தியை; கழகத்திலே இருந்த சிலர் - பாசத்தோடு பழகிய நண்பர்கள், சென்னை மாநகராட்சித் தேர்தலில் சுயேட்சை வேட்பாளர்களாக மாறிய நிகழ்வோடு ஒப்பிட்டு எழுதியிருக்கிறார்.

அங்கே, சொந்த நாட்டிலே பாராட்டப்படாத மறுமணம்; இங்கே பதவி வெறியைத் தணித்துக் கொள்ள, கழகத்தையே எதிர்த்து சுயேட்சைகளாகப் போட்டியிட்ட கழகத் தோழர்கள்.

எந்தச் செய்தியையும் மேலோட்டமாகப் பார்த்து, கடந்து செல்பவரல்ல கலைஞர். அந்தச் செய்தியை, கழகத்தை நிலைநிறுத்தவும், கழகத் தோழர்களுக்கு உணர்ச்சி ஊட்டவும், எப்படிப் பயன்படுத்தலாம் என்று நினைத்துக் காத்திருந்தவர் கலைஞர்.

15.11.2016 - அன்று தலைவர் கலைஞர், “மத்திய அரசின் அறிவிப்பும், சாதாரண மக்களின் அவதியும்” என்ற தலைப்பில் “முரசொலி”க்கு எழுதிய கடைசிக் கடிதம்; பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் பண மதிப்பிழப்பு அறிவிப்பைப் பற்றியது. ‘

அந்தக் கடிதத்தில், ஏடுகளில் வெளியான செய்திகளை எடுத்துக்காட்டி, பணமதிப்பிழப்பு நடவடிக்கையினால் நாட்டிலே ஏற்பட்ட விளைவுகளை விளக்கியிருக்கிறார்.

குபேரர்களைப் பற்றியோ, கோடி கோடியாய்ப் பணம் குவித்திருக்கும் செல்வந்தர்களைப் பற்றியோ, மேட்டுக்குடிகளைப் பற்றியோ எப்போதும் கவலைப்படாதவர் கலைஞர்.

நடுத்தர மக்கள், அடித்தள மக்கள், உழைத்து வாழும் பிரிவினர், அன்றாடங்காய்ச்சிகள் - ஆகியோரைப் பற்றியே சதாசர்வ நேரமும் நினைந்து நினைந்து கசிபவர் கலைஞர் என்பதை; பண மதிப்பிழப்பு நடவடிக்கையினால் அவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளை, அந்தக் கடைசிக் கடிதத்தில் பட்டியல் இட்டிருக்கிறார்.

அந்தப் பிரிவினர்தானே கழகத்தின் வேர்கள்! மண்ணுக்குள் மறைந்திருந்து மரத்தைத் தாங்கும் வேர்களைப் போல, கண்ணுக்கெட்டிய தூரம்வரை கழகத்தைக் காத்து நிற்பவர்கள் அவர்கள் அல்லவோ! அதனால்தான் தலைவர் கலைஞர் அவர்களுக்கு, கடைசிவரை, அவர்கள் மீது அவ்வளவு அக்கறை, ஆழ்ந்த பிடிப்பு!

பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும் கடிதத்திற்குத் தலைப்பு சூட்டும்போது; சிற்பி செதுக்கியானதும் சிற்பத்திற்குக் கண் திறப்பு செய்வதைப் போல, ஒளி பொருந்திய - கருத்தாழம் மிகுந்த - நினைவில் நீடித்து நிற்கக்கூடிய, தலைப்புகளைத் தேர்ந்தெடுத்து அலங்கரிப்பார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்கள்:

“காகிதக் கப்பலில் கவனம் செலுத்தாதே தம்பி”
“மகுடி ஊதும் மகானுபாவர்கள்’’
“கிளிக்குப் பச்சை பூசுவதா?”
“கண்ணீரும் பன்னீரும்”

"படமும் பாடமும்"
"மூலவர் மூவர் முரசொலி"

போன்ற எண்ணற்ற தலைப்புகளை கடிதங்களுக்குச் சூட்டியிருக்கிறார். -

ஒவ்வொரு அங்குலமும் அண்ணாவின் அடியொற்றி வளர்ந்த கலைஞர்

அவர்கள்:

"நேர்மையும் பொறுப்பும், நீர்மேல் எழுத்தல்ல!"
"எருக்கம் பூவில், இனிய மணம் தேடுவதோ?"
"கண்ணுக்கு விருந்தானாய் - மனப் புண்ணுக்கு மருந்தானாய்!"
"அன்று எத்தனை பிரிவு? இன்று எத்துணைப் பரிவு?"
"இடர் எது வரினும், ஏற்பேன்"
"பறித்து வராத பாரிஜாதம்"

போன்ற நினைவில் நங்கூரம் போட்டு நிற்கும் தலைப்புகளையே சூட்டியிருக்கிறார்.

கலைஞரின் கடிதங்கள், காலத்தின் கண்ணாடி! கலைஞரின் கடிதங்கள், கற்கண்டுச் சொற்கோவை! கலைஞரின் கடிதங்கள், கருத்துச் சுரங்கம்! கலைஞரின் கடிதங்கள், வானவில்லைப் போல, வண்ணங்கள் நிறைந்த எண்ணங்களின் பசுஞ்சோலை! கலைஞரின் கடிதங்கள், கடலின் ஆழத்தைக் காட்டும், மலையின் உயரத்தை உரசும்! கலைஞரின் கடிதங்கள், நினைத்தாலே இனிக்கும், நெஞ்சமெல்லாம் மணக்கும்!

கலைஞரின் ஒவ்வொரு கடிதத்தையும் ஊன்றிப் படித்து, ஒப்பிலாப் பயன் பெறுக! "யாம் பெற்ற இன்பம், பெறுக தமிழ் வையகம்!"

அன்புடன்,

(மு.க. ஸ்டாலின்)
14.09.2021

பதிப்புரை

அரசியல் இலக்கியமான கலைஞரின் கடிதங்கள்

திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆறாவது முறையாக ஆட்சிக் கட்டிலில் அமர்த்தி, அதனை உங்களுக்குக் காணிக்கையாக்குவேன் என வங்கக் கடலோரம் பேரறிஞர் அண்ணா துயிலுமிடத்தை ஒட்டி, ஓய்வெடுக்கும் முத்தமிழறிஞர் கலைஞரின் நினைவிடத்தில் சூளுரைத்தவர் கழகத் தலைவர் தளபதி அவர்கள். தேர்தல் களத்தில் மகத்தான வெற்றி பெற்று, அந்த வெற்றியைக் கலைஞரின் ஓய்விடத்தில் காணிக்கையாக்கி, தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவர் மாண்புமிகு **முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்** அவர்கள்.

சொன்னதைச் செய்வோம் என்று சூளுரைத்து நிறைவேற்றியவர் முத்தமிழறிஞர் கலைஞர். சொல்லாமலே செய்து முடிப்பவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள். தலைவர் கலைஞரின் விருப்பப்படி, கடற்கரையில் இடம் ஒதுக்கப்படுமா என அவர் மறைந்தபோது தமிழ்நாட்டில் மட்டுமின்றி, உலகெங்கும் வாழும் தமிழர்களிடம் பதற்றம் கலந்த எதிர்பார்ப்பு மிகுந்திருந்தது. அப்போதைய ஆட்சியாளர்கள் காழ்ப்புணர்வுடன் மறுத்த நிலையில், நீதிமன்றத்தை நாடி, விடிய விடிய சட்டப் போராட்டம் நடத்தி, கடற்கரையில் தலைவர் கலைஞருக்கான இடத்தை உறுதி செய்து, உலகத் தமிழர்களின் நெஞ்சில் உயர்ந்து நின்றவர் நம் முதல்வர்.

தந்தைக்குத் தனயனாக, தலைவருக்குத் தொண்டனாக, இயக்கத்தின் தலைமையாக எல்லா நிலையிலும் தலைவர் கலைஞரின் பேராற்றலை மக்கள் நெஞ்சங்களில் நிலைத்திருக்கச் செய்யும் பெரும்பணியை முதல்வர் அவர்கள் மேற்கொண்டு வருகிறார். அத்தகைய பெரும்பணிகளில் ஒன்றைச் சீதை பதிப்பகத்திடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்தார். அதுதான், கலைஞர் கடிதங்கள் எனும் இந்த மாபெரும் தொகுப்பு. 4051 **கடிதங்களைக் கொண்ட 54 பாகங்களாக** வெளியாகியுள்ள இந்தத் தொகுப்பிற்கு அணிந்துரையை மாண்புமிகு முதல்வர் அவர்களே வழங்கியிருப்பது, சீதை பதிப்பகத்தின் மீது அவர் வைத்திருக்கும் நம்பிக்கையின்

வெளிப்பாடு. அணிந்துரை என்ற சொல்லுக்குப் பதில் பணிந்துரை என அவர் பயன்படுத்தியிருப்பது தனது தந்தையும் தலைவருமான முத்தமிழறிஞர் கலைஞர் மீது எப்போதும் அவர் வைத்திருக்கும் பெருமதிப்பின் அடையாளம். மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

'கலைஞரின் கவிதை மழை'யை வெளியிடும் முதல் வாய்ப்பைப் பெற்றுத் தந்த எங்கள் வழிகாட்டியான மூத்த பத்திரிகையாளர் **அய்யா சின்னகுத்தூசி**யை நினைவில் கொள்கிறோம். தலைவர் கலைஞர் அவர்களே அப்போது அதனை மெய்ப்புப் பார்த்து, முழு வடிவம் பெறச் செய்தார். ஒன்றிய அமைச்சர்கள், தோழமைக் கட்சித் தலைவர்கள், தமிழின் மிகப் பெரும் கவிஞர்கள், கழக நிர்வாகிகள் முன்னிலையில் அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் கவிதை மழை வெளியீட்டு விழா சிறப்பாக நடைபெற்றது.

அதுபோலவே, முத்தமிழறிஞர் கலைஞரின் சிறுகதை இலக்கியத்தை சிறுகதைப் பூங்கா எனும் தலைப்பில் சீதை பதிப்பகம் வெளியிட்ட போதும், மிகச் சிறப்பான விழா நடத்தப்பட்டு, அருமையான உரையை வழங்கினார் தலைவர் கலைஞர் அவர்கள். கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் அவர் ஆற்றிய உரைகளை 'கல்வி நிலையங்களில் கலைஞர்' எனக் கடலூர் இள. புகழேந்தி அவர்கள் தொகுத்திட, அதனைச் சிறப்பான முறையில் வெளியிட்டது சீதை பதிப்பகம்.

இன்றைய தகவல்-தொழில்நுட்பமும் சமூக வலைத்தளங்களும் இல்லாத காலத்தில், ஒவ்வொரு நாளும் தனது இயக்கத் தொண்டர்களுடன் உரையாடுவதற்கான ஊடகமாக உடன்பிறப்புக் கடிதங்களைத் தலைவர் கலைஞர் மிகச் சிறப்பாகக் கையாண்டார். அந்தக் கடிதங்களை முழுமையான தொகுப்பாகக் கொண்டு வரவேண்டும் என்ற எண்ணம் அவரிடம் இருந்தது. அந்த எண்ணத்தை முதல்வர் அவர்கள் நிறைவேற்றியுள்ளார்.

கடிதங்களின் முழுத் தொகுப்பு உருவாக்கப் பணியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர் தலைவர் கலைஞரின் நிழலாக, அவரது மனதின் குரலை அறிந்தவராக விளங்கிய உதவியாளர் **அய்யா கோ.சண்முகநாதன்** M.com BGL அவர்கள். கலைஞர் அந்தக் கடிதங்கள் பலவற்றையும் எழுதியபோதே

அருகிலிருந்து கவனித்தவர் என்பதாலும், அப்போதே மெய்ப்புப் பார்த்து அச்சுக்கு அனுப்பியவர் என்பதாலும், ஒவ்வொரு கடிதத்தின் காலகட்டத்தையும் அறிந்து முறையாகத் தொகுத்தளித்தார். தனது இறப்பிற்கு முன்பாக, கடிதத் தொகுப்புப் பணியை முழுமையாக நிறைவேற்றிவிட்டே நம்மிடமிருந்து பிரியாவிடை பெற்றிருக்கிறார் அய்யா சண்முகநாதன். எப்போதும் எங்கள் மீது அளப்பரிய அன்பைப் பொழிந்த அய்யாவை சீதை பதிப்பகம் எந்நாளும் நினைவில் கொண்டிருக்கும்.

மறவன் என்ற பெயரில் முதலில் கடிதங்களை எழுதிய தலைவர் அவர்கள் பின்னர் மு.கருணாநிதி, மு.க. என உடன்பிறப்புகளுக்குக் கடிதங்கள் எழுதியுள்ளார். பின்னர் மீண்டும் மு.கருணாநிதி என்ற பெயரிலேயே கடிதங்களைத் தொடர்ந்து எழுதியுள்ளார். தலைவர் கலைஞர் அவர்களின் கடிதங்களைக் காலவரிசைப்படுத்தி, தொகுப்பில் விடுபட்ட கடிதங்களையும் தேடி இணைப்பதில் முனைவர் **திரு கி. இராஜமாணிக்கம்** ஐ.ஏ.எஸ்.(ஓய்வு) அவர்களின் பணி அளப்பரியது. தலைவர் கலைஞரின் அருகிலிருந்து ஆட்சிப்பணியையும் இயக்கப் பணியையும் கவனித்த அவர், இந்தத் தொகுப்பு மிகச் சிறப்பான முறையில் வெளியாவதற்குத் துணை நின்றவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் படைப்புகளை வெளியிடும் ஒவ்வொரு வாய்ப்பும் சீதை பதிப்பகத்திற்குப் பெருமை தரக்கூடியதாகும்.

சீதை பதிப்பகத்தின் வெளியீடுகளைத் தலைவர் கலைஞர் அவர்களை நேரில் சந்தித்து வழங்கும் போது ஏற்பட்ட மகிழ்ச்சிக்கும் உணர்ச்சிக்கும் அளவில்லை. அதன் தொடர்ச்சியாக, கழகத் தொண்டர்களுக்கும் தமிழ்நாட்டு மக்களுக்கும் அரசியல் இலக்கியமான முரசொலி உடன்பிறப்புக் கடிதங்கள் முழுத் தொகுப்பு எனும் இமாலயப் பணியை நிறைவேற்றியிருப்பதை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்குச் சீதை பதிப்பகத்தின் புகழ்வணக்கமாகக் கருதுகிறோம்.

இந்தப் பணியை எங்களிடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்குகிறோம்.

பதிப்பகத்தார்

உள்ளே...

தலைப்பு	ஆண்டு	பக்கம்
674. அறைகூவலை ஏற்றுக் கொள்வோம்!	03-07-1979	23
675. தர்மபுரியில் தரங்கெட்ட பேச்சு!	04-07-1979	29
676. பிற்படுத்தப்பட்ட மக்களுக்குப் பேராபத்து!	05-07-1979	35
677. பொதுக்குழு கூட்டுவோம்! போர்க்கொடி ஏந்துவோம்!!	06-07-1979	42
678. ஸ்கைலாப்! ஸ்கைலாப்!!	09-07-1979	45
679. கொள்கை காத்திடக் கூடுவோம் சென்னையில்!	13-07-1979	49
680. எச்சரிக்கை தேவை! எழுச்சி தேவை!	14-07-1979	53
681. அணி திரளுவோம்! அணை கட்டுவோம்!	22-07-1979	67
682. நியாயத்தைக் கேட்கிறேன்; நீதிபதிதான் பதில் சொல்ல வேண்டும்!	27-07-1979	72
683. பலரை அடையாளம் காட்டிய பதினெட்டு நாட்கள்!	28-07-1979	78
684. தூத்துக்குடி துயரம்!	02-08-1979	84
685. தமிழகம் போர்க்களமாகியே தீரும்!	04-08-1979	89
686. இன்றைய தமிழகம் குமுறும் எரிமலை!	08-08-1979	92
687. மாஸ்கோவைக் காண்க! மார்க்சிஸ்டுகள் சிந்தனைக்கு!	14-08-1979	99

688. சீற்றம் வரலாமோ? தூற்றுதல் முறைதானோ? 1	26-08-1979	106
689. சீற்றம் வரலாமோ? 2 வழி மறைத்தது யார்? வசைபாடுவது யாரை?	28-08-1979	109
690. புதிய உறவல்ல! பழைய உறவின் தொடர்ச்சியே!	21-09-1979	114
691. பீம்சிங்! இது என்ன புதுக் குழப்பம்!	23-09-1979	119
692. கசப்பினை மறப்போம்! கை கோர்த்து எழுவோம்!	24-09-1979	122
693. அணி வகுத்திடு! பணி முடித்திடு!	27-09-1979	130
694. செயல்திறனே! வா! சிங்கத்தின் உருவே! வா!	28-09-1979	135
695. இப்படை தோற்கின் எப்படை வெல்லும்!	05-10-1979	140
696. பெயர்... என்ன? என்ன? என்ன?	07-10-1979	145
697. என்ன செய்யப் போகிறார்கள்?	08-10-1979	148
698. இலக்கியத்தில் ஒரு எடுத்துக்காட்டு!	15-10-1979	151
699. என்னதான் நடக்கும்? நடக்கட்டுமே?	17-10-1979	155
700. அந்த எட்டு மணி நேரம்! - 1	11-11-1979	158
701. அந்த எட்டு மணி நேரம்! - 2	12-11-1979	162
702. அந்த எட்டு மணி நேரம்! - 3	13-11-1979	167
703. அந்த எட்டு மணி நேரம்! - 4	14-11-1979	172
704. இரட்டைக் குழல் துப்பாக்கி!	16-11-1979	176
705. இதோ! அந்த வரிசையில் - ஒரு ஏடு!	24-11-1979	181
706. பிரதமர் விஜயம் - பெரு வெற்றி!	26-11-1979	187
707. கூட்டணியின் கூர்வாளே! வா! வா!	30-11-1979	191
708. கலைஞர் எழுதும் அஞ்சலட்டை!	21-12-1979	193

709. கலைஞர் எழுதும் அஞ்சலட்டை!	22-12-1979	194
710. கலைஞர் எழுதும் அஞ்சலட்டை!	23-12-1979	195
711. கலைஞர் எழுதும் அஞ்சலட்டை!	25-12-1979	196
712. கலைஞர் எழுதும் அஞ்சலட்டை!	26-12-1979	197
713. வெற்றிப் படையை நடத்திக் காட்டுக!	28-12-1979	198
714. கலைஞர் எழுதும் அஞ்சலட்டை!	30-12-1979	200
715. தயார்படுத்திக் கொள்வோம்!	15-01-1980	202
716. விழி திறந்து பார் அண்ணா!	03-02-1980	204
717. வாழ்த்துகிறேன்! வணங்குகிறேன்!	16-02-1980	207
718. பாசறை அமைப்போம்; வா!	21-02-1980	209
719. நேரம் வந்துவிட்டது!	22-02-1980	213
720. தொண்டு, தொடரட்டும்!	24-02-1980	215
721. சிவாஜியுடன் நடிக்க மாட்டேன்!	26-02-1980	217
722. நாடறிந்த நரியின் கதை!	28-02-1980	219
723. மனச்சாட்சி உள்ளவர்களுக்கு மாத்திரம்!	06-03-1980	223
724. மனப்புண் ஆற்றிடும் மருந்தே வா!	14-03-1980	227
725. தடுத்து நிறுத்த முடியாது!	17-03-1980	230
726. பார்த்தாயா பரிவினை? கண்டாயா கனிவினை?	20-03-1980	234
727. அன்று எத்தனை பிரிவு? இன்று எத்துணைப் பரிவு?	26-03-1980	238
728. அணி வகுப்போம்! பணி முடிப்போம்!	31-03-1980	243
729. காதைக் குளிர வைக்கும் கழக வீணையின் நாதம்!	2-04-1980	249

730. ஆழமாக என் நெஞ்சில் பதிந்த அண்ணாவின் கருத்து!	03-04-1980	253
731. இஸ்லாமிய பேராசிரியரின் இலக்கிய வகுப்பு உடன்பிறப்பே,	11-04-1980	257
732. நீ இருக்கும்போது! உன் நெஞ்சில் நான் இருக்கும்போது!	5-05-1980	261
733. சில அலைகளின் ஒலி!	7-05-1980	265
734. மதுரையிலிருந்தும் முழங்கிடும் முரசொலி!	21-05-1980	268
735. விழி! எழு! விடிவு காலத்தை எழுது!	22-05-1980	270
736. யார் மீது குறை? எவர் மீது குற்றம்?	17-06-1980	273
737. சில நேரங்களில் சில மனிதர்கள்!	18-06-1980	276
738. குள்ளநரித்தனம் புரிகிறதா?	19-06-1980	281
739. ஆயிரங்காலத்துப் பயிர் அதனை அழியாமல் காப்போம்!	20-06-1980	284
740. நான் செய்த தவறு!	21-06-1980	289
741. கோழைகள் அல்லர்! கொள்கைக் குன்றங்கள்!!	22-06-1980	293
742. அரும்புகளா? அம்புகளா?	23-06-1980	298
743. வேட்டை நாயும் தேட்டை நாயும்!	28-06-1980	301
744. திசை திருப்புவோர் எச்சரிக்கை!	1-07-1980	306
745. அட! அங்கேயும் இப்படியா?	3-07-1980	310

746. அவர்களை இன்னும் பேசவிடுவோம்!	5-07-1980	313
747. மேதா விலாசம் கண்டனையோ?	6-07-1980	317
748. கோபமா? கொள்கையா?	7-07-1980	320
749. முதல்வருக்கு ஒரு வேண்டுகோள்!	8-07-1980	323
750. என்னுடைய நாட்கள் எண்ணப்படுகின்றன!	11-07-1980	327
751. தூண்டியது யாரோ?	15-07-1980	333
752. நாவலர் பார்த்துக் கொள்வாராக!	17-07-1980	338
753. புலி, தூங்கவில்லை!	18-07-1980	343
754. விவசாயி, விழித்துக் கொண்டிருக்கிறான்!	20-07-1980	346
755. எழுந்தது பார் இளைஞர் அணி!	24-07-1980	351
756. சபதம் மேற்கொள்வோம்!	25-07-1980	355
757. நெடுங்குன்றும் தூளாய்ப் போகும்!	27-07-1980	359
758. சென்றிடுவீர் எட்டுதிக்கும்!	28-07-1980	363
759. துண்டு துண்டாகத் துண்டு விழுகிறதே!	02-08-1980	366
760. நாலும் மூன்றும் எட்டு!	03-08-1980	370
761. படிக்கற்கள்! பயிற்சி! பக்குவம்!	07-08-1980	372
762. சிரிக்காமல் இருக்க முடியவில்லை!	09-08-1980	379
763. முதல்வருக்கு நினைவூட்டுகிறேன்!	10-08-1980	383
764. வேதனையானது! விரும்பத்தகாதது!!	11-08-1980	386

765. சிக்மகளூர் சிக்கிக் கொண்டது!	13-08-1980	388
766. தெரியப்படுத்துக! மறந்துவிடாதே!	14-08-1980	393
767. வாழ்க அந்த மானமனிதன்!	17-08-1980	396
768. நம் குலம் விளங்கக் கூடுகிறோம்!	18-08-1980	398

674. அறைகூவலை ஏற்றுக் கொள்வோம்!

உடன்பிறப்பே,

ஆளுங்கட்சியினராலும் அவர்தம் துணைக் கட்சியினராலும் திட்டமிட்டு நடத்தப்படும் கொலைகள், வன்முறைச் செயல்கள் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டு வருவதைக் கண்டித்தும், பாதிக்கப்பட்டுள்ள எதிர்க்கட்சியினர் மீதே காவல்துறையினர் நடவடிக்கைகளை மேற்கொள்வதும், பொய் வழக்குகளைத் தொடுப்பதும் எல்லை கடந்துவிட்ட நிலையை எதிர்த்தும் சென்னைக் கோட்டைக்கு முன்பும் தமிழகத்தில் எல்லா ஊர்களிலும் அரசு அலுவலகங்களின் முன்பும் வருகிற ஜூலை 7-ஆம் நாளன்று ஒருநாள் அடையாள உண்ணாவிரதம் இருப்பது என்று அனைத்துக்கட்சிகள் வட்டத்தில் முடிவு செய்யப்பட்டு அறிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் கூடிய கழகச் செயற்குழுவிலும் அந்த முடிவு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஜூலை 7-ஆம் நாள் அடையாள உண்ணாவிரதம் எல்லா இடங்களிலும் அமைதியாகவும் வெற்றிகரமாகவும் நடைபெறக் கழகக் கண்மணிகள் தோழமைக் கட்சிகளுடன் தொடர்புகொண்டு ஆவன செய்யவேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

தர்மபுரியில் பெரியார் நூற்றாண்டு விழாவில் பேசிய முதலமைச்சர் இராமச்சந்திரன், உண்ணாவிரதம் என்றால் என்ன? அதை எப்படி முன்னேற்பாடுகளுடன் அனுஷ்டிக்க வேண்டும்? உண்ணாவிரதமிருப்பதற்கு பதினைந்து நாட்களுக்கு முன்பே ஆகாரத்தைக் குறைத்துக் கொள்ளவேண்டும்! உண்ணாவிரதம் இருப்பது சண்டித்தனம் என்று பெரியார் கூறியிருக்கிறார், என்றெல்லாம் பேருரை நிகழ்த்தியிருக்கிறார்!

வரவர இராமச்சந்திரனுக்கு மறதி அதிகமாகி விட்டதுபோலும்!

தி.மு.க. ஆட்சிக் காலத்திலே இதே எம்.ஜி.இராமச்சந்திரனும் அவரது கட்சியின் தோழமைக் கட்சித் தலைவர்களும் தமிழகத்தின்

பல பகுதிகளில் ஒருநாள் அடையாள உண்ணாவிரதம் இருந்திருக்கிறார்கள்.

இராமச்சந்திரன், மதுரை திலகர் சதுக்கத்தில் உள்ள மேடையில் அமர்ந்தே ஒருநாள் காலை முதல் மாலை வரையில் உண்ணாவிரதம் இருந்தார்.

அவரது துணைவியார் ஜானகி அம்மையார் அவர்களும், நண்பர் மனோகரன் அவர்களும் சென்னை அண்ணா சாலையில் அதே நாளில் ஒருநாள் அடையாள உண்ணாவிரதம் இருந்தார்கள்.

தர்மபுரி விழாவில் இராமச்சந்திரனே குறிப்பிட்டதுபோல (முதலில் பேசியதை மறந்துவிட்டு) அவரது கட்சியைச் சேர்ந்த காளிமுத்து இராமநாதபுரம் மாவட்டத்தைப் பஞ்சப் பிரதேசமாக அறிவிக்க வேண்டுமென்று கூறி உண்ணாவிரதம் இருந்திருக்கிறார் கழக ஆட்சியின்போது!

உடனே இராமச்சந்திரன் கட்சி, ராமநாதபுரம் மாவட்டத் திலேயுள்ளவர்களுக்கு கஞ்சி காய்ச்சி ஊற்றிப் பஞ்சத்தைப் போக்கிவிட்டதாம்! காளிமுத்துவும் உண்ணாவிரதத்தை நிறுத்திவிட்டாராம்! இப்படிப் பேசியிருக்கிறார் எம்.ஜி. இராமச்சந்திரன்!

கஞ்சி காய்ச்சி ஊற்றுகிற வேலையை அப்போது அ.தி.மு.க. கட்சி உடனடியாக மேற்கொண்டிருந்தால் காளிமுத்து அவர்கள், அந்த உண்ணாவிரதமென்னும் சண்டித்தனத்தில் இறங்கியிருக்க வேண்டியதில்லையே!

அதுமட்டுமல்ல, கழக ஆட்சியில் வறட்சி நிவாரணப் பணிகள் மிகத் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டபோதுதான் அப்படியொரு உண்ணாவிரத நிகழ்ச்சியை இராமச்சந்திரன் கட்சியினர் மேற்கொண்டு, பிறகு சில இடங்களில் கஞ்சி காய்ச்சி ஊற்றுவதாக அறிவித்து, அவர்களாகவே உண்ணாவிரதத்தை நிறுத்திக்கொண்டனர். தானே உண்ணாவிரதமிருந்தவர், தன் கட்சியினரையும் உண்ணாவிரதம் இருக்கச் சொன்னவர் இப்போது எந்த முகத்தை வைத்துக்கொண்டு, நம்மைக் கேலி செய்கிறார் என்றுதான் புரியவில்லை!

கேலி செய்ததோடு மட்டும் நிறுத்திக்கொள்ளவில்லை எம்.ஜி.இராமச்சந்திரன்!

ஜூலை ஏழாம் நாள் அனைத்துக்கட்சியினர் நடத்தும் ஒருநாள் அடையாள உண்ணாவிரதத்திற்கு எதிராக ஆளுங்கட்சியினர் எதிர்ப்போராட்டம் நடத்துவார்கள் என்றும் அறிவித்திருக்கிறார்.

அடக்குமுறையென்றும் வன்முறையென்றும் கூறி, கருணாநிதி உண்ணாவிரதம் இருக்கப்போவதாக அறிவித் திருக்கிறார். கருணாநிதியின் வன்முறைக் கூட்டணியால் தாக்கப்பட்டு படுகாயம் அடைந்தவர்கள், தங்கள் காயங்களுடன் வரிசையாக வந்து எங்களையும் கவனியுங்கள் என்று எதிரே அமருவார்கள்!

இப்படி எம்.ஜி.இராமச்சந்திரன், ஆம்! ஒரு மாநில முதலமைச்சர் பேசி, அவரது கட்சியின் ஏட்டிலும் வேறு சில ஏடுகளிலும் செய்தி வெளியாகியிருக்கிறது! உண்ணாவிரதத்திற்கு எம்.ஜி.ஆர். எச்சரிக்கையென்று மிரட்டல் தலைப்புக்களை வெளியிட்டிருக்கிறார்கள்!

அ.தி.மு.கவுக்கு, தி.மு.கழகத்தைப் போலத் தலைவர் என்று ஒரு பொறுப்புக் கிடையாது! அந்தக் கட்சியின் பொதுக் குழுவுக்குத்தான் ஒரு அவைத் தலைவர் உண்டு! அந்தப் பதவியிலும் இராமச்சந்திரன் இல்லை.

அந்தப் பதவியில் இப்போது இருப்பவர் அண்ணா அவர்களாலும் நாவலர் அவர்களாலும் கழகத்தின் முன்னணியினராலும் குறிப்பாக நெல்லை மாவட்டத்தில் உள்ள கழக அமைப்புக்களாலும் ஒரு காலத்தில் ஊழல் பெருச்சாளி என்று அடையாளம் காட்டப்பட்டுக் கட்சியைவிட்டு அகற்றப்பட்டு, பிறகு பல கட்சிகளுக்குச் சென்று இப்போது இருக்கவேண்டிய இடமான அ.தி.மு.க.வில் இருப்பவர். அவர் கழக நிதிக்காக ஒருமுறை சங்கரன் கோயிலில் நாடகம் நடத்தி, வசூலான தொகையுடன் மறைந்துவிட்ட மர்மக் கதையை, அந்த நாடகத்தை எழுதி நடித்த நானும் - என்னுடன் பங்கேற்று நாடகத்தில் நடித்த நண்பர்கள் சிவாஜிகணேசன், சி.வி.எம். அண்ணாமலை, அரங்கண்ணல் மற்றும் கழக நண்பர்களும் அறிவோம்! அந்தச் சங்கரன்கோயில் புகழ் தலைவர் அ.தி.மு.க.வில் அவைத் தலைவர்தானே தவிர, கட்சிக்கே தலைவர் அல்ல!

கட்சியின் அதிகாரப்பூர்வமான முழுப் பொறுப்பும் அ.தி.மு.க.வில் பொதுச்செயலாளராக இருப்பவருக்கே உண்டு! அல்லது கட்சியின் நியமனச் செயற்குழு, நியமன பொதுக்

குழுக்களுக்குத்தான் உண்டு! இப்போது எம்.ஜி. இராமச்சந்திரன், அந்தக் கட்சியின் பொதுச்செயலாளர் அல்ல! தி.மு.கழகத்தில் தலைவர் பொறுப்பும், பொதுச்செயலாளர் பொறுப்பும் உண்டு! இருவரும் கலந்துபேசி முடிவுகளை அறிவிப்பது என்ற முறை, கழக சட்டதிட்டத்திலேயே இடம் பெற்றுள்ளது. ஆனால் அப்படி எந்த விதிமுறையும் அ.தி.மு.க. சட்டதிட்டங்களில் (அப்படி ஏதாவது இருந்தால்) இடம் பெற்றிருக்கவில்லை.

எனவே இராமச்சந்திரன் எந்தத் தகுதியில் அனைத்துக் கட்சியினர் நடத்தும் அடையாள உண்ணாவிரதத்திற்கு எதிராக ஒரு போராட்டம் நடைபெறும் என்று அறிவித்திருக்கிறார்?

அவரது கட்சியின் செயற்குழு, பொதுக்குழுக்கள் எடுத்த முடிவா? அல்ல! யாரோ ஒரு நடிகரும் - இன்னொரு எம்.ஜி.ஆர்.ரசிகர் மன்ற அமைப்பாளரான ஒரு எம்.பி.யும் இரண்டு நாட்களுக்கு முன்பு, கொடும்பாவிப் போராட்டம், கறுப்புக்கொடி போராட்டம் என்று எதிர்ப் போராட்டங்கள் நடத்தப் போவதாக ஆயிரம் பேர் இரத்தக் கையெழுத்திட்டு விட்டதாகவும் அவர்களின் கட்சி ஏடுகளில் அறிவித்திருந்தார்கள். அதேபாணியில் இன்றைக்கு எம்.ஜி.இராமச்சந்திரன் முண்டா தட்டிக்கொண்டு பேசியிருக்கிறார்.

எதிர்ப்போராட்டம் நடத்துவது கட்சியெடுத்த முடிவென்றால் அதை அறிவிக்க வேண்டிய பொதுச்செயலாளர் எங்கே போனார்? என்னைவிடப் பெரியவர் எம்.ஜி.ஆர். அதனால் அவரே அறிவிப்பதில் தவறில்லையென்று ஆதாரங்கள் தேடித்தரக்கூடும் நாவலர்!

நான் சுட்டிக்காட்ட விரும்புவதெல்லாம், எதிர்ப் போராட்டத்தை அறிவித்திருப்பவர் சட்டம் - ஒழுங்கு- அமைதி இவைகளைக் கட்டிக்காக்கவேண்டிய இடத்திலேயுள்ள ஒரு முதலமைச்சர்!

சட்டம் - ஒழுங்கு - அமைதி மேலும் சீர்கெட்டுக் குட்டிச் சுவராவது பற்றிக் கவலைப்படாமல் ஒரு முதலமைச்சரே ரத்தக்களரியை உருவாக்க முடிவெடுத்துக்கொண்டு கோதாவில் இறங்கிவிட்டார் என்பது தெளிவாகிவிட்டது.

அமைதியாக நடத்துவதற்கு அனைத்துக்கட்சியினர் திட்டமிட்டுள்ள ஒருநாள் அடையாள உண்ணாவிரதம் என்ற நிலையைக்கூட அவரால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை.

ஆத்திரமடைகிறார்! ஆவேசம் கொள்கிறார்! முதலில் தன் ஆட்களை விட்டு அறிக்கை தரச் சொல்கிறார்! பிறகு அவரே தோள்தட்டிக் கலவரத்துக்குக் கொடியேற்று விழா நடத்துகிறார்!

காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் நாவலர் தலைமையில் தி.மு.கழக சட்டமன்ற உறுப்பினர்களும், கல்யாணசுந்தரனார் தலைமையில் கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர்களும், காரைக்குடி சா. கணேசனார் தலைமையில் சுதந்திரக் கட்சி உறுப்பினர்களும், மற்ற கட்சி உறுப்பினர்களும், ஊர்வலமாகச் சென்று கோட்டைக்குள்ளேயிருக்கிற தாழ்வாரத்திலேயே ஒருநாள் அடையாள உண்ணாவிரதம் இருந்திருக்கிறோம்.

பெரியவர் பக்தவத்சலனார் முதல்வராக இருந்தபோது தமிழக முழுதும் அனைத்துக் கட்சியினரும் விலைவாசி உயர்வைக் கண்டித்து இரண்டு மூன்று நாட்கள் உண்ணாவிரதம் கடைப்பிடித்திருக்கின்றனர். தி.மு.க. ஆட்சியிலும் எம்.ஜி. இராமச்சந்திரனும் மற்ற கட்சியினரும் இணைந்து தமிழகத்தின் பல பகுதிகளில் ஒருநாள் உண்ணாவிரதம் இருந்திருக்கிறார்கள்.

அப்போதெல்லாம் ஆட்சிப் பொறுப்பில் இருந்த எந்த முதலமைச்சராவது இந்த எம்.ஜி.இராமச்சந்திரனைப் போல ஒரு எதிர்ப் போராட்டத்தைத் தூண்டிவிட்டது உண்டா?

பஞ்சாலைத் தொழிலாளர் போராட்டத்தை விரைவில் முடித்து வைக்குமாறு அனைத்துக்கட்சிகள் சார்பில் முதலமைச்சர் என்ற முறையில் ஒரு வேண்டுகோள் கடிதம் எழுதினால், அதைக் கேலி செய்தும் பொய்களை - அதுவும் வடிகட்டிய பொய்களை அப்பட்டமாகத் தொகுத்தும் - ஆலை அதிபர்களின் ஏஜண்டுபோலத் தன்னை ஆக்கிக்கொண்டு பதில் கடிதமெழுதி, அதனை விளம்பரமாக பல ஆயிரக்கணக்கான ரூபாய் செலவில் அரசாங்கப் பணத்தில் பல்வேறு பத்திரிகைகளில் செய்தித்துறை மூலமாக வெளியிடுகிறார்!

மாநிலத்தில் எந்தப் பகுதியினர் எந்தக் கோரிக்கைக்காகப் போராடினாலும் அதற்கு உடனே அரசியல் வண்ணம் பூசி, எதிர்ப் போராட்டங்களைத் தூண்டிவிடுகிற அளவுக்கு வெறிபிடித்துப் பேசுகிறார் ஒரு முதலமைச்சர் என்றால், சட்டம் ஒழுங்கு ஆகியவற்றுக்கு பாதுகாப்பு எப்படியிருக்க முடியும்?

இரண்டு ஆண்டுக்கால ஆட்சியிலே இந்த அலங்கோலம் தானே நடைபெறுகிறது!

உடன்பிறப்பே, நீயும் சரி - நமது தோழமைக் கட்சிகளின் செயல்வீரர்களும் சரி, முதலமைச்சர் இராமச்சந்திரனின் உருட்டல் மிரட்டல்களுக்கு அஞ்சி நடுங்கப் போவதில்லை.

நானும் நமது தோழமைக் கட்சித் தலைவர்களும், உண்ணா விரதம் இருக்கப்போகும் சென்னையிலானாலும் சரி அல்லது நமது தலைவர்களும், முன்னணியினரும் உண்ணாவிரதம் மேற்கொள்ளும் வேறு ஊர்களானாலும் சரி, முதலமைச்சரின் தூண்டுதலின்பேரில் எதிர்ப் போராட்டங்கள் என்ற திரைமறைவில் எத்தகைய சட்ட விரோதமான வன்முறைச் செயல்கள் நடைபெற்றாலும் அதை தாங்கிக்கொள்ளவும் சந்திக்கவும் நம்மை நாமே அர்ப்பணித்துக் கொள்ளவும் தயாராகவே இருக்கிறோம் என்ற அறப்போர்ப் பிரகடனத்தை இன்றைக்கே முழக்கிடுவோம்!

எங்குமேயில்லாத காட்டுமிராண்டிச் செயலாக ஒரு முதலமைச்சரே - எதிர்ப் போராட்டத்தை உசுப்பி விடுகிறார்!

அதைப் பார்த்து ஓடிவிடும் கோழைகளல்ல, நமது அணியின் கொள்கை வீரர்கள்!

ஒருநாள் அடையாள உண்ணாவிரதம்! அதற்கு ஒரு எதிர்ப் போராட்டம் நடத்துவோம் என்று முதலமைச்சர் தெளிவாகத் தெரிவித்துவிட்ட பிறகு - நாம் யாரும் அடங்கி ஒடுங்கும் ஆமைகள் அல்லர்!

அடையாள உண்ணாவிரதத்தையடுத்து நமது நடவடிக்கை என்ன? என்பதை உடனடியாகக் கலந்து பேசி அறிவித்திட வேண்டிய கட்டாயத்தை நண்பர் இராமச்சந்திரன் - ஆமாம்! தமிழ்நாட்டின் முதலமைச்சர் நம்மீது திணிக்கிறார். அவரது அறைகூவலை அண்ணா வழி நின்று ஏற்றுக்கொள்வோம்!

அன்புள்ள,

மு. க.

(03-07-1979)

675. தர்மபுரியில் தரங்கெட்ட பேச்சு!

உடன்பிறப்பே,

ஜூலை ஏழாம்நாள் சனிக்கிழமையன்று வன்முறையைக் கண்டித்து அனைத்துக் கட்சியினர் நடத்தும் ஒருநாள் அடையாள உண்ணாவிரதத்தை எதிர்த்துப் போராட்டம் நடத்துவோம் என்று தர்மபுரி பெரியார் நூற்றாண்டு விழாவில் முதலமைச்சர் இராமச்சந்திரன் எச்சரிக்கை விடுத்தது பற்றியும் சட்டம் ஒழுங்கு அமைதி மேலும் சீர்குலைவதற்கு ஒரு மாநிலத்தின் முதலமைச்சரே காரணமாக இருக்கிறார் என்பது குறித்தும் நேற்றைய கடிதத்தில் எழுதியிருந்தேன்.

தர்மபுரி பெரியார் விழாவில் அவர் அவிழ்த்துக் கொட்டியுள்ள பொய் மூட்டைகளைப் பற்றி இந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

விழாவுக்குச் செல்லும் வழியில் கறுப்புக்கொடி காட்டிய விவசாயிகளைச் சந்தித்து அவர் பேசினாராம். அதுபற்றி அவர் விழாவில் குறிப்பிடுகிறார். அது பின்வருமாறு:-

நெல் விலைபற்றி விவசாயிகள் சொன்னார்கள்! மத்திய அரசு தருவதைவிடப் பத்து ரூபாய் அதிகம் தருகிறோம் என்று நான் கூறியதாக அவர்கள் சொன்னார்கள். நான் அப்படிச் சொல்லவில்லையே என்றேன். அப்படிச் செய்தி வெளியிட்டது எந்தப் பத்திரிகை என்று கேட்டேன். முரசொலியிலும், தினகரனிலும் அப்படிச் செய்தி வெளிவந்ததாக அவர்கள் சொன்னார்கள். பத்து ரூபாய் கூடுதலாகத் தருவதாக நான் சொன்னேன் என்று நிரூபித்தால் முதல்வர் பதவியை ராஜினாமா செய்யத் தயாராக இருக்கிறேன். இதற்குப் பொறுப்பு ஏற்கிறீர்களா என்றேன் பதில் இல்லை. இது அவர் கட்சி ஏட்டிலும் வேறு ஏடுகளிலும் வெளிவந்துள்ளது.

உடன்பிறப்பே, எம்.ஜி. இராமச்சந்திரன் என்ன சொல்கிறார் என்றே புரியவில்லை! தஞ்சை, நாகைத் தொகுதி இடைத்தேர்தல்களின்போது, வாக்குப்பதிவுக்கு இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பு நெல் கொள்முதல் விலையை மத்திய அரசு அதிகப்படுத்துகிறதா என்று பார்த்து அவர்கள் நிர்ணயிக்கிற விலையை விட இருபது ரூபாய் அதிகம் தருவோம் என்று தமிழ்நாட்டில் உள்ள எம்.ஜி.இராமச்சந்திரன் அரசு, அறிவிக்கவில்லையா?

இருபது ரூபாய் நெல் கொள்முதல் விலை உயர்ந்து விட்டது என்று அ.தி.மு.க.வினரும், இந்திரா காங்கிரசாரும் இடைத்தேர்தலின்போது வேக வேகமாகப் பிரச்சாரம் செய்து விவசாயிகளின் வாக்குகளைப் பெற முயற்சி செய்திட வில்லையா?

நெல் கொள்முதல் விலை இருபது ரூபாய் அதிகமாகும் என்று தினமணி, எக்ஸ்பிரஸ், தினமலர், தினத்தந்தி, மாலைமுரசு, மற்றும் அ.தி.மு.க. ஏடுகள் கொட்டை எழுத்தில் செய்திகள் போடவில்லையா?

இப்படித் தேர்தல் நேரத்தில் அறிவிப்பது முறைதானா? என்று எதிர்க்கட்சிகளைச் சார்ந்தோர் கேட்டது, முரசொலி, தினகரன், அலைஓசை போன்ற ஏடுகளில் வெளிவந்திருக்கின்றன.

இருபது ரூபாய் அதிகம் தரப்படும் என்றல்லவா அறிவித்திருக்கிறார்! எப்படிப் பத்து ரூபாய் அதிகம் தருகிறோம் என்று அவர் கூறியதாக முரசொலியோ, தினகரனோ செய்தி வெளியிட்டிருக்க முடியும்?

அது போகட்டும்! இப்போது முதலமைச்சர் இராமச்சந்திரன் என்ன சொல்லுகிறார்?

நான் இருபது ரூபாய் அதிகம் தரப்படும் என்றுதான் சொன்னேன். பத்து ரூபாய் அதிகம் தருகிறோம் என்பது தவறு என்கிறாரா?

அல்லது, பத்து ரூபாய் கூட அதிகம் தரப் போவதில்லையென்று கூறுகிறாரா?

ஏனென்றால் அவரது தர்மபுரி விழாவின் முழுப் பேச்சும் அவர் கட்சிப் பத்திரிகையில் வந்திருக்கிறது.

அதில் பத்து ரூபாய் அதிகம் தருகிறோம் என்று சொல்ல வில்லையென்று குறிப்பிடுகிறாரே தவிர, இருபது ரூபாய் அதிகம் தருவதாக ஜூன் மாதம் இரண்டாவது வாரத்தில் தஞ்சை, நாகை இடைத்தேர்தலின்போது அறிவித்திருக்கிறோம் என்று அவரது பேச்சில் விளக்கம் எதுவும் அளிக்கவில்லை.

எனவே, இடைத் தேர்தலின்போது திடீரென அறிவிக்கப்பட்ட நெல் கொள்முதலுக்கு இருபது ரூபாய் அதிகம் தரப்படும் என்று வழங்கிய வாக்குறுதியும் அறிவிப்பும் நடைமுறைப்படுத்தப்படுமா?

அரசாங்கம் சிவில் சப்ளை கார்ப்பரேஷன் மூலம் விவசாயிகளிடம் நெல்லை வாங்க முன்வரப் போகிறதா இல்லையா?

அரிசி அரவையாளர்களை ஏஜண்டுகளாக நியமித்தோ அல்லது நூற்றுக்கணக்கான கொள்முதல் நிலையங்களை அமைத்தோ நெல் கொள்முதல் செய்யும் ஏற்பாடுகள் ஏதாவது இந்த அரசிடம் உண்டா?

இதற்கான விபரங்களை ஒரு முதலமைச்சர் வெளியிட்டு விவசாயிகளின் சந்தேகத்தைப் போக்க வேண்டுமே தவிர, பத்து ரூபாய் என்று எந்தப் பத்திரிகையில் வந்தது? நான் அப்படிச் சொன்னதாக நிரூபித்தால் ராஜினாமா செய்கிறேன் என்ற வீண் சவடால் எல்லாம் தேவைதானா?

பத்து ரூபாய் அதிகம் தருகிறேன் என்று எந்தப் பத்திரி கையிலாவது வந்திருந்தால் அது தவறு! நெல் கொள்முதலுக்கு இருபது ரூபாய் விலை அதிகம் தருகிறேன் என்றுதான் உறுதியளித்துள்ளேன்! என்று முதலமைச்சர் இராமச்சந்திரன் தர்மபுரியில் கூறியிருப்பாரேயானால் பிரச்சினையே தீர்ந்துவிடுமே!

அடுத்த காரியம் கொள்முதலுக்குத் தேவையான திட்டங்களைத் தீட்ட வேண்டியதுதானே!

அதை விடுத்து ராஜினாமா சவால் எதற்காக? தேவை யில்லையே!

உடன்பிறப்பே, தர்மபுரியில் இராமச்சந்திரன் மற்றொரு பொய்யையும் திட்டமிட்டே பேசியிருக்கிறார்.

கருணாநிதி ஏழாண்டுக் காலம் ஆட்சி செய்தார். இன்னும் பல கிராமங்களுக்குக் குடிநீர் வழங்கவில்லை.

இது அவரது குற்றச்சாட்டு! கிராமங்களுக்கும், பேரூர்களுக்கும், நகரங்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதைத் துரிதப்படுத்தக் குடிநீர் வடிகால் வாரியம் அமைக்கப்பட்டதே கழக ஆட்சியில்தான்!

தமிழ்நாட்டில் உள்ள எல்லா கிராமங்களுக்கும் ஒரே நேரத்தில் ஒரே நாளில் குடிநீர் வழங்கிட முடியாது!

பந்தியில் உட்கார்ந்திருப்பவர்களுக்குப் பரிமாறுகிறவர்கள்கூட ஒவ்வொரு இலையாகத்தான் பண்டங்களை வைத்துக் கொண்டு செல்ல முடியும். அது மட்டுமல்ல, முதல் பந்தி முடியுமட்டும் அடுத்த பந்தி காத்திருக்க வேண்டும்!

இதுகூடத் தெரியாதா இராமச்சந்திரனுக்கு? தெரியும்! இருந்தாலும் திட்டமிட்டுப் பொய் பேச வேண்டுமே! அதனால் பேசுகிறார்!

கழக அரசு காலத்தில் குடிநீர் வாரியத்தின் மூலமும், உள்ளாட்சி மன்றங்களின் மூலமும், பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிபெற்ற இடங்கள் எத்தனை என்பதை அதன் பயனைப் பெறும் அந்தந்தப் பகுதி மக்கள் உணர்ந்தே இருக்கிறார்கள்.

திறமை பெற்ற பெருந்தலைவர் காமராசர் எட்டாண்டு காலம் முதலமைச்சராக இருந்தபோது கூட எல்லா கிராமங்களுக்கும் குடிநீர் வசதியை அளித்து விடவில்லை. அறிஞர் அண்ணா இரண்டு ஆண்டு காலம் முதல்வராக இருந்த போதும் அந்தக் குடிநீர் தேவை முழுமையும் நிறைவு செய்யப்பட்டு விடவில்லை. ஏழாண்டுக் காலம் நான் பொறுப்பேற்றிருந்த போது குடிநீர் வசதிகள் குக்கிராமங்களுக்கும் செல்ல விரைவான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டனவா? அல்லவா என்பதை நல்ல உள்ளம் கொண்ட அனைவருக்கும் தெரியும். நச்சு நினைப்பாளர்களுக்கு குதர்க்கம் பேசத்தான் தெரியும்.

இன்னொரு பிரமாண்டமான கேள்வியை அணுகுண்டு போலத் தர்மபுரியில் வெடித்துக் காட்டியிருக்கிறார் இராமச்சந்திரன்! என்ன கேள்வி அது?

கருணாநிதி ஆட்சின்போது அவரது அமைச்சரவையில் இருந்தவர்கள் அவர்கள் இலாகா பற்றிப் பேச அவர் அனுமதித்தாரா?

விளம்பரத்துக்காக அவரேதான் எல்லாவற்றையும் அறிவித்து வந்தார்.

இப்படியொரு குற்றச்சாட்டு! இந்தக் குற்றச்சாட்டை நிரூபிக்க இராமச்சந்திரன் தயாராக இருக்கிறாரா? கழக ஆட்சியில் தங்கள் இலாகா பற்றிய எத்தனையோ அறிவிப்புக்களை அந்தந்தத் துறை அமைச்சர்கள் சட்டமன்றங்களிலும் அறிவித்திருக்கிறார்கள். அவர்கள் கலந்து கொண்ட அரசாங்க நிகழ்ச்சிகளிலும் அறிவித்திருக்கிறார்கள். நிருபர்களைப் பேட்டி கண்டும் அறிவித்திருக்கிறார்கள்.

இதற்கான ஆதாரங்களை முதலமைச்சர் இராமச்சந்திரன் விரும்பினால் சட்ட சபையிலேயே தொகுத்துத் தரத்தயாராக இருக்கிறேன். அதற்குப் பிறகு இராமச்சந்திரன் ராஜினாமா செய்வாரா என்றெல்லாம் நான் சவால் விடமாட்டேன்.

உண்மையை உணர்ந்து கொண்டு , தர்மபுரி விழாவில் அவர் சொன்னது பொய் என்பதற்காக வருத்தம் தெரிவித்துக் கொண்டால் போதுமானது.

அதற்கிடையே கழகத்திலிருந்து முன்னாள் அமைச்சர்கள் சிலர் அவர் கட்சிக்குப் போய்ச் சேர்ந்திருக்கிறார்கள். அவர்களையும் அவர் விசாரித்துத் தெரிந்து கொள்வது நல்லது. ஓசூர் பண்ணையில் ஆயிரம் கோழிகள் இருந்தன. பிறகு கணக்கு எடுக்கும்போது முன்னூறு கோழிகள்தான் மிச்சமிருந்தன. ஏன் இவ்வளவு குறைந்தது என்று கேட்ட போது தி.மு.க.வினர் மாநாடு நடத்தினார்கள் – கோழிகள் குறைந்து விட்டன என்றார்கள்.

தர்மபுரி பெரியார் விழாவில் முதலமைச்சர் எம்.ஜி. இராமச்சந்திரன் பேச்சு இது!

எனக்கு வந்த தகவல் என்ன தெரியுமா? தர்மபுரியில் பெரியார் விழாவை முன்னிட்டு அதன் ஏற்பாடுகளைக் கவனிக்கச் சென்றவர்களும், இரண்டு நாள் விழாக்களில் கலந்து கொண்டவர்களும், விழாவில் கலந்து கொள்வதற்கு முன்பு பெங்களூர் சென்று தங்கிய முதலமைச்சரின் பரிவாரங்களும் சுவையாகச் சாப்பிடுவதற்காக ஓசூர் பண்ணையிலேயிருந்து எடுக்கப்பட்டு, குழம்பிலே கொதித்தும், வறுவலாக மாறியும் உயிர்விட்ட கோழிகளின் எண்ணிக்கை மட்டும் ஆயிரத்து முப்பதாம்! சூப்புக்குப் பயன்படுத்தப்பட்ட இளங் குஞ்சுகள்

இருநூற்றி எழுபதாம்! முட்டைகள் கணக்கே இல்லையாம்! ஏழெட்டு மான்களைக் கூடக் காணவில்லையாம்!

ஓசூர் பண்ணை பற்றி முதல்வர் இராமச்சந்திரன் தர்மபுரியில் பேசியதற்கு இந்த பாணியில்தானே பதிலை பெறவேண்டியவராக இருக்கிறார். தி.மு.க. மாநாடு பற்றி அவர் சொன்னது பொய்! தர்மபுரி பெரியார் விழா பற்றி நான் சொல்வதுதான் உண்மையென்று அந்த வட்டாரத்து மக்கள் அனைவருமே பேசிக்கொள்கிறார்கள்.

எல்லா கிராமங்களுக்கும் மின்சாரம் வழங்குவதாகக் கூறிக் கம்பம்தான் நட்டிருக்கிறோமாம்! அதில் விளக்கு எரியவில்லையாம். இப்படியும் அவர் தர்மபுரியில் பேசியிருக்கிறார். அண்மையில் மத்திய அரசின் புள்ளி விபரமொன்று ஏடுகளில் வெளிவந்தது!

இந்தியாவில் உள்ள கிராமங்களில் 30 சதவிகிதம்தான் மின் விளக்கு வசதி பெற்றுள்ளன. தமிழ்நாட்டில் மட்டும் 98 சதவிகித கிராமங்கள் மின் விளக்கு வசதி பெற்றுள்ளன என்பதுதான் அந்தப் புள்ளி விபரம்! இது நமது கழக ஆட்சியின் சாதனை!

இப்போது விளக்கு எரியவில்லையென்றால் ஆளுங்கட்சியினர், கம்பங்களில் உள்ள பல்புகளைத் திருடி, தங்கள் வீடுகளில் போட்டுக்கொள்கிறார்கள் என்ற தகவல் உண்மையாகிறது என்றுதானே அர்த்தம்!

1967 வரையில் தமிழ்நாட்டில் இரண்டு லட்சம் பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு கொடுக்கப்பட்டதற்கு மேலாக கழக ஆட்சியில் ஆறு லட்சம் பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது என்பதையும், இப்போது பம்பு செட்டுக்களின் மின் இணைப்புக்கு மின்சார சப்ளை திடீர் திடீரென்று நின்றுபோய் விவசாயிகள் அவதிப்படுகிறார்கள் என்பதையும் எம்.ஜி.இராமச்சந்திரன் அறியவில்லைபோலும்!

உடன்பிறப்பே, பொய்களைச் சொல்லியே ஆட்சிக்கு வந்தவர் - பொய்களைச் சொல்லியே ஆட்சியை நகர்த்திக் கொண்டிருக்கிறார்! இதைத்தான் தர்மபுரியில் அவர் நிகழ்த்தியுள்ள தரங்கெட்ட உரை எடுத்துக் காட்டுகிறது.

அன்புள்ள,

மு. க.

(04-07-1979)

676. பிற்படுத்தப்பட்ட மக்களுக்குப் பேராபத்து!

உடன்பிறப்பே,

திராவிடர் இயக்கம் தோன்றுவதற்கென அமைந்த மிக முக்கியமான காரணங்களில் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் சமுதாய அந்தஸ்த்து பெற்று கல்வித் துறையிலும், வேலைவாய்ப்புத் துறையிலும் முன்னேறவேண்டும் என்பதும் ஒன்று!

தியாகராயர், டாக்டர் நாயர், நடேசனார் போன்ற திராவிடரியக்கத் தோன்றல்கள் உருவாக்கிய அந்த உணர்வுக்கு அன்றிருந்த நீதிக்கட்சியின் ஆட்சி வடிவம் கொடுத்துப் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கல்வியிலும் வேலைவாய்ப்புகளிலும் சலுகைகளை வழங்கத் தொடங்கியது. அன்று ஆட்சிப் பொறுப்பிலே இருந்த முத்தையா முதலியார் போன்ற முன்னேறிய சமூகத்தைச் சேர்ந்தவர்களேகூட வகுப்புவாரி பிரதிநிதித்துவ அடிப்படையில் பிற்படுத்தப்பட்டோர் நலன்களைப் பெருக்கிட முன்வந்தார்கள் என்பது நீதிக் கட்சியின் வரலாறு காட்டும் உண்மையாகும். காங்கிரஸ் இயக்கத்திலே இருந்துகொண்டே தந்தை பெரியார் அவர்கள் நீதிக்கட்சியின் வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தின் அவசியத்தை வலியுறுத்தி வந்தார். அதனைக் காங்கிரஸ் கட்சியும் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று வாதாடினார்! போராடினார்! இறுதியாக அந்த இலட்சியத்தை வெற்றிபெறச் செய்வதற்காகவே காங்கிரஸ் கட்சியிலிருந்து அவர் வெளியேறினார்.

வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ உரிமையை (கம்யூனல் ஜி.ஓ.) எதிர்த்து சுப்ரீம் கோர்ட்டுக்கு வழக்கொன்றும் சென்றது. (கம்யூனல் ஜி.ஓ.) வகுப்புவாரி உரிமை செல்லாது என்று சுப்ரீம் கோர்ட்டும் தீர்ப்பு வழங்கியது. ஆனால் திராவிடர் இயக்கம் பெரியார் தலைமையில் வகுப்புரிமைப் போராட்டத்தைத் தொடங்கியது. அதன் விளைவாக இந்திய அரசியல் சட்டம் திருத்தப்பட்டது.

அந்தத் திருத்தப்படி சமூக அடிப்படையிலும், கல்வி அடிப்படையிலும் பிற்படுத்தப்பட்டவர்கள், அதாவது "Socially and Educationally Backward" என்ற வாசகத்தைத்தான் சேர்த்திருக்கிறார்களே தவிர அதாவது Economically பொருளாதார அடிப்படையில் பிற்படுத்தப்பட்டவர் என்று குறிப்பிடப்படவே இல்லை.

நீதிக்கட்சி ஆட்சிக்குப் பிறகு, காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கான கல்விச் சலுகைகளும், வேலை வாய்ப்புச் சலுகைகளும் சமுதாய அடிப்படையிலும் கல்வி அடிப்படையிலும் தொடர்ந்து வழங்கப்பட்டே வந்திருக்கின்றன. அந்தச் சலுகைகளைப் படிப்படியாக மாற்றி அமைத்து அதனைப் பொருளாதார ரீதியாக அளிக்கவேண்டுமென்பது அவ்வப்போது - முன்னேறிய சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் பெருமுயற்சிகளை மேற்கொண்டிருக்கிறார்கள். பெருந்தலைவர் காமராஜ் அவர்களைக் கூட அத்தகைய நெருக்கடிக்கு ஆளாக்க முயன்றார்கள். ஆனால் அவர் அந்தச் சூது வலையிலே விழத் தயாராக இல்லை! பிற்படுத்தப்பட்ட மக்களையும் வீழ்த்திட அந்தச் சூழ்ச்சிக்காரர்களுக்குத் துணை போகவில்லை. அந்த ஒரு காரணத்துக்காகவே தந்தை பெரியார் காமராஜரை ஆதரிப்பதாக வெளிப்படையாகத் தெரிவித்து வந்தார்.

அறிஞர் அண்ணா முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்டிருந்தபோது கூட தகுதி அடிப்படை - மார்க் அடிப்படை என்றெல்லாம் சிலர் பேசியும் எழுதியும் பிற்படுத்தப்பட்ட மக்களை மிதித்துக்கொண்டு தாங்கள் மேலும் ஆகாயத்தில் பறந்திடத் துடியாத் துடித்தார்கள். அண்ணா அவர்கள் திராவிடப் பாரம்பரியத்தில் வந்தவர்கள் அல்லவா? பெரியாரின் தலைமைத் தளபதி அல்லவா? எனவே நரிகளின் ஊளை அந்தச் சிங்கத்தை அசைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை.

அண்ணாவின் மறைவுக்குப் பிறகு முதல்வர் பொறுப்பு என் தோளில் சுமத்தப்பட்டது! முதல்வராகப் பொறுப்பேற்று நான் சட்டப் பேரவையில் ஆற்றிய உரையிலேயே பின்வருமாறு குறிப்பிட்டேன்.

என் ஆட்சிக் காலத்தில் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக என் உயிரையே பணயமாக வைத்துப் பாடுபடுவேன்.

அதனால் முன்னேறியுள்ள சமுதாயங்களுக்கு இந்த அரசு, விரோதியென்று பொருளல்ல!

இவ்வாறு குறிப்பிட்டுவிட்டு நானே மிகப் பின்தங்கிய சமுதாயத்தில் பிறந்தவன்! மிக, மிக, என்று எத்தனை மிக வேண்டுமானாலும் போட்டுக் கொள்ளலாம் - அத்தகைய மிகப் பின்தங்கிய சமுதாயத்தைச் சேர்ந்தவன் என்றும் கூறினேன்.

அதனால் தானே என் அன்பு உடன்பிறப்பே! அன்றைக்கு நமது அண்ணனையும் இன்றைக்கு என்னையும் பற்றி குலங்கோத்திரம் பேசி விமர்சிக்கிற அமைச்சர் பெருமக்களைத் தமிழகம் காண நேரிட்டுள்ளது! பரவாயில்லை! விமர்சிப்பவர்களும் விமர்சனத்துக்கு ஆளாகிறவர்களும் பிரமாவின் காலிலே பிறந்தவர்கள் என்று தானே உயர் ஜாதிக்காரர்கள் எழுதி வைத்திருக்கிறார்கள், அது போகட்டும்!

சட்டப் பேரவையில் நான் அறிவித்ததையொட்டி பிற்படுத்தப்பட்டோர் நலக்குழு ஒன்றை நியமித்தது கழக அரசு!

திரு. சட்டநாதன் அவர்களைத் தலைவராகக் கொண்ட அந்தக் குழுவின் பரிந்துரைகளைப் பெற்றுக் கழக அரசு செயல்படத் தொடங்கியது.

தாழ்த்தப்பட்டோர் நல இலாக்காவும், பிற்படுத்தப்பட்டோர் நல இலாக்காவும் ஒன்றாக இணைந்து இரண்டு துறைகளையும் ஒரே அமைச்சர் கவனித்து வந்ததைக் கழக அரசு மாற்றி அமைத்தது.

இரு இலாக்காக்களும் ஒரு அமைச்சர் பொறுப்பில் இருப்பதால் பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் இருசாராருமே உரிய பலன்களைப் பெறமுடியவில்லை யென உணர்ந்து, தாழ்த்தப்பட்டோர் நலன்களுக்குப் பொறுப்பேற்க தனி அமைச்சரையும், பிற்படுத்தப்பட்டோரின் நலன்களுக்குப் பொறுப்பேற்கத் தனி அமைச்சரையும் நியமித்தேன்.

உருதுபேசும் முஸ்லீம்கள், கொங்குவேளாளர் சமூகத்தினர், பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இடம் பெறவேண்டும் என்ற கோரிக்கை நீண்ட காலமாகவே இருந்து வந்தது. அவர்களையும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்பட்டது.

அதன் காரணமாக பிற்படுத்தப்பட்டோருக்குக் கல்வியிலும், வேலை வாய்ப்புக்களிலும் ஏற்கனவே இருந்த இருபத்தைந்து சதவீதம் (25%) என்பதை முப்பத்தி ஒன்று (31%) சதவீதமென உயர்த்தப்பட்டது கழக ஆட்சியில்!

அவ்வாறே தாழ்த்தப்பட்டோருக்கும் பதினாறு (16%) சதவீதமாக இருந்ததை, பதினெட்டு (18%) சதவீதமாக உயர்த்தப்பட்டது.

பிற்படுத்தப்பட்டோருக்கு அதுவரையில் வரவு செலவுத் திட்டத்தில் இலட்சக்கணக்கில் ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு, கழக ஆட்சியில் கோடிக்கணக்கில் ஒதுக்கப்பட்டது என்பதையும் நாடறியும்!

கல்வி நிலையங்களிலோ, வேலைவாய்ப்புக்களிலோ - பிற்படுத்தப்பட்டோர் தங்களுக்குரிய நூற்றுக்கு முப்பத்தியொரு இடங்களைப் பெறுகிற உரிமையோடு கூடவும், தாழ்த்தப்பட்டோர் தங்களுக்குரிய நூறுக்கு பதினெட்டு இடங்களைப் பெறுகிற உரிமையோடு கூடவும், மீதமுள்ள 51 இடங்களிலும் பொதுத் தொகுப்பில் அதாவது Open Competition-இல் பல இடங்களைப் பெறக்கூடிய வாய்ப்பு கழக ஆட்சிக்காலம் வரையிலே இருந்து வந்தது.

அந்த General Pool எனப்படும் பொதுத் தொகுப்பு Open Competition கடந்த மூன்றாண்டுக் காலமாக, ஏற்கனவே முன்னேறிவிட்ட சமுதாயத்தினருக்குத்தான் வாய்ப்புள்ளதாக அமைந்து வருகிறது என்பதற்கு மாறிவரும் புள்ளி விவரங்களே சரியான சான்றாகும்!

முன்னேறிய சமுதாயத்தினர் மீது காழ்ப்பு உணர்ச்சி எதுவும் நமக்கில்லை. நிலைமைகளைச் சீர்தூக்கிப் பார்க்கவேண்டுமென்பதே நமது வேண்டுகோள்.

ஆண்டாண்டுக் காலமாக படிப்பறிவு பெற்று வளர்ந்துவிட்ட ஒரு சமுதாயத்திற்கும் - சில பல ஆண்டுகளாக மட்டுமே படிப்பறிவு பெற்று வளரத் தொடங்கும் ஒரு சமுதாயத்திற்கும் - இடையிலே உள்ள வேறுபாடு மடுவென இருக்கிறது என்பதை மறந்துவிடக் கூடாது.

ஏன் அப்படியொரு சமுதாயம் பின்தங்கிக் கிடக்கிறது? அதற்கான காரணத்தின் வேரைத் தோண்டிப் பார்க்க வேண்டாமா?

மதத்தின் பெயரால், சாதியின் பெயரால் - ஏற்பட்ட ஏற்றத்தாழ்வு அல்லவா அது?

சாதிப்பிரிவுகளை அளவு கோலாக வைத்து அழுத்தப்பட்ட சமுதாயங்கள், அதே சாதிப்பிரிவுகளை அளவு கோலாகக் காட்டித்தானே, தனது தாழ்ந்த நிலையையும் - பிற்படுத்தப்பட்ட நிலையையும் - சுட்டிக்காட்டி, வழிகண்டு, சலுகை பெற்று, உரிமை கொண்டு - தலையெடுக்க வேண்டியிருக்கிறது!

ஒரு உயர்ஜாதிக்காரர் வீட்டில் பள்ளியில் படிக்கும் குழந்தைக்கு வீட்டுப் பாடங்களைச் சொல்லித் தரும் அறிவு மிக்கவராக அந்தக் குழந்தையின் பாட்டியோ, பாட்டனோ இருக்கமுடியும்! ஏன்? அந்த வீட்டில் அந்தப் பாட்டிக்குப் பாட்டிகூட படித்துப் பட்டம் பெற்றவளாக இருக்கக்கூடும்!

ஆனால் ஒரு பிற்படுத்தப்பட்ட - அல்லது தாழ்த்தப்பட்ட - ஒரு வீட்டில் பள்ளியில் படிக்கும் குழந்தையின் அக்காளோ, அல்லது அண்ணனோதான் கல்வியறிவு பெற்றவர்களாக இருக்கமுடியும்! அதுவும் மிகச் சில வீடுகளிலேதான்!

இந்த நிலையில் யார் வீட்டுக் குழந்தைகள் படிப்பில் முன்னேறி, அதிக மார்க்குகள் எடுத்து Open Competition-இல் அதாவது பொதுத் தொகுப்பு எனும் General Pool -இல் தேர்வு பெறும் தகுதியுடையவர்களாக இருக்கமுடியும் என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். நிச்சயமாக ஏற்கனவே முன்னேறிய சமுதாயத்து வீட்டுப் பிள்ளைகள்தான் அந்தத் தேர்வுகளில் அதிக மார்க் எடுத்து வெற்றி பெறமுடியும். அவர்களுக்கே உயர் கல்வி வாய்ப்பு, வேலை வாய்ப்புக்களில் இடங்கள் கிடைக்கும்.

இதுவரையில் 49% அல்லாமல் மீதமுள்ள 51%லும் இடம் பெற்று வந்த பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினரின் தலையில் அணுகுண்டைப் போட்டது போல எம்.ஜி.இராமச்சந்திரனின் அரசு திடீரென ஒரு அரசாங்க உத்திரவைப் பிறப்பித்துள்ளது. அதாவது,

பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் கல்வி நிலையங்களிலும் தமிழ்நாடு அரசுப் பணிகளிலும் ஒதுக்கப்படும்

இடங்களைப் பெறுவதற்கு ஆண்டு வருமானம் ஒன்பதாயிர ரூபாய்க்குக் குறைவாக இருப்பவர்களுக்கு மட்டுமே தகுதி உண்டு. அதற்கு மேற்பட்ட வருமானம் உடைய பிற்படுத்தப்பட்ட சமுதாய மக்களுக்கு கல்வி, உத்தியோகங்களில் இட ஒதுக்கீடு கிடையாது. இந்த உத்திரவு 2-7-79 முதல் நடைமுறைக்கு வரும்.

உடன்பிறப்பே! ஒன்பதாயிர ரூபாய் வருமானம் என்பது மாதம் 750 ரூபாய் சம்பளம் வாங்குகிற ஒருநபருக்குக்கூடப் பொருந்தக்கூடியதுதான்! அவன் வீட்டுப் பிள்ளைக்குத்தான் ஏற்கனவேயுள்ள 31%க்குள் இடம் கிடைக்குமேயென்று சுலபமாகக் கூறி விடுவார்கள்!

General Pool பொதுத் தொகுப்பில் Open Competitionக்குத் தேர்வு எழுதச் செல்லவேண்டிய ஒன்பதாயிர ரூபாய்க்கு மேற்பட்ட வருமானமுடைய பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த ஒருவன், எந்த வர்க்கத்து மாணவனோடு போட்டி போட வேண்டியிருக்கிறது என்பதையும் அதன் முடிவாக ஏற்கனவே முன்னேறியுள்ள சமூகத்து மாணவன்தான் அந்தத் தேர்வுகளில் வெற்றி பெற முடியும் என்பதையும் கணக்கில் எடுத்துக் கொண்டால் அரசாங்கத்தின் இந்த உத்தரவினால் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திற்கு எவ்வளவு பெரிய ஆபத்து வரக் காத்திருக்கிறது என்பது தெளிவாகும்.

'இந்து' ஏடு, எம்.ஜி. இராமச்சந்திரன் ஆட்சியின் இந்த உத்தரவை ஆதரித்துத் தலையங்கம் தீட்டியிருப்பதிலிருந்தே இந்த உத்தரவு, தமிழ்நாட்டில் உள்ள பெரும்பான்மையான பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு வெட்டப்பட்டுள்ள படுகுழி என்பதும் - சிறுபான்மையினராக உள்ள முன்னேறிய மக்களுக்கு வீசப்படும் வெண்சாமரம் என்பதும் புரியவில்லையா?

எம்.ஜி. இராமச்சந்திரன், எதிர்க்கட்சியில் இருந்தபோதே அமெரிக்காவுக்குச் சென்ற நேரத்தில் - பெரியார் அண்ணா கருத்துக்கு நேர்மாறாக - பிற்படுத்தப்பட்டோர் தாழ்த்தப்பட்டோர் சலுகைகள் தேவையற்றது என்ற தனது எண்ணத்தை வெளிப்படுத்தி யிருக்கிறார். அப்போதே அதற்கு எதிர்க்குரல் கிளம்பிற்று!

எதிர்க்கட்சி வரிசையில் இருந்தபோது அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் சிலரும் இப்படிப்பட்ட ஒரு அபாயகரமான கருத்தை

அன்றைக்கே சொல்லி, ஆளுங்கட்சியில் இருந்த நானும் மற்ற அமைச்சர்களும் அதை மறுத்துப் பேசியிருக்கிறோம். சட்டசபை நடவடிக்கைக் குறிப்புக்களில் இப்போதும் காணலாம்.

பிற்படுத்தப்பட்டோருக்காகட்டும் அல்லது தாழ்த்தப் பட்டோருக்காகட்டும், சமுதாய ரீதியிலும் கல்வி ரீதியிலும்தான் சலுகைகள் இருக்கவேண்டுமேயல்லாது - பொருளாதார அடிப்படையில் அவற்றை அளிப்பதென்பதை பெரியாரும் ஏற்கவில்லை! அண்ணாவும் ஏற்கவில்லை!

'இந்து' ஏற்றுக் கொள்கிறது! எம்.ஜி.இராமச்சந்திரன் ஏற்றுக் கொள்கிறார்! எனவே இந்தச் சமுதாயத்தை அழிக்க நீண்ட நாட்களாகப் போடப்பட்ட திட்டம் இப்போது சட்டப்பூர்வமாக அமலுக்கு வந்து விட்டது!

பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு வந்துள்ள இந்தப் பேராபத்து, இது முதல் கட்டம்!

அடுத்த கட்டம், இப்போதுள்ள 31% முப்பத்தியொரு சதவீதமும் பறிக்கப்படும் - பறிக்கப்பட வேண்டுமென்றுதான் 'இந்து' குறிப்புக் காட்டித் தலையங்கம் தீட்டி, அரசின் உத்தரவுக்குச் சபாஷ் போட்டிருக்கிறது!

இதை எப்படிப் பொறுத்துக்கொள்வது? புரியவில்லை!
எவ்வாறு சகித்துக்கொள்வது? விளங்கவில்லை!

உடன்பிறப்பே, தமிழ்நாட்டின் எதிர்காலத்தை நினைத்து கண்கலங்கியவாறு இந்தக் கடிதத்தை முடிக்கிறேன்.

அன்புள்ள,

மு. க.

(05-07-1979)

677. பொதுக்குழு கூட்டுவோம்! போர்க்கொடி ஏந்துவோம்!!

உடன்பிறப்பே,

நமது கழகத்தின் பொதுக்குழுவை விரைவில் கூட்ட வேண்டிய அவசரமும் அவசியமும் ஏற்பட்டிருக்கிறது. பொதுச்செயலாளர் பேராசிரியர் அவர்கள் தென் மாவட்டங்களில் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருப்பதால் அவர் சென்னை திரும்பியதும் கலந்து பேசி, பொதுக்குழுக் கூட்டத்தை எங்கே நடத்துவது? எப்போது நடத்துவது? என்பதைத் தலைமைக் கழகம் அறிவிக்கும்.

அண்மையில் எம்.ஜி.இராமச்சந்திரனின் அரசாங்கம் பிறப்பித்துள்ள உத்தரவின் மூலம் தமிழ்நாட்டில் உள்ள பிற்படுத்தப்பட்ட மக்களின் எதிர்காலம் திட்டமிட்டுப் பாழாக்கப்பட இருக்கிறது! இந்தப் பயங்கரக் கொடுமையை எதிர்த்து, பெரியார் அண்ணா ஆகியோரின் கொள்கை வழிநடக்கும் தி.மு.கழகம், எந்தவிதமான இழப்புக்கும் தன்னைத் தயார்படுத்திக் கொண்டு போர்க்கொடி உயர்த்தியாக வேண்டும். அரசாங்கத்தின் இந்த ஆணையை எம்.ஜி. இராமச்சந்திரன் திரும்பப்பெற முன்வராவிட்டால் படுபாதாளத்திலிருந்து மெல்ல மெல்ல மேலேறிக் கொண்டிருந்த பிற்படுத்தப்பட்ட மக்கள், அவர்களைத் தொடர்ந்து தாழ்த்தப்பட்ட மக்கள் - ஆகிய இருபெரும் சமுதாயத்தினரும் மீண்டும் அதே பாதாளத்தில் தலைகுப்புற விழுந்து பிறகு என்றுமே தலைதூக்க முடியாத நிலைமைக்கு ஆளாகிவிடுவார்கள்.

அவர்களின் கண்களை மறைத்திருக்கும் கவர்ச்சி மாயைகளால் தங்களையும் தங்கள் சந்ததியினரையும் பொட்டுப்பூச்சிகளாகவும், புன்மைத் தேரைகளாகவும் ஆக்கப்போகும் கொடுமை இழைக்கப்படுவதைப் புரிந்துகொள்ளாமலே அவர்கள் இருக்கிறார்கள்.

வானவெளியைச் சுற்றிக்கொண்டிருக்கிற ஸ்கைலாப் என்ற ராக்கெட் வெடித்துச் சிதறி, மக்களுக்கும் உடமைகளுக்கும்

பெரும் சேதத்தை விளைவிக்குமென்று அபாய எச்சரிக்கைகள் வந்தவண்ணமிருக்கின்றன.

ஒருவேளை, அந்த ராக்கெட் துண்டுகளின் தாக்குதலால் ஏற்படக்கூடிய பெரும் சேதத்தைக்கூட விஞ்ஞான வலிமையினால் தவிர்த்துவிடக்கூடும். அந்த ஸ்கைலாப் மக்கள் வாழும் பகுதியில் விழாமல் கடல் நடுவேகூட விழுந்து விடலாம்.

ஆனால் உடன்பிறப்பே! இந்த அரசாங்கத்தின் புதிய உத்தரவு ஸ்கைலாப்பைப் போல பிற்படுத்தப்பட்ட இனத்தையும், அதன் தொடர்பாக தாழ்த்தப்பட்ட இனத்தையும் அழித்துவிட்டே மறுவேலை பார்க்கும். இதைத் தடுத்து நிறுத்தவேண்டிய பொறுப்புணர்வையும், இந்த உத்தரவினால் ஏற்படக்கூடிய பேராபத்தினையும் நேற்றைய கடிதத்தில் விளக்கியிருக்கிறேன்.

திராவிடர் கழகப் பொதுச்செயலாளர் வீரமணி அவர்களும், மற்றும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த தலைவர்களும் அரசாங்கத்தின் உத்தரவை எதிர்த்துத் தங்கள் கண்டனங்களைத் தெரிவித்திருக்கிறார்கள்.

தி.மு.கழக ஆட்சிக் காலத்தில் பிற்படுத்தப்பட்டோருக்கும், தாழ்த்தப்பட்டோருக்கும் எத்தகைய புத்தொளி பாய்ச்சும் சாதனைகள் நிறைவேற்றப்பட்டன என்பதையும், இன்றைக்கு அவை அனைத்தும் புறக்கணிக்கப்பட்டுள்ள நிலையையும், பதவிக்காகவோ, வேறு சில ஆசாபாசங்களுக்காகவோ எம்.ஜி. இராமச்சந்திரனுடன் ஒட்டிக் கொண்டிருப்பவர்கள் எண்ணிப் பார்த்து இன்று வெளிவந்துள்ள உத்தரவுக்கு எதிர்ப்பு தெரிவிப்பார்களா என்பது சந்தேகமே!

எனவே திராவிடர் இயக்கப் பாரம்பரியம் காக்கும் உணர்ச்சி கொண்டவர்களால் மட்டுமே இந்தப் பேராபத்திலிருந்து தமிழ் நாட்டில் உள்ள பெரும்பான்மையான மக்களைக் காப்பாற்ற முடியும்.

அதற்கு என்ன வழி?
என்ன முறை?

இவை குறித்து விவாதித்து முடிவுகளை எடுக்கக் கழகத்தின் பொதுக்குழு கூட்டப்பட வேண்டியது அவசரமும் அவசியமும் ஆகிவிட்டது.

பொதுக்குழு கூடும் நாள், கூடும் இடம் இவைபற்றி பொதுச்செயலாளரும் நானும் தலைமைக் கழகத்தினரும் கலந்து ஆலோசித்து விரைவில் அறிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நாலரைக் கோடி மக்களில் முக்கால் பகுதியினருக்கு மேற்பட்ட மக்களின் எதிர்கால சந்ததிகள் பற்றிய பிரச்சினை! பெரியார், அண்ணா கொள்கைகளுக்கு விடைகொடுத்து விட்டு, அவர்கள் பெயர்களை மட்டும் உச்சரித்துக் கொண்டு இந்து ஏட்டின் வழி காட்டுதலுக்கு ஏற்ப நடந்து, பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களைக் கடைக் கோடியில் நிறுத்தப்போகிற இந்த அரசாங்கத்தின் உத்தரவை எப்படிக் கிழித்துப் போடப் போகிறோம் என்ற உயிருக்குயிரான பிரச்சினை!

இதற்கிடையே புதுவை மாநிலத் தேர்தல் அறிவிப்பு!

அதற்குள்ளாகவே உள்ளாட்சித் தேர்தல்களை நடத்தி முடித்து விடலாமா என்று தமிழக அரசு சிந்தித்துக் கொண்டிருக்கிற நிலை!

புதுவை முடிவு எப்படியிருக்குமோ என்ற சந்தேகத்தில் - அந்த முடிவினால் உள்ளாட்சித் தேர்தல்கள் பாதித்துவிடாமல் பார்த்துக்கொள்ள ஆகஸ்டு இரண்டாம் வாரமே உள்ளாட்சித் தேர்தல்களை நடத்திவிடலாமா என்று தமிழ்நாடு அரசு யோசிப்பதாகக் கேள்வி!

தேர்தல்களைவிட நமது கவனத்தை மிக அதிகமாக ஈர்த்திருப்பது அரசாங்கம் வெளியிட்டுள்ள அநீதியான உத்தரவுதான்! சமூகநீதியை அடித்து நொறுக்குகின்ற உத்திரவுதான்!

எனவே உடன்பிறப்பே, தேர்தல்கள் எல்லாம் முடியட்டும் என்றில்லாமல் அதற்குள்ளாகவே நமது கழகப்பொதுக்குழுவில் கூடுவோம்!

போர்க்கொடி ஏந்துவோம்!

திராவிடர் இயக்கத்தின் பழம் பெரும் தலைவர்கள் பாடுபட்டுத் தேடிய சமூகநீதி என்ற செல்வத்தைக் கள்வர்களிடமிருந்து பாதுகாப்போம்!

அன்புள்ள,

மு. க.

(06-07-1979)

678. ஸ்கைலாப்! ஸ்கைலாப்!!

உடன்பிறப்பே,

இயற்கையின் எதிர்பாராத கோரமான தாக்குதல்களால் மக்கள் சமுதாயம் பல்வேறு பாதிப்புகளுக்கு ஆளாகிட வேண்டிய சூழலில் செயற்கைக் கோள்கள் அல்லது விண்வெளி ஆய்வுக்கூடங்கள் எனப்படும் ஸ்கைலாப்புகளாலும் மனித இனம் பெருஞ்சேதங்களைச் சந்திக்க வேண்டுமா? என்ற கேள்வி இப்போது உலக முழுதும் எழுந்துள்ளது.

விஞ்ஞான வளர்ச்சியில் உலகம் எத்தனையோ முன்னேற் றங்களைப் பெற்றுள்ளது. இரண்டு மைல்களைக் கடக்க ஒரு மணி நேரம் கட்டை வண்டியிலே செல்ல வேண்டியிருந்த நிலை மாறி இரண்டாயிரம் மைல்களை இரண்டே மணி நேரத்தில் கடக்கும் விமானப் பயணங்கள் நடைபெறும் காலத்தை விஞ்ஞானம் தான் வழங்கியுள்ளது. வானொலியும், டெலிவிஷனும் ஒரு காலத்தில் கற்பனை கூட செய்து பார்த்திராத விஞ்ஞானத்தின் பரிசுகள்!

விஞ்ஞானம் வளர்கிற வேகத்தில் அபாயங்களும் வளர்கின்றனவே! என்ற கவலை பலருக்கு இருக்கத்தான் செய்கிறது.

விஞ்ஞான வளர்ச்சியே அரும்பாத காலத்தில் மனிதன் காடுகளில் வாழ்ந்து, மிருகங்களோடு போராடி - அதை இவன் உணவாகக் கொண்டோ அல்லது அதற்கு இவன் உணவாக மாறியோ - விநாடிக்கு விநாடி வாழ்வா? சாவா? என்ற போராட்டத்தை நடத்திக் கொண்டிருந்தான் என்ற உலகின் மனித இனத் தொடக்க கால வரலாற்றை எண்ணிப் பார்க்கும்போது, இன்றைய தினம் விஞ்ஞானிகள் செய்துள்ள புதுமைகளை வாழ்த்திப் போற்றாமல் இருக்க முடியாது.

விண்வெளி ஆராய்ச்சியின் மூலம் இதுவரையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளவைகளைக் கொண்டு மனித சமுதாயத்திற்கு ஆக்கபூர்வமான சாதனைகளைச் செயல்படுத்தினால் போதுமா? நுனிக்கொம்பு வரையில் ஏறிவிட்டு

அதற்கு மேலும் ஏறுகிற முரட்டுத்தனமான முயற்சிகளால் மனித குலத்திற்கு நாம் விரும்புகிற சாதகங்கள் ஏற்படுவதற்குப் பதிலாகப் பாதகங்கள் ஏற்பட வழி ஏற்பட்டு விடாதா? ஸ்கைலாப்புகள் பற்றிய பீதி உணர்வு அடிக்கடி எழும்புமேயானால் இத்தகைய கேள்விகள் இயற்கையாகவே பிறந்து விடக்கூடும்.

இப்போது பிரச்சினைக்குரியதாக இருக்கிற விண்வெளி ஆய்வுக்கூடம் (ஸ்கைலாப்) மட்டுமல்ல, இன்னும் விண்ணில் பறக்க விடப்பட்டுள்ள வேறு சில ஸ்கைலாப்புகளும் பழுதடைந்து இதே போன்ற பிரச்சினைகளை அடிக்கடி உருவாக்கக் கூடுமென்று கூறப்படுகிறது!

இந்தியாவிலே விழாது என்பதிலோ - அல்லது தமிழ்நாட்டிலே விழாது என்பதிலோ - எங்கே விழுந்தாலும் நம்மீது விழாது என்பதிலோ - யாரும் ஆறுதல் அடைந்துவிடக்கூடிய விவகாரமல்ல இது! மனித உள்ளம் படைத்த யாராக இருந்தாலும் - உடைந்து நொறுங்கும் ஸ்கைலாப்புத் துண்டுகளால் உலகின் எந்தக் கோடியில் உள்ள மனிதப்பூண்டுகள் அழிவுற்றாலும் - அதனைத் தாங்கிக் கொள்ள இயலாது.

ஸ்கைலாப் விழுவதற்கு முன்பே அதுபற்றிய பீதி நிறைந்த செய்திகள், தமிழ்நாட்டு குக்கிராமங்களில் இருந்து உலகின் எல்லா மூலைமுடுக்குகளிலும் பேசப்படுகின்றன.

மூடநம்பிக்கைச் சகதியில் மூழ்கிக் கிடப்போர் கைரேகை, சோதிடம் இவைகளைப் பார்த்துக்கொண்டு அலைகிறார்களாம். ஸ்கைலாப் துண்டுகள் விழுந்து சிதறும்போது எந்த அதிர்ச்சியும் ஏற்படுத்தாது எனக்கூறி சிலர் மருந்துகளை விற்றுப் பணம் திரட்டுகிறார்களாம்.

குழப்பமான செய்திகள்- முரண்பட்ட தகவல்கள் - விஞ்ஞானிகளுக்கே தெளிவாகச் சொல்ல முடியாத நிலைகள் ஏடுகளில் வெளி வருவது கண்டு மக்களை அச்சம் பிடித்து ஆட்டிப் படைக்கிறது.

உடைந்து சிதறும் ஸ்கைலாப் துண்டுகள் நாலில் மூன்று பகுதி கடற்பரப்பில் விழும் - ஒரு பகுதி தான் நிலப்பரப்பில் விழும் என்று கூறப்படுகிறது.

கடந்த முப்பது ஆண்டுகளில் விண்வெளியிலிருந்து ஆறாயிரத்துக்கு மேற்பட்ட துண்டுப் பொருள்கள் பூமியில்

விழுந்திருக்கின்றன. அவற்றால் சேதம் எதுவும் ஏற்பட்ட தில்லையென்றும் அறிவிக்கப்படுகிறது.

1973-ஆம் ஆண்டு அமெரிக்காவிலிருந்து விடப்பட்ட இந்த ஸ்கைலாப் இப்போது உடைந்து சுமார் ஐநூறு துண்டுப் பகுதிகள் பூமியில் விழும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அந்தத் துண்டுகளில் பெரும்பாலானவை ஐந்து கிலோகிராம் எடைக்குக் குறைவாகவே இருக்கும். சுமார் நாற்பது துண்டுகள் 113 கிலோகிராம் எடைக்கு மேல் இருக்குமாம். பத்து துண்டுகள் சுமார் ஐநூறு கிலோகிராம் எடையுள்ளவைகளாக இருக்குமென்று சொல்லப்படுகிறது. இரண்டே துண்டுகள் மட்டுந்தான் ஆயிரத்து எழுநூறு கிலோ கிராமுக்கு மேல் எடையிருக்குமென அறிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்கைலாப் உடைந்து சிதறுவதற்கு முன்பு அது பூமியை வலம் வரப்போகிற இறுதிப் பாதை எது என்பதை இருபத்தி நான்கு மணி நேரத்திற்கு முன்புதான் அறிய முடியும் என்றும் - திட்டவட்டமாகச் சொல்வதென்றால் ஆறு மணி நேரத்திற்கு முன்னர்தான் இயலுமென்றும் உறுதியாக செய்திகள் வந்துள்ளன.

ஜூலை 12-ஆம் நாள் புதன்கிழமை இரவு (12.30) பனிரெண்டரை மணிக்கு பிரச்சினைக்குரிய ஸ்கைலாப் பூமிக்குத் திரும்பும் என்று கணக்கிடப்பட்டுள்ளது எனினும் இன்னும் மிகச் சரியான கணக்கு 10-ஆம் தேதியன்றுதான் தெரியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்த நேரங்களில் மிக எச்சரிக்கையுடன் இருக்குமாறும் காவல்துறையினரும், தீயணைக்கும் படையினரும் தயார் நிலையில் வைக்கப்பட வேண்டுமென்றும் மத்திய அரசு, மாநில அரசுகளுக்குத் தாக்கீதுகளை அனுப்பியுள்ளது.

சிதறப்போகுமுன் ஸ்கைலாப் பூமியை 170 தடவை சுற்றுமென்றும், அதில் ஆறு சுற்றுகள்தான் இந்தியாவின் மீது வருமென்றும் இந்தியாவைப் போன்ற மக்கள் நெருக்கமாக வாழும் பகுதிகளில் அந்தத் துண்டுகள் விழுவதைத் தவிர்க்க எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ளப் போவதாகவும் அமெரிக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளதாகச் செய்திகள் வெளி வந்துள்ளன.

உலகின் பல்வேறு நாடுகளில் தக்க முன்னேற்பாடுகள் செய்யப்படுகின்றன.

பெரும்பாலும் ஸ்கைலாப் கடலிலேயே விழுந்து விட்டால் அப்பாடா! என்று உலக மக்கள் பெருமூச்சு விட்டுக் கொள்வார்கள். கடலிலும் கப்பல்கள் - மீன் பிடிக்கும் படகுகள் - அவற்றில் பயணம் செய்வோர் - மீனவர் -பாதிக்கப்படக்கூடாது என்பதிலே அந்தந்த நாடுகள் அக்கறை செலுத்திட வேண்டும்.

தவறி, நிலப்பகுதிகளில் சேதங்களும், சீரழிவுகளும் ஏற்பட்டால் அரசுத் துறையினர், அவர்தம் காவல்துறையினர் மட்டுமின்றி சமூகப் பணியாற்றும் தொண்டுள்ளம் கொண்டோர் அனைவரும் துயர் துடைப்புப் பணிகளிலும், மீட்புப் பணிகளிலும் ஈடுபட வேண்டும்.

அரசியல் கட்சிகளுக்கு அப்பாற்பட்டு அனைவரும் இணைந்து நின்று ஆற்ற வேண்டிய கடமை இதுவென உணர்ந்து அனைவரும் செயல்படத் தயாராக இருக்க வேண்டும். மக்களைப் பெரும்பீதிக்கு ஆளாக்கியிருக்கும், இந்தப் பயங்கர நிகழ்ச்சிக்கு உலகின் எந்தப் பகுதியில் உள்ள மக்களும் பலியாகக்கூடாது என்பதே நமது இதயத் துடிப்பாகும்!

இதுபோன்ற விளைவுகளையும் பீதிகளையும் மக்களுக்கு ஏற்படுத்துகிற விஞ்ஞானக் கண்டுபிடிப்பு முறைகளில் மாற்றம் காண, உடனடியாக விஞ்ஞானிகள் முன் வந்தாக வேண்டும்!

இல்லையேல், மக்களுக்குப் பெரிதும் தேவையான விஞ்ஞான வளர்ச்சியின் மீதே ஒரு இனம் தெரியாத வெறுப்பு மக்களுக்கு ஏற்பட்டு விடும்!

ஏனெனில் சமுதாய நல்வாழ்வுக்கெனத் தொடங்கப்பட்ட விஞ்ஞான சாதனைகள் சமுதாய அழிவுக்கெனத் தடம் புரள்வதை யாரும் ஏற்றுக்கொள்ள இயலாது!

உலகில் பல்வேறு நாடுகளில் எடுக்கப்பட்டுள்ள முன்எச்சரிக்கை ஏற்பாடுகளைப் போலவே இந்தியாவும் எடுக்க வேண்டும் என்பதோடு, வீண் பீதிகளைக் கிளப்பி மக்களைத் திக்குமுக்காடச் செய்கிற செயல்களையும் - அந்தச் செயலுக்குரியவர்களையும் தடுத்து நிறுத்த அவசர நடவடிக்கைகளையும் மேற்கொண்டிட வேண்டும்.

அன்புள்ள,

மு. க.

(09-07-1979)

679. கொள்கை காத்திடக் கூடுவோம் சென்னையில்!

உடன்பிறப்பே,

ஒரு வட்டாரத்தில் உவகைக் கூத்து! விழா எடுத்துப் பாராட்டவேண்டும் எம்.ஜி. இராமச்சந்திரனையென்று விழிகளை அகல விரித்து மகிழ்ச்சியால் துள்ளிக் குதிக்கிறார்கள்.

ஏன் தெரியுமா? நீதிக்கட்சி காலத்திலே உருவாகி, இராஜாஜிகூட கைவைக்கப் பயந்து, காமராசர், பக்தவத்சலனார் காலங்களில் பாதுகாக்கப்பட்டு, அண்ணா காலத்திலும், அவர் வழி நடந்த கழக ஆட்சிக் காலத்திலும் வலிமை பெற்று வளர்ந்து வந்த பிற்படுத்தப்பட்ட மக்களின் உரிமையை ஒரு உத்தரவின் மூலம் எம்.ஜி. இராமச்சந்திரன் உடைத்து நொறுக்கிப் போட்டுவிட்டார் அல்லவா?

பிற்படுத்தப்பட்ட மக்களுக்கான விகிதாசார ஒதுக்கீடு சமுதாய ரீதியில் இருக்க வேண்டுமேயல்லாமல் பொருளாதார ரீதியென்றும் - தகுதி, திறமையென்ற மாய்மாலங்களைக் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும் எழுகிற கூச்சலைப் பொருட்படுத்தக் கூடாதென்று போராடி வந்த இயக்கம் திராவிடர் இயக்கம்!

தந்தை பெரியாரும், அறிஞர் அண்ணாவும், அவர்கட்கு முன்பே திராவிடப் பேரியக்கத் தலைவர்களும் எந்த ஒரு உரிமைக்காகக் குரல் எழுப்பி வந்தார்களோ, அந்த உரிமையை இன்று நசுக்கி எறிந்துவிட்டு பெரியார், அண்ணா முழங்கிய கொள்கைகளுக்கு நேர் எதிராக பொருளாதார அடிப்படையில்தான் பின்தங்கியோர் நிலையை கவனிக்கவேண்டும் என்று முதலமைச்சர் பதவியேற்றுள்ள எம்.ஜி. இராமச்சந்திரன் திட்டவட்டமாக அறிவித்து விட்டார்.

ஏழைகள் என்ற ஒரு சொல்லைப் பயன்படுத்திக் கொண்டு பிற்படுத்தப்பட்ட மக்களை மீண்டும் 1916-ஆம் ஆண்டுக்குப் பின்னுக்குத்தள்ள சூழ்ச்சி வலை தயாரிக்கப்பட்டு விட்டது.

ஒன்பதாயிரம் ரூபாய்க்குக் கீழே வருமானமுள்ளவர்கள் தான் பிற்படுத்தப்பட்டோர்! அதற்கு மேலே ஆண்டு வருமானம் உள்ளவர் அனைவரும் முன்னேறிய வர்க்கத்தினராக கருதப்படுவர். இது இந்த அரசின் உத்திரவு!

இன்று பிற்படுத்தப்பட்ட மக்களின் தலையில் விழுந்துள்ள இந்த இடி, எதிர்காலத்தில் தாழ்த்தப்பட்ட மக்களின் தலையிலும் விழாமற் போகாது!

கல்வியிலும் வேலைவாய்ப்புக்களிலும் விகிதாசார உரிமை பெறுவதற்குப் பொருளாதார நிலையைத்தான் அளவுகோலாக எடுத்துக் கொள்வது என்ற எம்.ஜி. இராமச்சந்திரனின் சித்தாந்தம் விரிவடையும்போது தாழ்த்தப்பட்டோரின் விகிதாசார உரிமைக்கும் இப்படியொரு ஆபத்து வந்தே தீரும்!

சம்பளச் சலுகை, இலவசப் படிப்பு போன்றவைகளுக்கு வேண்டுமானால் பொருளாதார அளவுகோலைப் பயன்படுத்தலாமே தவிர பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு நியாயமாகக் கிடைக்கவேண்டிய கல்வித்துறை, வேலைவாய்ப்பு போன்ற உரிமையான இடங்களுக்குப் பொருளாதார அளவுகோலைப் பிடிப்பது என்பது இந்த இயக்கத்தின் வேரையே கெல்லி எறிவது போலாகும்.

தமிழகத்தில் நாலரை கோடி மக்களில் பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் இருவருக்கும் 1970-ஆம் ஆண்டு வரையில் முறையே 25 சதவிகிதமும், 16 சதவிகிதமும் கல்வி, வேலை வாய்ப்புக்களில் இடங்கள் ஒதுக்கப்பட்டன.

அதன்பிறகு கொங்குவேளாளர், உருது முஸ்லீம் போன்றோரும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இடம்பெற வேண்டிய நிலையில் பிற்படுத்தப்பட்டோருக்கு 31 சதவிகிதமாகவும், தாழ்த்தப்பட்டோருக்கு 18 சதவிகிதமாகவும், நான் முதலமைச்சர் பொறுப்பில் இருந்தபோது உயர்த்தப்பட்டது.

இந்த 31 சதவிகிதம் பிற்படுத்தப்பட்டோருக்குப் போதுமானதா என்றால், இல்லை! ஆனால் சதவிகிதத்தை அதற்குமேல் உயர்த்த

சட்டம் இடம் தரவில்லை. General Pool பொதுத் தொகுப்பு Open Competition-இல் 51 சதவிகிதம் குறையக்கூடாது. ஆகவே, 31 சதவிகிதத்திற்குமேல் உயர்த்த முடியவில்லை. இருந்தாலும் 51 சதவிகிதத்திலும் பிற்படுத்தப்பட்டவர்கள் கணிசமான இடங்களைப் பெறுவதற்கு வழிவகைகள் இருந்தன. எனவே ஒதுக்கப்பட்ட 31 சதவிகிதமன்னியில் பொதுத் தொகுப்பான 51 சதவிகிதத்திலும் பிற்படுத்தப்பட்ட மக்கள் பெருமளவு இடம்பெற முடிந்தது.

31 சதவிகிதத்தில் ஒன்பதாயிர ரூபாய்க்குக் குறைவான ஆண்டு வருமானமுள்ள ஏழைப் பிற்படுத்தப்பட்டோர் இடம் பெறுவார்கள் என்று அரசு நடத்துவோர் பன்னிப் பன்னிக் கூறிக்கொண்டேயிருக்கிறார்கள்.

ஒன்பதாயிர ரூபாய்க்கு மேற்பட்ட வருமானமுடையவர்கள், 51 சதவிகிதத்தில் இடம்பெற யாருடன் போட்டியிட வேண்டியிருக்கிறது? இதை எண்ணிப் பார்க்க வேண்டாமா?

ஆண்டாண்டு காலமாகப் படித்து முன்னேறியவர்களுடன் - படிப்பதே பாபம் என்று கருதிக்கொண்டு வாழ்ந்த சமுதாயத்தின் இன்றைய மாணவர்கள் மோதும்போது, தகுதி, திறமை என்ற அளவுகோல்கள் கொடும் வேல்களாக மாறியன்றோ பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு வாய்ப்பற்ற ஒரு நிலையை உருவாக்கி விடும்!

பதவியில் ஒட்டிக்கொண்டிருக்க வேண்டுமென்று கருதுகிறவர்கள் மௌனமாகவாவது வாயடைத்துக் கிடக்கலாம். அதைவிடுத்து எம்.ஜி. இராமச்சந்திரனை திருப்திப்படுத்துவதற்காக 'இந்து' ஏட்டையும் மிஞ்சுகிற அளவுக்கு வியாக்கியானங்களை அளிப்பதைக் காணும்போது திராவிடர் இயக்கத்திலே இணைந்து வளர்ந்தவர்களுக்கு விழிகளன்றோ குளமாகின்றன!

விதைக்காது விளையும் கழனி என்றாரே அண்ணா! அந்தக் கழனிகள் இன்று களிநடனம் புரியலாம்!

வியர்வையும் குருதியும் சிந்தி திராவிடர் இயக்கத்தை வளர்த்தவர்கள் கண்ணீர் வடிக்கும் காலமன்றோ வந்துவிட்டது!

இந்த நிலைபற்றி விவாதிக்க - நிலைமாற்ற, நல்லதோர் முடிவெடுக்கத்தான் நமது கழகத்தின் பொதுக்குழு கூடுகிறது.

பொதுக்குழு கூடும் செய்தி கேட்டதுமே எம்.ஜி. இராமச்சந்திரன் விருதுநகர் பெரியார் நூற்றாண்டு விழாவிலே வேகமாகப் பேசியிருக்கிறார்! கோபமாகப் பேசியிருக்கிறார்! வீராப்புடன் பேசியிருக்கிறார்! விரசமாகவும் பேசியிருக்கிறார்! என் குடும்பம் - பெண்டு பிள்ளைகள் பற்றியும் பேசியிருக்கிறார்! அவர் கட்சி ஏட்டிலேயே அந்த அநாகரிகப் பேச்சு அச்சேறி வந்துள்ளது! அதற்குப் பதில் சொல்வது சுலபம்! ஆனால் இப்போது நம் வேலை அதுவல்ல!

ஊரையழிக்கும் கொடும் புலிபோர்! பிற்படுத்தப்பட்டோர் - தாழ்த்தப்பட்டோர் மீது தாவிட வரும் பொருளாதார அடிப்படை என்ற தத்துவத்தை எதிர்த்து முறியடிக்கச் செல்லுகிறோம்.

புலிவேட்டைக்குப் போகும்போது - நம்மீது உரசுகின்ற பன்றி கண்டு ஒதுங்குவது அசிங்கத்தினாலே தவிர, அச்சத்தினால் அல்ல! இது, அண்ணா அடிக்கடி நமக்கு நினைவுபடுத்திய வாசகம்!

அந்தத் திருவாசகத்தை நெஞ்சில் ஏந்துவோம்! திராவிடர் இயக்கத்தின் கொள்கையை அழியவிடாமல் காப்போம்! அதற்கெனப் பொதுக்குழுவில் திட்டங்களை வகுப்போம்!

அன்புள்ள,

மு. க.

(13-07-1979)

680. எச்சரிக்கை தேவை! எழுச்சி தேவை!

உடன்பிறப்பே,

1951-ஆம் ஆண்டில் (கம்யூனல் ஜி.ஓ.) வகுப்புவாரி பிரதிநிதித்துவம் செல்லுபடியாகாதென்று சுப்ரீம் கோர்ட் தீர்ப்பளித்தபோது திராவிட நாடு வார இதழில் அறிஞர் அண்ணா தீட்டிய தலையங்கத்தின் சில பகுதிகள் இதோ!

அவமானச் சின்னங்கள் ஆகாதீர்! என்று தலைப்பிட்டு அன்றிருந்த காங்கிரஸ் அரசுக்கு எச்சரிக்கையும் வேண்டுகோளும் விடுத்து அந்தத் தலையங்கத்தின் எழுச்சிமிக்க வரிகளை உணர்ச்சிமிக்க வார்த்தைகளைப் படித்துப்பார்!

ஏமாந்த காலத்தில் ஏற்றம் கொண்டோரால் சமூக நீதி சாக்கடையில் தள்ளப்பட்டுவிட்டது - சட்டம் என்ற கோல்கொண்டு!

சுப்ரீம் கோர்ட் இந்திய அரசியல் சட்டத்தைக் காட்டி வகுப்புரிமை செல்லுபடியாகாது என்று தீர்ப்பு தந்துவிட்டது.

சட்டம் என்ற கூண்டு! உள்ளே சமூக நீதி! தேன் தேடி அலைபவனைத் தேள் கொட்டியது போல, சமநீதி மூலம் தன் ஒடிந்துபோன வாழ்வைச் சீர்படுத்திக் கொள்ளத் தொடங்கிய பார்ப்பனரல்லாதாரின் முன்னேற்றப் பாதையில் விழுந்த பேரிடியாகும் இச் சம்பவம்.

திகைத்துத் திண்டாடும் திராவிட சமுதாயம் இரத்தம் கொதிக்க, எண்ணங்கள் கிளர்ச்சி முரசு கொட்ட, எங்கள் முதுகெலும்பு உடைக்கப்பட்டதா? இருதயத்தையா எத்தர்கள் எடுத்துவிட்டனர்? எங்களுக்கா இந்தப் பேரிடி என்று தனது ஒளியிழந்த கண்களிலே நீர் ததும்ப, ஒலியிழந்த குரல்களிலே வேதனைதொனிக்க, தனது தலைவர்களைச் சோகத்தோடு பார்க்கிறது.

சமூக நீதி, சென்னை நீதிமன்றத்திலே சட்டப் பிரச்சினை மூலம் சாய்க்கப்பட்டதுமே நாமெல்லாம் குமுறினோம். நாடெங்கும்

மக்கள் கண்டனத்தைத் திரட்டிக் காட்டினோம். சமநீதி வேண்டும்! இந்திய அரசியல் சட்டத்தைத் திருத்து என்ற முழக்கங்களோடு!

இவ்வாறு கனல்பறக்க கருத்துக்களைத் தீட்டிய அண்ணா அவர்கள், அந்தத் தலையங்கத்தின் இறுதிப் பகுதியில் சென்னை மாநிலக் காங்கிரஸ் அரசுக்குக் கடுமையான எச்சரிக்கை விடுக்கிறார். அந்தப் பகுதியைப் படித்தால் அன்றிருந்த ஆட்சியாளருக்கு மட்டுமல்ல! இன்றுள்ள தமிழக ஆட்சியாளருக்கும் மிக மிகப் பொருந்தும்.

தங்களது வாழ்வு - சாவுப் பிரச்சினையாக சென்னை சர்க்கார் சமநீதிப் பிரச்சினையை கருதுவார்களென எதிர்பார்க்கிறோம்.

நமது ஓயாத ஆசை கம்யூனல் ஜி.ஓ. நம்மிடமிருந்து பறிபோகக்கூடாது என்பதுதான்!

அதைச் செய்து தரும் பொறுப்பும் வசதியும் சர்க்காரிடமே இருக்கிறது. மக்களின் இதய வேகம் அறிந்தவர்கள் இவர்கள் என்றே நம்புகிறோம். உண்மை உள்ளத்தோடு துணிவைத் துணைக் கொண்டுப் பாடுபட்டால் எப்படியும் வெற்றி நிச்சயம். அந்தப் பாதை நடப்பார்களா? அல்லது அழியாத அவமானச் சின்னங்களாவார்களா?

மந்திரிப் பதவிகள், மக்கள் புயல் முன் சிறு தூசு! - இதை அவர்களுக்குக் கவனமூட்டிக் கடமைப் பாதையைக் காட்டுகிறோம். பெருவெள்ளம் மோதிக் கொண்டிருக்கிறது. ஆபத்தை அணைத்து அவமானச் சின்னங்கள் ஆகாதீர்!

உடன்பிறப்பே, திராவிட சமுதாயத்தின் வீழ்ச்சிக்கு வித்திடப்பட்டது என்ற நிலை தோன்றியதும் அண்ணனின் எழுதுகோல் எப்படிச் சுழன்றிருக்கிறது பார்த்தாயா? படைமுகத்து வாள்போல!

அய்யாவும் போர்க்கோலம் பூண்டார்! அரசியல் சட்டம் திருத்தப்படவேண்டுமென்ற முரசம் தமிழகத்தின் மூலை முடுக்குகள் எல்லாம் அதிர்ந்தது!

திராவிடர் கழகத் தலைவர் பெரியார் அவர்களும், தி.மு.கழகப் பொதுச் செயலாளராகப் பொறுப்பேற்றிருந்த பேரறிஞர் அண்ணா அவர்களும் வகுப்புரிமைச் சட்டம் (கம்யூனல் ஜி.ஓ.)

வின் தந்தையெனப் போற்றப்பட்ட பெருந்தகை முத்தையா முதலியாரும் விடுத்த அறிக்கைகள் எழுப்பிய உணர்வுகள் எங்கெணும் எதிரொலித்து மாணவர் கூட்டம் அறவழிப் போரில் குதித்தது.

வகுப்புரிமைச் சட்டம் வீழ்த்தப்பட்டதைக் கண்டித்து ஊர்வலங்கள், பொதுக்கூட்டங்கள், கடையடைப்புகள் நகரங்களில் மட்டுமின்றி குக்கிராமங்களில் கூட நடை பெற்றன.

இன்றைய நமது கழகத்தின் பொதுச்செயலாளர் பேராசிரியர் அவர்கள் வகுப்புரிமை போராட்டம் என்ற விளக்க நூல் எழுதி வெளியிட்டார். அந்த நூலுக்குச் சிறப்புரை எழுதிய முத்தையா முதலியார் அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

கம்யூனல் ஜி.ஓ.வை ஆதரிப்பவர்கள் கூறுவதெல்லாம் தகுதியற்ற பார்ப்பனர்களை அதிகம் எடுப்பதைக் கைவிட்டு தகுதி அற்றவர் எனினும் பிற்படுத்தப்பட்டு விட்டதால் உரிமை மிகுந்த மற்ற வகுப்பாரை எடுக்க வேண்டும் என்பதேயாகும். மேலும் தகுதி திறமை என்பதே அர்த்தமற்ற ஆதாரமற்ற, சுயநல ஏமாற்றுக் கூச்சலேயாகும். இவ்வாறு மூதறிஞர் முத்தையா எழுதிய முன்னுரை நமது பேராசிரியரின் நூலுக்குக் கம்பீரமான நுழைவாயிலாகத் தோற்றமளிக்கிறது.

நுழைவாயிலைக் கடந்தவுடன் அறிஞர் அண்ணாவின் பொன்மொழி யொன்று போர்வாள் ஏந்தி நிற்கும் வீரர்படையென வீறுகொண்டு நிற்கிறது.

அண்ணா வழங்கிடும் அந்த வாசகத்தின் அடிப்படையைப் புரிந்து கொண்டால் அன்று மட்டுமல்ல; இன்றும் நம்மைக் காய்பவர்கள் யார் என்ற உண்மை உறுதியான கொள்கைப்பற்று உடையவர்களுக்குப் புலனாகியே தீரும்!

ஒருவர் விழிப்புணர்ச்சியுடன் காணப்பட்டால், விவேகியாகத் தெரிந்தால், வீரனாகக் காட்சி தந்தால் உடனே, வகுப்புவாதி என்ற சொல் கிளம்பும் அவரை வதைக்க! இதுதான் சென்ற இருபதாண்டுக் கால தமிழ்நாட்டு அரசியல்!

வகுப்புவாதி! தன்னலக்காரரின் அகராதியில் முளைத்த சொல்! என்றைக்கு ஆதிக்கக்காரர்களைப் பார்த்து விழிப்பு

நிலைபெற்ற அடிமைகள், இது என்னய்யா அநீதி? என்று வாதாட முன்வந்தனரோ அன்றே கிளம்பி விட்டது இந்தச் சொல்!

(அறிஞர் அண்ணா)

உடன்பிறப்பே, 1951-ஆம் ஆண்டு தொடங்கி தொடர்ந்து நடைபெற்ற வகுப்புரிமைப் போராட்டத்திற்குப் பெரியார், அண்ணா தலைமையேற்றது மாத்திரமல்ல, கட்சிச் சார்பற்ற முறையில் தமிழகத்துப் பெருமக்கள் பலரும் போர்க்கோலம் பூண்டு நின்றனர்.

வகுப்புரிமைக்காக (கம்யூனல் ஜி.ஓ.) இந்திய அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டால் அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்று அன்றைய காங்கிரஸ் கட்சி நிதியமைச்சர் கோபால் ரெட்டி உறுதியளித்தார்.

இத்தகைய உறுதி மொழி கிடைக்கும் வகையில் காங்கிரஸ் தலைவர் காமராஜ் அவர்களும் மற்றும் அக்கட்சியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் சிலரும் பெரு முயற்சி எடுத்துக் கொண்டனர்.

ஆனால் காங்கிரஸ் அமைச்சரவை உறுதியளித்தவாறு வகுப்புரிமைச் சட்டம் முழுமையாக நடைமுறைக்கு வருகிற அளவுக்கும் நீடிக்கும் அளவுக்கும் அரசியல் சட்டம் திருத்தப்பட மாட்டாது என்று டெல்லியில் உள்ளவர்கள் கைவிரித்து விட்டனர்.

அப்போது அண்ணாவின் பேனா, மீண்டும் போர்வாளாக மாறியது! திராவிட நாடு இதழில் கனல் பறக்கும் தலையங்கமொன்றை மறுபடியும் எழுதினார். அதில் சில பகுதிகள்! நீ படிப்பதற்காக மட்டுமல்ல! குலத்தைக் காட்டிக்கொடுக்கும் கோடரிக் காம்புகள் சிலர் உளரே! அவர்களும் படித்து உணர்ச்சி பெறுவதற்காக! நமது அண்ணன் எழுதுகிறார் பார்!

பெரும்புயல் எழும்பிவிட்டது! நமது உரிமைக்கோரிக்கை உதாசீனப்படுத்தப்பட்டு விட்டது! நாம் சந்தர்ப்பம் தந்தோம் - தேசியக் கூடாரத்தினருக்கு! அவர்கள் முகத்திலும் கருப்புத் தடவி அனுப்பி விட்டது டெல்லி! ஆகவே நமது சமுதாய உரிமைக்காகப் பாடுபடவேண்டிய பொறுப்பும் நம் தலையில் விழுந்துவிட்டது.

சமூக நீதி சாயக்கூடாது - சாய்ந்தால் இனம் சாயும் அவர்தம் வாழ்வு சாயும் என்பதை நாட்டோர் உணர்ந்து நாட்கள்

பலவாகிவிட்டன. அந்த நம்பிக்கை நாசமாகிவிட்டது என்பதைக் கண்டபிறகும் கைகட்டி, வாய்பொத்தி இருக்கமாட்டார். அவர்கள் கண்களில் கனலைத்தான் காணப்போகிறோம். தீப்பொறி தெருவெல்லாம் சிதறத்தான் போகிறது. இனிப் போர் முரசு கொட்டத்தான் போகிறார்கள். அந்நாள் நெருங்குகிறது! நெருங்கிக் கொண்டேயிருக்கிறது - நெருங்கியேவிட்டது!

இப்படிப் புயலாக மாறி எழுதுகிறார் நமது அண்ணன்! வகுப்புரிமையின் மீது கைவைக்கப்பட்டது கண்டு துடித்தும்! அதற்கு அரசியலில் சட்டத் திருத்தம் கொண்டுவராதது கண்டு பதறியும்!

உடன்பிறப்பே! பெரியாரும் அண்ணாவும் பூண்ட போர்க் கோலம் கண்டும், தமிழ்நாட்டுக் காங்கிரஸ்காரர்களும் வகுப்புரிமைச் சட்டத்தால் பிற்படுத்தப்பட்டோரும் பிராமணரல்லாதாரும் பெற்று வந்த பயன் புதிய தீர்ப்புக்களால் பாழாகிவிட்டதை உணர்த்தியதைப் புரிந்துகொண்டும் இறுதியாக பாராளுமன்றத்தில் அரசியல் சட்டத்திற்கு ஒரு திருத்தம் கொண்டுவரப்பட்டது.

அந்தத் திருத்தத்தை ஆதரித்து பண்டித நேரு பாராளுமன்றத்தில் பேசினார். அந்தப் பேச்சைக் கண்டித்து இந்து ஏடு, தலையங்கம் தீட்டியது! இந்து ஏட்டின் தலையங்கம் குறித்து அண்ணா அவர்கள் திராவிட நாட்டில் எழுதிய தலையங்கத்தில் சில குறிப்புக்களை மட்டும் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

நாம் எதிர்பார்க்கும் அளவில் சமநீதிக் கோரிக்கை இத்திருத்தத்தின் மூலம் நிறைவேற்றப்படுமா என்ற ஐயம் நமது இதயத்தில் எழும்பிக் கொண்டேயிருந்தாலும் நேருவின் பேச்சு, புதுத் தெம்பைத் தரும் நிலையிலேயே இருக்கிறது. ஆனால் இந்து ஏடு பாய்கிறது தனது மக்களின் ஆதிபத்தியம் நீடிக்கும் வழி அடைக்கப்படுவது கண்டதும், ஆத்திரக் கனலைக் கக்குகிறது. தங்களது ஏகபோகத் தலைவர் என்று போற்றித் துதித்த பண்டித நேரு மீது பழியையும் பரிகாசத்தையும் அள்ளி வீசுகிறது. 'இந்து'வின் பாதை, நாம் அறியாததல்ல! பெயருக்கேற்றவாறே அதன் பித்தலாட்டமும் இருந்து வருவது, வீழ்ந்துபட்ட சமுதாயம் உணர்ந்ததுதான்.

உடன்பிறப்பே! அண்ணன் எப்படி இந்து ஏட்டினை 1951-ஆம் ஆண்டிலேயே அடையாளம் காட்டியிருக்கிறார் பார்த்தாயா!

அன்று நாம் கோரிய சமூக நீதியில் ஓரளவு கடைக்கண் காட்டி ஆதரித்துப் பேசியமைக்காக பண்டித நேருவுக்கு இந்துவின் பகிரங்கக் கண்டனம்! இன்று அந்த சமூக நீதியில் கைவைத்து, பொருளாதார ரீதியில்தான் பின்தேங்கியோர் பிரச்சினையை அணுகுவேன் என்று பேசி பெரியார், அண்ணா கொள்கைக்கு விரோதமாக உத்திரவாதம் பிறப்பித்துள்ள எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்களுக்கு அதே இந்து ஏட்டில் பாராட்டு! பாயிரம் பாடும் தலையங்கம்!

புரிகிறதா உடன்பிறப்பே! புதருக்குள் பதுங்கியிருக்கும் நாகம் எதுவென்று? பச்சைக் கொடிக்கும் பச்சைப் பாம்புக்கும் வேறுபாடு தெரியாமல்தானே வீழ்ந்து பட்டது நமது இனம்!

இப்போதும் அந்த வேலையைத் தானே நடத்துகிறார்? முதலமைச்சர் எம்.ஜி. இராமச்சந்திரன்!

ஏழைப் பிற்படுத்தப்பட்ட மக்களுக்காகக் கொண்டுவந்த உத்தரவு எனக்கூறி, பச்சைப் பாம்பைப் பச்சைக்கொடியெனக் காட்டி சமூக நீதியை சாய்த்திடப் பார்க்கிறார்!

உனக்கும், உன்னால் விளக்கம் பெற வேண்டியவர்களுக்கும் இன்னும் சில கருத்துக்களை நமது அண்ணாவின் திராவிட நாடு இதழில் இருந்தே தருகிறேன்.

கல்வி அடிப்படையிலும், சமூக அடிப்படையிலும் பிற்படுத்தப்பட்டவர்கள் என்ற நிலையை ஏற்றுக் கொண்ட அரசியல் சட்டத்திருத்தத்தின் துணைகொண்டு பின்வரும் ஏற்பாட்டை மாநிலக் காங்கிரஸ் அரசு அறிவித்தது.

மொத்தம் நூறு இடங்கள் என்றால் அதில் பதினைந்து இடங்கள் தாழ்த்தப்பட்டோருக்கும் மலைசாதியினருக்கும் ஒதுக்கப்படும். கல்வி, சமுதாயத் துறைகளில் பின்னணியில் இருப்போர்க்கு இருபத்து ஐந்து இடங்கள் ஒதுக்கப்படும். மீதி அறுபது இடங்கள் எல்லோருக்கும் பொதுவானவை.

இந்த அறிவிப்பையொட்டி உடனடியாக அண்ணா அவர்கள் திராவிட நாடு இதழில் அரிய புள்ளி விவரங்களோடு எழுதிய கட்டுரை யொன்றின் ஒரு பகுதியை மட்டும் இதோ தருகிறேன்.

புது ஏற்பாடு, தேனாக இல்லை - தித்திக்க!

பழைய வகுப்புவாரி உத்தரவை விட, பலமடங்கு பார்ப்பன சமுதாயத்துக்கு நன்மையும் திராவிட மக்களுக்குத் தீங்கும் தருவதாகவே தோன்றுகிறது.

சென்னை மாநிலத்தில் வாழும் மொத்த மக்கள் தொகையைக் கணக்கிட்டு அதன்படி இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா என்றால், ஏமாற்றம்தான் பதிலாக வருகிறது.

பழைய உத்தரவு:-

பார்ப்பனர்	14
பார்ப்பனரல்லாதவர்	43
பிற்போக்கு	14
ஆதித்திராவிடர்	14
முஸ்லிம்கள்	7
கிருஸ்துவர்	7

மொத்தம் இருப்பது 100 இடங்கள் என்றால் மேற்குறிப்பிட்ட விகிதாசார முறையில், அவரவர்க்கு இடமளிக்க வேண்டும் என்பதே பழைய உத்திரவாகும்.

இந்த முறையே நியாயம் நிரம்பியதல்லவென்று பலர் குறைபட்டு வந்தனர். ஏனெனில் மக்கள் தொகைக் கேற்றபடி, விகிதாசாரம், இந்த ஏற்பட்டால் பகிர்ந்தளிக்கப்படவில்லை.

மக்கள் தொகை நூற்றுக்கு எத்தனை என்பதைக் காட்டி கீழே தரப்பட்டிருக்கும் புள்ளி விவரத்தை நோக்குங்கள்:-

பார்ப்பனர்	2.7
பார்ப்பனரல்லாதாரும்	
பிற்படுத்தப்பட்டோரும்	67.7
ஆதித்திராவிடர்	16.3
முஸ்லிம்கள்	7.8
கிருஸ்துவர்	3.7

மக்கள் தொகையின் சதவிகிதக் கணக்கு இது.

முதலிலே தரப்பட்டிருக்கும் பழைய உத்தரவு மூலம் ஒவ்வொரு வகுப்புக்கும் தரப்பட்ட விகிதாசாரத்தையும், இதையும் ஒப்பிட்டுப் பார்த்தால் - உண்மை விளங்கும்.

நூற்றுக்கு 3 பேர்கூட இல்லாத பார்ப்பனருக்கு - 14 இடங்கள்.

நூற்றுக்கு 70 பேராக உள்ள திராவிட மக்களுக்கு - 57 இடங்கள்.

நூற்றுக்கு 17 பேரான தாழ்த்தப்பட்டோருக்கு - 14 இடங்கள்.

பழைய உத்தரவு இது. பலரைப் பதறச் செய்தது, இது. ஆனாலும் இதை ஆட்சேபித்து கச்சை கட்டினர் பார்ப்பன மாந்தர். கடைசியில் தங்கள் தந்திரங்கள் மூலம் இந்த ஏற்பாட்டை சவக்குழியிலும் தள்ளினர் - சட்டத்தின் மூலம்.

இப்போது புதுத் திட்டம், பிறந்திருக்கிறது பொங்கும் கடல்போல திராவிட சமுதாயம் தன் இன எழுச்சியைக் காட்டிக் கொண்டபிறகு.

ஆனால் புதுத்திட்டம் - பொன்னாக இல்லை; முலாம் பூசப்பட்டதாகக் காட்சி தருகிறது.

இதன்மூலம் தாழ்த்தப்பட்டோருக்கு 100-க்கு 15 இடங்கள் கிடைக்கும் வசதி உண்டாகி இருக்கிறது.

பழைய உத்தரவின்படி 14 இடங்கள்தான்; ஆனால் புது உத்திரவு 1 இடம் அதிகமாகத் தருகிறது. எனினும் அவர்களின் மொத்த தொகைக்கேற்ற அளவு, விகிதாசாரம் இல்லையென்றாலும் இந்த அளவாவது கிடைத்ததே என்பதால் சிறிது தெம்பு வருகிறது, நமக்கு.

கனி பறிக்கச் சென்றவனைக் கழுகு கொத்திட அதனால் கீழே விழுந்தும் அடிபடாமல் தப்பினான் என்றால், கனி கிடைக்கவில்லையே என்ற வருத்தம் எழும்பவா, செய்யும்?

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அடுத்தபடியாக, பின்னணி வகுப்பாருக்கென நூற்றுக்கு 25 இடங்கள், ஒதுக்கப்பட்டுள்ளன, புதுத்திட்டத்தின் மூலம்.

இந்த மாற்றமும் எதிர்பார்த்ததை விட அதிகமாகத்தான் தோன்றும்.

ஏனெனில் பழைய கம்யூனல் ஜி.ஓ.படி, பின்னணி வகுப்பாருக்கென நூற்றுக்கு 14 இடங்கள்தான் தரப்பட்டிருந்தது.

முன்பு 14, இப்போது 25. இது அதிகமாகக் காட்சி தந்தாலும் ஒன்றை நாம் மறந்து விடக்கூடாது.

பின்னணி வகுப்பு எவையெவை என்று, இந்தப் புதுத் திட்டத்தில் சர்க்கார் வரையறுத்துச் சொல்லவில்லை. ஆனால் முன்பு வரையறுத்து வைக்கப்பட்டிருப்பதை வைத்தே, எவையெவை பின்னணி வகுப்பினர் என்று சர்க்கார் தெரிந்து எடுத்துக்கொள்ளும். அப்படிப் பார்த்தால் சென்னை மாநிலத்திலுள்ள பின்னணி வகுப்புகளில் (Backward Class) பட்டியல் 156 வரை செல்கிறது.

156 பிரிவுகள்! ஆனால், அவைகளுக்கு ஒதுக்கப்படும் இடம் 25.

பழைய உத்தரவு மூலம் 156 பிரிவுகள் நிரம்பிய பின்னணி வகுப்பாருக்கு நூற்றுக்கு 14 இடங்களே ஒதுக்கப்பட்டிருந்தன.

இதைப்பற்றி பலமுறை, சென்னை சட்ட சபையில், தேசிய உறுப்பினர்களாலேயே கேள்விகளும், கண்டனங்களும் எழும்பியதுண்டு.

இருந்தும், குறைந்த அளவிலேயே, பின்னணி வகுப்புக்கும் இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

அதுமட்டுமல்ல, சர்க்காரின் புது உத்தரவு மூலம் பின்னணி வகுப்பு என்கிற ஜாபிதாவில் லப்பை, மாப்பளா, தூகுகுலா போன்ற முஸ்லிம்களும், கிருத்தவர்களாக மதம் மாறிய ஆதித் திராவிடர்களும், மலைச்சாதியினரும் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். இருந்தும், அதிகமாக்கி உத்திரவிட்டிருப்பது 25 இடங்கள்தான்.

பிற்படுத்தப்பட்ட மக்களின்தொகையையும், இப்போது ஒதுக்கப்பட்டிருக்கும் இடங்களையும் ஒப்பிட்டால் மகிழ்ச்சி அரும்பாது. ஏனெனில் அதிகத் தொகையும், பிரிவுகளும் நிரம்பியோருக்கு நூற்றுக்கு 25 இடங்கள் என்று ஒதுக்குவது - ஓடையில் பெருங்காயம் கரைப்பது போலத்தான் ஆகும்.

புதுத்திட்டம், பார்ப்பனர்களுக்கு பரந்த ஒரு சந்தர்ப்பச் சோலையைத் தந்திருக்கிறது.

மீதம் 60 இடங்கள் என்று சர்க்கார் குறிப்பிட்டிருப்பதுதான், அந்தச் சோலை.

பழைய உத்திரவின்படி, பின்னணி வகுப்பினருக்கு நூற்றுக்கு 14 இடங்கள் என்பது தவிர, பார்ப்பனரல்லாத மக்களுக்கென 43 இடங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன.

இப்போதோ, அந்த இடங்கள் பறிமுதலாகி விட்டன.

புது உத்திரவில் நமது நெஞ்சைக் கலக்கும் கட்டம் இதுதான்.

இந்த 43 இடங்களையும், இப்போது பார்ப்பனர் தமது தகுதி, திறமை கொண்டு வேட்டையாடும்படி விட்டுவிட்டனர் சர்க்கார்.

பழைய உத்திரவுபோல, இனி பார்ப்பனரல்லாதோருக்கு, சலுகை கிடைக்க இனி வழியில்லை.

தாழ்த்தப்பட்டோருக்கும் பின்னணி வகுப்பினருக்குமாக மொத்தம் 40 போக மீதமாகும் 60 இடங்களில் பார்ப்பனருடன் போட்டியிட்டே, பார்ப்பனரல்லாத மாணவர்கள் இடம் பெறவேண்டும்.

இனி, பார்ப்பனரல்லாத மாணவர்களுக்கென சலுகை பெற எவ்வித வசதியுமில்லை.

இந்த 60 இடங்களிலும், தகுதி திறமையை வைத்து பார்ப்பனர், பின்னணி வகுப்பினர், பார்ப்பனரல்லாதார், தாழ்த்தப்பட்டோர், முஸ்லிம், கிறிஸ்துவர், ஆகியோரெல்லாம் வேட்டையாடலாம்.

இந்த வேட்டையில் எவர் கெலிப்பர் என்பது தெரியாத விஷயமல்ல.

தகுதி திறமை பேசிய கும்பலுக்குத் தலை வணங்கிவிட்டது, புதுத்திட்டம். தகுதியையும், திறமையையும் எடைபோட, மாணவர்களுடைய மார்க்குகள், சரியான எடைப் பொருள் அல்ல.

இருந்தும் அதில் ஏனோ விட்டுக் கொடுத்திருக்கின்றனர், சென்னை சர்க்கார்.

ஆனால், இதற்குச் சமாதானம் கூறுவது போல, 60 இடங்களுக்கும் மாணவர்களைத் தேர்ந்தெடுக்க கமிட்டிகள்

வேலை செய்யும். அவை நேரில் பார்த்தே மாணவர்களைச் சேர்க்குமென சர்க்காரின் தகவல் கூறுகிறது.

பல்கலைக் கழகத் துணைவேந்தர்கள் பொறுப்பிலே இக்கமிட்டி இருக்குமென்றாலும், பாதிக்கப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தோரே எப்போதும் துணைவேந்தர்களாயிருப்பர் என்பது என்ன நிச்சயம்!

இன்றுள்ளோர் மாறி, அந்த இடத்தில் அவர்கள் வந்தால், நாம் பேசும் பரந்த மனோபாவம், அங்கே காணவா முடியும்? தற்போதைய ரயில்வே இலாகாவைப் பார்த்தாலே விளங்குகிறதே!

எனவே இந்த ஏற்பாடு மூலம் நிரந்தர பலன், பார்ப்பனரல்லாத பெருங்குடி மக்களுக்கு ஏற்படும் வழியில்லை.

சிலர் கூறலாம், பார்ப்பனரல்லாத பையன்கள் மட்டுமா கெட்டிக்காரர்கள். நமது பையன்களும் கெட்டிக்காரர்கள்தான். வேண்டுமானால் போட்டி போடட்டும், இருவரும். எப்போது பார்த்தாலும் படிப்பு வரும் இனம் பார்ப்பனருடையதே, என்று சொல்வதால் என்ன பிரயோஜனம்? ஏனிந்த தாழ்வு மனப்பான்மை? என்பதாக.

இந்த விளக்கம், நமது வீம்பைத்தான் காட்டுமேயொழிய, உண்மையைக் காட்டாது.

ஏனெனில், நூற்றுக்கு மூவரான பார்ப்பனர், இதுவரை 14 இடங்களைப் பெற்று, போக போக்கியங்களிலே மூழ்கித் திளைப்பவர்கள். அதோடு, அவர்களது வாழ்க்கை முறையும், சிறுவர்கள் படிப்பதற்குள்ள வசதிகளும் எவரும் அறியாததல்ல. ஏழைப் பார்ப்பனராயிருந்தாலும் அவர் வீட்டுப் பெண், எடுத்துக்காட்டுமளவாவது படிக்காததாயிருக்காது. ஆனால் பார்ப்பனரல்லாத குடும்பங்கள் அப்படியல்ல.

இது சமுதாயத்திலே அமைந்துபோன கோணல்.

எப்படி இந்தக் கோணல் அமைந்தது?

இந்தக் கேள்வி, பல விஷயங்களைக் கிளறச் செய்யும். எனவே, இங்கு விளக்கம் தேவையில்லை.

ஆனால் ஒன்றுமட்டும் உண்மை.

சமுதாய விருட்சத்தின் மீது படர்ந்த கொடிகள் உச்சிக்கிளைக்குப் போய்விட்டன தாவித் தாவி. இந்நிலையில் வேரும், மரமும் என்ன செய்யமுடியும், கொடி சென்றிருக்கும் இடம்வரை உயர?

ஆகவே சமுதாயத்திலே ஏற்பட்டுவிட்ட இந்த பரம்பரை மாசு போக, வீம்பு பயன் தராது.

தகுதி திறமை பேசி, ஏர்பிடிப்போன் மகனையும், வேதமோதியின் குழந்தையையும் மோதவிடுகிறது சர்க்கார்.

கவலை நிரம்பிய குலத்திலே வந்தவன், கல்வியே கருந்தனம் என உருப்போடும் கூட்டத்தோடு மோதி வெற்றிபெறுவது இலேசானதல்ல!

மேல் தளத்திலே நிற்கிறது பார்ப்பன சமுதாயம். கீழே கிடக்கிறது பார்ப்பனரல்லாத இனம்.

எப்படி, போட்டியில் வெற்றி காண முடியும்?

இதைக் காணும்போதுதான், புதுத் திட்டம் நாம் எதிர்பார்த்த அளவு பூரிப்பைத் தரவில்லையே என்ற துக்கம் வருகிறது.

உடன்பிறப்பே, அண்ணா தந்துள்ள புள்ளிவிவரக் கட்டுரையில் கண்டுள்ள அசைக்க முடியாத வாதங்களை சிந்தித்துப்பார்! மற்றவர்களையும் சிந்திக்க வை! அதுவே எனக்கும் உனக்கும் சமூக நீதியில் ஆர்வம் கொண்டோருக்கும் இனி வேலையாக இருக்க வேண்டும். நம்மவரை வீழ்த்துவதற்கு வந்துள்ள புதிய உத்தரவு புதைகுழிக்குப் போகும் வரையில்!

எதிர்பார்த்த அளவு பூரிப்பைத் தரவில்லை யென்றாலும், பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களைக் கைதூக்கிவிட வழிவகைகள் இருக்கின்றன என்ற ஆறுதலைப் பெற்றது திராவிடர் இயக்கம். பொறுப்புக்கு வருகிறவர்களைப் பொறுத்து அந்த முன்னேற்றம் அமையும் என்றும் நம்பியது.

அவ்வாறே பெருந்தலைவர் காமராசர் பொறுப்பேற்றிருந்த போதும், பெரியவர் பக்தவத்சலனார் பொறுப்பேற்றிருந்த போதும், அறிஞர் அண்ணா பொறுப்பேற்றிருந்த போதும், நான் பொறுப்பேற்றிருந்த போதும் பிற்படுத்தப்பட்ட

தாழ்த்தப்பட்ட மக்கள் எல்லோருடைய போட்டிக்கும் என்ற Open Competition-லும் பெருமளவு இடங்களைப் பெற முடிந்தது!

பெரியார் அண்ணா வழியை மறவாத நான், பிற்படுத்தப் பட்டோருக்கு 25 சதவீதம் என்றிருந்ததை 31 சதவீதமாகவும், தாழ்த்தப்பட்டோருக்கு 15-லிருந்து 16 சதவீதம் என்றிருந்ததை 18 சதவீதமாகவும் உயர்த்தினேன்.

பொதுத் தொகுப்பு (General Pool) எனப்படும் Open Competition-இல் எல்லோருக்கும் போட்டியிடக்கூடிய எஞ்சிய 51 சதவீதத்தில் தகுதி, திறமை, மார்க்குகள் அடிப்படை என்ற பெயரால் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மாணவர்களோ, அல்லது அவர்களிலேயே வேலை வாய்ப்புத் தேடித் தேர்வில் போட்டியிடுகிறவர்களோ சிறிதும் பாதிக்கப்படாமல் அந்த 51 சதவீதத்திலும் கணிசமான இடங்கள் கிடைக்க வாய்ப்புகள் உருவாக்கப்பட்டன.

ஆனால் இன்று பொறுப்புக்கு வந்திருக்கும் எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்களோ, பொருளாதார அடிப்படை - தகுதி, திறமை, மார்க், என்ற இந்துவின் தத்துவங்களுக்கு தத்துப் பிள்ளையாகிப் புதிய உத்தரவைப் போட்டு விட்டார்!

ஒன்பதாயிரம் ரூபாய்க்கு மேல் ஆண்டு வருமானம் உடையவர்கள் முன்னேறிய சமுதாயத்தினராகக் கருதப் படுவார்களாம்!

இந்தப் பொருளாதார அடிப்படை உத்தரவு அடுத்த கட்டமாகத் தாழ்த்தப்பட்டோரையும் தாக்கக் கூடும்! அதிலேயும் ஒன்பதாயிரத்துக்கு மேல் வருமானமுள்ளவர்கள் உண்டு என்று இந்த ஆட்சியினர் வாதிக்க முன்வருவர்!

ஒன்பதாயிர ரூபாய் வருமானத்திற்கு மேற்பட்டோர் முன்னேறிய சமுதாயமாகக் கருதப்பட்டு, அவர்கள் ஏற்கனவே முன்னேறியுள்ள சமுதாய மாணவர்களுடன் தகுதி, திறமை அடிப்படையில் போட்டியிட்டு வெற்றிபெற முடியுமா?

முடியாது! முடியாது! முடியவே முடியாது!

இதைத்தான் பெரியாரும் அண்ணாவும் அழுத்தம் திருத்தமாக ஆதாரங்களுடன் கூறியுள்ளார்கள்.

பத்தாம் பசலிகளாகவோ, ஆதிக்க மனப்பான்மை கொண்டவர்களாகவோ இல்லாத பார்ப்பன நண்பர்கள் பலரேகூட இன்று எம்.ஜி.இராமச்சந்திரன் போட்டுள்ள உத்தரவினால் ஏற்படக்கூடிய பாதகங்களை உணர்ந்து அதனை வெளிப் படையாகவே கூறுகின்றனர்.

சமூக நீதி எது என்பதையும் இந்த மண்ணின் நிலையையும், அதற்கேற்பவே வகுப்புரிமைகள் வழங்கப்பட வேண்டுமென்பதையும் முற்போக்கு எண்ணம் கொண்ட உயர் சாதி இளைஞர்கள் உணர்ந்திருப்பது பாராட்டுக்குரிய ஒன்றாகும்.

இந்த உண்மைகளை மறைத்து விட்டு, ஏழைக்காகப் போடப்பட்ட உத்தரவு என்ற திரைமறைவில் திராவிடர் இயக்கக் கொள்கைக்குக் குழி தோண்டப்பட்டுவிட்டது!

இப்போதுதான் நமது மக்களுக்கு எச்சரிக்கை தேவை! எழுச்சி தேவை! விளைய இருக்கும் ஆபத்து நாளை விடிந்தால் போய்விடக் கூடிய ஆபத்தல்ல! அதன் தீமை இன்றைக்குத் தெரியாமல் இருக்கலாம்! எதிர்காலத்தில் நமது இனமே சந்தியில் நிற்கும்!

தொழுநோய் கூடப் பளபளப்பாகத்தான் ஆரம்பமாகும்! அதனைப் புதிய பொலிவு என எண்ணிக் கொண்டால் உடல் முழுவதும் பொத்து வடியும்!

ஏழைக்கான திட்டம் என்பது தொழுநோய் தொடக்கத்தைக் காட்டி ஆகா! என்னே பளபளப்பு! என்று கூறுவதைப் போன்றது!

எதிர்காலம் இருண்டகாலமாக ஆகிவிடாமல் இருக்க, இன்றே எச்சரிக்கை தேவை! எழுச்சி தேவை! பொருளாதார அடிப்படை என்பது மாணவர்கள் சம்பளச் சலுகை - இலவசக் கல்வி இவற்றிற்கு வேண்டுமானால் பொருந்துமே தவிர, அதிலே ஏழைகள் பயனடைய திட்டங்கள் வகுக்கலாமே தவிர, இடங்களை வழங்குவதில் இன்று பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவு சமூக நீதியாகாது! சமூகப் படுகுழியாகும்! எனவே தான் திரும்பத் திரும்பச் சொல்கிறேன், எச்சரிக்கை தேவை! எழுச்சி தேவை!

அன்புள்ள,

மு. க.

(14-07-1979)

681. அணி திரளுவோம்! அணை கட்டுவோம்!

உடன்பிறப்பே,

இன்று 22-7-79 ஞாயிற்றுக்கிழமை தமிழக முழுவதும் கழகத்தின் சார்பில் வகுப்புரிமைப் பாதுகாப்பு நாள் - விளக்கக் கூட்டங்கள் நடைபெறுகின்றன. நண்பர் வீரமணி அவர்களின் முயற்சியால் திராவிடர் கழகத்தின் சார்பில் இன்று சென்னையில் அனைத்துக் கட்சியைச் சார்ந்தவர்களும், பிற்படுத்தப்பட்ட மக்களின் நலம் காக்கும் பெருந்தகையாளர்களும் கலந்து கொள்ளும் மாநாடு ஒன்று பெரியார் திடலில் நடைபெறுகிறது. கழகத்தின் சார்பில் பொதுச்செயலாளர் பேராசிரியர் அவர்கள் கலந்து கொள்கிறார்.

நான்விருதுநகர் கூட்டத்திலும், நமது கழக முன்னணியினரும் கழகப் பேச்சாளர்களும் நூற்றுக்கணக்கான கூட்டங்களிலும் கலந்துகொண்டு வகுப்புரிமையைப் பாதுகாக்கவேண்டிய அவசியத்தையும் - இல்லையேல் எதிர்காலத்தில் ஏற்பட இருக்கும் பேராபத்தையும் புள்ளி விபரங்களுடன் எடுத்துக்கூற இருக்கிறோம். இன்று ஒருநாள் விளக்கங்கள் வழங்குவதுடன் நின்று விடக்கூடியதல்ல நமது பணி!

எம்.ஜி.ஆர். அரசு பிறப்பித்துள்ள புதிய ஆணையினால் - பிற்படுத்தப்பட்டோரில் கீழ் மட்டத்தில் உள்ள ஏழைகளுக்கு நன்மை கிடைக்குமென்று உண்மையிலேயே நம்பி, அதனை ஆதரித்து நிற்கும் சிலரையோ, சில கட்சியினரையோ நான் குறைகூறமாட்டேன். அவர்களுக்கு விளக்கமளிக்க வேண்டியது நமது கடமை.

தி.மு.கழகப் பொதுக்குழுவின் தீர்மானத்திலேயே மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறோம்.

பொருளாதார அடிப்படையில் - அதாவது வருமான வரம்பை வைத்து - கல்விச் சலுகைகளை (ஸ்காலர்ஷிப்) வழங்குவதை

வரவேற்கிறோம். அந்தச் சலுகைகள் ஏற்கனவே இருக்கின்றன. அவைகளுக்காக மேலும் அதிக நிதி ஒதுக்கீடுகூட செய்யலாம். ஆனால் பிற்படுத்தப்பட்டோருக்கு என்று இருக்கிற 31 சதவிகித இட உரிமையில் வருமான வரம்புக் கணக்கை வைக்காமல் - பொதுப்பட்டியலில் 51 சதவிகிதம் என்று இருக்கிற இடஉரிமையில் பத்து சதவிகிதமோ அல்லது பதினைந்து சதவிகிதமோ ஏழை எளியவர்களுக்கு என்று ஒதுக்குங்கள் என்றுதான் வலியுறுத்துகிறோம்.

கர்நாடகத்தின் நிலையைப் பாருங்கள் என்று சுட்டிக்காட்டுகிறோம். அங்கே;

(இடஒதுக்கீடுகள்)

பிற்பட்ட சமுதாயம் ...20 %

பிற்பட்ட சாதியினர் ...10 %

பிற்பட்ட பழங்குடி மலைவாழ் மக்கள் ...5 %

தாழ்த்தப்பட்டோருக்கும் பழங்குடி
மலைவாழ் மக்களுக்கும் ...18 %

4800 ரூபாய்க்கு கீழே ஆண்டு வருமானம்
உள்ளவர்களுக்கு ...15 %

பொதுப்பட்டியல் ...32 %

இது கர்னாடக அரசு, இப்போது கடைப்பிடிக்கும்
இட ஒதுக்கீடு முறை!
தமிழ்நாட்டில் 1970 வரையில் (இட ஒதுக்கீடு)

பிற்படுத்தப்பட்டோருக்கு ...25 %

தாழ்த்தப்பட்ட பழங்குடியினர்
மலைவாழ் மக்களுக்கு ...15 %

பொதுப்பட்டியல் ...60 %

என்ற அளவில் இருந்தது.

தமிழ்நாட்டில் 1971-இல் (இட ஒதுக்கீடு)

பிற்படுத்தப்பட்டோருக்கு ...31 %

தாழ்த்தப்பட்டோர் - பழங்குடி மக்கள்,
மலைவாழ் மக்களுக்கு ...18 %

பொதுப்பட்டியல் ...51 %

என்ற வகையில் உயர்த்தியும், பொதுப்பட்டியலை 60% லிருந்து குறைத்தும் மாற்றி அமைக்கப்பட்டது.

இப்போது எம்.ஜி.ஆர். ஆட்சியில் பிற்படுத்தப்பட்டோருக்கு ஏற்கனவே ஒதுக்கியுள்ள இடங்கள் 31%-இல் தான் ஏழை பணக்காரன் என்று வரமான வரம்பு வைத்து 9000 ரூபாய்க்கு மேல் ஆண்டு வருமானம் வருகிறவர்களையெல்லாம் உயர்ந்த சாதிக்காரர்கள் என்று ஆக்கி, அவர்களை பொதுப்பட்டியலில் ஏற்கனவே முன்னேறியுள்ள வகுப்பாருடன் போட்டியிடுகிற நிலைமையை ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

வருமானம் குறைவாகவுள்ள வறியோர் வீட்டுப் பிள்ளைகள் படிக்க வேண்டாமா? வேலைக்குப் போக வேண்டாமா? இப்படிக் கேள்வி எழுப்புவதின் மூலம் நாம் வைக்கும் நியாயத்தை மறைத்துவிடச் சில விஷமிகள், பதவி தேடிகள், முயன்று பார்க்கிறார்கள்.

வருமானம் குறைந்தோரும் - வறியோரும் - உயர் கல்வி கற்கவும், வேலை வாய்ப்புக்களைப் பெறவும் 51%-இல் 10 அல்லது 15% தனியாக ஒதுக்கீடு செய்து - அதில் பிற்பட்டோர், உயர்சாதிக்காரர், தாழ்த்தப்பட்டோர் - யார் வீட்டுப் பிள்ளைகள் ஏழைகளாக இருந்தாலும் அதில் சாதி வேறுபாடு பார்க்காமல் வருமான அடிப்படையில் இடம் கொடுங்கள் என்பதே நமது கருத்தாகும்.

முடமாகிக்கிடந்து எழுந்து நடமாடத் தொடங்கியுள்ள பிற்பட்ட சமுதாயத்தின் முழங்காலை முறிக்காதீர்கள்! 31 சதவிகிதத்தில் கைவைக்காதீர்கள். முன்னேறிய வகுப்பாரும், பிற்பட்டோரும் தாழ்த்தப்பட்டோரும் போட்டியிடும் 51 சதவிகிதத்தில் எல்லா வகுப்பாரிலுமுள்ள ஏழைகளுக்கு குறிப்பிட்ட சதவிகிதத்தை இட ஒதுக்கீடாகச் செய்யுங்கள்! இதுதான் நமது பொதுக்குழு தீர்மானத்தில் தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது.

இப்போது புதிய உத்தரவைப் பிறப்பித்துள்ள எம்.ஜி.ஆரின் உள் நோக்கமென்ன?

இதோ நண்பர் க. ராசாராம் அவர்கள் 1975 மார்ச் 12ஆம் நாள் சட்டப் பேரவையில் பின்தங்கியோர் நல அமைச்சர் என்ற முறையில் பின்வருமாறு விளக்கம் தருகிறார்:

கடைசியாக ஒரே ஒரு பிரச்சினையைப் பற்றி மட்டும் சொல்ல விரும்புகிறேன். பிற்பட்ட சமுதாயத்தைப் பற்றி அ.தி.மு.க. நிலையைப் பற்றி காலையில் விவாதித்தார்கள். 25-10-73 குமுதம் பத்திரிகைக்கு எம்.ஜி.ஆர். கொடுத்த பேட்டியில் அவரே குறிப்பிட்டிருக்கிறார்.

தாழ்த்தப்பட்டவர்கள் என்ற சொல் ஏமாந்த காலத்தில் ஏற்றம் கொண்டவர்களின் கண்டுபிடிப்பாகும். அதே சமயம் இன்னொரு பக்கம் உயர்ந்த வகுப்பைச் சார்ந்தவர்கள் என்று சொல்லப்படுகிறவர்கள் தாழ்ந்துகொண்டே போய் ஒரு நூற்றாண்டுக்குள் இன்னொரு தாழ்ந்த சமுதாயம் உருவாகிவிடும். இந்தத் தத்துவம் ஒரு ஜாதியை ஒரு மதத்தைச் சேர்ந்தவர் என்பதற்காக மட்டுமல்லாமல், பொருளாதாரத்தில் பிற்பட்டிருக்கிற அனைத்து மக்களுக்கும் சமுதாயத்தில் உயர்நிலை வாழ்வுபெறத் தகுந்த முறையில் ஒவ்வொருவரும் உழைத்தாக வேண்டும். காலையில் குறிப்பிட்டதற்கு இதுதான் ஆதாரம். இதிலிருந்து அ.தி.மு.க.வினருக்கு பிற்பட்ட சமூகத்தினரைப் பற்றிய எண்ணம் சரிவர இல்லை என்பதை சுட்டிக்காட்டத்தான் இதைப் படித்தேன்.

உடன்பிறப்பே, எதிர்க்கட்சியாக அ.தி.மு.க. இருந்தபோதே வகுப்புரிமைக்கு எதிராகத்தான் பேசியிருக்கிறது! மக்கள் மன்றத்தில் மட்டுமல்ல, சட்டமன்றத்தில் கூட!

அப்படி அவர்கள் பேசியதின் தொடர்பாகத்தான் அன்றைய நமது கழக அமைச்சர் நண்பர் ராஜாராம், எம்.ஜி.ஆரின், குமுதம் பேட்டியை எடுத்துப் படித்து அ.தி.மு.க.வுக்கு, தாழ்த்தப்பட்டோரும் பிற்படுத்தப்பட்டோரும் உரிமைகள் பெறுவது பற்றிய உள்ளார்ந்த எண்ணம் என்ன என்பதை எடுத்துக்காட்டினார்!

எம்.ஜி.ஆருக்கும் அவர் கட்சிக்கும் அப்படியொரு எண்ணம் இருப்பதால்தான் பெரியாரும், அண்ணாவும், காமராசரும், நாமும் கட்டிக்காத்த வகுப்புரிமையை வருமான அடிப்படை என்ற அளவுகோல் மூலம் தகர்த்தெறிந்து - பிற்படுத்தப்பட்ட

மக்களையும் அதைத் தொடர்ந்து தாழ்த்தப்பட்ட மக்களையும் படுகுழியில் தள்ளிவிட முன் வந்துள்ளனர் என்று அஞ்சுகிறோம்.

அந்த ஆபத்தைத் தடுக்கத்தான் அணை கட்டுகிறோம்! அணி திரளுகிறோம்!

எல்லா வகுப்பினரிலும் உள்ள ஏழை எளியோர்க்குப் படிப்பிலும் வேலை வாய்ப்பிலும் இடம் ஒதுக்க 51 சதவிகிதத்தில் கை வையுங்கள்!

பிற்படுத்தப்பட்டோருக்கென ஒதுக்கப்பட்டுள்ள 31 சதவிகிதத்தில் கை வைக்காதீர்கள்!

இதுவே நமது முழக்கம்!

இதுவே நாம் தரும் விளக்கம்!

உண்மையில் விளக்கம் வேண்டுவோருக்கு இது விளங்கும்!

விதண்டாவாதிகளுக்கும், வேடதாரிகளுக்கும் இது விளங்கினாலும் வெளியே சொல்லமாட்டார்கள். காரணம், அவர்கள் காரியவாதிகள்! காலம்தான் அவர்களை மன்னிக்க வேண்டும்!

அன்புள்ள,

மு. க.

(22-07-1979)

682. நியாயத்தைக் கேட்கிறேன்; நீதிபதிதான் பதில் சொல்ல வேண்டும்!

உடன்பிறப்பே,

எழுத்தாற்றலும் பேச்சாற்றலும் கொண்ட நண்பர் - நிதியமைச்சரின் புத்தகம் ஒன்று தலைமை நீதிபதி திரு. இராமபிரசாத் ராவ் அவர்கள் தலைமையில் விழாக் கொண்டாடி வெளியிடப்பட்டுள்ளது. நூல் வெளியீட்டு விழா ஒன்றுக்கு தலைமை நீதிபதி தலைமை தாங்கலாமா? என்று நான் கேட்கமாட்டேன். அப்படிக் கேட்பது முறையும் அல்ல! அருமை நண்பர் மனோகரன் அவர்களின் எழுத்தையும் பேச்சையும் நானும் பாராட்டி மகிழ்ந்தவன்தான். இன்று அவர் வேறு முகாமில் இருக்கிறார் என்பதற்காக அவரது கருத்துக்களில் எனக்கு ஒப்புக்கொள்ள முடியாதவை பல இருக்கலாமே தவிர, அவரது எழுத்து, பேச்சுத் திறனை என்றைக்கும் குறைத்து மதிப்பிடுகிற இழிந்த மனப்பான்மை எனக்கு ஏற்பட்டதில்லை. கருத்து மாறுபாடுகள் - கொள்கை மோதுதல்கள் - இவை வேறு! ஒருவரின் தனிப்பட்ட பண்புகள், குணங்கள், திறமைகள் வேறு! எனவே அவர் எழுதியுள்ள - அல்லது பல்வேறு நேரங்களில் எழுதப்பட்ட கட்டுரைகளின் தொகுப்பாக வெளிவந்துள்ள அந்த நூலைப் பற்றிய முழு விமர்சனத்தில் நான் இறங்கவில்லை. அது எனக்குத் தேவையுமில்லை. அந்த நூலில் சட்டத்தைப் பற்றி ஒரு இடத்தில் குறிப்பிடுகிறார்.

கழக ஆட்சிக் காலத்தில் பொது வாழ்வில் உள்ளோர் குற்றத் தடுப்புச் சட்டம் என்ற ஒரு சட்டம் கொண்டு வந்தோம். அது குறித்து மனோகரன் அவர்கள் என்ன எழுதுகிறார் தெரியுமா?

(1) குற்றம் நிரூபிக்கப்பட்டால் குற்றச்சாட்டுக்கு ஆளானவர்கள் அனுபவிக்க வேண்டிய தண்டனை ஆண்டுகள் ஏழு! நிரூபிக்கப்படாமல் போனால் குற்றம் சாட்டுபவர்கள் சிறைக்

கம்பிகளை எண்ண வேண்டிய ஆண்டுகள் மூன்று! எவ்வளவு தாராளத் தன்மை! குற்றச்சாட்டுக்களை அலசி ஆராய்ந்து முடிவு கட்ட வேண்டியவர் மாநில நீதிமன்றத்தின் நீதிபதி! அவரிடம் நியாயத்தை எதிர்பார்க்கலாம் என்று மசோதா திட்டவட்டமாகத் தெரிவிக்கிறது.

(2) கருணாநிதியின் சர்க்கார் அண்மையில் கொண்டு வந்து நிறைவேற்றியிருக்கும் இந்தக் கறுப்பு மசோதா தமிழகத்தின் அரசியல் வாழ்வென்னும் மலர்த் தோட்டத்தில் புகுத்தி விடப்பட்ட கருநாகம்!

(3) கூண்டிலே நிறுத்தப்பட வேண்டிய குற்றவாளி, சந்தர்ப்பத்தின் துணை கொண்டு நிரபராதிகளைக் கழுமரத்தில் ஏற்றிடக் கையாண்ட அரசியல் ராஜதந்திரம்.

(4) குப்பைத் தொட்டிக்குப் போக வேண்டிய கறுப்புச் சட்டம், கோபாலபுரத்தாரின் கோட்டத்தில் பாதுகாக்கப்படுகிறது. இத்தகைய வாசகங்கள் அடங்கிய நூலுக்குத்தான் நீதிபதி இராமபிரசாத் ராவ் அவர்கள் பாராட்டுரை வழங்கி, அது அந்த நூலின் முகப்பிலேயே அச்சாகியிருக்கிறது. மாநில நீதிபதியிடம் நியாயத்தை எதிர்பார்க்கலாம் என்று மசோதா திட்டவட்டமாகத் தெரிவிக்கிறது! இது எனது நண்பர் மனோகரன் அவர்களால் எவ்வளவு கேலியாக சுட்டிக்காட்டப்படுகிற கருத்து என்பதைச் சாதாரண அறிவுள்ளவர்கள் கூட எளிதாகப் புரிந்து கொள்ளலாம். ஆழ்ந்த அறிவு கொண்ட நீதிபதி அவர்களுக்கு இந்தச் சொற்களில் அடங்கிக் கிடக்கும் கிண்டல் புரியாமல் இருக்க நியாயமில்லை. புரிந்தும்கூட, நூலையும் பாராட்டி, விழாவுக்கும் தலைமையேற்று நடத்தி வைத்திருக்கிறார் என்றால், மாநில நீதிபதிகளைக் குறித்து மனோகரன் கொண்டுள்ள எண்ணம் அன்றைக்கும் சரி, இன்றைக்கும் சரி, நியாயமானதுதான் என்று தலைமை நீதிபதியான திரு. இராமபிரசாத் ராவ் ஒப்புக் கொள்கிறார் என்றுதான் அர்த்தம்!

ஒரு எதிர்க்கட்சியின் தலைவருக்கு - அல்லது அன்றிருந்த கழக அரசுக்கு - இத்தகைய கடுமையான அர்ச்சனையைச் செய்யும் கட்டுரை அடங்கிய நூல் ஒன்றுக்குத் தலைமை நீதிபதி அணிந்துரை எழுதுவதும் - விழாத் தலைமையேற்பதும் - எதிர்காலத்துக்கு ஒருமுன்மாதிரியாகவே ஆகி விடுவது நல்லதா?

நியாயத்தைத்தான் கேட்கிறேன். நீதிபதிதான் பதில் சொல்ல வேண்டும்.

இதைக் கூறுவதால் என்னையோ, என் தலைமையில் உள்ள கழகத்தையோ, கழக அரசின் சட்டங்கள், திட்டங்களையோ எதிர்க்கவும், விமர்சிக்கவும் நண்பர் மனோகரன் போன்றவர்களுக்கு உரிமையில்லையென்று நான் கூற மாட்டேன்.

இருக்கிற பிரச்சினையெல்லாம் இதுபோன்ற தகராறுக்குரிய அரசியல் விஷயங்களில் - நீதிபதிகள், அரசு அதிகாரிகள், பொதுவான நடுநிலை மனிதர்கள் கலந்து கொண்டு அவற்றை ஊக்கப்படுத்துவது முறைதானா? நியாயத்தைத்தான் கேட்கிறேன், நீதிபதி பதில் சொல்ல வேண்டும்!

சட்டம் பற்றி நண்பர் நாஞ்சிலார் எழுதியுள்ள கட்டுரையில் பின்வருமாறு குறிப்பிடுகிறார் :

(1) குறிப்பாக நல்ல சர்க்காரின் இலக்கணமே சட்டங்களின் பளுவை அதிகப்படுத்தாமல் சாதனைகளின் சுமைதாங்கிகளாக மக்களை மாற்றுவதுதான.

(2) ஏற்கனவே நிலைமைகளைச் சமாளிக்கப் போதுமான சட்டப் படைக் கலன்கள் இருக்கும்போது ஏன் புதிது புதிதாகச் சட்டங்களை இயற்றி சமுதாயத்தின் தோள்மீது அந்த பளுக்களை ஏற்றுகிறீர்கள்?

(3) எண்ணங்களை நிறைவேற்றிக்கொள்ள எண்ணற்ற சட்டங்கள் இருக்கும் போது மீண்டும் மீண்டும் சட்ட ஆயுதங்களைத் தயாரிப்பானேன்?

தி.மு.கழக அரசைப் பார்த்து நண்பர் மனோகரன் கேள்விக்கணைகளை விடுத்து எழுதிய கட்டுரைதான் இது! வெளியிடப்பட்ட நூலிலே இடம் பெற்றிருக்கிறது!

நெருக்கடி கால அவசரச் சட்டத்தை அ.தி.மு.க. ஆதரிப்பதற்கு முன்பு அவர் எழுதியது இது!

இப்போது அவரது கட்சி ஆட்சியில் தீவிரப் புதிய மது விலக்குச் சட்டம், தொழிலாளர் வேலை நிறுத்தங்களை அறுபதுக்கு மேற்பட்ட நிறுவனங்களில் தடை செய்யும் அவசரச் சட்டம் இவைகள் எல்லாம் கொண்டு வரப்பட்டிருக்கின்றனவே -

இவற்றையெல்லாம் எதிர்பார்க்காத காலத்திலே எனது நண்பர் சட்டம் பற்றி எழுதிய கட்டுரை இது!

இன்றுள்ள அவரது கட்சி அரசுக்கும் பொருந்தக் கூடிய கேள்விகள், அவர் கேட்டுள்ள கேள்விகள்!

நூல் வெளியீட்டு விழாவில் தலைமை நீதிபதியை விழாத் தலைவராக உட்கார வைத்துக்கொண்டு சில அமைச்சர்கள் என்னென்ன பேசியிருக்கிறார்கள் தெரியுமா?

ஏமாந்த காலத்தில் ஏற்றங் கொண்டு ஊரையடித்து உலையில் போட்டுக் கொண்டவர்கள் கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி தன் பொல்லாச் சிறகை விரித்தாடினாற்போல் சிலப்பதிகாரத்தையே தான் எழுதியது போல் ஒரு நூலை எழுதி அமெரிக்காவில் விற்க முற்பட்டனர் என்று ஒரு அமைச்சர் தலைமை நீதிபதி தலைமையில் நடந்த விழாவில் காட்டமாகப் பேசினார் என்று அவர்கள் கட்சி ஏட்டிலேயே கொட்டை எழுத்தில் வெளியிட்டிருக்கின்றனர்.

உடன்பிறப்பே,

நான் எழுதிய சிலப்பதிகார நாடகம் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டது உண்மை. சிலப்பதிகாரத்தை நாடக உருவில் நான் எழுதியதாக அந்த நூலில் குறிப்பிடப்பட்டிருக்கிறதே தவிர, அந்தக் குறைமதியாளரான அமைச்சர் கூறுவதுபோல சிலப்பதிகாரத்தையே நான்தான் எழுதினேன் என்று எப்போதும் சொன்னதுமில்லை! அந்த நூலிலும் அவ்வாறு குறிப்பிடவில்லை! சிலப்பதிகாரத்தை எத்தனையோ கோணங்களில் சிலம்புச் செல்வர் திரு. ம.பொ.சி. அவர்களும், டாக்டர் மு.வ. போன்ற அறிஞர்களும் எழுதியிருக்கிறார்கள். அதனால் சிலப்பதிகாரத்தையே அவர்களே உருவாக்கினார்கள் என்று பொருளா? அதைப்போலத்தான் நான் சிலப்பதிகாரத்தை நாடக உருவில் எழுதினேன். அது ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டது. அதன் முன்னுரையிலேயே சிலப்பதிகாரம் தந்த இளங்கோவடிகளைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறேன். ஆங்கில மொழிபெயர்ப்பில் உள்ளதை அப்படியே இங்கு தருகிறேன்.

"As long as the Chera Prince-Poet Ilango's Epic Silappathikaram is on record, the fame of Poompuhar, the greatness of Madhurai, the Valour of Vanchi and, in short, the glory of Tamilagam shall remain undimmed."

(சேர இளவல் செந்தமிழ் வித்தகர் இளங்கோவடிகள் இயற்றிய சிலப்பதிகாரம் உள்ளவரையில் பூம்புகாரின் புகழும், மதுரையின் மாண்பும், வஞ்சியின் வீரமும், பொதுவாகத் தமிழகத்தின் சிறப்பும் தாழாது - தாழாது!)

இவ்வாறு நான் முன்னுரை எழுதியிருக்க,

இளங்கோவடிகளின் பெயரை மறைத்துவிட்டு, நானே சிலப்பதிகாரத்தையே எழுதியவன் என்று கூறிக்கொள்வதாக - நரகல்நடையழகராம் - நடுங்கா நாக்கழகராம் - நாடாளும் அமைச்சர் ஒருவர் - தலைமை நீதிபதியின் முன்னால் பேசுகிறார் என்றால், நான் நண்பர் நாஞ்சிலாரைக் கேட்கிறேன் - மாநில நீதிபதிகளைப் பற்றிய உங்கள் கேலியும் கிண்டலும் - தி.மு.க. ஆட்சி காலத்திற்குப் பொருந்துகிறதா? அல்லது இப்போது எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்திற்குப் பொருந்துகிறதா? நீங்கள் பதில் கூறவேண்டாம் - நான் நியாயத்தைத்தான் கேட்கிறேன்! நீதிபதியே பதில் சொல்லட்டும்!

இந்த விழாவில் மட்டுமல்ல, எந்த விழாவிலுமே நான் எழுதிய சிலப்பதிகார நாடகம் பற்றி இழிமொழிகளையும், புனைந்துரைகளையும் வாரியிறைக்கும் அந்த அமைச்சருக்குக் கூறுவேன்! அந்த நாடக நூலுக்கு அறிஞர் அண்ணா அவர்கள் அணிந்துரை வழங்கியிருக்கிறார்.

நீண்ட அணிந்துரை! அதையும் அவர் படித்துப் பார்க்கட்டும்!

"Karunanithi has done a fine Service to Tamil Literature by bringing forth 'Poomphuhar' and the English rendering has made it possible for a wider domain than Tamilagam to get the thrill and message that Ilango Adigal offers through Silappathikaram.".

அண்ணா சிலப்பதிகார நாடகத்திற்குத் தமிழில் எழுதிய மிக நீண்ட முன்னுரையில் சில பகுதிகளை மட்டும் சீற்றங்கொண்ட அமைச்சருக்கு நினைவூட்டுகிறேன்.

காட்சியை உணர்ச்சி உருவோடு அமைப்பது ஒரு எழுத்தாளனுக்கு எளிதான காரியமல்ல! ஆனால் கருணாநிதி, யாரையும் விஞ்சுகின்ற அளவில் வெற்றிகொண்டுள்ளார். தான் ஒரு ஒப்புவமையற்ற நடையழகு காட்டும் எழுத்தாளர் என்பதால்!

நூல் முழுதும் கருணாநிதி, ஒரு காவியப் படைப்புக்குத் தேவையான செழுஞ் சொல்லோட்டத்தை - சீரிய - அழகு அமைப்பை - உருவாக்கித் தருகிறார்.

கருணாநிதியின் இந்நாடகமே ஒரு சிலம்பு! இளங்கோவடிகளின் தங்கம் இதில் இருக்கிறது. இந்தப் புகழ்மிக்க எழுத்தாளரின் ஆற்றலும் இதில் அபரிமிதமான அளவுக்கு இருக்கிறது.

இந்நாடக நூலை வெளிக்கொணர்வதின் மூலம் தம்பி கருணாநிதி, தமிழ் இலக்கியத்திற்கு நற்பணி ஆற்றியுள்ளார்.

அண்ணனின் இதயமார்ந்த பாராட்டுக்களை இவ்வண்ணம் பெற்ற எனக்கு, ஆத்திரக்காரரான அமைச்சரின் பேச்சும் - அசூயையும் - தூசினும் சாதாரணமாகத்தான் தோன்றுகிறது! எனினும் ஒரு காலத்தில் நான் எழுதிய சிலப்பதிகார நாடகத்தையும், பூம்புகார் திரைப்படத்தையும் புகழ்ந்து பாராட்டிய மேலவைத் தலைவர் திரு. ம.பொ.சி. அவர்களையும் வைத்துக்கொண்டு - அரசியல் பிரச்சினைகளில் சிக்கிக் கொள்ளக்கூடாத நீதிபதியின் தலைமையின் கீழ் ஒரு அமைச்சர் இப்படி ருத்ர தாண்டவம் ஆடுகிறார் என்றால், இன்னும் சிலர் அந்த விழாவில் என்னையும் கழகத்தையும் தாக்கிப் பேசுகிறார்கள் என்றால், இந்தக் கூத்துக்களுக்கெல்லாம் நீதிபதிகளும் - பொதுவாக இருக்கவேண்டிய சிலரும் இணங்கிப்போகிறார்கள் என்றால், இனிமேல் அந்த நீதிபதிகளும் - பொது மனிதர்களும் எதிர்க்கட்சிகளின் மேடைகளில் விமர்சனத்துக்கு ஆளாக நேரிடுவதை யாரால் தடுக்க முடியும்?

நியாயத்தைத்தான் கேட்கிறேன்! நீதிபதிதான் பதில் சொல்ல வேண்டும்.

அன்புள்ள,

மு. க.

(27-07-1979)

683. பலரை அடையாளம் காட்டிய பதினெட்டு நாட்கள்!

உடன்பிறப்பே,

பாரத யுத்தம் பதினெட்டு நாட்கள் வடக்கேயுள்ள குருக்ஷேத்திரத்தில் நடைபெற்றதாகப் புராணம் கூறும், அதற்கருகில் உள்ள டெல்லிப் பட்டணத்தில் பாரதப் பிரதமர் யார்? என்ற யுத்தம் ஒருவழியாக முடிவுற்றிருக்கிறது.

தலைநகரில் அமைதி நிலவுகிறது. போர் நிறுத்தம் ஏற்பட்ட பிறகும் அங்கொன்றும் இங்கொன்றுமாக துப்பாக்கிச் சப்தங்கள் கேட்பதுண்டு. அதைப் போல இப்போதும் பிரச்சினைகள் வெடிக்கக்கூடும்.

இருந்தபோதிலும் நிலைமைகள் சமாளிக்கப்பட்டு தற்காலிகமாக இடைக்காலத் தேர்தல் தவிர்க்கப்பட்டுள்ளது.

புதிய மத்திய அமைச்சரவை திரு. சரண்சிங் அவர்கள் தலைமையில் அமைகிறது. அவரது திறமையைப் பொறுத்தும் - நிதானம் காட்டும் தன்மையைப் பொறுத்தும் - வண்டி எத்தனை நாள் ஓடும் என்பது இருக்கிறது.

மத்திய அரசின் பிரதமராக முதல் தடவையாகப் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவர் பொறுப்பேற்பது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்.

ஜூலை 9 அன்று தொடங்கி ஜூலை 26 அன்று முடிவுற்ற பதினெட்டு நாள் போராட்டத்திற்கு இப்போது வைக்கப் பட்டுள்ளது முற்றுப்புள்ளியா? அல்லது கமாவா என்பது போகப் போகத்தான் தெரியும்.

நிலையான அமைச்சரவை மத்தியில் அமைய வேண்டு மென்பதைத்தான் கழகத்தின் சார்பில் தொடர்ந்து எடுத்துரைத்து வந்திருக்கிறோம்.

தேசாய் அமைச்சரவை உருவாகி இரண்டொரு மாதங்களுக்கெல்லாம் கூட்டுப் பொறுப்பில் காரியங்கள் நடைபெறாமல் ஒரு அலங்கோலமாக வடிவம் தோற்றமளிப்பதை அப்போதே பத்திரிகையாளர்களுக்கு நான் விளக்கியிருக்கிறேன்.

தங்களுக்குள் சச்சரவு - கடந்த காலத்தை இழுத்துப் போட்டுக்கொண்டு தேவையற்றதும் பெருந்தன்மை யற்றதுமான பழிவாங்கும் படலங்கள் - இத்தகு போக்குகளால் நாட்டு மக்களுக்கான நல்வாழ்வுத் திட்டங்கள் நிறைவேற்றப்பட முடியாத தேக்கம் - இவைதான் இரண்டாண்டு காலத்துச் செயல்முறைகளாக இருக்கின்றன என்பதையும், ஜனநாயகத்தைக் காக்கும் பணியில் ஜனதா கட்சி களத்தில் நின்றது என்று பாராட்டுகிற அதே நேரத்தில் - இத்தகைய உட்குழப்பங்களால் அது மக்களின் வெறுப்புக்கு உள்ளாகி வருகிறது என்பதையும் கழகச் சார்பில் தொடர்ந்து அறிவித்து வந்திருக்கிறோம்.

நகரசபை, ஊராட்சி ஒன்றியத் தேர்தல்களில் நடைபெறும் ஆள்தூக்கிப் படலங்கள், நாட்டின் தலைநகரிலும் நடைபெறத் தொடங்கி விட்டன என்பது வேதனைப்படதக்க செய்தியாகும்.

அனைத்துலக நாடுகளின் உன்னிப்பான கவனம் பதினெட்டு நாட்களாக இந்தியாவின் மீதுதான் இருந்தது.

தங்களைச் சுத்த சுயம்பிரகாச காந்தீயவாதிகள் என்று கூறிக் கொள்கிறவர்களே, பதவியென்றதும், அனைத்தையும் பகல் வேடம்தான் என்று காட்டிவிடுகிற அளவுக்கு - போலிப் பட்டியல் தயாரித்துக் குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைத்தார்கள் என்பது உண்மையான காந்தியவாதிகள்; வெட்கப்படக்கூடிய செயலாகும்.

என்னவோ, ஜனநாயக உலகம் கேலி பேசுகிற அளவுக்கு நடக்க வேண்டியவைகள் எல்லாம் நடந்து விட்டன.

இனிமேலாவது, நடந்தவைகள் நடந்தவைகளாக இருக்கட்டும் - இனி நடப்பவைகள் நல்லவைகளாக இருக்கட்டும் என்ற மனத்தெளிவுடனும் - தூய்மையுடனும் நற்செயல்கள் எனும் மலர்கள் ஜனநாயகப் பூங்காவில் பூத்துக் குலுங்க வேண்டுமென்று நாடு எதிர்பார்க்கிறது. நாமும் எதிர்பார்க்கிறோம்.

மக்களின் நல்வாழ்வுத் திட்டங்களுக்கும், சமதர்மக் கொள்கைகள் வெற்றிநடை போடுவதற்கும் ஏற்ற வகையில் மத்தியில் அமையும் சரண்சிங் அரசு, தனது ஆட்சிச் சகடத்தைச் சுழற்றும் என்று நம்புகிறோம்.

இந்தி ஆதிக்கம் அகற்றப்படவும், மாநிலங்கள் சுயாட்சித் தன்மை பெறவும், பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர், சிறுபான்மையோர் நலன்கள் பாதுகாக்கப்படவும் ஏற்ற நடவடிக்கைகளைப் புதிய அரசு மேற்கொள்ள வேண்டும்.

உழைக்கும் வர்க்கத்தின் உரிமைகளைக் கட்டிக் காப்பதிலும், உழவர் பெருங்குடி மக்களின் வாழ்வு ஒளிமயமாகத் திகழ்வதிலும் இந்த அரசு, பெரும் பொறுப்பை ஏற்றிட வேண்டும்.

மீண்டும், யாருக்கு எந்த இலாகா? யாருக்கு என்ன பதவி? என்ற போட்டியில் காலம் தள்ளாமல் - மக்கள் கொண்டுள்ள நம்பிக்கை நிறைவேறும் வண்ணம், புதிய பொறுப்பினை ஏற்பவர்கள் ஏற்கனவே நடந்து முடிந்தவைகளைப் படிப்பினையாகக் கொண்டு நல்லாட்சியை வழங்கிட முன்வரவேண்டும்.

இந்தப் புதிய அமைச்சரவை அமைவதற்குப் பல்வேறு வகைகளில் நேடியாக ஒன்றுபட்டும் - ஒதுங்கியிருந்து ஒத்துழைப்புத் தந்தும் - நடுநிலைமை வகித்தும் - ஏதோ ஒரு முறையில் ஆதரவு அளித்த கட்சிகளின் தலைவர்கள் பாராட்டுக்குரியவர்களாகிறார்கள்.

இரண்டு பட்டியல்கள் ஜனாதிபதியை அதிகமாகக் குழப்பவில்லையென்று தெரிகிறது. அவர் சரண்சிங்கிற்கு எழுதியுள்ள கடிதம் அதைத் தெளிவுபடுத்துகிறது;

இந்த விஷயத்தில் எல்லா அம்சங்களையும் ஆராய்ந்த பிறகு, நாடாளுமன்ற உறுப்பினர்களிடையே மொரார்ஜியை விட தங்களுக்கே அதிக ஆதரவு உள்ளதாக நான் கண்டறிந்துள்ளேன். எனவே புதிய அரசை அமைக்குமாறு தங்களை அழைக்கிறேன்.

இவ்வாறு குடியரசுத் தலைவர் அவர்கள், திரு. சரண்சிங் அவர்களுக்குக் கடிதம் எழுதி அழைத்துள்ளார்.

ஆனால் உடன்பிறப்பே, இது விஷயத்தில் அ.தி.மு.க.வின் பொதுச் செயலாளர் நாவலர் அவர்களுக்குத்தான் பெரிய சந்தேகமே வந்திருக்கிறது.

இந்தியன் எக்ஸ்பிரசில் அவர் விடுத்துள்ள செய்திப்படி, எந்த அடிப்படையில் ஜனாதிபதி, சரண்சிங்கை மந்திரிசபை அமைக்க அழைத்தார் என்று தெரியவில்லை எனக் குறிப்பிட்டிருக்கிறார்.

அதோடு மட்டுமல்ல, இது நிலையான அரசாக இருக்கும் என்பது சந்தேகமே! என்றும் கூறியிருக்கிறார்.

ஆனால் அவரது தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களோ - சரண்சிங் அரசைக் கவிழ்க்க எனது கட்சி முயற்சி மேற்கொள்ளாது! என்று உடனடியாகத் தெரிவித்துவிட்டு தனது மகத்தான ராஜதந்திர சுற்றுப்பயணத்தை வெற்றிகரமாக முடித்துவிட்டுச் சென்னை திரும்பியிருக்கிறார். குடியரசுத் தலைவர், சரண்சிங்கை அழைத்தது மட்டுமல்ல, அதே கடிதத்தில் திட்டவட்டமாகக் கோடிட்டுக் கூறியும் இருக்கிறார்.

உயர்ந்த ஜனநாயகப் பண்பினைக் காத்திடவும், நல்ல மரபினை ஏற்படுத்தவும் கூடிய விரைவில் ஆகஸ்டு மூன்றாம் வாரத்திற்குள் நாடாளுமன்றத்தில் நீங்கள் நம்பிக்கை வாக்குகளைக் கோருவீர்கள் என்று நம்புகிறேன்.

குடியரசுத் தலைவரின் இந்த நம்பிக்கையைச் சரண்சிங் தகர்க்க மாட்டார்! தகர்க்கவும் முடியாது!

இதையெல்லாம் குழப்பமறத் தெரிந்து கொள்ளாமலே அ.தி.மு.க.வின் பொதுச் செயலாளர், குடியரசுத் தலைவர் சரண்சிங்கை எந்த அடிப்படையில் அழைத்தார் என்று சந்தேகம் எழுப்பியுள்ளார்.

பாவம்! அவர்களின் கட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். தேசாய்தான் பிரதமராக வர வேண்டுமென்று அரும்பாடுபட்டார்! அலையாய் அலைந்தார்! அர்சுவைப் பார்த்தார்! அப்துல்லாவுக்கு விருந்தளித்தார்! மாநில சக்திகளையெல்லாம் ஒன்று திரட்டப் போகிறேன் என்று மார்தட்டிக் கொண்டார்! இதோ புறப்பட்டு விட்டார் இரண்டாவது காமராஜர் என்று இங்கிருந்த துதிபாடிகள் துந்தனா மீட்டினார்கள்! டெல்லியின் முடிவுகள் இராமாபுரம் தோட்டத்திலேதான் எடுக்கப்படும் என்று அரசாங்கச் சம்பளம் பெறும் தூதுவர்கள் அரசியல் கட்சித் தூதர்களாக மாறி ஆர்ப்பரித்தனர்! திருப்பரங்குன்றங்கள் திவ்யப்பிரபந்தம் இயற்றின! பண்ருட்டிகள் சிறப்புப்பாயிரம் பாடி ஓடின! பதினெட்டு வயது இனிமை பொருந்திய மணமகள் தயார்! அவள் டெல்லியில்

மணமகனுக்காகக் காத்திருக்கிறாள்! உவமைநயங்கொண்ட அறிவிப்புகள் வெளிவந்தன! பிறகு அந்த மணமகளே, ஒரு மணமகளை (தேசாயை) தேடிப் பிடித்தாள்! ஆனால் மணம்தான் நடைபெறவில்லை! மணமகனாக இப்போது மணவறையில் அமர்ந்திருப்பது சரண்சிங்! அ.தி.மு.க. மணமகள் சொல்கிறாள்! இவரையும் வேண்டாமென்று சொல்லமாட்டேன் என்று!

ஊட்டியில் சொன்னார்! தஞ்சையில் இந்திராவை ஆதரித்தாலும் டெல்லியில் ஜனதாவைத்தான் ஆதரிப்பேன் என்பதாக!

பிறகு இந்திராவுக்கு ஆதரவில்லை என்றார். டெல்லியில் மொரார்ஜியை சந்தித்த பின்னர்!

ராஜ்நாராயண் குழுவினர் ராஜினாமா தொடர்ந்தது! டெல்லியில் குழப்பம்! நிருபர்கள் எம்.ஜி.ஆரைக் கேட்டனர், ஊட்டியில் சொன்னதையே இப்போதும் சொல்கிறீர்களா என்று! ஊட்டியில் சொன்னபோது நிலைமை வேறு - இப்போது நிலைமை மாறி விட்டது! ஜனதாவை ஆதரிக்க இயலாது! இப்படி அடித்துச் சொன்னார் எம்.ஜி.ஆர்.

இரண்டு நாட்களுக்குப் பிறகு மொரார்ஜி கை ஓங்கியதுபோல் தெரிந்தது.

உடனே எம்.ஜி.ஆரின் தூதர் பறந்தார், மொரார்ஜியைச் சந்தித்து எங்கள் கட்சியின் ஆதரவு நிபந்தனையின்றித் தரப்படும் என உறுதி வழங்கினார்.

அன்றிரவே மொரார்ஜியின் நிலை கவலைக்கிடமாயிற்று - பலம் குறைந்தது - உடனே எம்.ஜி.ஆர். தன் நிலையை மாற்றிக்கொண்டு - தூதர் சொன்னது பற்றி எனக்கொன்றும் தெரியாது என்று பட் எனக்கூறி விட்டார்.

மீண்டும் எம்.ஜி.ஆர். டெல்லியிலேயே முகாமிட்டார்! மொரார்ஜிக்கு ஆதரவு பெருகியது போலத் தோன்றியது. அவரை ஆதரிப்பதாக முடிவெடுத்து அறிவித்து விட்டார். அதற்காக வேறுகட்சி எம்.பி.க்களையும் வலைவீசிப் பிடித்திட முயன்றார். தேசாய் மந்திரி சபையில் தூதருக்குக் கூட ஒரு இடம் உண்டு என்று தமிழ்நாட்டு ஏடுகள் எழுதின! நாடாளுமன்ற அ.தி.மு.க.

கட்சித் தலைவரோ, தேசாய் அமைச்சரவையில் தங்கள் கட்சி இடம் பெறக்கூடும் என்று அறிவித்தார்.

இத்தனை ஆரவாரங்களுக்குப் பிறகு டெல்லி மட்டுமல்ல, தமிழ்நாடே கூட இப்போது அமைதியாகி விட்டிருக்கிறது.

இருபத்திநான்கு எம்.பி.க்கள், தி.மு.கழகத்திற்கு நாடாளுமன்றத்தில் இருந்து இந்திரா காந்திக்கு ஆதரவு அளித்து - குடியரசுத் தலைவர் தேர்தலில் திரு. வி.வி. கிரியைத் தேர்ந்தெடுத்தபோது நான் கழகச் சார்பில் டெல்லி சென்று எல்லா விவாதங்களும் டெல்லியில் ஒரே நாளில் முடிவுற்று எவ்வித ஆர்ப்பாட்டமுமின்றி அடக்கத்துடன் காரியங்கள் நடைபெற்றன.

ஏ, அப்பா! இந்த இரண்டாவது காமராஜர் இவ்வளவு பெரிய தோல்வியோடு திரும்புவதற்கு எத்துணை அமளி! எத்துணை ஆர்ப்பாட்டம்! முதலாவது காமராஜரின் பெயரையுமல்லவா கெடுக்க முனைந்து விட்டார்கள், பாவம்!

எப்படியோ பலரை அடையாளம் கண்டுகொள்ள இந்தப் பதினெட்டு நாட்கள் பயன்பட்டன! பதினெட்டு எம்.பி.க்களும் தங்கள் தலைவரைப் புரிந்து கொள்ளவும் பயன்பட்டன!

அன்புள்ள,

மு. க.

(28-07-1979)

684. தூத்துக்குடி துயரம்!

உடன்பிறப்பே,

எழுத்தில் வடித்திட முடியாத சோகம் கப்பிக் கொண்டு விட்டது. நினைத்திடும் போதே நெஞ்சம் உருகுகிறது. நினைக் காமலிருக்க முடியுமா எனக் கட்டுப்பாடு விதித்துக் கொண்டு வேறு பணிகளில் ஈடுபட முயன்றாலும் முடியவில்லை.

நெருப்பின் ஜுவாலை! அந்தத் தணலில் தங்கங்கள்! அய்யகோ! தளிர் - கொழுந்து - அரும்பு - மலர் - சருகு என்று பாராமல் நூறுக்கு மேற்பட்ட உயிர்களைக் கொடுந்தீ விழுங்கி விட்டது.

நெருப்புக் காயங்கள் ஏற்படுத்திய சீரழிவுகளுடன் - அலங்கோலமாக - விகார வடிவங்களாக - இந்த உலகில் வாழ்வதைவிட, சில நொடிகளில் அவர்களுக்கு அமைதி கிடைத்து விட்டது என்ற போதிலும், அப்பப்பா! அந்தச் சில நொடிகளில் அவர்கள் எப்படித் துடித்திருப்பர்!

எவ்வாறாயினும் உயிர் தப்பி விடவேண்டுமென்று எப்படிப் பதறியிருப்பர்!

திக்குத் திசை தெரியாமல் அவர்கள் திண்டாடிய போதும் - அய்யோ என் குழந்தை! என்று பெற்றவள் கதறிய போதும் - என்ன நடக்கிறதென்று புரியாமல் அந்த மழலைகள் வீறிட்டு அலறிய போதும் - எது பற்றியும் கவலைப்படாமல் நெருப்பின் கரம் அவர்களை இறுக அணைத்து மலர் முகம் கருக்கியும் - பூக்களையும், பிஞ்சுகளையும் சுட்டெரித்தும் - திடீரென ஒரு செயற்கைச் சுடு காட்டையன்றோ அந்தத் திரையரங்கில் ஏற்படுத்தி விட்டது!

யார் யார் எப்படிச் சிக்கினர் - சீரழிந்தனர் - செத்து மடிந்தனர் - தப்பியோடினர் - அவர்களில் புதிதாக மணமானவர்கள் எத்தனை

பேர் - மணக்கோலம் பூண்டிட நாள் குறிக்கப் பெற்றோர் எத்தனை பேர் - இந்த வேதனைச் செய்திகளை ஏடுகளில் படிக்கும் போது நம் இதயமே தீயில் வெந்திடுவது போன்ற உணர்ச்சி!

சாவின் வயிற்றுக்குக் கொழுத்த தீனியாகக் கிடைத்த நூற்றுக்கு மேற்பட்டோரன்னியில் மேனி கருகிய நிலையில் மருத்துவமனையில் மரணத்தோடு போராடிக் கொண்டிருப்போர் பலா!

அவர்களைக் காணவும் - பலரைப் பறி கொடுத்த குடும்பங்களுக்கு துயர் துடைப்புப் பணிகளை வகுத்திடவும் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். உடனடியாக தூத்துக்குடி சென்றது மன ஆறுதலைத் தருகின்ற செய்தியாகும்.

எத்தனை உதவிகளைச் செய்தாலும் - ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஏற்பட்டுள்ள இழப்புக்களை ஈடுசெய்ய முடியாதுதான்! அதற்காகத் துயர் துடைப்புப் பணிகளை மேற்கொள்ளாமல் ஒரு அரசு இருந்து விட முடியுமா?

தூத்துக்குடியில் உள்ள நமது கழக உடன்பிறப்புகளும் நிவாரண வேலைகளில் தங்களை ஒப்படைத்துக் கொண்டிருக் கிறார்கள்.

நமது கழகப் பொருளாளர் சாதிக் அவர்களும், நெல்லை மாவட்டத்துக் கழக முன்னணியினரும் நேற்று அந்தப் பகுதிக்குச் சென்று - பாதிக்கப்பட்டோருக்கு ஆறுதல் கூறி - மேற்கொண்டு விவரங்களைச் சேகரித்திட முனைந்துள்ளனர்.

டூரிங் சினிமா தியேட்டர் என்ற பெயரில் நடைபெறும் திரையரங்கக் கீற்றுக் கொட்டகைகள் எரிந்து போவதும் - அல்லது எரிக்கப்படுவதும் - அண்மைக் காலத்தில் அடிக்கடி நடைபெறும் நிகழ்ச்சிகளாக ஆகி விட்டன.

சில மாதங்களுக்கு முன்பு கழகத் தோழர் ஒருவருக்குச் சொந்தமான டூரிங் சினிமா தியேட்டர் ஒன்று தர்மபுரி மாவட்டத்தில் கொளுத்தப்பட்டு சாம்பலாக்கப்பட்ட செய்தியைச் சட்ட மன்றத்திலேயே புகைப்படங்களுடன் காட்டப்பட்டது.

தூத்துக்குடியைத் தொடர்ந்து கோவை மாவட்டம் காஞ்சிகோயில் என்னுமிடத்தில் நேற்று முன்தினம் ஒரு

டூரிங் சினிமா தியேட்டர் எரிந்தோ அல்லது எரிக்கப்பட்டோ காவலாளியொருவர் கருகிச் செத்திருக்கிறார்.

நிகழ்ச்சிகள் நெஞ்சைக் குலுக்கும் வண்ணம் நடை பெற்று முடிந்தபிறகு, நிவாரணங்கள் அளிப்பது மட்டும் போதாது!

இனியும் இத்தகைய வேதனைச் சுடுகாடுகள் ஏற்படாமல் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசரமும் அவசியமுமான காரியமாகும்.

டூரிங் சினிமாக்களுக்கான கீற்றுக் கொட்டகைகளைக் குறைக்க வேண்டுமென்ற நோக்கத்துடன்தான் கழக அரசின் காலத்தில் செமிபர்மனென்ட் தியேட்டர்களைக் கட்டுவதற்குத் திட்டம் தீட்டப்பெற்றது. அப்படிக் கட்டப்படும் செமிபர்மனென்ட் கட்டிடங்கள், ஐந்தாண்டு காலத்தில் பர்மனென்ட் தியேட்டர்களாக மாற்றப்பட வேண்டுமென்றும் நிபந்தனை விதிக்கப்பட்டது.

செமிபர்மனென்ட் தியேட்டர்கள் கட்ட வேண்டுமென்ற நோக்கமே, பாதுகாப்புக் குறைவான கீற்றுக் கொட்டகைகளைப் படிப்படியாகக் குறைக்க வேண்டுமென்பதுதான்!

ஆனால், கடந்த இரண்டாண்டு காலத்தில் சினிமாக் காட்சி விதிகள் பெரும் மாற்றத்திற்கு உள்ளாகி - அதிக அளவில் தளர்த்தப்பட்டு - கீற்றுக்கொட்டகை சினிமா அரங்குகள் பெருகத் தொடங்கிவிட்டன.

வரிச் சலுகை என்ற பெயரால் எத்தனை காட்சிகள் வேண்டுமானாலும் நடத்திக்கொள்கிற அனுமதியும் வழங்கப் பட்டு விட்டது. லைசென்சு காலமும் நீடிக்கப்பட்டு, மின்சார இணைப்பும் இந்தக் கொட்டகைகளுக்கு நிரந்தரமாகத் தரப்பட்டுவிட்டன.

தமிழ்நாட்டில் டூரிங் சினிமா கொட்டகைகள், கடந்த இரண்டு ஆண்டுகளில் கூடுதலாகியிருக்கின்றன. அ.இ.அ.தி.மு.க. தமிழ்நாட்டில், ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் வழங்கிய சலுகைகளின் காரணமாகவே இவை பெருகின

என்று எக்ஸ்பிரஸ், தினமணி போன்ற ஏடுகள் விளக்கக் குறிப்புகளைப் புள்ளி விவரங்களுடன் வெளியிட்டுள்ளன.

நாள் ஒன்றுக்கு ஐந்து காட்சிகள் நடத்திக்கொள்ளலாம் என்று டூரிங் சினிமா தியேட்டர்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

ஒரு டூரிங் சினிமா கொட்டகைக்கும் மற்றொரு டூரிங் சினிமா கொட்டகைக்கும் இடையே உள்ள தூரம் எவ்வளவு இருக்கவேண்டுமென்று முன்பு இருந்த விதியை தற்போது குறைத்து விட்டார்கள். இது குறித்து சட்டத்திருத்தம் விரைவில் செய்யப்படுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய சலுகைகள் வழங்கப்பட்டு, விதிகளையும், பெருமளவுக்குத் தளர்த்தியதின் காரணமாக கடந்த ஓராண்டு காலத்தில் மட்டும் சுமார் நானூறு புதிய சினிமா டூரிங் கொட்டகைகள் உருவாகியிருக்கின்றன.

டூரிங் சினிமாக்கள், கீற்றுக்கொட்டகைகளில் நடை பெறுவது குறித்து அரசாங்கம் மறுபரிசீலனை செய்ய வேண்டியது அவசரமும் அவசியமுமானது என்பதை தூத்துக்குடிச் சம்பவம் சுட்டிக்காட்டுகிறது.

டூரிங் சினிமாக்களில் பகல் காட்சிகள் இனிமேல் அனுமதிக்கப்படக்கூடாது என்பதற்கும் தூத்துக்குடி ஒரு சான்று!

இரவு நேரக் காட்சிகளில், கொட்டகையின் நாற் புறங்களையும் கெட்டியாக அடைத்து வைக்கவேண்டிய தேவையில்லை. பகல் காட்சிகளில் படம் தெளிவாகத் தெரிந்திட வேண்டுமென்பதற்காக - கொட்டகைக்குள் வெளிச்சம் நுழையாமல் அழுத்தமான அடைப்புகள் தேவைப்படுகின்றன. அதனால் காற்றோட்டம் தடைபட்டுச் சுகாதார வசதியும் குறைகிறது. ஆபத்தான கட்டங்களில் மக்கள் வெளியேற வழியில்லாமல் கூட்டம் கூட்டமாக மடியவும் நேரிடுகிறது.

தூத்துக்குடியில் நடந்துள்ள இந்த துயர் மிகுந்த நிகழ்ச்சிக்குப் பிறகாவது டூரிங் சினிமாக்களின் பாதுகாப்பு விஷயத்தில் அரசாங்கம், அதிக கவனம் செலுத்த வேண்டும்.

கீற்றுக் கொட்டகைகளைக் குறைத்து செமிபர்மனென்ட் தியேட்டர்களை ஊக்கப்படுத்த முன்வர வேண்டும்.

டூரிங் சினிமாக்களின் எண்ணிக்கை எந்த நோக்கத்துடன் பெருக்கப் பட்டிருந்தாலும் - அவற்றால் மக்களின் உயிருக்குப்

பாதுகாப்பற்ற நிலை ஏற்படுவதைக் கருத்தில் கொண்டு - அதுகுறித்துச் சிந்தித்து மாற்று ஏற்பாடுகளை உடனடியாகச் செய்யவேண்டும்.

கீற்றுக்கொட்டகைகளாக உள்ள டூரிங் சினிமாக் கொட்டகைகளில் பகல் காட்சிகளை அனுமதிக்கத் திட்டவட்டமாக மறுத்துவிட வேண்டும்.

நமது மாநிலத்துடன் ஒப்பிடும்போது அண்டை மாநிலங்களில் டூரிங் சினிமாக்கள் குறைவுதான்!

கிராமப்புற மக்களின் பொழுதுபோக்கிற்கு மலிவான சாதனம் சினிமா என்பதில் இருவேறு கருத்துக்களுக்கு இடமில்லை!

ஆனால் அது பொழுதுபோக்காக மட்டும் அமையாமல் உயிர்போக்கும் சாதனமாகவும் ஆகிவிடக்கூடாதல்லவா?

எனவே கிராமப்புறங்களில் பாதுகாப்பான முறையில் திரையரங்குகள் அமைத்திட கழக ஆட்சிக் காலத்தில் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்ட செமிபர்மனென்ட் தியேட்டர்களைக் கட்டுவதற்கு வழிமுறைகளை வகுக்க வேண்டுமேயல்லாமல், தூத்துக்குடி, தர்மபுரி, காஞ்சிகோயில் சம்பவங்களுக்குப் பிறகும் கீற்றுக் கொட்டகைகளை ஊக்கப்படுத்துவது நல்லதல்ல!

தூத்துக்குடி துயரத்தில் அனைவரும் பங்குகொள்கிறோம்! ஆனால் அது மட்டும் போதாது! இனியும் தூத்துக்குடிகள் நிகழாமலிருக்க டூரிங் சினிமாக்கள் பற்றி அரசாங்கம் மறுபரிசீலனையில் ஈடுபட்டாக வேண்டும்.

அன்புள்ள,

மு. க.

(02-08-1979)

685. தமிழகம் போர்க்களமாகியே தீரும்!

உடன்பிறப்பே,

உண்மைகளைத் திரித்துக் கூறியே மக்களை இன்னமும் ஏமாற்றலாம் என்று ஒரு கூட்டம் கருதிக்கொண்டிருக்கிறது. எம்.ஜி.ஆரின் புதிய ஆணைப்படி பிற்படுத்தப்பட்டவர்களில் ஒன்பதாயிர ரூபாய்க்கு மேல் ஒரு ரூபாய் அதிகமாக ஆண்டு வருமானமுடையவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் உடனடியாக முன்னேறிய வகுப்பினராக ஆகி விடுகிறார்கள். அவர்களுக்கு 33 சதவிகித இட ஒதுக்கீட்டில் உரிமை கிடையாது என்று எம்.ஜி.ஆர். உத்திரவிட்டிருக்கிறார்.

நாம் சொல்கிறோம், வருமான அடிப்படையில் பிற்படுத்தப்பட்ட மக்களை ஏழை, பணக்காரர் என்று பிரித்து அவர்களது உரிமைகளைப் பாதிக்கும் வகையில் 31 சதவிகிதத்தில் கை வைக்காதீர்கள்! இட உரிமை ஒதுக்கீட்டில் கர்நாடக மாநிலத்தில் தேவராஜ் அர்ஸ் செய்துள்ளதைப் போல மாற்றம் செய்யுங்கள் என்று!

(கர்நாடகத்தில் இட ஒதுக்கீடு)

- ❖ பிற்பட்ட சமுதாயத்துக்கு ... 20 %
- ❖ பிற்பட்ட சாதியினர்க்கு ... 10%
- ❖ பிற்பட்ட பழங்குடியினருக்கு ... 5 %
- ❖ தாழ்த்தப்பட்டோருக்கும் பழங்குடியினருக்கும் ... 18 %
- ❖ 4800 ரூபாய்க்குக்கீழ் வருமானமுடைய நிலையில் உள்ளவர்க்கு ... 15 %
- ❖ மற்றும் பொதுப்பட்டியல் ... 32 %

இது கர்நாடக மாநிலத்தில் இட ஒதுக்கீட்டில் அளிக்கப் பட்டுள்ள உரிமை!

இம்ஃதன்னியில் (Income limit for award of fee Concessons) என்ற வகையில் போடப்பட்டுள்ள உத்திரவில் வருமான அடிப்படையில் சம்பளச் சலுகை அளிக்கப்பட்டுள்ளது.

சம்பளச் சலுகைகளையும் (Fee Concessons) இட ஒதுக்கீடு உரிமையையும் ஒன்றாகப் போட்டு குழப்பிக் கொண்டு சில பேர், ஆகா! ஆகா! கர்நாடகத்திலும் வருமான வரம்பு கட்டியிருக்கிறார்கள்! பார்! பார்! என்று கூப்பாடு போடுகிறார்கள்.

அய்யோ பாவம்! நமக்குக் கிடைத்துள்ள வகுப்புரிமையை மிதித்து நசுக்குவதில் அவர்களுக்குள்ள ஆத்திரத்தையும் அவசரத்தையும் இது காட்டுகிறது.

சம்பளச் சலுகை, இலவசக் கல்வி, பிற உதவிகளை முன்னேறிய வகுப்பு உட்பட எல்லா வகுப்பிலுமுள்ள ஏழை மாணவர்களுக்கு வருமான அடிப்படையில் வழங்குவதை நமது கழகம் எதிர்க்கவில்லை. அதை வரவேற்கிறது.

காங்கிரஸ் ஆட்சியிலும், கழக ஆட்சியிலும் அப்படிச் சம்பளச் சலுகைகள் வருமான அடிப்படையில் வழங்கப் பட்டிருக்கின்றன. மேலும் அத்தகைய சம்பளச் சலுகைகள் வருமான அடிப்படையில் வழங்கப்பட்டால் வரவேற்கத் தயாராக இருக்கிறோம்.

வருமான அடிப்படையில் சம்பளச் சலுகைகளை வழங்குகிற கர்நாடக அரசு - பிற்படுத்தப்பட்ட சமூகத்தினர், சாதியினர், பிற்பட்டப் பழங்குடியினர்க்கென ஒதுக்கப்பட்டுள்ள 35 சதவிகித இட ஒதுக்கீட்டு உரிமையை வருமான அடிப்படையில் பாகுபடுத்தவுமில்லை! அதில் எட்டாயிரமோ ஒன்பதாயிரமோ ஆண்டு வருமானமுள்ளவர்களை உயர்ந்த ஜாதிக்காரர்களாக ஆக்கிவிடவுமில்லை.

பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோருக்கு ஒதுக்கப் பட்டது போக எல்லா ஜாதியிலுமுள்ள ஏழைகளுக்கு 4800 ரூபாய்க்குக் கீழ் ஆண்டு வருமானமுடையவர்களுக்குத் தனியாக 15 சதவிகித இட ஒதுக்கீடு செய்திருக்கிறது.

கர்நாட மாநில கெஜட் 1979 மே 24 அன்று வெளியிடப் பட்டுள்ளதையும், 27-6-79 அன்று கர்நாடக அரசு வெளியிட்ட அறிவிப்பையும், கவனமாகப் படித்தால் இட ஒதுக்கீடுகளுக்கான உரிமைக்கு தரப்பட்ட சதவிகிதம் பற்றிய விபரங்கள் தெரியும். 1979 மார்ச் 27-ஆம் நாள் கர்நாடக அரசு பிறப்பித்துள்ள சம்பளச் சலுகை தலைப்புள்ள உத்தரவைப் படித்தால் வருமான வரம்பு, இட ஒதுக்கீட்டு உரிமையை வழங்குவதில் பிற்படுத்தப்பட்டவர்களைப் பாகுபடுத்தவில்லை என்பதும் புரியும்.

எனவே, ஓரிரு தலைமுறையாக மெல்ல மெல்ல தலையெடுத்து வரும் ஒரு இனத்தை அழித்துவிட வஞ்சகர் கூட்டம் வரிந்து கட்டிக்கொண்டு தவறான புள்ளி விபரங்களைத் தர வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொரு குறையும் சொல்கிறார்கள், என் மீது! கொங்கு வேளாளரைப் பிற்பட்டோர் பட்டியலில் சேர்த்து விட்டோனாம்! இதைச் சொல்லிச் சொல்லி அ.தி.மு.க.வில் சிலரும் - அமைச்சர்கள் சிலரும் - அவர்தம் ஆதரவாளர்களும் - என்மீது பாய்கிறார்கள்!

கொங்கு வேளாளர் - உருது பேசும் முஸ்லிம்கள் இருவரையும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இணைத்ததால் ஏற்கனவே பிற்படுத்தப்பட்டோருக்கு 25 சதவிகிதம் என்றிருந்த இட ஒதுக்கீடு உரிமை, 31 சதவிகிதம் என்று, அதாவது 6 சதவிகிதம் அதிகமாக உயர்த்தப்பட்டதை அவர்கள் மறந்து விடுகிறார்கள்!

பொருளாதார அடிப்படையில் கல்விச் சலுகைக்கான - சம்பள உதவிகள் வழங்கலாம்!

எல்லா சாதி வேறுபாடுகளும் ஒழிந்து ஒன்றே குலம் என்ற நிலை ஏற்படும் வரையில் வகுப்பு அடிப்படையில் வழங்கப்படும் உரிமைகளில் பொருளாதார அளவுகோல் கூடாது. ஏற்கனவே இருந்த நிலையே நீடிக்க வேண்டும்.

எல்லாச் சாதியிலும் உள்ள ஏழை மாணவர்களுக்கென்று இட ஒதுக்கீடு செய்ய - கர்நாடக அரசைப் பின்பற்றி, 51 சதவிகிதத்தில் 15 சதவிகிதம் அளவுக்குத் தனியாக உரிமை வழங்கலாம்.

இதுதான் பெரியார், அண்ணா, காமராசர் கட்டிக் காத்ததும் - நாம் தொடர்ந்து பாதுகாத்ததுமான வகுப்புரிமைக் கொள்கையாகும்.

அதை அழிக்க முற்படுவதும் - அதற்குத் துணை நிற்பதும் - தமிழகத்தைப் பெரும் போராட்டக் களமாக்கியே தீரும்! இதில் சந்தேகமே இல்லை!

அன்புள்ள,

மு. க.

(04-08-1979)

குறிப்பு : தொழில் கல்லூரிகளில் சேருதல், வேலை வாய்ப்பு ஆகியவற்றில் நிர்ணயிக்கப்படும் இட ஒதுக்கீடு என்பது வேறு! சம்பளச் சலுகைகளை மாணவர்களுக்கு அளிப்பது என்பது வேறு!

686. இன்றைய தமிழகம் குமுறும் எரிமலை!

உடன்பிறப்பே,

கடலூர் பெரியார் நூற்றாண்டு விழாவில் எம்.ஜி.ஆர். பேசி விட்டார்! ஆம், அறிவித்தே விட்டார்! பிரகடனப்படுத்தி விட்டார்! பிற்படுத்தப்பட்ட மக்களின் தலையில் இப்போது அடித்துள்ள அடி போதாதென்று மேலும் ஒரு அடி கொடுக்கப் போகிறேன் என்று பெரியார் விழாவிலேயே முழக்கம் செய்து விட்டார்.

இரண்டொரு தலைமுறைகளாகத்தான் கல்வித் துறையிலும், வேலை வாய்ப்புக்களைப் பெறுகின்ற நிலையிலும் தலை தூக்கி வருகிற பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தில் வகுப்பின் அடிப்படையில் தரப்படும் வகுப்புரிமை வழியை மூடிவிட்டு வருமான அடிப்படையில் பிற்படுத்தப்பட்ட மக்களைப் பாகுபடுத்தி, பெரியார், அண்ணா, காமராசர் அவர்கள் வழி நின்று கழக அரசு கட்டிக் காத்து வந்த வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்திற்குச் சாவுமணி அடிக்கும் எம்.ஜி.ஆரின் புதிய உத்தரவை திரும்பப் பெற வேண்டுமென நமது கழகத்தின் சார்பில் கடந்த கால வரலாற்றுச் செய்திகளையும், புள்ளிவிவரங்களையும் எடுத்துக் காட்டி வலியுறுத்தி வருகிறோம்.

மருத்துவக் கல்லூரி, பொறியியல் கல்லூரி போன்ற தொழில் கல்லூரிகளில் சேருவதற்கும், அரசுத்துறை வேலை வாய்ப்புகளும் பிற்படுத்தப்பட்டோருக்கு இட ஒதுக்கீடு 25 சதவிகிதம் என்றிருந்ததை கழக ஆட்சிக் காலத்தில் 1970-இல் 31 சதவிகிதமென்று உயர்த்தப்பட்டது. எல்லா வகுப்பு மாணவர்களும் போட்டியிடக் கூடிய பொதுப் பட்டியலிலும் 31 சதவிகிதமன்னியில் பிற்படுத்தப்பட்டோரும், 18 சதவிகிதமன்னியில் தாழ்த்தப்பட்டோரும் இடையூறின்றிப் போட்டியிட்டு அந்த 51 சதவிகித இட ஒதுக்கீட்டிலும் கணிசமான இடங்களைப் பெற வழி வகைகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தன. எனவே பிற்படுத்தப்பட்டோருக்கு 31 சதவிகிதத்தை

விடவும், தாழ்த்தப்பட்டோருக்கு 18 சதவிகிதத்தை விடவும் அதிக சதவிகித இடங்கள் கிடைக்க வாய்ப்புகள் இருந்தன.

இப்போது எம்.ஜி.ஆர். போட்டுள்ள புதிய உத்தரவு என்ன சொல்லுகிறது? பிற்படுத்தப்பட்டோரில் ஒன்பதாயிர ரூபாய்க்குக் கீழே ஆண்டு வருமானம் உள்ளவர்களுக்கு மட்டுமே 31 சதவிகித இடங்களைப் பெற முடியும் என்று திட்டவட்டமாகக் கூறுகிறது. ஒன்பதாயிரத்துக்கு மேல் வருமானமுடைய பிற்படுத்தப்பட்டவர்கள், இந்த உத்திரவின் மூலம் திடீரென உயர்சாதிக்காரர்களாக மாறி; இனிமேல் அவர் பொதுப் பட்டியலில் (Open Competition) ஏற்கனவே பல தலைமுறைகளாக முன்னேறியுள்ள சமுதாயத்தினருடன் போட்டியிட்டுத் தேர்வுபெற மோதுதல் நடத்த வேண்டும். இதனால் ஏற்படக் கூடிய விளைவுகள் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைப் பெருமளவுக்கு எதிர்காலத்தில் சீரழித்து விடும்.

31 சதவிகிதமும் பிற்படுத்தப்பட்டோரில் உள்ள ஏழைகளுக்குத் தானே ஒதுக்கப்படுகிறது என்று பதில் சொல்கிறார்கள்.

பிற்படுத்தப்பட்ட வகுப்பு - முன்னேறிய வகுப்பினர் - என்ற பாகுபாடு பொருளாதார அளவுகோலை வைத்து நிர்ணயிக்கப் படுவதல்ல!

இன்று ஏழையாக இருப்பவன், நாளை வசதி படைத்தவனாகி விடுகிறான். இன்று வசதிகளுடன் வாழ்பவன் நாளை ஏழையாக ஆகிவிடுகிறான். ஆனால் சமூக ரீதியாகவும் - கல்வி, வேலைவாய்ப்பு அடிப்படையிலும் ஆண்டாண்டு காலமாக சமுதாயத்திலே பிற்படுத்தப்பட்ட சமூகத்தினர் பல்வேறு பின்தங்கிய சாதிகளைச் சேர்ந்தவர்களாகவே இருக்கின்றனர். அதனால்தான் அவர்களுக்கென ஏற்பட்டுள்ள வகுப்புரிமைக் கொள்கை, பொருளாதார அடிப்படையில் வழங்கப்படாமல் சாதி அமைப்புக்கள் இருக்கும் வரையில், அதாவது ஒன்றே குலம் என்ற நிலை உருவாகும் வரையில் சமூக அடிப்படையில்தான் வழங்கப்பட வேண்டுமென்று பெரியாரும், அண்ணாவும் தங்களின் வாழ்நாள் முழுதும் குரல் எழுப்பி வந்தார்கள்.

ஏழைகளுக்கு நன்மை செய்கிற உத்தரவு என்றும், அதைக் கருணாநிதியும் வீரமணியும் எதிர்க்கிறார்கள் என்றும் எம்.ஜி.ஆர். பேசுவதின் மூலம் மக்களைத் திசை திருப்பப் பார்க்கிறார்.

கருணாநிதி, வீரமணி மட்டுமல்ல, அவர்கள் சார்ந்துள்ள இயக்கமும், பிற்படுத்தப்பட்ட சமுதாய மக்களில் தெளிவுபடைத்தவர்களும் எம்.ஜி.ஆரின் புதிய உத்தரவை முழுமூச்சுடன் எதிர்ப்பதை எம்.ஜி.ஆர். மறைத்துப் பயனில்லை.

ஏழைகளுக்குத் தொழில் கல்லூரிகளில் சேர்வதற்கும், வேலை வாய்ப்புகள் கிடைப்பதற்கும் வழிவகை செய்து உரிமைகள் அளிக்கப்பட வேண்டுமென்பதை யாரும் எதிர்க்கவில்லை. தி.மு.கழகமோ, திராவிடர் கழகமோ - அப்படியொரு நிலையை எடுக்கவே இல்லை!

தி.மு.க. பொதுக்குழுவின் தீர்மானம் மிகத் தெளிவாகவே இருக்கிறது.

பிற்படுத்தப்பட்டவர்களுக்கென ஏற்கனவே ஒதுக்கப் பட்டுள்ள 31 சதவிகிதத்தில் ஏழை பணக்காரன் என்று பாகுபாடு செய்து தலையெடுத்து வரும் அந்தச் சமுதாயத்தை படுகுழியில் தள்ளாதீர்கள்!

பிராமணர், முதலியார், செட்டியார், பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் இப்படி எல்லா சாதியினர்க்கும் ஒதுக்கப்பட்டுள்ள 51 சதவிகிதப் பொதுப் பட்டியலில் கர்நாடக அரசைப்போல் 15 சதவிகித அளவுக்கு எடுத்து அந்த 15 சதவிகிதத்தில் உயர்ந்த சாதி, பின்தங்கிய சாதி, தாழ்த்தப்பட்டோர் அனைவரிலும் உள்ள ஏழைகளுக்கு ஒரு குறிப்பிட்ட வருமான வரம்பு அடிப்படையில் தொழில் கல்லூரிகளிலும், வேலை வாய்ப்புகளிலும் இடமளித்திடுக என்று தான் நானும் சரி, நமது கழகமும் சரி - தொடர்ந்து கூறிவருகிறோம்.

ஆனால் முதலமைச்சர் இராமச்சந்திரன் கடலூரில் நடந்த பெரியார் விழாவில் (அரசாங்கம் நடத்திய விழா) என்ன சொல்லியிருக்கிறார் தெரியுமா?

அடுத்த ஆண்டு முதல் உயர் சாதியில் உள்ள ஏழைகளுக்கு விகிதாசார முறை பின்பற்றப்படும். 51 சதவிகிதப் பொது இடத்தில் இந்த விகிதாசாரம் உயர்சாதியில் உள்ள ஏழைகளுக்கு ஒதுக்கப்படும் என்பதை இப்போதே சொல்லிவிடுகிறேன். நண்பர் கருணாநிதி இதற்காகவும் ஒரு போராட்டம் தொடங்க இப்போதே தயாராகலாம். அவருக்குப் போராட்டம் தவிர வேறு வேலையில்லை.

நண்பர் எம்.ஜி. இராமச்சந்திரனின் கடலூர் கர்ச்சனைதான் இது!

இந்த அறிவிப்பில் உள்ள புதிய ஆபத்தை எம்.ஜி.ஆரின் தயவை நாடிப் பல் இளித்துக் கிடப்போர் தவிர, மற்ற நடுநிலையாளர்கள் அனைவரும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

இப்போது பிற்படுத்தப்பட்டோருக்கு 31 சதவிகிதம் கல்விக்கும், வேலை வாய்ப்புக்கும் என்று இருந்ததை பிற்படுத்தப்பட்டோரில் ஏழைகளுக்கு மட்டுமே என்று புதிய உத்தரவின் மூலம் மாற்றி விட்டார் எம்.ஜி.ஆர்.

எனவே ஒன்பதாயிர ரூபாய்க்கு மேல் ஆண்டு வருமானமுடைய பிற்படுத்தப்பட்டவர்கள் பொதுப் பட்டியலில் உள்ள 51 சதவிகிதத்தில் முன்னேறிய சமுதாயத்தினருடன் போட்டியிடும் சூழ்நிலை உருவாக்கப்பட்டு விட்டது.

அதற்கும் மேலாக இப்போது கடலூரில் எம்.ஜி.ஆர். அறிவித்துள்ளபடி பொதுப் பட்டியலில் உள்ள 51 சதவிகிதத்தில் பத்து அல்லது பதினைந்து சதவிகிதம் உயர் சாதியில் உள்ள ஏழைகளுக்கு என்று ஒதுக்கிவிட்டால் தாழ்த்தப் பட்டோருக்கும் 9000-க்குமேல் ஆண்டு வருமானமுள்ள பிற்படுத்தப்பட்டோருக்கும், பொதுப் பட்டியலில் முன்னேறிய சமூகத்துடன் போட்டியிடக் கூடிய இடங்கள் 36 சதவிகிதமாகக் குறைந்துவிடக் கூடும். 51 சதவிகிதத்தில் பொதுப் பட்டியலில் முன்பிருந்த நடைமுறையில் கணிசமான இடங்களைப் பெற்றுவந்த பிற்படுத்தப்பட்டோரும், தாழ்த்தப்பட்டோரும் - எம்.ஜி.ஆரின் கடலூர் அறிவிப்பின்படி 36 சதவிகிதத்திற்குள் உயர் சாதிக்காரர்களுடன் போட்டியிட வேண்டிய அளவுக்கு வாய்ப்புக் குறைந்தவர்களாக ஆகிவிடுகிறார்கள்.

பொருளாதாரத்தில் பலவீனமானவர்கள் எல்லா சாதியிலும் இருக்கிறார்கள். அவர்களுக்குக் கல்வித் துறை, வேலை வாய்ப்புத் துறையில் இடங்கள் கிடைப்பதற்கான சலுகைகள் இதுவரையில் பல கட்டங்களில் படிப்படியாக அளிக்கப்பட்டு வந்த போதிலும் தொழில் கல்லூரி அட்மிஷன், வேலை வாய்ப்பு ஆகியவற்றிலும் உரிய உரிமையான இட ஒதுக்கீடு செய்வது பற்றியும் நமக்கு மகிழ்ச்சியே தவிர மறுப்பு எதுவுமில்லை.

அதற்கு நாம் கூறும் ஆலோசனை என்ன?

மீண்டும் ஒருமுறை நினைவு படுத்துகிறேன்!

ஃ ஏழை பணக்காரன் என்ற பாகுபாட்டை பிற்படுத்தப்பட்டோருக்கு என இருக்கின்ற 31 சதவிகிதத்தில் செய்யாதீர்கள்!

ஃ எல்லோரும் போட்டியிடக் கூடிய 51 சதவிகிதத்தில் பிராமணர், முதலியார், செட்டியார், பிள்ளைமார், பிற்படுத்தப் பட்டோர், தாழ்த்தப்பட்டோர் போன்ற எல்லா சாதியிலும் உள்ள ஏழைகளுக்கு 15 சதவிகிதம் தனியாக ஒதுக்கிடுங்கள்!

ஃ மீதமுள்ள 36 சதவிகிதம் பொதுப்பட்டியலாக இருக்கட்டும்.

இதனைச் சிந்தித்துப் பார்த்திட மறுத்துவிட்டு பிற்படுத்தப்பட்டோரையும் இருகூறாகப் பிரித்து அவர்களிலேயே ஏழை பணக்காரன் என்று வகுத்து, வகுப்புரிமையின் அடிப்படைக்கே ஆபத்தை ஏற்படுத்தி விட்டு, இப்போது 51 சதவிகிதப் பொதுப்பட்டியலிலும் உயர்சாதி ஏழைகளுக்கு அடுத்த ஆண்டு தனி விகிதாசாரம் வழங்கப்போகிறேன் என்று எம்.ஜி.ஆர். திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறார்.

இப்படியும் ஒரு ஆபத்தான கருத்தைத் தெரிவித்துவிட்டு, நண்பர் கருணாநிதி அடுத்த ஆண்டு இதற்காக ஒரு போராட்டம் நடத்த இப்போதே தயாராகலாம். அவருக்கு வேறு வேலை இல்லை என்றும் நண்பர் எம்.ஜி. இராமச்சந்திரன் அறைகூவல் விடுத்துள்ளார்! அல்லது கேலி புரிந்துள்ளார்!

தி.மு.க. ஆட்சிக் காலத்தில் எம்.ஜி.ஆர். எத்தனை போராட்டங்களைத் தூண்டிவிட்டார் என்பதை அவர் கட்சியின் பழைய ஏடுகளைப் புரட்டினாலே தெரியும்!

போராட்டங்களில் அவர் குதிக்க மாட்டாரே தவிர, கருணாநிதியின் கொடும்பாவி கொளுத்துகிற போராட்டத்திலிருந்து, கழக அமைச்சர்கள் செல்லுகிற இடமெல்லாம் கறுப்புக் கொடி காட்டுகிற போராட்டங்களைத் தூண்டிவிட்டு நடத்தியவர் எம்.ஜி.ஆர். அல்லவா?

கழக எம்.எல்.ஏக்களின் வீடுகளுக்கு அ.தி.மு.க.வினர் ஊர்வலமாகச் சென்று கண்டன மனுக்கள் கொடுக்கிற போராட்டத்தை எம்.ஜி.ஆர். நடத்தியதை மறந்து விட்டாரா?

விவசாய சங்கத் தலைவர் நாராயணசாமி நாயுடு, கழக ஆட்சியில் மறியல் செய்ய வந்தபோது எம்.ஜி.ஆர். கட்சித் தலைவர்கள் அவருக்கு மாலை அணிவித்து கோட்டையை நோக்கி வழி அனுப்பிவைக்கவில்லையா?

போலீஸ்காரர்களின் மனைவிகளைக் கொண்டு ஒரு போராட்டம் நடத்தப்போவதாக இதே எம்.ஜி.ஆர். அறிவிக்கவில்லையா?

தொழிலாளர்களில் சில பகுதியினர் கழக ஆட்சியில் நடத்திய போராட்டங்களுக்கு இந்த எம்.ஜி.ஆர். இருபதாயிரம், முப்பதாயிரம் என்று நன்கொடை கொடுத்து ஊக்கப்படுத்திய கதைகள் எல்லாம் சில மாதங்களுக்குப் பிறகு அம்பலமாகவில்லையா?

தெருவில், சாலைகளில் ஓடிய பஸ்களை, லாரிகளை - எம்.ஜி.ஆர். ரசிகர்கள் உடைத்து நொறுக்கிக் கொளுத் திடவில்லையா? அந்தக் கிளர்ச்சிக்கு எம்.ஜி.ஆர். நிதியுதவி செய்திடவில்லையா?

இராமநாதபுரம் கூட்டத்திலே கழக அமைச்சர் மன்னையின் நெற்றியை நோக்கிக் கல்வீசி, எம்.ஜி.ஆர். கட்சியினர் ரத்த வெறிக்கூத்து நடத்தவில்லையா?

அப்போது திருத்தணிக் கூட்டத்திற்குச் சென்ற நண்பர் வேழவந்தனின் கார் எம்.ஜி.ஆர். கட்சியினரால் கொளுத்தப்பட்டுச் சாம்பலாக்கப்படவில்லையா?

அந்த எம்.ஜி.ஆரா? இன்றைக்குப் போராட்டம் என்ற சொல்லைக் கேட்டாலே துள்ளிக் குதிக்கிறார்!

உடன்பிறப்பே! தமிழ்நாட்டு மக்கள் குரல் வளையையே நெரிக்கிற அளவுக்கு எம்.ஜி.ஆரின் உத்தரவும், அடுத்த ஆண்டு நடைமுறைப்படுத்தப் போவதாக இந்த ஆண்டு கடலூரில் அறிவித்துள்ள திட்டமும் அமைந்துவிட்ட பிறகும் - நாம் சும்மா கிடக்கச் சோற்றால் அடித்த பிண்டங்கள் அல்ல! சொரணை கெட்டவர்களுமல்ல! உடம்பில் சூடற்றுப் போய்விட்ட நடைப்பிணங்களுமல்ல!

பெரியார் விழா நடத்துகிறோம் - பெரியார் பெயர் சூட்டுகிறோம் - என்று விளம்பரம் செய்து கொண்டே, அண்ணாவின் பெயரைக் கட்சிக்கு வைத்துக்கொண்டே - திராவிடர் இயக்கத்தின்

அடித்தளத்தைத் தகர்த்தெறிந்து - பெரியார், அண்ணா இருவரின் கொள்கைகளுக்குக் கல்லறை கட்டுவதை, நம்மைப் போன்றோர் கைகட்டி - வாய் புதைத்து - கண்ணை மூடி - சகித்துக்கொண்டு - எதிர்த்திட முடியாத எடுபிடிகளாக இருந்திட இயலாது!

வகுப்புரிமையில் கைவைத்து அதனை மந்தி கை மலர் மாலையாக ஆக்கும் மமதை கொண்ட ஆட்சியாளர் எவராயினும் அவரை எதிர்த்துப் போர்க்கொடி உயர்ந்தே தீரும்!

தமிழகம், இன்று குமுறிக்கொண்டிருக்கும் எரிமலை!

அவ்வளவுதான் சொல்லமுடியும் எம்.ஜி. இராமச்சந்திரனுக்கு!

நமது வேண்டுகோள் - ஆலோசனை - மாற்றுத் திட்டம் - இவற்றைப் பெரியார் - அண்ணா இருவரின் கொள்கை அடிப்படையில் எம்.ஜி.ஆர். ஏற்றுக்கொள்ள மறுப்பாரேயானால் -

உடன்பிறப்பே!
ஆறிலும் சாவுதான்
நூறிலும் சாவுதான்
ஆனது ஆகட்டுமே!

என்று போர்ப்பரணி பாடி நமது படை வீரர்கள், தங்கள் உயிரைத் தத்தம் செய்து தன்மான இயக்க இலட்சியம் காத்திடத் தயாராவதைத் தவிர வேறு வழியில்லை!

அதில் முதற் களப்பலியாக இதோ, உன் அன்பு உடன்பிறப்பு நான் தயாராக இருக்கிறேன் என்பதை உனக்குச் சொல்லவும் வேண்டுமா?

அன்புள்ள,

மு. க.

(08-08-1979)

687. மாஸ்கோவைக் காண்க! மார்க்சிஸ்டுகள் சிந்தனைக்கு!

உடன்பிறப்பே,

உலகில் எந்த மதத்திற்கும் இல்லாத பெரும் சிறப்பு இந்து மதத்திற்கு என ஒன்று உண்டென்றால் அதுதான் சாதிக் கொடுமை! அந்தக் கொடுமையை இந்த மதம் பரவியுள்ள இந்தியத் திருநாட்டைத் தவிர உலகில் வேறெந்த நாட்டிலும் காண முடியாது. நிறவெறிப் போராட்டங்கள் உலகின் சில பகுதிகளில் நடந்துள்ளன. ஆனால் மதத்தினாலேயே ஒப்புக் கொள்ளப்பட்ட, ஊக்கப்படுத்தப்படுகிற சாதிப் பாகுபாடு முறை இந்து மதத்திற்கே உரிய ஒன்றாகும்.

டாக்டர் அம்பேத்கர் எழுதிய நூல் ஒன்றில் இந்திய சாதிகள் குறித்து டாக்டர் கேட்கர் என்ற அறிஞர் ஒருவர் குறிப்பிட்டுள்ள கருத்தினை எடுத்துக்காட்டுகிறார். டாக்டர் கேட்கர் என்ன கூறுகிறார்?

"As long as caste in India does exist Hindus will hardly inter-marry or have any social inter-course with outsiders; and if Hindus migrate to other regions on earth, Indian caste would become a world problem."

(Dr. Ketkar On Caste, page 4)

இந்தியாவில் சாதி இருக்கிற வரை இந்துக்கள் கலப்பு மணம் செய்துகொள்ள மாட்டார்கள். வெளியாருடன் சமூக உறவு கொள்ளமாட்டார்கள். பூமியில் உள்ள இதர இடங்களுக்கு இந்துக்கள் குடியேற ஆரம்பித்தால் இந்திய சாதி உலகப் பிரச்சினையாக மாறிவிடும்

கேட்கரின் இந்தக் கருத்து நூற்றுக்கு நூறு உண்மை யல்லவா? எங்கோ அங்கொன்றும் இங்கொன்றுமாக நடைபெறுகிற கலப்புத் திருமணங்களைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல், இந்துமத அடிப்படையில் சாதி வேறுபாடும் -

ஆதிக்க உணர்வுகளும் வலுப்பெற்றே இருக்கின்றன என்ற பொது நிலையை சிந்தித்துப் பார்க்கத் தவறிவிடக் கூடாது!

நமது அரசியல் சட்டத்தின்படி நமது சமுதாயம் ஒரு சாதியற்ற சமுதாயம் என்று பள்ளிகளிலே படிக்கிறோம். மேடைகளிலே பேசுகிறோம்.

ஆனால் உண்மை நிலை என்ன? நமது அரசியல் சட்டத்தில் சாதி ஒழிக்கப்பட வேண்டுமென்றோ அல்லது சாதிகள் ஒழிக்கப்பட்டு விட்டன என்றோ எங்குமே குறிப்பிடப் படவில்லை.

அரசியல் சட்டத்தில் அப்படித் திட்டவட்டமான குறிப்புகள் இல்லையென்பதற்காக சாதி வேறுபாடுகள் இருக்க வேண்டுமென்று வாதிடுகிற வக்கிர புத்தி படைத்தவரல்ல நாம்! ஒன்றே குலம் என்ற நிலை உருவாகும் வரையில் சாதியின் பெயரால், தாழ்த்தப்பட்டுள்ள - பிற்படுத்தப்பட்டுள்ள மக்களுக்கு - அவர்களின் சமுதாயத் துறை, கல்வித் துறை முன்னேற்றத்துக்கான தனி ஒதுக்கீடுகள் இருந்தே தீரவேண்டும் என்கிறோம். அப்போதுதான் அவர்கள் முன்னேறி விட்ட உயர்ந்த சாதிக்காரர்களுடன் ஈடுகொடுத்துப் போட்டியிட்டு சமூக நீதியினைப் பெறமுடியும்.

சாதியை ஒழிப்பதற்கு அரசியல் சட்டத்திலே இடம் ஏற்படுத்தப்படவில்லை யென்றாலும்கூட, சாதி காரணமாகச் சில பிரிவினருக்கு உள்ள சங்கடங்களைத் தீர்த்து வைக்க அரசியல் சட்டம் இடம் தருகிறது.

சமுதாயத் துறையிலும் கல்வித் துறையிலும் முன்னேற்றம் காண்பதற்காக, அரசாங்கம் பின்தங்கிய சமுதாயத்தினருக்கு கல்வியிலும்,வேலை வாய்ப்புகளிலும் சலுகைகளையும் இட ஒதுக்கீட்டு உரிமைகளையும் வழங்குவதற்கு அரசியல் சட்டம் அனுமதி அளித்துள்ளது.

அரசியல் சட்டம் இயற்றப்பட்ட பிறகு, முதல் திருத்தமே அந்த நோக்கம் நிறைவேறத்தான் செய்யப்பட்டது. இந்திய அரசியல் சட்டத்தின் முதல் திருத்தம், பிற்படுத்தப்பட்ட மக்களுக்காகப் பெரியாரும் அண்ணாவும் திராவிடர் இயக்கமும் போராடிப் பெற்றுத் தந்த ஆறுதல் பரிசாகும்! வகுப்புவாரி பிரதிநிதித்துவம் அறவே அழிந்து போகிற அளவுக்கு உயர்நீதி மன்றத் தீர்ப்பும்,

42215
நூலக எண்

திரு. அறக்கட்டளை பேராசிரியர் நூலக

உச்சநீதி மன்றத் தீர்ப்பும் அமைந்து விட்ட காரணத்தால் பிற்படுத்தப்பட்டோரின் எதிர்காலம் ஓரளவாவது ஒளிமயமாகத் திகழத் திராவிடர் இயக்கம் 1951-இல் நடத்திய போராட்டத்தின் விளைவாகத்தான் அரசியல் சட்டத்தில் முதல் திருத்தம் பிற்படுத்தப்பட்ட மக்களுக்காகச் செய்யப்பட்டது.

சாதி முறைகளும், சாதிப் பிரிவுகளும் தொடர்ந்து பாதுகாக்கப்பட்டு வருகின்றன என்பதற்கு உதாரணம்தான் கழக அரசுக் காலத்தில், அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம் என்று இயற்றப்பட்ட சட்டம் உச்சநீதி மன்றத்தின் தீர்ப்பினால் முடக்கப்பட்டு விட்டது. சனாதன சாதி ஆதரவாளர்கள் அந்தச் சட்டத்தை எதிர்த்துத் தொடர்ந்த வழக்கின் விளைவு அது! கழக அரசு இயற்றிய சட்டத்திற்கேற்ப இன்னமும் அரசியல் சட்டம் திருத்தப்படவில்லை.

அரசியல் சட்டம் சாதிமுறைகளை ஒழிக்காத காரணத்தால்தான் பல அரசியல் தலைவர்கள், பதவிப் பொறுப்புக்களில் இருப்போர், இன்னமும் சாதிப் பெயர்களை வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்தத் தீமைகள், சாதி முறைகளும் வேறுபாடுகளும் தேவை - என்பதற்கான ஆதாரங்கள் என்று நான் கூறமாட்டேன்.

அதே நேரத்தில் - சாதி ஏற்றத் தாழ்வுகளால் - இறைவன் பெயராலும், இதிகாசங்கள், வேதங்களின் பெயராலும், மனுஸ்மிருதி போன்றவற்றாலும் பல்லாயிரம் ஆண்டுகளாக ஒடுக்கப்பட்டுக் கிடந்த மக்கள், அவர்கள் எந்த சாதியின் பெயரால் ஒடுக்கப்பட்டிருந்தார்களோ - அந்த சாதியின் பெயரைச் சொல்லித்தான் (நோயின் பெயரையும் தன்மையையும் அறிந்து மருந்து அருந்துவது போல) முன்னேறுவதற்கான உரிமைகளையும், சலுகைகளையும் பெற வேண்டியுள்ளது. இது இன்றுள்ள விநோதமான நிலை!

தீண்டாமையைப் பின்பற்றுவது அரசியல் சட்டத்தின் 17-வது பிரிவின்படி ஒழிக்கப்பட்டிருக்கிறது. அது சட்டப்படி தண்டனைக்குரிய குற்றம் என்று கூறப்பட்டிருக்கிறது.

மதுவிலக்கு பற்றி கூறும் அரசு கடைப்பிடிக்க வேண்டிய வழிகாட்டும் கொள்கைகளின் வரிசையில்கூட (Directive principles of State Policy) சாதி ஒழிப்பு பற்றிக் குறிப்பிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே சாதி ஒழிப்பு குறித்து அரசியல் சட்டம் எதுவுமே கூறவில்லை என்பது உற்றுநோக்க வேண்டிய ஒன்று!

சாதிக் காழ்ப்பு உணர்ச்சிகள் மறைவதற்கு அனைவரும் ஒருங்கிணைந்து குரல் எழுப்புகிறோம் என்றாலுங்கூட சாதிப் பிரிவுகள் இன்னும் பல்லாண்டுகள் இருக்கத்தான் செய்யும். இருக்கத்தான் வேண்டுமென்று கூறவில்லை. கூறமாட்டேன். இருக்கத்தான் செய்யும் என்ற நிலை விளக்கத்தைத்தான் தருகிறேன் - அரசியல் சட்டமே அதனை ஒழிக்க முற்படாததால்!

சாதிப்பிரிவுகள் மறைய வேண்டுமென்று பணியாற்று கிறபோது - அந்தப் பிரிவுகளால் பின்னடைந்து கிடக்கிற மக்களை - அந்தப் பிரிவுகளைக் காட்டியே கைதூக்கி விட வேண்டியிருக்கிறது.

இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்குத் தமிழ்நாட்டில் அத்தகைய தவிர்க்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருப்பதை, திராவிடர் இயக்கத்தை ஆராய்ச்சி செய்து நூல்களை வெளியிட்டுள்ள உயர்சாதியைச் சேர்ந்த ஆசிரியர்களே தெளிவாகச் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தாழ்ந்த சாதியினர் எனக் கூறப்படுவோர், கல்வி கற்று உத்தியோகங்களுக்குச் செல்ல விரும்புகிறார்கள்! ஆனால் வறுமையின் காரணமாக ஏழ்மை நிலையில் உள்ளவர்கள் உயர்சாதிக்காரர்களாக இருப்பார்களேயானால் மலம் அள்ளுதல் போன்ற தொழில்களைச் செய்ய முற்படுவார்களா?

எனவே இங்கே பொருளாதார நிலை கணக்கிலே இல்லை! சாதிமுறைதான் தலைதூக்கி நிற்கிறது!

இந்தியாவில் - தென்னகத்தில் - ஏன்? தென்னகத்திலேயே குறிப்பாகத் தமிழ்நாட்டிலேதான், சாதிமுறை மிகக் கொடுமையாகச் செயல்பட்டிருக்கிறது. அதற்கான பல ஆதாரங்களைக் கூற முடியும். ஆனால் அந்த ஆதாரங்கள் மீண்டும் பழைய வகுப்பு வேற்றுமைகளைக் கிளறுவதாக அமைந்து விடக்கூடும். அண்டை மாநிலங்களான ஆந்திரத்திலோ, கேரளத்திலோ, கர்நாடகத்திலோ - பிற்படுத்தப்பட்டோர் பிரச்சினை என்பது வேறு! தமிழ்நாட்டில் அந்தப் பிரச்சினை தனித்தன்மை வாய்ந்தது! அதனால்தான் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு கல்வி, வேலை வாய்ப்பு போன்ற சலுகைகள் இட ஒதுக்கீடுகள், வழங்குவது இந்தியாவில் வேறெந்த

பகுதியைக் காட்டிலும் தமிழ்நாட்டில் வரலாறு காரணமாகத் தேவைப்படும் ஒன்றாகி விட்டது.

தமிழ்நாட்டைப் பின்பற்றி பிற்படுத்தப்பட்டோர் நிலையை ஆராய்ந்து அறிவிக்க கர்நாடகம் போன்ற மாநிலங்களில் குழுக்கள் அமைக்கப்பட்டன.

அப்படி அமைக்கப்பட்ட கர்நாடக மாநிலத்து பிற்பட்டோர் நலக்குழு தனது அறிக்கையில், சோவியத் ரஷ்யா பற்றிக் கோடிட்டுக் காட்டுகிறது.

உடன்பிறப்பே, சோவியத் நாட்டுக்கு நான் இதுவரை சென்றதில்லை. போவதற்கான வாய்ப்பு ஏற்படவில்லை. அந்த நாட்டின் சிறப்பு குறித்து தந்தை பெரியார் அவர்கள் குடியரசு அலுவலகத்தில் எங்களுக்கெல்லாம் அடிக்கடி சொல்லுவார். இளமைப் பருவத்தில் ஈரோடு நகரில் பெரியாரிடம் கேட்ட சோவியத் நாட்டின் புகழ் என்றும் என் உள்ளத்தில் பசுமையாக இருக்கக்கூடிய ஒன்று! சோவியத் பற்றிய நூல்கள் பலவற்றைப் படித்திருக்கிறேன்! அங்கே சாதிகள் இல்லை. ஆனாலும் ஜார் அரசர் காலத்திற்கு முன்னாலிருந்து சமுதாயத்தின் கீழ்ப்படியில் உள்ள சில சிறுபான்மை தேசிய இன வகுப்பினர் (ethnic Communities) உண்டு ரஷ்யாவில்! அந்த வகுப்பினரை நான் அறிந்த வரையில் நமது மாநிலத்துப் பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் என்ற அளவுக்கு ஒப்பிடலாம் எனக் கருதுகிறேன்.

சோவியத் நாட்டின் சோஷலிச அமைப்பில் கூட அந்தச் சிறுபான்மை தேசிய இன வகுப்பினர், வேலை வாய்ப்புத் துறைகளில் மற்றவர்களோடு போட்டியிட்டு சமநிலை பெற முடியவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. எனவே அந்தக் குறிப்பிட்ட வகுப்பாருக்காக வேலை வாய்ப்புக்களில் கோட்டா முறை ஒதுக்கீடு இன்னமும் அங்கே இருக்கிறது.

இதுகுறித்து கர்நாடக பிற்பட்டோர் கமிஷன் 1975 அறிக்கை பின்வருமாறு தெரிவிக்கிறது;

"As Russia has done, India also has instituted a quota system which tries to ensure fairer balance between different castes, than would be the case if qualification and merit alone were considered. Though the Russian practice of allotment of quota to certain ethnic

communities has been the subject of criticism. Russia has considered it necessary if recruitment of the under-developed ethnic communities in services is to be improved.".

(பக்கம் - 283, 284)

தகுதி, திறமையை மட்டும் பார்ப்பதைவிட, பல்வேறு சாதிகளிடையே ஒரு நியாயமான சமநிலையை ஏற்படுத்தும் முயற்சிக்காக, ரஷ்யாவில் செய்யப்பட்டிருப்பது போல இந்தியாவும் கோட்டா முறையைச் செயல்படுத்தி வருகிறது. குறிப்பிட்ட ஒரு தேசிய இன வகுப்பினருக்கு கோட்டா மூலம் (உத்தியோகங்களை) ஒதுக்குகிற ரஷ்ய முறை விமர்சனத்திற்கு ஆளானாலும், வளர்ச்சி குன்றியிருக்கும் தேசிய இன வகுப்பார் உத்தியோகத் துறையில் உயர்வு பெற வேண்டுமானால் அப்படி (கோட்டா ஒதுக்கீட்டு முறையில்) உத்யோகம் கொடுப்பது அவசியம் என்று ரஷ்யா கருதுகிறது.

கர்நாடகப் பிற்படுத்தப்பட்டோர் கமிஷன் கூறியுள்ளதைத் தான் நான் சுட்டிக்காட்டியிருக்கிறேன். சோவியத் ரஷ்யாவிலேயே இப்படி ஒரு இட ஒதுக்கீடு கோட்டா முறையை ஒரு வகுப்பினருக்காக செயல்படுத்துகிறார்கள் என்றால், அந்த வகுப்பினர் வளர்ச்சியடையாத தேசிய இன வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்ற காரணத்திற்காகத்தானே தவிர, அவர்களது வருமான அடிப்படையில் வகுக்கப்பட்ட முறையாக அது இருக்க முடியாதல்லவா?

சோவியத் நாட்டில் அனைவரும் கல்வி பெறும் வாய்ப்பு இருப்பதால், அதைப் பொறுத்து அங்கோ கோட்டா முறை தேவைப்படவில்லை போலும்! குறிப்பிட்ட ஒரு சிறுபான்மை தேசிய இன வகுப்பினருக்கு மட்டும் வேலை வாய்ப்புக்கு இந்தக் கோட்டா முறை கடைப்பிடிக்கப்படுகிறது! இல்லாவிடில், இதர தேசிய இனத்தார், தங்களை அடக்கி ஆள்வதாக அவர்களுக்கு ஒரு எண்ணம் தோன்றிடக்கூடும்.

எனவேதான், உலகிலேயே மிகவும் மெச்சத் தகுந்த அளவிற்கு தேசிய இனங்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்ட சோவியத் யூனியன் இத்தகைய முறையை கையாண்டு வருகிறது.

எனவேதான் அருமை மார்க்சிஸ்ட் கட்சித் தோழர்களை வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். உங்கள் நிலையை மீண்டும் பரிசீலனை செய்யுங்கள்!

சோஷலிச சமுதாய அமைப்பிலேயே உத்தியோகங்களுக்கு கோட்டா முறை தேவைப்படும்போது, உலகில் வேறு எங்கும் இல்லாத இந்துமதச் சாதிப் பாகுபாடுகள் நிரம்பிய ஒரு முதலாளித்துவ அமைப்பிற்கு அது தேவையில்லையா?

சோவியத் நாட்டின் குறிப்பிட்ட தேசிய இன வகுப்பாரைப் போலத்தானே நமது பின்தங்கிய சமூகத்தினரும் இருக்கின்றனர்? மார்க்சிஸ்டுகள் இதுபற்றி மறுபரிசீலனை செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

முதலாளித்துவ முறையில் வருமானம் அடிப்படையாக இருக்க வேண்டும் என்றால், உலகத்திலேயே வேறு எங்கும் இல்லாத சாதி முறை இங்குதானே இருக்கிறது? அவர்கள் குறிப்பிட்ட சோவியத் நாட்டு சிறுபான்மை தேசிய இன வகுப்பாரைப் போல் அல்லவா இரண்டாயிரம் ஆண்டுகளாக அமுக்கப்பட்டு வருகிறார்கள்? அவர்களில் ஒரு தலைமுறை படித்து உத்தியோகம் பெற்றுவிட்டால் போதுமா?

எனவே எந்தவித விஞ்ஞானபூர்வமான சமுதாய பொருளாதார கணக்கெடுப்பு (Socio-economic Survey) செய்யாமல் திடுதிடுப்பென்று வருமான வரம்பு கட்டுவது என்ன நியாயம்?

ஏழைகள் எல்லா வகுப்பிலும் இருக்கிறார்கள். எனவே தாழ்த்தப்பட்டோரின் 18 சதவிகித ஒதுக்கீட்டில் வருமான வரம்பு கட்டாதது போல - பிற்படுத்தப்பட்டோரின் 31 சதவிகிதத்திலும் வருமான வரம்பு கட்டாமல் - பொதுப் பட்டியலில் உள்ள 51 சதவிகிதத்தில் பிராமணர், பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் உள்ளிட்ட எல்லா சாதி ஏழைகளுக்கும் 15 சதவிகிதம் ஒதுக்கிடுக - என்பதே தி.மு.கழகம் வலியுறுத்துகிற கோரிக்கையாகும். இந்தக் கோரிக்கையை வகுப்புவாதம் என்று திசை திருப்புவதாலேயே இது வகுப்புவாதத்தில் போய் முடிந்து விடுமோ என அஞ்சுகிறேன்.

அன்புள்ள,

மு. க.

(14-08-1979)

688. சீற்றம் வரலாமோ? தூற்றுதல் முறைதானோ? 1

உடன்பிறப்பே,

குடியரசுத் தலைவர் மேதகு சஞ்சீவி ரெட்டி அவர்கள் ஏதோ பெருந்தவறு செய்து விட்டதாகவும், உள்நோக்கத்துடன் முடிவு எடுத்திருப்பதாகவும் விமர்சிப்பதோடு நிறுத்தாமல் தினமணி போன்ற தரம் வாய்ந்த ஏடுகளேகூட மிகவும் இழிந்த முறையில் குடியரசுத் தலைவரைக் குறித்துத் தலையங்க வாசகங்களை வெளியிட்டிருப்பது வேதனைக்குரியதாகும். அதிலும் அரசியலில் முதிர்ச்சி பெற்ற பெரியவர் சிவராமன் அவர்களே, தன் பெயரிட்டு எழுதியுள்ள தலையங்கத்தில் இடம் பெற்றுள்ள வாசகங்களைப் படிக்கும்போது நமக்கு வியப்பு மேலிடுகிறது.

எந்தப் பொருள் குறித்தும் நுணுக்கமாக ஆராய்ந்து தனது கருத்தை வலியுறுத்துவதற்குத் திரு. சிவராமன் அவர்கள் கொண்டுள்ள அணுகுமுறை - பாராட்டத் தக்கதாகவே இருக்கும். கருத்து மாறுபாடுகள் உள்ளவர்களேகூட அவரது எழுத்தின் லாவகத்தைப் போற்றிடுவர். அத்தகைய ஒரு தலைசிறந்த பத்திரிகைத்துறை விற்பன்னர்... இந்திய நாட்டின் குடியரசுத் தலைவர் குறித்து இவ்வளவு வேகமாகவும், கோபமாகவும், தரம் தாழ்ந்தும் எழுதியிருக்க வேண்டுமா? என்று கேட்கத்தான் தோன்றுகிறது,

ராஷ்டிரபதி போட்ட உத்தரவு அரசியலமைப்பு மரபுகளின் படி சரியா என்பதை இன்னமும் நான் ஆராய விரும்பவில்லை. ஆனால் அவர் எடுத்த முடிவு விவேகமற்ற முடிவே! புத்தித் தாழ்வான முடிவே!

இது தினமணி தலையங்கத்தின் ஒரு பகுதி!

ராஷ்டிரபதி செய்துள்ள சிந்தனையற்ற, ஆணவமே ஓங்கி நிற்கின்ற இந்த முடிவின் அனர்த்தங்களிலிருந்து இந்தியாவைக் கடவுள் நிச்சயம் காப்பார்!

அதே தலையங்கத்தில் இது மற்றொரு பகுதி!

குடியரசுத் தலைவர் எடுத்த முடிவு குறித்துக் கருத்துக் கூறிட ஜனநாயக நாட்டில் எல்லோருக்கும் உரிமையுண்டு! அந்த உரிமையைப் பயன்படுத்திக் கொண்டு பெரியவர் சிவராமன் அவர்கள் எழுப்புகின்ற வாதங்களில் உடன்பாடானவைகளும் இருக்கலாம்! ஒத்துக்கொள்ள முடியாதவைகளும் இருக்கலாம்!

நாடாளுமன்றத்தைக் கலைப்பது தவிர வேறு வழியில்லை. அதைத்தான் சஞ்சீவி ரெட்டியார் செய்தார் என்று அந்த முடிவுக்கு ஆதரவு அளிப்பவர்கள் கூட, ஒருமுறை கூட நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை காட்ட முடியாத சரண்சிங் குழுவினர் காபந்து சர்க்காராக நீடிப்பது, அவ்வளவு பொருத்தமாகப்படவில்லையென்று கருத்து தெரிவிக்கிறார்கள். அப்படிக் கருத்து வெளியிடவோ அல்லது மன்றத்தைக் கலைத்ததே தவறு என்ற எண்ணத்தை வலியுறுத்தவோ - ஒவ்வொரு குடிமகனுக்கும் உரிமையும் தகுதியும் உண்டு! இரண்டு முடிவுகளுமே சரி என வாதிடவும் அதைப் போலவே ஒவ்வொரு குடிமகனுக்கும் உரிமையும், தகுதியும் உண்டு! ஆனால், இந்தியாவின் மூத்த தலைவர்கள் டெல்லியில் நடைபெற்ற ஜனதா கட்சிப் பொதுக்கூட்டத்தில் குடியரசுத் தலைவரைக் கொடியவர், பொய்யர், தீயஉள்ளம் படைத்தவர், அற்ப மனிதர் என்றெல்லாம் வர்ணித்துப் பேசி, அந்தப் பேச்சுக்கள் எல்லா ஏடுகளிலும் வந்திருப்பதைக் கண்டு பதைத்துப்போன நமக்கு, மேலும் பதைப்பை ஏற்படுத்துகிற அளவுக்குத்தான் தினமணி தலையங்கம் அமைந்துள்ளது.

- ❖ புத்தித்தாழ்வு
- ❖ விவேகமற்ற முடிவு
- ❖ சிந்தனையற்ற ஆணவம்

ஜனாதிபதியைப் பற்றிய சிவராமன் அவர்களின் இந்த அர்ச்சனைகள் டெல்லி ராம்லீலா மைதானத்தில் ஜனதா தலைவர்கள் குறிப்பிட்ட,

- ❖ கொடியவர்
- ❖ பொய்யர்

❖ தீயஉள்ளம் படைத்தவர்

❖ அற்ப மனிதர்

என்ற வார்த்தைகளுக்கு மெருகூட்டுவது போல் தீட்டப்பட்டுள்ளன.

வைரங்களை வாரியிறைத்து விட்டால் மீண்டும் பொறுக்கி எடுத்துக் கொள்ளலாம். வார்த்தைகளை இறைத்துவிட்டால்...?

இதைச் சிந்திக்கத் தெரியாதவரல்ல சிவராமன்!

எனினும், எடுத்தேன்! கவிழ்த்தேன்! என்று தலையங்கம் வரைந்துவிட்டார்.

இன்று ஏற்பட்டுள்ள விபரீத நிலைமைகள் சஞ்சீவி ரெட்டி அவர்களால் உருவாக்கப்பட்டதா? அல்லது ஜனதா கட்சி தனக்குத்தானே உருவாக்கிக் கொண்டதா?

இதற்கான ஆராய்ச்சியை ஆழமாக நடத்தினால் நியாயமான சீற்றம் யார் மீது ஏற்பட வேண்டும் என்பது புரியும்.

அந்த விபரங்களை நாளைய கடிதத்தில் எழுதுகிறேன்.

அன்புள்ள,

மு. க.

(26-08-1979)

689. சீற்றம் வரலாமோ? 2

வழி மறைத்தது யார்? வசைபாடுவது யாரை?

உடன்பிறப்பே,

நேற்றையத் தொடர்ச்சி இந்தக் கடிதம்!

லோக் சபையில் நம்பிக்கையில்லா பிரேனணை! இன்று முதல் விவாதம். திங்களன்று வாக்கெடுப்பு.

இப்படியொரு பெரிய தலைப்புச் செய்தியை 11-7-79 புதன்கிழமையன்று தினமணி ஏடு வெளியிட்டிருந்தது.

ராஜ்நாராயண் அமைத்துள்ள புதிய கோஷ்டியில் மேலும் சில மெம்பர்கள் சேரக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் ஜனதாவுக்கு அ.இ.அ.தி.மு.க., அகாலிதளம், இடது கம்யூனிஸ்டு ஆகியவற்றினால் ஏற்படும் ஆதரவை மிஞ்சி விடும் அளவுக்கு ராஜ்நாராயண் கோஷ்டி பெரிதாகி விடாது என்று தெரிகிறது.

இப்படியொரு நம்பிக்கையையும் தெரிவித்துத் தினமணி, செய்தியும் வெளியிட்டதோடு -

நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது நடைபெறும் விவாதத்திற்குத் திங்களன்று மொரார்ஜி தேசாய் பதிலளிப்பார்.

என்றும் பெட்டிச் செய்தியொன்றையும் முதல் பக்கத்தில் பிரசுரித்திருந்தது. இரண்டு நாட்கள் முயன்றும் கூட ராஜ்நாராயண் கட்சிக்கு இருபத்தைந்து ஆதரவாளர்களுக்கு மேல் கிடைக்கவில்லை என்பதில் தினமணி தனக்கு ஏற்பட்ட ஆறுதலையும் குறிப்பிடத் தவறவில்லை.

பார்லிமெண்டரி ஜனதா கட்சிப் பொதுக் காரியதரிசி முரளி மனோகர் ஜோஷியும், மற்றொரு பொதுக் காரியதரிசியான டி.என். சிங்கும் நிருபர்களிடையே பேசுகையில், சில உறுப்பினர்கள் கட்சியிலிருந்து ராஜினாமா செய்த போதிலும் ஜனதா சர்க்கார் ஸ்திரமாக உள்ளது என்றும், முழுமையான ஐந்து வருட காலத்தை பூர்த்தி செய்யும் என்றும் கூறினர் -

இந்தச் செய்தியும் 11-7-79 தினமணி முதல் பக்கத்தில் நம்பிக்கை நட்சத்திரமாக ஒளிபரப்பியது.

ஆனால் மறுநாள் நிலைமை என்ன?

12-7-79 தினமணியின் தலைப்புச் செய்தி என்ன தெரியுமா?

ஸ்கைலாப் விண்கலம் கடலில் விழுந்தது - இந்தப் பெருந்தலைப்புக்குக் கீழே மற்றொரு துணைத் தலைப்புச் செய்தி!

லோக்சபையில் ஜனதா மெஜாரிட்டி இழந்தது.

இதுவும் தினமணியில் வந்ததுதான். அதே இதழில் மற்றொரு பக்கத்தில், உங்கள் அரசு மைனாரிடி ஆகிவிட்டதா? என்று தேசாயிடம் நிருபர்கள் கேட்டதற்கு, நான் அப்படி நினைக்கவில்லை என்று அவர் பதில் அளித்தார்.

நம்பிக்கையில்லாத் தீர்மானம் வெற்றி அடைந்தால் நான் பிரதமராக நீடிக்க மாட்டேன் என்றும் தேசாய், நிருபர்களிடம் திட்டவட்டமாகச் சொன்னது ஜூலை 12-ஆம் நாள் தினமணி மூன்றாம் பக்கத்தில் இருக்கிறது.

இதற்குப் பிறகு ஜூலை 15-ஆம் நாள் ஞாயிறன்று மந்திரி சபையிலிருந்து பலர் ராஜினாமா செய்துவிட்டனர் என்ற பரபரப்பான தகவல்கள் அதிகாரப்பூர்வமாக வெளிவந்தன.

நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைச் சந்தித்து - அதில் தோல்வியுற்றால் பிரதமர் பதவியை ராஜினாமா செய்வேன் என்று சூளுரைத்த மொரார்ஜி தேசாய், ஜூலை 15-ஆம் தேதி, தனது மந்திரிசபை ராஜினாமாவை 28 மாத கால ஆட்சிக்குப் பிறகு குடியரசுத் தலைவரிடம் அளித்தார்.

நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் தோற்கடிக்கப்பட்டு விடாமல் தன்னைக் காத்துக் கொள்ளவே தேசாய் ராஜினாமா செய்தார் என்பது தெளிவான உண்மையாகும்.

இந்த உண்மையை நிரூபிக்கும் வகையில், அவர் பார்லிமெண்டரி கட்சித் தலைவர் பதவியை ராஜினாமா செய்யாமல் மீண்டும் தானே பிரதமராக வருவதற்குப் பெரும்பான்மை யிருப்பதாகப் பிரகடனப்படுத்தினார்.

அப்பொழுதுதான் ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்களிட மிருந்து தேசாய்க்கு ஒரு கடிதம் வந்தது.

என் அன்புள்ள மொரார்ஜி பாய்,

ஜனதா கட்சியையும், நாட்டையும் பீடித்துள்ள நெருக்கடியை ஆழ்ந்த கவலையுடன் நான் கவனித்து வருகிறேன். பிரதமர் பதவியிலிருந்து ராஜினாமா செய்ததின் மூலம் நீங்கள் சரியான வழியில் ஒரு நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள். அதற்கு அடுத்த நியாயமான நடவடிக்கையை இப்போது எடுப்பீர்கள் என்று நம்புகிறேன். ஜனதா பார்லிமெண்டரி கட்சித் தலைமைப் பதவியிலிருந்து விலகி, அதன் மூலம் ஜெகஜீவன்ராம் பிரதமராவதற்கு வசதி செய்வீர்கள் என நம்புகிறேன்.

இந்தக் கடிதம் எழுதிய ஜே.பி. அவர்கட்கு தேசாய் தந்த மதிப்பு என்ன?

தானே மீண்டும் பிரதமராக வர வேண்டும் என்பதற்காக ஆள் சேர்க்கும் பணியில் தீவிரமாக இறங்கி - ஜெகஜீவன்ராமுக்கு பிரதமர் பதவிக்கான வழியை முழுமையாக அடைத்துக் கொண்டு நின்றார்.

இது நியாயமா? யோசித்துப் பார்க்க வேண்டும், விருப்பு வெறுப்பு இல்லாமல்!

நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைச் சமாளிக்க ராஜினாமா!

ராஜினாமா செய்த பிறகு - ராஜினாமா செய்ததையே ஒரு தந்திரமாகக் கொண்டு மறுபடியும் தானே பிரதமர் பதவிப் பொறுப்பேற்க அழைக்கப்பட வேண்டுமென அறிக்கைகள்!

தேசாயின் இந்தப் போக்கை வன்மையாகக் கண்டித்து ஜெகஜீவன்ராம் தெரிவித்த கருத்துக்களை 21-7-79 தினமணி - முதல் பக்கத்தில் இன்னமும் படித்துப் பார்க்க முடியும்.

தேசாயின் தலைமை - ஜெகஜீவன் ஆட்சேபம் எனக் கொட்டை எழுத்தில் வெளியிட்ட அதே தினமணியில் 22-7-79-இல் ஜெகஜீவன்ராம் பிரதமராவதற்கு வாய்ப்பு ஏற்படுத்தும் வகையில் தேசாய் விலகிக் கொள்ள வேண்டும் என்று மிஜோரம் ஜனதா கட்சி வலியுறுத்தியது என்ற செய்தியும் இடம் பெற்றிருந்தது.

மறுநாள் - திடீர் திருப்பம்!

பிரதமராக வேண்டுமென்ற தனது விருப்பத்தை மாற்றிக் கொள்ள வேண்டிய அவசியம் ஜெகஜீவனுக்கு ஏற்பட்டுவிட்டது. காரணம் தேசாயின் பிடிவாதம்! அல்லது மீண்டும் பிரதமராக

வேண்டுமென்ற துடிப்பு! வேறு வழியில்லாமல் ஜெகஜீவன்ராம் தேசாயின் நிலையை ஒத்துக் கொண்டார்.

இதற்கிடையே எதிர்க்கட்சித் தலைவர் சவானுக்கு குடியரசுத் தலைவர் முறைப்படி ஒரு வாய்ப்பு வழங்கினார்.

சவான், தன்னால் அமைச்சரவை அமைக்க இயலாது என்பதைத் தெரிவித்து விட்டார்.

தேசாய் தன்னுடைய ஆதரவாளர்களே அதிகமென்றார்! சரண்சிங் தன்னுடைய ஆதரவாளர்களே அதிகமென்றார்!

அவரவர் ஆதரவாளர்களின் விவரங்களை அளிக்குமாறு குடியரசுத் தலைவர் கேட்டுக் கொண்டார்.

பட்டியல்கள் ராஷ்டிரபதி பவனுக்குச் சென்றன! இரண்டு பட்டியல்களையும் கூட்டிப் பார்த்தால் நாடாளுமன்றத்தில் உள்ள உறுப்பினர்களுக்கு மேல் அதிகமாக முப்பது பேர் இருந்தனர்.

இரு தரப்புப் பிரதிநிதிகளும் அழைக்கப்பட்டுப் பட்டியல் சரி பார்க்கப்பட்டது. தன்னையறியாமலே சிலருடைய பெயர்களைத் தன் பட்டியலில் யாரோ சேர்த்து விட்டனர் என்று தேசாய், பிறகு வருத்தம் தெரிவித்தார்.

குடியரசுத் தலைவர் சரணுக்கு ஒரு வாய்ப்புக் கொடுத்து, நாடாளுமன்றத்தில் நம்பிக்கை வாக்குப் பெற வேண்டுமென்று கோடிட்டுக் காட்டினார்.

சரண்சிங்கும் நம்பிக்கை வாக்கிற்கு முன்னதாகவே தனது அமைச்சரவை ராஜினாமாவைக் கொடுத்துவிட்டார்.

பட்டியலுடன் வாருங்கள் என்று குடியரசுத் தலைவர் ஜனதாவையும் அழைத்தார்! ஜனதா (எஸ்) கட்சியையும் அழைத்தார். ஜனதா பட்டியலில் பெரும்பான்மையில்லை. அதனால் சரணுக்கு மட்டுமே வாய்ப்பு அளிக்கப்பட்டது. அதுவும் நிபந்தனையோடு கூடிய வாய்ப்பு! நம்பிக்கை வாக்கு பெற்றாக வேண்டுமென்று!

சரணும் நீடிக்க முடியவில்லை. வேறு வழியில்லை. குடியரசுத் தலைவர் நாடாளுமன்றத்தைக் கலைத்தார். அதிலும் பெரும்பான்மையான கட்சிகளின் கருத்தையொட்டியே கலைத்திடும் ஆணையைப் பிறப்பித்தார்.

இவை உலகமறிந்த உண்மையாக இருக்கும்போது - இத்தனையையும் மறைத்துவிட்டு, திடீரென்று ஜெகஜீவன்ரா முக்குப் பரிந்து பேசுவது போல கச்சைக்கட்டிக் கொண்டு

தினமணியில் ஒரு தலையங்கம் குடியரசுத் தலைவர் குறித்து அவ்வளவு இழிவாக எழுதியது முறைதானா?

ஜனதா அரசு தொடங்கிய காலம் தொட்டு என்றைக்காவது ஆட்சியாளரிடத்தில் ஒற்றுமை நிலவியதுண்டா?

ஜனதா கட்சியிடம் மக்கள் பெரும் நம்பிக்கை வைத்திருந்தார்கள். ஆனால் அது அவர்களைக் கைவிட்டு விட்டது. என்று ஜெயப்பிரகாஷ் வெளிப்படையாகவே மிக்க உருக்கத்துடன் கூறிய வார்த்தைகளை தினமணி ஆசிரியர் பெரியவர் சிவராமன் புறக்கணித்துவிட்டு - குடியரசுத் தலைவர் மீது பழி சுமத்துவது எந்த வகையில் நீதியாகும்?

பிரதமர் பதவியை ராஜினாமா செய்த தேசாய், அந்தப் பதவி பாபு ஜெகஜீவன்ராமுக்குக் கிடைத்திருக்க வேண்டிய சந்தர்ப்பத்தைக் கெடுத்து விட்டார் என்பதுதான் உண்மை!

இதனைப் புரிந்தும் புரியாதவர் போலப் பழியோரிடம்! பாவமோரிடம்! என்பதற்கேற்ப குடியரசுத் தலைவர் சஞ்சீவி ரெட்டியை நோக்கி அக்கினிக் கணைகளைப் பொழிவது நேர்மையும் ஆகாது! நாகரிகமும் ஆகாது!

ஃ புத்தித்தாழ்வு
ஃ விவேகமற்ற முடிவு
ஃ சிந்தனையற்ற ஆணவம்
ஃ கொடியவர்
ஃ பொய்யர்
ஃ தீயஉள்ளம் படைத்தவர்
ஃ அற்ப மனிதர்

அடடாவோ! தன்னைச் சர்ச்சைகளுக்கு ஆட்படுத்த வேண்டாம் என்று எல்லாக் கட்சிகளையும் பார்த்துப் பணிவுடனும் கனிவுடனும் கேட்டுக்கொண்டு - கடமையாற்றிய ஒரு மனிதரை, அதுவும் இந்தியாவின் மிக உயர்ந்த பொறுப்பான குடியரசுத் தலைவர் பீடத்தில் அமர்ந்திருப்பவரை நோக்கி இத்தகைய சொற்களை அரசியலில் முதிர்ந்த பெரியவர்கள் வீசுவது என்பது சகித்துக்கொள்ள முடியாத வேதனையாகும்.

அன்புள்ள,

மு. க.
(28-08-1979)

690. புதிய உறவல்ல! பழைய உறவின் தொடர்ச்சியே!

உடன்பிறப்பே,

கடிதவாயிலாக உன்னோடு தொடர்புகொள்ளும் வாய்ப்புச் சிலநாட்களாக எனக்குக் கிட்டவில்லை. அதில் உனக்குக் கோபம்தான்! அந்தக் கோபத்தை அறவே தணிக்குமளவுக்கு மகிழ்ச்சியான செய்தியல்லவா உனக்குத் தரப்பட்டிருக்கிறது. தி.மு.கழகத்தை அழித்து விடவேண்டுமென்று கங்கணம் கட்டிக்கொண்டு - கழகத்தின் கட்டுப்பாட்டினை மீறி வேண்டுமென்றே பொதுக்கூட்டங்களில் பேசித் தங்களைத் தாங்களே வெளியேற்றிக் கொண்டவர்கள் - இறுதியில் உடன்பாடு என்ற ஏற்பாட்டின்மூலம் ஒரு நாடகம் நடித்துக் கழகத்தைத் தனிமைப்படுத்திவிடலாம் என்று சூதுத் திட்டமொன்றினை வகுத்து அதிலும் தோல்வி காணுகிற அளவுக்கு கரிபூசிக் கொண்டல்லவா நிற்கிறார்கள்! அதுகண்டு நீ மகிழ்ச்சியில் திளைப்பது இயற்கைதானே!

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு மறுதேர்தல் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டவுடனேயே இந்திரா காங்கிரசுக்கும் - தி.மு.கழகத்துக்கும் தேர்தல் உடன்பாடு ஏற்படுவதற்கான சூழ்நிலைகள் உருவாகிவிட்டன.

1969-இல் தொடங்கிய இந்த உறவு இடையிலே தொய்வு விழுந்த நிலைக்கு உள்ளாயிற்று எனினும் 1969-ஆம் ஆண்டிலே உதயமான உறவின் தொடர்ச்சியாகத்தான் இதனைக் கருதிக் கொள்ளவேண்டும்.

1969-ஆம் ஆண்டு முகிழ்ந்த அந்த உறவைத் தடுத்திட மூதறிஞர் இராஜாஜி அவர்கள் என் இல்லத்திற்கே வந்து நீண்டநேரம் என்னுடன் வாதாடினார். கொடுத்த வாக்கினைக் காப்பாற்றுவதும் - கொண்ட உறவில் உறுதியாக நிற்பதும்தான் தி.மு.கழகத்தின்

பண்பு என்பதை அன்று நிலைநாட்டினோம். நம்முடன் உறவு கொண்ட கட்சிகள், அவர்களாகச் சில முடிவுகளை எடுத்து நமது உறவை விலக்கிக் கொண்டிருப்பார்களே தவிர, நம்மைப் பொறுத்தவரையில் எந்தக் கட்சியுடன் உறவு கொண்டாலும் இருதயசுத்தமுடன் - அந்தக் கட்சிகளின் வெற்றிக்குப் பாடுபட்டிருக்கிறோம் என்பது மட்டுமல்ல; நாமே அவர்களை விட்டுப் பிரிந்து கொள்ளும் முயற்சிகளை மேற்கொண்டது கிடையாது என்பதை நாடறியும்.

அப்படி ஒரு அரசியல் நாணயத்தைக் கட்டிக் காத்துவரும் நமக்கும் இந்திரா காங்கிரசுக்குமிடையே நெருக்கடிநிலைப் பிரகடனத்தின் காரணமாக உறவு அறுந்துபோயிற்று!

உறவு கொண்டிருந்தபோது உறுதியாக இருந்தது போலவே - கருத்து மாறுபாடு ஏற்பட்டபோதும் உறுதியோடு நின்றோம்.

மத்தியிலும், மாநிலத்திலும் ஆட்சி மாற்றங்கள் ஏற்பட்டன. மத்தியில் ஆட்சிப் பொறுப்பு ஏற்றவர்களிடம் ஒற்றுமையில்லை! இங்கே மாநிலத்தில் ஆட்சிப் பொறுப்பேற்றவர்களிடமோ உண்மை என்ற சொல்லுக்கே இடமில்லை!

மத்தியிலும் சரி! மாநிலத்திலும் சரி! மக்களின் நல்வாழ்வுத் திட்டங்களில் காட்டப்படவேண்டிய அக்கறையைக் காட்டிலும் மாற்றுக் கட்சித் தலைவர்களைப் பழிவாங்குவதிலேயே மும்முரம் காட்டப்பட்டது. இன்னமும் அதே நிலைதான்!

மத்திய அரசு, இந்திராகாந்தி அம்மையாரைக் கைது செய்தபோதும் - கமிஷன்களைப் போட்டபோதும் நமது கழகத்தின் சார்பில் நமது அதிருப்தியைத் தெரிவித்திருக்கிறோம். சிக்மகளூர் தேர்தலில் வெற்றிபெற்ற திருமதி இந்திராகாந்தி அவர்களைப் பாராளுமன்றத்திலிருந்து வெளியேற்றியது மிகக் கடுமையான முடிவு என்று கூறி நமது மறுப்பை வெளிப்படுத்தியிருக்கிறோம். அவர்கள் மீது தனிக் கோர்ட் அமைத்து விசாரிக்க வேண்டும் என்ற தீர்மானம் வந்தபோது நமது நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர்கள் அதனை ஏற்க இயலாத சூழ்நிலையைத் தெரிவித்து வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாது நடுநிலைமையே வகித்துள்ளனர்.

நாம் கொள்கைகளின் அடிப்படையில் பிரச்சினைகளை அணுகுபவர்கள் என்பதை இந்திரா காங்கிரசின் தலைவர்களும் -

முன்னணியினர் பலரும் உணர்ந்தது மட்டுமல்ல, பாராட்டவும் செய்தனர். தொய்வு விழுந்த உறவு மீண்டும் தொடர வேண்டுமெனவும் தமிழ்நாட்டில் மட்டுமல்லாது, மற்ற மாநிலங்களில் உள்ள இந்திரா காங்கிரஸ் தலைவர்கள் பலரும் செயல்வீரர்களும் விரும்பினர்.

நிலையானதாகவும் - நேர்மையானதாகவும் இருந்த ஒரு நல்லுறவு பாழ்பட்டுப் போனதுமன்றி, பகை மூட்டம் எழுகின்ற அளவுக்கு மாறிவிட்டதே என்ற வருத்தமும், வேதனையும் என் நெஞ்சைக் குடைந்து கொண்டேயிருந்தது! புகைவிட்டுக் கொண்டிருந்த பகை இடையிலிருந்த சிலரால் பொங்கி வழியும் எரிமலையாகக் கூட மாற்றப்பட்டது.

பிரச்சினையின்பாற்பட்ட கருத்து வேறுபாடுகளே தவிர - பின்னிலிருந்து குழிபறிக்கும் சதியல்ல என்ற உண்மையை இந்திராகாந்தி அம்மையார் உணர்ந்து கொள்ள நமது எதிரிகளே தங்களையறியாமல் உதவியிருக்கிறார்கள்!

தஞ்சை இடைத் தேர்தலில் நடத்திய வஞ்சக நாடகத்தின் திரை கிழிக்கப்பட்டது! மொரார்ஜி மந்திரிசபையைக் காப்பாற்ற தன்னுடைய உறுப்பினர்களைத் தந்தது மட்டுமல்லாமல் வேறு கட்சி உறுப்பினர்களையும் விலைக்கு வாங்கிய மர்மங்கள் மைதானத்திற்கு வந்தன!

அடுத்து சரண்சிங்கிற்கு ஆதரவு! அவரது அமைச்சரவையிலே இரண்டு பேருக்கு இடம் பெற்றது!

அந்த அமைச்சரவை நாடாளுமன்றத்தைக் கலைக்க யோசனை கூறியது!

அதற்குள் பாபு ஜெகஜீவன்ராமுக்கு ஆதரவு தருவதாக குடியரசுத் தலைவருக்குத் தகவல் தந்தது!

உங்கள் கட்சி அமைச்சர்களும் சேர்ந்துதானே நாடாளுமன்றத்தைக் கலைக்கும் பரிந்துரையைச் செய்துள்ளனர் என்று குடியரசுத்தலைவர் நினைவுபடுத்தியதும் தலையை குனிந்துகொண்டது!

தி.மு.க.வும், அ.தி.மு.க.வும் தேர்தல் உடன்பாடுகொள்ளும் என்ற செய்தியின் மூலம் இந்திராவை மிரட்டி அ.தி.மு.க., இந்திரா காங்கிரஸ் உடன்பாடு கொள்ள ரகசிய பேரம் நடத்தியது!

இந்த சித்து வேலைகள் அத்தனையும் எத்துவேலைகள் என்றறிந்த இந்திராகாந்தி அம்மையார் - எந்த உறவில் உறுதியிருக்கும் என்பதை முன்பே தெரிந்து வைத்திருந்த நிலையில் - நான் டெல்லி சென்று அவர்களுடன் விவாதித்த சில நிமிடங்களிலேயே தி.மு.கவுடன்தான் இந்திரா காங்கிரசுக்கு உறவு என்று திட்டவட்டமாக அறிவித்தார்.

அம்மையாரின் கருத்துக்கு உரமூட்டும் வகையில் தமிழ்நாட்டு இந்திரா காங்கிரஸ் கட்சியின் தலைவர்களும், மற்ற மாநிலத்து இந்திரா காங்கிரஸ் தலைவர்களும் துணை நின்றிருக்கிறார்கள்.

நமக்குக் கிடைத்த கடந்தகால அனுபவங்களும் - இப்போது நாம் எடுத்துள்ள முடிவைத்தான் நியாயப்படுத்துகின்றன.

இடையில் சில வேதனையான நிகழ்ச்சிகள்! இருப்பினும் நாட்டு நலனுக்காக அரசியலில் உருவாகும் மாறுதல்களுடன் நம்மைப் பிணைத்துக் கொண்டே தீரவேண்டும்!

உடன்பிறப்பே! இந்த உறவு நமது எதிரிகளுக்கு எரிச்சலூட்டத்தான் செய்யும்!

இருதுருவங்கள்! இணையவே முடியாது! இப்படி எண்ணிக் களித்தவர்கள் ஏமாந்துபோய் எரிதழலை எழுத்தாக்கிக் கொண்டிருக்கின்றனர்! பேய்க்குரலைப் பேச்சாக்கிக் கொண்டிருக்கின்றனர்! அவர்கள் ஆத்திரப்படுகிறார்கள் என்றால் ஆவேசமுறுகிறார்கள் என்றால் - அது நமக்குக் கிடைத்துள்ள நல்லுறவையும் - நமது அணிக்குக் கிடைக்க இருக்கிற வெற்றிகளையும் எண்ணி அவர்கள் பதறிப் போயிருக்கிறார்கள் என்றுதான் எடுத்துக்கொள்ள வேண்டும்.

நாடாளுமன்றத் தேர்தலில் நமது அணி வெற்றிபெற இப்போதே ஆயத்தமாக்கிக் கொள்!

ஒருசில பத்திரிகைக்காரர்கள் - பல்வேறு வித்தைகளைக் காட்டுவார்கள்! பாத்திரம் தேய்க்கிற வேலம்மாளை விட்டுக்கூட சிவராமன் போன்ற மிகப் பெரிய ஆசிரியர்கள் பேசச் சொல்கிறார்கள்! அறிக்கைகளைத் திரித்து வெளியிட்டு திசை திருப்பப் பார்ப்பார்கள்! பேட்டிகளைக்கூட கலகமூட்டும் பாணியில் பிரசுரிப்பார்கள்!

நம்முடன் இருந்த தோழமைக் கட்சியினர் சிலர் விலகிச் சென்றிடக்கூடும். நாம் அவர்களுக்கு நேசக்கரம்

நீட்டிக்கொண்டேதான் இருக்கிறோம். நமது முயற்சி பலனளிக்காவிட்டால் - அதற்காக அந்தத் தோழமைக் கட்சிகளுடன் வார்த்தைப் போராட்டங்களைத் தொடங்கவேண்டாம்!

பிரச்சினையைப் பொறுத்து - கொள்கைகளைப் பொறுத்து - அவர்கள் எடுத்துவைக்கும் வாதங்களைப் பொறுத்து கழகத் தலைமையின் சார்பில் பதில்கள் அளிக்கப்படும். எந்த நிலையிலும், உடன்பிறப்பே! நீ ஆத்திரப்பட்டோ, அவசரப்பட்டோ பதிலுக்கு பதில் என்ற படலங்களில் இறங்கத் தேவையில்லை.

இந்திரா காங்கிரஸ் - தி.மு.க. - இந்திய யூனியன் முஸ்லிம் லீக் - என்ற அணி உருவாகியிருக்கிறது! வேறு கட்சிகளும் இந்த அணியில் சேரக்கூடும்! அல்லது தனித்து தி.மு.க.வுடன் உடன்பாடு வைத்துக்கொள்ளக்கூடும்!

வெற்றி நமது குறிக்கோளாக இருக்க வேண்டுமே தவிர - வேறெந்தத் திசையிலும் கவனம் செல்லக்கூடாது!

அன்புள்ள,

மு. க.

(21-09-1979)

691. பீம்சிங்! இது என்ன புதுக் குழப்பம்!

உடன்பிறப்பே,

ஆகா! ஊகு! ஒழித்தே தீருவேன் மதுவை! அதற்காக ஒரு தீவிரச் சட்டம் கொண்டு வந்துவிட்டேன்! நீண்டகால சிறைத் தண்டனை முதல் ஊரை விட்டு கடத்தி விடுதல் வரையில் பயங்கரமான சட்டப் பிரிவுகளடங்கிய கொள்கைரீதியான பெரியார், அண்ணா வழியைப் பின்பற்றி மது என்ற பெயரே அகராதியில் இல்லாமல் செய்துவிட்டு மறுவேலை பார்த்து, தாய்க்குலத்தின் கண்ணீரைத் துடைத்து அதிகாரிகள் அமைச்சர்கள் குடித்தாலும் சட்டம் தன் கடமையைச் செய்யும். ஏனென்றால் மனிதனுக்காகத்தான் சட்டமே தவிர, சட்டத்திற்காக மனிதனல்ல என்ற தத்துவத்தை நிலைநாட்ட வேண்டி இந்தத் தீவிரச் சட்டம் எதிர்க்கட்சிகளைப் பழிவாங்கவும், ஏழை மக்களுக்குப் பெருந்தீமை விளைவிக்கவும் கொண்டு வரப்படுகிற சட்டமென்றும், மதுவிலக்கை அமல்படுத்த ஏற்கனவே இருக்கிற சட்டங்கள் போதாதா என்றும் முன்னாள் முதல்வரும் இந்நாள் எதிர்க்கட்சித் தலைவரும் சட்டமன்ற உறுப்பினருமான கருணாநிதி என்னதான் எடுத்துச் சொன்னாலும் அவருக்கு ஏழைகளின் மீது அன்பில்லை - மதுவிலக்கு கொள்கையில் நம்பிக்கையில்லை - ஒரு காலத்தில் மதுவிலக்குச் சட்டத்தையே ஒத்தி வைத்தவர் என்பதை என் ரத்தத்தின் ரத்தங்கள் மறந்துவிடக்கூடாது என்று ஏன் சொல்கிறேன் என்றால் மதுவினால் ஏற்படும் கெடுதியை மகாத்மா காந்தியும், ராஜாஜியும், அமரர் பெரியார், அமரர் அண்ணா ஆகியோரும் எத்தனையோ விளக்கங்களுடன் எழுதியும் பேசியும் வந்திருக்கும்போது ஒருமுறை குடித்தால் என்ன தண்டனை இரண்டாவது முறை குடித்தால் என்ன தண்டனை நாடு கடத்துவது கூட ஒரு தண்டனையாக இருக்கலாம். அதற்காகத்தான் மிகத் தீவிரமாக மிக மிக மிகத் தீவிரமாக மதுவிலக்கிற்கான புதிய சட்டத்தைக் கொண்டு வந்து இந்த உலகமே எதிர்த்தாலும் இமயமே இடம் பெயர்ந்தாலும், சமுத்திரமே வற்றிப் போனாலும்

அண்ணாயிசத்தை கேப்டலிசத்துடன் கலந்து சோஷலிசத்தையும் சேர்த்துப் பிசைந்து தரக்கூடிய இந்த ராமச்சந்திரன் இருக்கும் வரையில் அ.தி.மு.க.வுக்கு அழிவில்லை என்பதை இந்தக் கடற்கரையில் பெரியார் விழாவில் தெரிவித்துக் கொண்டு, குடிப்பவர்களை இனிமேல் கைது செய்யக்கூடாது என்று அண்ணா நாமம் வாழ்க! என்று கூறி என் அன்னையின் மீது ஆணையிட்டுக் கூறுகிறேன்.

உடன்பிறப்பே, தமிழ்நாட்டுக்கென்று தமிழ் மக்கள் செய்த தவப்பயனாக(?)க் கிடைத்த முதலமைச்சர், மதுவிலக்குத் தீவிரச் சட்டத்தையும் உயிரோடு உலவ விட்டுக்கொண்டு குடித்ததற்காக யாரையும் கைது செய்யக்கூடாது என்று ஆணை பிறப்பித்துள்ளார். அதே நேரத்தில் கள்ளச் சாராயப் பேர்வழிகளை விடமாட்டேன் என்றும் முழங்கியிருக்கிறார். மதுவிலக்கிற்கு என தீவிரமான சட்டம் வந்தபோது அந்தச் சட்டத்தால் ஏற்படக்கூடிய விளைவுகள் சமாளிக்க முடியாததாக இருக்கும். எனவே முன்பு இருக்கிற சட்டமே போதுமானது என்று நாம் எடுத்துச் சொன்னோம். நிதியமைச்சர் மனோகரன் அவர்கள்கூட எனக்கு விளக்கமளித்து ஒரு வேண்டுகோளும் விடுத்தார். வெளிநாடு சென்றுள்ள முதல்வர் திரும்பி வந்ததும் எதிர்க்கட்சித் தலைவரின் கருத்துக்களும், மற்ற கருத்துக்களும் பரிசீலிக்கப்பட்டு அதன் பிறகுதான் அவசரச் சட்டத்தை சட்டசபையில் சட்டமாக்குவோம் என்ற கருத்துப்பட அறிக்கை வெளியிடப்பட்டது நிதி அமைச்சரால்!

ஆனால் நடந்தது என்ன? எதிர்க்கட்சிகளின் கருத்துகள் எள்ளி நகையாடப்பட்டு தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால் என்ற நிலையில் சட்டத்தை நிறைவேற்றினார்கள்!

இப்போது ஒரு லட்சம் பேர் சிறையில் கைதிகளாக! குடித்ததற்காக! லட்சத்திற்கு மேற்பட்ட மதுவிலக்குச் சட்ட மீறல் வழக்குகள்! எல்லாக் கைதிகளும் விடுதலையாம்! வழக்குகள் வாபசாம்! சரி, சட்டத்தின் கதி என்ன? சட்டசபை கூடுமா? சட்டம் திருத்தப்படுமா? சட்டசபை ஒன்று இருக்கிறது என்ற நினைவே இல்லாமற் போய்விட்டதே! இருக்கவே இருக்கிறார் கவர்னர்! அவர் மூலம் ஒரு அவசரச் சட்டமாவது வருமா?

குடித்திருந்தால் மட்டும் யாரையும் கைது செய்யக்கூடாது! இது முதல்வரின் ஆணை! அதற்கான சட்டத்திருத்தம்

இல்லாத நிலையில் ஆணையை எப்படிச் செயல்படுத்துவது? சட்டமும் இருக்கும்! அந்தச் சட்டத்தைப் பொருட்படுத்த வேண்டாமென்று முதலமைச்சரின் ஆணையும் இருக்கும்! குற்றமென்றால் கைது செய்யப்பட வேண்டுமே! கைது செய்யாதே என்றல்லவா கடற்கரையில் முதல்வர் கட்டளை பிறப்பித்துள்ளார்! குடிக்கலாம்! கைது செய்யமாட்டார்கள்! அப்படியென்றால் குடிப்பதற்காக மதுவோ, சாராயமோ தமிழ்நாட்டில் தடைக்கு உட்படுத்தப்படமாட்டா என்று பொருளாகிறது! சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால் எம்.ஜி.ஆரின் அறிவிப்பின்படி மதுவிலக்குச் சட்டம் முழுமையாக ரத்து செய்யப்படுகிறது! சட்டம் ஏட்டில் இருக்கும்! ஆனால் சகலமான ஜனங்களும் கள்ளோ, சாராயமோ குடிக்கலாம்! இப்படி ஒரு அறிவிப்பு! அதேசமயம் இன்னொரு முரண்பாடு! யாரும் கள்ளச் சாராயம் காய்ச்சக்கூடாது! கள்ளச்சாராயம் காய்ச்சினால் அவர்கள் தண்டனையிலிருந்து தப்ப முடியாதாம்! அப்படியானால் இனிமேல் அந்த சாம்ராஜ்யாதிபதிகள் கள்ளத்தனமாகச் சாராயம் காய்ச்சாமல் கலெக்டர் ஆபீஸ்களுக்கு முன்பு, எஸ்.பி. ஆபீஸ்களுக்கு முன்பு - ஏன்? செயின்ட் ஜார்ஜ் கோட்டைக்கு முன்பு பகிரங்கமாகக் காய்ச்சலாம் என்று அர்த்தமோ, என்னவோ!

குடித்தால் குற்றமில்லை!
குடிப்பதற்கு மது கிடைப்பதால்தானே குடிக்கிறார்கள்!
பிறகேன் கள்ளச் சாராயம் மட்டும் காய்ச்சக்கூடாது!

அப்படியானால் கள்ளுக்கடை, சாராயக்கடைகள், ஒயின்ஷாப்புக்கள் ஏலம் விடப்படும் என்று புது அறிக்கை வரப் போகிறதா?

பழைய சினிமா படமொன்றில் பழம்பெரும் நடிகர் எஸ்.ஏ. நடராசன், பீம்சிங்! இது என்ன புதுக் குழப்பம்? என்று தொடர் வசனமொன்றைப் பேசி, திரையரங்கத்தையே சிரிப்பில் ஆழ்த்துவார்! எம்.ஜி.ஆரின் அறிவிப்பு, அந்த வசனத்தைத்தான் நினைவுபடுத்துகிறது.

அன்புள்ள,

மு. க.
(23-09-1979)

692. கசப்பினை மறப்போம்! கை கோர்த்து எழுவோம்!

உடன்பிறப்பே,

திராவிட இயக்கத்தைக் காங்கிரஸ் கட்சியின் கன்றுக் குட்டியாக்கி விட்டேனாம்! மானமில்லாதவனாம்! அற்பத் தனமான அரசியல் சுயநலம் கொண்டவனாம்! தலைக்கனம் கொண்டவனாம்! தன்மானத்தையும் - தமிழ்மானத்தையும் விற்பதற்கென்றே தமிழ்நாட்டில் இருக்கிற கயவன்தான் கருணாநிதியாம்! விமானத்தில் தமிழ்மானத்தை எடுத்துச் சென்று டெல்லியில் விற்றுவிட்டு இப்போது அசோகவனத்தில் சீதையைக் கண்ட அனுமாரைப்போல ஆடுகிறேனாம்! பாடுகிறேனாம்! மானங்கெட்டவனாம்! மனசாட்சி இல்லாதவனாம்! பற்பசை விளம்பரத்திற்கு நிற்பதுபோல் பல் எல்லாம் தெரியக்காட்டி பழைய உறவின் தொடர்ச்சியென்று பாயிரம் பாடுகிறேனாம்! அம்பாளின் அருட்கருணை கிட்டிவிட்டால் அனைத்தும் பலிக்கும் என்ற நாசநினைப்பு கொண்டவனாம்! இந்திரா காங்கிரஸ் - தி.மு.க. கூட்டணி என்பது காகிதப் பூவாம்!

எம்.ஜி.ஆர். அமைச்சரவையில் இடம் பெற்றிருக்கும் பேரறிவாளரான ஒருவர் அவர்களது அதிகாரபூர்வமான கட்சி ஏட்டில் என்மீது செய்துள்ள அர்ச்சனையின் தொகுப்புத்தான் இது!

உனக்கு இந்தக் கடுமையான சொற்கள் ஆத்திரத்தை மூட்டும் - எனக்குச் சிறிதுகூட சினம் எழவில்லை!

அந்த அன்புத் தம்பிக்கு என்னை வாழ்த்தியும் சொற்களை வாரியிறைக்கும் திறம் இருந்தது! இப்போது வசைபாடவும் சொற்களைத் தேர்ந்தெடுக்கும் உள்ளத் துணிவு இருந்திடுகிறது! எப்படியாவது எனது நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களின் அன்புக்குப் பாத்திரமானவராக அந்த அமைச்சர் தம்பி வளமாக வாழ்ந்தால் எனக்கு மகிழ்ச்சிதான்!

இந்திரா காங்கிரசோடு உடன்பாடு செய்து கொண்டதால் நான் தன்மானமிழந்தவனாகி விடுகிறேன் என்றால், இதுவரை அந்தக் கட்சியுடன் உடன்பாடு செய்து கொண்டிருந்த அ.தி.மு.க. தன்மானத்தை இழக்கவில்லையா?

இருந்தால் அல்லவா இழப்பதற்கு? என்று அந்த அமைச்சர் என்மீது கணை தொடுக்கக் கூடும்!

உடன்பாட்டை குறை கூறவில்லை! உன் கட்சிக்கும் உன் தோழமைக் கட்சிக்கும் சேர்த்துப் பதினேழு இடம்தானே! அதனால் தான் தன்மானமும் - தமிழ் மானமும் போய்விட்டது என்கிறேன் என்று அந்த அமைச்சர் பெருமகனார் - ஆமாம் என் பழைய தம்பி - வாதிடக் கூடும்!

தஞ்சை நாடாளுமன்றத் தொகுதியில் அ.தி.மு.க. வெற்றிபெற்ற இடத்தில் தனித்து நிற்பதற்கு அஞ்சி, இந்திரா காந்தியை நிற்கச் சொல்லி அழைத்து, நீ எனக்கு நண்பனா? விரோதியா? என்று மொரார்ஜி கேட்ட ஒரு கேள்விக்கே குலைநடுங்கிப் போய் இந்திரா காந்தி அம்மையாரின் காலை வாரிவிட்டு - பிறகு உன் ஆதரவு தேவையில்லையென்று சொல்லியும் கூட, வலியச் சென்று இந்திரா காங்கிரஸ் வேட்பாளருக்கு ஆதரவு கொடுத்ததே எம்.ஜி.ஆரின் கட்சி, அது மானமறவர் செயலாம்! தமிழ்மானம் தன்மானம் காக்கும் பணியாம்! இடஒதுக்கீட்டில் சற்று ஏறத்தாழ இருப்பது மானமற்ற உடன்பாடாம்!

சொல்வது அமைச்சரல்லவோ? அவர்கள் திருவாயி லிருந்து உதிர்வதெல்லாம் தேன்துளிகள் தானே! கொள்கை முத்துக்கள்தானே! வெறும் உமிழ் நீர்ப்பொழிவு என்று உரைத்திடப்போமோ!

திராவிட இயக்கத்தை காங்கிரஸ் கட்சியின் கன்றுக் குட்டியாக்கிவிட்டேனாம்! கவலைப்படுகிறார் தம்பி அமைச்சர்!

பரவாயில்லை! அவர்களைப்போல நான் திராவிட இயக்கத்தை பன்றிக் குட்டியாக்கவில்லை என்பதை அமைச்சரே ஒத்துக்கொண்டு சான்றிதழ் வழங்கியமைக்கு, வயதில் இளையதம்பி என்றாலும் வணக்கத்துடன் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். தலைக்கனம் கொண்டவனாம் நான்! உடன்பிறப்பே!

இந்தச் சொல்வரிசையை உன்னால் தாங்கிக்கொள்ள முடியாதுதான்!

என் தலைவனையன்றோ தலைக்கனம் கொண்டவன் என்று ஒரு அமைச்சர் எழுதுகிறார்! அதனை நீ பொறுத்துக்கொள்ளலாம். இந்த இயக்கத்தின் நாடி நரம்புகளாம் செயல்வீரர் பட்டாளமான நாங்களும் பொறுத்திடல் வேண்டுமோ? என் உடன்பிறப்பே! நீ எரிதழலைக் கண்களில் தேக்கிக் கேட்கிறாய். புரிகிறது உன் உணர்ச்சி எனக்கு!

தலைக்கனம் என்பதற்கு வேறு ஒரு பொருள் கொண்டால் உன் சீற்றம் பறக்கும்! கோபம் குளிரும்! முட்டைக்குள் வெண்கருவும், மஞ்சள் கருவும் இருப்பதால்தானே முட்டை கனமாக இருக்கிறது! அதேபோல் தலைக்குள் இயற்கையாக இருக்க வேண்டியவை இருந்தால் அது கனமாகத்தானே இருக்கும்!

தலைக்கு மேலே உள்ளவை உதிர்ந்து கொண்டிருக்கின்றன எனக்கு! நான் அதுபற்றிக் கவலை கொள்ளவில்லை. ஆனால் உள்ளே கனமாக இருக்க வேண்டியது கலங்காமல், குழம்பாமல் இருப்பதால் அந்த இளம் அமைச்சர் சொன்னதிலும் இப்படியொரு பொருள் உண்டு என எண்ணி மகிழத்தான் வேண்டும்!

சிலருக்குத் தலை, வெறுங்கூடுகளாக - முட்டை ஓடுகளாக இருப்பதுண்டு! அவர்கள் யாரென்று அறியாதவரல்ல அமைச்சர் தம்பி!

அனுமான்
கயவன்
அம்பாள் பக்தன்

இந்த வார்த்தைகளுக்காகக்கூட நீ ஆத்திரப்படத் தேவையில்லை!

இதே அமைச்சர் என்னைத் தலைவனாக ஏற்றுக் கொண்டிருக்கும்போது என்னை இதய தெய்வம் என்றும் - இறைவனே! என்றும் போற்றி எழுதிய கடிதங்களை இப்போது ஒருமுறை எடுத்துப் படித்துப் பார்த்துக் கொள்கிறேன். அந்த வாழ்த்துகள் இன்றைய வசவுகளை வெற்றி காணுகின்றன!

இந்திரா காந்தி அம்மையார் அசோகவனத்துச் சீதையாம்! நான் அவர்களைக் கண்டு வந்த அனுமனாம்! அமைச்சர் அந்தப் பொருள்பட எழுதுகிறார்!

இப்படித்தான் ஒரு அமைச்சர் என் அமைச்சரவையில் இருந்தவர், காரைக்குடி கூட்டத்தில் இந்திராவானாலும் சரி - சந்திராவானாலும் சரி! என்று காரப்பிடி பிடித்து - பிறகு அதற்காக நானும் நண்பர் மாதவனும் இந்திராகாந்தி அம்மையாரிடத்தில் நேரிலேயே வருத்தம் தெரிவித்துக் கொண்டோம்! இப்போது அதே அமைச்சர், எம்.ஜி.ஆரின் அத்யந்த அமைச்சராகத் திகழ்கிறார்!

உடன்பிறப்பே! இந்திரா காங்கிரசை முதலில் எதிர்த்தோமாம்! இப்போது உடன்பாடு கொள்கிறோமாம்! இது முரண்பாடாம்! இப்படிச் சில புதிய காந்தாரிகள் அரசியலில் புறப்பட்டிருக்கிறார்கள்.

1977-க்கு முன்பு புதுவைத் தேர்தலில் காமராசரின் பழைய காங்கிரசும் இந்திரா காங்கிரசும் உடன்பாடு கொண்டு போட்டியிட்டன!

இரு காங்கிரசுக்குமிடையே 1969 முதல் வளர்ந்திருந்த பகை எவ்வளவு? ஆனாலும் இந்திரா காந்தியும், காமராசரும் - சென்னையிலிருந்து ஒரே ஹெலிகாப்டரில் புதுவைத் தேர்தல் பிரச்சாரத்துக்குச் சென்றனர்!

அப்போது நண்பர் எம்.ஜி.ஆர். கேட்டார், யார் கொடுத்த வரிப்பணத்தில் நீங்கள் தேர்தல் பிரச்சாரத்துக்கு ஹெலிகாப்டரில் போகிறீர்கள்? என்று!

அ.தி.மு.க.வின் மற்றொரு பெருந்தலைவர் இந்திராகாந்தியைக் கைது செய்யவேண்டுமென்று அப்போது பேசினார். எல்லாமே அன்றைய தினம் ஏடுகளில் வெளிவந்தன.

பிறகு அரசியலில் மாற்றங்கள்! 1977 நாடாளுமன்றத் தேர்தலில் இந்திரா காங்கிரஸ் - அ.தி.மு.க. - முஸ்லிம் லீக் - இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சிகள் உடன்பாடு செய்து கொண்டு போட்டியிட்டன.

அடுத்து சில மாதங்களுக்கெல்லாம் தமிழ்நாட்டில் சட்டமன்றத் தேர்தல்! அதில் அ.தி.மு.க.வும் மார்க்சிஸ்டுக் கட்சியும் மற்ற கட்சிகளும் கூட்டணி சேர்ந்தன!

அ.தி.மு.க., இந்திரா காங்கிரசை எதிர்த்தது மட்டுமல்ல, அவர்களுடைய ஏடுகளில் காரசாரமாக விமர்சனங்களும் செய்யப்பட்டன.

ஓய்வுபெற்ற நீதிபதி நாராயணசாமி முதலியார் அவர்களே இந்திரா காங்கிரஸ் ஆட்சியைச் சாடி, இந்திரா காந்தியை இடித்துரைத்து அண்ணா இதழில் ஒரு நீண்ட கட்டுரையே எழுதினார்.

அவர் அமைச்சரான பிறகும் அரசின் சார்பில் சட்ட மன்றத்தில் பேசும்போது இந்திரா ஆட்சிக்காலத்தை இருண்ட காலம் என்று வர்ணித்தார்!

அதற்குப் பிறகுதான் தஞ்சை இடைத்தேர்தலில் வலியச் சென்று இந்திரா காங்கிரசுக்கு அ.தி.மு.க. ஆதரவு கொடுத்தது!

நெருக்கடி நிலையைக் கொள்கை காரணமாக நாம் எதிர்த்தோம்! இன்று நெருக்கடிநிலை இல்லை!

மத்தியில் நிலையான அரசு ஒன்றை - நித்த நித்தம் ஆட்டங் கொடுக்காத அரசு ஒன்றை - இந்திரா காந்தி அம்மையார் அவர்களால் தான் தரமுடியும்! எனவே நாம் இந்திரா காங்கிரசுடன் தேர்தல் உடன்பாடு கொண்டிருக்கிறோம்.

அமைச்சர் தம்பி எழுதியிருக்கிறார் :-

திராவிட இயக்கம் ஒன்றுபட வேண்டுமென்ற முயற்சியை முளையிலேயே கிள்ளி எறிந்துவிட்டு - இந்திராகாந்தியுடன் சேர்ந்து அற்பத்தனமான அரசியல் சுயநலத்தைப் பகிரங்கப்படுத்திக் கொண்டார் கருணாநிதி இவ்வாறு எழுதியிருக்கிறார்.

உடன்பிறப்பே! இது எவ்வளவு பெரிய பொய்! மத்திய அமைச்சர் பிஜூபட்நாயக் வந்தார். இரு கழகங்களும் தேர்தல் உடன்பாடு கொள்ள வேண்டுமென்றார்.

உடன்பாடு என்பது போதாது! இரு கழகங்களுமே இணைந்திட சம்மதிக்கிறோம்! தேர்தல் முடியும் வரையில் உடன்பாடு என இருந்துவிட்டு - பிறகு எதிர்க்கட்சியாகச் செயல்படுவது என்பது நடைமுறைக்கு ஏற்றதாக இராது! அதனால் இரு கழகங்களும் இணைவதே பொருத்தம் என்றேன்.

(1) தி.மு.கழகம் என்ற பெயரில் இணைப்பு உருவாக வேண்டும்.

(2) நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களே முதல்வராக நீடிக்கட்டும். எங்களில் யாருக்கும் அமைச்சரவையில் இடம் தேவையில்லை.

(3) பிற்படுத்தப்பட்டோரைப் பாதிக்கும் உத்தரவு திரும்பப் பெறப்பட வேண்டும்.

(4) இணைந்துவிட்ட கட்சியின் தலைமை அலுவலர்கள் யார் என்பதைப் பேசி முடிவு செய்து கொள்ளலாம்.

இதைத்தான் திரு. பட்நாயக் அவர்களிடம் குறித்துக் கொடுத்தோம்.

இந்த அடிப்படைப் பிரச்சினை குறித்துத்தான் நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களிடமும் நான் எடுத்துச் சொன்னேன்.

இந்தச் செய்திகள் எல்லாம் பத்திரிகையில் வந்தே பத்து நாட்களுக்கு மேலாகிவிட்டன.

இணைப்பு என்பது இயலாது! உடன்பாடு மட்டுமே சாத்தியம் என்று அ.தி.மு.க. தரப்பில் கூறப்பட்டது!

13-ஆம் தேதி காலை 11 மணிக்கு அரசு விருந்தினர் மாளிகையில் பட்நாயக் முன்னிலையில் நானும் எம்.ஜி.ஆரும் சந்திக்கிறோம்! அதேநாள் காலையில், எம்.ஜி.ஆர். அவர்கள் இந்திரா காங்கிரஸ் தலைவர்களை அழைத்துப் பேசிவிட்டுத்தான் வருகிறார்!

மறுநாள் 14-ஆம் தேதி வேலூர் கூட்டத்தில் எம்.ஜி.ஆர். முன்னிலையிலேயே அவரது கட்சியின் முக்கிய தலைவர்கள் என்னையும் கழகத்தையும் மிக இழிவாகத் தாக்கிப் பேசுகிறார்கள். கழகத்தைச் சேர்ந்த முன்னாள் எம்.எல்.ஏ. ஒருவரை அன்றைக்கே அ.தி.மு.க.வில் சேர்க்கிறார்கள்!

இவையெல்லாம் இணைப்புக்கோ - அல்லது உடன்பாட்டுக்கோ எம்.ஜி.ஆர். காட்டிய அறிகுறிகளா?

திராவிடர் இயக்கம் ஒன்றுபடுவதை முளையிலே கிள்ளியவர்கள் யார் என்று அ.தி.மு.க.வில் இருக்கிற உண்மைத் தொண்டர்களுக்கே நன்கு தெரியுமே!

நாட்டில் உள்ள அரசியல் கட்சிகள் அனைத்துமே அ.தி.மு.க.வின் அரசியல் நாணயத்தை உணர்ந்துதானே வைத்திருக்கின்றன.

இந்திரா காங்கிரஸ் - தி.மு.க. கூட்டணியால் (கலைஞரின் கூட்டணியால்) அ.தி.மு.க.வின் கண்ணிமை ரோமத்தைக்கூட அசைக்க முடியாது!

இதுவும் அமைச்சரின் ஆவேச எழுத்தில் ஒரு பகுதி! எண்ணியது கண்ணிமை ரோமத்தைப் பற்றி!

அமைச்சரின் இந்த அறைகூவலைக் கழக உடன்பிறப்புகளும் இந்திரா காங்கிரஸ் செயல்வீரர்களும் - முஸ்லீம் லீக் நண்பர்களும் - அமைய இருக்கும் தோழமை அணியின் தொண்டர்களும் ஏற்றுக்கொண்டு களத்தில் இறங்கத் தயாராகுங்கள்!

கண்ணிமை ரோமங்கள் அகற்றப்பட்டால் - பிறகு அந்த மனிதால் தூங்கவும் முடியாது! விழித்திருக்கும் போது இமைகளை மூடித் திறக்கவும் இயலாது! நரக வேதனை என்பார்களே, அந்த நிலை ஏற்படும்! கண்ணிமை ரோமத்தை அகற்றுவது என்பது ஒருவகை கடுமையான தண்டனை!

அதையேன் விரும்புகிறாரோ தெரியவில்லை அமைச்சர்!

அமைச்சர் நன்றாக எழுதட்டும்! இன்னும் வேகமாக எழுதட்டும்! அகராதியில் இல்லாத சொற்களைத் தேடிப் பிடித்து என்னையும் கழகத்தையும் அர்ச்சனை செய்யட்டும்! எதையும் தாங்கும் இதயம் கொண்ட நாம், இதையும் தாங்கிக்கொள்வோம்! வாழ்க வசவாளர்கள்! என்று அண்ணன் வாழ்த்தினாரே, அதுபோல் வாழ்த்துவோம்!

தேர்தல் பணிகளுக்கான பாசறைகள் இப்போதே அமையட்டும்! இடையில் எழுந்த கசப்பு உணர்வுகளை அறவே மறந்துவிட்டு, கழகத்தினரும் இந்திரா காங்கிரஸ் கட்சியினரும் கைகோத்துக் களத்தில் இறங்கிடுவீர்!

எந்தக் கட்சிக்கு எந்தத் தொகுதி? இந்தக் கேள்விகளுக்கே இடமில்லை! நாற்பது தொகுதிகளின் வெற்றியும் நமது கூட்டணியின் வெற்றியே என்ற உணர்வுடன் செயல்படுக!

என்மீது பொழியப்பட்டுள்ள வசைச் சொற்களுக் கெல்லாம், என் ஆருயிர் உடன்பிறப்பே! நீ தரும் பதில் - வரும் தேர்தலில் நமது கூட்டணிக்கு ஈட்டித் தரும் வெற்றியொன்று தான்!

நன்றாகச் சிந்தித்து எடுத்த முடிவு! கடந்த கால அனுபவங்களை எண்ணிப் பார்த்து - இரு தரப்பாரும் மனந்திறந்து பேசி - உருவாக்கியுள்ள முடிவு! உடன்பிறப்பே! உன்னை நம்பி - உன் ஆற்றலை நம்பி - நீ என் மீதும் கழகத்தின் மீதும் கொண்டுள்ள பற்று பாசத்தை நம்பி எடுத்துள்ள முடிவு!

இதனை வெற்றிகரமாக்கி வினை முடித்திட எழுந்திடு! செப்டம்பர் 30 சென்னையில் நடைபெறும் எழுச்சிமிகு விழாவுக்கு நமது தோழமைக்கட்சி உடன்பிறப்புக்களுடன் புறப்பட இன்றே ஏற்பாடுகளைக் கவனி!

அன்புள்ள,

மு. க.

(24-09-1979)

693. அணி வகுத்திடு! பணி முடித்திடு!

உடன்பிறப்பே,

கழகத்தின் தலைமை நிர்வாகக் குழு எடுத்துள்ள முடிவுகளை ஏடுகளின் வாயிலாக அறிந்திருக்கிறாய்!

திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் கலந்து கொள்கிற சென்னை விழாவில் - ஆம்! நம்மை ஆளாக்கி வளர்த்திட்ட தந்தை பெரியாருக்கும் ஆருயிர் அண்ணனுக்கும் நாம் எடுக்கின்ற விழாவில் - நீ உன் குடும்பத்தாருடன் வந்து கலந்து கொண்டு ஊருக்குத் திரும்பியபிறகு உடனடியாக உன்னை எதிர் நோக்கியிருக்கின்ற பணிகளைத்தான் தலைமை நிர்வாகக் குழு சுட்டிக்காட்டியிருக்கிறது.

அக்டோபர் முதல்நாள் தொடங்கி இரண்டு வாரங்கள் தேர்தல் நிதி திரட்டுகிற வேலையிலே நீ தீவிரமாக இறங்கிட வேண்டும்.

ஊர்ஊராக, வீதிவீதியாக, வீடுவீடாகச் சென்று உண்டியல் மூலம் கழகத்திற்குத் தேர்தல் நிதி வசூலிக்க வேண்டும்.

மாவட்டக் கழகங்கள், ஒன்றியக் கழகங்களின் ஒத்துழைப்புடன் - கிளை அமைப்புக்களை முறைப்படுத்திச் செயல்படச் செய்து உண்டியல் ஏந்தும் இருவார நிகழ்ச்சியை வெற்றிகரமாக்கிடத் திட்டங்களைத் தீட்டிடுமாறு தலைமை நிர்வாகக் குழுவில் கருத்துகள் தொகுத்தளிக்கப்பட்டுள்ளன.

இதுகுறித்து நமது பொருளாளர் சாதிக் அவர்களும் விளக்கமான அறிக்கையினை வெளியிடுவார்.

எனவே அந்தப் பணிக்கான முன்னேற்பாடுகளை இன்றே தொடங்கிடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தமிழக அரசு பிறப்பித்துள்ள தொழிலாளர் வேலை நிறுத்தத் தடைச் சட்டத்தைக் கண்டித்துத் தொழிலாளர் முன்னேற்ற சங்கப்

பேரவையின் சார்பில் மாநாடும் - அதனையொட்டி மற்ற கட்சித் தொழிற்சங்கத் தலைவர்களும் கலந்துகொள்கிற தொழிலாளர் அணிவகுப்புக் கூட்டமும் சென்னையில் நடைபெற இருக்கிறது.

தலைமை நிர்வாகக்குழு எடுத்துள்ள இந்த முடிவினை வெற்றிகரமாகச் செயல்படுத்த நமது தொழிலாளர் அணிச்செயலாளர் சுப்பு அவர்களும், தொழிலாளர் பேரவைத் தலைவர் குப்புசாமி அவர்களும் விரைந்து முனைந்துள்ளனர்.

பாட்டாளி வர்க்கம், தனது உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்ளப் போர்க்கொடி உயர்த்தும் அந்த வீரம் செறிந்த அணிவகுப்புக் கூட்டத்திற்கான இடமும் நாளும் விரைவில் அறிவிக்கப்பட இருக்கிறது.

பாரபட்சமான போக்கில் நடந்து கொள்ளும் டெலிவிஷன், வானொலி நிலையங்கள் திருந்திக்கொள்ள பதினைந்து நாட்கள் அவகாசம் தரப்பட்டுள்ளது. இல்லையேல் அந்த நிலையங்களின் முன்பு அறவழியில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்திற்கான நாள் உடனடியாக அறிவிக்கப்படும்.

பெரியார் நூற்றாண்டு விழாவிலே பெரியார் குறித்து வானொலியில் கருத்துரையாற்றுகிற வாய்ப்பை எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் யாருக்குமே வானொலியார் தரவில்லை.

பெரியாருடன் இளமைக் காலத்திலேயே தொடர்பு கொண்டு அவருக்குத் தொண்டனாகப் பணியாற்றி, அவரது குடியரசு அலுவலகத்திலேயே துணை ஆசிரியனாகப் பொறுப்பேற்றிருந்து, எதிர்க்கட்சியில் இருந்தபோதும், ஆளுங்கட்சியில் இருந்தபோதும், அவரது கொள்கைகளைச் செயல்படுத்தி, அவரது பெயரும், புகழும், புரட்சிக் கருத்துக்களும் பரவிட இயன்ற பணிகளைச் செய்தவன் என்ற நிலையிலே அழைக்காவிட்டாலும் - தமிழ்நாட்டின் பிரதான எதிர்க்கட்சித் தலைவன் என்ற முறையிலாவது வானொலியார் என்னையோ அல்லது எதிர்க்கட்சித் துணைத்தலைவர் பேராசிரியர் அவர்களையோ அழைத்துப் பெரியார் குறித்து பேசச் செய்திருக்கலாம் அல்லவா?

வானொலியில் பேசித்தான் எங்களுக்கோ பெரியாருக்கோ விளம்பரம் கிடைக்க வேண்டுமென்ற நிலையில் பெரியாரும் இல்லை. எங்களையும் அந்த நிலையில் பெரியாரும் அண்ணாவும் விட்டுச் சென்றிடவில்லை.

வானொலியின் குறுகிய - குரோத எண்ணத்தை நாடு உணர்ந்துகொள்ள வேண்டுமென்பதற்காகவே இந்தக் குறைபாட்டினைக் கோடிட்டுக் காட்டுகிறேன்.

தி.மு.கழகத்தார் மீது போடப்பட்டுள்ள வழக்குகளை வாபஸ் வாங்கவேண்டுமென்று நான் கேட்டதாக மொரார்ஜி தேசாய் நிருபர்களுக்கு கோவையில் அளித்த பேட்டியை சாங்கோபாங்கமாக வானொலியில் வர்ணிக்கிறார்கள்.

ஆனால் தேசாய்க்கு நான் சொன்ன பதில் விளக்கத்தை அதே வானொலி நிலையத்தினர் மறைத்தே விட்டனர்!

அடடா! என்னே அரசியல் நாகரிகம்? எத்துனை ஜனநாயகப் பண்பு?

இந்திரா காங்கிரஸ் - தி.மு.க. தேர்தல் உடன்பாட்டை எதிர்த்து எங்கேயாவது ஒரு நபர் இருமிவிட்டால்போதும், ஆகா! அவர் உறுமினார்! முழங்கினார்! குமுறினார்! கொந்தளித்தார்! என்று மாநிலச் செய்தி முழுவதும் ஒரே ஆர்ப்பாட்டப் போர்ப்பாட்டுத்தான்!

கண்ணியமற்ற தி.மு.க. என்ற கடுமையான வார்த்தை களுக்குக்கூட வானொலியில் இடம் உண்டு! நமக் கல்லவா தெரியும் வானொலியில் இருப்பவர்கள் எவ்வளவு கண்ணியமானவர்கள் என்று!

முழுநேரமும் முதலமைச்சர் உதடு அசைத்த சினிமாப் பாட்டுகளுக்கே ஒதுக்க வேண்டுமென்பதற்காக நடத்தப் பட்டுள்ள பேரங்களையும் விவரங்களையும் வெளியிட வெகுநேரமாகாது!

அடுத்தது - டெலிவிஷன் கூட்டத்தார்! அதற்கு டெலிவிஷன் என்பதைவிட டெய்லி விஷம் என்று பெயர் வைத்தால்கூடப் பொருத்தமென்று ஒருவர் ஆத்திரத்தோடு சொன்னார்.

டி.என்.பாலு மறைந்தபோது அவர் தயாரித்த சட்டம் என் கையில் என்ற படத்தை டெலிவிஷனில் வெளியிட்டார்கள். அந்தப் படத்தில் காமராஜர் - அண்ணா - இருவர் படங்களையும் காட்டி என் படத்தையும் காட்டியிருந்தார் டி.என்.பாலு! ஆனால் டெலிவிஷனில் படம் காட்டியபோது என் படத்தை மட்டும் வெட்டி எறிந்துவிட்டார்கள்!

வண்டிக்காரன் மகன் படத்தை டெலிவிஷனில் காட்ட வேண்டுமென்று கேட்டு வாங்கினார்கள். விரைவில் டெலிவிஷனில் காட்டப்படுமென்றும் படத் தயாரிப் பாளர்களுக்குக் கூறியிருந்தார்கள்.

செய்தியறிந்து தமிழ்நாட்டு மேலிடம் சீறியதாம்! வண்டிக்காரன் மகன் படம் வன்முறையைத் தூண்டுகிற படம், அதனால் அதை வெளியிட இயலவில்லையென்று திருப்பி அனுப்பிவிட்டார்கள்.

வண்டிக்காரன் மகன் மத்திய தணிக்கைக் குழுவினரால் ஒப்புதல் வழங்கப்பட்டு தென்னகம் முழுவதும் நடை பெற்ற படம்! எங்கேயும் அந்தப் படத்தால் வன்முறை தூண்டிவிடப்படவில்லை. ஏ-சர்டிபிகேட் படமும் அல்ல!

வேண்டுமென்றே திட்டமிட்டு டெலிவிஷன் கூட்டத்தாரால் அந்தப்படம் திருப்பி அனுப்பப்பட்டுள்ளது.

ஈரோடு நகரில் கழக ஆட்சிக் காலத்தில் அன்னை மணியம்மையார் அவர்கள் பெரியார் பிறந்த இல்லத்தை இலவசமாக அரசுக்கு வழங்கினார்கள். பெரியார் பிறந்த - அண்ணா வாழ்ந்த - அந்த இல்லத்தை அரசாங்க சார்பில் நினைவு மாளிகையாக ஆக்கினோம்! அதை இப்போதும் முதலமைச்சர் பார்வையிடுவதுபோல ஒரு டெலிவிஷன் காட்சி!

பெரியாருடன் அண்ணா - பெரியாருடன் காமராசர் - பெரியாருடன் இராஜாஜி - பெரியாருடன் எம்.ஜி.ஆர். - இப்படிக் காட்டிக் கொண்டே வரும்போது - உடன்பிறப்பே! புரிகிறதா உனக்கு? எதைக் காட்டக்கூடாது என்று கட்டளையோ - அந்தக் கட்டளைப்படி நடந்து கொண்டார்கள்!

அய்யோ! என் படத்தைக் காட்டவில்லையே! இருட்டடிப்புச் செய்து விட்டார்களே - என்று ஏங்கிடவுமில்லை நான்! அதற்காகத் தவங்கிடக்கும் நிலையும் எனக்கில்லை! டெலிவிஷன் நிலையத்தாரின் மனப்போக்கு கட்சி மாச்சரியங்கொண்டதாக இருக்கலாமா? என்பதே நமது கேள்வி!

அரசாங்க சாதனைகள் - அரசாங்க நிகழ்ச்சிகள் - வானொலியிலோ - டெலிவிஷனிலோ - சற்று அதிக அளவில் இடம் பெறுவது தவறல்ல! அவற்றை மக்களுக்கு அறிவிக்க

வேண்டிய கடமை அந்த நிறுவனங்களுக்கு இருப்பதை நாம் மறுக்கவில்லை!

ஆனால் அதே நேரத்தில் திட்டமிட்டுத் தி.மு.க. செய்திகளை இருட்டடிப்புச் செய்தும், திரித்தும், மறைத்தும், தி.மு.க. எதிர்ப்புக் கருத்துக்களை மிகுந்த உற்சாகத்தோடு வெளியிட்டும் மகிழ்கின்ற டெலிவிஷன் - வானொலி நிலையங்களின் போக்கு வன்மையாகக் கண்டிக்கத்தக்கது!

மிக இழிதன்மையுடன் நடந்துகொள்ளும் இந்த நிலையங்கள் உடனடியாகத் தங்களைத் திருத்திக்கொள்ள முன்வராவிட்டால் அவர்களைத் திருத்துவதற்கு அறவழியில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை நடத்துவதைத் தவிர வேறு வழியில்லை!

உடன்பிறப்பே, தலைமை நிர்வாகக்குழு முடிவுகளை நிறைவேற்றுவதற்குத் தயாராகிக்கொள்ள வேண்டிய அதே நேரத்தில் வர இருக்கும் நாடாளுமன்றத் தேர்தலுக்கான தொடக்க கட்டப் பணிகளையும் ஆக்கபூர்வமாக முடித்திட நீ அயராது உழைத்திட வேண்டும்.

தலைமை நிர்வாகக் குழுவில் கலந்து கொண்ட மாவட்டக் கழகச் செயலாளர்கள் எல்லா அமைப்புக்களுடனும் உடனடித் தொடர்பு கொண்டு அப்பணிகளை அமைத்துத் தருவார்களென நம்புகிறேன்.

உன்னைத்தான் நான் இத்திங்கள் முப்பதாம் நாள் சென்னையில் பார்க்கப்போகிறேனே!

அன்புள்ள,

மு. க.

(27-09-1979)

694. செயல்திறனே! வா!
சிங்கத்தின் உருவே! வா!

உடன்பிறப்பே,

இரண்டே நாட்கள்தான் இடையிலிருக்கின்றன! செப்டம்பர் முப்பது சென்னை மாநகரமே விழாக்கோலம் கொள்ளப்போகிறது. நமது உயிரினுமினிய அண்ணன் படத்தைச் சட்டப்பேரவையிலும் இராஜாஜி மண்டபத்திலும் திறந்துவைக்க திருமதி இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் வருகை தந்தபோது தலைநகரம் கண்ட கண்கொள்ளாக் காட்சியை இப்போது மீண்டும் காணப்போகிறது. பெரியார் நூற்றாண்டு விழாவையும், அண்ணா பிறந்தநாள் விழாவையும் தி.மு.கழகம் நடத்துகிறது என்றாலும் அதனை நமது விழாபோல ஆக்கிடுவோம் என்று அன்புக்குரிய மூப்பனார் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையிலும், அன்புக்குரிய ஆர்.வி. சாமிநாதன் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையிலும், நடிகர் திலகம் சிவாஜி மன்றத் தலைவர் அருமை நண்பர் சண்முகம் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையிலும் பற்றும் பாசமும் பெருகிடக் காண்கிறேன். பண்பும் பரிவும் பொங்கிடக் காண்கிறேன். நாகரிகமும் நம்பிக்கையும் வாய்ந்த ஒரு பெரும் அரசியல் உறவுக்கு, இடையிலே ஏற்பட்ட இன்னல்கள் மறைந்து - இன்று கன்னல் எனக் கற்கண்டுச் சாறு என - தேன்பாகு என - தித்திக்கும் தெள்ளமுதமென - பிரிந்தோர் கூடிக் கலந்திடும் பெருமை மிகு நட்பு மீண்டும் உதயமாகியிருக்கிறது!

அஸ்தமனத்துக்குப்பின் வந்த இருட்டில் அலறிக் கொண்டிருந்த ஆந்தைகளும், கோட்டான்களும் ஒளி படைத்த கண்ணினாய் வா! வா! வா! உறுதி கொண்ட நெஞ்சினாய் வா! வா! வா! உறவு கொண்டு உரிமை காப்போம் வா! வா! வா! என்று நமது கூட்டணி இசைக்கும் கோகிலத்தொளி கேட்டு - பொந்துக்குள் பதுங்கியவாறு பொல்லாங்குக் கூச்சலிட்டுக் குரல் வரண்டு சுருண்டு கிடக்கின்றன.

இந்திரா காங்கிரஸ் - தி.மு.க. - இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கூட்டணியையும் - நமது அணியுடன் உறவு உண்டு என

அறிவித்துள்ள இந்தியக் குடியரசுக் கட்சி அணியினையும் கேலி செய்கிற முறையில் - இந்தியத் திருநாட்டின் முன்னாள் பிரதமர் தன்னைத் தவிர உலகில் உத்தமர்களே இல்லையென்று எம்.ஜி.ஆர். அவர்களைப் போலப் பேசிக்கொண்டிருக்கிற - திரு. மொரார்ஜி தேசாய் அவர்கள் கொள்கையற்ற கூட்டு என்று சந்துமுனைச் சிந்து பாடியிருக்கிறார்.

பாவம்! மொரார்ஜி தேசாய் கொள்கையில் குன்றும் (?) குன்றம் எனக் கூறுதல் கூடக் குறையுடைத்து என்பேன்! கொள்கையின் இமயம்! இல்லை! இல்லை! இமயத்திலும் நெடிது உயர்ந்தவர் (?) இவர் இலஞ்சம் வாங்கி வேலை நீக்கம் செய்யப்பட்டவர் என்று 1977-ஆம் ஆண்டு எம்.ஜி.ஆர். அவர்களால் விமர்சிக்கப்பட்டவர்! கள்ள நாணயம் என்று அ.தி.மு.க. தலைவர்கள் தேசாய்க்குப் பட்டமே கொடுத்தனர்! பத்திரிகைகளில் வெளியிட்டனர்!

நம்பிக்கையில்லாத் தீர்மானம் வந்ததும் அதைச் சந்திக்க வக்குவகையின்றிப் பதவி விலகினார்! பதவி விலகிவிட்டவர் நாடாளுமன்ற ஜனதா கட்சித் தலைவராகப் பொறுப்பேற்க பாபு ஜெகஜீவன்ராமுக்கு வழிவிடவேண்டுமெனவும், அவரைப் பிரதமராக்க குறுக்கே நிற்கக்கூடாதெனவும் கேட்டுக்கொண்டு ஜனதா கட்சியின் வழிகாட்டியான ஜெயப்பிரகாஷ், மொரார்ஜிக்கு கடிதம் எழுதினார்! என்ன பதில் சொன்னார் தெரியுமா தேசாய்? ஜெகஜீவன்ராம் முதுகில் குத்திய துரோகி - அவரைப் பிரதமராக வரவிடமாட்டேன்! என்று உரத்த குரலில் எதிர் முழக்கமிட்டார்! ஜெயப்பிரகாஷ் அப்படியொரு கடிதம் எழுதியதே முறையற்றது என்றார் சந்திரசேகர்! இவர்கள் கொள்கை பற்றிப் பேசுகிறார்கள்! இதைக் கேட்டு சிரித்துச் சிரித்து நாட்டு மக்களுக்கு வயிறுகூட வலிக்கிறது!

ஜனதாவைப் பிளந்த சரண்சிங் மந்திரிசபையில் இரண்டு அ.தி.மு.க. அமைச்சர்கள்! அந்த அ.தி.மு.க.வுடன் ஜனதாவுக்குத் தேர்தல் கூட்டு! அதிலே கொள்கை இனிக்கிறதாம்! கூறுகிறார் தேசாய்!

நிலையான அரசு ஒன்றை மத்தியிலே உருவாக்கும் வலிமையும் திறனும் வாய்ந்த இந்திரா காங்கிரசுடன் தி.மு.க. உறவுகொள்வது மட்டும் கொள்கையற்ற கூட்டாம்!

இது கொள்கையற்ற அணியல்ல என்பதை குருட்டு மதியினர்க்கு உணர்த்த இந்திரா காங்கிரஸ் செயல்வீரர்களும் கழகச் செயல்வீரர்களும் தோழமைக் கட்சிகளின் செயல்வீரர்களும் கூடிடுவீர் சென்னை திருநகரில்!

நிலைகுலையா நெஞ்ச உறுதியுடன் அலை அலையாய்த் திரண்டிடுவோம்!

மக்களுக்கு முற்போக்குத் திட்டங்களை வழங்கிய அரசுகள், மத்தியில் இந்திரா காங்கிரஸ் தலைமையிலும் - தமிழ் மாநிலத்தில் தி.மு.க. தலைமையிலும் ஒரே சமயத்தில் இருந்த காலத்தைப் பொற்காலமென உரைத்தோர் உண்டு! அதனை இன்று உணர்ந்து மீண்டும் அந்தப் பொற்காலம் படைக்க விரும்புவோரும் உண்டு! அந்த நல்லெண்ணம் படைத்தோர் தொகை இலட்சோப லட்சமெனப் பெருகிக்கொண்டேயிருக்கிறது நாள்தோறும்!

திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்களுக்கும் தி.மு.கழகத்துக்கும் உளப்பூர்வமான - உறுதிநிறைந்த - தூய்மை ததும்பிய - நேசமும் பாசமும் தும்பை மலர்போலப் பூத்திருந்த காலம் ஒன்றிருந்தது!

அந்தக் காலகட்டத்திலேதான் பேரம் எதுவும் பேசாமல் இந்திரா அம்மையாருக்குப் பக்கத்துணையாகத் தி.மு.க. இருந்தது! மன்னர் மானியம் ஒழிக்கப்பட்டு - வங்கிகள் தேசியமயமாக்கப்பட்டன! வாழ்த்தி வரவேற்றோம்!

தமிழகத்து வறட்சி நிவாரணப் பணிக்கென ஏறத்தாழ இருபது கோடி ரூபாய்! சேலம் உருக்குத் தொழிற்சாலைக்கான தொடக்கம்! தூத்துக்குடி அனல் மின் நிலையம்! நெய்வேலி இரண்டாவது சுரங்க வெட்டு! குமரி மாவட்டத்துக்கு ரயில் பாதை! ஆகஸ்டு 15-ஆம் நாள் எல்லா மாநிலங்களிலும் ஆளுநருக்குப் பதிலாக முதலமைச்சர்களே தேசியக் கொடியேற்றும் உரிமை! இப்படி மத்திய அரசின் சார்பில் மக்களுக்கு நன்மைகளும் உரிமைகளும் பெற இருவரிடையே அழுத்தமான உறவு இருந்தது!

அந்த உறவு ஊனமுற ஒருசிலர் கச்சை கட்டிப் புறப் பட்டனர்! அவர்தம் பெயர்களை நினைவுக்குக் கொண்டு வரக்கூட எனக்கு விருப்பமில்லை!

எப்படியோ நல்லுறவைக் கெடுத்து நச்சரவம் நெளிந்தது! அந்த அரவத்தை அடையாளம் கண்டு கொண்டோம்! இப்போது இருசாரரும்!

காரிருளில் கருநாகம்! அதனை உதயசூரியனின் ஒளி நாட்டுக்குக் காட்டுகிறது! உரம் வாய்ந்த கை ஓங்கி அடிக்கிறது கயமைக் கருநாகத்தின் தலையில் தோழமையெனும் கருவி கொண்டு!

பாம்பு நெளிந்திடும் பாதையென்ற பயம் விலகியது! நமது பழைய உறவு - பழைய நட்பு - பழைய பாசம் - நேசம் - என்ற உணர்வு மேலிடுகிறது! பயணம் தொடர்கிறது!

வானப் பரப்பில் சிதறிக்கிடந்த முகில்கள் ஒன்று சேருகின்றன! உறுதியெனும் மலைமுகட்டில் திடமான கொள்கையெனும் குளிர்ந்த காற்று வீசுகிறது! வெற்றி மழை பொழிகிறது! வீண் ஆரவாரமிடும் மண்ணாங்கட்டிகள் அந்த மழைப் பொழிவில் கரைந்து போகின்றன!

நாணயமான அரசியல் கூட்டு! - நம்பிக்கை வாய்ந்த வர்களின் நிலையான நட்பு! ஒருவரையொருவர் புரிந்து கொண்டு உருவான நல்லுறவு! மனம் திறந்து பேசி - மறக்க வேண்டியவைகளை மறந்துவிட்டு - இடையில் சிலகாலம் பிரிந்திருந்த கட்சிகளின் உன்னத உடன்பாடு! இதனை உலகம் போற்றுகிறது!

போற்றுதல் எனும் பூமணத் தென்றலுக்கிடையே - சென்னைக் கடற்கரையில் அன்னைத் திருநாடு செழிக்க - அவனி வியக்க ஆர்த்தெழுந்து - செப்டம்பர் 30-ஆம் நாள் கூடுகிறோம்.

நம் கண் திறந்து நடமாடவிட்ட தந்தை பெரியாரையும் - நமக்கு அரசியல் பண்பாடு போதித்த அண்ணாவையும் - வாழ்த்தப் போகிறோம்! ஆம், நம்மை வளர்த்தவர்களை வாழ்த்தப் போகிறோம்!

தமிழகமே சென்னையில் கூடப் போகும் எழுச்சிமிகு காட்சிபற்றிய செய்தியறிய அனைத்து நாட்டு அரசியல் விற்பன்னர்களும் ஆவல் காட்டும் நாள்தான் அந்நாள்!

உடன்பிறப்பே! நீயும் நமது தோழமை அணியினரும் கையில் கொடியேந்தி - நெஞ்சில் கொள்கையேந்திக் குழுமிடும் மாட்சி காணக் காத்திருக்கிறேன்!

என் இனிய உடன்பிறப்பே! வா! வா! வா! குடும்பத்துடன் வா! தோழமைக்கட்சி உடன்பிறப்புக்களுடன் இணைந்து வா!

குழந்தைச் செல்வத்தை உன் வீட்டுக்கரசி ஏந்தி வரட்டும்! எதற்கும் எச்சரிக்கையாக, மாவட்டச் செயலாளர் சீதாபதி விடுத்துள்ள வேண்டுகோளை மறவாமல் மழை பெய்தால் காத்துக் கொள்ளக் குடைகளை நீ ஏந்தி வா! தமிழ்ப் பெரும்படையே வா! வா! வா! என் வண்ணத் தமிழே வா! எண்ணக் கருவூலமே! வா! தொய்வுற்ற உறவைப் புதுப்பித்துக்கொண்டு தோழமை அணியே! தோள் தட்டி வா! தொடரட்டும் நமது பணி என்றுரைத்துச் சுடர் முகம் தூக்கி வா! செங்கரும்புச் சுவை மொழியே! சிந்தனைப் பெட்டகமே! வா!

செயல் திறனே! வா!
சிங்கத்தின் உருவே வா!

வழிமேல் விழிவைத்துக் காத்திருப்பேன்! வற்றாத வீரத்தின் விளைநிலமே! வரலாற்றுப் புகழ்பெற்ற தமிழ்க்குலமே! சென்னை நோக்கி வா! வா! வா!

அன்புள்ள,

மு. க.

(28-09-1979)

695. இப்படை தோற்கின் எப்படை வெல்லும்!

உடன்பிறப்பே,

தடைக் கற்கள் உண்டென்றாலும் தடந்தோள்கள் உண்டு எனும் புரட்சிக் கவிஞரின் கவிதை வரிகளுக்கு எடுத்துக் காட்டாகச் செப்டம்பர் 30-ஆம் நாள் சென்னை நகரம் எழுச்சிக் கோலம் பூண்டு நின்றது! யாரால்? உடன்பிறப்பே! நீயும், இந்திரா காங்கிரஸ் செயல்வீரர்களும் நடத்திக் காட்டிய உணர்ச்சிப் பேரணியன்றோ அது!

தமிழ்நாட்டில் உள்ள ஆங்கிலத் தமிழ் தினசரிகள் சில என்னதான் இருட்டடிப்புச் செய்தாலும் வடக்கேயிருந்து வெளி வருகிற ஆங்கில ஏடுகள் செப்டம்பர் 30-இல் சென்னை மாநகரம் படைத்துக் காட்டிய புதிய வரலாற்றைப் புகழ்ந்தும், வியந்தும் எழுதியிருக்கின்றன.

எத்தனை இடையூறுகளைக் கடந்து நீ அந்த விழாவுக்கு வந்தாய் என்பது எனக்குத் தெரியும். கழகத்தினர், காங்கிரஸ் கட்சியினர், சிவாஜி மன்றத்தினர் ஆங்காங்கு ஒருங்கிணைந்து சென்னை வருவதற்காகப் பேருந்துகளை ஏற்பாடு செய்துள்ளனர் என்றும், அதற்கான அனுமதிகளை அந்தப் பேருந்துகளுக்கு மாவட்ட அதிகாரிகள் வழங்கியிருக்கிறார்கள் என்றும் முதலில் செய்தி வந்தது.

ஆனால் 29-ஆம் தேதியன்று காலையிலிருந்து இரவு முழுதும் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து தி.மு.க. தலைமை நிலையத்திற்கும், இந்திரா காங்கிரஸ் தலைமை நிலையத்திற்கும் எத்தனை தொலைபேசிச் செய்திகள் தெரியுமா? அதிகாரிகளால் அனுமதிக்கப்பட்ட பேருந்துகள் சென்னைக்குச் செல்ல இயலாதவாறு செய்யப்பட்டன. பேருந்து உரிமையாளர்களை அழைத்து அதிகாரிகள் மிரட்டி விட்டார்கள். நூற்றுக்கணக்கான பேருந்துகள் எம்.ஜி.ஆர். அரசின் பெருந்தன்மை காரணமாக

சென்னைக்கு வராமல் தடுக்கப்பட்டு விட்டன. லாரிகளில்தான் ஆட்கள் பயணம் செய்யக்கூடாது! பேருந்துகளில் செல்வதற்குத் தடை இல்லை! அப்படியிருந்தும் சென்னை விழாவுக்கு வர இருந்த தனிப் பேருந்துகள் தடுக்கப்பட்டன. பேருந்துகள் தடுக்கப்பட்டதால் லாரிகளில் ஏறி வந்தவர்களையும் வழியிலேயே மறித்து, லாரிகளையும் முடக்கிப் போட்டனர் போலீஸ் அதிகாரிகள்!

எப்படியெல்லாம் குறுக்கு வேலைகள் செய்து கூட்டத்தைக் குறைக்கலாம் என்ற மாபெரும் ஆராய்ச்சியிலேயே மாண்புமிகு (?) முதலமைச்சரும் மற்ற அமைச்சர்களும் ஈடுபட்டனர். அவர்கள் ஆய்ந்தெடுத்த முடிவுகளின்படி நடத்தப்பட்ட சதித் திட்டங்களைச் சல்லடைக் கண்களாக துளைத்துப் போட்டுவிட்டு, தமிழ்ச் சமுதாயம் பல லட்சமெனக் கடற்கரையில் கூடி, பெரியாருக்கும் அண்ணாவுக்கும் விழா எடுத்தது மட்டுமல்ல! இந்திரா காங்கிரஸ் தி.மு.க. இரு கட்சிகளுக்கிடையே மீண்டும் ஏற்பட்ட உறவு கண்டு உற்சாகப் பள்ளுப் பாடியது!

சட்டம்! சட்டம்! என்று எடுத்ததற்கெல்லாம் பேசுகிற முதலமைச்சருக்கு அவருடைய கட்சி விவகாரத்தில் சட்டம் எப்படியெல்லாம் சகதியிலே தூக்கி எறியப்படுகிறது என்பதை நாம் நினைவூட்டத் தேவையில்லை. ஏனெனில் அவருக்குத் தெரிந்தே அவரது அனுமதியுடன் செய்யப்படுகிற காரியங்களவை!

இரண்டொரு திங்களுக்கு முன்பு முதலமைச்சர் எம்.ஜி.ஆர். புதுக்கோட்டையில் ஒரு மாநாட்டுக்குச் சென்றிருந்தார். அந்த மாநாட்டு ஊர்வலத்தில் ஏராளமான லாரிகள் கலந்து கொண்டதும் - அவற்றில் ஆட்கள் ஏறிக்கொண்டு வெளியூர்களில் இருந்து முழக்கமிட்டவாறு புதுக்கோட்டைக்கு வந்ததும் முதலமைச்சருக்குத் தெரியாத செய்திகளல்ல!

இதோ இரண்டு நாட்களுக்கு முன்பு மதுரையிலே ஒரு நிகழ்ச்சி! தி.மு.க. - இ.காங்கிரஸ் கூட்டணியை எதிர்ப்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்ச்சி! அதற்கு ஐம்பது லாரிகளில் ஆட்கள் ஏறி வர அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் நமது விழாவுக்குத் தனிப் பேருந்துகளே அனுமதிக்கப்படவில்லை. அளிக்கப்பட்ட அனுமதிகள் ரத்து செய்யப்பட்டுள்ளன. பாவம்! பஸ் முதலாளிகள் என்ன செய்வார்கள்! ஏற்கனவே அறுபது லட்சத்தை வசூலித்து லஞ்சம் கொடுத்து விட்டு மீதி நாற்பது லட்சத்தை வசூலித்துக் கொண்டிருக்கிறார்கள். மூன்று பஸ்கள்

என்பதற்குப் பதிலாக ஐந்து பஸ்கள் வைத்துக் கொள்ளலாம் என்ற உத்தரவை பெறுவதற்காக! ஏறத்தாழ ஒரு கோடி ரூபாய் அளவுக்கு வசூலித்து லஞ்சம் கொடுத்து - தேசியமயத் திட்டத்திற்கு எதிரான சலுகைகளைப் பெறக் காத்து நிற்கும் பஸ் முதலாளிகள், இந்த அரசின் அதிகாரிகள் இடும் உத்தரவுகளை மீற முடியுமா? யார் அந்த அதிகாரிகள்? விரைவில் வெளிச்சத்திற்கு கொண்டு வரப்படத்தான் இருக்கிறார்கள்!

இந்த அழகில் நேர்மை - நாணயம் - பற்றி முதலமைச்சர் எம்.ஜி.ஆர். விண்ணதிர முழங்குகிறார்!

நேர்மையைப் பற்றி உதட்டளவில் பேசுகிறவர்களின் பட்டியலில் இதோ இன்னொருவரும் இருக்கிறார். அவர்தான் கோயங்கா ஏடுகளின் லகானைக் கையிலே ஏந்தியிருக்கும் திருவாளர் சிவராமனார்!

சர்க்காரியா கமிஷனைப் பற்றியும் வழக்குகளைப் பற்றியும் சென்னைக்கு வந்த திருமதி இந்திரா காந்தி அம்மையார் நிருபர்களுக்கு அளித்த பேட்டி, தி.மு.கழகத்திற்கு சாதகமாக அமைந்துவிட்டது கண்டு துடித்துப்போன சிவராமன் அவர்கள் எடுத்தார் பேனாவை! எழுதிக்குவித்தார் தலையங்கத்தை! ஒவ்வொரு எழுத்தும் எரிச்சலைக் கக்கியது கண்டு நான் சிரித்துக்கொண்டேன்.

சில நாட்களுக்கு முன்பு சென்னைக்கு வந்த மொரார்ஜி தேசாய், பாதல் மீது எந்த வழக்குமில்லை - எனவே அதனை வாபஸ் வாங்குவதற்கான முகாந்தரமே இல்லை என்று நிருபர்களிடம் ஒரு பச்சைப் பொய்யைக் கூறினார் அல்லவா? நேர்மைக்கு (?) வக்காலத்து வாங்கியே பழக்கப்பட்ட சிவராம்ஜி அவர்கள் மொரார்ஜி கூறிய இமாலயப் பொய்யை எதிர்த்து ஒரு குட்டித் தலையங்கமாவது தீட்டினாரா? தீட்டமாட்டார்! அவருக்கு தி.மு.க. என்றால்தானே அலர்ஜி! அதனால் தி.மு.க.வைப் பாராட்டியோ - அல்லது தி.மு.க.வுக்குச் சாதகமாகவோ இந்திரா அம்மையார் அல்ல, யார் எந்தக் கருத்து வெளியிட்டாலும் அதனைச் சிவராமரால் தாங்கிக் கொள்ள முடியாது!

அவர்களது பரந்து விரிந்த மனப்பான்மைக்கு அடையாளம்தானே, இந்திரா காந்தி வருகையையொட்டி அமைக்கப்பட்டிருந்த எத்தனையோ வரவேற்பு வளைவுகள் - தட்டிகள் - அத்தனையும் விட்டு விட்டு HEARTY WELCOME

என்பதில் ஓவியர் கைத்தவறுதலாக 'R' என்ற எழுத்தை விட்டுவிட்டதைப் பெரிதுபடுத்திப் புகைப்படம் எடுத்து எக்ஸ்பிரஸ் ஏட்டில் மிகுந்த அக்கறையுடன் வெளியிட்டதாகும்!

உடன்பிறப்பே, உனக்கு நினைவுபடுத்துகிறேன்! திருவாளர் சிவராமன் ஒருவேளை மறந்திருக்கக்கூடும்!

தினமணி ஏட்டில் எட்டுக்காலம் தலைப்பு கொட்டை எழுத்துச் செய்தியொன்று வெளிவந்தது! 1964-இல்!

பிரதமர் பண்டித நேரு அவர்கள் ஓய்வெடுப்பதற்காக குளு பள்ளத்தாக்கு என்ற பகுதிக்குச் சென்றிருந்தார். அப்போது தினமணி பெரிய எழுத்துக்களில் முதல் பக்கத்தில் செய்தி வெளியிட்டது.

பிரதம மந்தி நேரு குளு பள்ளத்தாக்கு சென்றார்.

பிரதம மந்திரி என்பதில் 'ரி' என்ற எழுத்தையே விட்டுவிட்டு கொட்டையெழுத்துச் செய்தி பிரசுரித்த வரலாறு கோயங்கா ஏட்டுக்கு உண்டு! அது வேண்டுமென்று செய்யப்பட்டதல்ல! அச்சுப்பிழை! பிழை திருத்துவோரின் கவனக்குறைவு! ஏடுகளில் நாலைந்து துணையாசிரியர்கள் உன்னிப்பாகக் கவனிக்கும்போதே இப்படித் தவிர்க்க முடியாத அளவுக்குப் பிழைகள் ஏற்பட்டுவிடுகின்றன என்றால், வரவேற்பு வளைவு எழுதிய ஒரு ஓவியர் 'R' என்ற எழுத்தைத் தவறுதலாக விட்டுவிட்டதற்காக எக்ஸ்பிரஸ் ஏடு, இத்தனைக் குதியாட்டம் போடுவதற்கு என்ன காரணம் தெரியுமா?

இந்திரா காங்கிரஸ் - தி.மு.க. உறவை அவர்களால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. டெலிவிஷன் நிலையத்தார் - வானொலியார் - ஒருசிலப் பத்திரிகையாளர் - மிகவும் வயிறெரிந்து கிடக்கிறார்கள்! சந்துமுனைச் சிந்துபாடிகளோ - வெந்து, நொந்து, விழிபிதுங்க, வார்த்தை குழறிட நம்மை நோக்கி வசைபாடுகிறார்கள்!

ஒருவருக்கொருவர் தைரியம் சொல்லிக்கொள்கிறார்கள்! ஓட்டுக்களைக் கூட்டிக் கழித்துப் பார்த்து யாரும் ஓடிவிடாமல் பாதுகாக்கப் படாதபாடு படுகிறார்கள்.

தமிழகத்தில் இரண்டாக மூன்றாகப் பிளந்துவிட்ட ஜனதா, 1977-க்குப் பிறகு இப்போது எவ்வளவு தேய்ந்துவிட்டது என்பதை - பாவம், அவர்கள் மறந்து விட்டார்கள்!

ஒளிவிட்டுக் கிளம்பிய அந்தக் கட்சி, இரண்டாண்டு காலத்தில் ஒற்றுமை குலைந்து ஒடுங்கிப்போனது மட்டுமல்ல! எந்தக் காந்தி சமாதியின் முன்பு ஒன்றுகூடி ஆட்சிப் பொறுப்பை ஏற்றார்களோ - அதே காந்தி சமாதியின் முன்னால் கைகலப்பில் இறங்கிவிட்ட காட்சி கண்டு நாட்டு மக்கள் நகைக்கிறார்கள்!

நிலையான ஆட்சியொன்றை மத்தியில் தருவதற்கு இந்திரா காந்தி அவர்களால்தான் முடியும் - என்று திட்டவட்டமான முடிவுக்கு இந்திய நாட்டு அரசியல் தெளிவு படைத்தோர் வந்து விட்டார்கள். அந்த உண்மையை உணர்ந்து - அந்த உணர்வைச் செயல்படுத்தவே - தி.மு.கழகம், நாட்டின் மொத்த நலம் கருதி இந்த உறுதியான உறவுக்குக் கை கொடுத்துள்ளது!

மத்தியிலோ குழப்பம்! நமது மாநிலத்திலோ குதர்க்கம்! இவையனைத்தும் தீர்ந்து - மக்கள் தெளிவான நிர்வாகத்தைப் பெற - நிலையான அரசினைப் பெற உருவான உறவுதான் நம் உறவு!

அந்த உறவின் தொடக்கம் 1969-இல் எனினும், இடையில் சில ஆண்டுக்கால தொய்வுக்குப் பிறகு தொடரும் உறவின் தொடக்கம் கண்டிட - வாழ்த்திட- ஊக்கம் அளித்திட -ஆக்கம் வழங்கிட - அழைப்பினையேற்று இலட்சோப லட்சமெனத் திரண்ட உடன்பிறப்புக்களின் சங்கமம் கண்கொள்ளாக் காட்சி!

வா! வா! என அழைத்தேன் கடிதவாயிலாக! ஆயிரம் வேலைகள் இருப்பினும் அத்தனையும் விடுத்து என் எதிரே வந்து நின்ற உடன்பிறப்பே! என் உயிரே! நீயிருக்கும்போது - உன்போல் உறுதி வாய்ந்த தோழமைக் கட்சிகளின் உடன்பிறப்புக்கள் இருக்கும்போது - எத்தனைபேர் சேறுவாரி வீசிடினும், கவலையில்லை! இப்படை தோற்கின் எப்படை வெல்லும்? என்ற நம்பிக்கை ஒளிவிட நடைபோடுவோம் வா!

அன்புள்ள,

மு. க.

(05-10-1979)

696. பெயர்... என்ன? என்ன? என்ன?

உடன்பிறப்பே,

சென்னைக்கு வந்திருந்த முன்னாள் பிரதமர் மொரார்ஜி தேசாய் அவர்கள் தி.மு.க.வுக்கும் இந்திரா காங்கிரசுக்கும் ஏற்பட்டுள்ள தேர்தல் கூட்டு கொள்கையற்ற கூட்டு என்று வர்ணித்தார். இதனை ஜனதா கட்சி நண்பர்கள் மறந்திருக்க முடியாது.

இதோ ஒரு முரண்பாடே இல்லாத - கொள்கைத் தெளிவுள்ள கூட்டு சேர்ந்திருக்கிறது பார்!

ஆம், அ.தி.மு.க. - ஜனதா - ஜனதா (எஸ்) அதாவது லோக்தளம் - ஆகிய கட்சிகள் தமிழ்நாட்டில் தேர்தல் கூட்டு சேர்ந்துள்ளதாக லோக் தளத்தின் (ஜனதா-எஸ்) தமிழ்நாட்டுத் தலைவர் டாக்டர் சந்தோஷம் அவர்கள் அறிவித்துள்ளார். இந்தத் தேர்தல் கூட்டு பற்றி மொரார்ஜி தேசாயின் வர்ணனை என்னவாக இருக்கும்?

ஜனதா அரசைக் கவிழ்க்கும் சதித் திட்டம்தான் எனது நிதியமைச்சராக இருந்த சரண்சிங் தயாரித்த பட்ஜெட் என்று பம்பாய் பொதுக்கூட்டத்தில் இதே மொரார்ஜிதானே பேசினார்?

சரண்சிங் மந்திரி சபை என்பது திருடர்களின் கும்பல். இந்த நற்சான்று (?) இதழும் பம்பாய் பொதுக்கூட்டத்தில் இதே மொரார்ஜி அவர்களால்தான் வழங்கப்பட்டது!

ஜனதா ஒரு வகுப்புவாதக் கட்சியென்றும் அதில் ஆர்.எஸ்.எஸ். ஆதிக்கம், ஜனசங்க ஆதிக்கம் மிகுந்து விட்ட காரணத்தால்தான் அதிலிருந்து பிரிந்து புதுக்கட்சி தொடங்குவதாக அறிவித்தவர்தானே சரண்சிங்கும் ராஜ்நாராயணனும்!

இந்த உண்மையை இல்லையென்று மறுக்கிறாரா, மொரார்ஜி தேசாய்?

புதுக்கட்சி சரண்சிங் தலைமையில் உதயமாயிற்று! அந்தக் கட்சியுடன் சுவரண்சிங் காங்கிரசும் ஓரளவு இணைந்து கொண்டது! அந்தக் கட்சி நடத்தும் காபந்து சர்க்காரில் அ.தி.மு.க. அமைச்சர்களும் இருவர் இடம் பெற்றிருக்கிறார்கள்.

எல்லா அமைச்சர்களையும் சேர்த்துத்தான் திருடர்கள் என்று தேசாய், பம்பாய் கூட்டத்தில் வீரமுழக்கமிட்டார்!

மொரார்ஜி தலைமையில் நடந்த ஜனதா ஆட்சியினால் காந்தி சமாதியே களங்கப்பட்டு விட்டதென்று கூறி அக்டோபர் இரண்டாம் நாள் (காந்தி ஜெயந்தி) ராஜ்நாராயணன் காந்தி சமாதியைக் கங்கை நீரை விட்டு கழுவப்போகிறேன் என்று கிளம்பினார்! அதனை எதிர்த்து ஜனதாத் தொண்டர்கள் புறப்பட்டனர்! காந்தி சமாதியில் இரண்டு தரப்பினரும் மோதிக்கொண்டனர். போலீசார் கண்ணீர்ப்புகைவிட்டுக் கலவரத்தைச் சமாளித்தனர். அந்தச் சகிக்க முடியாத காட்சியைப் படம் பிடித்து இந்தியாவில் உள்ள ஏடுகள் மட்டுமல்ல, அனைத்து நாட்டு ஏடுகளும் பிரசுரித்தன!

கண்ணீர் குண்டுகள் கிளப்பிய புகை மண்டலத்திற்குள்ளே காந்தியடிகளின் சமாதி!

அதுவும் அண்ணல் பிறந்த அதே நாளில்!

அந்த ராஜ்நாராயணனைத் தலைவராகக் கொண்டுள்ள ஒரு கட்சியுடன் தமிழ்நாட்டில் ஜனதா கட்சி சேருகிற கூட்டு, என்ன கூட்டு என்பதை மொரார்ஜிதான் விளக்க வேண்டும்.

ஜனதா உள்பட பல கட்சித் தலைவர்கள் எதிர்த்தும் பிடிவாதமாகக் கொண்டு வரப்பட்டிருக்கிறது தடுப்புக் காவல் அவசரச் சட்டம்! ஆம், சரண்சிங் அமைச்சரவை எடுத்த முடிவு அது! அந்த அமைச்சரவையில் அ.தி.மு.க.வினரும் இருவர் இருக்கின்றனர்.

இங்கே தமிழ்நாட்டில் எல்லாத் தொழிற் சங்க இயக்கங்களும், அரசியல் கட்சிகள் பலவும் எதிர்த்தும் கூட கேட்காமல் - தொழிலாளர் வேலை நிறுத்தத் தடை அவசரச் சட்டத்தை மிகுந்த ஆணவத்துடன் கொண்டு வந்து - அதை விரைவில் சட்டமன்றத்தில் நிறைவேற்றப் போவதாகவும் அறைகூவல் விட்டுக் கொண்டிருக்கிறது எம்.ஜி.ஆர். சர்க்கார்!

அதுமட்டுமா? இனி வேலைநிறுத்தம் நடைபெறும் இடங்களில் எல்லாம் படித்தவர்களை - பட்டதாரிகளை - பதிலுக்கு வேலை செய்யச் சொல்லும் திட்டமொன்று இருப்பதாகவும் அ.தி.மு.க.வின் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அறிவித்திருக்கிறார்.

ஜனதாக் கட்சியின் முன்னாள் பிரதமர் மொரார்ஜி அவர்கள், இந்தக் கட்சிகளோடு அவர் கட்சி காணுகிற கூட்டுக்கு என்ன பெயரிடப் போகிறார்?

மொரார்ஜி தேசாய் மகன் காந்தி தேசாய் மீது பல கோடி ரூபாய் மோசடி செய்யப்பட்டதற்கான புகார்கள் சரண்சிங் ஆட்சியில் அவிழ்த்து விடப்படுகின்றன.

ஷா கமிஷனும் - சர்க்காரியா கமிஷனும் ஒன்று சேருவதா? என்று கேட்ட - அல்லது கேலிபுரிந்த - ஜனதா கட்சியின் பெருந்தலைவர்கள், இப்போது சரண்சிங் கட்சியுடன் தமிழ்நாட்டில் ஒன்று சேருகிறார்களே - இதற்குப் பெருமதிப்புக்குரிய ஜனதாத் தலைவர்களின் மேலான பதில் என்ன? விளக்கமென்ன?

குழப்ப அரசியல் நீங்க -
கோமாளிக்கூத்துகள் அடங்க -
நிலையற்ற முடிவுகள் விலக
நிலையான ஆட்சி உருவாக
மக்களைக் கவனிக்கும் அரசுகள்
மத்தியிலும் மாநிலங்களிலும்
அமைந்திட
கொள்கை ரீதியாக அணிவகுக்கும் கூட்டுத்தான் நமது கூட்டு!

மொரார்ஜி அவர்களைக் கேட்கிறேன்; கொடுமுடிக் கோகிலம் சுந்தராம்பாள் அம்மையார் பாடுவார்களே! அந்த பாணியில் கேட்கிறேன் - தமிழ்நாட்டில் நீங்கள் சேர்ந்துள்ள கூட்டுக்குப் பெயர் என்ன? என்ன? என்ன? என்ன?... என்ன?...

அன்புள்ள,

மு. க.

(07-10-1979)

697. என்ன செய்யப் போகிறார்கள்?

உடன்பிறப்பே,

பதுக்கல், கொள்ளை லாபப் பேர்வழிகளை சமூக விரோதிகள் எனக் குற்றம் சாட்டி தடுப்புக் காவல் சட்டத்தின்கீழ் கைது செய்ய அவசரச் சட்டம் ஒன்றை சரண்சிங் அரசு பிரகடனப்படுத்தியுள்ளது. தேர்தல் நேரத்தில் காபந்து சர்க்கார் என்ற அளவில் இயங்கும் ஒரு அரசு, இப்படியொரு கடுமையான அவசரச் சட்டத்தைப் பிறப்பிக்க உரிமை படைத்ததா என்பது மரபு வழியில் கேட்கப்படும் கேள்வியாகும்.

தேர்தல் நேரத்தில் வணிகர்களை மிரட்டி அவர்களைக் கசக்கிப் பிழிந்து, ஆளுங் கட்சிகள் நிதிகளைப் பெற்றுக் கொள்ளவும் இந்த அவசரச் சட்டம் மிக முக்கியமாகப் பயன்படுத்தப்படும் என்பதும் பல கட்சித் தலைவர்களின் ஒருமித்த கருத்தாகும்.

நாடு முழுவதும் இந்த அவசரச் சட்டம் குறித்து எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டிருந்தும்கூட - ஏற்கனவே ஜனதா அரசு கொண்டு வருவதாக இருந்து கடும் எதிர்ப்பு காரணமாகக் கைவிடப்பட்டிருந்தும்கூட - இப்போது தற்காலிக அரசாக விளங்குகிற (ஜனதா - எஸ்) லோக்தள அரசு அதாவது, சரண்சிங் அரசு - அ.தி.மு.க. அமைச்சர்கள் இருவரது ஒப்புதலோடு இந்தத் தடுப்புக்காவல் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது.

இந்தச் சட்டத்தை தி.மு.க. போன்ற பல கட்சிகள் எதிர்த்துக் கருத்துக்களை அறிவித்துள்ளன. காபந்து சர்க்கார் கொண்டு வந்துள்ள கடுமையானதும், உள்நோக்கம் கொண்டதுமான இந்தச் சட்டத்திற்குக் குடியரசுத் தலைவர் ஒப்புதல் அளித்துக் கையெழுத்திட்டது தவறு என்று திருமதி இந்திரா காந்தி அம்மையார் கண்டனம் தெரிவித்துள்ளார். இந்த ஆள்தூக்கிச் சட்டத்தில் கையெழுத்திடுவதற்கு முன்பே - குடியரசுத் தலைவருக்கு,

இந்தச் சட்டத்தால் விளையக்கூடிய விபரீதங்களைச் சுட்டிக்காட்டி தி.மு.க. சார்பில் விரிவான தந்தியொன்றும் நான் அனுப்பினேன். காபந்து அரசின் பிரதமர் சரண்சிங்கிற்கும் அந்தத் தந்தியின் நகல் உடனடியாக அனுப்பப்பட்டது.

ஜனதா கட்சியின் பெருந்தலைவர்கள் இந்த அவசரச் சட்டத்தின் உள்நோக்கத்தைச் சுட்டிக்காட்டி எதிர்த்துள்ளனர். அந்த ஜனதா தலைவர்கள் குறித்தும், ஜனதாவில் இணைந்துள்ள கட்சிகள் குறித்தும் சரண்சிங் அவர்கள் தற்காலிக பிரதமர் என்ற முறையில் கூறியுள்ள வாசகங்கள் தமிழ்நாட்டில் உள்ள ஜனதா நண்பர்களால் ஊன்றிப் படிக்க வேண்டியவைகளாகும்.

"In a sharply - worded statement The Prime Minister Mr. Charan Singh said "The entire leadership of the Janatha party today stands exposed as friends of such anti-social elements which exploit the Miseries of the people."

மக்களின் கஷ்டங்களைப் பயன்படுத்திக் கொண்டு கொள்ளை லாபமடிக்கிற கறுப்புச் சந்தைக்காரர்களான சமூக விரோதிகளின் நண்பர்கள்தான் இன்று ஜனதா கட்சியில் உள்ள எல்லாத் தலைவர்களும் என்பதை வெளிப்படுத்திக்கொண்டு விட்டார்கள்.

உடன்பிறப்பே, சரண்சிங் அவர்கள் ஜனதாக் கட்சியில் உள்ள அனைத்துத் தலைவர்களையும் பற்றி மிகக் கடுமையாக வர்ணித்துள்ள இந்த வாசகம்; இந்து பத்திரிகையின் முதல் பக்கத்திலேயே பிரசுரிக்கப்பட்டுள்ளது. (7-10-79)

அந்த சரண்சிங் கட்சியுடன் தேர்தலில் தமிழ்நாட்டில் இணைந்து நிற்பதில் தங்களுக்கு ஒன்றும் சங்கடமில்லையென்று ஜனதா பெருந்தலைவர்களில் ஒருவரான பாபு ஜெகஜீவன்ராம் அறிவித்துள்ளார். அது நிற்க,

இன்று பத்திரிகைகளில் வந்துள்ள செய்திகளைப் பார்க்கும்போது அத்தியாவசியப் பண்டங்களின் உற்பத்தியையோ, போக்குவரத்தையோ பாதிக்குமளவுக்கு நடக்கிற வேலைநிறுத்தங்களில் ஈடுபடுகிற தொழிலாளவர்க்கத்தினரையும் இந்த ஆள் தூக்கித் தடுப்புக் காவல் சட்டத்தின்படி கைது செய்து காவலில் வைக்கலாமாம்!

இந்தியா முழுதும் தேர்தலுக்கென்று இடதுசாரி முன்னணியொன்றை உருவாக்க வேண்டுமென்று முனைந்து, முயற்சி எடுத்து வருகிற சரண்சிங் கட்சியினர் முக்கிய அங்கம் வகித்து நடத்துகிற காபந்து சர்க்கார்தான், இத்தகைய ஆள்தூக்கிச் சட்டங்களை - தேர்தல் நேரமாகப் பார்த்து அறிவித்துள்ளது.

ஜனநாயகத்தின் பேரால் செய்யப்படும் மரபு மீறியதும் - உள்நோக்கம் கொண்டதுமான - இந்தச் செயலைத் தி.மு.கழகம் மிக வன்மையாகக் கண்டிக்கிறது.

வணிகப் பெருமக்களை அச்சுறுத்துவதற்கும், அவர்களை மிரட்டித் தேர்தல் நிதி வாங்குவதற்கும் - அதே நேரத்தில் தொழிலாளர் உரிமைகளை நசுக்குவதற்கும் - இந்த அவசரச் சட்டம் பயன்படுமேயல்லாமல் உண்மையான சமூக விரோதிகளை - அதாவது பதுக்கல்காரர்களை அடக்கி, ஒடுக்க நிச்சயமாகப் பயன்படாது!

சமூக விரோதிகளின் பட்டியலில் வேலைநிறுத்தம் செய்கிற தொழிலாளிகளையும் சேர்த்து அடக்குவதற்குத் திட்டம் தீட்டியுள்ள பிரதமர் சரண்சிங் அவர்களுக்கு இந்தியாவில் உள்ள இடதுசாரிக் கட்சிகள், அகில இந்திய ரீதியில் எப்படி நன்றி தெரிவிக்கப் போகின்றனவோ புரியவில்லை!

ஜனதா தலைவர்களைப் பதுக்கல்காரர்களின் நண்பர்கள் என்று திட்டவட்டமாக நேற்றைய தினம் தெரிவித்துள்ள பிரதமர் சரண்சிங்கிற்குத் தமிழ்நாட்டில் உள்ள ஜனதா நண்பர்கள் தங்களது நட்பு உணர்வை எப்படித் தெரிவிக்கப் போகிறார்களோ, அதுவும் விளங்கவில்லை!

அன்புள்ள,

மு. க.

(08-10-1979)

698. இலக்கியத்தில் ஒரு எடுத்துக்காட்டு!

உடன்பிறப்பே,

சங்க இலக்கியம் - எட்டுத் தொகையில் இடம் பெற்றுள்ள ஐங்குறுநூறுக்கான விளக்கவுரைப் பெருநூல் ஒன்றினைப் படித்திடும் பேறு பேற்றேன். செந்தமிழ் வித்தகர் ஔவை துரைசாமிப் பிள்ளை அவர்கள் அழகு தமிழில் எழுதியுள்ள விளக்கவுரையாகும் அது!

கண்டிகு மல்லமோ கொண்கநின் கேளே
வண்டடற்பாவை வவ்வலின்
நுண்பொடி யளைஇக் கடறூர்ப் போளே

இதற்கு ஔவைப்பிள்ளை அவர்கள் எழுதியுள்ள உரையினை மேலும் எளிதாக்கி உனக்கோர் இலக்கிய விருந்தினை வழங்குகிறேன். என்ன? நெடுநாட்களுக்குப் பிறகு இலக்கியக் கடிதமா? என்று கேட்கத் தோன்றும் உனக்கு! கடும்பயணத்திலும் இலக்கியம் தரு நிழலாக அமைகிறது! குளிர்காற்றிலும் கதகதப்பு அளிக்கும் ஆற்றல் இலக்கியத்திற்கு உண்டல்லவா? இதோ! நெய்தல் நிலத்தில் பாடப்படும் பாட்டுக்கான பொருள் எத்துணைச் சுவைக்கனிக் குலையாக இனிக்கிறது பார்!

கொண்கனே! என விளிக்கிறார் புலவர். கொண்கன் எனில் கணவன் எனப் பொருளும் உண்டு! இங்கே காதலன் எனப் பொருள் கொள்ளும் வகையில்தான் அம்மூவனார் எனும் புலவர் பாடலை அமைத்துள்ளார். அவன் எப்போது காதலன் எனும் பெயரைப் பெறுகிறான். அவனுக்கொரு காதலியிருக்கிறாள் எனத் தெரிந்த பிறகு! அவனது தோழர்கள் அவனை நெருங்கிக் கேட்கிறார்கள், உன் காதலி யார் என்பதைக் கூறமாட்டாயா? என்று! அவன் சொல்லவில்லை! பிறகு அவர்களே அவளைக் கண்டுபிடித்து விடுகிறார்கள். அவனைப் பார்த்து வெற்றிப் புன்னகையுடன் கூறுகிறார்கள்.

கொண்கனே! கடலோரத்தில் ஒருத்தி வண்டல் மண்ணால் சிறு வீடு கட்டி பாவையொன்றைச் செய்து வைத்து விளையாடிக் கொண்டிருந்தாள். கடல் அலைகள் உயர்ந்து பாய்ந்து அந்த வண்டல்மண் வீட்டையும், பாவையையும் மூழ்கடித்துவிட்டன. அதைக் கண்டு சினமடைந்த அவள், நுண்ணிய மணலை அள்ளிக் கடல் மீது வீசி - கடலையே தூர்த்து விடுகிறேன் பார் - எனச் சூளுரைத்து நின்றாள். அவள்தான் உனக்குக் கேளாயினாள் - அதாவது உன்னுடையவள் என்பதைத் தெளிவாகப் புரிந்து கொண்டோம்.

இப்படியொரு பெண்ணைப் பற்றிய குறிப்பு ஐங்குறுநூறில் - நெய்தல் நிலப்பாடலில் கூறப்படுகிறது. இதனை மேலும் விளக்கும் வகையில் பேராசிரியப் பெருமகனார் துரைசாமிப் பிள்ளை அவர்கள்,

வண்டால் திரையழிப்பக் கையால் மணல் முகந்து மதிமேல் நீண்ட, புண் தோய் வேல் நீர்மல்க மாதர் கடல் தூர்க்கும் புகாரே எம்மூர்

என்று சிலப்பதிகார வரிகளை மேற்கோள் காட்டுகிறார்.

அதற்கு அவர் தரும் விரிவுரை பின்வருமாறு:-

வண்டாடுபவள் தானிழைத்த வண்டற் பாவையைக் கடல் அழிப்ப, அது கவர்ந்ததாகப் பிறழ உணர்ந்து சினமுற்றுத் தூர்க்கலாகாத அப்பெருங்கடலை மணற்பொடியால் தூர்க்க முயலும் அத்துணைப் பேதைமையுடையாளென அவள் மடமை கூறி நகையாடியவாறு

உடன்பிறப்பே, ஐங்குறுநூறு பாடலையும் - அதற்கு ஔவை துரைசாமிப்பிள்ளை அவர்கள் தந்துள்ள செறிதரு விளக்கங்களையும் அரசியலில் குமுறலும் கொதிப்பும் எழுந்துள்ள இந்தச் சூழலில் விரிவாகக் கூற வேண்டிய அவசியமென்ன என்று கேட்கிறாய் நீ, எனக்குப் புரிகிறது!

சூடான நேரத்தில் சற்றுச் சுவையாக இருக்கட்டுமே என்பதற்காக மட்டும் நான் இதனை எழுதவில்லை.

ஒரு பெண்மணி, கடலோரத்தில் வண்டல் மண் கொண்டு விளையாட்டாக வீடு கட்டுகிறாள். வண்டலாலேயே பாவையொன்றும் அந்த மணல் வீட்டில் அமைக்கிறாள். கடலின் அலைகள், அந்த வண்டல் மண் வீட்டையும், வண்டல்

பாவையையும் அடித்துச் சென்று விடுகின்றன. ஆத்திரம் கொண்ட பெண்மணி, மணலை அள்ளிக் கடல் மீது வீசுகிறாள். அவள் எண்ணம் அந்தக் கடலையே, மணல் கொண்டு தூர்த்துவிடலாம் என்பது!

அதைத்தான் பேதமையென்றும் - மடமையென்றும் - நகையாடத்தக்க நிகழ்ச்சியென்றும் ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

இந்த இலக்கியத்தை அப்படியே இலக்கியமாக நிறுத்திவிடாமல் - கொஞ்சம் அரசியலுக்கும் இழுத்து வருவோமா?

தமிழ்நாட்டில் நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள், நாடாளுமன்றத் தேர்தலுக்கான கூட்டணியை வழக்கம் போல் தனது சூழ்ச்சித்திறனால் உருவாக்கி - அதன் பிறகு தன்னை நம்பிய கூட்டணிக் கட்சியினரை ஆட்டிப்படைக்கலாம் என்ற திட்டத்துடன் தந்திரவலையொன்றைப் பின்னினார்! ஆம், கடலோரத்தில் இலக்கியத்துப் பெண் வண்டல் மண் வீடு கட்டியதுபோல, அந்தத் தேர்தல் உபாயம் உயர்ந்து தோன்றுவதுபோல் காணப்பட்டது அவர் கண்களுக்கு!

திடீரெனத் தி.மு.க. - இந்திரா காங்கிரஸ் கூட்டணி அமைந்தது என்ற செய்தி, கடல் அலை போலக் கிளம்பி - அவர் கட்டிய மணல் வீட்டை - ஆம், மனக்கோட்டையை அழித்துவிட்டது! கடல் மீது கோபம் கொண்டு அதனை தூர்த்துவிட முனைந்து மண்வாரி வீசும் மங்கை போலவே இன்றைக்கு, அவரும் - அவரைச் சார்ந்தோரும் - நமது கூட்டணி மீது அவதூறுகளை அள்ளி வீசுகிறார்கள்!

இலக்கியத்தில் வரும் அந்த மங்கையின் செயலைப் பேதமையென்றும் - மடமையென்றும் - நகையாடுவதற்குரியதென்றும் - புலவர் பெருமகனார் சுட்டிக் காட்டுகிறார்.

தி.மு.க. - இந்திரா காங்கிரஸ் உறவு ஏற்பட்ட நிலை கண்டபிறகு - முதல்வரிலிருந்து ஏனைய அமைச்சர்கள் - அவர்தம் ஆதரவு ஏடுகள் - பொழிகின்ற இழிமொழிகள், அப்பப்பா! சொல்லும் தரமன்று! அவற்றைத் திரும்ப எழுதிக் காட்டவே கை கூசுகிறது!

என் செய்வது! கடலைத் தூர்த்துவிடலாமெனக் கருதி மணலை அள்ளி வீசும் மங்கையை - மடைமைக்கு எடுத்துக்காட்டாக இலக்கியம் அறிமுகப்படுத்துகிறது! இவர்கள்

மாண்புமிகுகளாயிற்றே! அதைப்போல் இவர்களை வெடுக்கெனச் சொல்லிவிட முடியுமா நம்மால்!

இவர்கள் மணலையள்ளி வீசிக் கழகம் - காங்கிரஸ் ஏற்படுத்திக் கொண்டுள்ள கூட்டணியெனும் கடல் தூர்ந்துவிடப் போவதில்லை!

எனவே, அவர்கள் வீசிக் கொண்டேயிருக்கட்டும் மண்ணை! அது நம் கண்ணில் விழாமல் கை கொண்டு தடுத்து - உதயத்தை நோக்கி உயர்த்திப் பிடித்த வெற்றிக் கொடியுடன் நடப்போம் வா!

அன்புள்ள,

மு. க.

(15-10-1979)

699. என்னதான் நடக்கும்? நடக்கட்டுமே?

உடன்பிறப்பே,

தி.மு.க. - இந்திரா காங்கிரஸ் உடன்பாடும் உறவும் ஏற்பட்டு அது உறுதியான கூட்டணியாகத் தமிழக மக்களால் வரவேற்கப்படுவது கண்டு நிலைகுலைந்து போயுள்ள முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள், தன் பரிவாரங்களையும் காவல்துறை அதிகாரிகளையும் பயன்படுத்திக் கழகத்திலிருந்து அவரை இழுக்கலாமா? இவரை இழுக்கலாமா? என்ற தீவிர முயற்சியில் இறங்கியிருக்கிறார். சட்டப் பேரவையில் அ.தி.மு.க. 126 இடங்கள், தி.மு.க. 48 இடங்கள் என்றிருந்ததை - முதலில் குலைத்திடும் முயற்சியில் இறங்கி தி.மு.க.வின் 48 என்ற எண்ணிக்கையை 47 ஆக ஆக்கியவர் எம்.ஜி.ஆர்.தான்! இந்தக் காரியத்தைச் சென்ற ஆண்டே அவர் செய்யத் தொடங்கிவிட்டார். தொடர்ச்சியாக அந்த முயற்சியிலே ஓராண்டுக் காலமாகக் கச்சை கட்டிக்கொண்டு செயல்படுகிறார். யார் யார் வாயிலாக நமது கழகத்து முன்னணியினரையும் - சட்டமன்ற உறுப்பினர்களையும் அணுகிடச் செய்தார் என்பதும் - அந்தக் காரியத்தில் அவர் நினைத்த அளவுக்கு வெற்றி பெற முடியவில்லை என்பதும் நாடறிந்த உண்மையாகும்.

நினைத்ததை முடித்து நிமிர்ந்து நிற்க முடியவில்லையே என்ற காரணத்தால் இப்போது எம்.ஜி.ஆர். கட்சியினரும் - அவரது ஆட்சியில் சட்டம் அமைதி காக்க வேண்டிய போலீஸ் அதிகாரிகளும் வதந்திகளைக் கிளப்பிய வண்ணமிருக்கின்றனர்.

போலீஸ் அதிகாரிகள், நமது கழகச் செயல்வீரர்களுக்கு போன் செய்து, என்ன அவர் போய் விட்டாராமே? இவர் போய் விட்டாராமே? என்ற பீதியைக் கிளப்புகின்றனர். வதந்திகளைப் பரப்புவதன் மூலம் கழகத்தியினரிடையே ஒருவருக்கொருவர் சந்தேகத்தைப் பரப்பி - அதன் காரணமாக ஓரிருவரை இழுத்து விட முடியாதா? என்ற ஒரு திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது!

இதனை நமது கழகத்தினரும் தோழமைக் கட்சியினரும் புரிந்து கொண்டு வதந்தியாளர்கள் யாராயினும் அவர்தம் வாயடைத்துப் போகிற அளவுக்கு பதில் கொடுத்திடும் பணியினைச் செய்திட வேண்டும்.

சில கட்சிகளில் அந்தக் கட்சிக்குள்ளேயே உட்பூசல்கள் இருக்கும். அத்தகைய பூசல்களுக்கு விதிவிலக்கான கட்சிகளே இருக்க முடியாது. மற்ற சில கட்சிகளுடன் ஒப்பிடும்போது நமது கழகத்தில் அங்கொன்றும் இங்கொன்றுமாகக் கீழ்அமைப்புகளில் ஒருவருக்கொருவர் தனிப்பட்ட கருத்து வேறுபாடுகள் மிகமிகச் சிறிய அளவில் உண்டு என்பதை அறவே மறுத்துவிட இயலாது.

அத்தகைய தனிப்பட்ட கருத்து வேறுபாடு உடையவர்கள் ஓரிருவர் - இதுபோன்ற வதந்திகளைப் பயன்படுத்திக்கொண்டு இதுதான் சமயமெனத் தமக்கு வேண்டாதவர்களை விரட்டி விடுகிற இழிவான மனப்போக்கு படைத்தவர்களாக இருக்கமாட்டார்களா? என்று எம்.ஜி.ஆரின் வதந்தி பரப்பும் படை எண்ணுவதாகத் தெரிகிறது!

இந்தக் காரியத்துக்குக் காவல்துறையினரையும் - அதிகாரிகளையும் பயன்படுத்துகிற அளவுக்கு - எம்.ஜி.ஆர். அவர்களின் ஆட்சி, கீழே இறங்கிச் செயல்படுகிறது.

தி.மு.க. - இந்திரா காங்கிரஸ் உறவுக்கு விரோதமான அறிக்கையைத் தயாரித்து அதனைத் தனது துணையமைச்சர் மூலம் பெரியவர் கக்கன் அவர்களிடம் அனுப்பிக் கையெழுத்து பெறும் வேலையில் ஈடுபட்டவர்தானே முதலமைச்சர் எம்.ஜி.ஆர்.!

எனவே, உடன்பிறப்பே! அவர்கள் எந்த எல்லைக்கும் செல்லத் தயாராக இருப்பார்கள்!

வதந்திகளைப் பரப்புவதன் மூலம் உன்னையும் - பொதுமக்களையும் - குழப்பத்தில் ஆழ்த்தி - தங்கள் திட்டத்தை நிறைவேற்றிக் கொள்ளலாமென்று எண்ணுகிறார்கள்.

அந்தத் திட்டத்திற்குப் பலியாகாமல் - அவர்கள் பின்னுகிற சூழ்ச்சி வலையில் சிக்காமல் - நாம் இன்று அமைத்துள்ள தி.மு.க., இந்திரா காங்கிரஸ், முஸ்லிம் லீக் கூட்டணிச் செயல்வீரர்களுடனும் - நமது அணிக்குத் துணை நிற்கும் குடியரசுக் கட்சி, கிறிஸ்துவ ஜனநாயக முன்னணி ஆகியவற்றின் செயல்வீரர்களுடனும் -

நாடாளுமன்றத் தேர்தல் வெற்றியெனும் ஒரே குறிக்கோளுடன் தொண்டாற்ற வேண்டுகிறேன்.

இடையில் நடைபெறும் திசை திருப்பும் பேச்சுக்களுக்குச் செவி சாய்த்தல் கூடாது! அதுபற்றிய திண்ணைப் பேச்சுக்களே கூட தேவையற்றது!

இந்தியாவில் இரண்டாண்டு காலம் நடைபெற்ற நிலையற்ற ஆட்சியால் விளைந்த கேடுகள்!

இங்குத் தமிழ்நாட்டில் நாளைக்கொரு சட்டம் - வேளைக்கொரு உத்தரவு என்று உழைக்கும் மக்களுக்குத் தரப்படும் தொல்லைகள்! துயரங்கள்!

இவை குறித்து விவாதிக்கவும் - விமர்சிக்கவும் - விளக்கமளிக்கவும் உரிய நடவடிக்கைகளில் ஈடுபடவும்தான் நேரம் செலவிடப்பட வேண்டுமே தவிர, பரப்பப்படும் வதந்திகளில் கவனம் செலுத்திடத் தேவையில்லை! அந்த வதந்தியைப் பரப்புவோரில் உன்னையறியாமல் நீயும் ஒருவராக இருந்து விடக்கூடாது! எச்சரிக்கை!

என்னதான் நடக்கும் - நடக்கட்டுமே! நான் கவனித்துக் கொள்கிறேன் அவைகளை!

நீ, கவலைப்படாமல் களத்தில் இறங்கு! வெற்றி குவித்திடு!

நீயிருக்க எனக்கென்ன பயம்? உன் நெஞ்சில் உறுதியிருக்கும்போது உன்னைப் போன்ற இலட்சோபலட்சம் உடன்பிறப்புகள் இருக்கும்போது இந்தக் கழகத்தை யார் அழித்து விட முடியும்?

அன்புள்ள,

மு. க.

(17-10-1979)

700. அந்த எட்டு மணி நேரம்! - 1

உடன்பிறப்பே,

மகத்தான சாதனை.
மாபெரும் சாதனை.
வரலாற்றுச் சாதனை.
அவர் சாதனையை
அவரே வென்ற சாதனை!

இவ்வாறெல்லாம் சில ஏடுகள் புகழாரம் சூட்ட முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் எட்டுமணி நேரம் - (அதாவது நான்கு நாட்களில்) சட்டசபையில் பேசி முடித்திருக்கிறார். கண்டனத் தீர்மானத்திற்குப் பதில் சொன்னதாகத்தான் பெயர். ஆனால், பட்ஜெட் கூட்டத் தொடரில் பல்வேறு அமைச்சர்கள் கொண்டு வரும் மானியக் கோரிக்கைகள் மீது நடைபெறும் விவாதத்தில் அளிக்க வேண்டிய பதில்கள் - தரவேண்டிய விளக்கங்கள் - கொடுக்க வேண்டிய புள்ளி விபரங்கள் - இத்தனையும் அடங்கியதுதான் அந்த எட்டுமணி நேர பதில்!

மாநிலத்தின் ஒரு பகுதியில் அல்லது ஒரு மாவட்டத்தில் உழைப்புக்கு உணவுத் திட்டம் சரிவரச் செயல்படவில்லையென்று ஒரு உறுப்பினர் எடுத்துக் காட்டியிருந்தால் போதும்! உடனே தமிழ்நாடு முழுவதும் மாவட்ட வாரியாக இந்தத் திட்டம் எப்படிச் செயல்படுகிறது - உழைத்தோர் எண்ணிக்கை என்ன? கொடுக்கப்பட்ட அரிசியின் அளவு எவ்வளவு? இதற்குப் புள்ளி விபரங்கள் - அதிகாரிகள் தந்த தகவல்கள் - சுமார் அரை மணி நேரத்தை அந்தப் பிரச்சினைக்காகச் செலவிட்டிருப்பார்.

பஸ் முதலாளிகளிடம் பணம் பெற்றுக் கொண்டு தேசியமயக் கொள்கைக்கு விரோதமாகச் செயல்பட்டிருக்கிறீர்கள் என்று குற்றம் சாட்டப்பட்டது. அதற்குச் சுருக்கமான பதில் கிடையாது.

எப்போதோ சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை தந்தார்களாம். மூன்று வருடத்துக்கு முன்பு எப்போதோ சட்டசபையில் சில உறுப்பினர்கள் தனியார் பஸ்காரர்களின் தொல்லைகள் பற்றி குறிப்பிட்டார்களாம். அதற்காக இரண்டு வருடம் கழித்து மூன்று பஸ்களுக்குப் பதிலாக ஐந்து பஸ்கள் வைத்துக் கொள்ளலாம் என்று அரசாங்கம் உத்திரவு பிறப்பித்ததாம்!

அந்த இடைக் காலத்தில் பஸ் முதலாளிகளிடம் பேரம் பேசி சுமார் ஒரு கோடி ரூபாய் அளவுக்குக் கையூட்டுப் பெற்றிருக்கிறீர்கள் - ஊழல் நடந்திருக்கிறது என்பதுதானே சட்டமன்றத்தில் நாம் எடுத்து வைத்த குற்றச்சாட்டு!

அதற்கு அரைமணி நேர விளக்கம் - என்ன தெரியுமா? பல்லவன், பெரியார், அண்ணா, சேரன், சோழன், பாண்டியன், கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகங்களில் 1973-ஆம் ஆண்டு வந்த லாபம் என்ன? 74-இல் வந்த லாபம் என்ன? 75, 76, 77, 78 ஆண்டுகளில் வந்த லாபம் என்ன? 1973-இல் எத்தனை பயணிகள் பயணம் செய்தார்கள் - 74, 75, 76, 77, 78 ஆண்டுகளில் எத்தனை பயணிகள் பயணம் செய்தார்கள் - இந்த விபரங்கள் போக்குவரத்துத் துறை மானியக் கோரிக்கை விவாதத்தில் தரப்பட வேண்டியவைகள்!

தனியார் பஸ் முதலாளிகளுக்கு மூன்று பஸ்கள் என்பதை ஐந்து பஸ்கள் என்று ஆக்கிப் பணம் பெற்றிருக்கிறீர்கள் என்ற குற்றச்சாட்டுக்கும் போக்குவரத்துக் கழகங்களின் வரவு செலவுக்கும் என்ன சம்பந்தம்?

தி.மு.க. ஆட்சியில் பஸ் கட்டணம் ஒரு பைசா அதிகமாக்கிக் கொள்ளலாம் என்று உத்தரவு பிறப்பிக்கவில்லையா? அதன் மூலம் பதினோரு கோடி ரூபாய் தனியார் பஸ் முதலாளிகளுக்கு வருமானம் வரவில்லையா என்று முதலமைச்சர் எதிர்க் கேள்வி போட்டார்.

நான் உடனே பதில் அளித்தேன். பஸ்களுக்கு அதிக வரி விதிப்புச் சுமை இருப்பதின் காரணமாகக் கட்டணத்தில் ஒரு பைசா கூட்டிக் கொள்ள அனுமதிக்கப்பட்டது. பதினோரு கோடி ரூபாய் ஒரு பஸ் முதலாளிக்கு கிடைத்த வருமானமல்ல! நாலாயிரம் பஸ்களால் வகுத்துப் பார்த்தால் பஸ் ஒன்றிற்கு ஆண்டுக்கு சுமார் இருபத்தேழாயிரம் ரூபாய் தான்! எனவே அதற்கும் இதற்கும்

முடிச்சுப் போடாதீர்கள் என்றேன். அதில் தவறு நடந்திருப்பதாகத் தான் குற்றம் சொல்லவில்லை என்ற கருத்துப்பட முதலமைச்சர் விளக்கமளித்தார்.

எனவே, மூன்று பஸ்களை ஐந்து பஸ்களாக்கி, அதற்கு இரண்டு மூன்று தவணைகளாக ஒரு கோடி ரூபாய் வரையில் பெற்றிருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டுக்கு மழுப்பல்தான் பதிலாக அமைந்ததே தவிர, கடுமையான மறுப்பு எதுவும் அரசின் தரப்பிலிருந்து தெரிவிக்கப் படவில்லை.

எப்படித் தெரிவிக்க முடியும்? ஒவ்வொரு ஊரிலும் நாலாயிரம், ஐயாயிரம் என்று இந்த சலுகைக்காகப் பணம் கொடுத்த பஸ் முதலாளிகள், நடந்த கதையைத் தங்கள் நண்பர்களிடம் சொல்லிக் கொண்டு இருக்கிறார்களே! இது ஊரறிந்த ஊழலாயிற்றே! முதலமைச்சரின் காலைச் சுற்றிக் கொண்டு திரியும் சில ஏடுகளைக் கொண்டு உலை வாயை மூட முயற்சி செய்யலாம். ஆனால் ஊர்வாயை மூட முடியுமா?

திருப்பூர் குமரனின் துணைவியார் சார்பில் சென்ற ஆண்டு முதல்வருக்கு முறையீடு அனுப்பப்பட்டு, அதற்கு எழுதப்பட்ட பதிலில் அந்த அம்மையார் ஏற்கனவே மத்திய, மாநில மானியத் தொகை பெற்று வருவதால் இப்போது அவர்களது கோரிக்கையை ஏற்க இயலாது என்று முதல்வரின் பொதுத்துறையிலிருந்து எழுதப்படுகிறது. ஆனால் இந்த ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் என்றதும் - திருப்பூரில் உள்ள அம்மையாரை மதுரைக்கு அழைத்து வந்து ஒரு பொதுக்கூட்டத்தில் அறிமுகப்படுத்தி - அந்த அம்மையாருக்கு பத்தாயிரம் ரூபாயும் - மாதா மாதம் மானியத் தொகையும் அரசின் சார்பில் அளிக்கப்படும் என்று முதல்வர் கூறியிருப்பது தேர்தல் ஸ்டண்ட் அல்லவா? என்று சட்டசபையில் நேருக்கு நேராகக் கேட்டேனே - எட்டு மணி நேரத்து வரலாற்றுப் புகழ்மிக்க (?) சாதனைகளை வென்ற (?) முதலமைச்சரின் பேச்சில் இந்தக் குற்றச்சாட்டுக்கு பதில் சொல்லாமலே அவர் ஓடி ஒளிந்து கொண்ட மர்மம் என்ன?

குற்றச்சாட்டுகளுக்கு - எடுத்து வைக்கப்பட்ட ஆதாரங்களுக்கு - நேரடியாகப் பதில் சொல்லாமல் சுற்றி வளைத்து - சம்பந்தமில்லாத புள்ளி விபரங்களைச் சொல்லி மன்ற உறுப்பினர்களைக் களைத்துப் போகச் செய்வதில் காட்டிய

திறமையை - குற்றச்சாட்டுகளை மறுக்கும் வாதத்திலே முதல்வர் காட்டவில்லை. காட்ட முடியவில்லை. காரணம் அவர் வாதத்திலே வலுவில்லை, வாய்மையும் இல்லை.

இதோ அதற்கு மற்றொரு உதாரணம்! மருத்துவக் கல்லூரி மாணவர் சேர்ப்பதில் நடந்த ஊழல்! அதுகுறித்து நாளை எழுதுகிறேன்.

அன்புள்ள,

மு. க.

(11-11-1979)

701. அந்த எட்டு மணி நேரம்! - 2

குற்றமுள்ள நெஞ்சு குடைகிறது!

உடன்பிறப்பே,

மருத்துவக் கல்லூரியில் மாணவர்களைச் சேர்க்க 1015 இடங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. எந்தெந்த அடிப்படையில் அவர்கள் சேர்க்கப்படுவார்கள் என்று முன்னரே அறிவித்து, அதற்கேற்ப விண்ணப்பித்துக் கொள்கிற அவகாசம் அளிக்கப்பட்டு, அவ்வாறு விண்ணப்பம் செய்து கொண்ட மூவாயிரம் அல்லது நாலாயிரம் மாணவர்களுக்குள் 1015 பேர் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இதுதான் தொடர்ந்து இருந்து வருகிற நிலைமை.

என்னவோ தி.மு.க. ஆட்சியில் மருத்துவக் கல்லூரி அட்மிஷன்களில் ஊழல்கள் நடந்துவிட்டதாகவும், இப்போது எம்.ஜி.ஆர். என்கின்ற புனித புத்தரின் (?) ஆட்சியில் மருத்துவக் கல்லூரி அட்மிஷனில் தூய்மை வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுவதாகவும் அவரது கொடை பெற்றுக் குடுகுடுப்பை அடிக்கும் ஏடுகளும், ஆட்களும் துள்ளிக் குதித்துக் கொண்டிருந்தார்கள் அல்லவா? ஆனால் உண்மை என்ன?

ஒன்பதாயிர ரூபாய் வருமான வரம்பை ஏமாற்றி விட்டு - குறைந்த வருமானத்திற்கான பொய்ச் சான்றுகளைத் தயாரித்து அமைச்சர்களின் உதவியுடன் - அவர்களுக்குத் தர வேண்டியதைத் தந்து பெற வேண்டிய இடங்களைப் பெற்றுக் கொண்ட பெரும் பணக்காரர்களும் உண்டு!

மருத்துவக் கல்லூரி அட்மிஷன் பட்டியலையோ - பொறியியல் கல்லூரி அட்மிஷன் பட்டியலையோ - பெற்றோர் பெயர் முகவரிகளுடன் வெளியிட முதலமைச்சர் தயாராக இருப்பாரேயானால் அவற்றில் நடந்துள்ள இமாலய ஊழல்களைச் சுட்டிக் காட்ட நான் தயாராக இருக்கிறேன்!

சும்மா குழாயடிச் சண்டை போட்டுப் பயனில்லை - சுட்டிக்காட்டும் குற்றச்சாட்டுகளுக்குச் சட்டமன்றத்தில் நழுவிப்

போகாமல் நறுக்குதெறித்தாற் போல விடையளித்திருக்க வேண்டும். முன்பு அறிவிக்கப்பட்ட அரசின் ஆணைக்கு மாறாக – மருத்துவக் கல்லூரிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களின் பட்டியலை கோ ஆர்டினேஷன் குழுவின் தலைவரே வெளியிட்டு விடுகிறார். டாக்டர் அசுவத்தாமன் என்பவர் செலக்ஷன் கமிட்டியின் கோ ஆர்டினேடிங் தலைவரும் செயலாளருமாவார்.

முறைப்படி இவர், தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களின் பட்டியலை மக்கள் நல்வாழ்வுத் துறைச் செயலாளரிடம் தர வேண்டும். செயலாளர் அதில் குறிப்பு (நோட்) எழுதி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கையெழுத்துக்கு அனுப்ப வேண்டும். அதன் பிறகு அந்தக் கோப்பில் முதலமைச்சர் கையெழுத்திடல் வேண்டும். பிறகு அரசு, ஜி.ஓ. வெளியிட்டு அந்தப் பட்டியலைப் பிரசுரிக்கும். இதுதான் சட்டப்படியும் விதிகளின்படியும் உண்டான முறை!

ஆனால் இந்த ஆண்டு கோ ஆர்டினேஷன் குழுவின் செயலாளர் அவராகவே அந்தப் பட்டியலை வெளியிட்டு விடுகிறார். செயலாளரின் (நோட்) குறிப்பு இல்லை. பட்டியலில் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் வெறும் கையெழுத்து மட்டும் போட்டிருக்கிறார். முதலமைச்சர் டிக் பண்ணியிருக்கிறார். பாதிக்கப்பட்ட மாணவர் சார்பாக நீதிமன்றத்துக்கு வழக்கு செல்கிறது.

மக்கள் நல்வாழ்வுத் துறைச் செயலாளர் முராரியும், கோ ஆர்டினேஷன் கமிட்டித் தலைவர் அசுவத்தாமனும் நீதிமன்றத்தில் கொடுத்த வாக்குமூலத்தில் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரிடம் நேரில் சென்று கையெழுத்து வாங்கியதாகத் தெரிவித்திருக்கிறார்கள்.

எந்தத் தேதியில் கையெழுத்து வாங்கினார்கள் என்ற விவரம் வாக்குமூலத்தில் இல்லை.

இதுசம்பந்தமான ஒரிஜினல் தஸ்தாவேஜ்கள் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றன. அதாவது அமைச்சர் கையெழுத்திட்ட ஒரிஜினல் பேப்பர்கள் அவை!

31-10-79 அன்று நீதிபதிகள் அவற்றைக் கவனித்து விட்டு – முழு விவரங்கள் அடங்கிய விளக்கமான பிரமாண வாக்குமூலம் தரும்படி கேட்டனர்.

பிறகு 2-11-79 அன்று முராரியும், டாக்டர் அசுவத்தாமனும் இரண்டாவது பிரமாண வாக்குமூலம் கொடுத்தனர்.

அவற்றில் தேர்வுப் பட்டியலில் அமைச்சரிடம் கையெழுத்து வாங்கிய தேதி 8-9-79 எனக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் 31-10-79-இல் கோர்ட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஒரிஜினல் தஸ்தாவேஜ்களில் 9-9-79 அன்று அமைச்சர் கையெழுத்திட்டிருப்பதைக் கவனித்த நீதிபதிகள், மீண்டும் அந்த ஒரிஜினல் தஸ்தாவேஜ்களைக் கொண்டு வரச் சொல்லி பார்த்தபோது 9-9-79 என்ற தேதி, 8-9-79 என்று திருத்தப்பட்டிருப்பதைப் பார்த்து அதைக் கோர்ட்டிலும் அறிவித்திருக்கின்றனர்.

பிரமாண வாக்குமூலம் அளித்தபோது அமைச்சர் 9-9-79 அன்று ஊரில் இருந்திருக்கக்கூடும் என்ற நினைப்பில் கையெழுத்து வாங்கிவிட்டனர் போலும்!

ஏனெனில் விஷயம் நீதிமன்றத்துக்குப் போன பிறகு வாங்கப்பட்ட கையெழுத்து தானே; அதனால் அமைச்சர் வெளியூரில் இருந்ததை மறந்துவிட்டு, 9-9-79 என்று தேதியைக் குறித்து விட்டனர்.

நீதிமன்றம், விளக்கமான வாக்குமூலம் கேட்டதும் அமைச்சரும் உடந்தையாக இருந்து தேதியைத் திருத்தியிருக்கிறார்கள்.

அதாவது வழக்கு நீதிமன்றத்தில் நடந்து கொண்டிருக்கும்போதே 31-10-79க்கும் - 2-11-79க்கும் இடையில் தேதியைத் திருத்துகிற மோசடி - நீதிமன்றத்தைத் திசை திருப்பி அவமதிக்கும் மோசடி - நடைபெற்றிருக்கிறது. இந்த மோசடியை நான் சட்டமன்றத்தில் சுட்டிக்காட்டி - ஆங்கிலத்தில் கூற வேண்டுமானால் இது எவ்வளவு பெரிய பிராடு என்று விளக்கிச் சொன்னேன்.

விவகாரம் நீதிமன்றத்தில் இருப்பதால் இந்தக் குற்றச்சாட்டுக்குப் பதில் அளிக்க இயலாது என்று முதலமைச்சர் நழுவிக்கொண்டார்.

செப்டம்பர் 12-ஆம் தேதியன்று 1015 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட பட்டியல் வெளியிடப்பட்டு விடுகிறது. அதற்குப் பிறகு சுமார் ஒரு மாதம் கழித்து முதலமைச்சர்

கையெழுத்திட்ட ஒரு கோப்பின் அடிப்படையில் மேலும் 15 மாணவர்களை மருத்துவக் கல்லூரியில் சேர்க்க புதிய ஆணையொன்று புறப்படுகிறது.

கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களின் பிள்ளைகளுக்கு ஆறு இடம்! விளையாட்டுச் சாதனை புரிந்தவர்களுக்கு மூன்று இடம்! அமெரிக்க ஐக்கிய நாட்டில் வாழும் தமிழர்களின் வீட்டுப் பிள்ளைகளுக்கு ஆறு இடம்! இப்படியொரு திடீர் உத்திரவு பிறப்பிக்கப்பட்டு, அந்தக் கோப்பிலும் 13-10-79 என்று பிரிவுச் செயலாளர் போட்ட தேதியை 13-9-79 என்று திருத்தி, அந்த வரிசையில் பிறகு தேதிகள் 27-9-79, 29-9-79 என போடப்பட்டு இறுதியாக முதல்வர், 3-10-79 அன்று கோப்பில் குறிப்பு எழுதிக் கையெழுத்திட்டதாக ஜோடனை செய்யப்படுகிறது. தேதி திருத்தப்பட்ட அந்தக் கோப்பின் போட்டோ செட் காப்பியை சட்டமன்றத்தில் ஆதாரமாகக் காட்டினேன்.

ஆகா! இது எதிர்க்கட்சித் தலைவருக்கு எப்படிக் கிடைத்தது? இத்தகைய அதிகாரிகளை வைத்துக்கொண்டு எப்படி ஆட்சி நடத்துவது? என்று எம்.ஜி.ஆர். வியப்பு தெரிவித்தாரே தவிர - அவர் செய்த தவறுக்கு அவர் கூறுகிற சமாதானம் என்ன? பக்கத்து வீட்டில் திருடினாயே - என்று கேட்டால், அதை எப்படி அந்தப் பக்கத்து வீட்டுப் பயல் உன்னிடம் சொல்லலாம் என்று கேட்கிற கேள்விக்கும் முதல்வரின் வியப்புக்கும் வேறுபாடே இல்லை!

எப்போதோ அமெரிக்காவுக்குப் போனாராம் - அங்கே வாக்களித்தாராம்! அதற்காக செப்டம்பர் முடிந்து அக்டோபரில் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் தமிழர் வீட்டுப் பிள்ளைகளுக்கு ஆறு இடமாம்! அவரே ஒதுக்கிவிட்டாராம்!

அமெரிக்காவில் அளித்த வாக்குறுதியை நிறைவேற்ற விரும்பினால் 1015 என்பதை 1030 என்று ஒரேயடியாக அறிவித்து - அமெரிக்கத் தமிழர்கள் - கலப்பு திருமண குழந்தைகள் - விளையாட்டு வீரர்கள் - என்ற தொகுப்பில் பல விண்ணப்பங்களைப் பெற்று அவற்றில் 15 பேரைத் தேர்வு செய்வதுதானே முறை! மோசடியற்ற தன்மை!

அதைத்தான் நேருக்கு நேராகச் சொன்னேன். இது அமெரிக்க ஐக்கிய நாட்டுத் தமிழர்களின் கோட்டா அல்ல! நண்பர் மணியனின் கோட்டா என்று!

முதலமைச்சர் இதற்கு என்ன தெளிவான பதிலைச் சொன்னார்? வந்த விண்ணப்பங்கள் ஆறுதான் என்றார். மறுநாள் ஐந்து விண்ணப்பங்கள் வந்தன என்று திருத்தம் சொன்னார்.

இப்படியொரு அடிப்படையில் மேலும் 15 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என்று விளம்பரம் செய்திருந்தால் ஏராளமான விண்ணப்பங்கள் வந்திருக்காதா?

ஏன் இந்தக் காரியம் இவ்வளவு ரகசியமாக நடைபெற்றது?

முதல்வர் இதற்குப் பதில் சொன்னபோது நானும் பேராசிரியரும் குறுக்கிட்டுக் கேட்ட கேள்விகளுக்கு அவரால் மழுப்ப முடிந்ததே தவிர - உண்மையை மறுக்க முடிந்ததா?

இதனால் எந்த ஆதாயமும் அடையவில்லை என்றார்! நமது குற்றச்சாட்டு - ஆதாயம் அடைந்தவர்கள் யார் யார் என்பதும் பாதிக்கப்பட்டோர் யார் யார் என்பதும்தானே!

துணிவிருந்தால் அந்த 15 பேர்களுடைய பட்டியலையும் அவர்கள் பெயர் - பெற்றோர் பெயர் - விலாசம் இவற்றுடன் வெளியிடட்டுமே முதலமைச்சர்!

அதில் ஒளிந்து கிடக்கும் ஊழல் திமிங்கிலம் எவ்வளவு பெரியது என்பதை நாட்டுக்கு உணர்த்த நாம் தயாராக இருக்கிறோம்.

எனவே, உடன்பிறப்பே! மருத்துவக் கல்லூரி மாணவர் அட்மிஷன் ஊழலை எடுத்துச் சொன்ன போது நமது மாண்புமிகு முதலமைச்சர் - மழுப்பினார் - நெளிந்தார் - திகைத்தார் - திணறினார் - மார்தட்டிப் பேசும் மாவீரம் பெற்றாரில்லை! குற்றமுள்ள நெஞ்சு அவரைக் குடைகிறது என்பதை அவையினர் தெளிவாகப் புரிந்து கொண்டனர்!

இவை மட்டுமா? வேறு எந்தக் குற்றச்சாட்டுகளுக்குத்தான் அவர் நேரடியான பதிலைச் சொல்ல முடிந்தது? அதுபற்றி நாளை எழுதுகிறேன்.

அன்புள்ள,

மு. க.

(12-11-1979)

702. அந்த எட்டு மணி நேரம்! - 3

இதோ இன்னொரு பழனிபாபா!

உடன்பிறப்பே,

பழனி பாபா என்று ஒருவர்! அவர் நல்லவரா? கெட்டவரா? அந்த ஆராய்ச்சி இப்போது தேவையில்லை. அவருக்கு முதலமைச்சரோடு நெருங்கிய தொடர்பு இருந்தது. அதிகாரிகளுடன் இறுக்கமான நட்பு இருந்தது. அமைச்சர்கள், பழனி பாபா கூப்பிட்ட குரலுக்கு ஓடோடிச் சென்றார்கள். அவர் முதல்வருடன் எப்படி உட்கார்ந்து பேசுகிறார்? அதிகாரிகளின் குடும்பங்களோடு எப்படிப் புகைப்படம் எடுத்துக் கொண்டிருக்கிறார்? அமைச்சர்களுடன் அந்தப் பழனி பாபா எடுத்துக் கொண்ட விதவிதமான வண்ணப்படங்கள் எத்தனை? அனைத்தையும் சட்டமன்றத்தில் ஆதாரமாகக் காட்டினேன்.

ஆமாம்! அவருடன் படம் எடுத்துக்கொண்டது உண்மைதான் - என்று முதல்வர் பதில் அளித்தார்!

இந்த பாபாவுக்கு 20-5-78 அன்று பெரம்பூரில் உள்ள ஹசரத் சையத் உசேன் ஷா கதிரி திம்மா சுவாமி தர்க்கா அண்டு மாஸ்க் என்கிற பெரிய தர்க்காவையும், மசூதியையும் புதுப்பிக்க அமைக்கப்பட்ட கமிட்டியிலும் இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இவருடன் அமைச்சர்கள் எந்த அளவுக்குத் தொடர்பு வைத்திருந்தனர் என்பதற்கு அமைச்சர் பொன்னையன் என்ற அண்மைக் காலத்து கோடீஸ்வரரும் - பழனி பாபாவும் பேசிய டேப் ரிக்கார்டர் ஒன்றை சட்டமன்றத்தில் ஆதாரமாக அறிவித்து - அவர்கள் இருவரும் பேசிக்கொண்ட வாசகங்களையும் எழுத்துப் பிசகாமல் படித்துக் காட்டினேன்.

அந்த உரையாடலில் மிக முக்கியமாக அம்பலத்துக்கு வந்த செய்தி என்ன தெரியுமா?

தி.மு.க., மார்க்சிஸ்டு, இந்திய கம்யூனிஸ்டு, முஸ்லிம் லீக், குடியரசு கட்சி, பார்வர்டு பிளாக், காந்தி காமராஜ் காங்கிரஸ்,

திராவிடர் கழகம் - மற்றும் அனைத்து தொழிற்சங்கங்கள் நடத்திய முழு வேலை நிறுத்தம் - கடையடைப்பு (பந்த்) அ.தி.மு.க. குண்டர்களைக் கொண்டும், போலீஸ்காரர்களைக் கொண்டும் எப்படி உடைக்கப்பட்டது என்பதையும் - அந்தக் கிளர்ச்சியில் ஈடுபடுகிறவர்களை உதை உதைன்னு உதைச்சு அடித்து நொறுக்கி - பந்த்தை உடைத்து எறியுங்கள் என்று போலீஸ் அதிகாரி எவ்வளவு வேகமாக உத்திரவிட்டார் என்பதையும் - அந்த அராஜகத்தில் இறங்கிய ஆளுங்கட்சி குண்டர்களுக்கு அமைச்சர் பாராட்டு விருந்து கொடுத்த நிகழ்ச்சியையும் - பொன்னையன் அவர்களே பூரிப்பு பொங்கிடப் பழனி பாபாவிடம் பேசியிருக்கிறார்.

அந்தப் பேச்சு பதிவான டேப்பைத்தான் நான் சபாநாயகர் அறையிலே போட்டுக் காட்டத் தயாராக இருக்கிறேன் என்று கூறினேன். அதை மறுக்க முடிந்ததா எட்டு மணி நேர வரலாற்றுப் பேச்சாளருக்கு! முடியவில்லையே!

பந்த் நடத்துகிறவர்களை ஆளுங்கட்சிக் குண்டர்களை வைத்தும் - போலீஸ்காரர்களை அவர்களுக்குத் துணையாக வைத்தும் அடித்து நொறுக்க ஒரு அரசாங்கமே சதித் திட்டம் நடத்தியிருப்பதை பகிரங்கமாக - ஆதாரத்துடன் - சட்டசபையில் எடுத்துக் கூறிக் கண்டித்த பிறகும், அந்தக் கண்டனத்துக்கு எதிராக - ஆளும் கட்சிக்கு ஆதரவாக கம்யூனிஸ்டு கட்சிகள் எப்படிச் செயல்பட்டன என்று என்னைக் கேட்காதே!

அவர்கள் நிலை அவ்வாறு! அதற்காக நான் அவர்களைக் குறைகூற மாட்டேன்! தற்போது எடுத்துள்ள அரசியல் முடிவுக்கு ஏற்றவாறு அவர்கள் நடந்து கொண்டார்கள், அவ்வளவுதான்!

ஆனால் பந்த்தை உடைக்க அரசாங்கம் நடத்திய முன்னேற்பாடான சதித் திட்டம் எவ்வளவு பயங்கரமாகப் போடப்பட்டது என்பதை கம்யூனிஸ்டு கட்சிகளின் உறுப்பினர்கள் சிலர் என்னிடம் கூறி, மிகவும் வேதனைப்பட்டார்கள்!

அந்த அளவுக்கு அவர்களிடம் உணர்வு இருப்பதை நான் வரவேற்காமல் இருக்க முடியாது!

தேர்தலில் ஒன்றாக இருக்க முடியாமற் போனாலும் பொதுப் பிரச்சினைகளில் - தொழிலாளர் பிரச்சினைகளில் நாமும் அவர்களும் ஒன்றாக இருக்க முடியும் என்பதுதான் என்னுடைய நம்பிக்கை!

அன்று அவர்கள் கண்டனத் தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்திருந்தால் - அதனால் எம்.ஜி.ஆர். ஆட்சியொன்றும் கவிழ்ந்து போயிருக்காது! தொழிலாளர்களைப் பாதிக்கும் பிரச்சினைகளில் எதிர்க்கட்சிகள் ஒன்றாக நின்று எதிர்க்கும் என்ற உணர்வைக் காட்டியிருக்க முடியும்!

சிம்கோ மீட்டர்ஸ், அம்பத்தூர் சைக்கிள் தொழிற்சாலை - போன்ற பல பிரச்சினைகளில் கம்யூனிஸ்டுகளுடன் சேர்ந்து சட்டமன்றத்திலும், மக்கள் மன்றத்திலும் கூட்டுக் குரல் கொடுத்த கட்சியல்லவா தி.மு.கழகம்?

எனவேதான் சேஷசாயி தொழிலாளர் பிரச்சினையில் கம்யூனிஸ்டுகள் அந்த வேகத்தைக் காட்டி சட்டமன்றத்தில் முழக்கங்கள் எழுப்பா விட்டாலும், குறைந்த பட்சம் கண்டனத் தீர்மானத்தை ஆதரித்தாவது இருக்கலாமேயென்று நமது மனம் ஏங்குகிறது!

அது போகட்டும்! பழனி பாபாவை விட்டுவிட்டு வேறு எங்கேயோ போய் விட்டேன்! பொன்னையனும், பழனி பாபாவும் டேப்பில் அவ்வாறு பேசியது உண்மைதான் என்பது சட்டமன்றத்தில் முதல்வராலும் பொன்னையனாலும் ஒப்புக் கொள்ளப்பட்டது!

தன் குற்றத்தை மறைக்க என்மீது பொன்னையன் ஒரு பழியைத் தூக்கிப் போட்டார்!

பந்தின் போது பஸ்களைக் கொளுத்தச் சொல்லி நான் கழகத் தோழர்களுக்கு உத்திரவிட்டிருந்தேனாம்!

இப்படி ஒரு அபாண்டத்தைச் சுமத்திய அமைச்சர், அதனால்தான் அது குறித்து பழனி பாபாவுடன் பேசினாராம்! அந்த அபாண்டம், உண்மையானது என்று வாதத்திற்காக வைத்துக் கொள்வோம் - அமைச்சர் என்ன செய்திருக்க வேண்டும்? யாருடன் தொடர்பு கொண்டு பேசியிருக்க வேண்டும்? பழனி பாபா என்ன போலீஸ் கமிஷனரா? ஐ.ஜி.யா?

எப்படிக் காது குத்துகிறார் பார்த்தாயா அமைச்சர்? அதைவிட ஒருபடி மேலே போய் முதலமைச்சர் ஒரு பொய்யைச் சொன்னார்.

பந்த் நடந்தபோது நூற்றுக்கணக்கான பஸ்கள் கொளுத்தப்பட்டனவாம் - அதனால்தான் பழனி பாபாவுடன்

பொன்னையன் பேசினாராம்! பந்த்தின்போது நூற்றுக் கணக்கான பஸ்கள் கொளுத்தப்பட்டன என்பதே மிகமிகத் தவறான தகவல்! அண்டப் புளுகு! ஒரு நூறு பஸ்கள் - அதாவது பந்த்தின் போது கொளுத்தப்பட்ட பஸ்களின் எண்களை (Number) வெளியிடுவதற்கு முதலமைச்சர் தயாரா?

பழனி பாபாவுடன் பொன்னையன் இப்படிப் பேசியிருக்கிறாரே! இது முறைதானா? இப்படியொரு சதித் திட்டத்தை அரசாங்கமே தீட்டலாமா? என்று நான் கேட்டால் அதற்குரிய சரியான பதிலை எம்.ஜி.ஆர். அவர்கள் அளிக்கவில்லையே ஏன்?

இந்த அழகில் எட்டுமணி நேர இமாலய சாதனை என்ன வாழ்கிறது?

யாரோ ஜனதா மந்திரிகளை, ஒரு விழாவுக்கு அழைக்க பழனி பாபா ஏற்பாடு செய்தாராம்! அதனால் கோபங்கொண்ட எம்.ஜி.ஆர். பழனி பாபாவைக் கண்டித்தாராம்! இப்படிப் பல்வேறு காரணங்களால் அவர்களுடைய அந்தரங்க நட்பு முறிந்து போய் விட்டதாம்!

உடனே அரசாங்கப் பொதுத் துறை அலுவலகத்திலிருந்து எல்லா அலுவலகங்களுக்கும் ஒரு சுற்றறிக்கை செல்கிறது.

அந்த அறிக்கையில் பழனி பாபா (Shady Character) ஒரு மோசடியான மனிதர் என்றும் அதிகாரிகள் அனைவரும் அவரிடம் எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்படுகிறது.

அதுமட்டுமல்ல, அந்தப் பழனி பாபா அதிகாரிகளிடம் பேசிக் கொண்டிருக்கும் போதே அந்தப் பேச்சை ரகசியமாக டேப் செய்து விடக் கூடியவர் என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதிகாரிகள் பேசுவதை பழனி பாபா டேப் செய்தால் அந்த மனிதர் ("Shady Character") மோசடியான வஞ்சக மனிதர்- ஆனால் நமது முதலமைச்சர் சட்ட மன்றத்திலேயே ஒத்துக் கொண்டிருக்கிறார். அதிகாரிகளிடம் பேசுவதை முதல்வரும் டேப் செய்து வைத்திருக்கிறாராம்!

இனிமேல் அதிகாரிகள், முதல்வருக்கு முன்னால் சைகைகள் மூலம் - அல்லது அபிநயங்கள் மூலம் தான் செய்திகளைச் சொல்ல வேண்டும்! இல்லையேல் டேப் செய்து வைத்துக் கொள்வார்!

அதிகாரிகள் எல்லாம் எங்கேயாவது ஒரு நடனகேந்திராவில் இதற்கென ஆறு மாதம் அபிநயப் பயிற்சி பெறுவது நல்லது! ஏனெனில் இதோ இன்னொரு பழனி பாபா முதல்வர் உருவில் நடமாடுகிறார்!

பழனி பாபா பற்றி எடுத்து வைத்த விவரங்களுக்கு எம்.ஜி.ஆர். அவர்கள் நேர் நின்று விடையளிக்க முடியாமல் சுற்றி வளைத்துத் தப்பித்துக் கொள்ள முயன்றாரே தவிர - அந்தப் புகழ் பெற்ற (?) எட்டு மணி நேரப் பேச்சில் பதில் முரசு கொட்டவில்லை!

எப்படிக் கொட்ட முடியும்? உண்மைகள்தான் தேனீக்கள் எனச் சூழ்ந்து கொண்டு அவரைக் கொட்டிக் கொண்டிருந்தனவே!

மற்ற குற்றச்சாட்டுகளை அவர் எப்படிச் சந்தித்தார்? அதுகுறித்து நாளை எழுதுகிறேன்.

அன்புள்ள,

மு. க.

(13-11-1979)

703. அந்த எட்டு மணி நேரம்! - 4

அடடா! இமாலயச் சாதனை!

உடன்பிறப்பே,

ஒரு மனிதன் எத்தனை ஆண்டுக்காலம் வாழ்கிறான் என்பது பெரிதல்ல! அவன் வாழ்ந்த ஆண்டுகள் குறைவாக இருந்தபோதிலும் அந்தக் கால கட்டத்தில் என்ன பணிகளைச் செய்தான் என்பதைத்தான் உலகம் கவனிக்கிறது! அதைப் போலத்தான் ஒருவர் எத்தனை மணி நேரம் பேசினார் என்பதை விட என்ன பேசினார் என்பது தானே முக்கியமானது! எட்டு மணி நேரம் பேசினார் முதலமைச்சர்! தொடர்ச்சியாக அல்ல! நாலு நாட்கள் பேசினார்! எடுத்து வைக்கப்பட்ட எந்தக் குற்றச்சாட்டுக்கும் விளக்கமான பதில் இல்லை! வழவழாதான்! ஏறத்தாழ எல்லாக் குற்றச்சாட்டுக்களையும் ஒத்துக்கொண்டது போலத்தான் முதலமைச்சரின் பதில்கள் அமைந்தன. பழனி பாபா மூலம் நாற்பது லட்ச ரூபாய் கைமாறிய செய்தியைச் சட்டமன்றத்தில் கடந்த ஆண்டும் தெரிவித்தேன். இப்போது கண்டனத் தீர்மானத்திலும் மீண்டும் குறிப்பிட்டேன். வீரதீர பராக்கிரமத்தைக் காட்டி விடையளிக்கப் போகிறார் என்றுதான் ஆளுங்கட்சியினர் கைகளைத் தட்டுவதற்குக் காத்துக் கொண்டிருந்தனர். பாவம்! ஏமாற்றி விட்டார் அவர்களை, அவர்களது தலைவர்!

அதுமட்டுமா? நிர்வாகத்தில் எவ்வளவு சீர்கேடும் - முறையற்ற முடிவுகளும் மேற்கொள்ளப்படுகின்றன என்பதற்கு ஆதாரங்களை எடுத்து வைத்தேன். ஐ.ஜி. பதவியிலிருந்து ஓய்வு பெறும் சமயத்தில் பதவி நீடிப்பு கொடுக்கப்பட்ட திரு. ஸ்டிரேசி அவர்கள் அந்தப் பதவி நீடிப்புக் காலம் முடிவுற்று 31-5-79 அன்று ரிடையர்டு ஆகிறார். ஆனால் அவர் எந்தவிதமான உத்திரவுமின்றி தொடர்ந்து வேலை பார்க்கிறார். பிறகு அக்டோபர் 12-ஆம் தேதி ஒரு அவசரச் சட்டம் பிறப்பிக்கப்படுகிறது. டைரக்டர் ஜெனரல் ஆப் போலீஸ் என்ற ஒரு பதவி உருவாக்கப்படுகிறது. அந்தப் பதவியில்

திரு. ஸ்டிரேசி நியமிக்கப்படுகிறார். அதாவது மே மாதம் ரிட்டயர்டு ஆனவர் அக்டோபர் மாத இடையில் அவசரச் சட்டத்தின் மூலம் டைரக்டர் ஜெனரல் ஆப் போலீஸ் என்று ஆகிறார்.

வேடிக்கை என்ன தெரியுமா? அவசரச் சட்டத்தில் ரெட்ராஸ்பெக்ட் எபெக்ட் வழங்கப்பட்டு ஜூன் மாதம் 1-ஆம் தேதி முதல் அவர் தொடர்ந்து வேலை பார்ப்பதாகக் குறிப்பிடப்படுகிறது. மே மாதம் ரிடையர்டு ஆன ஒருவரை அக்டோபர் வரையில் எந்த உத்திரவுமில்லாமல் பதவியில் வைத்திருந்து, அக்டோபரில் இப்படி ஒரு உத்திரவு போட்டது முறைதானா? என்று ஆதாரத்துடன் கேட்டேன். இதற்கு முதல்வர் பதில் அளிப்பார் என்று எதிர்பார்த்தேன். ஆனால் முதல்வர் அளித்த பதில் என்ன தெரியுமா? போலீசார் கிளர்ச்சியின் போது சென்னையில் நடந்த அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் என்.ஜி.ஓ. சங்கத் தலைவர் சிவ.இளங்கோ ஆற்றிய சொற்பொழிவை வரிவிடாமல் சட்டமன்றத்தில் படித்துக் காட்டி - அதில் ஒரு அரைமணி நேரத்தை ஆதாயமாகப் பெற்றார்.

பிறகு 1974-இல் மாநிலத்தில் எத்தனை குற்றங்கள் நடந்தன? எத்தனை கண்டு பிடிக்கப்பட்டன? எத்தனை குற்றங்களில் துப்பு துலங்கவில்லை? எத்தனை குற்றங்களில் திருடர்களும், கொலைகாரர்களும் தண்டிக்கப்பட்டனர். அதேபோல் 1975-இல் எவ்வளவு எண்ணிக்கை? 1976, 1977, 1978, 1979 - என்று புள்ளி விவரங்களை அள்ளி இறைத்துப் போலீஸ் மானியத்து விவாதத்திற்குப் பதில் அளிப்பது போல - நேரத்தை அதிலே ஒரு அரைமணி நீட்டிக் கொண்டாரே தவிர, ரிடையர்டு ஆன ஸ்டிரேசிக்கு, நாலு மாதம் கழித்து அவசரச் சட்டம் பிறப்பித்து ரெட்ராஸ்பெக்ட் எபெக்ட்டுடன் பதவி வழங்கியது முறையா? என்ற குற்றச்சாட்டின் பக்கமே முதலமைச்சர் போகவில்லை! அதிலிருந்தும் நழுவி விட்டார்! அவருக்கு வேண்டியதெல்லாம் எத்தனை மணி நேரம் பேசினார் என்ற செய்திதானே! என்ன பேசினார் - என்ன பதில் சொன்னார் - என்பது அல்லவே!

மிகப் பயங்கரமான முறையில் திட்டமிட்டு - நாலு கோடி ரூபாய் அளவுக்குக் கொள்ளையடிக்க வகை செய்து ஒரு கோடி ரூபாய் வரையில் ஊழல் செய்து பங்கு போட்டுக் கொண்ட பல்கேரியா கப்பல் பேரத்தைப் பற்றி இருபதுக்கு மேற்பட்ட ஆதாரக் கடிதங்கள் - டெலக்ஸ் தந்திகள் - அவற்றுக்கான தேதிகள் - எண்கள் - இடைத் தரகர் மூலம் வைத்துக் கொண்ட தொடர்புகள் அனைத்தையும்

சட்டசபையில் வைத்தேன். அந்த ஆதாரங்களின் பிரதிகள், எதிர்க்கட்சித் தலைவர்களுக்கும் பத்திரிகையாளர்களுக்கும் தரப்பட்டுள்ளன.

கப்பல்களை, அரசாங்கம் நியமித்த தரகர்கள் பேசிய விலைக்கு வாங்காமல் - ஒன்றரைக் கோடி ரூபாய் குறைத்து ஒப்பந்தம் செய்து கொண்டு வந்த தமிழக அதிகாரிகளைப் பாராட்டுவதற்குப் பதிலாக - அவர்கள் மீது பழிசுமத்தி உடனடியாக வேறு இலாக்காக்களுக்கு மாற்றி விட்டார்கள் என்றால் என்ன பொருள்? அது மட்டுமா? விலை குறைக்கப்பட்ட பல்கேரியா கப்பல்களை வாங்காமல் - அதே இடைத் தரகர்களைப் பயன்படுத்தி, புதிதாகப் போலந்து கப்பல்களை வாங்குவதற்கு முயற்சி செய்கிறார்கள். போலந்து கப்பல் பேரமும் - தரகர்களின் போக்கும் - பெரிய மோசடி என்றும், பல்கேரியா கப்பலை வாங்காமல் போலந்து கப்பலை வாங்குவதாக சாக்குச் சொல்வதால் - பூம்புகார் கப்பல் கார்ப்பரேஷனுக்கே அபகீர்த்தியும் - நாணயமற்றவர்கள் என்ற பெயரும் ஏற்பட்டு - கார்ப்பரேஷனுக்கே சாவு மணி அடிக்கப்பட்டு விடும் என்று தக்க சமயத்தில் எச்சரித்த பூம்புகார் கப்பல் கார்ப்பரேஷன் பெரிய அதிகாரி ராமகிருஷ்ணன் ஐ.ஏ.எஸ். என்பவர் மீது சீறிப் பாய்ந்து, அவரை சமூக நலத் துறையின் கூடுதல் செயலாளர் பதவிக்கு இறக்கி விடுகிறார்கள்.

ஆதாரங்களுக்கோ - குறுக்கிட்டுத் தொடுத்த வினாக்களுக்கோ - முதலமைச்சர் எம்.ஜி.ஆர். சரியான பதில் கூறமுடியாமல் - இதை நிரூபித்தால் நாங்கள் அனைவரும் ராஜினாமா செய்வோம் என்றார்! இவர் செய்த தவறுக்கு எல்லோரையும் ராஜினாமா செய்யச் சொல்வாராம்! இவ்வளவு ஆதாரங்கள் தந்த பிறகும், இன்னும் என்ன நிரூபிப்பது? சுப்ரீம் கோர்ட் ஜட்ஜ் ஒருவரைக் கொண்டு விசாரணை நடத்தினால் மேலும் விவரங்களைத் தந்து நிரூபிக்க முடியும் என்று நான் கூறிய பிறகு - கப்பலில் இருந்து தற்சமயம் எப்படியாவது கரையேறினால் போதுமென்று - வேறு வழியின்றி சுப்ரீம் கோர்ட் ஜட்ஜ் விசாரணைக்கு ஒத்துக் கொண்டிருக்கிறார். அந்த விசாரணையின்போது கப்பல் பேர ஊழல் எத்தகைய திடுக்கிடும் மர்மங்கள் நிறைந்தது என்ற பல தகவல்கள் நாட்டுக்குக் கிடைக்கும்!

சட்டமன்றத்தில் காட்டப்பட்ட கோப்புகளை - எதிர்க்கட்சித் தலைவர்கள் சபாநாயகர் அறையில் விரிவாகப் படிக்க அனுமதிக்க

வேண்டுமெனக் கேட்டு - தி.மு.க. ஆட்சியில் அவ்வாறு வசதி செய்து தரப்பட்டிருக்கிறது. ஆனால், முதலமைச்சர் சட்டமன்றத்தில் படித்துக் காட்டிய கப்பல் சம்பந்தப்பட்ட ஒரு கோப்பினை சபாநாயகர் அறையில் வைத்து நாங்கள் படித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டதற்கு அனுமதிக்கப்படவில்லை. மடியில் கனமிருந்தால் வழியில் பயமிருப்பது இயல்புதானே!

கீழ்மேட்டூர் மின் திட்டம்! அதற்குத் தமிழ்நாட்டு நிறுவனம் ஒன்று கேட்ட டெண்டர் வழங்கப்படவில்லை. ஜப்பானியக் கம்பெனியொன்று கேட்ட குறைந்த டெண்டரை விட்டுவிட்டு, அதிக டெண்டர் கேட்டுள்ள பிரான்சு கம்பெனிக்கு மாநிலப் பொதுப்பணித்துறை சிபாரிசு செய்து மத்திய அரசு அனுமதிக்காக அனுப்பியிருக்கிறார்கள். இதிலும் ஒன்றிரண்டு கோடிகள் பங்கிட்டுக் கொள்ள - பேச்சு வார்த்தை நடத்த - எம்.ஜி.ஆரின் இதயத்திலே இடம் பெற்றுள்ள பயணக் கட்டுரை ஆசிரியர் பாரீஸ் போய் வந்த செய்தியை கண்டனத் தீர்மானத்தில் விளக்கமாகச் சொன்னேன்.

முதலமைச்சர் இதுகுறித்து எட்டுமணி நேர பேச்சில் மூச்சுகூட விடவில்லை!

உடன்பிறப்பே! இதற்குப் பெயர்தான் அடடா! எட்டுமணி நேர இமாலயச் சாதனை!

அன்புள்ள,

மு. க.

(14-11-1979)

704. இரட்டைக் குழல் துப்பாக்கி!

உடன்பிறப்பே,

உதவிகளைப் பெறுவதற்கும் - உரிமைகளை வலியுறுத்துவதற்கும் உள்ள வேறுபாட்டினை முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்களுக்குப் புரிய வைப்பது என்பது மிகவும் சிரமமான காரியம்.

சட்டப்பேரவையில் கண்டனத் தீர்மானத்தின் மீது உரையாற்றிய நமது பேராசிரியர் அவர்கள் பெரியாரும், அண்ணாவும் சமதர்மக் கொள்கை குறித்து ஆழமான கருத்துக் கொண்டிருந்ததையும் - அதே சமயத்தில் பிற்படுத்தப்பட்டோர் - தாழ்த்தப்பட்டோர் - தங்கள் வகுப்புக்களின் பெயரால் - கல்வியிலும், உத்தியோகங்களிலும் உரிய இட ஒதுக்கீடுகளைப் பெற வேண்டுமென்று தொடர்ந்து வலியுறுத்தி வந்ததையும் மிக விளக்கமாகச் சுட்டிக் காட்டினார்.

கண்டனத் தீர்மானத்தை அவர் முன்மொழிந்து பேசும்போது முதலமைச்சர் அவைக்கே வரவில்லை. அந்தத் தீர்மானத்தின்போது மூன்று நான்கு நாட்கள் உறுப்பினர்கள் பலரும் கருத்துக்களை வெளியிட்டபோது கூட, முதல்வர் அவைக்கு வரவில்லை. எல்லோருடைய பேச்சையும் வீட்டில் இருந்தபடியே டெலிபோன் மூலம் கேட்டுக் கொண்டதாக முதலமைச்சரே, பேரவையில் கூறினார்.

கண்டனத் தீர்மானத்தில் எம்.ஜி.ஆர். அரசின் மீது பயங்கரமான ஊழல் குற்றச்சாட்டுகள் எப்படி ஆதாரங்களுடன் எடுத்து வைக்கப்பட்டனவோ - அதைப் போலவே தொழிலாளர் - விவசாயிகள் - அரசு அலுவலர் - காவல் துறையினர் - நெசவாளர் - சிறுபான்மையோர் - தாழ்த்தப்பட்டோர் கடும் அடக்குமுறைகளுக்கும், பழி வாங்கும் படலங்களுக்கும் ஆளாக்கப்படுகிற - ஆளாக்கப்பட்ட நிகழ்ச்சிகளும் ஆதாரங்களுடன் எடுத்து வைக்கப்பட்டன. கண்டனத்

தீர்மானத்தில் முக்கிய இடத்தைப் பெற்றவைகளுள் பிற்படுத்தப்பட்டோரை பாதிக்கும் அரசாங்க உத்தரவைப் பற்றிய கருத்தும் ஒன்றாகும்.

கண்டனத் தீர்மானத்தைக் கைவிட முடியாது. வாக்கெடுப்பு சட்டமன்றத்தில் நடத்தியே ஆக வேண்டும் என்று நான் கூறியபோது பிற்படுத்தப்பட்டோரைப் பாதிக்கும் உத்தரவை முதலமைச்சர் வாபஸ் பெற மறுப்பதாலும் - தொழிலாளர் பிரச்சினைகளை அணுகுகிற முறையும் - மக்களின் பல்வேறு பிரிவினரின் கோரிக்கைகளையும், கிளர்ச்சிகளையும் அணுகுகிற முறையும் ஒழுங்காக இல்லாததாலும், கண்டனத் தீர்மானத்தை வலியுறுத்துகிறோம் என்று அழுத்தம் திருத்தமாகக் குறிப்பிட்டேன். ஆனால் தி.மு. கழகமும், இந்திரா காங்கிரசும், முஸ்லிம் லீக்கும்தான் கண்டனத் தீர்மானத்தை ஆதரித்து வாக்களித்தன.

சட்டமன்றத்தில் கண்டனத் தீர்மானத்தை ஆதரிக்க இயலாமல் நடுநிலை வகித்தாலும் கூட இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி இந்த அரசின் - பிற்படுத்தப்பட்டோரைப் பாதிக்கும் பொருளாதார அடிப்படை உத்திரவை எதிர்க்கின்ற அணியில்தான் இதுவரை இருந்து வந்திருக்கிறது. இனியும் இருக்கும்.

எப்பொழுதோ இரண்டு உறுப்பினர்கள் மூன்று ஆண்டுகளுக்கு முன்பு தனியார் பஸ் முதலாளிகளின் தொல்லைகள் குறித்துப் பேசினார்கள் - மனுக் கொடுத்தார்கள் - என்பதற்காக மாண்புமிகு உறுப்பினர்களை மதிக்க வேண்டும் - அவர்களது கோரிக்கைகளை அலட்சியப்படுத்தக் கூடாது - என்ற பரந்த மனப்பான்மை எம்.ஜி.ஆருக்கு ஏற்பட்டு, தேசிய மயக் கொள்கைக்கு விரோதமாக - சமதர்மத்தைத் தூக்கிச் சாக்கடையிலே வீசிவிட்டு - தனியார் பஸ் முதலாளிகள் இனிமேல் மூன்று பஸ்களுக்கு பதிலாக ஐந்து பஸ்கள் வைத்துக் கொள்ளலாம் என்று உத்தரவு பிறப்பிக்க முடிகிறது!

ஆனால் தி.மு.கழகத்தினரும், திராவிடர் கழகத்தினரும், இந்திரா காங்கிரசாரும், இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியினரும், முஸ்லீம் லீக்கினரும், அகில இந்திய பார்வார்டு பிளாக், குடியரசு, கிறிஸ்துவ ஜனநாயக முன்னணி, உழைப்பாளர் கட்சிகளைச் சார்ந்தோரும் - பிற்படுத்தப்பட்ட சமுதாயத்துப் பெரியோர்களும், மாணவர்களும் ஒன்று கூடி இந்த அரசின் பிற்படுத்தப்பட்டோரைப்

பாதிக்கும் உத்தரவைத் திரும்பப் பெற வேண்டுமென்று எழுப்புகிற முழக்கம் மட்டும் முதலமைச்சர் காதிலே விழ மறுக்கிறது!

என் செய்வது - பாதிக்கப்பட்ட மக்களுக்காக நாம் கோடியிலே நின்று பேசுகிறோம்!

பஸ் முதலாளிகளுக்காக கோடிகள் அல்லவா பேசுகின்றன!

அதனால்தான் நமக்குத் திரும்பாத முதல்வரின் செவி, பாவம்! அந்த ஏழை எளிய பஸ் முதலாளிகளுக்கு மூன்றை ஐந்து பஸ்களாக்கிக் கொடுக்க அவசரமாகத் திரும்புகிறது!

எதற்கெடுத்தாலும் அண்ணா, பெரியார் என்று கூறி அவர்களையும் கொள்கையற்ற தலைவர்கள் என்பதைப் போல மக்கள் மன்றத்தில் ஆக்குகிற இழிந்த முயற்சியில் எம்.ஜி.ஆர். ஏன் ஈடுபடுகிறாரோ? தெரியவில்லை!

அவர்கள் கொள்கையில் இமயங்கள்! இலட்சியத் தங்கங்கள்! இளிக்கும் பித்தளைகள் அல்ல!

ஏழை மக்கள் அனைவரும் கல்விபெற - மதிய உணவு - இலவசக் கல்வி - மற்றும் ஸ்காலர்ஷிப் - போன்ற பல சலுகைகள் உதவிகள் அளிக்கப்பட வேண்டும் என்று பெரியாரும், அண்ணாவும், பெருந்தலைவர் காமராசரும் கொண்டிருந்த அழுத்தமான கருத்தும் - அவர்கள் வழியில் கழக ஆட்சியில் அத்தகைய பொருளாதாரச் சலுகைகள் ஏழை எளிய பிற்படுத்தப்பட்டோருக்கும், தாழ்த்தப்பட்டோருக்கும் பெருகிய புள்ளி விவரங்களும் யாரும் மறுக்க முடியாதவை!

இந்தச் சலுகைகளையும் - பிற்படுத்தப்பட்டோருக்கு எண்ணிக்கை அடிப்படையில் கிடைக்க வேண்டிய இட ஒதுக்கீட்டு உரிமைகளையும் இணைத்துக் குழப்பிக் கொள்கிறார் முதலமைச்சர்!

51 சதவிகித ஒதுக்கீடு உள்ள எல்லோரும் போட்டியிடக் கூடிய இடங்களில் பொருளாதாரக் கண்ணோட்டம் பார்க்காத முதலமைச்சர் - 18 சதவிகித இட ஒதுக்கீடு பெற்றுள்ள, தாழ்த்தப்பட்டோர் உரிமையில் பொருளாதார அளவுகோலை வைக்க முடியாத முதலமைச்சர் - 31 சதவிகித இட ஒதுக்கீடு பெற்றுள்ள பிற்படுத்தப்பட்ட மக்களின் உரிமையில் மட்டும் பொருளாதார

அளவு கோல் கொண்டு அவர்களைச் சீரழிக்க முனைவது எதற்காக?

பிற்படுத்தப்பட்டோருக்கான 31 சதவிகிதத்தை அப்படியே விட்டுவிடுக! தாழ்த்தப்பட்டோருக்கான 18 சதவிகிதமும் பாதுகாக்கப்படட்டும்! எல்லா வகுப்பினரும் போட்டியிடக் கூடிய 51 சதவிகித ஒதுக்கீட்டில் அனைத்து சாதியிலுமுள்ள (உயர் சாதி - தாழ்ந்த சாதி - எதுவாயினும்) ஏழை மாணவர்களுக்கென்று 20 சதவிகிதத்தை பொருளாதார அடிப்படையில் வகுத்திடுக!

இதைச் சொன்னால், முதல்வர் எம்.ஜி.ஆர். உடனே அண்ணாயிசம் என்று பேசுகிறார். இவரது அண்ணாயிசம்தான் உலகப் புகழ் பெற்றதாயிற்றே! கேப்டலிசம், சோஷலிசம், கம்யூனிசம் மூன்றும் சேர்ந்ததே அண்ணாயிசம் என்று அமெரிக்க விஜயத்தின் போது திருவாய் மலர்ந்தருளியவராயிற்றே!

அண்ணாவும் பெரியாரும் சமூக நீதி - இட ஒதுக்கீடு பற்றி என்ன சொன்னார்கள் என்று ஆயிரம் முறை எடுத்துக் காட்டி விட்டோம்!

சாதிகள் அனைத்தும் நீங்கி - அனைவரும் ஒன்றே குலம் என்ற நிலை ஏற்படும் வரையில் பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீடுகளைப் பொருளாதார அடிப்படையில் அமைக்காமல் வகுப்புவாரி அடிப்படையில்தான் அமைக்க வேண்டுமென்று அய்யாவும் அண்ணாவும் இறுதி வரையில் வற்புறுத்தி வந்ததை - திராவிட இயக்க உணர்வுகளை உண்மையாகவே பெற்றிருப்போர் மறந்திருக்க முடியாது! மறுத்துரைக்கவும் இயலாது!

மாநாடுகள் - பொதுக்கூட்டங்கள் - பொதுக்குழு செயற்குழு தீர்மானங்கள் - பெரியார் நூற்றாண்டு விழா நிகழ்ச்சிகளில் விளக்கங்கள் - சட்டமன்றத்தில் கண்டனத் தீர்மானம் - இத்தனைக்கும் பிறகு எம்.ஜி.ஆர். அரசு, பெரியார், அண்ணா இருவரின் பெயர்களைச் சொல்லிக்கொண்டே அவர்களின் உயிர்க் கொள்கைக்குக் குழிதோண்டுவதை நிறுத்த முடியாது என்று மண்வெட்டியையும், கடப்பாரையையும் ஓங்கித் தூக்குமேயானால் அதைத் தடுத்து நிறுத்த வேண்டியது நமது தலையாய கடமையாகும்!

கடப்பாரை, மண்வெட்டியைத் தடுக்கும் வகையில் தான் நண்பர் வீரமணி அவர்களின் தலைமையில் திராவிடர் கழகம்,

அரசாங்கத்தின் அநியாய உத்தரவை எரிக்கப் போகிறது! இந்த மாதம் 26-ஆம் நாள்!

கொள்கையற்ற கொடியோர் கோலோச்சும் வரையில் தமிழ் மக்களுக்கு இப்படித்தான் மறைமுகமாகவும், நேரடியாகவும் மரணக்குழிகள் தோண்டப்படும் என்பதால் இந்த ஆட்சியையே மாற்றி அமைக்கும் பணியில் அரசியல் ரீதியாக நாம் ஈடுபடுகிறோம்!

இரட்டைக் குழல் துப்பாக்கி என்றாரே, அண்ணா!

சமுதாய ரீதியில் திராவிடர் கழகம் களத்தில் இறங்குகிறது! தீமை பயக்கும் உத்தரவை தீயிட்டுப் பொசுக்க!

இப்படி உத்தரவிடுகிறவர்கள் ஆட்சியில் நீடித்தலாகாது - அகற்றப்பட வேண்டியவர்கள் - என்று அரசியல் ரீதியில் நாம் களத்தில் இறங்குகிறோம்.

இருமுனைகளிலும் ஒருவருக்கொருவர் துணையாக நின்று நமது சமுதாயத்துக்கு வந்துள்ள பேராபத்தைத் தகர்த்தெறிய உறுதி மேற்கொள்வோம்.

அன்புள்ள,

மு. க.

(16-11-1979)

705. இதோ! அந்த வரிசையில் - ஒரு ஏடு!

உடன்பிறப்பே,

எம்.ஜி.ஆர். ஆட்சியின் மீது பல்கேரியா பால்டிகா கப்பல் பேர ஊழல் - மருத்துவக் கல்லூரி மாணவர் தேர்வு ஊழல் - எம்.ஜி.ஆர். விருப்பத்திற்குரிய சிலரை மருத்துவக் கல்லூரியில் சேர்க்க அமெரிக்கத் தமிழர்கள் என்ற பெயரால் ஒதுக்கப்பட்ட மணியன் கோட்டா ஊழல் - கோர்ட்டில் காட்டப்பட்ட கோப்புகளிலேயே தேதிகளைத் திருத்தி மோசடி செய்த ஊழல் - லோயர் மேட்டூர் மின் திட்ட டெண்டர் வழங்க சிபாரிசு செய்ததில் ஊழல் - எதிர்க்கட்சியினரை அடித்து உதைக்க ஆளுங்கட்சியினரையும் அவர்களுக்குத் துணையாக போலீசையும் பயன்படுத்தியதை அமைச்சர் பொன்னையன் பழனி பாபாவிடம் தொலைபேசிப் பேச்சு மூலம் உறுதிப்படுத்திய விவகாரம் - இத்தனையும் சட்டமன்றத்தில் நேருக்கு நேராக முதலமைச்சர் எம்.ஜி.ஆர். முன்னிலையில் எடுத்து வைக்கப்பட்டன.

கப்பல் பேர ஊழலுக்கு விசாரணை நடத்த ஒப்புக் கொள்வதன்றி வேறு வழியில்லாத நிலையில் சுப்ரீம் கோர்ட்டில் உள்ள ஜட்ஜ் ஒருவரை நியமிப்பதாக எம்.ஜி.ஆர். உறுதியளித்தார்.

நாட்கள் பத்தொன்பது ஆகியும் கூட இதுவரை சுப்ரீம் கோர்ட் ஜட்ஜ் நியமனத்தைக் காணோம்!

மருத்துவக் கல்லூரி மாணவர் தேர்வு பற்றிக் கோர்ட்டில் அளிக்கப்பட்ட ரிக்கார்டுகளிலே தேதிகளைத் திருத்தியதுபோல கப்பல் பேர ஊழல்கள் சம்பந்தப்பட்ட கோப்புக்களையும் திருத்தி மோசடி செய்யத் திட்டம் போட்டு, அதற்காகவே நாள் கடத்தப்படுகிறதோ என்னவோ! அதனால்தான் அந்தக் கோப்புக்களையும், தொடர்புடைய ரிக்கார்டுகளையும் கவர்னரிடமோ, அல்லது தலைமை நீதிபதியிடமோ உடனடியாக ஒப்படைக்க வேண்டுமென்று தி.மு.க. தலைமை நிர்வாகக் குழு வலியுறுத்தியிருக்கிறது.

மருத்துவக் கல்லூரி மாணவர் தேர்வுப் பட்டியல் வெளியிட்டதில் முறைகேடு - கோர்ட்டுக்குக் காட்டப்பட்ட தேதிகளைத் திருத்திய மோசடி - இரண்டையும் குறித்து உயர்நீதி மன்ற நீதிபதிகள் இருவர் தங்கள் கண்டனத்தை அறிவித்துள்ளனர்.

அதுமட்டுமா? முதலமைச்சர் உத்தரவிட்டு ஒதுக்கிய மணியன் கோட்டா என அழைக்கப்படும் மாணவர் பட்டியலையும் உயர்நீதி மன்ற நீதிபதிகள் ரத்து செய்திருக்கின்றனர்.

சட்டமன்றத்தில் எடுத்து வைத்த இந்தக் குற்றச்சாட்டுகளை எம்.ஜி.ஆர். மறுத்தார். ஆனால் நீதிமன்றம் எம்.ஜி.ஆர். அரசின் முறைகேடான உத்தரவை ரத்தே செய்திருக்கிறது. தேதி திருத்திய மோசடியைக் கண்டித்தும் இருக்கிறது.

லோயர் மேட்டூர் மின்திட்ட டெண்டர் பற்றிய குற்றச்சாட்டுக்கு எம்.ஜி.ஆர். சட்டமன்றத்தில் பதிலே சொல்லவில்லை. பழனி பாபாவுடன் பேசியது உண்மைதான் என்றும், அதன் மூலம் எதிர்க்கட்சியினரை ஆளுங்கட்சித் தொண்டர்களை விட்டு அடித்து உதைக்கச் சொல்லி அவர்களுக்கு அமைச்சர் வீட்டில் விருந்து வைத்தது உண்மைதான் என்றும் அரசின் சார்பில் சட்டமன்றத்தில் ஒத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது.

இவ்வளவுக்கும் பிறகு - சில ஏடுகள் எம்.ஜி.ஆருக்கு வக்காலத்து வாங்கிக் கொண்டு என் மீதும், கழகத்தின் மீதும் காய்ந்து விழுகின்றன. வாங்காத கப்பலைப் பற்றித்தானே இவ்வளவு விவகாரமும் என்று பிரச்சினையிலிருந்து நழுவப் பார்க்கின்றன சில ஏடுகள்!

வாங்குவதற்கான முதல் ஒப்பந்தம் கடந்த மார்ச் மாதம் பல்கேரியாவில் முடிவுற்றபோதே - அதற்கு முன்பே வாங்க வேண்டியதில் ஒரு பகுதியைத் திரைமறைவில் வாங்கி பெரிய தேவதைக்குப் பெரும் பங்கும், குட்டித் தேவதைகளுக்கு உரிய பங்குகளும் பிரித்துக் கொள்ளப்பட்டன என்பதை சட்டமன்றத்தில் ஆதாரபூர்வமாக கடிதங்களுடனும், டெலக்ஸ் தந்திகளுடனும் எடுத்துக் காட்டியிருக்கிறேன்.

கப்பல்களின் விலையைக் குறைத்து ஒப்பந்தம் செய்த அதிகாரிகளைக் குறை கூறி, அவர்களை வேறு இலாக்காக்களுக்கு முதலமைச்சர் மாற்றியது ஏன்? பாராட்டப்பட வேண்டிய அதிகாரிகள் பழிவாங்கப்பட்டது ஏன்? ஒப்பந்தம் முடிவுற்ற பிறகு

அந்தப் பல்கேரியக் கப்பல்கள் வாங்கப்படாத காரணம் என்ன? அவைகளின் விலைகள் குறைக்கப்பட்டதால் வரவேண்டிய கமிஷன் பெருமளவுக்கு வரமுடியாமல் தடுக்கப்பட்டு விட்டது என்பதுதானே!

இடையில் வந்த போலந்துக் கப்பல் பேரம் எதற்காக வந்தது? இடைத்தரகர் வேண்டாமென்ற முதலமைச்சர், திடீரெனப் போலந்து கப்பலுக்கு ஒரு இடைத்தரகரின் உதவியைப் பெறுவானேன்? பல்கேரியாக் கப்பல்களை வாங்க இடைத்தரகர்களை அங்கீகரித்ததும் இந்த அரசு தானே?

நியமிக்கட்டுமே சுப்ரீம் கோர்ட்டில் உள்ள ஒரு ஜட்ஜை! இன்னும் எத்தனை உண்மைகள் வெளிவர இருக்கின்றன. வாங்காத கப்பல்களுக்கு ஒப்பந்தம் செய்து கொண்டு, ஒப்பந்தத்திற்கு முன்பே ஊழல் நடத்திப் பெரும் தொகையைக் கொள்ளையடித்த செய்திகள் எல்லாம் சட்டமன்றத்தில் வெளிவந்தது மட்டுமல்ல, நீதி மன்றத்திலும் வெளிவரத்தான் போகின்றன.

அதற்குள்ளாக எம்.ஜி.ஆரின் ஆதரவு ஏடுகள் - துள்ளிக் குதிப்பானேன்? நம் மீது காய்ச்சல் கொண்டு பாய்ச்சல் நடத்துவானேன்?

உண்மையைச் சொன்னால் உடம்பு எரிகிறதோ? எனக் கேட்பர் கிராமங்களில்!

அதைத்தான் கல்கி, குமுதம் போன்ற ஏடுகளைப் பார்த்து நாம் கேட்க வேண்டியிருக்கிறது!

கப்பல் பேர ஊழலைச் சொன்னால் கண்ணப்பனைப் பற்றி நாயுடு கமிஷன் என்ன கூறியிருக்கிறது தெரியாதா? மாதவனைப் பற்றி நாயுடு கமிஷன் என்ன கூறியிருக்கிறது தெரியாதா? என்று கல்கியார் வரிந்து கட்டிக் கொண்டு வருகிறார். நாம் என்னவோ கல்கியாரின் ஊழல்களைப் பற்றிச் சொன்னதுபோல, கண்கள் சிவக்க கோபம் கொப்பளிக்க அவர், கொக்கரிப்பதன் ரகசியம்தான் நமக்குப் புரியவில்லை.

மாதவன் இன்று தி.மு.க.வில் இல்லை! நாயுடு கமிஷன் அறிக்கையை மறுத்து அவர் ஒரு விளக்கமளித்து அறிக்கை விடுத்து அதுவும் ஏடுகளில் வெளிவந்துள்ளது. கல்கியார் குறிப்பிடுகிற சர்க்காரியா கமிஷன் நண்பர்கள் பெரும்பாலோர் இன்றைக்கு

கல்கியாரின் கடவுளான எம்.ஜி.ஆர். பக்கம் தான் இருக்கிறார்கள். நித்தநித்தம் லஞ்சம் வாங்குகிற சத்தியவாணிமுத்து என்று எம்.ஜி.ஆர். ஜனாதிபதிக்குத் தந்த புகாரில் சிறப்பிக்கப்பட்ட அந்த அம்மையார் இன்று மத்திய அரசில் காபந்து சர்க்காரில் ஒரு அமைச்சர்! ஆம், கல்கியார் அடிதொழுது வணங்குகின்ற எம்.ஜி.ஆர். கட்சியின் அமைச்சர்!

இன்னும் யார்? யார்? அந்தப் பட்டியல் கல்கியாருக்கே தெரியும்!

கண்ணப்பனைப் பற்றி நாயுடு கமிஷன் ஏதோ எழுதி விட்டதாம்! அதைத் தூக்கி வைத்துக்கொண்டு - இப்போது எம்.ஜி.ஆர். மீது ஆதாரங்களுடன் சாட்டப்பட்ட குற்றங்களை மறைத்து விடலாமென்று கல்கி கனவு காண்கிறது!

இந்த ஆட்சியின் மீது லஞ்சம் ஊழல் என்று நான் அலறுகிறேனாம்! கல்கியார், பாவம் - அழுகிறார்!

கண்ணப்பனைப் பற்றி நாயுடு கமிஷன் தெரிவித்த கருத்துகளை வைத்து எம்.ஜி.ஆரின் - பயங்கர ஊழல்களை - பல்கேரியக் கப்பல் ஊழல்களை - பஸ் முதலாளிகளிடம் லஞ்சம் பெற்ற ஊழல்களை - மருத்துவக் கல்லூரிப் பட்டியல் ஊழல்களை - மணியன் கோட்டா ஊழல்களை - மறைத்து விடலாமென்று மனப்பால் குடிக்கும் கல்கியார், இதோ கண்ணப்பன் விடுத்துள்ள அறிக்கை நவம்பர் முதல் தேதியே ஏடுகளில் வெளிவந்துள்ளதைப் படித்துப் பார்க்கட்டும்.

அதைப் படித்துப் பார்த்த பிறகும், கல்கியார் தன் முகத்தில் பூசப்பட்ட கரியை மாற்றார் முகத்தில் பூச முனைவாரேயானால் மக்கள் சிரிக்கத் தொடங்குவார்கள். (கல்கியார் எழுதியதைத்தான் திரும்ப எழுதியிருக்கிறேன்.) அப்படி மக்கள் சிரிப்பதை - இவரென்ன பெரிய பரசுராமரா? ஊழலே புரியாதவரா? என்று காமராசரால் கடுமையாக விமர்சிக்கப்பட்ட ராஜாஜி அவர்களே திடீரெனத் தோன்றினால்கூட நிறுத்த முடியாது!

இதோ! கல்கியார் படித்துப் பார்க்க கண்ணப்பனின் அறிக்கை:

கோவை மாவட்டம் மருதமலை கோவில் கணக்குகள் தணிக்கை அதிகாரிகளால் தணிக்கை செய்யப்பட்டதில் பல்லாயிரக்கணக்கான ரூபாய் பல்வேறு வகைகளில்

அப்போதைய நிர்வாக அதிகாரியால் மோசடி செய்து இருப்பது கண்டுபிடிக்கப்பட்டு, மேல் அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தியதில் நிர்வாக அதிகாரி சஸ்பெண்டு செய்யப்பட்டு, குற்றச்சாட்டுகளின் பேரில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

விசாரணை பூர்த்தியடைந்து அதன் மீது முடிவு எடுக்கும் முன்பே தி.மு.க. அரசு கலைக்கப்பட்டு கவர்னர் ஆட்சி பிரகடனப் படுத்தப்பட்டது. குற்றச்சாட்டுகள் நிரூபணமான காரணத்தால் சஸ்பெண்டு செய்யப்பட்ட நிர்வாக அதிகாரி கவர்னர் ஆட்சியில் டிஸ்மிஸ் செய்யப்பட்டார்.

இதன் பிறகு பொறுப்பேற்ற அ.தி.மு.க. அரசு மேற்கண்ட அதிகாரியை வேலை நீக்கம் செய்தால் மட்டும் போதாது; அவர் மீது கிரிமினல் நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஆணையிட்டு கோவை முதல்வகுப்பு மாஜிஸ்திரேட்டு கோர்ட்டில் அரசினரால் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

இதற்கிடையில் அவர் மீது நிரூபணமாகிவிட்ட குற்றங்களில் இருந்து தப்பவும், இழந்துவிட்ட வேலையை திருப்பிப் பெற்றுக் கொள்ளவும் அபாண்டமான, உண்மைக்கு மாறான சில குற்றச்சாட்டுகளைத் தயாரித்து நாயுடு கமிஷனிடம் புகார் கொடுத்தார். முறைப்படி அந்தக் குற்றச்சாட்டுகளுக்கு கமிஷனிடம் மறுப்பு தெரிவிக்கப்பட்டது.

இறுதியாக கமிஷன் தந்திருக்கும் அறிக்கையில், தி.மு.க. ஆட்சிக் காலத்தில் சஸ்பெண்டு செய்யப்பட்டு, கவர்னர் ஆட்சியில் டிஸ்மிஸ் செய்யப்பட்டு, அ.தி.மு.க. அரசால் கிரிமினல் வழக்கு தொடரப்பட்டுள்ள ஒரு அதிகாரிக்கு, கமிஷன் நற்சான்றிதழ் வழங்கியுள்ளது. அதுபற்றி நான் எதுவும் கூற விரும்பவில்லை.

கோவில் உபரி நிதிகளை என்னென்ன காரியங்களுக்குப் பயன்படுத்தலாம் என்பதற்கு அறநிலையத்துறை சட்டங்களிலேயே விதிமுறைகள் உள்ளன.

தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு இந்துமத அறக் கட்டளைகள் சட்டம் பிரிவு 66-இன்படி வசதியில்லாத கோவில் வளர்ச்சிக்காகவும், திருப்பணிகளுக்காகவும், கல்விக்காகவும், உடல்ஊனமுற்றவர் களுக்காகவும், இந்துமதப் பிரசாரத்துக்காகவும், பொதுவாக இந்து மத கோட்பாட்டிற்காகவும் செலவழிக்கலாம் என விதிமுறைகள் உள்ளன.

அந்த அடிப்படையில் சில காரியங்களுக்கு அதிகாரிகள் உபரி நிதியை வழங்கியுள்ளனர், எந்தவிதமான தவறோ, முறைகேடோ நடைபெறவில்லை என்பதைத் திட்டவட்டமாக நான் கூற முடியும்.

கமிஷன் அறிக்கையை வைத்துக்கொண்டு, தாறுமாறான வகையில் பத்திரிகையில் செய்தி வெளியிட்டுக் கொண்டிருப்பதைவிட, தற்போதைய அ.தி.மு.க. அரசுக்குத் தைரியமிருந்தால் நீதிமன்றத்தில் என் மீது வழக்கு தொடரட்டும். அதைச் சந்திக்க நான் தயாராக இருக்கிறேன்.

இவ்வாறு கூறுகிறது கண்ணப்பனின் அறிக்கை!

கல்கியார் அவர்களே! கழகத்தின் மீதும் என் மீதும் உங்களுக்குள்ள எரிச்சலின் காரணம் புரிகிறது - அதற்காக கல்கி ஏட்டுக்கு நீண்ட நாட்களாக இருந்து வருகிற - கல்கி கிருஷ்ணமூர்த்தி அவர்களால் கடைப்பிடிக்கப்பட்ட - நல்ல மரபுகளை நாசமாக்கி விடாதீர்கள் என்று மட்டும் கூறிக்கொள்கிற கடமை எனக்கு உண்டு!

உடன்பிறப்பே! கழக விரோத ஏடுகளின் வரிசையில் கல்கியும் தன்னைச் சேர்த்துக்கொள்ள முனைகிறது. அவ்வளவுதான்!

அன்புள்ள,

மு. க.

(24-11-1979)

706. பிரதமர் விஜயம் - பெரு வெற்றி!

உடன்பிறப்பே,

பிரதமர் சரண்சிங் தமிழகச் சுற்றுப்பயணத்தைக் கடந்த 24-ஆம் நாளன்று மேற்கொண்டார். காலையில் விமான நிலையத்தில் வரவேற்பு, முதலமைச்சரும் மற்ற அமைச்சர்களும் வரவேற்பில் கலந்து கொண்டனர். லோக்தளக் கட்சியினர், அ.தி.மு.க.வினர், திராவிடர் கழகப் பொதுச்செயலாளர் நண்பர் வீரமணி தலைமையில் திராவிடர் கழகத்தினர் - விமான நிலையத்தில் சரண்சிங் அவர்களை வரவேற்றனர். சென்னை பெரியார் திடலில் பிரதமர் கலந்து கொள்ளும் விழாவுக்கு இரண்டு மூன்று தடவைகள் நாள் குறிக்கப்பெற்று இறுதியாக 24-ஆம் தேதி காலையில் பிரதமர் அவர்கள் பெரியார் திடலில் திராவிடர் கழகம் நடத்தும் மருத்துவமனை அடிக்கல் நாட்டு விழாவில் கலந்து கொள்வது உறுதிப்படுத்தப்பட்டு விளம்பரங்களும் மிகுந்த ஆர்வத்துடன் செய்யப்பட்டிருந்தன. விமானத்தில் வந்திறங்கிய பிரதமர் சரண்சிங், கலைவாணர் அரங்கம் சென்றார். பெரியவர் பக்தவத்சலம் அவர்களின் படத்தைத் திறந்து வைத்தார்.

அங்கிருந்து நிகழ்ச்சி நிரலின்படி பெரியார் திடலுக்குச் செல்லவில்லை. பெரியார் மணியம்மை மருத்துவமனைக்கான அடிக்கல் நாட்டு விழாவுக்குக் கவர்னர் மட்டுமே சென்றார். அழைப்பிதழில் குறிப்பிடப்பட்டிருந்த மத்திய அமைச்சர் கரூர் கோபாலும் கலந்து கொள்ளவில்லை.

காலையில் அடிக்கல்நாட்டு விழாவுக்குப் பிரதமர் வராவிட்டாலும் மாலையில் பெரியாரின் கல்லறைக்கு வந்து மலர் வளையம் வைப்பார் என்று காலை நிகழ்ச்சியில் அறிவிக்கப்பட்டது. அதற்கும் பிரதமர் வரவில்லை.

பெரியாரையோ, திராவிடர் கழகத்தினரையோ அவமதிக்க வேண்டுமென்ற நோக்கம் சரண்சிங் அவர்களுக்கு இருந்திருக்க முடியாது. ஆனால் அவர் அப்படி அவமதித்தது போன்ற ஒரு தோற்றத்தை முதலமைச்சர் உருவாக்கித் தனக்குப் பெரியார் மீதுள்ள தூய்மையான பற்றினை (?) வெளிப்படுத்திக் கொண்டுவிட்டார்.

பெரியார் திடலில் பெரியார் மணியம்மை மருத்துவமனைக்கு அடிக்கல் நாட்டு விழா நிகழ்ச்சிக்கு ஒத்துக்கொள்வது பற்றி ஆரம்பத்திலேயே முதலமைச்சரிடம் பிரதமர் கலந்து பேசி, முடியும் - முடியாது என்று முன்கூட்டியே அறிவித்திருக்கலாம்.

ஒருவேளை பிரதமர், முதலமைச்சர் எம்.ஜி.ஆரைக் கலந்து கொள்ளாமல் நிகழ்ச்சிக்கு ஒப்புதல் அளித்திருந்தால் - அப்பொழுதே உரிய நேரத்தில் முதலமைச்சர், பிரதமருக்கு அறிவித்து பெரியார் திடல் விழாவுக்குச் செல்வது பெரிய பாபம்! என்று தடுத்திருக்கலாம்!

ஏனெனில் இது திடீரென, பிரதமரை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் நண்பர் வீரமணி சந்தித்து அவரிடம் ஒப்புதல் பெற்ற அவசரக்கோலமான நிகழ்ச்சியல்ல! இரண்டொரு மாதங்களாகவே ஏற்பாடு செய்யப்படும் நிகழ்ச்சியாகும்!

வர இயலுமா? இயலாதா? என்பதைப் பிரதமரும் முன்கூட்டியே சிந்தித்து முடிவு எடுத்து அறிவித்திருக்கலாம். கடைசி நிமிடத்தில் இப்படிப்பட்ட ஒரு முடிவைப் பிரதமர் மேற்கொள்ளத் தூண்டியது அரசியல் நாகரிகமாகாது. அதற்குப் பிரதமர் இணங்கி, பெரியார் திடல் நிகழ்ச்சியைப் புறக்கணித்ததும் பிரதமர் பொறுப்பில் இருக்கிற ஒருவருக்கு அழகு ஆகாது!

நாடாளுமன்றத் தேர்தலில் தமிழகத்தில் லோக்தளத்தினர் போட்டியிடப் போகிற மூன்று, நான்கு இடங்களுக்காகப் பெரியாரையும் - பெரியாரின் உண்மைத் தொண்டர்களையும் - பெரியாரின் வழிவந்த பிரதமர் என்று சரண்சிங்கை உளமாரப் பாராட்டிக்கொண்டிருக்கும் திராவிடர் கழகத்துச் செயல்வீரர்களையும் - பிரதமர் சரண்சிங், இவ்வாறு புறக்கணித்துவிட்ட செயல், என்றென்றும் ஆறாத புண்ணாகத்தான் இருக்கும்.

அதற்கு அவர் எப்படி கழுவாய் தேடிக் கொள்ளப் போகிறார் என்று தெரியவில்லை. இப்படிப்பட்ட சில்லறை வேலைகளைச் செய்வது முதலமைச்சருக்குப் பெரிய வெற்றியாகவும், இமாலய சாதனையாகவும் தெரியலாம். ஆனால் தனது சேட்டைகளுக்கு ஒரு பிரதமரைக் காயாகப் பயன்படுத்தியது முறையல்ல!

பெரியார் திடல் விழாவுக்குப் போகாமல் தடுத்துவிட்டு, பிரதமரை எம்.ஜி.ஆர். எங்கே அழைத்துக் கொண்டு சென்றார்? வெள்ளப் பகுதிகளைப் பார்வையிடவா? மதுரை போன்ற, நெல்லை போன்ற, நீலகிரி போன்ற பாதிக்கப்பட்ட இடங்களைச் சுற்றிக்காட்டிப் பிரதமரிடம் வெள்ள நிவாரண நிதி கேட்டிடா? அல்ல! அல்ல!

வெள்ள நிவாரணம் பற்றி எம்.ஜி.ஆர். தன்னிடம் விவாதிக்கவே இல்லை என்று பிரதமர் சரண்சிங் பத்திரிகையாளர் பேட்டியில் கூறியிருக்கிறார்.

ஏதோ - சேலம் நிகழ்ச்சியொன்றைத் தவிர, வேறு நிகழ்ச்சி எதுவுமில்லை!

தினமணி கணக்குக் காட்டியிருப்பதுபோல் கடற்கரைப் பொதுக்கூட்டத்திற்காகத் தடுப்புக் கம்புகள் கட்டுவதற்கு மட்டும் ஐம்பத்து ஐயாயிர ரூபாய் செலவிடப்பட்டிருக்கிறது!

அம்ஃதன்னியில் கூட்டம் நடக்காவிட்டாலும், இரவு முழுவதும் கூட்டத்திற்காக அமைக்கப்பட்ட மின்விளக்குகள் எரிந்து கொண்டிருந்தனவாம்!

மேலும் பல ஏற்பாடுகள்! சுமார் ஒன்றரை அல்லது இரண்டு லட்ச ரூபாய் செலவில் நடத்தப்பட்ட பிரதமர் நிகழ்ச்சிகளில் - வரவேற்புப் பதாகைகள் அனைத்திலும் (ஒன்றிரண்டைத் தவிர) எம்.ஜி.ஆர். அவர்களின் புகழ்பாடும் வாசகங்கள்தான் எழுதப்பட்டிருந்தன.

இவ்வளவு பெரும் செலவுகள் - அதுவும் அரசின் சார்பில் நடத்தப்பட்டு - புதிதாக வருகை தரும் பிரதமருக்கு வரவேற்போ, வாழ்த்தோ கூறாமல், அவரை வரவேற்கிற முதலமைச்சருக்கு விளம்பரங்கள் செய்து கொள்வதற்கே பயன்படுத்தப்பட்டிருக்கின்றன என்பதை மக்கள் உணராமல் இல்லை!

இந்த அழகில் அய்யா-அம்மா பெயரால் கட்டப்படுகிற மருத்துவமனை கல்நாட்டு விழாவுக்குப் பிரதமரைப் போகவிடாமல் தடுத்து விட்டதைத்தான் பிரதமர் விஜயத்தால் கிடைத்த பெருவெற்றி என்று எம்.ஜி.ஆர். மார்தட்டிக் கொண்டு மகிழ்ச்சி அடைகிறார்!

உடன்பிறப்பே, புரிகிறதா? பிற்படுத்தப்பட்டோர் எங்கிருந்தாலும் அவர்களது நிலையும் - நெருக்கடியும் எப்படியிருக்கிறதென்ற உண்மை! இப்போதாவது உனக்குப் புரிகிறதா?

அன்புள்ள,

மு. க.

(26-11-1979)

707. கூட்டணியின் கூர்வாளே! வா! வா!

உடன்பிறப்பே,

இடைவிடாது எத்தனையோ பணிகள்! அதற்கிடையே உன்னை சேலத்திற்கே அழைக்காவிட்டால் எங்கே நீ வேறு கோபித்துக் கொள்வாயோ என்றுதான் ஓய்வற்ற இந்த நிலையிலும் உனக்கு இந்தக் கடிதம் எழுதுகிறேன்!

சேலம் எழுச்சிக் கோலம் கொள்கிறது எனச் செய்திகள் வந்தவண்ணமுள்ளன. தேர்தல் சிறப்பு மாநாடு! திறந்தவெளி மாநாடுதான்! நுழைவுக் கட்டணம் உண்டு என்பதை நீ அறிவாய்! நீ வாங்குகிற ஒவ்வொரு நுழைவுச் சீட்டும் கழகத்தின் தேர்தல் பணிகளுக்காக அல்லவா செலவிடப்பட இருக்கிறது. அதனால் நீ குடும்பத்தாருடன் வந்து குழுமிடுவாய் என எதிர் நோக்குகிறேன்.

தள்ளாத வயதிலும் தடம் பிறழாது இயக்கப் பணிபுரிந்த ஏந்தல் ஜி.பி. சோமசுந்தரம் பெயர் திறந்தவெளி மாநாட்டு அரங்கிற்கு இடப்பெற்றுள்ளது. கிழச்சிங்கம்! இனமானங்காத்த வேங்கை! அடக்கத்தின் உருவம்! அன்பான உள்ளம்! அவரைச் சேலத்துச் செயல்வீரர்கள் மட்டுமல்ல, நாடு முழுவதுமுள்ள நமது கழகக் கண்மணிகள் மறந்திட இயலுமோ? பெரியாரிடம் எவ்வளவு பணிவு! அண்ணாவிடம் அவர் காட்டிய கனிவுதான் என்னே! நம்மிடம் கொண்டிருந்த அள்ளக் குறையாத அன்பினைச் சொல்லவும் வேண்டுமோ?

மாநாட்டு மேடைக்குச் சேலத்துச் சிறுத்தை சிற்றுளி சுப்பிரமணியத்தின் பெயர் சூட்டியிருக்கிறார்கள்! அடைமொழிதான் சிற்றுளி! அவர் உருவமோ ஒரு மலை! அந்த மலையருவியாகவன்றோ அவர்தம் சொற்பொழிவு இருந்திடும்!

தலைதாழாத் தமிழன் - அந்தத் தன்மான வீரன் - அவன் பெயர் அமைந்த மேடையில் நின்று தான் கழகத்தின் தேர்தல் அறிக்கையை வெளியிடப் போகிறோம்.

நாடாளுமன்றத் தேர்தலுக்கான கழக வேட்பாளர் பட்டியலையும் அறிவிக்கப் போகிறோம்.

ஆர்வம் - துடிப்பு - எழுச்சி - உணர்ச்சி - அத்தனையும் நிறைந்த ஒரு வாலிபர் சிற்றுளி! அடக்கம் - அமைதி - உறுதி - அனுபவம் - இவற்றைப் பெற்றிருந்த வயோதிகர் ஜி.பி.எஸ்.!

இந்த இரு வகையான உணர்வுகளின் சங்கமமாக அமைந்த உள்ளத்தினைப் பெற்ற கழக மாவீரர்கள்தான் சேலத்தில் அணிவகுக்கின்றனர்.

காலையில் ஊர்வலம்!
மாலையில் மாநாடு!
இரவு கொள்கைப் பிரச்சார நாடகம்!

தோழமைக் கட்சித் தலைவர்களும் கலந்து கொள்கிறார்கள்.

இடையில் ஓரிரு ஆண்டுகள் அறுந்துவிட்ட உறவு புதுப்பிக்கப்பட்டு இந்திரா காங்கிரசும், தி.மு.கழகமும் இலட்சிய உறவுப் பிரகடனம் செய்து கொண்ட பிறகு - முதன்முதலாக நடைபெறும் மாநாடு இது!

உடன்பிறப்பே, உன்னை மட்டுமன்றி, நமது முற்போக்குக் கூட்டணியின் உடன்பிறப்புகள் அனைவரையும் அழைக்கின்றேன்.

அந்த உடன்பிறப்புகளும் நீயும் ஒன்று கலந்து ஆங்காங்கு காட்டுகின்ற பாசப்பொழிவை - நான் கடந்த சில நாட்களாகப் பல இடங்களில் பார்த்து வருகிறேன்.

அதனைத் தொடர்ந்து கண்டுகளிக்க என் நெஞ்சம் ஆவலாய் துடிக்கிறது!

என் ஆவல் நிறைவேற, ஆருயிர் உடன்பிறப்பே! சேலத்தை எழிற்கோலமாக்கிக் காட்டு! எங்கணும் இலட்சிய முழக்கம் ஒலித்திடட்டும்! எங்கு நோக்கினும் உன் முகமே! நம் கூட்டணியின் கொடிகளே! இவை காண ஓடி வருகிறேன் சேலத்துக்கு! உன்னைத் தேடி வருகிறேன் சேலத்துக்கு!

வா! வா! என் வண்ணத் தமிழே வா! கொள்கைக் குன்றமே வா! கூட்டணியின் கூர்வாளே! வா! வா!

அன்புள்ள,

மு. க.

(30-11-1979)

708. கலைஞர் எழுதும் அஞ்சலட்டை!

உடன்பிறப்பே,

ஓய்வில்லாத தேர்தல் பணி! உனக்கு நீண்ட கடிதம் எழுத இயலவில்லை. தேர்தல் முடியும் வரையில் இதுபோன்ற அஞ்சலட்டைகள் எழுதுவதாக இருக்கிறேன். புதுவை உள்ளிட்ட நாற்பது தொகுதிகளிலும் நீயேதான் வேட்பாளர். கட்சிகளின் சார்பில் முற்போக்கு கூட்டணியில் நிற்கும் நமது வேட்பாளர், வந்தாரா, பார்த்தாரா - என்றெல்லாம் கேட்டுக் கொண்டிருக்காதே! உன் தொகுதியில் நீ பணியாற்றும் இடம் எது என்பதை தேர்ந்தெடுத்துக் கொள்! தேர்தல் சின்னங்கள் தீட்டப்பட்டு விட்டனவா? கொடிகள், தோரணங்கள் கட்டி விட்டாயா? வாக்காளர்களைச் சந்தித்து விளக்கங்களை அளிக்கத் தொடங்கி விட்டாயா? உடனே இந்த வேலைகளை விரைந்து மேற்கொள்க! நாளை எழுதுகிறேன். நெல்லை மாவட்டம் சென்று கொண்டிருக்கிறேன்.

அன்புள்ள,

மு. க.

21-12-1979

709. கலைஞர் எழுதும் அஞ்சலட்டை!

உடன்பிறப்பே,

விடிய விடிய தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டிருந்தேன். நாட்டிற்கு நல்லபொழுது விடிய வேண்டும் என்பதற்காக!

நேற்று சிவகாசித் தொகுதி அருப்புக்கோட்டையில் கூட்டம் முடிய இரவு மணி மூன்று ஆயிற்று! என்னைப் போலவே நமது கழகச் சொற்பொழிவாளர்கள் நாற்பது தொகுதிகளிலும் கொள்கை விளக்கம் தந்து கொண்டிருப்பார்கள் என்று நம்புகிறேன். நமது சொற்பொழிவாளர்கள் எந்தெந்தத் தொகுதிகளில் எத்தனை நாட்கள் பேசினார்கள் என்பதை அவர்களே, தேதி வாரியாகவும், ஊர்கள் வாரியாகவும் விரிவாக, எழுதித் தலைமைக் கழகத்திற்கு அவ்வப்போது அனுப்பிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மாவட்ட, அல்லது ஒன்றிய - நகர அமைப்புக்களும் அந்த விபரங்களைத் தலைமைக் கழகத்திற்கு உடனடியாக அனுப்பி வைத்தால், பரவலாக நமது பிரச்சாரம் நாற்பது தொகுதிகளிலும், புதுவைச் சட்ட மன்றத் தொகுதிகளிலும் நடைபெறுகிறதா என்பது என் கவனத்திற்கும், பொதுச் செயலாளர் கவனத்திற்கும் வரும். எனவே இது குறித்து அடிக்கடி தகவல் தெரிவித்தால் நலம்.

இப்போது பிற்பகல் மணி மூன்றரை கீழக்கரை கூட்டம் முடிந்தது. இன்னும் உணவு அருந்தவில்லை. உனக்குக் கடிதம் எழுதினாலே - உன் நினைவிலேயே என் பசி தீர்ந்து விடுகிறதே!

அன்புள்ள,

மு. க.

(22-12-1979)

இராமநாதபுரம்

710. கலைஞர் எழுதும் அஞ்சலட்டை!

உடன்பிறப்பே,

எங்கெங்கு காணினும் எழுச்சி மயம்! ஆர்வப் பெருக்கு அலை கடலென ஒலியெழுப்பி உயர்ந்து பரந்து விரிந்து நகர்ப்புறங்களில் மட்டுமன்றி, நாட்டுப்புறங்களிலும் நமது அணிக்குத்தான் வெற்றியென முழங்கிய வண்ணமிருக்கிறது. காங்கிரஸ் தலைவர் மதிப்பிற்குரிய மூப்பனார் அவர்கள், நடிகர் திலகம் என் உடன்பிறப்பு சிவாஜிகணேசன் ஆகியோர் நடத்துகிற சுற்றுலா - முற்போக்குக் கூட்டணியின் செயல்வீரர்களையும், வாக்காளப் பெருமக்களையும் விழிப்புடன் செயல்படப் பெருந்தூண்டுகோலாகத் திகழ்கிறது.

கழகப் பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்கள் பல்வேறு நிகழ்ச்சிகளில் ஓய்வின்றிக் கலந்து கொண்டு அரசியல் விளக்கங்களை அள்ளிப் பொழிந்து வருகிறார். என் நிலைதான் நீ அறிவாய்! ஆங்காங்கு கசக்கிப் பிழிந்து கொண்டிருக்கிறார்கள். திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்களின் சுற்றுப் பயணம் இரண்டே நாட்கள்தான் எனினும் எழுச்சியுடன் அமையும். வெள்ளம் போல் மக்கள் கூட்டத்தைக் காணலாம். வெற்றியினை விளைவிக்கும் வேங்கைப்புலி நிகர் வீரர்களை வழிநெடுகச் சந்திக்கலாம். நமது அணியின் சொற்பொழிவாளர்கள் இந்தியாவின் தலைமைப் பொறுப்பை இந்திரா காந்தி அவர்கள்தான் ஏற்றிட வேண்டுமென்பதற்குக் காரணங்களை அடுக்கிக் காட்டுகின்றனர்.

ஆருயிர் உடன்பிறப்பே! அதோ வெற்றியின் சிகரம் தெரிகிறது. அதனை அடைந்து நமது அணியின் கொடியை ஏற்றிட, மெய் வருத்தம் பாராமல், கண்ணுறங்காமல், பசி நோக்காமல் இன்னும் சில நாட்கள் உன் பணியை முடுக்கி விடு! களைப்பாறுவது பிறகு! கடமை முதலில்! பிறகுதான் எல்லாம்! உன்னை நம்பித்தான் இருக்கிறேன் - சிங்கமே! செயல்படுக!

அன்புள்ள,

மு. க.

(23-12-1979)

மதுரை

711. கலைஞர் எழுதும் அஞ்சலட்டை!

உடன்பிறப்பே,

தினத்தந்தி ஒரு கேலிச்சித்திரம் வெளியிட்டிருக்கிறது. எம்.ஜி.ஆர். கட்சியின் மத்திய அமைச்சர்கள் சத்தியவாணியும், பாலாபழனூரும் தங்களது ராஜினாமா கடிதங்களைத் தூக்கி சரண்சிங் முகத்தில் வீசுகிறார்களாம். பிரதமர் சரண்சிங் அப்படியே அதிர்ச்சி அடைந்து போய் விடுகிறாராம்! இதுதான் அந்தக் கருத்துப் படம்! ராஜினாமா செய்கிறீர்களா? இல்லையா என்று சரண்சிங் ஆளை அனுப்பிக் கேட்டு அந்த இரண்டு அமைச்சர்களும் திகைத்துப் போய் வேறு வழியில்லாமல் தங்களின் ராஜினாமாக் கடிதங்களை அனுப்பி வைத்தார்கள் என்பது தான் உண்மை. அந்த ராஜினாமாவைக் குடியரசுத் தலைவர் ஏற்காமல் இருக்க மாட்டாரா என்று கூட இருவரும் பிரார்த்தனை செய்வதாகக் கேள்வி! இந்த அழகில் தினத்தந்தி அமைச்சர்களின் பதவிப் பற்றின்மையைத் தெரிவிக்கக் கருத்துப்படம் வெளியிடுகிறது! என்ன செய்வது! எம்.ஜி.ஆர். கட்சியை விழுந்து விழுந்து ஆதரிக்கா விட்டால் விபரீதங்கள் ஏற்படுமே தந்தியாருக்கு! என்ன விபரீதங்கள் என இப்போது கேட்காதே! விரைவில் வெளிவரும்!

சரண்சிங் அமைச்சரவையிலும் மந்திரிகளாக எம்.ஜி.ஆர். கட்சியினர் உட்கார்ந்து இருப்பார்களாம். அதே சமயத்தில் ஜெகஜீவன்ராம் தான் பிரதமராக வர வேண்டுமென்று தேர்தல் அறிக்கையும் வெளியிடுவார்களாம்.

மணவறைக்கு மட்டும் குப்பனாம், மஞ்சத்திற்கு சுப்பனாம்! மானமுள்ள கணவன் விரட்டிவிட்டு விவாகரத்து செய்யாமல் இருப்பானா?

இந்தக் கதையைத்தான் தினத்தந்தி இருட்டடிப்பு செய்கிறது! கீழே விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை என்கிறது! பாவம், அதன் நிலை அப்படி!

அன்புள்ள,

மு. க.

(25-12-1979)

சென்னை

712. கலைஞர் எழுதும் அஞ்சலட்டை!

உடன்பிறப்பே,

சென்னையில் தொடங்கி கன்னியாகுமரி வரையில் நடைபெறும் திருமதி இந்திரா காந்தி அவர்களின் சுற்றுப் பயணத்தில் கலந்து கொள்ளப் புறப்பட்டு விட்டேன். எல்லா இடங்களிலும் உன் சுடர்முகம் கண்டு புத்துணர்ச்சி பெறுவேன். எறும்புகளைப் போல உழைத்து நிதியினைத் திரட்டி, தேனீக்களின் சுறுசுறுப்பை வாக்கு சேகரிப்பதில் காட்டி, நமது முற்போக்கு கூட்டணி வேட்பாளர்களின் வெற்றிக்குப் பாடுபடுவாய் என்று எனக்கு நன்றாகத் தெரியும்.

ஒன்றுபட்டுச் செயலாற்று! உள்ளூர்க் கோபதாபங்களைப் பொருட்படுத்தாதே! ஒரு சில அமைப்புகளில் கசப்பு உணர்வுகள் தலை காட்டலாம். அதை நானறிவேன். முதலில் என் அன்பான வேண்டுகோளை ஏற்று வெற்றிக் கொடியை நாட்டு! விவகாரங்களைப் பிறகு பேசிக் கொள்ளலாம்! என் உயிரினும் மேலான உடன்பிறப்பே! ஒருக்கணமும் ஓய்வு கொள்ளாமல் உழைத்திடு! என் கண் அல்லவா நீ? என் கண்ணின் ஒளியல்லவா நீ? கடமையைச் செய்திடு!

அன்புள்ள,

மு. க.

(26-12-1979)

சென்னை

713. வெற்றிப் படையை நடத்திக் காட்டுக!

உடன்பிறப்பே,

இடையில் இன்னும் சில நாட்களேதான் இருக்கின்றன. புதுவை உள்ளிட்ட 40 நாடாளுமன்றத் தொகுதிகளிலும், புதுவை மாநில சட்டமன்றத் தொகுதிகளிலும், தமிழகத்தில் 3 சட்டமன்றத் (இடைத்தேர்தல்) தொகுதிகளிலும் நமது முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களுக்கு நீ ஆற்றிடும் அயராத பணியைப் பாராட்டி திருமதி இந்திரா காந்தி அவர்கள் சிவகாசிப் பொதுக்கூட்டத்தில் பேசியதைப் படித்திருப்பாய். 26-ஆம் நாள் அதிகாலை 6 மணி அளவில் சென்னையில் தொடங்கி 27-ஆம் நாள் காலை 6.30 மணியளவில் முதல் நிகழ்ச்சிகள் முடிவுற்று, உடனே 7.30 மணிக்கு மீண்டும் சுற்றுப் பயண நிகழ்ச்சி தொடங்கி, இறுதியாக நாகர்கோவிலில் 3 மணி அளவில் முடிவுற்றது. 40 இடங்களிலும் நல்ல வெற்றியினைப் பெற்றிடுக என எனக்கு வாழ்த்துக் கூறிவிட்டு இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் விடைபெற்றுக்கொண்டு திருவனந்தபுரம் விரைந்தார்கள். முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் செயல்வீரர்கள், சிவாஜி மன்றத்துச் சிங்கக்குட்டிகள் - அவர்கள் அனைவருடனும், நீ இணைந்து ஆற்றிடும் பணி - இவற்றை நம்பித்தான் நானும் அம்மையாரிடம் நல்ல வெற்றியினைப் பெறுவோம் என்று உறுதி அளித்திருக்கிறேன்.

தி.மு.க.வும் - இந்திரா காங்கிரசும் கொண்டுள்ள உறவு, தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்காகவும் - இந்தியாவின் நன்மைக்காகவும் என்று இந்திரா காந்தி அவர்கள் திருநெல்வேலி, வள்ளியூர் பொதுக்கூட்டங்களில் விரிவாகவும், தெளிவும் உறுதியும் கலந்த வகையிலும் விளக்கம் அளித்திருக்கிறார்கள்.

இந்திரா காங்கிரசுடன் கூட்டுச் சேரத் துடித்து - நம்பிக்கையற்ற, நாணயமற்ற மனிதர்களோடு கூட்டு வேண்டாம் என்று இந்திரா காங்கிரஸ் முடிவு எடுத்து விட்ட பிறகு - இந்திரா காந்தியை எம்.ஜி.ஆர். சர்வாதிகாரி என்று வர்ணிப்பதாகப் பல கூட்டங்களில்

திருமதி இந்திரா காந்தி குறிப்பிட்டபோது மக்கள் வெள்ளம் ஆரவாரம் செய்து எம்.ஜி.ஆர். அரசின் அரசியல் கோமாளித் தனத்தை கேலி செய்து சிரித்த காட்சி என் கண் முன்னாலே நிற்கிறது.

1977-ஆம் ஆண்டு தி.மு.க. - ஜனதா தேர்தல் உடன்பாடு கொள்ளவில்லை என்று மொரார்ஜி தேசாய் கூறியிருப்பதை மனத்தில் வைத்துக் கொண்டு இரண்டு மூன்று நாட்களுக்கு முன் தினமணியில் அரசியல்வாதிகள் தேர்தலுக்காகப் பொய் சொல்லுகிறார்கள் என்று ஒரு கட்டுரைத் தலைப்பு கொடுத்திருப்பது பாராட்டத்தக்கது. சிவராமன் என்றால் சிவராமன்தான்! மொரார்ஜியின் மூக்கை ஒரு தலைப்பின் மூலமே அறுத்து விட்டார்.

பொய்யர்கள், புளுகர்கள், போலிகள் அரசியலில் ஆதிக்கம் பெற்று அதிகாரத்தையும் - பணத்தையும் வைத்தே தேர்தலில் வெற்றி பெற்று விடலாம் என எண்ணுகிறார்கள். தேசியமயக் கொள்கையின் கழுத்தை அறுத்துவிட்டு, பஸ் முதலாளிகளிடம் கோடிக்கணக்கிலும் இன்னும் பல்வேறு பேரங்களிலும் பணத்தைக் குவித்து வைத்துக் கொண்டு, நம்மோடு மோதவரும் ஆளும் கட்சிக்கும் அதன் அணியினருக்கும் பாடம் கற்பிக்க வீரத்தின் திருவுருவே நம் வெற்றிப் படையை நடத்திக் காட்டு.

அன்புள்ள,

மு. க.

(28-12-1979)

714. கலைஞர் எழுதும் அஞ்சலட்டை!

உடன்பிறப்பே,

நான் செல்லுமிடமெல்லாம் உன் வெல்லுந் திறன் கண்டு மகிழ்கிறேன். கூட்டணியின் செயல்வீரர்கள் தோளோடு தோள் நின்று வெற்றிச் சுடர் முகம் காட்டி கடமையுணர்ந்து கட்டுப்பாட்டுடன் பணியாற்றும் பாங்கு போற்றுதற்குரியது!

எதிர் அணியினரின் எரிச்சல் புரிகிறது. இறுதியாகக் கலவரத்தில் இறங்கலாமா எனத் திட்டம் தீட்டி நான் தஞ்சைப் பகுதியில் நுழையும் போது அதற்கான ஒத்திகை பார்த்திட முயன்றனர்.

அதற்குப் பதில் அளிக்க நமது படையினரும் திரண்டு விட்டனர்.

மேலிடத்து உத்தரவையும் பொருட்படுத்தாமல் காவல்துறையினர் சட்டம் ஒழுங்கினைக் காத்து அமைதி கெடாமல் கண்காணித்தனர்.

ஆளுங்கட்சிக் கூட்டணியினரின் இந்த வன்முறைப் போக்கு வேறு இடங்களிலும் திட்டமிட்டு நடத்தப்படக் கூடும். காவல்துறையினரை மட்டும் நம்பியிராமல் தற்காப்புப்படை ஆங்காங்கே தயாராக இருப்பது நல்லது!

அமைதியான முறையில் தேர்தல் நடைபெறவே நாம் விரும்புகிறோம். முதலமைச்சரே முன்நின்று சட்டம் அமைதியைக் குலைக்க வழி வகுப்பது நல்லதுமல்ல! முறையுமல்ல!

வன்முறையென்பது இருபுறமும் கூர்மையுள்ள கத்தி! அது பயன்படுத்தியவனையே பதம் பார்த்து விடக் கூடிய ஆபத்தான ஆயுதம்!

ஆறிலும் சாவுதான் நூறிலும் சாவுதான் ஆனது ஆகட்டுமே! என்று பரணி பாடும் வீரர்களைக் கொண்டது நமது கூட்டணிப் பாசறை!

வன்முறை கண்டு நமது தீரர் கோட்டம் வளைந்து விடாது!

எனவே எதிரிகள் அந்த இறுதி ஆயுதத்தை உபயோகித்து வெற்றிபெறப் போவதில்லை!

உறுதி - உழைப்பு - ஒற்றுமை - துணிவு - பணிவு - கனிவு - தீரம் - தியாகம் - இவை நமது அகராதியில் ஒளிவிடும் சொற்கள்!

இதனை மாற்றார் புரிந்து கொள்வது நல்லது!

என் உடன்பிறப்பே! எதையும் தாங்கிடும் இதயத்துடன் இடைவிடாது பணி புரிந்திடு! வெற்றி நமதே!

அன்புள்ள,

மு. க.

(30-12-1979)

மன்னார்குடி

715. தயார்படுத்திக் கொள்வோம்!

பொங்கல் விழா!
தமிழர்களின் பொன்னான விழா!
புன்னகை தவழும் விழா!

குழலும், யாழும், குழந்தையின் மழலையும், கோதையர் ஆடலும், குமரர்கள் வீரமும் எங்கும் நிறைந்திடும் இனிய விழா!

இவ்விழா காணும் நேரத்தில், எதிர்காலத்தில் நாம் கொண்டாட வேண்டிய எத்தனையோ எழுச்சிமிகு வெற்றி விழாக்கள் நெஞ்சில் நிழலாடுகின்றன!

எந்த ஒரு விழாவின் பெருமையும், உழைப்பின் விளைவாகத்தான் அமைய முடிகிறது. அந்த உழைப்பும், உறுதியுங் கொண்டு நாம் எடுக்கப் போகும் எதிர்கால வெற்றி விழாக்களுக்கு இந்தப் பொங்கல் விழா ஊக்கமளிக்கட்டும்.

அடுப்பின் நெருப்புக்கும், கொதிக்கும் தண்ணீருக்கும் இடையில் தன்னைத்தானே அர்ப்பணித்துக் கொண்டதால்தானே அரிசி, அமுதமான பொங்கலாக முடிந்தது. ஆயிரமாயிரம் அரிசிகள், தங்களை வருத்திக் கொண்டதால், உலை பொங்கி முடிந்ததும் அவைகள் அன்னமெனும் பெயரைப் பெற்றன. அப்படித்தான் ஒரு சில கொள்கைகளுக்காகத் தங்களை வருத்திக் கொள்ளும் உணர்வு படைத்த தொண்டர்கள், தியாகிகளாகிறார்கள். பொங்கல் பொங்கிடும்போது, அரிசிகளில் வேறுபாடு இருப்பதில்லை.

அவ்வாறே, தலைவர்கள், தொண்டர்கள் என்ற வேறுபாடின்றி தியாகப் பொங்கல் சமைத்திட வேண்டும். அரிசிக்கிடையிலேயும் ஓரிரு கற்கள் இருப்பதுண்டு. அவைகளை, முறத்திலிட்டுப் புடைக்கும்போதே தாய்மார்கள் பொறுக்கி எறிந்து விடுவர். அதனையும் மீறி ஒரு கல், உலைப் பானைக்குள்ளே நுழைந்து, நம் பல்லைப் பதம் பார்ப்பதும் உண்டு. ஒரு இயக்கத்தை நடத்தும் நமக்கும் அந்த அனுபவம் நிறைய உண்டல்லவா?

பல்லில் பட்ட கல்லை, உடனே தொலைவில் உமிழ்ந்து விடுகிறோம். உலையில் நுழைந்துகொண்ட கல், தன் இயல்புக்கேற்ப இருக்குமே தவிர, அரிசியுடன் கலந்து சோறாகும் பக்குவத்தைப் பெறுவதில்லை. எனினும், அது - தானும் சோற்றுப்பானையில் இருந்தேன் என்ற பெருமையைச் சொல்லிக்கொள்ள முடியும்.

இப்போது பிரச்சினை கல்லைப் பற்றியல்ல. அடுப்பு மூட்டப்பட்டுவிட்டது. பானை ஏற்றப்பட்டு விட்டது. பானையில் தண்ணீரும் ஊற்றப்பட்டுவிட்டது. அரிசியை முறத்திலிட்டுக்கொண்டு அதோ அவளும் வந்துவிட்டாள். அரிசிகளே, நீங்கள் நாற்றாக இருந்து, பயிராக மாறிய விளைச்சலில் நெல் மணிகளாக இருந்தீர்கள். வறட்சிக்கும், வெள்ளத்துக்கும் ஈடு கொடுத்தீர்கள். பல தாக்குதல்களுக்கு ஆளாகி, பின்னர் அரிசி என்னும் பெயர் பெற்று பானைகளில் அழகாக அமர்ந்தீர்கள். இதோ இப்போது கொதிக்கும் உலைக்குள்ளே செல்ல இருக்கிறீர்கள். ஆம்! அமுதம் எனும் பெயர் உங்களைத் தழுவக் காத்திருக்கிறது.

அரிசியின் கதை புரிகிறதா? பொங்கல் கொண்டாடும் என் அன்பு உடன் பிறப்புகளே! நானும், நீங்களும் அரிசிதான்! தூய பொங்கல் கிடைத்திட நம்மைத் தயார்படுத்திக்கொள்வோம்.

இந்த உறுதியோடு பொங்கல் விழாக் கொண்டாடி மகிழ்வோம்.

(15-01-1980)

716. விழி திறந்து பார் அண்ணா!

உடன்பிறப்பே,

எனக்கு மூத்தவரே! இந்தச் சமுதாயம் வாழ்வதற்கு இனிய கொள்கைகளை யாத்தவரே! எங்கெங்கோ சிதறிக் கிடந்த எங்களையெல்லாம் பொறுக்கியெடுத்துக் கழக மணியாரம் கோத்தவரே! விழிதனை இமை காப்பது போல விழித்திருந்து எமைக் காத்தவரே! மொழி காக்க முரசம் ஆர்த்தவரே! இந்த இனம் காக்கப் படை சேர்த்தவரே! வாடாத மலராக, வாசம் குறையாத மலராக, வனப்புக் குன்றாத மலராக எமது இதயமெனும் பூங்காவில் பூத்தவரே! அண்ணனே! எங்கள் அன்னையே! தலைவனே! தாயே!

பத்தாண்டுகள் பறந்துவிட்டனவே! பத்தரை மாற்றுத் தங்கமாம் உன்னை மண் கொண்டு மூடி - அதனைக் கண்கொண்டு பார்க்க முடியாமல் நாங்கள் கதறித் துடித்த அந்த உச்சகட்டச் சோக நிகழ்ச்சி நடைபெற்று!

இந்தப் பத்தாண்டுகளில் எத்தனை எத்தனை அரசியல் மாற்றங்கள்! எத்தனை சோதனைகள்! எத்தனை வேதனைகள்! அத்தனையும் உனை நினைத்துத்தான் எங்கள் இறைவனே! நாங்கள் தாங்கிக் கொண்டோம்.

அடித்தளத்து மக்களுக்காக, ஆழ் குழியில் தள்ளப்பட்ட தாழ்த்தப்பட்டோருக்காக, புறக்கணிக்கப்பட்ட பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திற்காக, சாதாரண - சாமானிய - நடுத்தர வர்க்கத்திற்காக - நீ வகுத்துச் சென்ற வழியில் சாதனைகள் புரிந்து கோலோச்சிய எமதுள்ளத்தைத் துரோகக் கணைகள் துளைத்திட்ட போதும் நீ தூங்குகிற கல்லறை நோக்கித் தொழுத வண்ணம் பயணம் நடத்தினோம்.

அடித்தளம் அசைக்க முடியாத வலுவினைக் கொண்டதாகையால், நீ உருவாக்கிய இந்த அமைப்பு

ரீதியான இயக்கத்தைத் தோல்விகளால் கூட துவள வைக்க முடியவில்லை. மாயப் பேய்கள் எங்களை மிரட்டிய போதெல்லாம் நீ கற்றுக்கொடுத்த கொள்கை மந்திரத்தை உச்சரித்தே நாங்கள் கடும் பயணத்தில் வெற்றி கண்டோம்.

பிரிவு - பிளவு - சரிவு - தோல்வி - துரோகம் - இவற்றால் எம்மை நிலைகுலையச் செய்ய முடியவில்லை. நீ எங்கள் நெஞ்சத்தில் நிறைந்திருக்கும் போது - நீ அளித்த இலட்சியங்களே எம் உள்ளத்தின் துடிப்புகளாக இருந்திடும்போது - புயல் காற்றில் பறந்து சிதைகின்ற சருகுகளாக ஆவோமா நாங்கள்?

இதோ அந்த உறுதியுடன் - அந்த உறுதியால் கிடைத்த வெற்றிக் கனிகளுடன் - சந்தனப் பேழையில் பள்ளி கொண்டுள்ள எங்கள் சங்கத் தமிழே! உன் சந்நிதானம் நோக்கி வருகிறோம்!

இதோ புதுவை முதலமைச்சர் - இடையில் போய் வந்தவர்தான்! நீ அடிக்கடி கூறுவாயே, அதுபோலத் திருவிழாவில் காணாமற்போன பிள்ளை - திரும்பக் கிடைத்து விட்டது!

பாசமுள்ள பிள்ளையைப் பழிவாங்க முடியுமா? அது தாய்க் குணமில்லையென்று நீதானே அடிக்கடி கூறுவாய்! அதற்கு மகுடம் புனைந்து எங்கள் அன்பு மாதாவே! உன் காலடியில் மலர்வளையம் வைத்து வணங்க வந்துள்ளோம்!

இன்னும் பல வெற்றிகளுக்கு எங்களுக்கு நீ வாழ்த்துரைப்பாய், தம்பீ! என அழைத்துப் பாசம் பொழியும் தொனியில்!

இராவணனுக்கு வீடணனாக இல்லாமல் - இராமனுக்கு இலக்குவனாக - இதோ இலட்சுமணன்! இந்தியப் பேரரசு வீற்றிருக்கும் நாடாளுமன்றத்துத் துணைச் சபாநாயகராக!

இந்த வெற்றிப் பரிசுகளை உன் முன்னால் குவிக்கும் போது - அண்ணனே! அன்றொரு நாள், 1959-இல் சென்னை மாநகராட்சி வெற்றிக்காக நீ என் விரலில் அணிவித்த கணையாழியைத் தடவிப் பார்த்துக் கொள்கிறேன். அருவிகளாகின்றன, அண்ணா என் கண்கள்!

வெற்றி விளைவிக்க வியர்வையும் குருதியும் சிந்திய அனைவரும் இன்று உன் திருவடிகளைத் தெண்டனிட்டு நிற்கிறோம்!

உன் இலட்சியங்களை நிறைவேற்ற, எங்கள் உள்ளங்களை மேலும் வலிவுடையவைகளாக்கிக் கொள்ளவே நீ துயிலுமிடம் வந்து நின்று உன்னை மெதுவாகத் தட்டி எழுப்புகிறோம்!

நினைத்துப்பார் அண்ணா! ஏற்கனவே மென்மையான என் கை கொண்டு எத்தனை முறை நீ தூங்கும் போது உன்னை மிக மென்மையாகத் தொட்டு எழுப்பியிருக்கிறேன். நேரமாகிவிட்டதா? என குறுஞ்சிரிப்புடன் எழுந்து உட்கார்ந்து - பொடியை உறிஞ்சி - பணிகளைத் தொடர்வாயே! அதை நினைத்தால் .... அண்ணா! அண்ணா!.....

பணிகளைத் தொடர்ந்து ஆற்றிடும் - எங்களை ஒருமுறை விழி திறந்து பார் அண்ணா! களத்தில் பட்ட விழுப்புண்களை ஆற்றிடும் மாமருந்து அல்லவா அந்தப் பார்வை!

அதனைத் தரிசிக்கவே நீ இருக்கும் தலம் நோக்கி இன்று அணி வகுக்கிறோம்.

அன்புள்ள,

மு. க.

(03-02-1980)

717. வாழ்த்துகிறேன்! வணங்குகிறேன்!

உடன்பிறப்பே,
உடன்பிறப்பே!
உடன்பிறப்பே!
தேனே! பாகே!
தென்புலத்து செங்கரும்பே!
என் ஆருயிர் உடன்பிறப்பே!
ஆயிரமாயிரம் நன்றி!

ஏழு கல் தொலைவு - உன் பாதம் நோக பரணி பாடி நடந்து வந்தாயே; இரண்டரை மணி நேரம் - அந்த ஆர்வத்தைக் கண்டபோது அடிமையாகி விட்டேன் நான் உனக்கு!

பகைப்புலம் வீழ்த்த கொடிப்படை கிளம்பிற்றென தலைநகராம் சென்னையிலே நீ பீடுநடை போட்டபோது என் மெலிந்த உடல் இரும்பென வலுக்கொண்டது! இறுமாப்பினால் அல்ல! இத்தனை இலட்சம் இலட்சிய இதயங்களின் ஆதரவு இருக்கிறதே என்ற பூரிப்பில்! நானே எனக்கு உயரமாகத் தோன்றினேன்; கர்வத்தால் அல்ல - இத்தனை இலட்சம் கண்மணிகள் கொள்கைக் குன்றங்களாகத் திகழ்கின்றனவே என்ற களிப்பில்!

மகளிர்!
மாணவர்!
அலுவலர்!
தொழிலாளர்!
வணிகர்!
விவசாயிகள்!

சாதாரண சாமானிய நடுத்தர மக்கள் அலைகடலெனப் பொங்கியெழுந்து சென்னை நகரத்து பெருவீதிகளில்

வழிந்தோடும் பெருவெள்ளமெனக் காட்சியளித்தபோது என் உள்ளம் கருமுகில் கண்ட கலாப மயிலாயிற்று!

நான் யாருக்கென்று நன்றி கூறுவேன்?

மூவண்ணக் கொடி பிடித்து வந்த அண்ணன் தம்பிகளுக்கா?

இருவண்ணக் கொடி ஏந்தி வந்த இயக்கத்துச் சோதரருக்கா?

பிறைக்கொடி தூக்கி வந்த இஸ்லாமிய உடன்பிறப்புக்களுக்கா?

புலிக்கொடி பறக்க விட்டுப் பீடுநடை போட்டு வந்த மறவர்குல திலகங்களுக்கா?

குடியரசுக் கட்சி, கிறித்துவ ஜனநாயக முன்னணிகளின் குலவிளக்குகளுக்கா?

வீதியின் இருமருங்கும் நின்று பிஞ்சுக்கை அசைத்த பேரன்பேத்திகளுக்கா?

நெஞ்சத்து அன்பைக் கொட்டி வாழ்த்துரைத்த சகோதர சகோதரிகளுக்கா?

தங்கக் குணம் படைத்த என் தாய்களுக்கா?

சிங்கத் தமிழர் இனத்துக்கா?

யாருக்கு நான் நன்றி சொல்வேன்?

எனவே எமை வாழ்த்தி அசைத்த கரங்களுக்கும், அணிவகுத்த கால்களுக்கும் முத்தமீந்து வணங்குகிறேன். வாழ்த்துகிறேன்.

என்றைக்கும் உங்களுக்குப் பணியாற்றக் காத்திருக்கும் இந்த அணியின் சார்பில் உறுதி அளிக்கிறேன்;

எமது
உயிர் தமிழுக்கு!
தமிழ் மக்களுக்கு!
இந்த உடல் மண்ணுக்கு!

அன்புள்ள,

மு. க.

(16-02-1980)

718. பாசறை அமைப்போம்; வா!

உடன்பிறப்பே,

நான் டெல்லியில் இருந்தபோது சென்னையிலிருந்து நண்பர் எம்.ஜி.ஆர். சார்பில் தூதுவர் ஒருவர் அனுப்பி வைக்கப்பட்டு அவர் நாலைந்து இந்திரா காங்கிரஸ் எம்.பி.க்களுடன் தொடர்பு கொண்டு அங்கிங்கெனாதபடி எங்கெங்கும் சுற்றிச் சுழன்று கொண்டிருந்தார்.

ஆட்சியைக் கலைக்காமல் விட்டால் ராஜ்ய சபா தேர்தலில் அ.தி.மு. க. அணிக்குக் கிடைக்கக்கூடிய நாலு இடங்களில் மூன்று இடங்களை இந்திரா காங்கிரசுக்கு விட்டுத் தருகிறோம்.

கூவிக் கூவி விற்கப்பட்ட இந்தப் பேரச் சரக்கை டெல்லி மேலிடத்தில் திரும்பிப் பார்ப்போர் யாருமில்லை.

அடுத்து ஒரு பேரம் மின்னல் வேகத்தில் வந்து குதித்தது.

17-ஆம் தேதி ஆட்சியைக் கலைக்காமல் ஒருநாள் தவணை கொடுத்து 18-ஆம் தேதி இரவு மாநில அரசுகளைக் கலைக்கும் முடிவினை எடுங்கள். அதற்கிடையே 18-ஆம் தேதி காலை எம்.ஜி.ஆர். அமைச்சரவை ராஜினாமா செய்து விட்டு சட்டமன்றத் தேர்தல் நடைபெறும் வரையில் காபந்து சர்க்காராக இருக்க அனுமதி கொடுங்கள். பிறகு சட்டமன்றத் தேர்தலில் இ.காங்கிரசுக்கு அதிக இடங்களைத் தந்து நாங்கள் குறைவான இடங்களை எடுத்துக் கொண்டு இ.காங்கிரஸ்-அ.இ.அ.தி.மு. க. கூட்டணி அமைத்து போட்டியிடவும் தயாராக இருக்கிறோம். இந்த விவரங்களைப் பற்றிப் பேச 18-ஆம் தேதி காலை விமானத்தில் சென்னையிலிருந்து இரண்டு அமைச்சர்கள் டெல்லிக்கு வருகிறார்கள்.

இப்படி ஒரு (எஸ்.ஓ.எஸ்.) எங்களைக் காப்பாற்றுங்கள் என்ற விரைவுத் தகவலும் டெல்லி மேலிடத்திற்குப் பரபரப்புடன் தரப்பட்டது.

ஒரு மாதத்திற்கு முன்பு, தங்களுடன் கூட்டணி சேர்ந்து நாடாளுமன்றத் தேர்தலில் நம்பிக்கையுடன் போட்டியிட்ட கம்யூனிஸ்டு கட்சிகள் இரண்டையும், ஜனதா கட்சியையும் காலைவாரி விட்டுவிட்டு காங்கிரசுடன் உடன்பாடு ஏற்படுத்திக் கொள்வதற்குத் துடியாய்த் துடித்த எம்.ஜி.ஆர். அவர்களின் நம்பிக்கைத் துரோகத்தை எண்ணி எண்ணி டெல்லிப் பட்டினமே கேலிச் சிரிப்பு சிரித்தது.

தாங்களாகவே முன்வந்து தாவிப் பாய்ந்து தாளடியில் தண்டனிட்டு சமர்ப்பித்த இத்யாதி பேரங்களை இந்திரா காங்கிரஸ் கட்சியின் மேலிடம் அறவே புறக்கணித்து விட்டதன் அடையாளமாகத்தான் 18-ஆம் தேதி காலை அ.தி.மு. க. அமைச்சர்களின் வருகைக்காகக் காத்திருக்காமல் முதல்நாள் 17-ஆம் தேதி இரவே முடிவு எடுக்கப்பட்டு அறிவிக்கப்பட்டு விட்டது.

உடன்பிறப்பே, உனக்கு நினைவு இருக்கும். நான் மறந்தாலும் நீ மறந்திருக்க மாட்டாய்! 1972-ஆம் ஆண்டு தொடக்கத்தில் நடைபெற்ற மதுரை மாநாட்டில் மாநில சுயாட்சிக்காக இராணுவத்தைச் சந்திக்கத் தயார்! என்று முழங்கிய எம்.ஜி.ஆர். அவர்கள், அடுத்து இரண்டொரு மாதங்களுக்கெல்லாம் அண்ணா உருவாக்கிய இந்தக் கழகத்தைப் பிளக்கும் முயற்சியில் ஈடுபட்டு - கட்டுப்பாட்டினை மீறி பொதுக் கூட்டங்களில் பேச ஆரம்பித்தார். பதினெட்டாயிரம் கிளைக் கழக செயலாளர்களும் தங்கள் சொத்து விவரங்களைத் தரவேண்டுமென்று பொதுக் கூட்டங்களில் பேச ஆரம்பித்தார். கழகத்திலிருந்து தன்னைத்தானே வெளியேற்றிக் கொள்ளக்கூடிய சூழ்நிலையை உருவாக்கிக் கொண்டார். அவரது செயலைக் கண்டித்து அன்றைய பொதுச் செயலாளர் நாவலர் விடுத்த அறிக்கைகளை நாடு மறக்குமா?

புதுக்கட்சி தொடங்கிய எம்.ஜி.ஆர். இந்த எட்டு ஆண்டுக் காலத்தில் கட்சிக்கு தேர்தல் நடத்தியதுண்டா?

கட்சிக்குச் சட்ட திட்டங்களை வகுத்து, அப்படியொரு அடிப்படையில் அமைப்புகளை உருவாக்கியதுண்டா?

அவரால் நியமிக்கப்பட்ட பொதுச் செயலாளரிலிருந்து, கிளை அமைப்பாளர்கள் வரையிலே இந்த எட்டாண்டு காலத்தில் சொத்து கணக்கு கேட்டதுண்டா?

பரவாயில்லை! கட்சியின் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களாவது தனது சொத்துக் கணக்கைக் காட்டியதுண்டா?

தன் கணக்கை காட்டாதது மட்டுமல்ல. தான் செலுத்த வேண்டிய வருமானவரி பாக்கி பதின்மூன்று லட்சத்திற்கு தனது ஸ்டுடியோவை கட்சிக்கு அடமானம் வைத்துக் கட்சிப் பணத்தை எடுத்து வருமான வரியைக் கட்டியதாகச் சட்டசபையில் அறிவித்தார். ஆனால், அவர் கட்சியின் பொருளாளர் நண்பர் சௌந்திரபாண்டியன் எம்.ஜி.ஆர். கட்சியில் வாங்கியுள்ள கடன் மூன்று லட்சம்தான் - மீதி பத்து லட்சம் எப்படி வந்ததோ தெரியாது என்று அறிவித்துள்ளதை இதுவரை எம்.ஜி.ஆர். மறுக்கவில்லை.

கணக்கு கேட்டு புதுக்கட்சி ஆரம்பித்தவர் - அதுவும் பொதுக் குழுவில் கேட்க வேண்டிய கணக்கைப் பொதுக் கூட்டத்தில் கேட்டு புதுக்கட்சி ஆரம்பித்தவர் - இன்று கணக்கு வழக்கே இல்லாமல் கட்சியையும் நடத்திக் கொண்டு, ஊழல் சாம்ராஜ்யமாக ஆட்சியையும் நடத்தி முடித்து விட்டுப் போயிருக்கிறார்.

அடடா! அவர் புதுக்கட்சி ஆரம்பித்ததும், கழக அரசின் மீது குற்றப்பட்டியலைக் கொண்டு போய்க் கொடுத்த அவசரம் என்ன?

உடனே விசாரணைக் கமிஷன் அமைக்க வேண்டுமென்று மத்திய அரசை வலியுறுத்திய வேகம் என்ன?

தி.மு. க. அரசை மத்திய அரசு உடனடியாகக் கலைக்க வேண்டுமென்று விடுத்த அறிக்கைகள் என்ன?

புதுவையில் மூன்று இடங்களில் மட்டுமே கழகம் வெற்றி பெற்று மற்ற இடங்களில் தோற்றுவிட்டபோது 1974-இல் இதே எம்.ஜி.ஆர். புதுவையைக் காட்டி, தி.மு. க.வுக்கு இனி தமிழ்நாட்டில் வேலையில்லை! உடனே தி.மு. க. அரசு ராஜினாமா செய்ய வேண்டுமென்று கூறவில்லையா? இப்போது அவர் கட்சிக்குப் புதுவையில் கிடைத்திருப்பது ஒரு பூஜ்யம் தானே! அன்று 1974-இல் அவர் விடுத்த அறிக்கை - அவரைப் பார்த்து சிரிக்குமா? சிரிக்காதா?

திண்டுக்கல்லில் ஒரு நாடாளுமன்றத் தொகுதியில் தோல்வியடைந்தபோதே, மானம் மரியாதையிருந்தால் ராஜினாமா செய்! என்று கூப்பாடு போடவில்லையா? ஒரு நிமிடம் கூட

இனிமேல் தி.மு. க. ஆட்சி நீடிக்கக்கூடாது என எம்.ஜி.ஆர். நீட்டி முழங்கவில்லையா?

ஒரு தொகுதி முடிவுக்கே அந்த நிலை என்றால் - இப்போது தமிழ்நாட்டில் முப்பத்தேழு தொகுதிகளின் முடிவுக்கு எம்.ஜி.ஆர். எடுத்திருக்க வேண்டிய நிலை என்ன?

உடன்பிறப்பே, இவற்றையெல்லாம் சிந்திக்க நேரமில்லாமல் நம்மீது சீறுகிறார் எம்.ஜி.ஆர்.!

ஆனால், அவரது கட்சியின் அரசியல்வாதிகள் சிந்திக்கத் தொடங்கிவிட்டார்கள். அல்லும் பகலும் அயராது உழைத்த உண்மையான தொண்டர்கள், எம்.ஜி.ஆர். அவர்களின் வேடங்கலைந்த காட்சியைக் கண்டு வெந்த உள்ளத்தினராய் நொந்து போய் நிற்கிறார்கள்.

திக்குத் தெரியாத காட்டில் தவித்துக் கிடக்கும் அவர்களையெல்லாம் வாரியணைத்து, அன்பு பொழிந்து அண்ணா வழியில் அயராது உழைத்திடவும், தமிழகத்தின் பெருமை ஓங்கிடவும் - இந்தியத் திருநாட்டின் வளம் பெருகிடவும் - சமதர்ம சமத்துவ நிலை அனைத்திலும் உருவாகிடவும் - இதோ இரு கையேந்தி நிற்கிறது தி.மு.கழகம்!

உடன்பிறப்பே, என் இதயம் புரிந்து பணியாற்றும் என் இன்னுயிரே! நம் முன்னால் நிற்கும் அறைகூவலை ஏற்று - முற்போக்கு கூட்டணியின் பெருமித வெற்றிக்குப் பாசறை அமைப்போம் வா! ஜனநாயகப் பெரும்படை திரட்டுவோம் வா!

அன்புள்ள,

மு. க.

(21-02-1980)

719. நேரம் வந்துவிட்டது!

உடன்பிறப்பே,

உனக்கு ஒரு செய்தி தெரியுமா? ஜனதா ஆட்சி நடைபெற்றபோது அந்தக் கட்சியின் சட்ட அமைச்சர் சாந்திபூஷண் அவர்கள், அரசியல் சட்டத்திலே ஒரு திருத்தம் கொண்டு வந்தார்.

அந்தத் திருத்தம் என்ன?

குடியரசுத் தலைவர் ஒரு மாநில ஆட்சியைக் கலைத்தால் அந்த மாநிலத்தில் விரைவில் தேர்தல் வரவேண்டும் என்ற அடிப்படையில் கொண்டு வந்த திருத்தம்தான் அது!

அந்தத் திருத்தத்தின் மீது ஒரு முக்கியமான திருத்தத்தை மார்க்சிஸ்ட் கட்சித் தலைவர் பி. ராமமூர்த்தி அவர்களும், இந்திய கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் பூபேஷ்குப்தா அவர்களும், திராவிட முன்னேற்றக் கழக சார்பில் முரசொலி மாறனும் மாநிலங்களவையில் கொடுத்தார்கள். அதாவது, மத்திய அரசு தனது விருப்பம் போல் மாநில சட்டமன்றங்களைக் கலைப்பதற்கு உரிமை வழங்குகிற 356-வது அரசியல் சட்டப் பிரிவை அறவே நீக்கவேண்டும் என்பதுதான் அந்தத் திருத்தம்.

அந்தத் திருத்தத்தை வலியுறுத்தி மார்க்சிஸ்ட், திராவிட முன்னேற்றக் கழகம் ஆகிய கட்சிகள் மாநிலங்களவையில் விளக்கவுரையாற்றின.

அதுமட்டுமல்ல, அந்தத் திருத்தம் ஓட்டுக்கு விடப்பட்டபோது மார்க்சிஸ்ட், இந்தியக் கம்யூனிஸ்டு, தி.மு. க. ஆகிய கட்சிகள், மாநில அரசுகளைக் கலைக்க அனுமதி வழங்கும் 356-வது பிரிவு நீக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில் மாநிலங்களவையில் ஓட்டு அளித்தன.

ஆனால்!

ஆனால்!!

ஆனால்!!!

இன்று மாநில சட்டசபைகளைக் கலைக்கலாமா? என்று மார்தட்டும் எம்.ஜி.ஆர். அவர்களின் அ.இ.அ.தி.மு. க. கட்சியும், ஜனதா கட்சியும் மத்திய அரசாங்கம், மாநில அரசாங்கங்களைக் கலைக்கலாம் என்பதற்கு ஆதரவாக மாநிலங்களவையில் ஓட்டு வழங்கினார்கள்.

அதுமட்டுமா?

1974-ஆம் ஆண்டு தமிழக சட்டப்பேரவையில் தி.மு. க. அரசு கொண்டு வந்த மாநில சுயாட்சித் தீர்மானத்தை இந்திய கம்யூனிஸ்டு கட்சியும், அ.இ.அ.தி.மு. க.வும் எதிர்த்துப்பேசி - தீர்மானத்திற்கு மாறாக வாக்களித்த வரலாற்றையும் நாடு மறந்துவிடவில்லை.

மாநில அரசுகளைக் கலைக்க மத்திய அரசுக்கு உரிமை உண்டு என்று வாதாடி, மாநிலங்களவையில் அதற்கு ஆதரவாக வாக்களித்த - எம்.ஜி.ஆர். கட்சியினருக்கு இன்று அந்தச் செயலை எதிர்க்க என்ன தகுதி இருக்கிறது?

கோமாளித்தனமான கொள்கை கொண்டவர்களின் கூடாரம் தான் எம்.ஜி.ஆர். கட்சி!

அந்தக் கட்சி இப்போது தமிழகத்தில் அராஜகத்தைத் தூண்டிவிட, சென்னை ஓட்டல் ஒன்றில்கூடி சதித் திட்டம் தீட்டுகிறது! காரணம், சுயநலம்!

சட்டம், தன் கடமையைச் செய்யும்!

இது எம்.ஜி.ஆர். அடிக்கடி கூறுகிற வாசகம்!

அதற்கு அவரே இப்போது பதில் சொல்ல வேண்டிய நேரம் வந்து விட்டது.

அன்புள்ள,

மு. க.

(22-02-1980)

720. தொண்டு, தொடரட்டும்!

உடன்பிறப்பே,

ஜப்திக் கொடுமைகள் - கடன் வசூலிக்கும் முயற்சியில் இழிவுபடுத்துதல் - போன்ற கடுமையான நடவடிக்கைகளிலிருந்து விவசாயப் பெருங்குடி மக்களுக்கு விடுதலை அளிக்க வேண்டுமென்ற குரல், அண்மைக் காலத்தில் ஓங்கி ஒலிக்கத் தொடங்கியுள்ளது.

பல கோடி ரூபாய்க்குப் பல சலுகைகளை வழங்கியதாக எம்.ஜி.ஆர். ஆட்சியில் பலவண்ண விளம்பரங்கள் செய்யப்பட்டனவே தவிர - அவற்றால் விவசாயிகளின் வேதனை தீர்க்கப்படவில்லை.

சுட்டிக் காட்டப்பட்ட தவறுகளையும், திருத்திக் கொண்டு விவசாயிகளின் உண்மையான பிரதிநிதிகளை அழைத்துப் பேசி ஆவன செய்ய எம்.ஜி.ஆர். அரசு முன்வரவில்லை.

ஜப்திகளே நடைபெறாது என எம்.ஜி.ஆர். அரசு உறுதியளித்தது. ஆனால், அதற்கு நேர்மாறாக - விவசாயிகள் வீடுகள் ஜப்தி செய்யப்பட்டு அங்கிருந்த தவலைகள், பானைகள், உடைந்த கெடிகாரம், ரேடியோ போன்ற பொருள்கள் ஏலம் போடப்படும் என்று வெளியிடப்பட்ட அச்சடிக்கப்பட்ட அறிவிப்புகளைச் சட்டமன்றத்தில் நான் ஆதாங்களோடு எடுத்துக் காட்டியிருக்கிறேன்.

எம்.ஜி.ஆர். ஆட்சி இப்போது இல்லை! ஆனால் அந்த ஆட்சிக் காலத்துக் கொடுமைகள் விவசாயிகள் மீது இன்னமும் சில இடங்களில் பாய்ந்திடுகின்றன என்ற செய்திகள் வருகின்றன.

அதுகுறித்து நமது கழகத்தின் தலைமை நிலையச் செயலாளர்களும், நாடாளுமன்ற தி.மு. க. கட்சி நிர்வாகிகளும் கொண்ட கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவினைக் கழகப் பொருளாளர் சாதிக் தலைமையில் ஒரு குழுவினர் சென்று ஆளுநர்

அவர்களிடம் அறிவித்து முறையீடு செய்திருக்கிறார்கள். ஆவன செய்வதாக ஆளுநர் உறுதியளித்திருக்கிறார்.

உறுதியளித்தமைக்கு ஏற்ப, விவசாயிகளின் வேதனையைத் தீர்க்க ஆளுநரும், ஆலோசகரும், அதிகாரிகளும் நடவடிக்கை எடுப்பார்களென்று நம்புகிறேன்.

இவற்றையெல்லாம் கடந்து, எங்காவது விவசாயிகள் மீது ஜப்தி போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டால், அந்தச் செய்தியை உடனடியாக ஆங்காங்குள்ள கழக நிர்வாகிகளும் - ஆளுநர், ஆலோசகர் ஆகியோர் கவனத்திற்குக் கொண்டு வருவதோடு - அந்தந்தக் கட்சிகளின் தலைமைக்கும் தெரியப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இதைப்போன்றே, பொது மக்களின் நலன்களைப் பாதிக்கும் எந்தக் காரியங்கள், எங்கே நடைபெற்றாலும் அவற்றைத் தயக்கமின்றி அறிவிக்க வேண்டிய கடமையை நமது முற்போக்குக் கூட்டணியின் அமைப்பு ரீதியான நிர்வாகிகள் மேற்கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

மக்கள் தொண்டே - மகேசன் தொண்டு என்ற நினைவுடன் நமது அணியினர் ஆற்றிடும் அரும்பணிகள், தமிழகம் தலைசிறந்து விளங்கிடத் துணை நிற்கட்டும்.

அன்புள்ள,

மு. க.

(24-02-1980)

721. சிவாஜியுடன் நடிக்க மாட்டேன்!

உடன்பிறப்பே,

நாடி தளர்ந்து, மேனி நடுக்கமுற்று, நடக்கவும் சக்தியற்ற கிழவியொருத்தி, தனது பொக்கை வாய்தனைத் திறந்து சொன்னாளாம்! நான் சிவாஜிகணேசனுடன் கதாநாயகியாக நடிப்பதற்கு ஒப்புக்கொள்ள மாட்டேன் என்று! அதைக் கேட்ட சினிமாப் பத்திரிகை நிருபர்கள் வயிறு வலிக்கச் சிரித்தார்களாம்! அதிலே ஒரு குறும்புக்கார நிருபர், ஏன் பாட்டி! அப்படிச் சொல்கிறாய்? சிவாஜியுடன் இணைந்து நடித்தால் என்ன? என்று சிரிப்பை அடக்கிக் கொண்டு கேட்டாராம்!

சிவாஜியுடன் இணைந்து நடிக்க முடியாது என்பது மட்டுமல்ல. சிவாஜி நடிக்கும் படங்களிலேயே எந்த வேடமும் தாங்கமாட்டேன்! அதுமட்டுமல்ல, சிவாஜி நடிகராக இருக்கும் வரையில் இனிமேல் சினிமாவிலேயே தலைகாட்ட மாட்டேன்!

என்று கிழவி முழங்கியதைக் கேட்டு நிருபர்கள் சரியான நகைச்சுவை என்று விமர்சித்தவாறு கலைந்து சென்றார்களாம்.

உடன்பிறப்பே! நீ என்னைக் கேட்கக்கூடும் - இப்படியொரு நிகழ்ச்சி நடந்ததா? அப்படியானால் எங்கே? எப்பொழுது? யார் அந்தக் கிழவி? அவள் பெயர் என்ன? இவ்வாறெல்லாம் நீ என்னைக் கேட்கக்கூடும்.

சிந்தனையைத் தூண்டும் எத்தனையோ கருத்துகளை கடிதத்தில் எழுதுவதற்குப் பதில், சினிமாக் கிழவி - யாருக்கோ அளித்த பேட்டிக்கு இவ்வளவு முக்கியத்துவமா? என்றும் நீ ஆச்சரியப்படக்கூடும்.

அ.தி.மு. க. கட்சியின் முன்னாள் நியமனப் பொதுச் செயலாளரும், இந்நாள் நியமனத் தலைவருமான நண்பர் எம்.ஜி. ராமச்சந்திரன் அவர்கள், அவரது கட்சியின் நியமனப் பொதுக்குழு

செயற்குழு கூட்டங்களையொட்டி நியமன ஆட்சிமன்றக் குழுவையும் அறிவித்துவிட்டுப் பத்திரிகை நிருபர்களைப் பேட்டி கண்டாராம். அந்தப் பேட்டியில் எம்.ஜி.ஆர். அறிவித்த முடிவைப் படித்தபோது தான் நரை மூதாட்டியொருத்தி நடிகர் திலகத்துடன் இணைந்து நடிக்க மாட்டேன் என்று கூறிய கற்பனைப் பேட்டியை உன் கவனத்திற்குக் கொண்டுவர நேர்ந்தது.

எக்காரணத்தை முன்னிட்டும், தி.மு.கழகத்துடன் அ.தி.மு. க. தேர்தல் கூட்டோ, இணைப்போ, தொகுதி உடன்பாடோ செய்து கொள்ளாது.

கருணாநிதி, தி.மு. க.வின் தலைவராகவோ, உறுப்பினராகவோ இருக்கும் வரையில் இந்தப் பேச்சுக்கே இடமில்லை.

இதுதான் நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் அறிவித்துள்ள முடிவு!

உடன்பிறப்பே, இப்போது புரிகிறதா? சிவாஜியுடன் இணைந்து நடிக்க முடியாது என்று கிழவி விதித்த நிபந்தனைகளுக்கும் – அவள் அறிவித்த முடிவுக்கும் – நண்பர் எம்.ஜி.ஆர். வீராவேசத்துடன் அளித்துள்ள அறிவிப்புக்கும் இடையில் இருக்கின்ற ஒற்றுமை!

இணைந்து நடிக்க முடியாது எனப் பல்லற்ற பாட்டி பறையறிவித்தால் சிவாஜிக்கு எவ்வளவு இழப்போ – அவ்வளவு இழப்புதான் எம்.ஜி.ஆர்., தி.மு. க.வுடன் இணைப்போ – கூட்டோ – உடன்பாடோ இல்லையென்று கூறியிருப்பதால் தி.மு.க.வுக்கு என்பதை உண்மையான அரசியல்வாதிகள் உணர்ந்தே இருக்கிறார்கள்.

அ.தி.மு. க. கூடாரம், காலியாகி விழிப்புணர்வு கொண்டோர் பலரும் நமது கழகம் நோக்கி விரைந்து வந்து கொண்டிருக்கும் நேரத்தில், எம்.ஜி.ஆரின் அறிக்கை கண்டு தோன்றிய கற்பனையை ஒரு வேடிக்கை நிகழ்ச்சியாகச் சித்தரித்தேன்; அவ்வளவுதான்!

அன்புள்ள,

மு. க.

(26-02-1980)

722. நாடறிந்த நரியின் கதை!

உடன்பிறப்பே,

கலகமூட்டலாமா என்று பார்க்கிறார்கள்! கலகம் விளைவிக்கலாமா என்று துடிக்கிறார்கள்! அய்யோ! அய்யோ! தி.மு. க. - இந்திரா காங்கிரஸ் உறவு மேலும் உறுதியாகிக் கொண்டே போகிறதே யென்ற பதைப்பில், வாய்க்கு வந்ததைப் பேசுகிறார்கள். இந்திரா காந்தி அவர்களிடம் தி.மு.க.வை அடகு வைத்து விட்டோம் என்று கயிறு திரித்து கதை கட்டி, கழகக் கண்மணியே! உன்னைத் தூண்டிவிட்டு வேடிக்கை பார்க்க முடியுமா என்று கச்சை கட்டிக் குதிக்கிறார்கள்! நாமும் இந்திரா காங்கிரசாரும் கூட கவலைப்படவில்லை. ஆனால் இவர்கள்தான், யார் யாருக்கு எத்தனை தொகுதிகள் என்பதிலே அதிகக் கவலை எடுத்துக்கொண்டு நாளைக்கொரு செய்தியாக வெளியிட்டு வருகிறார்கள்.

தி.மு. க.வின் கொள்கைகள் எங்கே? எங்கே? என்று கர்ச்சனை செய்கிறார்கள்! யார் தெரியுமா?

1971-ஆம் ஆண்டு இந்திரா காங்கிரசும், தி.மு.க.வும் உடன்பாடு கொண்டு தேர்தலில் போட்டியிட்டபோது அந்த அணியில் சேர்ந்திருந்தவர்கள்தான் இப்போது இப்படிப்பட்ட வினாக்களை எழுப்புகிறார்கள்.

விளக்கம் பெறுவதற்காக அல்ல! விளக்கம் தெரியாதவர்களுமல்ல! மற்றவர்களுக்கு விளக்கக் கூடிய விவேகிகளும் கூட!

ஆனாலும் வினாக்கள் தொடுக்கிறார்கள், ஏதாவது நமது கோட்டைக்குள் வெடிப்பு ஏற்படாதா என்ற ஆவலுடன்!

பாவம், பரிதாபகரமாக ஏமாந்து போவார்கள்!

நாம், இலட்சியங்களை மறந்து விட்டோமாம்! ஏன் தெரியுமா? இந்திரா காங்கிரசுடன் உடன்பாடு கொண்டதுதான் காரணமாம்!

அ.தி.மு. க. வெற்றி பெற்றிருந்த தஞ்சைத் தொகுதியை; இடைத் தேர்தலின்போது இந்திரா காந்தி அம்மையாருக்கு விட்டுக் கொடுக்க முன்வந்து, நீ எனக்கு நண்பனா? விரோதியா? என்று மொரார்ஜி கேட்டவுடன் பதறிப்போய் அம்மையாருக்குக் கொடுத்த வாக்கினைத் திரும்பப் பெற்றுக் கொண்டு, அதன் பிறகு அந்தத் தொகுதியில் வேறு வழியின்றி இந்திரா காங்கிரஸ் கட்சியின் வேட்பாளரை ஆதரித்து அ.தி.மு. க. தொகுதியைத் தாரை வார்த்துக் கொடுத்தார்களே! அவர்கள்தான் கொள்கையில் உறுதியும், குறிக்கோளில் நம்பிக்கையும் கொண்டுள்ள தி.மு.கழகத்தைப் பார்த்து இன்றைக்குக் கேலி பேசுகிறார்கள். சேறு வாரி வீசுகிறார்கள்.

எட்டி எட்டிப் பார்த்து எட்டாத காரணத்தால், ச்சீ! இந்தப் பழம் புளிக்கும்! என்று விமர்சித்து விட்டுப் போன நரியின் கதையொன்றைப் பாலப்பருவத்தில் படித்திருக்கிறோம் அல்லவா! அந்த வகையினர் இவர்கள்!

தி.மு. க. அரசு மீது விசாரணைக் கமிஷன் வைக்க வேண்டும். உடனடியாக அந்த அரசை மத்திய அரசு கலைக்க வேண்டும்.

என்று காரசாரமாக - வீர தீரமாக - அறிக்கை வெளியிட்டவர்கள் இன்று தலைவலியும், காய்ச்சலும் தங்களுக்கு வந்தவுடன் எப்படித் தவிக்கிறார்கள் பார்த்தாயா?

மாநில அரசுகளை, மத்திய அரசு கலைப்பதற்கான உரிமையை வழங்கும் அரசியல் சட்டப்பிரிவு அகற்றப்பட வேண்டுமென்று நமது கழகச் சார்பில் வலியுறுத்தியபோது, கூடாது! கூடாது! அந்தச் சட்டப்பிரிவு இருந்தே தீரவேண்டும் என்று ஜனதா ஆட்சிக்கு ஆதரவாக வாக்களித்தவர்கள், இன்று கலைத்து விட்டார்கள்! கலைத்து விட்டார்கள்! என்று கதறும்போது - வினை விதைத்தவன் வினையறுக்கிறான்! என்று எண்ணிடத்தானே தோன்றுகிறது!

சட்டப் பேரவையில் காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சியின் இரண்டு எம்.எல்.ஏ.க்களையும் எப்படியோ தங்கள் பக்கம் இழுத்துக்கொண்டு அந்தக் கட்சியையே சட்ட சபையில்

கலைத்தவர்கள் - தங்கள் கட்சியின் ஆட்சி கலைக்கப்பட்டதற்காக வருந்தும் போது - இரண்டு மட்டும் இருந்து அதனையும் இழந்த கட்சித் தொண்டர்களின் வயிறு எப்படி எரிந்திருக்கும்!

இவர்கள் மட்டும் யாருடனும் உடன்பாடு கொள்ளலாம்! உறவு பூணலாம்! ஆனால், நமது கழகம் மட்டும் எந்தக் கட்சியுடனும் உறவு கொள்ளக்கூடாது, அப்படி உறவு கொண்டால் இவர்களுக்கு வந்து விடுகிறது பொல்லாத ஆத்திரம்!

பிற்படுத்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்தைப் பாதிக்கும் உத்தரவை எதிர்த்து தி.க. - தி.மு. க. - இந்திய கம்யூனிஸ்டு கட்சி ஆகியவை கூட்டுக் குரல் கொடுத்தபோது ஆகா! ஆகா! கருணாநிதிக்கும், வீரமணிக்கும், கல்யாணசுந்தரம் மத்தளம் தட்டுகிறார். இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி முதலாளிகளின் முகாமாகி விட்டது.

இப்படித்தான் அ.தி.மு.க. மந்திரிகள் கட்டுரைகள் தீட்டினார்கள்! கடும் பதங்களைப் பிரயோகித்துப் பேசினார்கள்!

ஒழிக! ஒழிக! என்று குரல் எழுப்பிச் சட்ட சபையை ஒத்தி வைக்கிற அளவுக்குச் சட்டசபையில் மார்க்கிஸ்ட் தலைவர்கள் போராடினார்களே! எதற்காக? அ.தி.மு.க. ஆட்சியாளர்களின் தொழிலாளர் விரோதப் போக்கினைக் கண்டிப்பதற்காகத்தானே! திருச்சியில் திரு. உமாநாத்தின் துணைவியார் தனியாக இருக்கும் போது அவர் வீட்டில் அ.தி.மு. க.வினர் கல்லும், சோடா பாட்டிலும் வீசிக் கலகம் செய்தது பற்றிச் சட்டமன்றத்தில் திரு. உமாநாத் கோபாவேசமாக எடுத்துரைத்த பிறகு - அ.தி.மு.க.வினர் அந்தச் சம்பவத்தைத் திரித்து எவ்வளவு ஆபாசக் கதைகள் கட்டினர் என்பதை நாடு அறியாதா?

தங்களுடன் உறவு கொள்ளாத எந்தக் கட்சிகளின் கூட்டணியையும் எடுத்தெறிந்து பேசிப் பழக்கப்பட்டவர்களுக்கு - இப்போது இந்திரா காங்கிரஸ் - தி.மு.க. உறவு வலுப்படுவது கண்டு நெஞ்சு கொதிக்கத்தான் செய்யும்!

ஏனெனில், இந்திரா காங்கிரஸ் உறவினைப் பெறுவதற்காக பிப்ரவரி 17-ஆம் தேதி மாலை ஆறு மணி வரையில் முயற்சி செய்து பார்த்தவர்கள் அல்லவா? 18-ஆம் தேதி காலையில் டெல்லி சென்று அந்த உறவுக்காக எதையும் விட்டுக் கொடுக்கத் தயார் என்ற நிலையில் விமான டிக்கெட் வாங்கியவர்கள் அல்லவா?

அந்தோ! பாவம்! அதில் ஏற்பட்ட ஏமாற்றம் அவர்களையும், அவர்களது ஆதரவுப் பத்திரிகையாளர்களையும் எந்த அளவு குழப்பத்திற்கு ஆளாக்கியிருக்கிறது என்பது புரிகிறதல்லவா?

உடன்பிறப்பே! குழம்பிக் கிடப்பவர்களுக்கு ஒன்று சொல்வோம்! அய்யன்மீர்! நீங்கள்தான் மேலும் மேலும் குழப்பிக்கொண்டு திரிவீர்களே தவிர - எங்களை உங்கள் திசை திருப்பும் பேச்சுகளாலும், எழுத்துகளாலும் எதுவும் செய்ய முடியாது.

இந்த உறுதியுடன் நமது அணியின் பணிகள் தொடரட்டும்!

அன்புள்ள,

மு. க.

(28-02-1980)

723. மனச்சாட்சி உள்ளவர்களுக்கு மாத்திரம்!

உடன்பிறப்பே,

ஆட்சி கலைக்கப்பட்டதைக் கண்டித்துச் சென்னையில் அ.தி.மு. க., ஜனதா, மார்க்சிஸ்டு, இந்திய கம்யூனிஸ்டு மற்றும் சில கட்சிகள் இணைந்து நடத்திய ஊர்வலத்தில் அ.தி.மு. க. கட்சியின் குண்டர்கள் திட்டமிட்டுக் கலவரங்களில் ஈடுபட்டு - தனியார் கடைகளைச் சேதப்படுத்தி, பொருள்களைச் சூறையாடியதோடு காவல் நிலையத்தில் நுழைந்து அமளி நடத்தி - தியேட்டர்கள், கட்டிடங்கள், சிலைகள் ஆகியவற்றை நாசப்படுத்த முயன்றதையும் நாடு மறந்திடவில்லை.

நாமும், இந்த வன்முறை வெறியாட்டத்திற்கும், அதில் குண்டர்கள் ஈடுபடுத்தப்பட்டதற்கும் அ.தி.மு. க. தலைமைதான் மூலகாரணம் என்பதைச் சுட்டிக்காட்டியிருக்கிறோம்.

நமது ஏடுகளில் வந்துள்ள செய்திகள், நமது அறிக்கைகள் அனைத்திலும் இந்த வன்முறைக்கு வித்திட்டவர்களும், அண்ணாசாலையில் குரங்காட்டம் ஆடியவர்களும் எம்.ஜி.ஆர். கட்சியின் குண்டர்களேயென்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளன.

ஆனால், அ.தி.மு. க. அணியில் உள்ள கட்சிகளின் பிரதிநிதிகள் அனைவரும் கையெழுத்திட்டு ஆளுநரிடம் அளித்துள்ள மனு ஒன்றில் இந்த வன்முறைச் செயல்கள் இந்திரா காங்கிரஸ், தி.மு. கழகம் ஆகிய கட்சிகளின் தூண்டுதலோடு, சமூக விரோதிகளுடன் சேர்ந்துகொண்டு போலீசார் திட்டமிட்டு நடத்தியது என்று குற்றம் சாட்டியுள்ளனராம்!

பரவாயில்லை! தங்கள் அணிக்குத் தலைமை தாங்கும் எம்.ஜி.ஆர். கட்சியை காப்பாற்றுவதற்காக, தி.மு. க. மீதும் - இந்திரா காங்கிரஸ் மீதும் பழியைப் போடுவதற்கு அவர்கள் முன் வந்ததைப் பாராட்டத்தான் வேண்டும்.

ஏனெனில் - மனச்சாட்சியை விலக்கி விட்டு இப்படி ஒரு மனுவை எழுதி ஆளுநரிடம் வழங்க அதிகத் திறமை தேவைதான்!

கடந்த ஓராண்டுக்கு முன்பு எம்.ஜி.ஆர். ஆட்சியின் தொழிலாளர் விரோதக் கொள்கையைக் கண்டித்து தி.மு. க., மார்க்சிஸ்டு, இந்திய கம்யூனிஸ்டு, மற்றும் சில கட்சிகள் தமிழ்நாடு முழுவதும் கடையடைப்பு, வேலை நிறுத்தம் நடத்தியதை நீ அறிவாய்!

அந்தக் கடையடைப்பு வேலை நிறுத்தத்தை உடைக்க எம்.ஜி.ஆர். கட்சியின் குண்டர் படையினர் ஏவி விடப்பட்டனர் என்பதையும், அவர்கள் அந்தக் காரியத்தை வெற்றிகரமாகச் செய்து வன்முறைக் கொடியை உயரப் பறக்க விட்டதற்காக அந்தக் குண்டர்களுக்கு விருந்து ஒன்று நடத்தியதையும், அமைச்சர் ஒருவர் தொலைபேசியில் பேசிய விவரங்களடங்கிய டேப் ஒன்றை நான் சட்டசபையில் எடுத்துக்காட்டி அதை அமைச்சரவையில் இருந்த யாரும் மறுக்கவில்லையென்பதும் சட்டசபைக் குறிப்பேட்டில் பதிவாகியுள்ள உண்மைகளாகும்.

அந்தக் கடையடைப்பின் போது எம்.ஜி.ஆர். கட்சிக் குண்டர்கள் என் வீட்டுக்குள் நுழைந்து கலவரம் செய்து கண்ணாடிகள், ஜன்னல்கள் ஆகியவற்றை சேதப்படுத்தியதை இன்றைய தினம் எம்.ஜி.ஆர். தலைமையில் அணி வகுக்கும் கட்சித் தலைவர்கள், நேரிலேயே வந்து பார்த்து எம்.ஜி.ஆர். கட்சியின் வன்முறைச் செயல்களுக்குக் கண்டனம் தெரிவித்திருக்கிறார்கள்.

அதுமட்டுமா? அன்றைய ஆளுங் கட்சியினரான எம்.ஜி.ஆர். கட்சியினர் தான் தோழர் அரிபட் அவர்கள் உண்ணாவிரதமிருந்தபோது அவரைத் தாக்கிப் பந்தலையும் கொளுத்தினர்.

ஆசிரியர், என்.ஜி.ஓ. மற்றும் பல்வேறு தொழிற்சங்கத்தினர் நடத்திய போராட்டங்களை ஒடுக்குவதற்கு, ஆளுங்கட்சியாக இருந்த எம்.ஜி.ஆர். கட்சியினர் பயன்படுத்தப்பட்டதை இன்று எம்.ஜி.ஆர். தலைமையில் அணி வகுத்திருக்கும் கட்சித் தலைவர்கள் கண்டித்ததை அவர்களே மறந்து விடமுடியுமா?

திருச்சி சிம்கோ போராட்டத்தின் போது தொழிலாளர்களை தாக்குவதற்கு எம்.ஜி.ஆர். கட்சியினர் முனைந்ததையும் - அந்தக் குண்டர்களைக் கைது செய்த ஒரு போலீஸ் அதிகாரி உடனே வேறு ஊருக்கு மாற்றப்பட்டதையும் தோழர் உமாநாத் அவர்களே சட்ட மன்றத்தில் மிகக் கடுமையாக விமர்சித்திருக்கிறாரே!

சென்னை ஊர்வலத்து வன்முறையை இந்திரா காங்கிரசும் - தி.மு. க.வும் தூண்டி விட்டதாம்!

நெஞ்சாரப் பொய் சொல்லுகிறார்கள்! பொய்த்த பின் தன் நஞ்சே தன்னைச் சுடும் என்பதை உணர மறுக்கிறார்கள்!

சிவாஜியின் சாந்தி தியேட்டரில் நுழைந்து கலகம் விளைவிக்க இந்திரா காங்கிரசாரும், தி.மு. க. வினரும் தூண்டினார்களாம்!

அண்ணா சாலையில் உள்ள என்னுடைய சிலையை உடைக்கத் தி.மு.க.வினரும், இந்திரா காங்கிரசாரும் முயன்றார்களாம்!

எம்.ஜி.ஆருக்குத்தான் பொய் பேசுவது - திசை திருப்புவது - வன்முறையைத் தூண்டி விடுவது வாடிக்கை!

அவரோடு சேர்ந்த குற்றத்திற்காக இந்த நல்ல தலைவர்களுமா கெட்டுவிடுவது?

யார் எம்.ஜி.ஆர்.?

1972-இல் தி.மு.க.வை விட்டு வெளியேறி ஊரில் ஓடுகிற பஸ்கள், லாரிகளையெல்லாம் அடித்து நொறுக்கிக் கொளுத்தச் சொன்னவர்!

தி.மு.க. அமைச்சர்கள் கூட்டத்தில் கலகம் செய்யத் தூண்டியவர்!

வேழவேந்தனின் கார், தீயிடப்பட்டு சாம்பலாக்கப்பட்டது எம்.ஜி.ஆரின் குண்டர்களால்!

மன்னையின் நெற்றியில் கல் வீசப்பட்டு ரத்தம் கொட்டியது!

எப்படிப்பட்ட பண்பாளர் எம்.ஜி.ஆர்.?

என் பிறந்த நாள் விழாக்களின் போது எனக்குக் கொடும்பாவி கட்டிக் கொளுத்தச் சொன்னவர் எம்.ஜி.ஆர்.!

இவை கற்பனைகள் அல்ல! நடந்த நிகழ்ச்சிகள்! அவர் கட்சி ஏடுகளிலேயே தூண்டிவிடப்பட்ட அறிக்கைகள்! செய்திகள்! ஆதாரங்களுடன் தான் எழுதுகிறேன்!

ஏதோ சில கட்சிகள் தேர்தல் ஆதாயங்களை முன்னிட்டும், சில கட்சிகள் கொள்கை வேறுபாடுகள் காரணமாகவும், எம்.ஜி.ஆர். கட்சியுடன் அணி சேர்ந்திருக்கலாம்!

அதற்காக அவர் கட்டிக் காத்து வரும் பண்பாடற்ற போக்கினையும் ஆதரிக்க அந்தக் கட்சிகள் முன்வந்தால், நாட்டின் எதிர்காலம் என்ன ஆவது என்பதை சிந்திக்க வேண்டாமா?

சென்னையில் இப்போது கலவரம் - தடியடி - கண்ணீர்ப் புகை - இத்துடன் முடிந்தது!

இதற்கு நீதி விசாரணை கேட்கிறார்கள், கேட்கட்டும்!

ஆனால், நாடாளுமன்றத் தேர்தலின்போது மதுரையில் போலீசார் மீது நடத்திய தாக்குதலில் துப்பாக்கிப் பிரயோகம் வரை சென்று இருவர் உயிரிழந்தனர் - போலீஸ் அதிகாரியே - அன்றைய ஆளுங்கட்சியான அ.தி.மு. க.வினர் மீது தான் குற்றமென்று அறிக்கை விடுத்தார்! இரண்டு பேர் மாண்டு போகிற அளவுக்கு நடைபெற்ற வன்முறை குறித்து விசாரிக்க நீதி விசாரணையை இவர்களில் யாரும் கேட்டதாகவோ - அல்லது எம்.ஜி.ஆர். ஆட்சி நீதிவிசாரணை நடத்தியதாகவோ தெரியவில்லையே; ஏன்? ஏன்? ஏன்?

மனச் சாட்சியுள்ளவர்களுக்கு மாத்திரம் விடுக்கப்படும் வினாக்கள் இவை! அவ்வளவுதான்!

அன்புள்ள,

மு. க.

(06-03-1980)

724. மனப்புண் ஆற்றிடும் மருந்தே வா!

உடன்பிறப்பே,

அண்ணன் உருவாக்கி, வளர்த்துக் காத்து, உறுதி குலையாமல் நடைபோட வைத்த திராவிட முன்னேற்றக் கழகப் பாசறை நோக்கி வருகின்ற உன்னை என் அன்பே! வா! ஆருயிரே வா! உடன்பிறந்த கொள்கைத் தீபமே! வா! காலத்தால் இடையில் பிரிக்கப்பட்டிருந்தாலும், இன்று இதயத்தால் - இலட்சியத்தால் இறுகப் பிணைக்கப்பட்டு விட்ட கழகக் குன்றமே வா! என அழைத்து மகிழ்கின்றேன் நான்!

அறுபதாண்டு காலத்திற்கு மேலாக ஆணிவேர் விட்டு வளர்ந்த வைரம் பாய்ந்த இயக்கம், திராவிடர் இயக்கம்! இந்த இயக்கம் எத்தனையோ சோதனைகளைத் தாண்டி - அபாயக் கட்டங்களை வென்று - களம்பல கண்டு - கலாச்சாரத்தின் காவலனாக இன்றளவும் நிமிர்ந்து நிற்கிற காட்சியைக் கண்டு நாடு பூரித்துப் போகிறது!

சாதாரண சாமானிய மக்கள் - பிற்படுத்தப்பட்டோர் - தாழ்த்தப்பட்டோர் - நடுத்தர வர்க்கத்தினர் - உழைக்கும் கூட்டத்தினர் தங்களின் பாதுகாப்பு அரணாகவும், கலங்கரை விளக்கமாகவும் கொண்டிருப்பது இந்த இயக்கத்தைத்தான்!

அந்த மக்களின் உரிமைகள் பறிக்கப்படும் ஆபத்துகள் அரும்பியபோதும் - எதிர்கால நல்வாழ்வு முடக்கப்படும் முடிவுகள் ஆணைகளாக வெளிப்பட்டபோதும் - ஏன்? நீதிமன்றத்தின் தீர்ப்புக்களாகவே பிரகடனப்படுத்தப்பட்ட போதும் - பெரியாரின் வழி நின்று, பேரறிஞர் அண்ணாவின் பாதை மாறாமல் போர்க்கொடி உயர்த்தி வெற்றி முரசு கொட்டிய தி.மு.கழகமும் - திராவிடர் கழகமும் திராவிடர் இயக்கத்தின் உணர்வு பூர்வமான அடிப்படையை உலகுக்கு எடுத்துக்காட்டின என்பதை எவர்தான் மறுக்க இயலும்?

அந்த உணர்வின் உச்சி முகட்டில் நின்றுதான் உன்னை அழைக்கிறேன். நீயும் மேனி சிரிக்க - நா தழுதழுக்க - இதயத்தின் ஆழத்தில் பதிந்து கிடந்த பாசம் முகமெலாம் மலர்ந்திட என் கை குலுக்கி, இதோ வந்துவிட்டேன்! நான் வரவேண்டிய இடத்திற்கு! எனக் கூறிடும்பொழுது எப்படி மகிழ்கிறேன் தெரியுமா?

மகுடத்திலிருந்து சிதறிவிட்ட நவரத்தினங்கள் மீண்டும் அந்த மகுடபதியின் கிரீடத்தில் வந்து ஒட்டிக் கொண்டால் அவன் எத்துணை மகிழ்ச்சியடைவான்! அஃதேபோல்தான் கண்மணிகளாம் என் உடன்பிறப்புகள் - கழகத்தில் வந்து இணையும் போது கழகத் தலைமை களிபேருவகை கொள்கிறது.

உடன்பிறப்பே! உனக்கல்ல, உன்னைப் போன்ற - என்பாலும் இலட்சியத்தின் பாலும் உள்ளன்பு கொண்ட உடன்பிறப்புகள் சிலருக்கு ஒருவிதத் தயக்கம் இருக்கும்! என்ன தயக்கம் என்று கேட்கிறாயா?

ஒழிக என்று ஊர்வலத்தில் முழக்கமிட்டோமே! ஒன்றா? இரண்டா? எத்தனையோ குற்றச்சாட்டுகளைக் கர்ண கடூரமாக ஒலித்துக் காட்டி உணர்ச்சிப் பிழம்பென ஓங்காரக் குரல் எழுப்பினோமே! ஏடெடுத்து - எடுத்தேன் கவிழ்த்தேன் என்று எழுதினோமே! திகைக்க வைக்கிறேன்! தீர்த்துக் கட்டுகிறேன்! எனத் தீப்பந்த மொழி பேசினோமே! தவிப்பில் ஆழ்த்துகிறேன்! தனி மரமாக ஆக்குகிறேன்! எனத் தணல் எடுத்து வீசினோமே! இன்று எந்த முகத்துடன் செல்வது? என்ற தயக்கம் சில உடன்பிறப்புகளுக்கு உதிப்பது இயற்கைதானே!

ஆனால், என்னைப் பற்றி நீ அறிவாய் அல்லவா? யாருடைய இதயத்தை இரவலாகத் தருமாறு இரவலனாக நின்று பெற்றேன் என்பது உனக்குப் புரியுமல்லவா?

மழலையொன்று தாயின் மீது பம்பரத்தை வீசி விடுகிறது! தாயின் நெற்றியில் பம்பரத்தின் ஆணிபட்டு ரத்தம் கூடக் கசிகிறது! தாய், தான் பெற்ற மழலையின் முதுகிலே ஒரு தட்டுத் தட்டி அதட்டி விடுவாளே தவிர, ரத்தத்திற்கு ரத்தம் - பழிக்குப் பழி! என்று தன் பிள்ளைக்கு முன்னால் பல்லைக் கடித்துக்கொண்டு பழிவாங்கத் துடித்து நிற்கமாட்டாள் அல்லவா?

தயக்கம் கொள்கிற உடன்பிறப்புகள், அந்தத் தாயுள்ளம் இங்கேயிருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளட்டும்.

குற்றம் பார்க்கில் சுற்றமில்லை என நமது அண்ணன் நீண்ட கட்டுரையொன்று தம்பிக்கு! எனத் தலைப்பிட்டுக் கடித வடிவில் எழுதினாரே! நினைவிருக்கிறதா உனக்கு?

வா! வா! என் உடன்பிறப்பே! வாஞ்சை கொண்ட உள்ளம் உன்னை வாரியணைத்திட அழைக்கிறது! வந்து கொண்டிருக்கும் உடன்பிறப்பாளர் வரிசையினைப் பார்! உனக்கில்லாத இடமா?

சோதனைகளாலும், வேதனைகளாலும் சல்லடைக் கண்களாகத் துளைக்கப்பட்ட இதயம்தான் இது எனினும் - இது உன் வருகைக்காக விரிந்து கொடுக்கும்! காரணம், மனப்புண் ஆறிட நீயே மருந்தாகிறாய் அல்லவா?

எனவே, மனப்புண் ஆற்றிடும் மருந்தே! வா! என உனை நான் அழைக்கிறேன்! அழைக்கும் உரிமை படைத்தவன் என்பதால் அழைக்கிறேன்!

அன்புள்ள,

மு. க.

(14-03-1980)

725. தடுத்து நிறுத்த முடியாது!

உடன்பிறப்பே,

தன்னைத் தேர்ந்தெடுத்த தொகுதிக்குச் செல்லாதது மட்டுமல்ல. அதே தொகுதியில் தாய்க்குலத்தைச் சுட்டுக் கொன்று வாகைக்குளம் கண்டவர்!

இரண்டரை ஆண்டுக்கால ஆட்சிக் காலத்தில் சட்டமன்ற மேலவையைப் பலமுறை அலட்சியப்படுத்தியவர்!

சட்டமன்றப் பேரவைக்கு ஏதோ சில நாட்கள் மட்டுமே வந்து கொண்டிருந்தவர்! தொழில் இலாகா, போலீஸ் இலாகா, ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் மற்றும் பொது இலாகா போன்ற பெரிய இலாகாக்களைத் தன்னிடம் வைத்துக் கொண்டிருந்தும் கூட, அந்த இலாகாக்கள் பற்றி எழுப்பப்பட்ட நூற்றுக்கணக்கான கேள்விகளுக்கு விடையளிக்க சட்டப் பேரவைக்கே வராமல், இரண்டரை ஆண்டுக் காலத்தில் நாலைந்து கேள்விகளுக்கு மட்டுமே பதிலளித்து விட்டுக் கேள்வி நேரத்திற்கே வராமல் தட்டிக் கழித்துவிட்டவர்!

திட்டங்கள் பலவற்றை அறிக்கைகளாகவே தந்து விட்டு அதற்கான ஆணைகளைப் பிறப்பிப்பதில் அக்கறை காட்டாதவர்!

இஸ்மாயில் கமிஷன் அறிக்கையை கவர்னர் திருப்பியனுப்பாமல் தாமதம் செய்கிறார் என்று சட்டப் பேரவையில் கூறிவிட்டு, அந்த அறிக்கை தனக்கு வந்து சேரவில்லையென்று கவர்னர் குறிப்பிட்ட பிறகு, அதனை கவர்னருக்கு அனுப்பி வைக்காத அதிகாரி மீது நடவடிக்கை எடுக்கிறேன் என்று பேரவையில் வாய்ப்பந்தல் போட்டவர்!

வருமான வரி பதின்மூன்று லட்சம் கட்டுவதற்குத் தனது ஸ்டுடியோவை அ.தி.மு. க. கட்சியிடம் அடமானம் வைத்து கடன் வாங்கியதாகச் சட்டசபையில் பொய் சொன்னார் என்று அந்தக் கட்சியின் முன்னாள் பொருளாளர் சௌந்தரபாண்டியனால் விமர்சிக்கப்பட்டவர்!

யார் எதிர்த்தாலும், எவர் எதிர்த்தாலும், பிற்படுத்தப் பட்டோரைப் பாதிக்கும் வருமான வரம்பு ஆணையைத் திரும்பப் பெறமாட்டேன் என்று திக்விஜயம் செய்து அறிவித்தவர்!

தமிழகம் கொதித்துக் கிளம்பியவுடன், பிற்படுத்தப்பட்டோரில் உள்ள ஏழைகளைப் பற்றியும் - முன்னேறிய வகுப்பில் உள்ள ஏழைகளைப் பற்றியும் கவலைப்படாமல் முப்பத்தி ஒன்று என இருந்த சதவிகித இட ஒதுக்கீட்டை ஐம்பது என உயர்த்தித் தனது கோபத்தைக் காட்டிக் கொண்டவர்!

அரசாங்க செலவில் பெரியார், அண்ணா மற்றும் பல தலைவர்களுக்கு விழா எடுத்து அந்தப் பொதுவிழாக்களை - எதிர்க்கட்சிகளைக் கடுமையாகச் சாடிடும் அரங்கமாக மாற்றிக் கொண்டவர்!

மதுவிலக்கைத் தீவிரப்படுத்துவதில் மகாத்மா காந்தியையும் மிஞ்சக்கூடியவன் நான் என்று மார்தட்டித் தோள்தட்டி அதற்கென நாடு கடத்தும் சட்டம் வரையில் தீட்டி, குதியோ குதி எனக் குதித்துவிட்டுக் கடைசியில் மதுவிலக்குச் சட்டத்தை மறைமுகமாக முழுமையாகத் தளர்த்தி விட்டவர்!

தன்னைத் தவிர நாணயமானவர்களே கிடையாது என்று தமுக்கு அடித்துக் கொண்டே, பேருந்து முதலாளிகளுக்குச் சலுகை அளித்துப் பல லட்சம் குவித்துக் கொண்டவர்!

ஊழலை ஒழிப்பேன் என்று உரத்த குரலில் பேசிவிட்டு, கப்பல் கப்பலாக ஊழல் புரிந்தவர்!

புதுக்கட்சி தொடங்கி எட்டாண்டு காலமாகியும் கூட அந்தக் கட்சியின் கிளை மட்டத்திலோ, மாவட்ட அளவிலோ, ஏன்? செயற்குழு - பொதுக்குழு - பொதுச்செயலாளர் போன்ற நிர்வாக அமைப்புகளுக்கோ - இதுவரையில் தேர்தலை நடத்திட விரும்பாதவர்!

அரசியல் ரீதியான கட்சியெனச் சொல்லிக் கொண்டே அதற்குரிய நியமன நிர்வாகிகளைத் திடீரென ஒதுக்கி வைத்து ஓரம் போகச் சொல்லிவிட்டு ரசிகர் மன்றங்களின் கூட்டங்களைத் தானே முன்னின்று நடத்துகிறவர்!

தஞ்சையில் போட்டியிட வருக! தாயே! என திருமதி இந்திரா காந்தி அம்மையாரை அழைத்துவிட்டு, நீ எனக்கு நண்பனா? விரோதியா? என்று பிரதமர் மொரார்ஜி கேட்டவுடன் இந்திரா காந்தி வருகைக்கான எல்லா ஏற்பாடுகளையும் நிறுத்திவிட்டு டெல்லியிலிருந்து சென்னைக்கு ஓடோடி வந்தவர்!

ஆட்சி செலுத்தியபோது எதிர்க்கட்சியினர் நடத்திய அமைதி வழிப் போராட்டங்களை ஆளுங்கட்சிக் குண்டர்களைக் கொண்டு திட்டமிட்டுத் தாக்குமாறு வழிவகுத்துத் தந்தவர்!

விளம்பரமே பிடிக்காது என்று கூறிவிட்டு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் டைரிகளில் கூட தன்னுடைய படங்கள் நாலைந்து இடம் பெற வேண்டுமென்று திட்டமிட்டுச் செயலாற்றியவர்!

அரிபட் உண்ணாவிரதமிருந்த பந்தல் ஆளுங்கட்சியினரால் சூறையாடப்பட்ட போதும் - உமாநாத்தின் வீடு தாக்குதலுக்கு ஆளானபோதும் - கே.டி.கே. தங்கமணி அடிக்கப்பட்ட போதும் - சட்டம் தன் கடமையைச் செய்கிறது என்று சாக்குருவி வேதாந்தம் பேசியவர்!

வன்முறையின் மொத்த உருவமாக இருந்து கொண்டு - மற்றவர்களைப் பார்த்து வன்முறையாளர் என்று வாய்கிழியப் பேசுகிறவர்!

உடன்பிறப்பே! இத்தனை லட்சணங்களும் கொண்டவர் யார் என்று விளக்க வேண்டுமா உனக்கு?

அவரைப் புரிந்து கொண்டோர் அணி அணியாக நமது கழகம் நோக்கி வந்து கொண்டிருக்கிறார்கள்!

அப்படி வருகின்ற உடன்பிறப்புகளை மனமகிழ்ச்சியுடன் கழகம் வரவேற்றுக் கொண்டிருக்கிறது!

காலியாகிக் கொண்டிருக்கிற முகாமிலே இருப்பவர்கள் சிலர், கனல் கக்குகிறார்கள்! அனல் பறக்க எழுதுகிறார்கள்! அய்யோ! பாவம் - ஆடாத ஆட்டமெல்லாம் ஆடுகிறார்கள்!

வழக்கம்போல் வசை புராணம் தொடருகிறது! முந்தைய நிலையை விட சற்று மும்முரமாகவே கூட!

இழித்தல் - பழித்தல் - ஆபாச அர்ச்சனை - இவற்றால் சீரழிந்து விட்ட அந்த இடத்திலிருந்து சிந்திப்பவர்களின் கூடாரத்திற்கு வருகின்ற உடன்பிறப்புகளை, இனி எந்தச் சாகசத்தாலும் தடுத்து நிறுத்த முடியாது! இது உறுதி!

அன்புள்ள,

மு. க.

(17-03-1980)

726. பார்த்தாயா பரிவினை? கண்டாயா கனிவினை?

உடன்பிறப்பே,

பிப்ரவரி பதினோராம் தேதியன்று (11-2-80) தமிழக சட்டப் பேரவையில் நிதியமைச்சராகவும், அவை முன்னவராகவும் இருந்த நாஞ்சிலார் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். சார்பில் ஒரு அறிவிப்பை வெளியிட்டார். அந்த அறிவிப்பு எல்லா ஏடுகளிலும் உடனடியாக வெளிவந்தது.

விவசாயிகளின் கிளர்ச்சியின்போது கொலை, கொள்ளை போன்ற வன்முறைச் செயல்களில் நேரடியாக ஈடுபட்டவர்கள் தவிர, மற்றவர்கள் மீதான வழக்குகள் அனைத்தையும் திரும்பப் பெறுவது என்று அரசு முடிவு செய்திருக்கிறது!

பிப்ரவரி 11-ஆம் நாள் காலையில் இப்படியொரு அறிவிப்பு! பிப்ரவரி 17-ஆம் நாள் இரவுதான் எம்.ஜி.ஆர். அரசு கலைக்கப்படுகிறது.

விவசாயிகள் மீதுள்ள வழக்குகள் வாபஸ் வாங்கப்படுமென்று அறிவித்து ஏழு முழு நாட்கள் இடையிலே இருந்திருக்கின்றன. அந்த இடைவெளியில் அரசின் அறிவிப்பு ஆணையாக்கப்பட்டு, அந்த ஆணை அமலாக்கப்பட்டிருக்கலாம்.

அதற்கெல்லாம் முதலமைச்சராக இருந்த நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு நேரமில்லை! ஆனால் 25 ஐ.பி.எஸ்., ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை மாற்றம் செய்து 16-ஆம் தேதி ஒரே நாளில் உத்திரவிட மட்டும் நேரம் இருந்தது!

இப்போது கொக்கரிக்கிறார்! எங்கள் அரசாங்கம் அறிவித்ததை ஆளுநர் ஆட்சியில் ஏன் நடைமுறைப்படுத்தவில்லை? என்று!

அதுமட்டுமா? விவசாயிகள் சங்கத் தலைவர் நாராயணசாமி நாயுடு அவர்கள் மீது தொடரப்பட்ட வழக்கையும் ஏன் இன்னும் வாபஸ் வாங்கவில்லையென்று எரிமலை நெருப்பை வேறு கக்குகிறார் எம்.ஜி.ஆர்.!

அவர் சார்பில் சட்டப் பேரவையில் தரப்பட்ட அறிவிப்பை அவரே மீண்டும் ஒருமுறை படித்துப் பார்ப்பது நல்லது!

கொலை, கொள்ளை போன்ற வன்முறைச் செயல்களில் நேரடியாக ஈடுபட்டவர்கள் தவிர, மற்ற விவசாயிகள் மீதுள்ள வழக்குகள் வாபஸ் வாங்கப்படும்.

என்றுதான் எம்.ஜி.ஆர். அரசு அறிவித்தது!

திரு. நாராயணசாமி நாயுடு அவர்கள் மீது தொடரப்பட்ட வழக்கு என்ன?

நெல்லை மாவட்டத்திலே விவசாயிகளின் கிளர்ச்சியின்போது ஒரு போலீஸ் அதிகாரி கொல்லப்பட்டு விடுகிறார்.

அதற்குக் கோவையிலே இருந்த நாராயணசாமி நாயுடு அவர்கள் கைது செய்யப்படுகிறார்.

அந்தக் கொலைக்கான சதி செய்தார் - கொலை முயற்சியை தூண்டி விட்டார் - கொலையில் நேரடியாகத் தொடர்புகொண்டார் - என்பதற்கானச் சட்டப் பிரிவுகளின் மீது நாயுடு அவர்களை வழக்கில் சிக்க வைத்தது எம்.ஜி.ஆர். அரசு!

120பி, 302, 307-வது சட்டப் பிரிவுகள் நாயுடு அவர்களை வளைத்துக் கொண்டன. கோவையிலிருந்து உடல்நலமில்லாத நிலையில் அவர் பாளையங்கோட்டை சிறைச்சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

அவரது கிராமத்து வீடு சோதனையிடப்பட்டது. வீட்டில் திறக்க முடியாமல் இருந்த இரும்புப் பெட்டியொன்றை போலீஸ் அதிகாரிகள் தூக்கிக்கொண்டே போய் விட்டார்கள்! இன்னமும் அந்தப் பெட்டி வீடு வந்து சேரவில்லை!

அந்தப் பெட்டி வைக்கப்பட்டிருந்த மரப்பலகை மட்டுமே நாயுடு அவர்களின் வீட்டில் ஒரு மூலையில் எம்.ஜி.ஆரின் அராஜக ஆட்சியின் நினைவுச் சின்னமாக காட்சியளித்துக் கொண்டிருக்கிறது.

கொலையில் நாயுடு அவர்கள் நேரடியாக ஈடுபட்டார் என்று வழக்கையும் தொடுத்து விட்டு - அத்தகைய வழக்குகள் தவிர மற்றவை வாபஸ் வாங்கப்படுமென்றும் அறிவித்து விட்டு - அப்படி அறிவித்ததையும் உடனடியாக ஆணையிட்டு அமல்படுத்தாமல் இருந்து விட்டு -

இப்போது தமிழகத்து விவசாயப் பெருமக்களை ஏமாற்றுவதற்கு ஏன் இன்னமும் நாயுடு அவர்களின் வழக்கை வாபஸ் வாங்கவில்லை? என்று எம்.ஜி.ஆர். ஆடுகிற நாடகத்தை யாரும் நம்பத் தயாராக இல்லை.

நாராயணசாமி நாயுடு அவர்களை வழக்கிலிருந்து விடுவிக்க வேண்டுமென்று அவரே பைலில் கையெழுத்துப்போட்டதாகக் கோவைக் பொதுக்கூட்டத்தில், எம்.ஜி.ஆர். பேசியிருக்கிறார்.

அவர் அப்படிக் கையெழுத்துப் போட்டாரா?

போட்டிருந்தால் எந்தத் தேதியில் போட்டார்?

ஒரு பைலைப் பற்றி, முதலமைச்சராக இருந்த ஒருவரே விவரங்களை வெளியிட்ட பிறகு - அதுபற்றிய உண்மைகளை மக்களுக்குத் தெரிவிக்க வேண்டியது இன்றைய ஆளுநர் ஆட்சியின் கடமையாகும்!

பைலில் கையெழுத்துப் போட்டாரோ, இல்லையோ - திரு. நாராயணசாமி நாயுடு அவர்கள் மீது எம்.ஜி.ஆர். போட்ட கொலை வழக்கையும், சதி வழக்கையும், மற்றும் விவசாயிகள் மீது போடப்பட்ட வழக்குகளையும் உடனடியாகத் திரும்பப் பெற இன்றைய ஆளுநர் ஆட்சி முன்வர வேண்டும் என்று வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

அவர் மீது கொலை வழக்குப் போட்டது மட்டுமல்ல. பாளைச் சிறையில் அடைத்து வாட்டியது மட்டுமல்ல. அவர் ஜாமீனில் வெளி வந்த பிறகும் அவர் எந்தக் கூட்டத்திலும் பேசக்கூடாது என்று அரசின் சார்பில் வாதிட்டு அதற்கான நீதிமன்ற உத்திரவையும் பெற்றார்கள்! நாயுடு அவர்களை ஜாமீனில் விடுதலை செய்யவும், கூட்டத்தில் பேச உரிமை பெறவும் நமது வழக்கறிஞர் பாளை. சண்முகம் எத்தனையோ முறை நீதிமன்றம் சென்று வாதாடியதை நாடு மறந்து விடவில்லை.

இன்று பார்த்தாயா பரிவினை! கண்டாயா கனிவினை! என்ன உருக்கம் கவனித்தாயா? எவ்வளவு அக்கறையாகப் பேசுகிறார் எம்.ஜி.ஆர்.!

கட்டை வண்டிப் போராட்டம் நடத்தினால் வண்டிகள் நொறுக்கப்படும்! மாடுகள் ஏலம் போடப்படும்!

இப்படி மிரட்டிய எம்.ஜி.ஆரின் அந்த வாய்வீச்சு எங்கே? ஆணவப் பேச்சு எங்கே?

விவசாயிகள், வியாபாரிகள், மாணவர்கள், ஆசிரியர்கள், அரசு அலுவலர்கள், வழக்கறிஞர்கள், நெசவாளர்கள், போலீசார் - என்று எல்லாத் தரப்பினரையும், எடுத்தேன் கவிழ்த்தேன் என்று பேசி இரண்டரை ஆண்டுக் காலத்தில் பெருந்தோல்வியை அணைத்துக் கொண்டு மக்கள் மன்றத்தின் கடுமையான தீர்ப்பைப் பெற்றுக் கொண்ட நண்பர் எம்.ஜி.ஆர்., மீண்டும் பொய்யெனும் தனது பழைய ஆயுதத்தையே ஏந்திப் படை முகத்திற்கு வந்திருக்கிறார்!

பாராளுமன்றத் தேர்தலில் கிடைத்த முடிவையே இப்போதும் அவர் சந்திக்கப் போகிறார்!

இவரது பசப்புமொழி கேட்டு இனியொரு முறை ஏமாந்து போகத் தமிழகம் தயாராகயில்லை!

அன்புள்ள,

மு. க.

(20-03-1980)

727. அன்று எத்தனை பிரிவு? இன்று எத்துணைப் பரிவு?

உடன்பிறப்பே,

ஒரு பொய்யைத் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தால் அதை உண்மையாக்கி விடலாம் என்று நண்பர் எம்.ஜி.ஆர். நம்பிக் கொண்டிருக்கிறார். அந்தப் பொய்க்குச் சில தரம் வாய்ந்த பத்திரிகைகளும் முக்கியத்துவம் அளிப்பதைப் பார்த்தால் எம்.ஜி.ஆரின் இரட்டை வேடத்தை மக்களுக்கு அம்பலப்படுத்த அந்த ஏடுகள் எண்ணுகின்றன என்பது தெளிவாகப் புரிகிறது. விவசாய சங்கத் தலைவர் திரு. நாராயணசாமி நாயுடு அவர்கள் மீது எம்.ஜி.ஆர். அரசு போட்ட பயங்கரமான வழக்கு பற்றித்தான் இப்போது நண்பர் எம்.ஜி.ஆர். பல சர்க்கஸ் வித்தைகளைச் செய்து காட்டுகிறார். அவர் பேசுவதை யாரும் சுலபத்தில் புரிந்துகொள்ள இயலாது என்ற தனது பலவீனத்தையே பாதுகாப்புக் கேடயமாகக் கொண்டு ஒரு நாளைக்கு ஒன்றைச் சொல்லி வருகிறார்.

(1) நாராயணசாமி நாயுடு மீது கொலை முயற்சி வழக்கை வாபஸ் பெற வேண்டுமென்று நான் என் கைப்பட பைலில் எழுதி வைத்திருந்தேன். அதையும் அப்படியே போட்டு விட்டார்கள். வேண்டுமானால், அந்த பைலை வரவழைத்துப் பார்த்துக் கொள்ளட்டும்.

இப்படி எம்.ஜி.ஆர். கோவையில் சொற்பெருக்கு ஆற்றியதாக அவரது கட்சியின் அதிகாரபூர்வமான பத்திரிகையில் மார்ச் 18-ஆம் நாள் வெளியிடப்பட்டிருந்தது. எம்.ஜி.ஆர். அப்படி பைலில் எழுதியது உண்மைதானா? உண்மைதான் என்றாலும், இல்லாவிட்டாலும் நாயுடு மீது எம்.ஜி.ஆர். அரசு பழிவாங்கும் எண்ணத்துடன் தொடுத்துள்ள கொலை வழக்கை இந்த ஆளுநர் ஆட்சி திரும்பப் பெற வேண்டும் என்று நான் ஆளுநருக்கு ஒரு கடிதம் எழுதினேன். அரசின் சார்பாக பத்திரிகைகளுக்குத் தரப்பட்ட விளக்கத்தில் நாராயணசாமி நாயுடு மீதுள்ள வழக்கை

வாபஸ் வாங்கச் சொல்லி எம்.ஜி.ஆர். கையெழுத்துப் போட்ட பைல் எதுவுமே இல்லை என்று கூறப்பட்டது. உடனே எம்.ஜி.ஆர். என்ன சொன்னார் தெரியுமா?

(2) அந்த பைல் எங்கே போய் விட்டது? தேடிப் பாருங்கள்!

இப்படியொரு பதிலை எம்.ஜி.ஆர். சொன்னார். அதாவது, அவர் கையெழுத்திட்ட அந்த பைல் காணாமல் போய்விட்டது என்பதைப் போலவும் - அல்லது இன்றைய ஆளுநர் ஆட்சியில் அதனை வேண்டுமென்றே மறைப்பது போலவும் கருத்து தொனிக்கப் பேசத் தொடங்கினார். இன்றைய மார்ச் 25 சென்னை தினமணியில் கூட எம்.ஜி.ஆரின் சிதம்பரம் பேச்சு வெளி வந்திருக்கிறது.

(3) நாராயணசாமி நாயுடு விவசாய சங்கத்தின் இதர உறுப்பினர்கள் ஆகியோர் மீதான வழக்குகளை வாபஸ் பெற, தாம் ஏற்கனவே உத்திரவு பிறப்பித்ததாகவும் அந்தக் குறிப்பிட்ட பைல் காணவில்லையென்றால், அதனைக் கண்டுபிடிக்க சர்க்கார் சகல நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டுமென்றும் முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர். குறிப்பிட்டார்.

இவ்வாறு செய்தி வெளியிடப்பட்டிருக்கிறது. எனவே அப்படியொரு பைல் காணாமல் போய்விட்டது என்பதையே எம்.ஜி.ஆர். மீண்டும் வலியுறுத்துகிறார்.

(4) விவசாயிகள் மீது தொடரப்பட்டுள்ள வழக்குகளில் கொலை, கொள்ளை போன்ற வன்முறைச் சம்பவங்கள் சம்பந்தப்பட்ட வழக்குகள் தவிர, மற்ற வழக்குகளை வாபஸ் வாங்கிட அரசு முடிவு செய்கிறது என்ற அறிக்கை மட்டும்தான் பிப்ரவரி 11-ஆம் நாள் எம்.ஜி.ஆர். அரசின் சார்பில் சட்டப் பேரவையில் படிக்கப்பட்டது.

அதன் பிறகு ஒரு வார காலம் எம்.ஜி.ஆர். ஆட்சி இருந்திருக்கிறது. அந்தக் காலத்தில் எந்த வழக்குகளாவது வாபஸ் வாங்கப்பட்டதுண்டா? அதற்கான ஆணைகள் அமல்படுத்தப்பட்டதுண்டா? வேறு சில வழக்குகளுக்கான

ஆணையும், அதிகாரிகள் இருபத்தைந்து பேரை மாற்றுகின்ற ஆணையும் பிறப்பிப்பதில் எம்.ஜி.ஆர். காட்டிய அவசரமும் அக்கறையும் விவசாயிகள் வழக்கிலோ, நாயுடு வழக்கிலோ எம்.ஜி.ஆரால் காட்டப்பட்டதுண்டா? இல்லை! இல்லவே இல்லை! நேற்று எம்.ஜி.ஆர். கவர்னரோடு தொலைபேசியில் பேசினாராம். என்ன பேசினார்?

(5) விவசாயிகள் கிளர்ச்சியில் கொலை, கொள்ளை போன்ற வன்முறை சம்பவங்களில் நேரடியாக ஈடுபட்டவர்கள் தவிர, மற்றவர்கள் மீதான வழக்குகள் அனைத்தும் திரும்பப் பெறுவது என்று அ.தி.மு. க. அரசு அறிவித்திருக்கிறது. இந்த உத்தரவு கொலை சம்பவத்தில் நேரடியாக ஈடுபடாத நாராயணசாமி நாயுடுவுக்கும் பொருந்தும். எனவே, அவர் மீதும் மற்ற விவசாயிகள் மீதுமுள்ள வழக்குகளை உடனடியாக வாபஸ் வாங்க வேண்டுமென்று கவர்னரிடம் எம்.ஜி.ஆர். தொலைபேசி மூலம் கேட்டுக்கொண்டார்.

இந்தச் செய்தி எம்.ஜி.ஆர். கட்சியின் ஏடுகளிலும், அந்தக் கட்சியின் ஆதரவு ஏடுகளிலும், பிற ஏடுகளிலும் வெளிவந்துள்ளது!

இங்கேதான் எம்.ஜி.ஆர். எவ்வளவு பெரிய உண்மை விளம்பி (?) என்பது தெளிவாகிறது. திரு. நாராயணசாமி நாயுடு அவர்கள் மீது சுமார் எட்டு அல்லது ஒன்பது மாதங்களுக்கு முன்பு எம்.ஜி.ஆர். தொடுத்த வழக்கு என்ன? நாயுடு மீது பொழியப்பட்ட சட்டப் பிரிவுகள் என்ன? என்ன?

செக்ஷன் 302 - கொலை செய்தல்,

செக்ஷன் 307 - கொலை செய்ய முயற்சி,

செக்ஷன் 147 - கலகம் விளைவித்தல்,

செக்ஷன் 148 - அபாயகரமான ஆயுதங்களால் கலகம் விளைவித்தல்,

செக்ஷன் 149 - கலகம் விளைவிக்கும் நோக்குடன் சட்ட விரோதமாகக் கூடுதல்.

செக்ஷன் 332 - பொது ஊழியரைக் கடமை செய்ய விடாமல் தடுத்துக் காயம் விளைவித்தல்

செக்ஷன் 342 - சட்ட விரோதமாக அடைத்து வைத்தல்,

செக்ஷன் 117 - உடந்தையாக இருத்தல்,

செக்ஷன் 427 - சேதம் விளைவித்தல்,

இந்த சட்டப் பிரிவுகள் அனைத்தும் திரு. நாராயணசாமி நாயுடு அவர்கள் மீது எம்.ஜி.ஆர். ஆட்சியில் பிரயோகிக்கப்பட்டிருக்கின்றன என்கிறபோது அவர் நேரடியாக ஈடுபட்டார் என்றுதான் அர்த்தமாகிறது! இத்தனைச் சட்டப் பிரிவுகளின்படி நாயுடு அவர்கள் மீது வழக்குப் போடவில்லையென்று எம்.ஜி.ஆர். கூற முடியுமா? இத்தனை பயங்கரமான சட்டப்பிரிவுகளால் நாயுடு அவர்களையும், அவரைச் சார்ந்த விவசாய சங்கத் தலைவர்களையும் கொட்டிவிட்டு, அவரை ஜாமீனில் எடுக்கக்கூட முடியாமல் அரசின் சார்பில் பலமுறை மறுக்கப்பட்டு, ஜாமீனில் அவர் வெளிவந்த பிறகும் கூட்டங்களில் பேச முடியாமல் தடுத்துவிட்டு, அவரது கிராமத்து வீட்டைச் சோதனையிட்டு இரும்புப் பெட்டியைக் கூடத் தூக்கிக்கொண்டு போய் காவல்நிலையத்தில் போட்டுவிட்டு, இப்போது எம்.ஜி.ஆர். மக்களை ஏமாற்ற மறுபடியும் புத்தர் வேடம் புனைகிறார்! எம்.ஜி.ஆர். கையெழுத்திட்டதாகச் சொல்லப்படும் வழக்கு வாபஸ் உத்தரவு நாராயணசாமி நாயுடுக்கும் பொருந்தும் என்கிறாரே! எப்படிப் பொருந்தும் என்பதற்கு யாராவது அவர் கட்சியில் உள்ள சட்டம் படித்தவர்கள் பதில் சொல்லத் தயாராக இருக்கிறார்களா?

கோவையில் பேசும் போது நாராயணசாமி நாயுடு மீதுள்ள வழக்கையே வாபஸ் வாங்கச் சொல்லி நான் உத்திரவிட்ட பைல் இருக்கிறது என்று எம்.ஜி.ஆர். கூறினார்.

இப்போது என்ன சொல்லுகிறார்?

வன்முறைச் சம்பவங்களில் நேரடியாக ஈடுபடாதவர்களின் வழக்கை வாபஸ் வாங்குவதென்றால், அதில் நாயுடு அவர்களின் மீதுள்ள வழக்கிற்கும் பொருந்தும் என்கிறார்.

எம்.ஜி.ஆரே ஒருமுறை இந்தச் சட்டப் பிரிவுகளைப் படித்துப் பார்க்கட்டுமே! அவரே இந்தச் சட்டப் பிரிவுகளைப் பற்றி விளக்கம் அளிக்கட்டும்!

விவசாயிகளின் வண்டிகளை நொறுக்குவோம்! மாடுகளை ஏலம் போடுவோம்!

என்ற மமதைப் பேச்சு எங்கே? இன்று அதே எம்.ஜி.ஆர். மண்டியிடும் பேச்சு எங்கே?

பாவம்! வழக்குகளையே நம்பிக் கொண்டிருக்கிற எம்.ஜி.ஆர். வழுக்கி விழத்தான் போகிறார்! ஒருமுறை விழுந்தும் அவருக்குத் தெளிவு ஏற்பட்டதாகத் தெரியவில்லை! மீண்டும் எழ முடியாமல் விழுவதற்குத்தான் அவர் தொடுத்திட்ட வழக்குகள் அவர் முன்னால் நின்று அவரை மிரட்டிக் கொண்டிருக்கின்றன.

அந்த மிரட்சியில்தான் வாய்க்கு வந்ததையெல்லாம் பேசிக் கொண்டிருக்கிறார்!

அவர் ஆடுகிற ஆட்டத்தையும், பாடுகிற பாட்டையும் கவனத்தில் எடுத்துக் கொள்ளாமல் அவரால் அரசியல் நோக்குடன் - பழி வாங்கும் எண்ணத்துடன் - விவசாயிகள் மீதும், போலீசார் மீதும், மற்ற பிரிவினர் மீதும் தொடுக்கப்பட்டுள்ள வழக்குகளைத் திரும்பப் பெற்றிட இன்றுள்ள ஆளுநர் ஆட்சி முன்வரவேண்டுமென்று மீண்டும் மீண்டும் கேட்டுக் கொள்கிறேன்.

அன்புள்ள,

மு. க.

(26-03-1980)

728. அணி வகுப்போம்! பணி முடிப்போம்!

உடன்பிறப்பே,

வாரம் மூன்றுமுறை நான் டெல்லிக்குச் செல்வதைப் போலவும், தி.மு.கழகத்தின் அன்றாட நடவடிக்கைகள் குறித்து டெல்லியில் அனுமதி பெற்று வருவது போலவும் சில காந்தாரி உள்ளத்தினர், எழுதியும், பேசியும், கார்ட்டூன் வெளியிட்டும் வருகின்றனர். எனவே சில விவரங்களைச் சொல்வது என் கடமையாகிறது!

செப்டம்பர் 15-ஆம் நாள் மாலை விமானத்தில் டெல்லி சென்று திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்களைச் சந்தித்து, தி.மு. க. - இந்திரா காங்கிரஸ் தேர்தல் உடன்பாடு குறித்த முடிவினை எடுத்து அறிவித்த பிறகு மறுநாள் சென்னை திரும்பினேன்.

அதன்பிறகு திருமதி இந்திரா காந்தி அவர்கள் பிரதமர் பதவிப் பொறுப்பேற்பதையொட்டி, டெல்லி நாடாளுமன்ற மையக்கூடத்தில் நடைபெற்ற நாடாளுமன்ற இந்திரா காங்கிரஸ் கட்சித் தலைவர் தேர்தலில் கலந்துகொண்டு பிரதமரை வாழ்த்திப் பாராட்டவும், நாடாளுமன்றத் தேர்தல் வெற்றியின் மகிழ்ச்சியை இந்திரா காங்கிரஸ் தலைவர்களுடன் பகிர்ந்து கொள்ளவுமான வாய்ப்பினைப் பெற்று ஜனவரி 10-ஆம் நாள் டெல்லிக்குச் சென்று மறுநாள் சென்னை திரும்பினேன்.

அதன்பிறகு, எம்.ஜி.ஆர். அரசின் மீதான குற்றச்சாட்டுப் பட்டியலை பிரதமரிடம் அளிப்பதற்காக பிப்ரவரி 16-ஆம் நாள் காலையில் டெல்லிக்குச் சென்றுவிட்டு 18-ஆம் நாள் காலை சென்னைக்கு திரும்பினேன்.

அதன்பிறகு, பிப்ரவரி 28 இரவு விமானத்தில், டெல்லி சென்று 29-ஆம் நாள் மத்திய அமைச்சர்கள் பலரைச் சந்தித்துப் பேசி விட்டு அடுத்தநாள் மார்ச் முதல் தேதியன்று பிரதமர் அவர்களிடம்

தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் தி.மு. க., இந்திரா காங்கிரஸ் கட்சிகளுக்கிடையே தொகுதி உடன்பாடு குறித்த இடங்களின் எண்ணிக்கை குறித்துப் பேசி விட்டு உடன் சென்னைக்குத் திரும்பினேன்.

செப்டம்பர் முதல் மார்ச் முதல்நாள் முடிய ஏழு மாதங்களில் நான்கு முறை தான் டெல்லி சென்று வந்திருக்கிறேன். என்னுடன் தலைமைக் கழகச் செயலாளர் நண்பர் வீராசாமியும் வந்தார். முரசொலி மாறனும் உடனிருந்தார்.

ஒவ்வொருமுறை சென்றபோதும் நான் டெல்லி சென்றதற்கு என்ன முக்கியத்துவம் இருந்தது என்பது பற்றியும் - நான் அங்கு அன்புடனும், மரியாதையுடனும் நடத்தப்பட்டேன் என்பதையும் - நீயும் அறிவாய்! நாடும் அறியும்!

இப்போதல்ல! இந்திரா காந்தி அம்மையார் அவர்களின் நெருக்கடிப் பிரகடனத்தைத் தி.மு.கழகம் எதிர்த்தபோதுகூட நானும், நண்பர் மாதவனும் டெல்லி சென்று ஒரு பிரதமருடன் ஒரு முதலமைச்சர் என்ற நிலையில் ஒரு மணி நேரத்திற்கு மேலாக விவாதிக்கவும் - கருத்துகளைப் பரிமாறிக் கொள்ளவும் - மரியாதையுடன் கூடிய வாய்ப்புகளைப் பெற்றிருந்தோம்!

நம்முடைய முன்னாள் முதலமைச்சர் நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள், நான் டெல்லிக்கு அடிக்கடி செல்கிறேன் என்றும், அது ஏதோ அவமானகரமானது என்றும் கூட்டங்களில் பேசுவதோடு மட்டுமல்லாது, அவரின் கடாட்சத்தால் நடைபெறும் சில ஏடுகளிலும் கருணாநிதி! கருணாநிதி! டெல்லி! டெல்லி! என்று ஏதேதோ எழுத வைக்கிறார். அந்த ஏடுகளின் ஆசிரியர்கள் சிலரைத் தனது அணுக்கத் தொண்டராகக் கூடவே அழைத்துக்கொண்டும் சென்று அவர்களை உற்சாகப்படுத்தி எழுத வைக்கிறார். என்ன எழுதியும் அந்த ஏடுகள், அவை காட்டும் பரபரப்பால் பல்லாயிரத்தை எட்டலாம் என்ற நினைவு கனவாகவே போய்க் கொண்டிருக்கிறது!

நண்பர் எம்.ஜி.ஆர். முதலமைச்சராக இருந்த போது, அரசாங்கப் பணிகளுக்கு என்று இல்லாமல் அரசியல் கட்சிப் பணிகளுக்காக எத்தனை முறை டெல்லி சென்றார் என்ற கணக்கு, அவரது ஆதரவு ஏடுகளில் முதல்பக்கக் கொட்டை எழுத்துச் செய்திகளாக வந்திருக்கின்றனவே!

மரியாதை கொடுத்து மரியாதையைப் பெறத் தெரியாத காரணத்தால் எம்.ஜி.ஆரின் டெல்லி விஜயம் எத்தனை முறை ஏமாற்றத்திற்கு உள்ளாகியிருக்கிறது!

தஞ்சையில் போட்டியிட இந்திரா காந்தி அம்மையாரை அழைக்க டெல்லிக்கு ஓடவில்லையா? அம்மையாரை அழைத்துக்கொண்டு வருவார் என எதிர்பார்த்து மீனம்பாக்கம் விமான நிலையத்தில் அ.தி.மு. க. பொதுச் செயலாளர் அவர்கள் ஆள் உயர மாலையுடன் நிற்கவில்லையா?

நீ எனக்கு நண்பனா? விரோதியா? என்று கேட்ட காரணத்தினால் மொரார்ஜிக்குப் பயந்து டெல்லியிலிருந்த எம்.ஜி.ஆர்., சென்னைக்கு ஓடோடி வந்துவிட்டார் என்று தோழர் பி. இராமமூர்த்தி அவர்கள் அறிக்கையே விடவில்லையா?

தஞ்சை, நாகைத் தேர்தலின்போது அம்மையார் பேசும் கூட்டங்களில் கலந்து கொண்டு பேச இயலாத பரிதாபகரமான நிலை, எம்.ஜி.ஆருக்கு ஏற்படவில்லையா?

அதையும் பொறுத்துக்கொண்டு நான் இந்திரா காங்கிரசைத்தான் ஆதரிப்பேன் என்று எம்.ஜி.ஆர். தமிழ்நாட்டில் முழங்கிவிட்டு - டெல்லியில் மொரார்ஜி அரசுக்குத் தலைவலி என்று செய்தி வந்ததும்; இந்தியப் பிரதமர் யார் என்பதை நிர்ணயிக்க இதோ தமிழகத்தின் இரண்டாவது காமராஜர் போகிறார் என்ற வர்ணனைகள் வார்த்தைகளாக வெடிக்க - எம்.ஜி.ஆர். டெல்லி சென்று ஏழெட்டு நாட்கள் டெல்லியிலே முகாமிட்டுப் பின்னர் முகவாட்டத்துடன் சென்னை திரும்பவில்லையா?

மொரார்ஜியைக் காப்பாற்ற முடியாமல், யானை, குழியில் விழும்போது எறும்பும் ஒரு உதை கொடுக்கும் என்பதுபோல் - மொரார்ஜி அரசு கவிழ்ந்தபிறகு அவரையும் காலை வாரிவிட்டுவிட்டு - அதன் பிறகு சரண்சிங்கிடம் சரணடைய எம்.ஜி.ஆர். டெல்லிக்கு ஓடவில்லையா?

சரண்சிங் அரசிலும் தனது மந்திரிகள் இருவரைச் சேர்த்து விட்டு அதன் பிறகு, ஜெகஜீவன்ராமுக்கும் ஆதரவு தருவதற்குத் தயாராகவில்லையா?

அதற்குள் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு சரண்சிங் அரசு காபந்து அரசாகச் செயல்பட்டபோது எம்.ஜி.ஆர். டெல்லிக்குச்

சென்று இரண்டு மூன்று நாள் தங்கி மீண்டும் இந்திரா காங்கிரசுடன் நாடாளுமன்றத் தேர்தலுக்கான உடன்பாடு கொள்ளத் தவியாய்த் தவிக்கவில்லையா? இந்திரா அம்மையாரைச் சந்திக்க நேரம் கேட்கவில்லையா?

அதற்குள், செய்தி தற்காலிகப் பிரதமரான சரண்சிங்கிற்கு எட்டி விடவே, அவரது கோபக்கனலைக் கண்டு எம்.ஜி.ஆர்., இந்திரா காந்தியை சந்திக்க முடியாமலே டெல்லியிலிருந்து சென்னைக்கு உடனடியாகத் திரும்பி விடவில்லையா?

நாடாளுமன்றத் தேர்தலில் தமிழகத்தில் படுதோல்வி கண்டு, புதுவைச் சட்டமன்றத் தேர்தலில் அ.தி.மு. க. பூஜ்யமாகிவிட்ட பிறகு - எம்.ஜி.ஆர்., முதலமைச்சர் என்ற முறையில் நாலைந்து அமைச்சர்களுடன் டெல்லிக்குச் சென்று பிரதமர் இந்திரா காந்தி அவர்களைச் சந்திக்க முடியாமல் திண்டாடி இறுதியாக பாராளுமன்ற அலுவலகத்தில் சந்தித்துத் தவறுகளுக்கு மன்னிப்புக் கேட்டுக் கொள்ளவில்லையா?

மீண்டும் தேர்தல் உடன்பாடு வேண்டுமென்று கெஞ்சிக் கேட்கவில்லையா? தனது சார்பில் வருத்தம் தெரிவித்திடவும், நிலைமையைச் சரிப்படுத்தவும் நிதி அமைச்சராக இருந்த நாஞ்சிலாரை டெல்லியிலேயே நாலைந்து நாட்கள் தங்கி வருமாறு கேட்டுக் கொள்ளவில்லையா?

அதிலும் தோல்வி கண்ட பிறகு, இந்திராவைச் சந்திக்க எம்.ஜி,ஆர். டெல்லி பயணம் என்று தினத்தந்தி போன்ற ஏடுகளில் முதல்பக்கக் கொட்டை எழுத்துச் செய்தி கொடுத்துவிட்டு எம்.ஜி.ஆர். டெல்லிக்குப் போகவில்லையா?

அங்கு பிரதமரின் பேட்டி கிடைக்காமல் அலையவில்லையா?

பிரதமருக்கு உடல் நலமில்லை. அதனால், மறுநாள் சந்திக்கிறார் முதல்வர் எம்.ஜி.ஆர். என்று தமிழக ஏடுகளில் பெரிய எழுத்துச் செய்திகள் வரவில்லையா?

மறுநாள் - பிரதமர் அவர்களை வெளிநாட்டுத் தூதர்கள் சந்தித்தனர் - அரசியல் தலைவர்கள் சந்தித்தனர் - ஆனால், முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள் சந்தித்ததாகச் செய்தி வரவில்லை!

பிரதமரைச் சந்திக்க முடியாமலே முதல்வர் எம்.ஜி.ஆர். சென்னை திரும்பிவிட்டார் என்ற செய்திதான் வந்தது!

இப்படித் தேர்தல் உறவுக்காகத் தேடித் தேடி அலைந்து - டெல்லி வட்டாரத்தில் எந்தக் கட்சித் தலைவர்களாயினும் அவர்களது உள்ளார்ந்த நம்பிக்கைக்கு உரியவராக இருக்கக்கூடிய தகுதியை இழந்து - அரசாங்கத் தூதரையும் அரசியல் விவகாரங்களுக்குப் பயன்படுத்தி - தலைகீழாக நின்று தவமியற்றி, இந்திரா காங்கிரஸ் உறவு கிட்டவில்லையென்றதும் -

ஆகா! கருணாநிதி டெல்லிக்கு அடிக்கடி போகிறார்!

என்று வயிற்றில் அடித்துக் கொள்வானேன்?

நான் டெல்லியுடன் தொடர்பு கொண்டு தேர்தல் உறவுகள் பற்றிப் பேசுவதைக் கேலி செய்து எம்.ஜி.ஆர். கட்சியின் முன்னாள் அமைச்சர் ஒருவர் ஒரு குட்டிக்கதையே சொன்னாராம்.

ஒரு மனைவி எதைக் கேட்டாலும் அப்பாவைக் கேட்டு வாங்கித் தருகிறேன் என்றானாம் கணவன்! அப்படியானால், நான் உன் அப்பாவையே கட்டிக் கொண்டு இருந்திருக்கலாமே என்று அந்த மனைவி சொன்னாளாம்! அதைப்போல கருணாநிதி எதற்கெடுத்தாலும் டெல்லியைக் கேட்கிறேன் என்கிறார்.

இதுதான் அந்த முன்னாள் அமைச்சர் கூறிய குட்டிக்கதை! நல்லவேளையாக அந்த மனைவி, கணவன் மீது கோபித்துக்கொண்டு விஷம் சாப்பிட்டு ஜெனரல் ஆஸ்பத்திரிக்குச் செல்லவில்லை! முன்னாள் அமைச்சர் கதையின் போக்கை திடீர் என மாற்றிவிட்டார்! (உண்மை அவருக்குத்தான் தெரியும்)

தி.மு. க.வைப் பொறுத்த வரையில் டெல்லியில் உள்ள காங்கிரஸ் மேலிடத்துடன் கலந்து பேசி தேர்தல் உடன்பாடு குறித்த சில முக்கியமான அரசியல் முடிவுகளை எடுக்கிறது! அதன் தொடர்பான நடவடிக்கைகளைப் பற்றி தமிழ் மாநில காங்கிரஸ் தலைமையுடன் பேச்சுவார்த்தை நடத்துகிறது!

இதில் என்ன தவறு கண்டு, குட்டிக்கதைகளைச் சொல்லுகிறார்கள்?

டெல்லியில் மொரார்ஜியைக் கேட்டுக்கொண்டு ஆடியவர்கள் - பிறகு சரண்சிங்கைக் கேட்டுக்கொண்டு பாடியவர்கள் - பிரதமர் இந்திரா காந்தி அவர்களின் தரிசனம் கிடைக்காதா என்று ஓடியவர்கள் -

திடீரெனத் தன்மான வீரர்களைப் போலத் தோள் தட்டுவதும் - ஜனநாயகக் காவலர்கள் என்று தங்களை விமர்சித்துக்கொள்வதும் - விலாநோகச் சிரிப்பை ஊட்டுகின்ற விகட நிகழ்ச்சிகளாகும்!

ஏ, அப்பா! ஏழு மாதங்களில் நாலுமுறை டெல்லி சென்று, இருதரப்பிலும் அன்பும், பண்பும், மரியாதையும் மலர்ந்து மணம் வீசிட அரசியல் பேச்சு வார்த்தைகள் நடத்தி வெற்றி கண்டது ஏகடியத்திற்கும், ஏளனத்திற்கும் உரியதா?

எரிச்சல்காரர்களின் ஏமாற்றத்தின் எதிரொலியை உணர்ந்துகொள்ள முடிகிறதல்லவா என் உடன்பிறப்பே!

நடுங்கா நாக்கழகர்கள் தங்களின் அர்ச்சனையை நிறுத்தாமல் நடத்தட்டும்!

நாம் பீடுநடை போட்டு நமது பெருமைமிகு தமிழகத்திற்கும் எம்.ஜி.ஆர். ஆட்சியால் வந்துற்ற சிறுமையைத் துடைத்திட அணி வகுப்போம்! பணி முடிப்போம்!

அன்புள்ள,

மு. க.

(31-03-1980)

729. காதைக் குளிர வைக்கும் கழக வீணையின் நாதம்!

உடன்பிறப்பே,

ஒரு முதலமைச்சர் ஒரு கட்சியின் நிறுவனராகவும், தலைவராகவும் இருக்கிறார். அவரால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட பொதுக்குழு நடைபெறுகிறது. அதில் அந்த முதலமைச்சர் உரையாற்றுகிறார். உரையாற்றும் நேரம் எப்படிப்பட்டது தெரியுமா?

அவரது கட்சி நாடாளுமன்றத் தேர்தலில் படுதோல்வி யடைந்து, புதுவை சட்டமன்றத் தேர்தலிலும் பூண்டற்றுப் போய்விட்ட காலக்கட்டம்!

மக்களின் தீர்ப்பை மதித்து அந்தக் கட்சியின் முதல்வர் ராஜினாமா செய்ய வேண்டுமென்று அவரது கட்சியிலேயே கோரிக்கை எழுகிறது.

பெரும் தோல்வி பெற்ற காரணத்தினால், இனி முதல்வராக நீடிக்க விரும்பவில்லையென்று கர்நாடகத்தில் தேவராஜ் அர்சு பதவி விலகி வழி காட்டியுமிருக்கிறார்.

ஓரிரு தொகுதிகளில் இடைத் தேர்தல் தோல்வியைக் காட்டியே, முன்பிருந்த தி.மு. க. அரசு - இனி ஒரு விநாடி கூடப் பதவியில் இருக்க லாயக்கு இல்லை என்று கர்ச்சித்த அதே சூரப்புலிகள்தான், மிகப் பெரும் பொதுத் தேர்தல் தீர்ப்பை மதிக்க மறுத்தனர்.

இது முறையல்ல! பதவி விலகி விடுவோம்! என்று அந்தக் கட்சியில் இருந்த சில முன்னணியினர் கூறியதற்காக அவர்கள் மீது அந்த முதலமைச்சர் சீறிப் பாய்ந்தார்.

இத்தகு சூழ்நிலையில் அவர் கட்சிப் பொதுக்குழுவில் அவர் பேசுகிறார்! இல்லை, வீர உரையாற்றுகிறார்!

நான் ஒன்றை உங்களுக்குச் சொல்லிக் கொள்வேன். நமது கட்சியிலிருந்து சில எம்.எல்.ஏ.க்கள் தி.மு. க.வுக்குப் போயிருக்கிறார்கள். இனியும் யாராவது அப்படிப் போக முயற்சி செய்தால் அல்லது போனால் அந்த நபர்களுக்காக அனுதாபக் கூட்டம் போட வேண்டிய நிலைமை ஏற்படும். அந்த நபர்களுக்கு மாத்திரமல்ல, அவர்களின் குடும்பத்திற்கே அனுதாபக் கூட்டம் போட வேண்டியிருக்கும். அவர்களின் உயிர்களுக்கும், உடமைகளுக்கும் நான் பொறுப்பல்ல!

எந்த முதலமைச்சர் இப்படிப் பேசினார் என்று நீ கேட்க மாட்டாய்? ஏனெனில் எம்.ஜி.ஆர். ஒருவரைத் தவிர, வேறு எந்த முதலமைச்சரும் இப்படிப் பேசமாட்டார்கள்!

மாநிலத்தில் கொலை, களவு, வன்முறை போன்ற சட்டம் ஒழுங்கை மீறுகிற செயல்களைத் தடுத்திடவும் - அவற்றை அனுமதிக்காமல் முன் நடவடிக்கை எடுத்திடவும் - பொறுப்பேற்றுள்ள ஒரு முதலமைச்சர், தனது கட்சிக்காரர்களின் உயிருக்கும், உடமைக்கும் அவர் பொறுப்பேற்க முடியாதென்றும் - அவர்கள் கட்சி மாறினால் அவர்களது மொத்தக் குடும்பத்திற்கும் சேர்த்து அனுதாபக் கூட்டம் நடத்த வேண்டியிருக்குமென்றும் - முதலமைச்சராக இருந்து கொண்டே எச்சரிக்கை விடுத்தார் என்றால் அதைவிட வெட்கக் கேடானதும் விபரீதமானதுமான விவகாரம் வேறொன்றிருக்க முடியாது.

ஆனால் - உடன்பிறப்பே! அவரது அந்த எச்சரிக்கை பயன்பட்டதா? அதற்காக அஞ்சி நடுங்கி ஆமைபோல் ஒடுங்கியவர்கள் உண்டா? இல்லை! இல்லவே இல்லை! அதற்கு எடுத்துக்காட்டுத்தான் இதோ மிக நீளமான பட்டியல்!

தி.மு.கழகம் அதிகாரத்திலிருந்த போதே - நம்மிடமிருந்து விலகி எம்.ஜி.ஆர். கட்சியில் தன்னை இணைத்துக்கொண்ட நாஞ்சிலார், இப்போது நம்மோடு!

அதேபோல் 1972-இல் நம்மைப் பிரிந்து சென்று எம்.ஜி.ஆர். முகாமிலிருந்த நண்பர் எட்மண்ட் இங்கே வந்து விட்டார்.

எம்.ஜி.ஆர். ஆட்சியில் திட்டக் குழுத் துணைத் தலைவராக இருந்த நண்பர் கோவைச் செழியன் நமது கூடாரத்தில்!

முன்னாள் அமைச்சர் மொடக்குறிச்சி சுப்புலட்சுமி ஜெகதீசன் இப்போது தி.மு.கழகப் பாசறையில்!

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் முன்னாள் தலைவர் நண்பர் செல்லையா எம்.ஏ. பி.எல்., எம்.ஜி.ஆர். கட்சியிலிருந்து விடுபட்டு இதோ நமது கழகத்தில்!

நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர்கள் வெங்கா, நூர்ஜகான் ரசாக், புதுவை முனுசாமி ஆகியோர் அ.தி.மு. க. பிடிப்பை அறுத்துக்கொண்டு தி.மு.கழகத்தில் இணைந்து விட்டனர்.

அ.தி.மு. க. சட்டப்பேரவை உறுப்பினர்கள் - எஸ்.ஜே. ராமசாமி, அரங்கசாமி, தாராபுரம் அய்யாசாமி, பெரம்பலூர் இராமசாமி எம்.ஏ. பி.எல்., சமயநல்லூர் செல்வராஜ், கடையநல்லூர் ரசாக் ஆகியோர் எம்.ஜி.ஆர். கட்சியிலிருந்து விலகி தி.மு.க.வினராகி விட்டனர்.

மதுரை மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் து. கிருஷ்ணன், ராசாங்கம், மு. கிருஷ்ணன், செவத்தையா ஆகியோர் அ.தி.மு.க. வுக்கு முழுக்குப் போட்டு விட்டுத் தி.மு. க.வுக்குத் திரும்பினர்.

கவிஞர் காமராசன், கவிஞர் முத்துராமலிங்கம், கவிஞர் முத்துச்சாமி ஆகியோர் எம்.ஜி.ஆர். கட்சியிலிருந்து விடுபட்டுக் கழகத்திற்கு வந்து விட்டனர்.

நடிகர் நண்பர் விஜயகுமார் அ.தி.மு. க.விலிருந்து விலகி தி.மு. க.வில் சேர்ந்து கொண்டார்.

முன்னாள் எம்.பி. அசோக்ராஜ் பி.எஸ்ஸி. பி.டி. அ.தி.மு.க.வைக் கை கழுவிவிட்டுத் தி.மு. க.வுக்குத் திரும்பினார்.

திருச்சி மாவட்ட அ.தி.மு. க. அவைத் தலைவரும், ஊராட்சி ஒன்றிய முன்னாள் தலைவருமான அட்சய கோபால், நாஞ்சிலாருடன் இணைந்து நமது கழகத்தில் சேர்ந்தார்!

அண்ணா நகர் தொகுதியில் என்னை எதிர்த்துப் போட்டியிட்ட வழக்கறிஞர் கிருஷ்ணமூர்த்தி, எம்.ஜி.ஆர். கட்சியிலிருந்து தனது உறவை முறித்துக்கொண்டு - தாய்க்கழகம் வந்தடைந்தார்.

கவிஞர் வேழவேந்தன் மீண்டும் நம் கழகத்தில் வந்திணைந்தார்.

கோவை மாவட்ட எம்.ஜி.ஆர். மன்றத் தலைவர் நண்பர் பிரபாகரனும் அவருடன் நண்பர் டி. பொன்னுசாமியும் தி.மு.கழகத்தில் இணைந்தனர்.

அ.தி.மு.க.பொதுக்குழு உறுப்பினர்களான முல்லைவேந்தன், பூபாலன், எறும்பு சீனிவாசன், டி. ராஜா, எஸ். பெருமாள்,

தலைஞாயிறு வழக்கறிஞர் ராதாகிருஷ்ணன் ஆகியோர் கழகத்திற்குத் திரும்பினர்.

உடன்பிறப்பே,

கடிதத்தில் இடமில்லை - இஃதன்னியில் ஒவ்வொரு மாவட்டத்திலும், வட்டத்திலும், ஒன்றியத்திலும், எம்.ஜி.ஆர். கட்சியின் அமைப்பாளர்கள், உறுப்பினர்கள் நாள்தோறும் நூற்றுக்கணக்கில் ஆயிரக்கணக்கில் நமது கழகக் குடும்பம் நோக்கி வந்து கொண்டேயிருக்கிறார்கள். இந்த மடலில் அவர்களின் பெயர்களையெல்லாம் குறிப்பிட இயலவில்லையென்றாலும் என் மனத்தில் அவர்தம் பெயர்களைச் செதுக்கி வைத்துக் கொண்டிருக்கிறேன்.

இனியும் அணி அணியாக அங்கிருந்து இங்கு வந்துகொண்டேதானிருப்பார்கள்! வருகின்ற உடன்பிறப்புகளை நம்மோடு - ஆம்! நம் உணர்வுகளோடு சங்கமமாக்கிக்கொள்ள - என் அன்பு உடன்பிறப்பே! நீயும் நானும் தயாராகவே இருக்கிறோம் என்பதைச் சொல்லவும் வேண்டுமா? மனப்புண் ஆற்றிடும் மருந்தே! வா! என அழைத்ததும் - குற்றம் பார்க்கின் சுற்றமில்லை என்ற அண்ணாவின் கட்டுரையை நான் உனக்கு நினைவுபடுத்தியதும் வீண் போகவில்லை!

வீண்போகாது!
வீணர்கள் -
வேண்டுமானால்
வெறிபிடித்துக்
கதறட்டும்!

நமது கழக வீணையின் நாதம் - தமிழினத்தின் காது குளிரக் கேட்கட்டும்!

அன்புள்ள,

மு. க.

(2-04-1980)

730.ஆழமாக என் நெஞ்சில் பதிந்த அண்ணாவின் கருத்து!

அன்புடையீர்,

வணக்கம். தங்கள் ஏட்டில் வெளியிடுவதற்கெனத் தாங்கள் எழுதிய மடல் கிடைத்தது. மகிழ்ச்சி.

திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து விலகிச் சென்று மீண்டும் கழகத்திற்கு வந்துள்ளவர்களைப் பற்றிய சில விளக்கங்களை என்னிடம் கேட்டிருக்கிறீர்கள்.

அறிஞர் அண்ணா அவர்களால் அரசியல் இயக்கமாக உருவாக்கப்பட்ட தி.மு.கழகம், பதினெட்டு ஆண்டுக்காலம் எதிர்க்கட்சியாக விளங்கியது. 1949 முதல் 1967 வரையில்!

அண்ணா அவர்களை எதிர்த்து, மறைந்த நண்பர் சம்பத் அவர்கள் தலைமையில் ஒரு குழுவினர் கழகத்தை விட்டு விலகிச் சென்று தமிழ் தேசியக் கட்சி என்ற புதுக் கட்சியே தொடங்கினர். அந்தக் கட்சியில் பணியாற்றிய பலர், சில முக்கியமானவர்கள் உட்பட, மீண்டும் அண்ணாவின் தலைமையில் தங்களை திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைத்துக் கொண்டனர். அண்ணாவை எதிர்த்து நண்பர் இளம்பரிதி தலைமையில் தமிழர் முன்னணி என ஒரு இயக்கம் உருவாயிற்று. மேடைகளிலும், ஏடுகளிலும் அந்த இரு கட்சிகளின் தலைவர்களும், முன்னோடிகளும் தி.மு. கழகத்தையும், அண்ணாவையும் எவ்வளவு காரசாரமாகத் தாக்கினர் என்பதைத் தமிழக அரசியலைக் கூர்ந்து நோக்குவோர் மறந்திருக்க முடியாது. அண்ணா காலத்திலேயே அதே இளம்பரிதி மீண்டும் கழகத்திற்கு வந்துவிட்டார்.

திராவிடர் கழகத்திலிருந்து தி.மு. கழகம் உருவான பிறகு பெரியாரின் கண்டனங்கள், கணைகள் என எங்கள் மீதும் அண்ணாவின் மீதும் பாய்ந்திருக்கின்றன. அப்போது பெரியாரின் கருத்துக்களை மறுத்து அண்ணா எழுதிய "பெரியார் பெர்லிஸ்

பயணம்" போன்ற தலைப்புள்ள கட்டுரைகளைப் பழைய ஏடுகளில் இன்றைக்கும் படிக்கலாம்.

1967 வரையில் தி.மு. கழகத்தைக் கடுமையாக எதிர்த்துப் பேசியும் எழுதியும் வந்த தந்தை பெரியார் அவர்கள் அண்ணாவையும், அண்ணா அமைத்த அரசையும் வாழ்த்திப் பாராட்டி வரவேற்றதை வரலாறு முழங்கிக் கொண்டுதானிருக்கிறது. 1967 தேர்தலில் வெற்றி பெற்றவுடன் அண்ணாவும் நாங்களும் திருச்சி சென்று பெரியார் அவர்களுக்கு மாலை அணிவித்து வழ்த்துப் பெற்றோம். அதன்பிறகு கீரியும் பாம்புமாக இருந்த நிலைமாறி, தி.மு.கவுடன் திராவிடர் கழகம் நல்லுறவு கொண்டு இன்று அருமை இளவல் வீரமணி அவர்கள் தலைமையில் நிறைந்த ஆதரவை எங்களுக்கு நல்கிடுவதை நீங்களறிவீர்கள்.

1975ஆம் ஆண்டு நெருக்கடி நிலை அறிவிக்கப்பட்டபோது திருமதி இந்திரா காந்தி அவர்களை மிகமிகக் கடுமையாக விமர்சித்த (காமராசர் தலைமையில் இருந்த) பழைய காங்கிரஸ் காரர்கள் பலர், பழைய காங்கிரசின் முக்கியப் புள்ளிகள் பலர், பெருந்தலைவர் காமராசர் மறைந்தவுடன் இந்திரா காங்கிரசில் இணைந்து விட்டதையும் நீங்கள் மறந்திருக்க இயலாது!

மூட்டைப் பூச்சியை நசுக்குவது போல் தி.மு. கழகத்தை நசுக்கி விடுவேன் என்று அறைகூவல் விடுத்த மூதறிஞர் இராஜாஜி அவர்கள், தி.மு. கழகத்துடன் உடன்பாடு கொண்டு காங்கிரசை எதிர்த்தது சரித்திரத் திருப்பம் என்பதை நீங்கள் ஒப்புக் கொள்வீர்கள்!

இந்தக் கடந்தகால நிகழ்ச்சிகளை எண்ணிப் பார்த்திடும் போது கொள்கை மாறுபாடு காரணமாக இல்லாமல் - வெறுங் கோபதாபங்களை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு கழகத்தி லிருந்து பிரிந்து சென்றவர்கள் கொள்கையைக் காப்பாற்றிடக் கழகத்தினால்தான் முடிவும் என்ற நம்பிக்கையைப் பெற்றுத் திரும்பி வருவது வியப்புக்குரியதுமல்ல! வெறுப்புக்குரியதுமல்ல! வரவேற்கத்தக்கது!

எம்.ஜி.ஆர். அவர்களிடமிருந்து விலகி வருகிறவர்கள் அவரைப் பற்றி அதிக விமர்சனம் செய்யாமல் சர்வ ஜாக்கிரதையாக வருகிறார்களே என்று குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறீர்கள்!

தி.மு. கழகப் பாசறைக்கு வந்துவிட்டால் அந்தப் பண்புதான் வரும்! இங்கிருந்து அங்குச் சென்றவர்கள் என் மீது நாராசத்தைப் பொழிந்தால்தான் நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களுக்குப் பிடிக்கும். ஆனால் நான் அங்கிருந்து இங்கு வரும் நண்பர்களிடம் அப்படியொரு கடுமையான விமரிசனத்தை எம்.ஜி.ஆர். பற்றிச் செய்ய வேண்டுமென்று விரும்புவதில்லை! அதனை ரசிப்பதுமில்லை!

கழகத்தில் வந்து இணைந்துள்ளவர்களைப் பற்றித் தனிப்பட்ட முறையில் பல கருத்துக்களைத் தாங்கள் விரிவாக எழுதியுள்ளீர்கள்!

"குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை" என்ற எனது தலைவர் அண்ணா அவர்கள் எழுதிய உருக்கமும் உணர்ச்சியும் பொங்கிடும் கட்டுரையை நான் எனது நெஞ்சின் ஆழத்தில் பதிய வைத்துக் கொண்டிருக்கிறேன்.

தாங்கள் குறிப்பிடுவதுபோல இப்போது வந்துள்ளவர்கள் யாரும் தங்களைக் காப்பாற்றிக் கொள்ள வரவில்லை.

எனது நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களின் முரண்பாடு மிகுந்த செயல்களால் மனம் வெதும்பியவர்கள் அவர்கள்! அவர்களில் சில முக்கியமானவர்கள் சென்ற ஆண்டே அவர்களது அமைச்சர் போன்ற பதவிகளை உதறிவிட்டு வந்து விடுவதாக என்னிடம் நேரில் சந்தித்துத் தெரிவித்தனர். நான்தான் அவர்களை அவசரப்பட வேண்டாம் எனக் கேட்டுக் கொண்டேன்.

தி.மு.க. ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது 1972இல் கழகத்தை விட்டு விலகி அ.தி.மு.க.வுக்குச் சென்றவர்களைப் பதவி ஆசைக்காரர்கள் என்று என்னால் கூற முடியாது.

சோதனைகளும் வேதனைகளும் என்னைச் சுற்றி வளைத்துச் சூறாவளியாக வீசியபோது தனித்து நின்று கழகத்தை வளர்த்ததைப் பாராட்டியிருக்கிறீர்கள். நன்றி!

அப்போது எனக்குத் துணிவையும் ஆதரவையும் நல்கிய கழகத் தொண்டர்களாம் என் அன்பு உடன்பிறப்புகளின் பாசத்தை என்கண்கள் இறுதியாக மூடும் வரையில் -என் மூச்சு அடங்கும் வரையில் மறக்க மாட்டேன்.

கழகத்தில் வந்து இணைகிறவர்களைத் தாங்கள் கருதுகிறபடி அரசியல் இலாபத்திற்காகவோ - அதனால் வாக்குகள் அதிகம் கிடைக்கும் எனக் கணக்கிட்டோ; நான் வரவேற்கவில்லை!

கப்பலில் பயணம் செய்தோம் - புயலின் கப்பல் கடலில் தத்தளித்தது; சிலர் குதித்து விட்டனர் கடலில்! சிலர் காப்புப் படகுகளில் ஏறிக்கொண்டு உயிர் தப்ப முயன்றனர்! சிலர் புயல் காற்றால் தாக்குண்டு பயங்கர அலைகளின் மீது வீசியெறியப்பட்டனர். மூழ்கினால் கப்பலோடும் அதில் எஞ்சியுள்ளவர்களோடும் மூழ்குவோம் என்றிருந்தோம்.

புயல் நின்றுவிட்டது! கடலில் அமைதி! கப்பல் கவிழவில்லை! காப்பிப் படகில் சென்றோர் - அலைகளின் மீது வீசியெறியப் பட்டோர் - உயிர் தப்பிக் கப்பலில் ஏறிக்கொள்கிறார்கள் என்றால் அவர்களையெல்லாம் உயிரினுமினிய உடன்பிறப்புகளாகக் கருதும் நான் எப்படித் தடுக்க முடியும்? கண்களில் ஒளியுடன் - முகத்திலும் அகத்திலும் மலர்ச்சியுடன் - அவர்களை மீண்டும் கப்பலில் ஏற்றி அமர்த்துவது தானே கருணையுள்ள இதயத்திற்கு அடையாளம்!

இந்தப் பாச உணர்வும் - கொள்கைப் பிடிப்பும் கொண்ட எனது உடன்பிறப்புக்களை விசிட்டருக்கு எழுதும் இந்தப் பதில் மடலின் வாயிலாகவும் "வருக! வருக!!" என அழைக்கிறேன்.

(குறிப்பு : அ.தி.மு.க.விலிருந்து தி.மு.க.வுக்கு வருகிறவர்களைக் கேலி செய்கிற பத்திரிகையாளர்கள் சிலர். தி.மு. கழகத்திலிருந்து சிலரோ - பலரோ அ.தி.மு.க.வுக்குப் போனபோது அப்படிப் போனவர்களைப் பாராட்டியதை மக்கள் உணர்வார்கள்.

அன்புள்ள,
மு. க.

03-04-1980

நன்றி: 'விசிட்டர்' விசிட்டர் பத்திரிகையில் தலைவருக்கு எழுதிய கடிதத்திற்கு தலைவர் எழுதிய பதில் கடிதம்

731. இஸ்லாமிய பேராசிரியரின் இலக்கிய வகுப்பு உடன்பிறப்பே,

இஸ்லாமியப் பேராசிரியர் இரகுமான் என்பவர் நடத்தும் இலக்கிய வகுப்பு ஒன்றுக்கு உன்னை அழைத்துச் செல்கிறேன், என்னுடன் வா!

(சற்றுத் தொலைவிலிருந்து பலகணி வழியாக ஆசிரியர் அளிக்கும் பயிற்சியைக் கவனிப்போம். மாணவர்கள், ஆசிரியரின் எதிரே அடக்கத்துடன் அமர்ந்துள்ளனர். ஆசிரியர், மாணவர்களை நோக்கி சில வினாக்களை விடுக்கின்றார். முதலில் அவற்றைக் கேட்போம்.)

ஆசிரியர் :- தம்பீ! சிலப்பதிகாரத்தை இயற்றியவர் யார்?

மாணவன் :- இளங்கோவடிகள்.

ஆசிரியர் :- மிகச் சரி! தம்பீ! நீ சொல்லப்பா! வடமொழி இராமாயணத்தை இயற்றியவர் யார்? அதனைத் தழுவி தமிழில் இராமாயணத்தை இயற்றியவர் யார்?

மாணவன் :- வடமொழியில் வால்மீகி! தமிழில் கம்பர்!

ஆசிரியர் :- தம்பி, அப்துல்லா! உனக்கு ஒரு கேள்வி! திருப்புகழ் இயற்றியவர் யார்?

மாணவன் :- அருணகிரிநாதர்!

ஆசிரியர் :- அருட்பா இயற்றியவர்?

மாணவன் :- வடலூர் வள்ளலார் ராமலிங்க அடிகள்!

ஆசிரியர் :- நன்று! நன்று! கோடியில் உட்கார்ந்திருக்கிற குட்டித்தம்பி, நீ சொல் பார்க்கலாம் - திருக்குறளை இயற்றியவர் யார்?

மாணவன் :- திருவள்ளுவர்!

ஆசிரியர் :- சரி! இதுவரையில் - இயற்றப்பட்ட நூல்களைக் குறித்தும், அவற்றை இயற்றியவர்களைக் குறித்தும் வினாக்களைத் தொடுத்தேன் - இப்போது மற்றொரு வினா! அதாவது திருக்குர் ஆன் யாராலாவது இயற்றப்பட்டதா?

மாணவர்கள் :- (அனைவரும் ஒரே குரலில்) ஆமாம்! நபிகள் நாயகம் அவர்களால் இயற்றப்பட்டது!

ஆசிரியர் :- (அதிர்ச்சியடைந்து) என்ன? என்ன சொல்கிறீர்கள்? நபிகள் நாயகம் குர்ஆனை இயற்றினாரா? உங்களுக்கு அப்படிச் சொல்லிக் கொடுத்தது யார்?

மாணவர்கள் :- (அனைவரும் ஒரே குரலில்) அப்படிச் சொன்னது காயிதேமில்லத் இஸ்மாயில் சாகிப் அவர்கள்!

ஆசிரியர் :- (மேலும் அதிர்ச்சியுடன்) இருக்கவே இருக்காது! இஸ்மாயில் சாகேப் அவர்கள் இஸ்லாத்தைத் தெளிவாகப் புரிந்தவர்கள்! அந்தக் கண்ணியத்துக்குரியவர் மீது இப்படி ஒரு களங்கத்தைச் சுமத்தாதீர்கள். நபிகள் நாயகம், குர்ஆனை இயற்றினார் என்று காயிதேமில்லத் அவர்கள் எங்கே சொன்னார்? எப்போது சொன்னார்? அல்லது யாரிடம் சொன்னார்?

மாணவர்கள் :- (அனைவரும்) முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்களிடம் சொன்னார்!

ஆசிரியர் :- என்னப்பா! எல்லோரும் கோரஸ் போல ஒரே பாட்டைப் பாடுகிறீர்கள்? நபிகள் நாயகம் குர்ஆனை இயற்றினார் என்று காயிதேமில்லத் சொன்னதாக எம்.ஜி.ஆர். சொன்னாரா? என்னையே குழப்புகிறீர்களே! எம்.ஜி.ஆர். எங்கே அப்படிச் சொன்னார்?

ஒரு மாணவன் :- முஸ்லீம்களின் கூட்டத்திலே தான் சொன்னார்!

ஆசிரியர் :- அதற்கு என்ன ஆதாரம்?

ஒரு மாணவன் :- இதோ இருக்கிறது ஆதாரம்!

(என்று கூறி ஆசிரியரிடம் அண்ணா என்ற பத்திரிகையைத் தருகிறான்.)

ஆசிரியர் :- (பத்திரிகையை உரக்கப் படிக்கிறார்.)

காமராஜரைப் படிக்காதவர் என்று சிலர் சொன்னபோது அவர்களுக்கு சவுக்கடி கொடுப்பது போல காயிதேமில்லத் அவர்கள், குர்ஆனை இயற்றிய நபிகள் நாயகமும் படிக்காதவர்தான் என்று பதில் அளித்தார் என்று புரட்சித் தலைவர் விளக்கமளித்தார்.

ஆசிரியர் அந்தப் பகுதியை உரக்கப் படித்ததும் மாணவர்கள் குபீர் என்று சிரிக்கிறார்கள்! ஆசிரியர், மாணவர்களை கூர்ந்து பார்க்கிறார். ஒரு மாணவன் ஆசிரியருக்கு முன்னால் வந்து;

மாணவன் :- ஆசிரியர் அவர்களே! எங்களை மன்னித்துக் கொள்ளுங்கள். குர்ஆன் என்ற புனிதக் கருவூலம் இறைவனால் ஜிப்ராயில் (அலய்இஸ்ஸலாம்) அவர்களின் மூலமாக நபிகள் நாயகத்திற்கு அருளப்பட்ட வேதம் என்பதும், அதனை மனத்திலிறுத்தி நபிகள் பெருமான் மக்களிடம் பரப்பினார்கள் என்பதும் இஸ்லாம் மார்க்கம் ஏற்றுக் கொண்ட கருத்து! நபிகள் நாயகம் குர்ஆனை இயற்றவில்லையென்பது எங்களுக்கும் தெரியும்! அதுகூடத் தெரியாமல் உங்களின் மாணவர்களாக இருக்க முடியுமா?

ஆசிரியர் :- (பெருமூச்சுவிட்டு) அப்பாடா! பிழைத்தேன்! என்னுடைய மாணவர்களா இப்படி அறிவு மழுங்கி விட்டனர் என்று திகைத்த எனக்கு இப்போதுதான் தெம்பு வந்தது! இலக்கிய வகுப்பில் நகைச்சுவையிருக்கட்டுமே என்பதற்காக இனிமேல் இத்தகைய நச்சுச்சுவையைக் கலக்காதீர்கள்!

அதிருக்கட்டும்! திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் அப்படியொரு தவறான தகவலைச் சொன்னபோது அதை அங்கிருந்த யாருமே திருத்தவில்லையா?

மாணவன் :- எப்படி முடியும்? பேசியது முன்னாள் முதல்வர் அல்லவா?

ஆசிரியர் :- முன்னாள் முதல்வர்கள் எல்லாம் இப்படியா பேசிக் கொண்டிருக்கிறார்கள்? உம்! என்ன செய்வது? தமிழ்நாட்டின் தலையெழுத்து?

மாணவர்கள் :- (அனைவரும்) இல்லை அய்யா! எங்கள் தலையெழுத்து! நாங்கள் அந்தக் கூட்டத்திற்குப் போனோம்!

(ஆசிரியர் கலகலவெனச் சிரிக்கிறார்.)

உடன்பிறப்பே! இன்று கூட்டத்தில் பேச உனக்கு நல்ல விஷயம் கிடைத்ததல்லவா? வா! போகலாம்!

அன்புள்ள,

மு. க.

(11-04-1980)

732. நீ இருக்கும்போது! உன் நெஞ்சில் நான் இருக்கும்போது!

உடன்பிறப்பே,

கடந்த சில நாட்களாக உன்னைச் சென்னையிலேயே சந்தித்து நேரிலே பேசிடும் வாய்ப்பு பெற்ற காரணத்தினால் கடிதம் தேவைப்படவில்லை. எத்தனையோ விதமான உணர்ச்சிகளுடன் உன்னைக் கண்டேன். அன்றலர்ந்த முகத்துடனும் வந்தாய்! அனல் பறக்கும் கண்களுடனும் என் எதிரே நின்றாய்! புனல் ததும்பும் விழிகளையும் பார்த்தேன்!

எதையும் சமாளித்துச் சரிசெய்து கொள்ளக்கூடிய பாசப்பிணைப்பு நம்மிடையே அறுபடாமல் அழுத்தம் திருத்தமாக இருப்பதால் உணர்ச்சிகள் மின்னல் ஒளியின் ஆயுளைக் கொண்டவைகளாக வெளிப்பட்டு - இயக்கப் பிடிப்பும் இதயஉணர்வும் பரந்து கிடக்கும் வானப் பெருவெளியாகக் காட்சி தரும் மாட்சியைக் காண முடிகிறது!

உனக்கு இடம் கிடைக்கவில்லை என்பதற்காகக் கூட அல்ல! நீ பரிந்துரை செய்த உடன்பிறப்புக்கு இடம் கிடைக்கவில்லையென்பதற்காக நீ எவ்வளவு குமுறினாய்! எனக்குத் தெரியாமல் போய் விடவில்லை! கண்ணீர் எப்போது வெளிப்படுகிறது? சோகம் எந்தச் சூழ்நிலையில் பெருக்கெடுக்கிறது? அன்பையும், பந்தபாசத்தையும் எங்கே களஞ்சியம் கட்டி காத்து வருகிறோமோ - அந்த இடத்தில்தானே உறவின் மகிமை தெரிகிறது! உடன்பிறந்தோர் நாம் என்ற உணர்வு ஒளிவிடுகிறது!

என்னை எங்கேயோ கொண்டு போய் உட்கார வைக்கப் போகிறேன் என்கிறாய்! மீண்டும் அந்த இடத்தில் அமர்த்திப் பார்த்துவிட்டுத்தான் மறுவேலை பார்ப்பேன் என்று சூளுரை பகருகிறாய்! எல்லாம் சரிதான்! நான் கேட்கிறேன் உன்னை!

ஏறத்தாழ நாற்பதாண்டுக் காலமாக உன் இதயத்திலே எனக்குக் கிடைத்திருக்கிற இடத்தைவிட எந்தப் பெரிய இடத்திலே என்னை இழுத்துப் போய் நீ உட்கார வைக்க முடியும்? அதை எண்ணிப் பார்த்தாயா? வைர வைடூரியங்களைப் பதித்துத் தனித் தங்கத்தால் செய்யப்பட்ட சிம்மாசனங்களைவிட மதிப்பு வாய்ந்தது அல்லவா உன் மனமெனும் அரியாசனம்! அதற்கு ஈடு உண்டா? இணைதான் உண்டா?

துள்ளித் திரிய வேண்டிய பள்ளிப் பருவத்திலேயே படித்துப் பட்டம் பெற வேண்டும் என்ற பெற்றோர்களின் ஆசையில் மண்ணைப் போட்டு விட்டு, இந்த மண்ணையும் தமிழ் மொழியாம் கண்ணையும் காத்திடும் அடங்காத வெறியுடன் இந்த இயக்கத்தில் என்னை ஒப்படைத்துக் கொண்டேன். எத்தனையோ சோதனைகள்! எத்தனையோ வேதனைகள்! அவற்றையெல்லாம் நாம் ஒன்றாக நின்று சந்தித்தோம், சந்திக்கிறோம் என்பதில் உள்ள சுகம் – வேறு எதிலே இருக்கிறது? முறுவல் பூத்திடும் முகத்தினராய் முள்ளின்மீது நடக்கும்போது ஏற்படும் அதேநிலைதான் – முடிபுனைந்து நாடாள வந்திடுக என மக்கள் அழைத்த போதும் நமக்கு இருந்தது! இருக்க வேண்டும் என்ற நினைப்பு கொண்டவர்கள் நாம்!

நிழலிலே நிற்பதற்கு மட்டுமா நாம் ஒன்று கூடினோம்! நெருப்பிலே நிற்கும்போதும் நெஞ்சுறுதி குலையாதவர்கள் நாம் என்ற பெருமையைவிட வேறென்ன விலைஉயர்ந்த மணிமகுடம் வேண்டும்?

நீ அறிவாய்! எஸ்.ஜே. இராமசாமி அவர்களை! இந்த இயக்கத்துடன் இணைந்து வளர்ந்த பெரியவர்! இடையில் எம்.ஜி.ஆரை நம்பிச் சென்றார்! நாடு காடாகி விடுமென உணர்ந்து மீண்டும் நம்மிடையே வந்துவிட்டார் கடந்த செப்டம்பர் திங்களில்! சோளிங்கர் தொகுதியில் வெற்றி பெற்றவர்! இந்த முறையும் நிற்பதற்கு மனு செய்திருந்தார்! ஆட்சிமன்றக் குழுவில் அவரை அழைத்துப் பேசினோம்! என்ன சொன்னார் தெரியுமா? எனக்கு இடம் கொடுத்தாலும் வெற்றி பெற்றுக் காட்டுகிறேன்! ஆனால், எனக்குக் கொடுத்து விட்டால் மூர்த்தி என்ற இளைஞர் மனம் வேதனைப்படும். ஆகையால், அவருக்கே கொடுங்கள்! நான் உழைத்துப் பாடுபட்டு வெற்றி தேடித் தருகிறேன். என்னுடைய குறிக்கோள் ஒன்றே ஒன்றுதான்! அது உங்களைக் கூட்டணி ஆட்சியின் தலைமைப் பொறுப்பில் பார்ப்பதுதான்!

தமிழ்நாட்டைக் காப்பாற்றுவோம்! இந்த வார்த்தைகளை அந்தப் பெரியவர் பேசியபோது ஆட்சிமன்றக் குழுவினராகிய நாங்கள் அச்சடித்தப் பதுமைகளானோம்! நாத்தழுதழுக்க அவருக்கு விடை கொடுத்து அனுப்பினோம்!

இந்தமுறை எனக்கு வேண்டாம்! செய்யாறு தொகுதியில் ஒரு வாலிபரை நிற்க வையுங்கள் என்று புலவர் கூறியபோதும் - காஞ்சித் தொகுதியில் சம்பந்தனுக்கு வேட்பு மனுவை சி.வி.எம். முன்மொழிந்தார் என்ற செய்தி கேட்கும்போதும் - காரைக்குடியை சித.சிதம்பரத்திற்குத் தருவதற்காகத் திருப்பத்தூரை நமது அமைப்புச் செயலாளர் தென்னரசு விட்டுக் கொடுத்த போதும் - அத்தகைய மூத்தவர்கள் பலர் இந்தக் கழகத்திற்குச் சிறு ஊனமும் ஏற்படாமல் காத்து நிற்கும் கடமையாளர்கள் என எண்ணி எண்ணி நான் அடையும் பெருமிதத்திற்கு உவமை கூற முடியாமல் தவிக்கிறேன்!

பல தொகுதிகள் நமக்கே கிடைக்குமென்று எண்ணியிருந்த தொகுதிகள் தோழமைக் கட்சிகளுக்குப் போய்விட்டன! சில தொகுதிகள் கைக்கு எட்டி வாய்க்கு எட்டாமல் போயின! சில தொகுதிகளில் ஒன்றிரண்டில் நமது உடன்பிறப்புகளின் பெயர்கள் அறிவிக்கப்பட்டு, தவிர்க்கவொண்ணாதக் காரணங்களால் மாற்றி அறிவிக்க வேண்டிய நிலைமைகள் ஏற்பட்டு விட்டன!

அவற்றையெல்லாம் தாங்கிக்கொண்ட என் தங்கம்நிகர் உடன்பிறப்புகளிடம் நான் எப்படி மன்னிப்புக் கேட்பது என்றே புரியவில்லை!

உதடுகளின் முகப்பில் புன்னகை! உள்ளமோ வெந்தணல்! இப்படியொரு நிலை எனக்குச் சில நாட்களாய்! ஏன் தெரியுமா? என் அன்பு உடன்பிறப்புகள் அனைவரையும் திருப்தி கொள்ளச் செய்ய முடியவில்லையே என்பதால்தான்!

கிடைக்காத தொகுதியிலும் போட்டு வைப்போம் - இறுதி நேரத்தில் எப்படியாவது ஆகட்டும் என்று ஒரு நம்பிக்கையுடன் வேட்பு மனுவைப் போட்டுள்ள உடன்பிறப்புகள், நானே அவர்களின் கையைப் பிடித்து நேரடியாகக் கேட்டுக் கொள்வதாகக் கருதி அந்த மனுக்களைத் திரும்பப் பெற்று எனக்கு மன நிம்மதியைத் தந்து - கழகத்தின் கட்டுப்பாட்டைக் காத்திடுவார்கள் என்பது எனக்குத் தெரியும்!

இந்த மிக முக்கியமான தேர்தல் களத்தில் தனக்கோர் தனியிடம் கிட்டவில்லையே என்ற வருத்தம் - என்னை வளர்த்த பெரியோர்க்கும் - என்னை ஊக்குவிக்கும் உணர்ச்சி கொண்ட உடன்பிறப்புகளுக்கும் உண்டு என்பதை மறுப்பவனல்ல நான்!

அத்தகையவர்களில் ஓரிருவர் பெயர்களை மட்டுமே இந்த மடலில் குறிப்பிட்டேன்! எழுதிக் கொண்டேபோனால் ஏடு இடம் தராது. அவ்வளவு பெரும் பட்டியல் இருக்கிறது! அந்தத் திருப்பெயர்கள் எல்லாம் என் நெஞ்சில் செதுக்கிய எழுத்துகளாகத் தகத்தகாய ஒளியினை வீசிக் கொண்டுதானிருக்கின்றன! அவர்களை என் மனத்தால் வாழ்த்துகிறேன்! வழிபடுகிறேன்!

இடம் கிடைத்தோர் - கிடைக்காதோர் எல்லோரும் சேர்ந்துதான் இந்த இயக்கம்!

தமிழகத்தைக் கப்பியிருந்த இரண்டரை ஆண்டுக்கால இருளை அகற்ற இணைந்திருக்கிறோம் கூட்டணியாக!

இந்த அணியின் வெற்றி இருநூற்றி முப்பத்தி நான்கு இடங்களிலும் மலர்ந்தாக வேண்டும்.

உடன்பிறப்பே! நீ இருக்கும் போது - உன் நெஞ்சில் நான் இருக்கும் போது - நிச்சயமாக அந்த வெற்றிக் கொடி பறந்தே தீரும்!

அன்புள்ள,

மு. க.

(5-05-1980)

733. சில அலைகளின் ஒலி!

உடன்பிறப்பே,

தென்பாண்டி மண்டிலத்தின் ஒரு கோடியிலிருந்து நாள்தோறும் ஒரு குரல் தொலைபேசி வாயிலாக ஒலித்து கொண்டேயிருக்கிறது. அந்தக் குரலுக்குச் சொந்தக்காரர் தம்பி கோபாலசாமி! மாநிலங்களவை உறுப்பினர்! துள்ளும் வாலிபத்தின் அடையாளச் சின்னம்!

அஃதே போல் இன்னொரு குரல்! அது என் தம்பியின் குரல் அல்ல! தஞ்சைத் தரணியிலிருந்து ஒலிக்கும் குரல்! என்னைத் தம்பீ! என அழைத்துத் தட்டிக் கொடுத்து வளர்த்து நான் வருந்தினால் வருந்தி - மகிழ்ந்தால் மகிழ்ந்து இயக்கத்தின் இரும்புத் தூணாக இருக்கும் மன்னையின் குரல்! இந்த இரு குரல்களைப் போலவே நாள்தோறும் பல குரல்கள் தொலைபேசி வாயிலாக ஒலித்துக் கொண்டிருக்கின்றன. ஒன்றைச் சொல்லி ஒன்றை விடக்கூடாது என்பதற்காகவே, தஞ்சைக்கு ஒன்றும் - நெல்லைக்கு ஒன்றுமாக - வயதின் அடிப்படையிலே இரண்டை மட்டும் சொன்னேன்! மற்றவர்கள் என்றும் போல் மனத்தில் உலவிக் கொண்டுதானிருக்கிறார்கள். தொலைபேசி வாயிலாக என்ன குரல் ஒலிக்கிறது என்று உனக்குச் சொல்ல வேண்டாமா?

யார் பேசுறது? தலைவரா பேசுறது? நான் மன்னை பேசுறேன். தஞ்சாவூர் போயிருந்தேன். நாமினேஷன் எல்லாம் போட்டாச்சு! தங்களுக்கென்று இடம் கேட்டிருந்தவர்கள் எல்லாம் கட்சி வெற்றிபெற்றால் போதும் என்று கூறிக்கொண்டு வேட்பு மனு தாக்கல் செய்யும் ஊர்வலத்தில் உற்சாகமாகக் கலந்து கொண்டார்கள். கொஞ்சம் மனத்தாங்கலாக இருந்தவர்களையும் நான் சமாதானம் செய்து வேலை செய்யச் சொல்லியிருக்கிறேன். கோ.சி. மணி சென்னையிலே இருந்தால் உடனே திருவையாறுத் தொகுதிக்கு அனுப்பி வையுங்கள்! நாலைந்து ஒன்றியங்களில் கூட்டம் போட்டிருக்கிறோம். நேற்று வேதாரண்யம் சென்று

எல்லோரையும் பார்த்தேன். கருப்பம்பலம் தம்பிகள் நன்றாகப் பணியாற்றுகிறார்கள். தஞ்சை மாவட்டத்து நமது செயல்வீரர்கள் எல்லோரும் பம்பரம் போல் தொண்டாற்றுகிறார்கள்.

இப்படிப் பேசுவார்! என்னைத் தலைவராக்கிய தளபதிகளில் ஒருவர்!

அண்ணே! நான் திருநெல்வேலியிலிருந்து பேசுறேன் அண்ணே! இங்க எல்லாம் நல்லா இருக்கு! நீங்க அனுப்பிய தலைமைக் கழக தேவராஜ் வந்தாரு! மாவட்டச் செயலாளர் கிருஷ்ண அண்ணனைப் பார்த்து உதய சூரியன் சின்னம் அதிகாரப்பூர்வமா ஒதுக்க வேண்டியவர்களுக்கான தாள்களை கொடுத்தாரு! நாங்க எல்லோரும் ஒற்றுமையா வேலை செய்றோம்! இன்னைக்கு நாலைந்து கூட்டம் இருக்கு! அதுக்கு போயிட்டு நாளைக்கு மறுபடியும் தொலைபேசி மூலமா தொடர்பு கொள்கிறேன் அண்ணே!

கோபாலசாமி கூறிடும் விபரங்கள்தான் இவை! இவரை டெல்லிக்கு அனுப்பி விட்டால் பிறகு தமிழ்நாட்டில் கட்சி வேலைகளைக் கவனிக்க இவரால் இயலுமா? என்று நான் கூட யோசித்தது உண்டு! ஆனால் இவரோ, தமிழகமெங்கும் சுற்றிச் சொற்பொழிவாற்றுகிறார். நெல்லை மாவட்டப் பணிகளையும் பார்த்துக் கொள்கிறார். மாதத்தில் மூன்று முறையாவது என்னை வந்து சந்தித்துக் கழக ஆக்கப் பணிகள் குறித்து அளவளாவுகிறார்!

நமது நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒரு சிலர் (எல்லோருமல்ல) இவரிடம் கற்றுக் கொள்ள வேண்டிய பாடம் இது என்று கூட நான் பெருமூச்சு விட்டவாறு கூறிடுவேன்.

உடன்பிறப்பே, மன்னையும், கோபாலசாமியும் மட்டுமல்ல! அவர்களைப் போன்ற முதுமையும், இளமையும் முறையே கொண்டவர்கள் என் கடன் இயக்கப்பணி செய்து கிடப்பதே! என்ற நினைவுடன் தொண்டாற்றுவதால்தான் நமது கழகம் தொகை தொகையாக வந்த பகையனைத்தையும் முறியடித்து, இன்று தோள் உயர்த்தி நிற்கின்ற காட்சியினைக் காண முடிகிறது.

கடந்த மாதம் 27-ஆம் தேதி சென்னையில் கழக வேட்பாளர் பட்டியலை வெளியிட்டபோது நான் குறிப்பிட்டதை மறந்திருக்க மாட்டாய்!

இந்த இறுதிப் பட்டியலைத் தயாரிக்கும்போது நான் எங்காவது இடறி விழுந்திருந்தால், என்னைத் தாவிப் பிடித்து தூக்கி நிறுத்த வேண்டுமே தவிர, கழுத்தில் காலை வைத்து மிதித்து விடக் கூடாது! இடறி விழுந்தாலும் விழுவேனே தவிர, நிச்சயமாக வழுக்கி விழமாட்டேன்.

இப்படி நான் சொன்ன பிறகும் தேர்தல் களத்தில் போட்டியிட இடம் கிடைக்காத என் உடன்பிறப்புகள் சிலருக்கு என் மீது கோபம்தான்! நான் என்ன செய்ய முடியும்? அவர்கள் என்னைச் சந்தித்தும், கடிதம் மூலமாகத் தொடர்பு கொண்டும் எடுத்துக் கூறியுள்ள உணர்வுகளை நான் மதிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் பனிரெண்டு மணிவரையில் கை சின்னம் வேண்டுமென்று வாதாடிய ஒருவர், அது கிடைக்காத காரணத்தால் எம்.ஜி.ஆர். கட்சியின் சின்னத்தைப் பெற்றுக் காங்கிரசை எதிர்த்துப் போட்டியிடுகிறார் என்ற செய்தி, அவரை இதுவரையில் ஆதரித்தோர் செவிகளில் செந்தேள் போலத்தானே கொட்டும்!

ஏன் இத்தனையும் எழுதுகிறேன் என்றால் - ஒரு இயக்கத்தில் விட்டுக் கொடுக்கும் பரந்த மனப்பான்மையும் வேண்டும் - பதவி இருந்தாலும், இல்லா விட்டாலும் அந்த இயக்கத்தைக் கட்டிக் காக்கும் விசாலமான இருதயமும் வேண்டும்! பதவிதான் நமக்குக் கிடைத்து விட்டதேயென்று பாராட்டுப் பவனிகளுக்கு மட்டும் சென்று கொண்டிராமல், அல்லும் பகலும் அண்ணன் உருவாக்கிய கழகத்தை வளர்த்திடும் அக்கறை உணர்வும் இருந்திட வேண்டும்!

இவற்றை உணர்த்திடவே இந்தக் கடிதம்! ஆம்! என் உள்ளத்தில் எழும் சில அலைகளின் ஒலி!

அன்புள்ள,

மு. க.

(7-05-1980)

734. மதுரையிலிருந்தும் முழங்கிடும் முரசொலி!

உடன்பிறப்பே,

சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு திருவாரூரில் இருந்து துண்டு வெளியீடாகத் தொடங்கப் பெற்ற முரசொலி திராவிடர் இயக்கத்தின் போர்வாளாகத் திகழ்ந்து கொள்கை விளக்கமளித்து - அதன் பின்னர், வார இதழாக வடிவெடுத்து நமது கழகப் பாசறையின் நெடுநல் வேலாக விளங்கியது! முரசொலியின் அடுத்த கட்ட வளர்ச்சிதான் நாளேடாக அது தொடர்ந்து தொய்வின்றி நடைபெறுவதாகும்!

இதழ் நடத்துவோர் பலர் நம் மீது எரிந்து விழுந்து நம்மை ஒடுக்கிட முனையும் போதெல்லாம் முரசொலி நாளேடு ஆற்றியுள்ள அரும்பணியினை அறிஞர் அண்ணா இதயம் திறந்து பாராட்டியிருக்கிறார்.

மாற்று முகாம் ஏடுகளுக்கு அறைகூவல் விடுத்து மலர்கள் வெளியிடுவதிலும் - இருட்டடிப்பு செய்யப்படும் நமது கழகச் செய்திகளை உலகமறியச் செய்திட ஒளிவிளக்கு ஏற்றி வைப்பதிலும் முரசொலியின் தொண்டு என்றைக்குமே தடைப்பட்டதில்லை!

பலமுறை அடக்குமுறைக் கணைகள் முரசொலியைத் தாக்கியிருக்கின்றன! எனினும், முரசின் முழக்கம் ஓய்ந்திடவில்லை.

இதோ உங்களுக்கு ஓர் இனிப்பான செய்தி! சென்னையிலிருந்து வெளிவரும் முரசொலி, தென்மாவட்டங்களுக்குக் காலை நேரத்தில் கிடைக்கவில்லையென்னும் குறை பல ஆண்டுகளாக இருந்து வருகிறது.

அந்தக் குறை நீக்கிட, சங்கத் தமிழ் வளர்த்த மதுரை மூதூரில் இருந்து, வரும் இருபத்திஒன்றாம் நாளில் இருந்து முரசொலியின் ஓசை கேட்கப் போகிறது என்றும், அதற்கான ஏற்பாடுகள் மிகத் தீவிரமாக நடைபெறுகிறது என்றும் அறிந்திட நான் மகிழ்ச்சி

அடைவதோடு - அந்த மகிழ்ச்சியில் பங்கு பெற உங்களையும் அழைக்கிறேன்.

சென்னையிலிருந்தும் - மதுரையிலிருந்தும் முரசொலியை வெளியிடுவது என்பது எளிதான பணியல்ல! அதுவும் ஒரு கொள்கை விளக்க ஏடு என்கிற போது எத்தனையோ இன்னல்கள்! நெருக்கடிகள்!

எனினும், எதிர்நீச்சல் போட்டே இன்று வரை இயக்கத் தொண்டு ஆற்றிடும் முரசொலி இடையூறுகளை இன்முகத்துடன் தாங்கிக்கொண்டு, தமிழ் மண்ணுக்கெனத் தன்னை ஒப்படைத்துக் கொண்டிருக்கிறது.

பயம் - பணம் - இரண்டுக்கும் பணிந்து விடுகிற பத்திரிகையாளர்கள்! கழகம் என்றாலே கனல் கக்கிடும் ஏட்டாளர்கள்! நமது பெயர் கேட்டாலே நாராசம் கொட்டிடும் இதழாளர்கள்! செய்திகளை மறைப்போர் - குறைப்போர் - திரிப்போர் - இவர்களுக்கு மத்தியில் இரண்டொரு ஏடு நடத்துவோர் மட்டுமே கழகத்தைக் கனிவுடன் நோக்கி - தமிழகத்திற்கு ஆற்ற வேண்டிய கடமையை ஆற்றுகின்றனர்.

இந்த நிலையில் முரசொலியின் தேவை எத்துணை அவசியமானது என்பதை உணருகிறீர்கள்!

உங்கள் விருப்பத்தை நிறைவேற்றவே - இந்த முரசு முழங்கத் தொடங்குகிறது; கூடல்மாநகரில் இருந்து!

பாண்டி மண்டிலத்தில் உள்ளோர் இந்தப் படைக்கலனைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுகிறேன். நான் பெற்று வளர்த்த குழந்தை இந்த ஏடு! இன்று மாறனின் மடியில் தவழ்கிறது!

அது புகழ்மணக்க நாட்டுத் தொண்டு ஆற்றிடும்போதும் - புல்லர்களுக்கு எதிராகப் போர்க்குரல் எழுப்பும் போதும் - வீரமகனைப் பெற்ற புறநானூற்றுத் தாயைப் போல என் மனம் பூரிப்பால் பொங்கி வழியாதா என்ன!

வாழ்த்துங்கள் உங்கள் முரசொலியை!

அன்புள்ள,

மு. க.

(21-05-1980)

735. விழி! எழு! விடிவு காலத்தை எழுது!

உடன்பிறப்பே,

மதுரையிலிருந்து வரைகிறேன் இந்த மடல்!

கடந்த 11-ஆம் நாளன்று தொடங்கி இன்றுடன் இரண்டாவது கட்டத் தேர்தல் பிரச்சாரச் சுற்றுப் பயண நிகழ்ச்சியை நிறைவு செய்து விட்டு, 23-ஆம் நாள் முதல் மூன்றாவது கட்டத்தையும் - 27, 28, 29 ஆகிய நாட்களில் சென்னை நகரில் நான்காவது கட்டச் சுற்றுப் பயண நிகழ்ச்சிகளையும் நிறைவு செய்திட இருக்கிறேன்.

சென்ற இடமெல்லாம் நமது முற்போக்குக் கூட்டணியின் செயல் வீரர்கள் கட்டுப்பாடாகவும், எழுச்சியுடனும் பணியாற்றுகிறார்கள். நமது அணிதான் பெரும்பாலான இடங்களைப் பெற்று மகத்தான வெற்றிச் செய்தியை அறிவிக்கும் என்பது உறுதிப்படுத்தப்பட்ட உண்மையாகி விட்டது.

ஆர்வம் பொங்கிடக் காண்கிறேன் - அன்பு ததும்பிடக் காண்கிறேன் - பாசமும் பற்றும் பொலிந்திடக் காண்கிறேன் - இரண்டரை ஆண்டுக்கால இருட்டாட்சியைத் தொலைப்பதற்கு அரிமாக்களென ஆர்த்தெழுந்துக் கிளம்பியுள்ள அணிவகுப்பினைக் காண்கிறேன்!

குளிர் பொழியும் வெள்ளி நிலவுக்கும் சிறு களங்கமுண்டல்லவா?

அதனையும் சில தொகுதிகளில் என்னால் காண முடிந்தது.

கரைந்து போய்விடக் கூடிய அளவுக்கு சிறு சிறு கசப்பு உணர்ச்சிகள்! அநேகமாக அந்த உணர்ச்சிகள் மறைந்து போய் விடுமென்றும், கட்சிக்காகக் கட்டுப்பாடு குலையாமல் காரியங்கள் ஆற்றப்படும் என்றும் நம்புகிறேன்.

ஓய்வு என்ற பெயரில் கிடைத்த ஒரு சில மணித் துளிகளை அந்த ஒற்றுமை முகிழ்ந்திட நான் பயன்படுத்திக்கொள்ளத் தவறவில்லை.

அதில் என் முயற்சிகளும், வேண்டுகோளும் தோல்வியுறாதவாறு முற்போக்குக் கூட்டணியினர் நமது குறிக்கோளின் வெற்றிக்குப் பாடுபடுவார்கள் என்று நம்புகிறேன்! பாடுபட வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

நமது கண் போன்ற தொண்டர்கள் ஆங்காங்கு ஆற்றிடும் அரும்பணி என்னைக் கவர்ந்திடுகின்றது!

எங்கு நோக்கினும் உதயசூரியன்!
கைச் சின்னம்!
முஸ்லிம் லீக்கின் தராசுச் சின்னம்!

ஒரு சில இடங்களில் சுவர்கள் காலியாக விடப்பட்டிருப் பதையும் நான் பார்க்காமலில்லை!

என் செய்வது! கட்சிகளின் தொண்டர்கள் சிலருக்கு - சுவரொட்டியும் அச்சடித்து அனுப்பி - தலைமை நிலையத்திலிருந்தே பசையும் காய்ச்சி வாளிகளில் அனுப்ப வேண்டியிருக்கிறது! எல்லோரும் அப்படியல்ல, ஒரு சிலர்! அதுவும் மிகச் சிலர்! அந்த மிகச் சிலர் கூட இந்தத் தேர்தலில் மெத்தனமாக இருந்திடக்கூடாதல்லவா?

அவர்களையெல்லாம் ஊக்கப்படுத்தி - உசுப்பிவிட்டு - அவர்தம் நல்லுழைப்பை நாடிப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று போட்டியிடும் முன்னணி வேட்பாளர்கள் அனைவரையும் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

ஓரிரு தொகுதிகளின் வேட்பாளர்களே அந்த நிலையில் தேர்தல் பணிகளைச் செய்திடக்கூடும்!

வெற்றி அவர்களுக்காக அல்ல! தமிழகத்தைப் பிடித்து ஆட்டிய பீடைகள் பின்னங்கால் பிடரியில் பட ஓடிடச் செய்து - தமிழர்களின் எதிர்காலத்தை ஒளிமயமாக ஆக்குவதற்காக! அதனால் என் இனிய உடன்பிறப்பே! நீயே தேர்தலில் வேட்பாளர் என்று கருதிக் கொள்!

வண்ணத் தட்டிகள்தான் எழுதி வைக்க வேண்டுமென்று காத்திராதே!

உன் எண்ணத்தை வெளிப்படுத்த - நம் சின்னத்தை விளம்பரப்படுத்த எடுத்திடுக உன் கைகளில் கரித்துண்டுகளை! எழுதிடுவீர் எங்கணும் நம் தேர்தல் சின்னங்களை!

நோக்குமிடமெல்லாம் நீக்கமற -
நமது உதயசூரியன்!
நமது கைச்சின்னம்!
நமது தராசுச் சின்னம்!
- ஒளிவிட வேண்டும்!
ஓய்வென்பது ஜூன் முதல் தேதிக்குப் பிறகுதான்!

எங்கே கையில் எடுத்துக் கொண்டாயா நான் குறிப்பிட்ட தூரிகையை!

தமிழகத்தின் நித்திரையைக் கலைக்கும் என் எழுஞாயிறே! தேர்தல் சின்னச் சித்திரம் தீட்டுக!

அங்கிங்கெனாதபடி எங்கணும்! எங்கணும்!!
எங்கே தொடங்கிடுக உன் பணியை!
இடையில் சில நாட்களேதான்!
வாக்குக் கேட்டிட மறவாதே!
நமது அறநெறி வழிமுறைகளை விட்டு விலகாதே!
ஆக்கப் பணிகள்! ஆக்கப் பணிகள்!! ஆம், உடனே!
உடனே!!
விழி!
எழு!
தமிழகத்தின் விடிவுகாலத்தை எழுது!

அன்புள்ள,

மு. க.

(22-05-1980)

736. யார் மீது குறை? எவர் மீது குற்றம்?

உடன்பிறப்பே,

ஒருவாரம் ஓய்வெடுத்துக் கொள்ளச் சென்றிருந்தேன். அதனால்தான் உன்னைக் கடித வாயிலாகத் தொடர்பு கொள்ள முடியவில்லை. அதற்குள் என்னென்னவோ கதைகள் கட்டி விடப்பட்டுள்ளன. கருணாநிதிக்கு உடல் நிலை சரியில்லை. மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். நெஞ்சுவலியின் காரணமாக பெங்களூர் மருத்துவமனையில் சிகிச்சை பெறுகிறார். இப்படியெல்லாம் அவர்களது ஆசையைக் காட்டிக் கொண்டு ஏடுகளில் செய்திகளும் வெளியிட்டுள்ளார்கள்! பாவம்! அவர்களது விருப்பம் அது! வாழ்க அவர்களது நல்ல உள்ளம்!

புதிய அமைச்சரவையின் பதவி ஏற்பு விழாவின் போது கூட என் சிலையைச் சுற்றி நின்று எம்.ஜி.ஆர். கட்சியின் அருமை நண்பர்கள் ஒப்பாரி வைத்துப் புலம்பி அழுதனர் என்று மாலைமுரசு ஏட்டில் செய்தி கண்டேன். இப்படித்தான் முன்பொரு முறை இன்றைய ஆஸ்தான கவியின் தலைமையில் நூற்றுக்கணக்கானோர் தலையில் கறுப்பு முக்காடு போட்டுக் கொண்டு அண்ணாவின் சிலையைச் சுற்றி சுற்றி வந்து மௌன ஊர்வலம் நடத்தினர்.

அதுபற்றி அண்ணா என்ன சொன்னார் தெரியுமா? நான் மறைந்த பிறகு எனக்காக என் நண்பர்கள் எப்படி துக்கம் தெரிவிப்பார்கள் என்பதை நான் உயிரோடு இருக்கும் போதே பார்த்து மகிழ்ச்சியடைந்தேன் என்று தனக்கேயுரிய பெருந்தன்மையோடு விளக்கமளித்தார்.

வெற்றி வழங்கியுள்ள விறுவிறுப்பின் காரணமாக செய்வது என்னவென்றே தெரியாமல் ஆர்ப்பாட்டங்களையும், அமளிகளையும் வழி நடைச் சூறையாடல்களையும் நடத்துகின்ற அவர்களை வேடிக்கை பார்ப்பதைத் தவிர - அல்லது அவர்களுக்குத் துணை நிற்பதைத் தவிர - காவல்துறையினருக்கு வேறு வழியில்லாமல் போய்விட்டது! அவர்களாகவே ஆடி

ஓய்ந்து விடுவார்கள் என்ற எதிர்பார்ப்புடன் அமைதி காத்திடுவது தான் நமது கழகக் கண்மணிகளின் கடமையாக இருந்திடல் வேண்டும்.

நீ எனக்கு எழுதுகிற ஆறுதல் கடிதங்கள் வந்து குவிந்த வண்ணமுள்ளன. அவைகள் எனக்கு என் பணியில் மேலும் ஊக்கமூட்டுகின்றன என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால் ஒன்று! என் அருமை உடன்பிறப்பே! நான் மிகுந்த கவலையுற்றிருப்பதாக நீ கருதிக் கொண்டு மடல்களை அனுப்புகிறாயே! அதுதான் எனக்கு வியப்பாக இருக்கிறது.

நீ இருக்கும்போது - உன் நெஞ்சில் நான் இருக்கும்போது - நான் எதற்காகக் கவலைப்பட வேண்டுமென்று உனக்குப் பலமுறை கூறியிருக்கிறேன் நான்!

உன் கடிதங்கள் சிலவற்றில் அனல் பறந்திடுவதையும் காண முடிகிறது! நமது தோல்விக்கு யார் யார் மீதோ குற்றம் சுமத்திடவும் நீ துடிக்கிறாய்! கட்டுப்பாடாக அவர்கள் நமக்கு வாக்களிக்காமலும் - விஷமப்பிரச்சாரம் செய்தும் - கலக மூட்டியும் - விளைய இருந்த வெற்றியைக் குலைத்து விட்டார்கள் என்ற உனது காரணம், உச்சியில் ஏறி நின்று கொக்கரிக்கிறது! உண்மையாகக் கூட இருக்கலாம்! இருக்கலாமென்ன? உண்மைதான்!

கிளிகளுக்குப் பூனைகள் காவலாக இருக்குமென்று கருதுவதும் - புள்ளி மான்கள் நடத்தும் விழாவில் நரிகள் எல்லாம் கூடிக் கும்மி, கோலாட்டம் அடிக்கும் என்று எதிர்பார்ப்பதும் நமது குறையே தவிர, பூனைகளின் குறையோ - நரிகளின் குறையோ அல்லவே!

தேர்தல் களத்தில் உன் பணியின் பங்கு என்ன? நீ சுறுசுறுப்புடன் சுழன்று தொண்டாற்றினாய் என்றால் உன்னைப் போல மற்ற உடன் பிறப்புகளும் செய்தார்களா? அல்லது நீயே மெத்தனமாக இருந்து விட்டாய் என்றால் அதற்கு நீ, யாரைக் கோபித்துக் கொண்டு என்ன பயன்?

பாராளுமன்றத் தேர்தலில் கிடைத்த பெருமிதமான வெற்றியினால் உனக்கு மதமதப்பு ஏற்பட்டு விட்டது என்று உன் மனசாட்சி கூறுமேயானால், அதற்கு நீ தான் பதில் சொல்லிக் கொள்ள வேண்டும்.

அரசியலில் வெற்றி தோல்வி சகஜம்! அரசியலை விட மிக முக்கியமாக நாம் ஆரம்ப காலத்தில் மேற்கொண்ட தமிழ்ச் சமுதாயப்பணி - தொய்வின்றித் தோல்வியின்றி நடைபெற்றாக வேண்டும்.

தேர்தல் முடிவுகளால் கூட அல்ல, அந்த முடிவுகளுக்குப் பிறகு ஒரு பகுதியினர் - அவர்களில் வீடணர்களும் அடங்கியிருக்கலாம் - நடத்தி வருகிற நாலாந்தர விமர்சனங்கள், நாலாந்தர மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாக ஒளிவிடும் நமது இயக்கத்தை வேறு திசைக்குத் திருப்பி விடத்தான் செய்கின்றன!

எனினும் நாம் திசைமாறாமல், தெளிவு பெற வேண்டியவர்களுக்குத் தெளிவையூட்டி - அவர்தம் இதய ஒளியைத் தூண்டி விடும் தொண்டினைத் தொடர்வோம்!

தேர்தல் தோல்விகள், நமது இலட்சியப் பயணத்தில் பாதங்களில் குத்திடும் நெருஞ்சி முட்கள்!

அந்த முட்களை எடுத்துத் தொலைவில் வீசிவிட்டு - நமது மொழிகாக்க - இனம் காக்க - சமத்துவ - சமதர்ம சமுதாயம் அமைக்க - குள்ளநரிக் கூட்டத்தின் கொட்டமடக்கி, நமது தமிழ்க் குலப் பெருமையைக் குவலயத்தில் நிலைநாட்ட நடந்திடுக உடன்பிறப்பே! நடந்திடுக!

அன்புள்ள,

மு. க.

(17-06-1980)

737. சில நேரங்களில் சில மனிதர்கள்!

உடன்பிறப்பே,

சில நேரங்களில் சில மனிதர்கள் நண்பர் ஜெயகாந்தன் அவர்களின் நூலின் தலைப்பு - எனக்கு மிகவும் பிடித்த தலைப்பு - கதைக்குள்ளே நான் நுழைந்து ஆராய்ச்சி நடத்த விரும்பவில்லை. என்னைக் கவர்ந்த தலைப்புகளில் ஒன்று என்பதால் அதன் சிறப்பைக் குறிப்பிட்டேன். என்னுடைய வயது ஐம்பத்தி ஏழு! பதினான்காவது வயதிலேயே இந்தித் திணிப்பை எதிர்த்து முத்தமிழ்க்கொடியேந்தி ஊர்வலம் சென்றிருக்கிறேன். உயர்நிலைப் பள்ளியில் கையெழுத்து ஏடு நடத்தித் தமிழ் இயக்கத்தை வீறுகொள்ளச் செய்ய என்னாலியன்ற பணியினைத் தொடர்ந்திருக்கிறேன். ஏறத்தாழ நாற்பதாண்டுகளுக்கு மேற்பட்ட என்னுடைய பொது வாழ்வில் எத்தனையோ மனிதர்கள்! அவர்களில் சில நேரங்களில் சில மனிதர்களைப் பற்றி மட்டும் என்னால் சிந்தித்துப் பார்க்காமல் இருக்க முடியவில்லை. அடடா! அவர்கள் கொள்கை வாதிகளாகக் கோபுரம் ஏறி நின்று முழங்கிய முழக்கமென்ன? பின்னர் குப்புற வீழ்ந்து, யார் யாருக்கோ கொடி பிடித்தும் - குடை பிடித்தும் நிற்கிற நிலையென்ன?

பொது வாழ்வில் ஈடுபடுபவர்களிடையே கருத்து மாறுபாடுகள் எழுவதுண்டு! பிரிந்து நின்று பணியாற்றும் நிலையும் ஏற்படுவதுண்டு! அதற்காக நடுங்காத நாக்கினராகவும் நரகல் நடை எழுத்தாளர்களாகவும் அவர்கள் தங்களை மாற்றிக் கொள்ளும் போதுதான் - இப்படியும் சில மனிதர்களா? பாவம்; சில நேரங்களில் சில மனிதர்கள்! என்று எண்ணிப் பெருமூச்சு விட வேண்டியிருக்கிறது.

மயிலைக் கற்பகாம்பாள் திருமண மண்டபத்திலே எனக்கோர் பாராட்டு விழா! நான் விரும்பாதது! விழா நடத்தியவரின் நோக்கம் புரிந்த காரணத்தால் வேண்டாமென்று மறுத்தது! அதாவது நான் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது! விழா நடத்தத் துடித்தவரோ

விடவில்லை. ஆங்கிலம் பயின்று பாண்டித்தியம் பெற்ற அறிஞர் பெருமக்களைக் கொண்டு நடத்தப் போகிற விழாவாக்கும்! அதனால், அதில் கலந்துகொண்டு நன்றியுரையாற்ற வந்தே தீர வேண்டுமென்று விழா அமைப்பாளர் தவியாய்த் தவிக்கிறார்! வேறு வழியில்லை! இறுதியாக இணங்குகிறேன் - அமைப்பாளர் வரவேற்றுப் பேசுகிறார்! என்னைக் கடவுளே என்கிறார் - தெய்வமே என்கிறார் - காலமளித்த கருணைத் தலைவன் என்கிறார் - எனக்கு அவர் உள்நோக்கம் புரிவதால் புன்னகை புரிகிறேன்! விழா முடிகிறது - இரண்டொரு நாட்களுக்கெல்லாம் அட்வகேட் ஜெனரல் பதவிக்கு என்னிடம் விண்ணப்பம் தருகிறார். அது முடியாவிட்டால் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பதவியாவது வேண்டுமென்கிறார். அந்த விண்ணப்பக் கடிதங்கள் என்னிடமே இன்னும் இருக்கின்றன. அந்த விண்ணப்பக் கடிதங்களைப் பார்த்து விட்டு அன்றைய கல்வி அமைச்சரும் - சட்ட அமைச்சரும் விலா நோகச் சிரிக்கிறார்கள்! குருவி தலையில் பனங்காயா? என்று கேட்கிறார்கள். அவரோ விடவில்லை. வேறு வழியின்றி மாதம் மூவாயிர ரூபாய் சம்பாதிக்கக் கூடிய சட்ட ஆலோசகர் பதவியொன்று அவருக்குத் தரப்படுகிறது. அதிலே முழுத் திருப்தியில்லா விட்டாலும் போற்றி! போற்றி! புண்ணியனே போற்றி! என்ற அர்ச்சனை தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்தது. பின்னர் மிசா வந்தது! உடனே அவருக்கு என் தலைமை கசந்துவிட்டது! அதுவரையில் இனித்துக் கொண்டிருந்த நான் - மிசா வந்ததும் புளித்துப் போய் விட்டேன்! எனக்கு நடத்தப்பட்ட அதே புகழஞ்சலி, அவர் ஏற்றுக்கொண்ட புதிய தலைமைக்கு நடைபெறத் தொடங்கியது! போற்றுதலுக்குரியவனாக அவருக்கு இருந்த நான் தூற்றுதலுக்குரியவனாக ஆகிவிட்டேன். புதிய தலைமையைப் போற்றினால்தான் ஏதாவது பெற முடியும் என்ற நிலைமை! அதற்கான வேளைவரும்போது வெறுமனே இருக்கமுடியுமா? அங்கே போற்றுதல்! இங்கே தூற்றுதல்!

சில நேரங்களில் சில மனிதர்களில் இவர் ஒருவர்! இந்த மனிதர்கள் விஷயத்தில் அந்தத் தலைமை எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்பதற்காகவே சில நேரங்களில் சில மனிதர்களைப் பற்றிய சில குறிப்புகளைத் தந்தேன்!

இன்னொருவர்! என் தாயின் மானத்தைக் காப்பாற்றிய தங்கத் தலைவன் இவனன்றோ! என்று பல்லாயிரவர் குழுமியிருந்த

கூட்டத்தில் என்னைப் பாராட்டியவர். இன்று என் மனைவி கண்ணகியாக இல்லையென்று எம்.ஜி.ஆர். அவர்களின் குடும்ப ஏட்டில் கட்டுரை தீட்டுகிறார். கண்ணகி யார்? பாஞ்சாலி யார்? என்று அரசியலில் ஆராய்ச்சி நடத்துவதுதான் அவசரமான பணியென்றால் - நாடு எங்கே போய் நிற்கும்? பதவியெனும் தேங்காய்த் துண்டுகளைப் பொறுக்கித் தின்பதற்காக எப்படியெல்லாம், நான் அந்தச் சில நேரங்களில் சில மனிதர்களுக்குப் பயன்படுகிறேன் பார்த்தாயா?

மற்றொருவர் - காமராஜரை, அண்ணாவை, என்னை, எம்.ஜி.ஆரை - உச்சியில் வைத்துப் புகழ்ந்துமிருக்கிறார். சாக்கடைச் சகதியை வாரி எங்கள் மீது வீசியுமிருக்கிறார். காமராஜர் கக்கூசில் விழுந்து கிடக்கும் அல்வாத் துண்டு இப்படி எழுதியது அவரது பேனா! எம்.ஜி.ஆர். புரிந்த லீலாவிநோதங்கள் - இப்படி வர்ணித்தது அவர் எழுதிய நூல்! இன்று எம்.ஜி.ஆர். ஆட்சியில் இருக்கிறார்! அவர் அடிவருடுவதில் அந்தச் சில நேரங்களில் சில மனிதர் போட்டி போட்டுக் கொண்டு ஓடுகிறார். இப்படியும் மனிதர்களா? இவர்களும் வெட்கமில்லாமல் வேதாந்தங்கள் எழுதுவதா? சிரிப்புத்தான் வருகிறது!

இதோ ஒரு தம்பி! அண்மையில் சட்டமன்றத் தேர்தலில் நின்று தோற்றுவிட்ட தம்பி! என் மீதும், கழகத்தின் மீதும் சுடுகணைகளைப் பாய விட்டுக்கொண்டேயிருக்கிறது.

அந்த தம்பி பெங்களூரில் இருந்து 14-3-80 தேதியிட்டு எனக்கு ஒரு கடிதம் எழுதுகிறது. இதோ அந்தக் கடிதத்தை அப்படியே தருகிறேன். படித்துப் பார்.

அன்புள்ளம் கொண்ட தலைவர் அவர்களுக்கு, வணக்கம்...

எப்போது உங்களை விட்டுச் சென்றிருக்கக்கூடாதோ அப்போது சென்றுவிட்டதற்காக மெய்யாகவே வருந்துகிறேன். நிறைமாத கர்ப்பிணியாக இருந்த எனது மனைவியின் துயரங்களே என்னை அச்சத்திற்கு உள்ளாக்கிவிட்டன. பிறகு உங்களிடம் எந்த முகத்தை வைத்துக்கொண்டு வருவது என்கிற வெட்கமே என்னை இவ்வளவு நாள் தடுத்து நிறுத்திவிட்டது. காலக்காற்று என்னை எங்கோ கொண்டு சென்று ஒதுக்கிவிட்ட பிறகும் உங்களைப் பழித்தோ, தூற்றியோ நான் எழுதியதில்லை; பேசியதில்லை. மாறாக, THE CURRENT போன்ற இதழ்களில் உங்களோடு

இல்லாத போதும் உங்களை PHOENIX பறவையென்று பாராட்டித்தான் எழுதியிருந்தேன்.

அரண்மனையிலிருந்த இராமனையே ஆரண்யத்திற்குக் கொண்டு வந்தது விதி. அவதாரத்திற்கே அந்த நிலைமை என்றால் அற்பமான எனக்கு...?

திராவிடத் தோட்டத்திலே பூத்துச் சிரித்த நான், சதுப்பு நிலத்தில் விழுந்த பருத்தி விதையாக உலர்ந்து வாடிக் கொண்டிருக்கிறேன். உங்களால் மனங்குளிரப் பாராட்டப்பட்ட ஒரு திறமையான இளைஞனை, உங்கள் இரக்கமுள்ள மனதால் - பாழடைந்த மண்டபமாக - பசுமையில்லாத தோட்டமாக நினைத்துப் பார்க்கக்கூடாது. மேடையில் ஆடியே ஒரு வருடமாகிவிட்டது. பதவிப் பசிக்காக நான் பழுத்த மரம் நோக்கிப் பாய்ந்திருந்தால் அ.தி.மு. க.வுக்கு அல்லவா சென்றிருக்க வேண்டும்? இன்று வரை அந்தத் தவறினை நான் செய்தவனில்லை. அவர்களே வருந்தி அழைத்தபோதும் நான் செல்லவில்லை. மாறாக எம்.ஜி.ஆரை விமர்சித்ததற்காக நமது கழகப் பேச்சாளர்கள் மீதும் வராத 307-வது பிரிவு என் மீதுதானே பாய்ச்சப்பட்டது? நான் சென்ற இடத்திலும் உங்களைத்தான் பாராட்டிப் பேசினேன். இது உண்மை. ஆகவேதான் அதற்கு வார்த்தை அணிகலன்கள் பூட்டவில்லை. எதையும் எதிர்பார்த்து அங்கே வரவில்லை. என் பாவங்களுக்குப் பிராயச்சித்தமாகவே வருகிறேன். வீட்டிலிருந்த கண்ணகிக்கு இடம் கொடுக்கிற சிலம்பில், வீதியில் ஆடிய மாதவிக்கும் இடம் உண்டல்லவா? அதையாவது நினைத்து என்னை மன்னித்து அரவணைத்துக் கொள்ளுங்கள். அண்ணன் மாறன் அவர்களைச் சந்தித்தேன் ஒரு வருடத்துக்கு முன்னர்! அப்போதும் மனதில் தெம்பில்லை. உங்களிடத்தில் ஒருமுறை தொலைபேசியில் பேசினேன்; அப்போதும் மனதில் தேறுதல் இல்லை. என்னை விட வலிமையான வசீகரமான சொற்களால் உங்களைப் படம் பிடித்தவர்கள் என் வயதில் உண்டா என்பதைக் காலம் சொல்லட்டும். அடித்தாலும் பட்டுக் கொள்கிறேன். என்னைப் பட்டுப் போகும்படி மட்டும் விட்டு விடாதீர்கள்.

இப்படி அந்தத் தம்பி எழுதிய முழுக் கடிதத்தையும் அப்படியே குறிப்பிட்டு விட்டேன். எந்தத் தம்பி எழுதிய கடிதமென்று நான் குறிப்பிடவில்லை. நீயே யூகித்துப் பார்த்து எழுத்து நடையிலிருந்து தெரிந்து கொள்வாய் என்று நம்புகிறேன். இந்த ஆண்டு மார்ச்சில்

இப்படியொரு மனமுருக்கும் கடிதம்! ஏப்ரலில் கழகத்தை எதிர்த்து வேட்பாளராக இரட்டை இலை சின்னத்தில் சென்னையில் நிற்கும் படலம்! தேர்தல் நேரத்து வசைபுராணங்கள்! ஏசல் அம்புகள்! கழகத்தைக் காலில் போட்டு மிதிக்கிறேன் பார் என்ற கர்ச்சனைகள்! கருணாநிதிக்கு வழக்கம்போல் அர்ச்சனைகள் - இத்யாதி! இத்யாதி!!

இப்படிச் சில நேரங்களில் சில மனிதர்கள் என்ற பட்டியலில் நானும் எத்தனை பேரை என் வாழ்க்கையில் சந்தித்திருக்கிறேன் தெரியுமா?

அவர்கள் என்னைத் தாக்குகிறார்கள்.தரக்குறைவாகத் தாக்குகிறார்கள். தாக்கிக் கொண்டேயிருக்கிறார்கள். அதன் காரணமாக ஏதாவது தங்களுக்கு பதவி - பவிசு கிடைத்திடக்கூடும், அவர்கள் சென்ற இடத்தில் எனக் கருதிக்கொண்டு! குலம் - கோத்திரம் - குடும்பம் - இவை குறித்தெல்லாம் எழுதி எழுதித் தள்ளுகிறார்கள். அவர்களுக்கு அதனால் பலன் கிட்டுமேயானால், ஆகா! நமது பழைய நண்பர்களுக்கு இப்படியும் நாம் பயன்பட்டிருக்கிறோமே! என்ற மகிழ்ச்சிதான் எனக்கு ஏற்படும். அவர்களும் மனதுக்குள்ளாகவாவது என்னை வாழ்த்தக் கூடுமல்லவா?

ஆனால் ஒன்று! இந்தச் சில நேரங்களில் சில மனிதர்கள் எல்லாக் கட்சிகளிலும் - எல்லா அமைப்புகளிலும் - உண்டு!

அவர்களைத் திருத்திட முடியாது! - அந்தக் கட்சிகள் அல்லது அமைப்புகளின் தலைமைப்பொறுப்பில் இருப்பவர்கள்தான் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

இந்த அற்புதப் பிறவிகளின் பட்டியல் பெரிது! விளக்கிட வேண்டிய நேரத்தில் - விளக்கிட வேண்டிய இடத்தில் - விளக்கிட வேண்டிய முறையில் - விளக்கிடும் வாய்ப்பு வரத்தான் போகிறது!

உடன்பிறப்பே! அப்போது உனக்கு இன்னும் பல புதிய தகவல்கள் அவர்களைப் பற்றிக் கிடைக்கும்.

அன்புள்ள,

மு. க.

(18-06-1980)

738. குள்ளநரித்தனம் புரிகிறதா?

உடன்பிறப்பே,

யார் மீது குறை? எவர் மீது குற்றம்? எனக் குறிப்பிட்டு நான் உனக்கு எழுதிய கடிதத்தை சில வட்டாரத்து ஏடுகள், தங்களுக்கேயுரிய குள்ளநரித்தனம் செய்து திசை மாற்றி வெளியிட்டிருக்கின்றன. இத்தகைய இழிநிலைப் போக்கு கொண்ட கூட்டத்தைத்தான் குள்ளநரிக் கூட்டம் என்று நான் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தேன். இதோ நாங்கள்தான் அந்தக் கூட்டத்தினர் என்று தங்களை அடையாளங்காட்டிக் கொண்டு விட்டனர், நீ தேடிக் கண்டுபிடிக்க வேண்டிய சிரமம் ஏதுவுமின்றி!

தாக்கியே எழுதும் அந்தக் கூட்டம்! தரக்குறைவாக எழுதும் அந்தக் கூட்டம்! தணலை அள்ளியும் வீசும்! அதிலே ஒருவகை ஏடுகள், தழுவுவது போல் தழுவி நமது முதுகிலே கட்டாரி கொண்டு குத்தவும் வித்தை பயின்றவை!

ஊழல் என்ற ஒரு வார்த்தை இந்தக் கூட்டத்திடம் அகப்பட்டுக் கொண்டு விழிக்கிறது! அந்த வார்த்தையை வைத்தே தங்களுக்கு வேண்டாதவர்களைத் தரை மட்டமாக்கிடவும் - தங்களுக்குத் தாசானுதாசர்களாய் இருப்பவர்களைத் தலையில் தூக்கி வைத்துக்கொண்டு ஆடிக் காரியம் சாதித்திடவும் அந்தக் கூட்டம் முனைப்போடு செயல்படுகிறது. அந்தக் கூட்டம் பார்த்து ஒருவரை உத்தமன் என்றால் அவர் உத்தமன்! அதாவது வசிஷ்டர் வாயினால் பிர்ம ரிஷி பட்டம் பெறுவது போல! ஆனால் உடன்பிறப்பே! இந்த வசிஷ்டர்களின் யோக்யதாம்சங்கள் என்ன? இவர்களுக்கு மற்றவர்களைப் பற்றி விமர்சிக்கும் தகுதி எள்ளின் முனையளவாவது உண்டா? முந்திரா ஊழல் - அனைத்து நாடுகளிலும் ஒலிபரப்பப்பட்ட போது ஸ்ரீமன் டி.டி.கே.யைப் பற்றி - அவரது திறமைகளைப் பற்றி - அறிவு தீட்சண்யத்தைப் பற்றி - அளந்து அளந்து கொட்டிய கூட்டமன்றோ அது!

பெருந்தலைவர் காமராஜர் அவர்களைப் பற்றி ராஜாஜி அவர்கள், ஊழல் குற்றம் சுமத்தியபோது - அதைப் பக்கம் பக்கமாகப் போட்டு பரவசமடைந்த கூட்டம் அது! ஆனால் ராஜாஜிக்குப் பதிலடி கொடுக்கும் பாணியில் காமராஜர், ராஜாஜியைப் பற்றி எனக்குத் தெரியாதா? இவரென்ன பரசுராமர் அவதாரமா? என்று உறுமுங்குரலில் கேட்டபோது, அதை இருட்டடிப்புச் செய்த கூட்டம்!

அந்தக் கூட்டம்தான் இன்றைக்கு உத்தமத்தனம் பற்றிப் பேசிக்கொண்டும், எழுதிக்கொண்டும், விஷமத்தனங்களின் மூலம் ஒரு வலுவான இயக்கத்தைக் கீழே சாய்த்துப் புதைத்து விடலாமென்று மனப்பால் குடித்துக் கொண்டிருக்கிறது!

நமது கழகத்தின் தலைமை நிர்வாகக் குழு நடந்தால், அதிலே கலவரம் என்று செய்தி போடுவது! செயற்குழு நடந்தால், அங்கே அமளி என்று கதை கட்டுவது! பொதுக்குழு நடந்தால், உள்ளே பெரும் போராட்டம் என்று பரபரப்புத் தலைப்புப் போடுவது!

நேற்று முன்தினம் நடைபெற்ற செயற்குழுவைப் பற்றி எத்தனை மாறுபட்ட செய்திகள்! இவ்வளவு தரக்குறைவான அரசியல்வாதிகள், கையில் பேனா பிடிப்பானேன்? பொய்களைப் பிரசவிப்பதும் - வதந்திகளை வெளிப்படுத்தும் வடிகால்களாகத் தங்கள் ஏடுகளை ஆக்கிக் கொள்வதும் - குள்ளநரிக் கூட்டத்தின் செயல் என்று கூறாமல், சிங்கத்தின் வீறுநடையென்று எப்படிக் கூறமுடியும்?

கடையில் தொங்கும் சுவரொட்டிகளில் பரபரப்பான - பதட்டமடையத்தக்க செய்திகளைக் கொட்டை எழுத்துகளில் விளம்பரப்படுத்துகிறார்கள்!

கருணாநிதி விலகல்! அல்லது கருணாநிதிக்குக் கடுமையான நெஞ்சு வலி! அல்லது கருணாநிதி அன்பழகன் தகராறு! இப்படித் தொங்க விடப்படும் பத்திரிகை விளம்பரங்களைப் படித்து விட்டு, நீ உடனே ஓடிச் சென்று ஒரு பத்திரிகையை வாங்குவாய் என்பது அவர்களது எதிர்பார்ப்பு!

நீயும் - பல நேரங்களில் அதில் ஏமாந்து விடுகிறாய்! எனவே அந்த ஏடுகளின் குள்ளநரித்தனம் கொடி கட்டிப் பறக்கிறது. அந்தக் கொடிக் கயிறு அறுந்துவிழ - அந்தக் கூட்டத்தின் கொட்டம் அடங்க - நான் அடிக்கடி கூறுவதை நீ கடைப்பிடித்தாலே போதும்!

அந்த இழிதகை ஏடுகளை ஏறெடுத்தும் பார்ப்ப தில்லையென்று உறுதியெடுத்துக் கொள்!

அரசியல் அநாகரிக ஏடுகளுக்கு எதிராக நீ நடத்தும் அறப்போராட்டம் அதுதான்!

அவைகளை வாங்கிப் படித்து விட்டு, உன் மூளையைக் குழப்பிக் கொள்ளுகிற செயலுக்கு நீயே காரணமாக இருக்க வேண்டுமா?

அன்புள்ள,

மு. க.

(19-06-1980)

739. ஆயிரங்காலத்துப் பயிர் அதனை அழியாமல் காப்போம்!

உடன்பிறப்பே,

திராவிடன் - திராவிடம் - திராவிட மொழிகள் - திராவிடக் கலாச்சாரம் - இத்தகைய சொற்கள் நூல் நிலையத்து வரலாற்று ஏடுகளிலே மட்டும் இடம் பெற்று - படித்த மேதைகள் மட்டத்திலே மட்டும் விவாதிக்கப்பட்டுக் கொண்டிருந்த நிலையை மாற்றி அமைத்து அறுபது ஆண்டுகளுக்கு முன்பு, திராவிட உணர்வினைக் காக்கவும் - திராவிட மக்களின் சமுதாய முன்னேற்றம் - பொருளாதார முன்னேற்றம் - அரசியல் துறை முன்னேற்றம் - ஆகியவற்றை உருவாக்கவும் ஒரு இயக்கத்தைத் திராவிடப் பெரியவர்கள் சிலர் தொடங்கினர்.

சரித்திரத்துடன் இருந்து அந்தச் சொல் அழிந்து போகட்டுமே என்று எண்ணி, அதற்கானத் திட்டத்தை தீட்டிக் கொண்டிருந்தவர்கள், திராவிட இயக்கம் தோன்றியது கண்டு திகைத்துப் போயினர். பகைத்து வெறுத்தனர்.

எந்த ஒரு வகுப்பினரையும் எதிர்த்து ஒழிக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் அல்ல, எந்த ஒரு வகுப்பினராலும் பாட்டாளி வர்க்கமான பெரும்பான்மை திராவிட இன மக்கள் ஒழிக்கப்பட்டு விடக்கூடாது என்பதுதான் அந்த இயக்கத்தின் குறிக்கோள்!

அந்த இயக்கத்தின் பல்வேறு கட்ட வளர்ச்சியின் ஒரு வடிவந்தான் நீதிக்கட்சி!

ஹியூம் என்ற வெள்ளையரால் தொடங்கப்பட்ட காங்கிரஸ், முதற்கட்டத்திலே இந்தியர்களுக்கு உத்தியோகங்களில் உரிய பங்கு வேண்டுமென்ற கோரிக்கைக் கொடியைத்தான் உயர்த்தியதே தவிர, எடுத்த எடுப்பிலேயே விடுதலை முரசத்தைக் கொட்டிடவில்லை!

இந்தியர்கள் என்ற பெயரால் குறிப்பிட்ட ஒரு சாராரே உத்தியோகங்களை ஏகபோக உரிமையாக்கிக் கொண்டபோதுதான், திராவிடர்கள் தங்களது எதிர்காலத்தைக் கணிப்பதற்கு இயக்கம் காண வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

இந்திய நாட்டு விடுதலை போராட்டத்திலும், திராவிடர் இயக்கத்தின் தலைவர்களுக்கும், இயக்கத்திற்கும் பெரும்பங்கு இருந்தே வந்தது.

சுதந்திரத்தின் பயனை அனுபவிக்கப் போகிறவர்கள் யார்? என்ற தொலைநோக்குப் பார்வையும் - அதன் தொடர்பாக எழுந்த ஏக்கம் தோய்ந்த கேள்வியும் - திராவிடர் இயக்கத்தின் பாதையை சிறிது வேறு பக்கமாகத் திருப்பியது!

தென்னிந்தியர்களின் நல உரிமை இயக்கமான நீதிக்கட்சி, தென்னகத்தில் - பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, நடுத்தர மக்களுக்கான உரிமைகளைப் பெற்றுத் தரவும், நலன்களைக் காப்பாற்றவும், ஆட்சிப் பொறுப்பேற்றிடும் வாய்ப்பினைப் பெற்றுத் தொண்டாற்றியதையும் - அந்த மக்களுக்கான சட்டங்களையும், திட்டங்களையும் தீட்டியதையும் யார்தான் மறுத்திட இயலும்?

குப்பைக்கூடையில் சுருட்டி எறியப்பட்ட காகித உருண்டைகளாகக் கருதப்பட்ட நமது இன மக்களைக் கை தூக்கிவிட்டு, அவர்களையும் கல்வியறிவு பெற்றவர்களாக - உத்தியோக வாய்ப்புக்களைப் பெற உரிமை படைத்தவர்களாக ஆக்கிய பெருமை, திராவிடப் பேரியக்கமாம் நீதிக்கட்சிக்கே உண்டு!

அந்தக் கட்சியின் தலைவர்கள் ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்து நடத்திய நிர்வாகச் சிறப்பு, வகுத்த கொள்கைகள் - அமைத்த புதிய சூழ்நிலைகள் அனைத்தும் காலம் காலமாகப் போற்றிப் புகழத்தக்கவையாகும்.

தாழ்த்தப்பட்ட - பின்தங்கிய - நடுத்தர மக்களுக்காகவே பாடுபட்ட அந்தக் கட்சி, அந்த மக்களாலேயே தேர்தல் தோல்விக்கு ஆளானது. தோல்விகள் பலமாக வந்தன. அடுக்கடுக்காக வந்தன. தேர்தலில் நிறுத்தப்பட்ட ஆட்கள்தான் தோற்றார்களே தவிர, அந்தக் கட்சியின் அடிப்படைக் கொள்கை தோற்று விடவில்லை.

நீறுபூத்த நெருப்பாக இருந்த அந்தக் கொள்கை - தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தளபதி அழகிரி, பன்னீர்செல்வம் போன்ற இனப்பாதுகாவலர்களால் கட்டிக் காக்கப்பட்டது.

இடையில் ஏற்பட்ட வரலாற்றுத் திருப்பம்தான் நீதிக்கட்சியைத் திராவிடர் கழகமாக மாற்றிய நிகழ்ச்சி!

அதற்கடுத்த வரலாற்றுத் திருப்புமுனைதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தோற்றம்!

நான் கொள்கை ரீதியாக ஏற்பட்ட வரலாற்று மாற்றங்களை மட்டுமே இங்கே குறிப்பிடுகிறேன். அடிப்படைக் கொள்கைக்கு எந்தவிதமான ஊனமும் இல்லாமல் தி.மு. க. தோன்றியதால்தான் - திராவிடர் கழகமும், தி.மு.கழகமும் இரட்டைக்குழல் துப்பாக்கியென்று அறிஞர் அண்ணா அவர்களால் அறிவிக்க முடிந்தது.

சமுதாயத் துறையில் திராவிடர் கழகப் பணி! அந்தச் சமுதாயப் பணியை அடிப்படையாக வைத்து - அந்தப் பணி வெற்றி பெற அரசியல் ரீதியாகவும் செயலாற்றிட திராவிட முன்னேற்றக் கழகம்!

தனிப்பட்ட விருப்பு வெறுப்புகள் இடம் பெறாத காரணத்தால் - தாய்க்கழகமான திராவிடர் கழகத்தை அழித்துவிட வேண்டுமென்றோ அல்லது ஆட்சி அதிகாரத்தை வைத்துக்கொண்டு பழி வாங்கி விட வேண்டுமென்றோ தி.மு.கழகத் தலைமை என்றைக்கும் எண்ணிடவில்லை.

அதனால்தான் இன்றைக்கு நமது இன மக்களின் நலம் தழுவிய பல்வேறு பிரச்சினைகளில் தி.க.வும், தி.மு.க.வும் ஒன்றுபட்டு நிற்க முடிகிறது!

இதற்கிடையே எத்தனையோ தோல்விகள்! எடுத்து வைத்த அடியெல்லாம் வெற்றிக்கான படிகளாக இருக்கவில்லை! 1957-இல் பதினைந்தே இடங்களைத்தான் பெற முடிந்தது! நாவலரே சேலத்தில் தோற்கடிக்கப்பட்டார்! 1962-இல் ஐம்பது இடங்களைப் பெற்றும்கூட நமது கண்ணனைய அண்ணன் காஞ்சிபுரத்தில் தோற்றிட நேர்ந்தது! 1967-இல் 138 இடங்களைப் பெற்று ஆட்சி அமைத்தோம்! 1971-இல் 184 இடங்களைப் பெற்று ஆட்சி அமைத்தோம்!

1977-இல் தோல்வி! 1980-இல் நாடாளுமன்றத் தேர்தலில் மகத்தான வெற்றி! நம்மவர் பதினாறு பேர் நாடாளுமன்றத்தில் வீற்றிருக்கின்றனர். இப்போது சட்டமன்றத் தேர்தலில் தோற்றிருக்கிறோம். மக்கள் தீர்ப்பைத் தலைவணங்கி ஏற்றுக் கொள்கிறோம் என்று நான் உடனடியாக அறிவித்தது சில மரமண்டைகளுக்கு, அதாவது மண்டியிட்டு அண்டி வாழ்ந்து மடியை நிரப்பிக் கொள்ளும் பிறவிகளுக்குத் தெரியாமல் போயிருக்கலாம்! தேர்தல் தீர்ப்பை ஏற்றுக் கொள்வது வேறு! தேர்தல் தோல்விகளுக்கான காரணங்களை வெளிப்படுத்தி இனி அந்த முறைகேடுகள் ஏற்படாவண்ணம் தடுத்து நிறுத்த முனைவது வேறு! இந்த வேறுபாடு தோட்டத்து வாசலில் தொழுது கிடக்கும் சோற்றாலடித்த பிண்டங்களுக்குப் புரிவது சிரமம்தான்!

உடன்பிறப்பே, நாம் இந்தத் தேர்தலில் பெற்ற தோல்வியை மறுக்கவில்லை! ஆனாலும் சோர்வடைந்திடத் தேவையில்லை! நமது அணி பெற்றுள்ள 84 லட்சம் வாக்குகள், குறைத்து மதிப்பிடக்கூடிய மக்கள் சக்தியின் பிரதிபலிப்பு அல்ல! ஆளுங்கட்சி அணி - பல கட்சிகளின் கூட்டுடன் பெற்றிருப்பது சுமார் 90 லட்சம் வாக்குகள்தான்! இதை கவனிக்கும்போது மக்களை விட்டு நாம் வெகுதூரம் தள்ளப்பட்டு விட்டோம் என்று எவரும் மனதாரக் கூற முடியாது!

தி.மு.கழகத்தைப் பொறுத்த வரையில் அறுபது ஆண்டுகட்கு முன்பு - அன்று தொடங்கிய அடிப்படை - அன்று எழுப்பிய அடித்தளம் - அவற்றை இடித்து நொறுக்கிவிட்டு பெரியார், அண்ணா என்ற பெயர்களை மட்டும் வைத்துக்கொண்டு அவர்கள் கட்டிக் காத்த உணர்வுகளையும், கொள்கைகளையும் இழந்து விடத் தயாராக இல்லை!

அந்த இலட்சியத்திற்காக இன்னும் பல தேர்தல் தோல்விகளை விலையாகக் கொடுத்தாலும் - கழகம் கலங்கப் போவதில்லை!

தேர்தல்கள் இடையில் வந்து போகக்கூடியவை! திராவிடர் இயக்கக் கொள்கைகள் நிலையானவை! அவற்றைப் பாதுகாக்கவும், பரப்பவும் நாம் ஆற்றிடும் பணிக்குக் குறுக்கே - தேர்தல் தோல்விகளால் ஏற்படும் கவலைகள் அலை பாய்ந்திடக் கூடாது!

மக்களின் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு என ஏற்போம்! அந்த மக்களைத் திருத்தும் வரையில் எத்தனை முறை வேண்டுமானாலும் தோற்போம்! ஆயிரம்காலத்துப் பயிராம் அய்யா அண்ணாவின் இலட்சியங்களைக் காப்போம்.

இடங்கள் குறைந்திருக்கலாம்; எமது இலட்சிய உணர்வு குறையவில்லை என்று எக்காளமிட்டு ஏறுநடை போடுவோம்.

அன்புள்ள,

மு. க.

(20-06-1980)

740. நான் செய்த தவறு!

உடன்பிறப்பே,

கழகம் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது ஒருமுறை 1974-ஆம் ஆண்டு சட்டமன்றத்தில் ஒரு புள்ளி விவரத்தைப் படித்துக் காட்டினேன். 1967 முதல் 1974-ஆம் ஆண்டு வரையில் தமிழ்நாடு சர்வீஸ் கமிஷன் வாயிலாகத் தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள உத்தியோகங்களின் பட்டியல்தான் அது!

மீண்டும் உன் நினைவுக்கு இதோ அந்தப் பட்டியலைத் தருகிறேன்.

1967-ஆம் ஆண்டு முதல் 1974-ஆம் ஆண்டு வரை ஏழு ஆண்டு காலத்தில் -

தாழ்த்தப்பட்ட வகுப்பு மக்களுக்கு :

டெப்டி கலெக்டர்	7
டி.எஸ்.பி.	4
ஜெ.சி.டி.ஓ.	4
டெப்டி ரிஜிஸ்ட்ரார்	5
போலீஸ் அஸிஸ்டெண்ட் கமாண்டன்ட்	1
டிவிஷனல் தீயணைப்பு அதிகாரி	1
ஆக	22 பேர்

வன்னியர் வகுப்பு மக்களுக்கு :

டெப்டி கலெக்டர்	5
டி.எஸ்.பி.	3
ஜெ.சி.டி.ஓ.	4
டெப்டி ரிஜிஸ்ட்ரார்	1
டிஸ்ட்ரிக்ட் ரிஜிஸ்ட்ரார்	1
ஆக	14 பேர்

கள்ளர் வகுப்பு மக்களுக்கு :

டெப்டி கலெக்டர்	3
டி.எஸ்.பி.	1
ஜே.சி.டி.ஓ.	2
டெப்டி ரிஜிஸ்ட்ரார்	1
அஸிஸ்டெண்ட் கமாண்டன்ட்	1
ஆக	8 பேர்

மறவர் வகுப்பு மக்களுக்கு :

டெப்டி கலெக்டர்	1
டி.எஸ்.பி.	2
ஜே.சி.டி.ஓ.	1
டெப்டி ரிஜிஸ்ட்ரார்	1
அஸிஸ்டெண்ட் கமாண்டன்ட்	1
ஆக	6 பேர்

அகமுடையார் வகுப்பு மக்களுக்கு :

டெப்டி கலெக்டர்	5
டி.எஸ்.பி.	1
ஆக	6 பேர்

நாடார் வகுப்பு மக்களுக்கு :

டெப்டி கலெக்டர்	3
ஜே.சி.டி.ஓ.	5
டெப்டி ரிஜிஸ்ட்ரார்	2
ஆக	10 பேர்

முஸ்லீம்களுக்கு :

டெப்டி கலெக்டர்	2
டி.எஸ்.பி.	3
ஜே.சி.டி.ஓ.	2
டெப்டி ரிஜிஸ்ட்ரார்	1
ஆக	8 பேர்

செங்குந்தர் வகுப்பு மக்களுக்கு :

டெப்டி கலெக்டர்	1	
டெப்டி ரிஜிஸ்ட்ரார்	1	
அஸிஸ்டெண்ட் கமாண்டன்ட்		1
டிவிஷனல் தீயணைப்பு அதிகாரி	1	
ஆக		4 பேர்

கௌரா வகுப்பு மக்களுக்கு :

(மிகப் பின்தங்கிய வகுப்பு)

டெப்டி கலெக்டர்	1	
டெப்டி ரிஜிஸ்ட்ரார்	1	
அஸிஸ்டெண்ட் கமாண்டன்ட்	1	
ஆக		3 பேர்

படகா வகுப்பு மக்களுக்கு :

டெப்டி கலெக்டர்	1	

வீரக்கொடி வெள்ளாளர் வகுப்பு மக்களுக்கு :

டெப்டி கலெக்டர்	1	

சலவைத் தொழிலாளி வகுப்பு மக்களுக்கு :

டெப்டி கலெக்டர்	2	

பரக்கவகுல நத்தமான் வகுப்பு மக்களுக்கு :

டெப்டி கலெக்டர்	1	
டி.எஸ்.பி.	1	
ஆக		2 பேர்

மொத்தத்தில் 1967-ஆம் ஆண்டு முதல் 1974-ஆம் ஆண்டு வரை தேர்ந்தெடுக்கப்பட்ட 122 பேர்களில் 112 பேர்கள் தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் ஒட்டர் போன்ற மிகப் பின்தங்கிய சமூகத்தைச் சேர்ந்தவர்கள் ஆவார்கள்.

இதை வெளியிட்ட பிறகுதான் தி.மு.கழக ஆட்சியைத் தீய்த்துப் பொசுக்க வேண்டுமென்ற தீராக் கோபம் ஏற்பட்டது ஒரு சிலருக்கு!

பத்திரிகைகள் வரிந்து கட்டிக் கொண்டு புறப்பட்டன!

மேட்டுக் குடியினரோ, நாட்டுக்கு இனி ஆகாது இந்த ஆட்சியென முரசு தட்டிக் கிளம்பினர்!

விதைக்காது விளையும் கழனி என்றாரே, அண்ணா! அந்தக் கழனி வென்றது! என்றைக்கும் ஏமாறும் நமது இனம், தன்னைத்தானே அழித்துக் கொள்ளத் தொடங்கியது!

உடன்பிறப்பே!

இப்போது புரிகிறதா? என் மீது பாய்ந்து விழுந்து பல்லை நறநறவெனக் கடித்து பாவி! படுபாவி! எனச் சாபமிடுகிறார்களே - சிலர், அதற்குக் காரணம் இப்போது புரிகிறதா?

தோல்வியெனும் சகதியில் அல்ல! சோதனையெனும் தணலில் போட்டால்கூட - நான் படித்தேனே அந்தப் பட்டியல் பெருக வேண்டுமென்றுதான் முழக்கமிடுவேன்! அப்படியொரு பட்டியலுக்குப் பாராட்டுக் கூறியதும் - வழிவகுத்ததும் தவறு என்றால், நான் எந்த நிலையில் இருந்தாலும் சாகிற வரையில் அந்தத் தவறைச் செய்து கொண்டுதானிருப்பேன்.

அன்புள்ள,

மு. க.

(21-06-1980)

741. கோழைகள் அல்லர்! கொள்கைக் குன்றங்கள்!!

உடன்பிறப்பே,

வெறுப்பான அரசியலுக்கு விடை கொடுத்து அனுப்பிவிட்டு - பழிவாங்கும் போக்கிற்குச் சிறிதும் இடம் தராமல் புதிய சிந்தனைகளுக்கும் - மறுமலர்ச்சிக்கும் தமிழகத்தில் வழிவகுப்போம் என்ற கருத்தின் தொகுப்பாகத்தான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சட்டப் பேரவைத் தேர்தல் பிரகடனம் அமைந்திருந்தது என்பதை நீ மறந்திருக்க மாட்டாய்! மறந்தவர்கள் வேண்டுமானால், மீண்டும் அந்தத் தேர்தல் அறிக்கையைப் படித்துப் பார்த்துக் கொள்வது நல்லது!

அந்த அறிக்கையின் தொடர்ச்சியாகத்தான் இந்திரா காங்கிரஸ் - தி.மு. க. முற்போக்குக் கூட்டணியின் குறைந்தபட்சத் திட்டங்களும் விவாதிக்கப்பட்டு வெளியிடப்பட்டன என்பதையும் நாடறியும்!

நமது தேர்தல் அறிக்கையும் - முற்போக்குக் கூட்டணியின் குறைந்தபட்சத் திட்டங்களும் வெட்டு ஒன்றாகவும், துண்டு இரண்டாகவும் இல்லையென்று குறை கூறிவிட்டு நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் தேர்தல் வாக்குறுதிகள் பலவற்றை வாரி வழங்கியுள்ளார்.

ஃ ஐந்து கிலோ அரிசி வாங்குகிற ஏழைகளுக்கு அதிலே ஒரு கிலோ அரிசி இலவசமாக வழங்கப்படும்.

ஃ வீட்டுக்கு ஒருவருக்கு நிச்சயமாக வேலை வாய்ப்பு தரப்படும்.

ஃ வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கிற சுமார் அறுபது சதவிகிதத்தினருக்கு நாள் ஒன்றுக்கு ஒரு ரூபாய் அளிக்கப்படும்.

ஃ பட்டதாரிகள் வேலை வாய்ப்புப் பெறுகிற வரையில் மாதந்தோறும் அவர்களுக்கு ஐம்பது ரூபாய் உதவி மான்யம் கொடுக்கப்படும்.

ஃ எல்லா விவசாயிகளுடைய கடனும் உடனடியாக ரத்து செய்யப்படும். இதில் ஆலோசிக்கப்படும் என்ற பேச்சுக்கே இடமில்லை. வழிவகை காணப்படும் என்ற நழுவல் உறுதிமொழிக்கு மாறாக, திட்டவட்டமாக சுமார் முன்னூறு கோடி ரூபாய்க் கடனும் ரத்து செய்யப்படும்.

இப்படிப் பல உறுதிமொழிகளை எம்.ஜி.ஆர். அவர்கள் தேர்தல் அறிக்கையிலும், தேர்தல் கூட்டங்களிலும் எடுத்துரைத்து அவரது கட்சி ஏடுகள் உட்பட எல்லா ஏடுகளிலும் அவை வெளிவந்துள்ளன.

ஆளுநர் உரை சட்டப் பேரவையில் படிக்கப்படுவதற்கு முன்பு நான் இந்தக் கடிதத்தை வெளியூரிலிருந்து எழுதுகிறேன். ஒருவேளை ஆளுநர் உரையில் அந்த உறுதிமொழிகள் எல்லாம் இடம் பெற்றிருக்குமேயானால், அதற்காக நான் மகிழ்ச்சியடைகிறேன்.

அவர், தேர்தல் நேரத்தில் அளித்த உறுதிமொழிகளை நிறைவேற்றுகிறாரோ இல்லையோ, குறைந்தபட்சம் - எதிர்க்கட்சிகளை, அதிலும் குறிப்பாக தி.மு.கழகத்தினரைப் பழிசுமத்தி அழித்துவிட வேண்டுமென்று கருதுகிற அவரது வெறுப்பு அரசியலுக்கு இன்னமும் விடை கொடுத்து அனுப்பியதாக தெரியவில்லை.

திண்டிவனம் போன்ற ஊர்களில் அவரது கட்சித் தொண்டர்களால் தாக்கப்பட்ட தி.மு.கழகத்தினரும், இந்திரா காங்கிரசாரும் கைது செய்யப்பட்டு பொய் வழக்குகளுக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள்.

வன்முறையை நாம் என்றைக்கும் ஏற்றுக் கொண்டவர்கள் அல்லர்!

ஆனால் வன்முறையைத் தூண்டி விடுகிறவர்கள் அ.தி.மு.க.வினராகத்தான் இருக்கிறார்கள் என்பதைப் பொதுமக்களும் புரிந்து கொண்டிருக்கிறார்கள். போலீசாரும் தெளிவாகத் தெரிந்து கொண்டிருக்கிறார்கள். ஆனாலும்

என் செய்வது? அரசின் சார்பில் அமைச்சர்கள் ஆணை பிறப்பிக்கிறார்கள்!

கடுமையான சட்டப் பிரிவுகளைப் பொழிந்து கழகத்தினரை ஒடுக்குங்கள்! அவர்கள் பீதியடைந்து கட்சியை விட்டே ஓடுகிற அளவுக்குத் துடிக்கச் செய்யுங்கள்! தி.மு.கழகத்தை வேரோடும், வேரடி மண்ணோடும் பெயர்த்து எறியுங்கள்! அதனால் என்ன ஆனாலும் சரி! விளைவுகளைப் பற்றிக் கவலையில்லை! எத்தகைய அமளி வெடித்தாலும் பரவாயில்லை! அடக்கியே தீருவோம்!

இப்படிச் சில அமைச்சர்கள் சல்லடம் கட்டிக் கொண்டு புறப்பட்டிருக்கிறார்கள் என்று ஆதாரபூர்வமான தகவல்கள்!

இதைச் சொன்னால் பாம்பை அடித்து விட்டு விடாதீர்கள்! பாராளுமன்றத் தேர்தலில் அடித்ததை மேலும் ஒழுங்காக அடியுங்கள் என்று நான் சொன்னதாகக் கூறி, கருணாநிதிதான் வன்முறையைத் தூண்டி விடுகிறார் எனப் பதில் கூறிவிடக்கூடும். அப்படி எம்.ஜி.ஆர். கடற்கரையில் பேசியும், அறிக்கை விட்டும் இருப்பது அனைவரும் அறிந்ததே!

கொலைவாளினை எடடா! மிகு
கொடியோர் செயல் அறவே!

என்று பாரதிதாசன் பாடியதற்குத் தவறான பொருள் கொண்டு சிலர் பேசியது போலவே, இதற்கும் பொருள் கொண்டு விடக்கூடாது!

நான் கூறியது தெளிவாக வெளிவந்திருக்கிறது. அ.தி.மு.க. ஆட்சியென்னும் பாம்பை அடித்து, விட்டு விடக்கூடாது என்றுதான் கூறினேன். ஆட்சியை ஜனநாயக முறையில் வீழ்த்துவதற்கும், ஆட்களை வன்முறையால் வீழ்த்துவதற்கும் இடையே உள்ள அர்த்தமே வேறு!

ஆட்களை வன்முறையால் சாய்ப்பதை அண்ணா வழியன்றோ, - அண்ணல் காந்தி வழியன்றோ - யாரும் கூறமாட்டார்கள்!

இருந்தாலும் காந்தியடிகள் காலத்திலும் - அண்ணா காலத்திலும் வன்முறைகள் நாட்டில் புதைக்கப்பட்டு விடவில்லை.

வன்முறையாளர்களைச் சட்டப்படி தண்டிக்கத்தான் வேண்டும். அதற்காக நாட்டில் நடக்கும் வன்முறைச் செயல்களில்,

வேண்டுமென்றே திராவிட முன்னேற்றக் கழகத்தினர் பெயர்களைத் திட்டமிட்டுத் திணித்து அவர்கள் மீது பொய் வழக்குப் போட்டுத் தீர்த்துக்கட்ட முனைவது, இப்போதும் எம்.ஜி.ஆர். அரசின் திட்டமாக இருந்து வருவது பெரிதும் கண்டிக்கத்தக்க ஒன்றாகும்.

பரமக்குடி தனித் தொகுதியில் கழக வேட்பாளராகப் போட்டியிட்டார் நண்பர் இளமாறன்! அவரைப் பழிவாங்க, ஏதோ ஒரு கலவரத்தில் வேண்டுமென்றே ஈடுபடுத்தி அவர் மீது 302-வது சட்டப்பிரிவு! அவர் இப்போது சிறையில்! தேர்தலில் நின்ற குற்றத்திற்காக ஒரு அரிஜனத் தோழனுக்கு இந்தப் பரிசு!

இன்னொரு அரிஜனத் தோழர்! நமது கழகத்தைச் சேர்ந்த முன்னாள் எம்.பி. லட்சுமணன்! திருப்பெரும்புதூர் தொகுதியில் இந்திரா காங்கிரஸ் வேட்பாளர் திருமதி யசோதா அவர்களின் வெற்றிக்கு அரும்பாடுபட்டார்! அவருக்கும் பரிசு! என்ன தெரியுமா? அவரையே தாக்க வந்தார்கள் சிலர்! அவர்கள் மீது புகார் கொடுத்தார் லட்சுமணன்! விளைவு? லட்சுமணன் மீதே கொலை முயற்சி வழக்கு! 307-வது பிரிவு பாய்ந்துள்ளது! அவரும் கைதாகியுள்ளார்!

பரவாயில்லை! ஏற்கனவே என் மீதும், பேராசிரியர் மீதும், சாதிக் மீதும் மற்றும் சுமார் நூறு கழக முன்னணியினர் மீதும் 307 சட்டப் பிரிவு! மற்றும் பல சட்டப் பிரிவுகளில் கொலை முயற்சி வழக்கு நடந்து வருகிறது!

இப்போது இளமாறன், லட்சுமணன் - இரண்டு அரிஜன நண்பர்கள்! இன்னும் மாநில முழுதும் பரவலாக நூற்றுக்கணக்கான கழகக் கண்மணிகள்! பொய் வழக்குகளில் சிக்க வைக்கப்படுகின்றனர், நாள்தோறும்!

ஆங்காங்கு அவர்களுக்கென வாதாடுவதற்கு வழக்கறிஞர் குழுக்கள் கழகச் சார்பில் அமைக்கப்பட்டுள்ளன.

நானும் இரண்டொரு நாட்களில் வெளியூருக்கு வந்த வேலையை முடித்துவிட்டுச் சென்னை திரும்பி விடுவேன். வந்ததும் நமது கழகத்தினர் இவ்வாறு பழிவாங்கப்படும் இடங்களுக்கெல்லாம் நேரிலே வந்து நிலைமைகளை அறிந்து - ஏற்ற நடவடிக்கைகளைச் சட்டபூர்வமாக உடனே எடுத்திட முயற்சிகளை மேற்கொள்வேன்!

அதையும் தடுத்திட, என் மீதும் - நமது வழக்கறிஞர்கள் மீதும்கூட, பழி வாங்கும் நடவடிக்கைகள் சீறிக் கிளம்பலாம்!

இதற்கெல்லாம் பயந்தால் அரசியலில் இருக்கவே முடியாது! அப்படிப் பயந்தவர்கள் கழகத்தில் இல்லை!

அப்படி இருப்பதாக எண்ணிக்கொண்டு எம்.ஜி.ஆர். அரசு, பழி வாங்கும் படலத்தைத் தொடருமேயானால் - அதன் விளைவுகள் வேறுவிதமாக மாறி விடக் கூடும்!

உடன்பிறப்பே! ஒன்றுக்கும் அஞ்சாதே! தூக்குமேடையைத் தவிர வேறெங்கே அனுப்பி விட முடியும்? இத்தகைய கொலை வழக்குகளின் ஜோடனைகளால்!

ஆறிலும் சாவுதான் - நூறிலும் சாவுதான்! அதற்காகக் கொள்கையை விற்று விடும் கோழைகளா நாம்? இல்லை! இல்லவே இல்லை!

அன்புள்ள,

மு. க.

(22-06-1980)

742. அரும்புகளா? அம்புகளா?

உடன்பிறப்பே,

அகநானூறு பாடலில் போர்க்களத்திலிருந்து ஒரு தலைவன் திரும்பிக் கொண்டிருக்கிறான். அவன் காணும் காட்சியெல்லாம் அவனுக்கு எதை நினைவூட்டுகின்றன என்பதைப் புலவர் பெருமகனார் எத்துணை வீரச் சுவையுடன் எழுதிக் காட்டுகிறார் பார்!

போர் முடிந்து வரும் வழியில் இருப்பை மரங்களைக் காணுகிறான் தலைவன். அந்த மரங்களில் அரும்புகள் நிறைந்திருப்பதையும் அவன் விழிகள் நோக்குகின்றன. இருப்பை மரத்து அரும்புகளின் கூர்மையைக் கண்டதும் அதற்குவமையாக அவனது உள்ளங் கவர்ந்தவளின் ஒளியுமிழ்க் கண்களின் நோக்கு கூட நினைவுக்கு வரவில்லை. அதனால் அவளது நினைவு அவனுக்கு வராமலே போய் விடவில்லை. அவளைக் காணவும் அவளது மெல்லிய தோளினைப் பற்றவும்தான் - தேரினை விரைந்து செலுத்தச் சொல்கிறான்.

தேர் ஓடும் பாதையில் தான் இருப்பை மரத்து அரும்புகள் குலுங்கிக் கொண்டிருக்கின்றன. அவற்றை அவன் கண்கள் எப்படி நோக்குகின்றன என்பதைத்தான் புலவர் கல்லாடனார், தனது கற்பனையால் நோக்குகிறார்.

கொல்வினைப் பொலிந்த - கூர்ங்குறும் புழுகின்
வில்லோர் தூணி வீங்கப் பெய்த
அப்புறுனை யேய்ப்ப வரும்பிய இருப்பை...

எதிரிகளைக் கொன்று குவிக்கும் வலிமை பெற்ற கூர்மையுடைய அம்புகள், வில்லேருழவர்களின் அம்புக் கூடுகள் புடைக்குமாறு நிறைக்கப் பட்டிருக்கின்றனவாம்! வழியில் நிற்கும் இருப்பை மரத்தின் அரும்புகளைப் பார்க்கும் போது - கூர்மை மழுங்காமலிருக்கக் குப்பி போடப்பட்ட அம்புகளின் உவமைதான்

தலைவனின் கற்பனையில் உதயமாகிறது! இப்படிச் சொல்லுகிறார் கல்லாடனார்!

ஆம்! அகநானூறு பாடல்களின் தொகுப்பில் செழித்துச் சிரிக்கும் உவமைகளில் இதுவும் ஒன்று! அரும்புகளைக் கண்டதும் அம்புகளின் கூர்மைதான் தலைவனின் நெஞ்சில் நிழலாடுகிறது! அவன் சந்தித்த போர்க்களக் காட்சிகள் அவன் மனத்தைவிட்டு அகல மறுக்கின்றன.

தேர் செல்லும் வழியில் செம்மண் நிலத்தில் சிதறிக் கிடக்கும் மலர்கள் கூட, குருதி வெள்ளத்தில் மிதக்கும் நிணங்களைப் போலத்தான் கிடக்கின்றனவாம்! அந்த அளவுக்குப் போர்க்களத்துச் சிந்தனைகள் அவன் உள்ளத்தை ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருக்கின்றன! இல்லையேல், நீண்ட நாள் பிரிந்திருந்த நேரிழையாளைக் காணச் சென்றிடும் துடிப்புக்கிடையே அரும்புகள் அம்புகளாகத் தெரியுமா? செம்மண் - குருதிக் காடாகவும், அதில் நிறைந்து கிடக்கும் மலர்கள் நிணங்களாகவும் தோன்றுமா? காதல் நினைவுடன் போட்டியிட்டு களத்து நினைவல்லவா முந்துகிறது! கல்லாடனார் கவிதையில் அந்த உவமையல்லவா முத்து முத்தாகச் சிந்துகிறது!

உடன்பிறப்பே! நீயும் நானும் கூட களம் பல கண்டு திரும்பியதுண்டு! கோட்டையை யார் பிடித்துக் கோலோச்சுவது என்ற தேர்தல் களமல்ல! கொள்கை வழி நின்று, மொழி காத்து - இனம் காத்து - தன்மானத் தமிழ்க் கொடியினை வான்முட்ட ஏற்றிவைக்கப் போரிட்ட களங்களைத்தான் குறிப்பிடுகிறேன்.

அந்தக் களங்கள் கண்டபோது எத்தனை எத்தனை அடக்குமுறைகள்! சிறைச்சாலைகள்! சித்திரவதைகள்! துப்பாக்கிக் குண்டுகள்! சுருண்டு விழுந்த தளிர்கள் - கொழுந்துகள் - கல்லறையில் பூக்களாக மலர்ந்த கண்மணிகள்!

இப்போது நானும், நீயும் அரும்புகளைப் பார்த்தாலும் - அகநானூறு இலக்கியத்தில் அந்தத் தலைவன் கண்ட அம்பின் முனைகளாகத்தான் தெரிகின்றன! செம்மண் பூமி, நாம் சிந்திய செந்நீர்க்களத்தைத்தான் எதிரே கொண்டு வந்து நிறுத்துகிறது!

கூர் தீட்டப்பெற்ற அம்புகள் நிரம்பியதால் புடைத்துக் கொண்டிருக்கும் அம்புக் கூடு என்கிறாரே! கல்லாடனார் - அது போலத்தான் நமது அண்ணனால் தயாரிக்கப்பட்ட கூர் மழுங்காத

அம்புகள் நாம்! கழகப் பாசறையெனும் அம்புக் கூட்டில் நிறைந்து நிற்கிறோம்! அம்புக்கூடு மட்டுமல்ல இது அன்புக் கூடும் அல்லவோ? ஆருயிர் உடன்பிறப்பே! அரும்புகள் தெரியலாம், கண்ணுக்கு! ஆனால் அகநானூற்றுத் தலைவனுக்குத் தெரிந்தது போல அம்புகளாகத் தோன்றட்டும்!

இந்தக் கடிதத்தின் வாயிலாக - கல்லாடனார் கற்பனையைச் சாட்சிக்கு அழைத்து நான் உனக்குச் சொல்ல விரும்புவது தெளிவாகப் புரிகிறதா?

நமது களம்புகு நிகழ்ச்சிகளை மறவாதே! அரும்பை நோக்கிலும் அதில் அம்பையே நோக்கு!

அரும்பு என்பது வந்து போகும் பதவிகளைக் குறிப்பது!

அம்பு என்பது நாம் நடக்க வேண்டிய இலட்சியப் பயணத்தைக் குறிப்பது!

அரும்பு கிடைக்காவிட்டாலும் - அம்புக்கூட்டில் கூர் மழுங்காத அம்புகளாக இருப்போம் என்ற உறுதி வேண்டும்! அந்த உறுதியாளர்களுக்கு என்றைக்கும் என் நெஞ்சில் அழியாத இடம் உண்டு!

அன்புள்ள,

மு. க.

(23-06-1980)

743. வேட்டை நாயும் தேட்டை நாயும்!

உடன்பிறப்பே,

வீட்டு நாய்.
தெரு நாய்.
வெறி நாய்.
சொறி நாய்.
சோம்பேறி நாய்.
வேட்டை நாய்.
தேட்டை நாய்.
இப்படிப் பல ரக நாய்கள் உண்டு!

நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலுக்குப் பிறகு கடற்கரையில் நடைபெற்ற வாக்காளர் நன்றியறிவிப்புப் பொதுக்கூட்டத்தில் நான் பேசும்போது, தோல்விகளால் எங்கள் தொண்டு தொடராமல் நின்று விடாது - நான் உங்கள் வீட்டு நாயைப் போன்றவன்! விரட்டினாலும் உங்கள் காலைச் சுற்றிக்கொண்டு தான் இருப்பேன் என்ற கருத்தினைக் கூறினேன்.

எதையுமே கொச்சைப்படுத்தக்கூடிய இயல்பு படைத்த நண்பர்கள் சிலர் அரசியலிலே இருக்கிறார்கள் அல்லவா? அவர்கள் உடனே சொல்லி விட்டார்கள். கருணாநிதி அ.தி.மு.க. ஆட்சியைக் கலைப்பதற்காக டெல்லிக்குச் சென்று அதைக் கலைத்து விட்ட வேட்டை நாய் என்று விளாசித் தள்ளிவிட்டார்கள்.

என்னை வேட்டை நாய் என்பதால், எனக்கொன்றும் வருத்தமில்லை!

ஏனென்றால், ஆத்திரத்தில் சில பேர் தங்கள் வாயில் ஊறும் எச்சிலையே காறித் துப்புவார்கள்!

சில பொல்லாத ஆத்திரக்காரர்கள் தங்களின் எச்சிலை மட்டும் எதிரியின் மீது உமிழ்ந்தால் போதாதென்று, நரகலை எடுத்து வாயில் நன்றாக மென்று கொப்பளித்து எதிரியின் மீது துப்புவார்கள்!

எதிரிக்கு உடைகள்தான் வீணாகும்! துப்பியவரின் வாயோ? அய்யோ பாவம்! அவ்வளவு சினம் அவருக்கு - அதனால் மலம்கூட மணக்கிறது அவரது திருவாயில்!

வேட்டை நாய் என்ற வார்த்தையும் அப்படித் துப்பப்பட்டது தான்!

நான் உங்களுக்கு நாய் போல உழைப்பேன் என்று ஒருவன் கூறுவது அவனது விசுவாச உணர்வை மட்டுமல்ல; அடக்கத்தையும் காட்டுவதாகும்!

ஏய்! நீ என்னிடம் நாய் போலக் கிடக்க வேண்டும் என்பது, அப்படிக் கூறுகிறவனின் ஆணவத்தை அறிவிப்பதாகும்.

இரண்டு சொற்றொடர்களிலும் நாய் என்ற வார்த்தைதானே வருகிறது. எனவே, இரண்டு வகையான வாசகங்களும் ஒரே கருத்தைத்தான் மையமாகக் கொண்டுள்ளன என்று வாதிப்பவர்கள் அறிவில் வறியோர்களாகத் தானிருப்பார்கள்!

வீட்டு நாய் நான் என்று அடக்கத்தோடு சொன்னேன். தேர்தல் தீர்ப்பை ஏற்றுக் கொண்டு சொன்னேன். வேட்டை நாய்! என்று எனக்கு விருது வழங்குகிறார்கள்!

அய்யோ பரிதாபம்! அவர்களின் வாயை அசிங்கப்படுத்திக் கொண்டார்களேயென்று அனுதாபப்படுகிறேன்.

வேட்டை நாய், வீதியோரத்திலே பொறுக்கித் தின்னும் பழக்கமுடையதல்ல!

தோட்டத்து வாசல் திறந்திருக்கும். தினம் சொறிநாய் வந்து கொஞ்ச நேரமட்டும், எச்சில் இலைகளுக்குக் காத்திருக்கும் - என்ற இழிநிலை வேட்டை நாய்க்கு இருப்பதில்லை.

ஆனால், வேட்டை நாய் எனும் சொல்லை மிக இழிச் சொல்லாகக் கருதித் துள்ளிக் குதித்தொருவர் அள்ளி வீசி விட்டார்! அவர் வாயை அவரே கெடுத்துக் கொண்டாரே என்ற கவலைதான் எனக்கு!

வேட்டை நாய் ஒருபுறமிருக்கட்டும்! என் மீது கூறப்படும் குற்றச்சாட்டு உண்மையா என்று முதலில் பார்ப்போம்!

ஜனதா கட்சி, மார்க்சிஸ்ட் கட்சி - அகில இந்திய அளவில் அப்போது தேர்தல் உறவு கொண்ட கட்சிகள் என்பதை அனைவரும் அறிவர்!

ஜனதாக்கட்சி ஆட்சியில் உத்திரப் பிரதேசம் உட்பட பல மாநில அரசுகள் கலைக்கப்பட்டதை மாநிலங்களவையில் அப்போது பேசிய மார்க்சிஸ்ட் கட்சி உறுப்பினர் வரவேற்றுப் பேசினார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஜனதா ஆட்சியின் செயலை முன்மாதிரியாகக் கொண்டு நாடாளுமன்றத் தேர்தலில் பெருந்தோல்விக்கு ஆளான ஒன்பது காங்கிரசல்லாத மாநில ஆட்சிகளை இந்திரா காங்கிரஸ் அரசு கலைத்தது.

ஒன்பது மாநில அரசுகளை பிப்ரவரி மாதம் கலைப்பதற்கு மத்திய அரசு ஒரேவிதமான அடிப்படையைத்தான் பின்பற்றியது! நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகளையொட்டித்தான் மற்ற எட்டு மாநில அரசுகள் கலைக்கப்பட்டன. அதே காரணத்தைக் காட்டித்தான் தமிழ்நாட்டில் அ.தி.மு. க. அரசையும் கலைத்தார்கள்.

தமிழ்நாட்டு அரசைக் கலையுங்கள் என்று தி.மு. க. சார்பில் எந்தக் கட்டத்திலும் சொல்லவில்லை.

ஆனால் அதற்கு மாறாக, திண்டுக்கல் இடைத் தேர்தல் நாடாளுமன்றத் தொகுதியொன்றில் தி.மு. க. தோற்றவுடன் - தி.மு. க. ஆட்சியை மத்திய அரசு உடனடியாகக் கலைக்க வேண்டுமென்று எல்லாப் பத்திரிகைகளிலும் அறிக்கை வெளியிட்டவர் அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் என்பதை அரசியல்வாதிகளாக இருப்பவர்கள் மறந்திருக்க மாட்டார்கள்!

அதுமட்டுமல்ல, ஜனதா ஆட்சியின்போது டெல்லி மாநிலங்களவையில் தி.மு.க. சார்பில் முரசொலி மாறனும் - மார்க்சிஸ்ட் சார்பில் திரு. பி. இராமமூர்த்தியும் - இந்திய கம்யூனிஸ்டு சார்பில் திரு. புபேஷ் குப்தாவும் - அரசியல் சட்டத்தில் மாநிலங்களைக் கலைக்கும் உரிமையை மத்திய அரசுக்கு வழங்கும் 356-வது பிரிவை நீக்கி விட வேண்டுமென்றும் திருத்தம் கொடுத்தனர்.

அந்தத் திருத்தம் நிறைவேற வேண்டுமென்று பேசியதோடு, அதற்கென நடைபெற்ற வாக்கெடுப்பிலும் ஒன்றாக நின்று வாக்களித்தனர்.

ஆனால் மாநிலங்களவையிலிருந்த அ.தி.மு. க. உறுப்பினர்கள் - அந்தத் திருத்தத்தை எதிர்த்து, மத்திய அரசு மாநில அரசுகளைக் கலைக்கலாம் என்ற நிலைமைக்கு ஆதரவாக வாக்கும் அளித்தனர்.

உடன்பிறப்பே, இன்னொன்று தெரியுமா? தமிழர்கள் என்று குறிப்பிட்டுப் பேசுவதே குற்றமாம்! மார்க்சிஸ்டுகளின் வாதம் எனக்கு புரியவில்லை. பேராசிரியர் தமிழர்கள் என்று கூறும்போது இனவெறியைத் தூண்டுவதாக இருக்கிறதாம்!

ஒரு தமிழன் ஒரு மறவன் நல்லதான

தன்இனத்தை தன்னாட்டை உயர்த்துவதற்குச்

சற்றெழுந்தால் தமிழர் குறை முற்றும் தீரும்.

பாவேந்தர் பாரதிதாசனின் இந்தப் பாடலை தடைசெய்து விட வேண்டியதுதான்!

தமிழன் என்றோர் இனமுண்டு!

தனியே அவர்க்கோர் குணமுண்டு!

நாமக்கல்லாரின் இந்தப் பாடலையும் நஞ்சென்று நவின்று கொளுத்தித் தீர்த்து விட வேண்டியதுதான்!

தமிழ் மரபும், இன உணர்வும், தமிழர் இலக்கியங்களும், வரலாறும் மொழியும் காத்திடத் தி.மு. க. ஆட்சிப் பொறுப்பேற்க விரும்புகிறது.

இப்படி 1967 - விருகம்பாக்கம் மாநாட்டில் அறிஞர் அண்ணா உரையாற்றினாரே! அந்த உரையும் இனி யார் நாவிலும் நடமாடக்கூடாது என்று ஆணை பிறப்பித்து விடவேண்டியதுதான்!

இருட்டடிப்பு - இழிதகைப் பிரச்சாரம் - சிறுபான்மையோர் தங்கள் எண்ணிக்கைக்கு மேலாக எல்லா நலன்களையும் பெறுவதோடு மட்டுமல்ல, பெரும்பான்மையோராக இருக்கிற பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்டோரை மேலும் நசுக்கிட முனைதல் - இவைகளையன்றோ இனவெறியைத் தூண்டும் செயல் எனக் கூறிடல் வேண்டும்.

இதில் மார்க்சிஸ்டுகளுக்கும் - தமிழ்நாட்டில் உள்ள இந்திய கம்யூனிஸ்டுகளுக்கும் இடையே பெரும் மாறுபாடு உண்டு!

கடந்த காலத்தில் பிற்படுத்தப்பட்டோரைப் பாதிக்கும் எம்.ஜி.ஆர். அரசின் வருமான வரம்பு உத்திரவை திராவிடர் கழகம், தி.மு.கழகம், எதிர்த்துக் குரல் கொடுத்தபோது நம்முடன் இணைந்து குரல் கொடுத்த கட்சிகளில் இந்தியக் கம்யூனிஸ்டு

கட்சியும் இருந்ததைக் கண்டு மகிழ்ந்தோம்! ஆனால், மார்க்சிஸ்டுகள் எம்.ஜி.ஆரின் தத்துவமே சரியென்று வாதிட்டனர்!

தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் இரண்டு கம்யூனிஸ்ட் கட்சிகளையும் உற்றுப் பார்த்தால், அந்த மாறுபாடு ஏன் என்பதும் - என்ன என்பதும் தெரியும்! இனவெறி எங்கே தலைதூக்கி நிற்கிறது என்பதும் புரியும்!

தமிழன் யாரையும் தாழ்த்திடமாட்டான். அவனை யாரும் தாழ்த்திட நினைப்பதையும் பொறுத்துக் கொள்ளமாட்டான் - இதற்குப் பெயர் இனவெறியா? ஆமாம்! இனவெறிதான் என்று யாராவது சொன்னால், தமிழன் என்ற சொல்லையே அகராதியிலிருந்து அகற்றிவிட வேண்டியதுதான்!

இதைச் சொல்வதற்குக்கூட எனக்கு இன்னொரு வேட்டை நாய் விருது கிடைக்கக்கூடும்! வேட்டை நாய் என்றா சொன்னாய்? ஆகா! இதோ பார்! உன்னைத் தேட்டை நாய் என்று திருப்பிச் சொல்கிறேன் - என லாவணி நடத்த நான் விரும்பவில்லை! மக்கள் இவர்களையும் புரிந்துகொண்டு - தங்களையும் புரிந்து கொள்ளக்கூடிய காலம் வராமலே போய்விடாது!

அன்புள்ள,

மு. க.

(28-06-1980)

744. திசை திருப்புவோர் எச்சரிக்கை!

உடன்பிறப்பே,

தந்தை பெரியார் ஒலி, ஒளி நாடகத்தைத் தமிழக அரசு மீண்டும் அரங்கேற்றப் போகிறது என்ற செய்தி வெளிவந்துள்ளது. அதனை வரவேற்றும், பாராட்டியும் திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் வீரமணி அவர்கள் மகிழ்ச்சி தெரிவித்து அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

அதே வீரமணி அவர்கள்தான், திருநெல்வேலியில் திராவிடர் கழகத்தின் சார்பில் பார்ப்பன ஆதிக்க எதிர்ப்பு மாநாடு நடத்தப் போவதாகவும் அறிக்கை விட்டிருக்கிறார்.

இவற்றில் முதல் அறிக்கையான அ.தி.மு.க. அரசைப் பாராட்டி - வீரமணி விடுத்த அறிக்கை, அவராக அவரது சுயசிந்தனையோடு விடுத்ததாகவும் - திருநெல்வேலியில் நடத்தப்போகும் திராவிடர் கழக மாநாட்டுக்காக அவர் விடுத்துள்ள அறிக்கை மட்டும் - நான் தூண்டிவிட்டு வெளியிடப்பட்ட அறிக்கையாகவும் சில எரிச்சல்காரர்களால் சித்தரிக்கப்படுவதை ஏடுகளில் நீ கண்டிருப்பாய்!

அ.தி.மு.க. அரசு இப்போது பதவி ஏற்றவுடன், அதே அரசினால் ஏற்கனவே பழி வாங்கப்பட்டிருந்த காவல்துறையினர் மீது எடுக்கப்பட்டிருந்த நடவடிக்கைகளைத் திரும்பப் பெற்றுக் கொண்டது.

அதனை திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் வீரமணி பாராட்டி அறிக்கை வெளியிட்டார்.

அ.தி.மு.க. அரசில் ஹண்டே அவர்கள் அமைச்சராக்கப்பட்டதைக் கண்டித்து திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் வீரமணி அவர்கள் விடுதலை இதழில் எழுதினார்.

காவலர்கள் பற்றி அரசு எடுத்த முடிவை வரவேற்று வீரமணி அவர்கள் அறிக்கை விட்டதற்கு நான் எப்படித் தூண்டுகோலாக

இல்லையோ, அதைப்போலத்தான் அமைச்சரவை குறித்து அவர் அறிக்கை விட்டதற்கும் நான் தூண்டுகோல் இல்லை.

திராவிடர் கழகம், தனக்கெனத் தீவிரமான கொள்கைத் திட்டங்கள் பலவற்றைக் கொண்டு, இயங்கி வருகிற வீறுகொண்ட ஒரு இயக்கமாகும். பிள்ளையார் உடைப்பு - இராம இலட்சுமணர் கொடும்பாவி கொளுத்தல் போன்ற போராட்டங்களைப் பெரியார் அவர்களே தலைமையேற்று நடத்தியிருக்கிறார்கள்.

அவரை யாரும் தூண்டிவிட்டு அந்தக் காரியங்களைச் செய்யுமாறு கூறியதில்லை. அதேபோலத்தான் இப்போதும் திராவிடர் கழகத்தின் செயல்முறைகள் - திட்டங்கள் அவர்களது கழக மட்டத்தில் வகுக்கப்படுகின்றன.

பெருந்தலைவர் காமராசர் முதலமைச்சராக இருக்கிறார். அவரைப் பச்சைத் தமிழர் எனப் பாராட்டி தந்தை பெரியார் பேசி வருகிறார். திராவிடர் கழகத்தின் ஆதரவும் அப்போது தமிழ்நாட்டில் காங்கிரஸ் வெற்றிக்குப் பெரிதும் பயன்படுகிறது. பேரறிஞர் அண்ணா தலைமையில் தி.மு.கழகம் சட்டமன்றத்தில் எதிர்க்கட்சிக் குழுவாக இருக்கிறது. திராவிடர் கழகத்திற்கும் - தி.மு.கழகத்திற்கும் நல்லுறவு இல்லாத காலம் அது!

தேசியக் கொடியைக் கொளுத்தப் போவதாகப் பெரியார் அறிவிக்கிறார். காமராசரை ஆதரிக்கிற பெரியார்தான் அந்த அறிவிப்பையும் வெளியிடுகிறார்.

முதல்வர் காமராசர் தலைமையில் அமைந்த அமைச்சரவை; தேசிய சின்னங்களை அவமதிப்புத் தடைச் சட்டத்தைக் கொண்டு வருகிறது.

சட்டம் தேவையில்லை முதல்வரே பெரியாருடன் பேசி, அவர் மனக்குறைகளை அறிந்து பிரச்சினைக்குத் தீர்வு காணலாம் என்ற கருத்தமைந்த உரையினை அன்றைய தினம் - அறிஞர் அண்ணா ஆற்றுகிறார்! எனினும் சட்டம் நிறைவேறுகிறது!

தேர்தலில் காமராசரை ஆதரித்து அவர் முதல்வராக வர வேண்டுமென்று பாடுபட்ட பெரியார் அவர்கள், தேசியக் கொடியைக் கொளுத்துவதாக அறிவித்தது - எப்படிக் காமராசருடைய தூண்டுதல் இல்லையோ, அப்படித்தானே இன்றைக்குத் திராவிடர் கழகம் நடத்துகிற நெல்லை

மாநாட்டுக்கும் யார் தூண்டுதலும் இல்லையென்று நாகரிக அரசியல்வாதிகள் கூறிட வேண்டும்!

தி.மு.கழகத்தைப் பொறுத்த வரையில் நாங்கள் பிராமணியத்துக்குத்தான் எதிரிகளே தவிர - பிராமணர்களுக்கு அல்ல! இதனைப் பலமுறை தெளிவுபடுத்தியாகி விட்டது. தி.மு.கழகத்தில் பிராமணியத்தை உதறி எறிந்துவிட்ட பிராமண இளைஞர்கள் பலர் உறுப்பினர்களாகவும், பொறுப்புகளிலும் கூட இருக்கிறார்கள்.

எந்த ஒரு சமூகத்தையும் நாங்கள் அழிக்க விரும்பவில்லை. அதே நேரத்தில், தங்களுக்குக் கிடைக்கும் வாய்ப்புகளைப் பயன்படுத்திக்கொண்டு நமது சமூகத்தை அழிக்க நினைக்கும் எந்தச் சக்தியையும் நாம் அனுமதிக்கமாட்டோம்!

தமிழன் - திராவிடன் என்ற சொற்களைப் பயன்படுத்துவதே தவறு என்கிறவர்கள், தமிழ் இனத்தில் பதர்கள் என்பதே நமது அழுத்தமான கருத்து!

பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்காகவே உழைத்த நீதிக் கட்சியை அதே பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள்தான் தேர்தலில் தோற்கடித்தார்கள். அதற்காக நீதிக்கட்சி, தன் பயணத்தை நிறுத்தி விடவில்லை. அந்த மக்களைத் திருத்தி விழிப்புணர்வு மிக்கவர்களாக ஆக்குவதற்காகவே நீதிக்கட்சி, திராவிடர் கழகமாக நிமிர்ந்து எழுந்தது!

அந்தக் கழகத்தின் அரசியல் அணியாகத்தான் தி.மு.கழகம் பிறந்தது!

தி.மு.க. தோன்றியபோது, அண்ணா அறிவித்த பிரகடனம் என்ன? தி.க.வும், தி.மு.க.வும் இரட்டைக் குழல் துப்பாக்கியாகத் திகழ்ந்து சமுதாயத்திற்கு வரும் கேடுகளை அகற்றும் என்றுதான் முழங்கினார்!

தி.மு.கழகம், தன் தாய்க் கழகமான திராவிடர் கழகத்தை அழிக்க நினைத்ததே இல்லை!

திராவிடர் இயக்க உணர்வுகள் இந்த மண்ணுக்கு எவ்வளவு அவசியமானவை என்பது தி.மு. க.வுக்குத் தெரியும். அதனால்தான் 1967 வரையில் காங்கிரஸ் தலைவர் காமராசரை ஆதரித்த தந்தை

பெரியாரைப் போய்ப் பார்த்துவிட்டு, வாழ்த்துப் பெற்று, அதன் பிறகே அண்ணா அவர்கள் முதல்வர் பொறுப்பை ஏற்றார்.

அ.தி.மு.க.வோ, திராவிடர் கழகம் - திராவிட முன்னேற்றக் கழகம் இரண்டையும் அழித்துவிட வேண்டுமென்று சிந்திக்கிறது - அதற்கான செயல்முறைத் திட்டங்களைத் தீட்டுகிறது!

வயிற்றுப் பிழைப்புக்காகக் கட்சி நடத்தியவர் பெரியார் என்று வாய்கூசாமல் இன்றுவரை பேசியும், எழுதியும் வருகிற ஒருவரை ஆஸ்தான கவியாக்கி, அவர் வாயிலாக இந்த இரு இயக்கங்களையும் தீர்த்துக் கட்டி விடலாமென்று உசுப்பிவிட்டிருப்பது அந்தச் செயல்முறைத் திட்டங்களில் ஒன்றாகவே கருதப்படுகிறது. புலிகளின் பயங்கரப் பாய்ச்சலுக்கே அஞ்சாத திராவிடர் இயக்கம், இந்தப் பூனைகளின் சத்தத்திற்கு அஞ்சி நடுங்கிவிடப் போவதில்லை!

திராவிடர் கழகத்தின் திட்டங்கள், கொள்கைகள் - அந்தக் கழகம் வகுக்கும் போராட்ட முறைகள் தி.மு.கழகத்தின் ஆணைப்படிதான் வகுக்கப்படுகின்றன என்பது புனைந்துரை! பொய்யுரை! பொல்லாதார் கிளப்பும் புழுதிப்பொடி!

திராவிட இன உணர்வு - தமிழ் உணர்வு - தமிழர் என்ற உணர்வு - இவற்றைக் கட்டிக் காப்பதில் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கெனத் தனியான திட்டங்களும், முறைகளும் உண்டு!

உணர்வுகளின் அடிப்படை ஒன்றாக இருக்கலாம்! அத்தகைய உணர்வுகளை வெளியிட முடியாமல் அ.தி.மு. க.வில்கூட பலர் தவித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும்.

இன உணர்வு -

மொழி உணர்வு -

இவற்றைப் பேணிக் காப்பது தவறு என்று யார் கூறினாலும் அவர்கள் நம்மைத் திசை திருப்ப முனைகிறார்கள் என்றே பொருள்!

அன்புள்ள,

மு. க.

(1-07-1980)

745. அட! அங்கேயும் இப்படியா?

உடன்பிறப்பே,

நம்முடைய கழகம் என்றாலே எரிந்து விழுந்து, எழுதத்தகாத சொற்களையெல்லாம் தேடிப்பிடித்து எழுதித் தாக்குவதையே தன்னுடைய கொள்கையாகக் கொண்டிருக்கிற ஒரு ஏடு; சில நாட்களுக்கு முன்பு அமெரிக்க நாட்டு ஜனாதிபதித் தேர்தலைக் குறித்து ஒரு கட்டுரை எழுதியிருந்தது.

அமெரிக்காவில் நவம்பர் மாதம் ஜனாதிபதி தேர்தல் நடைபெற்று 1981 ஜனவரியில் புதிய ஜனாதிபதி பதவியேற்க இருக்கிறார். ஜனநாயகக் கட்சியின் சார்பில் கார்ட்டரும் - குடியரசுக் கட்சியின் சார்பில் முன்னாள் நடிகர் ரீகன் என்பவரும் போட்டியிடக் கூடும். ரீகன்! இருபது ஆண்டுகளுக்கு முன்பு அமெரிக்காவில் புகழ்பெற்ற நடிகர்களில் ஒருவர். இப்போது நடிப்புத் தொழிலில் ஈடுபாடில்லை.

ரீகன், ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவாரேயானால், அவர் ஒருவேளை வென்று விடக்கூடுமோ என்று கார்ட்டரின் ஜனநாயகக் கட்சி அஞ்சுகிறதாம்!

கார்ட்டர் கட்சியின் தேர்தல் சின்னம் கழுதை! ரீகன் கட்சியின் தேர்தல் சின்னம் யானை!

இந்தத் தேர்தலில் சினிமாக் கவர்ச்சிக்கு வெற்றி வாய்ப்பு இருக்கக்கூடும் என்று ஒரு யூகத்தை நான் குறிப்பிட்டுள்ள அந்த ஏடு வெளியிட்டிருக்கிறது. எம்.ஜி.ஆர். அவர்களைத் தூக்கிப் பிடித்துத் துதி பாடுவதையே இலட்சியமாகக் கொண்டிருக்கும் அந்த ஏட்டின் ஆசிரியர், கார்ட்டர் - ரீகன் தேர்தல் போட்டி குறித்து செய்துள்ள விமர்சனம் கவனத்தில் கொள்ள வேண்டிய ஒன்றாகும். அந்த ஏடு வெளியிட்டுள்ள கட்டுரையின் வாசகங்கள் சிலவற்றை அப்படியே தருகிறேன்! படித்துப் பார்!

கழுதை ஜெயித்தாலும், யானை ஜெயித்தாலும் நம் நாட்டைப் பொறுத்தவரையில் அமெரிக்கா, அமெரிக்காவாகவே இருக்கும். ரொட்டி, ரொட்டிதான் - கல், கல்தான்!

இது அந்தக் கட்டுரையின் முடிவுரைப் பகுதியாகும்! அதாவது கட்டுரை ஆசிரியரின் கொள்கை முத்தாய்ப்பு!

முன்னாள் நடிகர் ரீகனுக்கும் - இந்நாள் ஜனாதிபதி கார்ட்டருக்குமுள்ள வேறுபாடுகளை அவர் விளக்குகிற விதம் காண்க!

சினிமாவுக்கு முழுக்குப் போட்டு விட்டு அரசியலில் இருபது ஆண்டுகளுக்கு மேலாக ரீகன் இருக்கிறார். இருந்தாலும் அவரது பழைய சினிமாக் கவர்ச்சி வென்று விடுமென்று கழுதைக் கட்சி (ஜனநாயகக் கட்சி) அஞ்சுகிறது. ரீகனுக்கு வயது எழுபது! முகத்தின் சுருக்கங்களை அவர் மேக்அப் போட்டு மறைக்கவில்லை. அவர் சினிமாவைப் பற்றிப் பேசுவது இல்லை. அமெரிக்க யுவர்களின், யுவதிகளின் ரசனை முற்றிலும் மாறிவிட்டது என்று ரீகன் பகிரங்கமாகப் பேசுகிறார். இருந்தாலும் அவரது சினிமாக் கவர்ச்சி, கழுதைக் கட்சியை பயமுறுத்துகிறது! ஏன்? காரணம் உண்டு! அந்தக் கால ரீகனை ரசித்துப் பாராட்டியவர்கள் நாற்பது முதல் அறுபத்தைந்து வரையில் என்ற வயதுத் தொகுப்பில் இருக்கிறார்கள். அவர்களது எண்ணிக்கை ஏறத்தாழ எண்பத்து ஐந்து லட்சமாகும்.

இப்போது ரீகன் நடிக்காவிட்டாலும் அவரது பழைய சினிமாக் கவர்ச்சி மறைய வில்லையாம். அந்த ஏடு, அத்துடன் நிறுத்தவில்லை. இன்னும் எழுதுகிறது பார்!

நான் நடித்த சினிமாக்களில் நான் தோற்றதே கிடையாது! எவ்வளவு பேர் எதிர்த்தாலும், எனது துப்பாக்கி ரவைகள் குறையாமல் வளரும்! ஜெயிப்பது நான்தான்! நான் ஜனாதிபதியானால் மற்ற நாடுகள் எல்லாமே நம்மை மதிக்கும்படி செய்வேன். உலகை ஜெயிப்பேன்! இப்படி ரீகன் பேசி வருகிறாராம். இந்தப் பேச்சின் முன் கார்ட்டரின் விஞ்ஞானத் திறனாய்வு பிரசங்கங்கள் எதுவுமே எடுபடுவதில்லை.

நமது எதிர்ப்பு ஏட்டில், அதாவது எம்.ஜி.ஆர். அவர்களின் ஆதரவு ஏட்டில், தீட்டப்பட்டுள்ள வாசகங்களைத்தான் அப்படியே எடுத்து - நீ படிப்பதற்கென வழங்கியுள்ளேன்!

படிப்பறிவு மிக்கவர்கள் நிறைந்துள்ள அமெரிக்க நாட்டிலேயே பழைய கால ஸ்டண்ட் நடிகர் ஒருவரின் சினிமாக் கவர்ச்சி - தேர்தல் வெற்றியினைத் தேடித் தரக்கூடியதாக இருக்கக்கூடுமென்று கணிக்கப்படுகிறதென்றால்.....

இதனை எம்.ஜி.ஆர். அவர்களின் ஆதரவுப் பத்திரிகையே நீண்ட கட்டுரைவாயிலாக நீட்டி முழக்கிய பிறகு, உனக்கு நான் என்ன புதிதாகப் புரிய வைக்க வேண்டியிருக்கிறது!

அன்புள்ள,

மு. க.

(3-07-1980)

746. அவர்களை இன்னும் பேசவிடுவோம்!

உடன்பிறப்பே,

சட்டமன்றத் தேர்தலில் கிடைத்த வெற்றிக்குப் பிறகு, அ.தி.மு.க.வில் இனிமேலாவது அடக்கம் போற்றப்படும் என எதிர்பார்த்தோம்!

கடந்த காலத்தில் எம்.ஜி.ஆர். ஆட்சி கடைப்பிடித்த வழிவாங்கும் போக்கு கைவிடப்படும் என்று கருதினோம்!

ஆனால் இவற்றுக்கு மாறாக, ஆணவம் மிக அதிகமாகத் தலைதூக்கி நிற்பதையே காண முடிகிறது! பழிவாங்கும் படலங்கள் அடுக்கடுக்காகத் தொடங்கி விட்டன!

எனினும், பொறுத்திருந்து பார்ப்போம் என்ற மனப்பக்குவத்துடன்தான் திராவிட முன்னேற்றக் கழகத்துப் பயணம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது!

வெற்றி பெற்ற அணி சுமார் 90 இலட்சம் வாக்குகளையும் - தோற்றுவிட்ட அணி சுமார் 83 இலட்சம் வாக்குகளையும் பெற்றிருக்கிற கணக்கை மறந்துவிட்டு வெற்றி வெறிக்கூத்து நடத்திக் கொண்டிருப்பவர்களைப் பார்க்க வியப்பாகத்தான் இருக்கிறது!

கழக உடன்பிறப்புகள் தாக்கப்படுகிறார்கள். காவல் துறையினரிடம் புகார் செய்தால், புகார் செய்தவர்கள் கைது செய்யப்படுகிறார்கள்.

இந்த அநியாயத்தைக் கண்டித்து உண்ணாவிரதமிருந்த சட்டமன்ற உறுப்பினர் பம்மல் நல்லதம்பி, வைத்தி போன்ற கழக உடன்பிறப்புகளை தற்கொலை செய்து கொள்ள முயன்றார்கள் எனக் குற்றம் சுமத்திக் கைது செய்து வழக்குப் போடுகிறார்கள்.

இது ஓரிடத்தில் மட்டுமல்ல! தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இவ்வாறு நமது கழகக் கண்மணிகள் ஒடுக்கப்

படுவதற்கான முயற்சிகள், காவல்துறையின் துணையோடு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன!

கழகப் பாசறை வீரர்களை அடித்து, உதைத்து, சிறையிலிட்டு அவர்தம் உள்ளத்து உறுதியைக் குலைத்து விடலாமென்று எம்.ஜி.ஆர். அரசு கனவு காண்கிறது!

ஒன்றிரண்டு கோழைகள் - கொள்கையற்ற பிறவிகள் - தோட்டம் நுழைந்து தோப்புக் கரணம் போடுவதாலேயே, உயிரையும் பணயம் வைத்து இலட்சியத்தைக் காக்கக்கூடிய இந்த இயக்கத்துக் கொள்கைத் தங்கங்களைப் பித்தளைகளாக்கி விட முடியாது!

எம்.ஜி.ஆரையும், அவரது கட்சித் தலைவர்களையும் உசுப்பிவிட்ட ஒரு கூட்டம் தனது மாய வலை அனைத்தையும் விரித்துக்கொண்டு கைவரிசை காட்டி வருகிறது!

இரண்டில் ஒன்றை முதலில் அழித்து விட்டால், அடுத்ததை அழிப்பது மிகச் சுலபம் என்று இரவு நேரத்து இரகசியக் கூட்டங்களில் விவாதித்து முடிவெடுத்து, அவ்வப்போது தேவைப்படுகிற சூழ்ச்சிகளில் அந்தக் கூட்டம் இறங்கியிருக்கிறது!

எவனோ அடித்து வீழ்த்தினான்! இதனைக்கொல்ல அவன் உடலிலே எத்தனை காயங்களைத் தாங்கினானோ! எனக்கும் தெரியாது! உனக்கும் தெரியாது! ஆனால், அந்தப் புலித்தோலில் நான் அநாயசமாக அமர்ந்திருக்கிறேன், பார்த்தாயோ!

என்று சிவாஜி கண்ட இந்து ராஜ்யம் நாடகத்தில் அண்ணா வசனம் எழுதி, அதனை அவரே வேடமிட்டுப் பேசும்போது நாடகக் கொட்டகையே கையொலியால் அதிரும்!

அண்மையில் ஒரு இந்திரா காங்கிரஸ் தலைவர்கூட என்னிடத்தில் சொன்னார். அண்ணாவின் அந்த நாடகத்தை மீண்டும் நாடு முழுதும் தொடர்ந்து நடத்தலாமேயென்று!

அப்படிப்பட்ட சில சூழ்ச்சிக்காரர்கள் இன்றைக்குப் பேனா பிடித்து எம்.ஜி.ஆர். கட்சியைத் தூண்டி விடுகிறார்கள். அந்தக் கட்சியினரும், அவர்தம் சூழ்ச்சிக்கு முன்பு இரையானதைப் போலவே இப்போதும் இரையாகி எட்டப்பர்களாக - வீடணர்களாக - எதிரே வந்து நிற்கிறார்கள்!

அரசியல் நொண்டி கருணாநிதி என்று ஒரு அமைச்சர் ஆர்ப்பரித்திருக்கிறார். அதை வெளியிடுவதிலே ஒரு ஆனந்தம் அவரை மறைமுகப் பங்குதாராராகக் கொண்ட ஒரு ஏட்டுக்கு!

அமைச்சர் பதவிக்காக, இந்த நொண்டியின் காலைப் பிடித்துக்கொண்டு மாலை மாலையாகக் கண்ணீர் வடித்துக் கடைசியாக அந்தப் பதவியைப் பெற்ற நிகழ்ச்சி, இப்போது அந்த அமைச்சர் பெருமகனுக்கு மறந்து போயிருக்கலாம்!

இப்போது அந்த அமைச்சருக்கு அருகிலே அமர்ந்துள்ள மூத்த அமைச்சர்கள் ஒரு நிகழ்ச்சியை மறந்திருக்கவே முடியாது!

வேளாண்மைத்துறை அமைச்சராக இருந்த மாண்புமிகு கோவிந்தசாமி அவர்கள், சென்னைப் பொது மருத்துவமனையில் மரணப் படுக்கையில் இருந்த போது எங்களை அருகே அழைத்து என்ன சொன்னார்?

இனி நான் உயிரோடு இருக்கப் போவதில்லை. நான் போன பிறகு எங்கள் வகுப்பாருக்கோ அல்லது தென்னாற்காடு மாவட்டத்துக்கோ அமைச்சர் பதவி தருவதாக இருந்தால், வேறு யாருக்காவது கொடுங்கள்! இந்தத் துரோகிக்கு மட்டும் கொடுத்து விடாதீர்கள்.

இப்படி எங்களிடம் கையடித்துச் சத்தியம் வாங்கிக் கொண்டார். அவருக்குத் தந்த உறுதிமொழியை 1971 வரையில்தான் காப்பாற்ற முடிந்தது! 1971 தேர்தல் முடிந்ததும்தான் என் காலில் விழுந்து கண்ணீர்கொட்டி பதவியைப் பெற்றுக்கொண்டார், இந்தப் பண்பாளர் (?) - ஆமாம்! இந்த நொண்டியின் காலில்! அப்போது ஊனமுற்ற காலாகத் தெரியவில்லை! உதயபூஜைக்குரிய காலாகத் தோன்றியது!

இன்று அவருக்கு எம்.ஜி.ஆரின் பாதங்கள் செந்தாமரைப் பாதங்களாகத் தோன்றுவதாகச் சொல்லுவார்! எம்.ஜி.ஆர். எச்சரிக்கையாக இருக்க வேண்டும். காலை வாணித்துக்கொண்டே, கால்களில் கண்ணீர் அபிஷேகம் செய்து கொண்டே காலை வாரி விடுவதில் வல்லவர்! இது அன்றைக்கே அமைச்சர் கோவிந்தசாமி கூறிய உண்மை! அதை மீறியதால் எனக்கு இப்போது கிடைக்கிறது நொண்டிப் பட்டம்!

உடன்பிறப்பே, ஒன்று புரிகிறதா உனக்கு!
கடுமையான கண்டனங்கள்!
தரக்குறைவான விமர்சனங்கள்!
இழிவான கேலிகள்! கிண்டல்கள்!
எரிச்சலூட்டும் எழுத்துகள்!
ஆணவம் பிடித்த பேச்சுகள்!

இத்தனையும் ஆளுங்கட்சி முகாமிலிருந்தும், அவர்களின் ஆதரவாளர்களிடமிருந்தும் இன்றைக்குப் புறப்பட்ட வண்ணமிருக்கின்றன!

இன்னும் சற்றுப் பொறுமையாக இருப்போம்!

தோல்வியால் துவண்டு விட்டோம் என்பதற்கு அடையாளமல்ல, இந்தப் பொறுமை!

பின்னுக்குச் சென்று முன்னால் பாயும்போதுதானே காளையின் வேகம் கடுமையாக இருக்கும்!

ஃஃ அய்யா வழி!

ஃஃ அண்ணா வழி!

ஃஃ அறவழி வந்த நமக்கு இந்த ஆரவாரங்களும் - ஆர்ப்பாட்டங்களும் - ஆணவக் குரல்களும் - சர்வசாதாரணம்! நமது நீண்ட நெடுவழியில் இப்படி எத்தனையோ நரிகள் ஊளையிட்டதையும் - ஆந்தைகள் அலறியதையும் கேட்டுப் பழக்கப்பட்டிருக்கிறோம்!

அடக்குமுறைக்குத்
துவண்டு விடமாட்டோம்!
ஆணவச் செயல்களுக்கு
அஞ்சிவிட மாட்டோம்! எனவே
அவர்களை இன்னும்
பேசவிடுவோம்!

அன்புள்ள,

மு. க.

(5-07-1980)

747. மேதா விலாசம் கண்டனையோ?

உடன்பிறப்பே,

ஒரு மேதை தனது அறிவின் விரிவைக் காட்டிக்கொள்ளும் தோரணையில் பேசியிருக்கிறார்.

கருணாநிதி, முதலில் தன்னுடைய ஆடிட்டர், இரண்டு வக்கீல்கள், ஒரு டாக்டரை ஒழிக்கட்டும். பிறகு பிராமணரை வேண்டுமானாலும் ஒழிக்கட்டும். பிராமணியத்தை வேண்டுமானாலும் ஒழிக்கட்டும்.

மேதை பிரமாதமாக எதையோ கண்டுபிடித்து விட்டவரைப் போலப் பேசினாலும் கூட, நமக்குச் சாதகமான வாதத்தையே நமக்காக எடுத்து வைத்து, அவரையுமறியாமல் வாதாடியிருக்கிறார் என்பதற்காக மேதைக்கு நன்றி கூறத்தான் வேண்டும்.

எனது ஆடிட்டர், வக்கீல், டாக்டர் இவர்களில் பிராமணர்களும் இருக்கிறார்கள் என்பது மேதையின் கண்டுபிடிப்பு!

தனிப்பட்ட முறையில் மட்டுமல்ல! தி.மு.கழகத்திலேகூட பிராமண நண்பர்கள் உறுப்பினர்களாக இருக்கிறார்கள் - கழக அமைப்புகள் சிலவற்றில் நிர்வாகிகளாகவும் விளங்குகிறார்கள் என்பதை நானும் பலமுறை தெளிவுபடுத்தியிருக்கிறேன். நமது பேராசிரியர் அவர்களும் கவர்னர் உரை விவாதத்தின்போது சட்டமன்றத்தில் விளக்கியிருக்கிறார். பிராமணியத்திற்குத்தான் கழகம் மறுப்பு தெரிவிக்கிறதேயல்லாமல் - தனிப்பட்ட பிராமணர்களை ஒழிப்பது என்பது அதன் கொள்கையல்ல என்பதை அண்ணா அவர்கள் திட்டவட்டமாக அறிவித்திருக்கிறார்கள்.

பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமைகளுக்காகவும் - அவர்களுக்கு எண்ணிக்கை அடிப்படையில் நியாயமாகக் கிடைக்க வேண்டிய இடங்களுக்காகவும் வாதாடுவதும் - போராடுவதும் - வகுப்புவாதமெனவும், பிராமணர்களைத் தனிப்பட்ட முறையில் எதிர்ப்பது எனவும் - ஒரு விஷமப் பிரச்சாரம்

நீதிக்கட்சிக் காலத்திலிருந்தே ஒரு சிலரால் திட்டமிட்டுச் செய்யப்பட்டு வருகிறது!

தமிழ் - தமிழர் - தமிழ்ச் சமுதாயம் என்று பேசினாலே - இனவெறியைக் கிளப்புகிற செயல் என்று குற்றம் சாட்டப்படுகிறது!

அண்ணா மறைமுகமாகக் கண்டித்தும் - நான் நேரடியாகத் தடுத்துச் சொல்லியும் கூடக் கேட்காமல் படை ஒன்றைத் திரட்டி - அதற்குக் குண்டர்களின் அரசன் என்ற சிறப்புப் பட்டத்தையும், எம்.ஜி.ஆர். அவர்களின் கையால் பெற்றுக்கொண்ட இந்த மேதையினும் மேதை (?) தமிழர் படையின் தலைவராகத் தன்னைத் தானே நியமித்துக்கொண்டு தலைகால் தெரியாமல் குதித்ததை மக்கள் மறந்துவிடவில்லை.

சட்டப் பேரவைத் தேர்தல் நடந்தது! முடிந்தது! இரண்டு அணிகளில் ஓர் அணி வென்றது! இதனையொட்டித் தி.மு.கழகத்தை முதலில் தீர்த்துக் கட்டிவிட்டு - அதற்குப் பிறகு அடுத்த இலக்கினைக் கவனிக்கலாமென்று திட்டமிட்டுக்கொண்டு தினந்தோறும் இழிதகைப் பிரச்சாரத்திலேயே ஈடுபட்டுக் கொண்டிருக்கும் பிராமணியப் பற்றாளர் சிலரைத்தான் - நாம் குள்ளநரிக் கும்பல் என்கிறோம்! வஞ்சக வட்டாரத்தினர் எனக் குறிப்பிடுகிறோம்! அவர்கட்கு எடுபிடிகளாக எட்டப்பத்தனம் செய்வோர் சிலர்!

அந்தச் சூழ்ச்சி வியூகத்தை உடைத்தெறிய நாம் முனைந்தெழுந்தால், அதனைத் தமக்கும் பாதுகாப்புதான் என்று கருதாமல் நம்மீதே பாய்ச்சல் நடத்துகிறார்களே? அதுதான் வேதனையான வேடிக்கை!

தமிழ்நாட்டான் எவ்வளவு தாழ்ந்து போனான், என்ற கணக்கு உடனடியாகத் தெரியாது! எதிர்காலம் சபிக்கும்போதுதான் தெரியும்! ஆதிக்கபுரியினரின் அடிமைகளாகத் தமிழ்நாட்டு மக்கள் அவதிப்படப் போகிற காலம் வரும்போதுதான், செய்துவிட்ட தவறுகளைப் பற்றிச் சிந்திக்கத் தோன்றும்!

நமக்கென்ன! நம் கட்டையைப் போடும் வரையில் ஏதாவது பட்டம் பதவியிருந்தால் போதும் என, எச்சில் சொட்டும் நாக்குடன் அலைந்து கொண்டிருப்பவர்களுக்கு - எதிர்காலத்தைப் பற்றி என்ன கவலை!

பிராமணியத்தை மிகக் கடுமையாக எதிர்த்து வாழ்நாள் வரையில் களத்தில் நின்ற தந்தை பெரியார் அவர்கள், மூதறிஞர் ராஜாஜியின் சடலத்திற்கு எரியூட்டிய இடத்தில் குலுங்கிக் குலுங்கி அழுது கண்ணீர் பெருக்கிய காட்சியை மேதைகள் மறந்துவிட்டனர் போலும்! அந்த நட்பின் இலக்கணத்திற்கும், கொள்கையின் தெளிவுக்கும் இடையே இருக்கும் வேறுபாட்டினை இந்த மேதைகளால் உணர முடியாது! அதனால்தான் எடுத்தேன் கவிழ்த்தேன் என்று எதை எதையோ பேசுகிறார்கள். அறிவுலகத்திற்குப் புதிதாக அறிமுகமாகியிருக்கும் இந்த மேதைகள்!

அன்புள்ள,

மு. க.

(6-07-1980)

748. கோபமா? கொள்கையா?

உடன்பிறப்பே,

என்னிடம் நெஞ்சார அன்புகொண்ட தமிழ்ப் பெரியவர் ஒருவர் என்னைச் சந்தித்தார். நெருக்கடி காலத்து நெருப்புச்சூட்டில் கழகம் வாட்டப்பட்ட போதும் அடிக்கடி வந்து ஆறுதல் சொல்லக்கூடிய தமிழறிஞர் அவர்.

எளிய கோலம்! இனிய பண்பு! இனமான உணர்வு! இவற்றின் உருவமாகத் திகழக்கூடியவர்!

தேர்தல் தோல்விகளைப் பொருட்படுத்தத் தேவையில்லை! தொடரட்டும் தொண்டு! தமிழர்களுக்கு நல்ல காலம் ஏற்படாமலே போய் விடாது! தழுதழுத்த குரலில் பேசினார்.

கடிதங்களை முரசொலியில் படித்து வருகிறேன். அமைச்சர் ஒருவரின் ஆணவம் பிடித்த நொண்டிப் பேச்சுக்கு எழுதியிருந்த பதில்கூட பாராட்டத்தக்க முறையிலே இருக்கிறது என்று கூறினார்.

கோபம் சில நேரங்களில் அதிகமாக வெளிப்படுகிறது! குறைத்துக்கொள்வது நல்லதல்லவா? - என்று கேட்டார். நான் வியப்புற்றேன்.

கோபமா? எனக்கா? ஏதாவது எடுத்துக்காட்டு ஒன்று சொல்ல முடியுமா? என அடக்கத்துடன் கேட்டேன்.

வீடணர்கள் - எட்டப்பர்கள் என்ற சொல்லை அடிக்கடி பயன்படுத்துகிறீர்கள். அது சிலருடைய உள்ளத்தைப் புண்படுத்துகிறது. நட்புறவைச் சிதைத்து விடக் கூடுமல்லவா?

- என விளக்கமளித்தார்!

நான் என் நண்பர்களாயிருந்தவர்களைக் குறித்துத்தான் சொல்வதாக அவர்கள் ஏன் தவறாக எடுத்துக்கொள்ள வேண்டும்? இனத்தையும், தமிழ்ச் சமுதாயத்தையும் எதிரிகளிடம் காட்டிக் கொடுப்பவர்களைப் பற்றித்தானே எனக்கு மனக்குறை?

குற்றமுள்ள நெஞ்சங்கள்தானே குறுகுறுக்க வேண்டும். நீங்கள் குறிப்பிடுகிறவர்களுக்கு மனக்காழ்ப்பு ஏற்படுவானேன்?

- என்று அவரைக் கேட்டேன்.

ஏதோ என் கடமை! சொல்ல வேண்டியதைச் சொன்னேன். இதயத்தில் குறித்து வைத்துக் கொள்ளுங்கள். கோபம் கூடாது!

உருக்கத்துடன் - என்பால்கொண்ட அன்புடன் அதைச் சொன்னார்!

என் குடும்பத்தைப் பற்றி - குலத்தைப் பற்றி - பெண்டுபிள்ளைகளைப் பற்றி - எவ்வளவு இழிவாக எழுத வேண்டுமோ, அவ்வளவு இழிவாக எழுதுவதற்கென்றே எதிரணியில் இருப்போர் பேனா பிடிக்கிறார்கள்! மேடையேறு கிறார்கள்!

எதிரணியில் உள்ள சாதாரணப் பேச்சாளர்கள் கூட அல்ல. மிகப்பெரும் பொறுப்புகளிலே இருப்பவர்கள்கூட அநாகரிக அர்ச்சனைகளில் ஈடுபடுகிறார்கள்! அவர்கள் துப்பறியும் அதிகாரிகளாம்! நான் திருடனாம்! - பொறுப்பேற்றவுடனே இப்படிப்பட்ட பொன்மொழியை உதிர்க்கிறார்கள்!

இத்தனையும் நான் தாங்கிக் கொள்ளலாம் - என்னைத் தலைவனாக ஏற்றுக் கொண்டிருக்கிற உடன்பிறப்புகளும் தாங்கிக்கொள்ள வேண்டுமென்றுதான் கூறி வருகிறேன்.

அதே நேரத்தில் என்னையல்ல! நமது இன உணர்வை, எதிரிகளின் காலடியில் போடுவதற்குக் காட்டிக்கொடுக்கும் காரியத்தைச் செய்யும் யாரைக் கண்டாலும், அவர்கள் எவ்வளவு உயரமான இடத்திலே இருந்தாலும் - அவர்களைப் பார்க்கும்போது.....

எதற்கும் அஞ்சாத இராவணன் -
வஞ்சக விபீஷணனைத் தன் தம்பி
யாகப் பெற்ற மாபழிக்கே அஞ்சினான்

என கருத்தமைந்த பாடலை இயற்றினாரே! பாவேந்தர் பாரதிதாசன் - அந்தப் பாடல் வரிகள் என் நினைவுக்குவரத்தான் செய்கின்றன!

அந்த நினைவு அலைகள், நேரம் வரும்போது வெளிப்படுவது கோபத்தால் அல்ல! கொள்கை மீது கொண்டுள்ள அழியாத - உறுதியான பற்றினால்தான்!

அந்தக் கொள்கைப்பற்று, இந்த உடலில் கடைசி மூச்சு இருக்கும் வரையில் எள்முனையளவும் குறையாது! குறையவே குறையாது!

அன்புள்ள,

மு. க.

(7-07-1980)

749. முதல்வருக்கு ஒரு வேண்டுகோள்!

உடன்பிறப்பே,

சட்டமன்ற மேலவையிலே மேலவைத் தலைவர் அவர்களுக்கு பிறந்தநாள் வாழ்த்துக்கூறி உரையாற்றிய முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள், திருப்பதி தமிழ்நாட்டுடன் சேர்வது பற்றிய பிரச்சினையை எழுப்பி - அதைத் தொடர்ந்து ஆந்திரர்களின் எதிர்ப்புகள் கிளம்பி, அதற்குப் பிறகு முதலமைச்சர் அவர்கள் சிலம்புச் செல்வருக்கு சென்னை ராஜேஸ்வரி திருமண மண்டபத்தில் நடைபெற்ற விழாவில் தனது திருப்பதி பற்றிய பேச்சுக்கு விளக்கமும் அளித்து ஒருவாறு புதிய சிக்கலுக்கு முற்றுப்புள்ளியும் வைத்து விட்டார்.

திருப்பதி பற்றிய தமது சட்டமேலவைப் பேச்சு, சர்ச்சையைக் கிளப்பியிருக்கிறது என்று கூறிய முதல்வர், மற்றவர்கள் எந்த அளவுக்கு எச்சரிக்கையாகவும், விழிப்புடனும் இருக்கிறார்கள் என்பதை இதிலிருந்து தெரிந்துகொள்ள வேண்டும் என்றார்.

இப்படித் தினமணி ஏடு, செய்தி வெளியிட்டிருக்கிறது. பிறந்த நாள் விழாவில் நன்றி கூறிப் பேசிய மேலவைத் தலைவர் மாண்புமிகு ம.பொ.சி. அவர்கள், திருப்பதியைப் பற்றி யாரும் சிந்திக்கவே கூடாது என்று யாரும் தடுக்க முடியாது என்றார் என்ற செய்தியையும் அதே தினமணி வெளியிட்டுள்ளது.

தமிழகத்தின் எல்லைகளைக் காப்பதிலும் - குமரி மாவட்டம், தாய்த் தமிழகத்தோடு சேர வேண்டும் என்பதிலும் - திருத்தணியைத் தமிழகத்தோடு இணைப்பதிலும் - சென்னைத் தலைநகரம் தமிழர்களுக்கே உரிமையுடையது என்பதிலும் - நடைபெற்ற அறவழிக் கிளர்ச்சிகளில் அண்ணா தலைமையில்

திராவிட முன்னேற்றக் கழகம் தனது பங்கினை அளிக்கத் தவறிடவில்லை.

தேவிகுளம் - பீர்மேடு பகுதிகளைத் தமிழகம் இழப்பது கூடாது என்பதற்கு நடைபெற்ற அனைத்துக்கட்சி போராட்டத்திலும் தி.மு.கழகம் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளது.

எனவே தமிழ் மாநிலத்தின் எல்லைகளைக் காப்பதிலும், தமிழகத்திற்குரிய பகுதிகளை இழக்க முடியாது என மறுப்பதிலும் தி.மு.கழகம், உறுதியாகவே நின்றிருக்கிறது!

இப்போது இந்த சர்ச்சை மீண்டும் கிளப்பப்பட வேண்டுமா? சிந்திக்க வேண்டிய ஒன்று!

பெரும்பாலான தமிழர்கள் திருப்பதி கோயிலுக்குச் செல்கிறார்கள் என்பதைக் காரணமாகக் காட்டினால், அடுத்து சபரிமலைக்கும் பெரும்பாலான தமிழர்கள் செல்கிறார்களே என்ற வாதம் எழுந்துவிடக்கூடுமல்லவா?

சிலம்புச் செல்வரைப் பாராட்டிப் பேசுகிறபோது, அவர் திருப்பதிக்காகப் போராடினார் என்பது நினைவுக்கு வந்ததுபோல - அவர் தேவிகுளம், பீர்மேடு பகுதிகளுக்காகவும் போராடினார் என்பதும் நினைவுக்கு வந்திருந்தால் மற்றொரு சர்ச்சை உருவாகியிருக்குமல்லவா?

எப்படியோ, மேலவையில் முதல்வர் பேசிய போதும் - ராஜேஸ்வரி மண்டபத்து விழாவிலே கருத்துகள், விளக்கங்கள் கூறப்பட்டபோதும் - இது தேவையான சர்ச்சைதானா என்று எண்ணத்தான் தோன்றுகிறது!

முதல்வர் திறமைசாலி! எதையும் பேசிவிட்டுச் சமாளிக்கக்கூடியவர்! நல்லவேளையாக நான் பேசியது ஆந்திராவில் உள்ள திருப்பதியை அல்ல. என்னுடைய நண்பர் ஆக்டர் திருப்பதியைப் பற்றித்தான் பேசினேன். அதை ஏடுகள் தவறாக வெளியிட்டு விட்டன! என்றுகூட அவர் விளக்கமளித்திருப்பார். ஏனோ மறந்துவிட்டார்!

திருப்பதி தமிழகத்தோடு சேர வேண்டுமென்று போராட்டம் எதுவும் நடத்தப் போவதில்லை என்று முதலமைச்சர் கூறி, தனது மேலவைப் பேச்சுக்கு இப்போது முற்றுப்புள்ளி வைத்து விட்டார்!

சிலம்புச் செல்வரின் பிறந்த நாள் விழா மட்டும், சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பு வந்திருக்குமேயானால் அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள், திருப்பதியைத் தமிழகத்தோடு இணைப்போம்! மத்திய அரசு ஒத்துக்கொள்ளவில்லையென்றாலும் அந்த இணைப்பை நடத்தியே தீருவேன் என்று தமிழ்நாட்டு மக்களுக்கு வாக்குறுதி வழங்கியிருப்பார்.

வழங்கினால் என்ன?

மத்திய சர்க்கார் இணங்காவிட்டாலும் விவசாயிகள் கடன் சுமார் முந்நூறு கோடியையும் ரத்து செய்வேன்.

- என்று தேர்தலின்போது கூறிவிட்டு, இப்போது மத்திய சர்க்காரின் பக்கம் கைகாட்டி விடவில்லையா?

அதைப்போல அவர் திருப்பதியைப் பற்றி தேர்தல் வாக்குறுதி அளித்திருந்தால்கூட ஆச்சரியப்பட வேண்டியதில்லை!

சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்களின் பிறந்த நாள் மார்ச்சிலோ, ஏப்ரலிலோ, அல்லது மே முதல் வாரத்திலோ வந்திருந்தால், நான் வேடிக்கைக்காகச் சொல்லவில்லை! எம்.ஜி.ஆர். அவர்கள் - அப்படியொரு எல்லைப் போராட்ட அறிவிப்பைச் செய்திருப்பார்! பிறகு மத்திய அரசின் தலையிலே பழியைப் போட்டிருப்பார்!

பரவாயில்லை! இந்த அளவோடு அவர் தனது மேலவைப் பேச்சுக்கு விளக்கமளித்து முடித்துக்கொண்டது - பாராட்டத்தக்கதேயாகும்!

பார்! பார்! திருப்பதியை ஆந்திரர்கள் வலுவிலே நம்மிடம் தருவதற்கு முன்வருகிறார்கள். அதை இந்தக் கருணாநிதி குறுக்கிட்டுத் தடுக்கிறானேயென்று - தயவு செய்து யாரும் என்மீது குற்றம் சுமத்திட வேண்டாம்!

திருப்பதியைத் தந்தால் வேண்டாமென்று சொல்கிற தமிழன் யாருமே இருக்கமாட்டான்!

அப்படி வந்தால் திருப்பதி மட்டுமா வரும்! அ.தி.மு. க. அரசின் அலட்சியப் போக்கினால் - திருப்பதிக்குப் போய்விட்ட மிகப்பெரிய ரயில்வே தொழிற்சாலையுமல்லவா சேர்ந்து வரும்!

முதல்வருக்கு ஒரு வேண்டுகோள்! மற்றவர்கள் எச்சரிக்கையாக இருக்கிறார்களா என்று சோதிப்பதற்காக இப்படிப்பட்ட புதிய சர்ச்சைகளைத் திடீர் திடீர் என வெடிக்காமல் இருப்பீர்களாக!

உடன்பிறப்பே! இந்த வேண்டுகோள் தேவையானதுதானே! அதாவது புதிய அமளிகளுக்கு வித்திடக்கூடாது என்பதற்காக!

அன்புள்ள,

மு. க.

(8-07-1980)

750. என்னுடைய நாட்கள் எண்ணப்படுகின்றன!

உடன்பிறப்பே,

தனிப்பட்ட முறையில் என்னிடமும், சிறப்பாகத் தமிழ் இனத்தின் முன்னேற்றத்தில் அக்கறையும் கொண்ட நல்லிதயப் புலவர் ஒருவர், கோபத்தைக் குறையுங்கள் என்று என்னைச் சந்தித்தபோது கூறியதையும் - அதனையொட்டி கோபமா? கொள்கையா? என்ற தலைப்பிட்டு நான் உனக்குக் கடிதம் எழுதியதையும் இப்போது மீண்டும் உனக்கு நினைவூட்ட வேண்டியிருக்கிறது! ஏன்? அந்தத் தமிழ் அறிஞருக்குக் கூடத்தான் நினைவூட்ட வேண்டியிருக்கிறது! மறுபடியும் மடலை ஒருமுறை படித்துப்பார்க்க வேண்டுமென்பதற்காக!

சில நேரங்களில் பொறுமையை நமது இயலாமை என்றும் - நாம் கடைப் பிடிக்கும் அமைதியைக் கோழைத்தனமென்றும் சிலர் எண்ணி விடுகிறார்களே! என்ன செய்வது?

பூம்புகார் படத்தில் மாயவநாதன் என்ற அற்புதக் கவிஞர் எழுதிய பாடல்!

தப்பித்து வந்தானம்மா - பாவம்
தனியாக நின்றானம்மா!

அந்தப் பாடலைச் சுட்டிக்காட்டி ஒரு நண்பர் - என்னைக் கேலி செய்து எழுதியிருக்கிறார்! நான் கோபிக்கவில்லை! கோபத்தைக் குறைக்கச் சொன்ன அந்தத் தமிழ் அறிஞர் என்னைத் தவறாகப் புரிந்துக் கொள்ளக்கூடாது!

நானாவது அண்ணா நகர்த் தொகுதியில் தப்பித்து வந்தேன்! ஒத்துக் கொள்கிறேன்! அதனால் தப்பித்து வந்தேன் என்ற பாடல் எனக்குப் பொருந்தத்தான் செய்கிறது. ஆனால், நான் தனியாக

நிற்கிறேனா அல்லது தமிழ் ரத்தம் ஓடுகின்றவர்களின் ரத்தபாச உணர்வுகளின் துணையோடு நிற்கிறேனா - என்பது கோபத்தைக் குறையுங்கள் எனக் கூறிய அந்தத் தமிழ் அறிஞருக்கே தெளிவாகத் தெரியும்!

நான் அண்ணா நகர்த் தொகுதியில் வெற்றி பெற்றுத் தப்பித்து வந்தவன்! என்னை ஏகடியம் செய்யும் அருமை நண்பரோ, அண்ணாமலையில் 1962-இல் தோற்றுத் தனியாக நின்றவர்! வென்றவர் வீழ்ந்தார் மரணத்தில் என்ற காரணத்தால் ஏற்பட்ட இடைத் தேர்தலில் - பாவம்! தனியாக நின்றவருக்கு மீண்டும் போட்டியிட வாய்ப்பு கிட்டியது!

பல்வேறு மாவட்டக் கழகங்களின் பாசறை வீரர்களுடன் தேர்தல் பணிக்கான படையினைக் கூட்டிச் சென்று அந்தத் தொகுதியிலேயே முகாமிட்டிருந்தேன்!

எத்தனை இரவுகள் கண்விழிப்பு! எத்தனை வேளைகள் பசியும் பட்டினியும்! இரண்டு பகல்கள், ஒரு இரவு காரிலேயே நானும், நண்பர் இராகவானந்தமும் தூத்துக்குடிவரை சென்று அந்த இடைத்தேர்தலுக்கான நிதி ஐயாயிர ரூபாயைச் சேர்த்து வந்தோம்! உண்மையை ஒளிக்கக்கூடாது! நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களின் நிதி உதவியும் அந்தத் தேர்தலுக்குப் பெரிதும் பயன்பட்டது!

அங்கே நடைபெற்ற இடைத்தேர்தலை காமராசருக்கும், கருணாநிதிக்கும் நடைபெறுகிற போட்டி என்று அன்றைய ஏடுகள் செய்தி வெளியிட்டன. முடிவு? தப்பித்து வராமல் தனியாக நின்றவர், அன்று அண்ணாவின் ஆணையேற்று நாங்கள் வழங்கிய உழைப்பின் காரணமாகத் தனியாக நிற்காமல் எங்களுடன் வந்து சேர்ந்தார்! ஆம், இடைத்தேர்தலில் வெற்றி கிடைத்தது!

உடன்பிறப்பே, அதன்பிறகு 1967 பொதுத்தேர்தல்! அண்ணா தலைமையில் 138 பேர் சட்டமன்றத்துக்குச் செல்கிறோம்! என்னை இன்று கேலி செய்து எழுதுகிறாரே, இந்த அன்பு நண்பர் -

தப்பித்து வராமல் - பாவம்

தனியாக நின்றார் அய்யோ!

அமைச்சரவை அண்ணா தலைமையில் அமைகிறது! அன்பு நண்பரோ தனியாக நிற்கிறார்! தவியாய்த் தவிக்கிறார்!

அதன் பிறகு சில மாதங்கள் கழித்து ஆசிரியர் தொகுதிக்கான மேலவை உறுப்பினர் தேர்தல்! அதில் போட்டியிட விரும்பி அண்ணாவுக்குத் தூது அனுப்புகிறார்! போட்டியிடலாம், ஆனால் ஒரு நிபந்தனை! வெற்றி பெற்று மேலவை உறுப்பினராக வந்தால் அமைச்சர் பதவி கேட்கக் கூடாது! இப்படியொரு நிபந்தனையைக் கண்டிப்பாக விதிக்கிறார் அறிஞர் அண்ணா!

அண்ணா என்ன என்னைப் போலவா? எதையும் நம்பும் ஏமாளியா? தீர்க்க தரிசியாயிற்றே! அதனால் அப்படியொரு நிபந்தனையோடு போட்டியிட அனுமதி தருகிறார்!

தேர்தல் முடிகிறது - மேலவை உறுப்பினராகிறார் மேதகு நண்பர்!

அண்ணா உயிருடன் இருக்கும் வரையில் அளிக்கப்படாத அமைச்சர் பதவி, நான் முதலமைச்சர் பொறுப்பை ஏற்றவுடன் வழங்கப்படுகிறது!

உடன்பிறப்பே! ஒரு வேடிக்கை கேள்! நல்ல நகைச்சுவையும் கூட! அந்த நண்பரே கூறிய நகைச்சுவை!

நான் முதல்வராக இருந்தபோது, பிரதமர் இந்திரா காந்தி அவர்களால் சட்டப் பேரவையில் திறந்து வைக்கப்பட்ட அண்ணா படத்தைச் சுட்டிக்காட்டி ஒரு அமைச்சர், இந்த நண்பரைக் கேட்டாராம் - படத்தில் இருக்கும் அண்ணா அப்படியே இறங்கி வந்தால் எப்படி இருக்கும்? என்று! உடனே இந்த நண்பர் என்ன சொன்னாராம் தெரியுமா? அவரே என்னிடமும், நாவலரிடமும் சொன்னதைத்தான் இப்போது சொல்கிறேன்!

அண்ணா அவர்கள் படத்திலிருந்து இறங்கி வந்தால் நம் இருவர் காதுகளையும் பிடித்து இழுத்து நீங்கள் எப்படி மந்திரிகளானீர்கள்! போங்க வெளியே! என்று கூறுவார்!

என அந்த நண்பர் ஜோக் அடித்தாராம்! உடன்பிறப்பே! உண்மையும் அதுதானே!

இப்படித் தப்பித்து வரமுடியாமல் 1962-இல் தனியாக நின்றவரை இடைத்தேர்தலில் வெற்றிபெற வைத்து, ஊர்ஊராக அழைத்துச் சென்று வெற்றிப் பாராட்டு விழா நடத்தி - 1967லும் தப்பித்து வர முடியாமல் தனியாக நின்றவரை எம்.எல்.சி.யாக ஆக்கி

அமைச்சராகவும் அருகில் உட்கார வைத்துக் கொண்ட எனக்குத் தான்,

தப்பித்து வந்தானம்மா - பாவம்
தனியாக நின்றானம்மா!
என்ற பாட்டைப் போட்டுக் காட்டுகிறார் அவர்!

விவசாயிகள் கடன் அறுபது கோடி ரூபாய் ரத்து என்று அறிவித்துவிட்டு - அதற்கு பட்ஜெட்டில் நிதி ஒதுக்கீடு செய்யாததை நான் சுட்டிக்காட்டுவது கூடக் குற்றமாம்!

நான் பெருந்தன்மை இல்லாதவனாம்! எழுதுகிறார்! என் மனைவியை எமனுக்கு ஒப்பிட்டு எழுதியவரின் பேனா - எப்படியும் வளையும்!

பாவம் - வளைய வேண்டிய இடத்தில் இருக்கிறார்!

ஃ அர்த்தராத்திரி!

ஃ மழைத்தூறல் கூட இல்லை!

ஃ அவர் குடை பிடித்துக் கொண்டிருக்கிறார்!

ஃ இப்போதும் தோல்வியைத் தழுவித் தனியாக நின்றவருக்கு எம்.ஜி.ஆர். அவர்கள் காட்டிய தயவால் - தலைகால் தெரியாமல் குதிக்கிறார்!

அதற்கு நான்தானா கிடைத்தேன்? என்னைத் தாக்கியா தனது எஜமானனுக்குப் பாத பூஜை செய்ய வேண்டும்?

நான் கரையில் கிடக்கும் முதலையாம் - அதனால் என்னைப் பார்த்தால் அவருக்கு பயமே தோன்றவில்லையாம்!

ஆனால், அவர் படத்தை எக்ஸ்பிரஸ் ஏட்டில் பார்த்தேன்! புதரை விட்டு வெளி வந்த நரியைப் பார்த்து மான் நடுங்குவதைப் போல நடுங்கி விட்டேன்!

கோபத்தைக் குறையுங்கள் எனக் கூறிய தமிழ் அறிஞர் என்னை மன்னித்து விடுவாராக! நான் அப்படி நடுங்கியதற்காக! அல்லது நடுங்கியதை இந்தக் கடிதத்தில் எழுதுவதற்காக!

பாளையங்கோட்டை சிறைச்சாலை, திருச்சி இந்தி எதிர்ப்பு மாநாடு, கருப்புச் சட்டை அணிந்து பவனி இவைகள் எல்லாம் உலகை நம்ப வைக்க நடத்திய திருவிளையாடல்கள்!

அதே நண்பர் எழுதிய மணிவாசகங்கள்தான் இவைகளும்!

என் செய்வது! கழிவறையில் கற்கண்டுக்கட்டிகளையா தேடமுடியும்?

என் தம்பி கருணாநிதி அடைபட்டிருக்கும் பாளையங் கோட்டை தனிமைச் சிறைச் சாலை எனக்கு யாத்திரை ஸ்தலம்.

என்று என்னை ஆளாக்கிய அண்ணனே சொன்ன பிறகு - எழுதிய பிறகு - அண்ணாமலைக்கு அரோகராக்களின் - சான்று இதழ்களுக்காகவா நான் தவம் கிடக்கப் போகிறேன்!

இந்திரா காங்கிரசுடன் கூட்டுச் சேர்ந்ததால் நான் இந்தி எதிர்ப்பை விட்டு விட்டேனாம்!

ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்பு அரசின் சார்பில் சட்டசபையில் இந்தித் திணிப்புத் தீர்மானம் கொண்டு வரப்படுமென்று அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் அறிவித்தாரே முதலமைச்சர் எம்.ஜி.ஆர்., அந்தத் தீர்மானம் எப்போது வருமென்று அந்தக் கட்சியின் இந்தப் புதிய தலைவர் கூறுவாரேயானால், அப்போது தெரியும் தி.மு. க.வின் நிலை என்ன என்பது?

உறங்கிக் கொண்டிருக்கும் வழக்குகள் சீறிப் பாயுமோ என்ற அச்சம் காரணமாக இருக்குமோ?

வழக்குகளுக்குப் பயந்து நான் அல்லது நாம் இந்தித் திணிப்பை எதிர்க்க வில்லையாம்!

சரி! வாதத்திற்கு ஒத்துக் கொள்கிறேன். இன்னும் வழக்குகளிலேயே சிக்காத முதல்வர் எம்.ஜி.ஆர். இந்தி எதிர்ப்புத் தீர்மானத்தைச் சட்ட சபையில் கொண்டு வருவதுதானே!

ஃ வழக்குகளாம்!

ஃ நான் அஞ்சுகிறேனாம்!

ஃ அரிசி விவகாரம் தானே நமது கழகத்திற்கே ஆரம்பக் களங்கமாக வந்தது!

அதுபற்றி அப்போது எம்.ஜி.ஆரும் - அ.தி.மு. க. சட்ட மன்ற உறுப்பினர்களும் என்ன பேசினார்கள் என்பதைச் சட்டமன்ற நடவடிக்கைக் குறிப்புகளிலேயிருந்து எடுத்து, நாள்தோறும்

வெளியிடக்கூடிய சூழ்நிலையை நண்பர் ஏற்படுத்தி விடுவார் போலிருக்கிறதே!

மொழிப் பிரச்சினை குறித்துத் தி.மு. க.வின் வலிமை வாய்ந்த நிலையைப் புரிந்துகொள்ள, கல்வி மானியம் சட்டமன்றத்தில் வரும்வரையிலாவது பொறுத்துக் கொண்டிருக்கக் கூடாதா?

வழக்குக்கும், சிறைச்சாலைக்கும் அஞ்சி நடுங்கும் கோழையல்ல கருணாநிதி!

எல்லோருடைய நாட்களும் எண்ணப்படுகின்றன! அதைப் போல என்னுடைய நாட்களும் எண்ணப்படுகின்றன! அந்த நாட்களின் இறுதி நாள், சிறைக் கூண்டுக்குள்ளே எண்ணி முடிக்கப்படுமேயானால், அதற்காக நான் மகிழ்ச்சியடைவேன்! அன்று எனது அன்பு நண்பர் அவர்களும் இனிப்பு வழங்குவார்!

குழிப்பறிப்போர் - குத்தீட்டி கொண்டு முதுகில் குத்துவோர் - நன்றி மறந்தோர் - நரிக்குணம் கொண்டோர் - அசூயைக்காரர் - அவதூறுபேசுவோர் - இவர்களின் மத்தியில் வாழ்வதை விட, அந்த முடிவு எவ்வளவோ மேல்!

எனவே வரட்டும் வழக்குகள்!

எண்ணப்படட்டும் என்னுடைய நாட்கள்!

அன்புள்ள,

மு. க.

(11-07-1980)

751. தூண்டியது யாரோ?

உடன்பிறப்பே,

தனிப்பட்ட முறையில் நண்பர்களாக மட்டுமல்ல! தி.மு.கழகத்திலேகூட பிராமண நண்பர்கள் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். கழக அமைப்புகள், சிலவற்றில் நிர்வாகிகளாகவும் விளங்குகிறார்கள் என்பதை நானும் பலமுறை தெளிவுபடுத்தியிருக்கிறேன். நமது பேராசிரியர் அவர்களும் கவர்னர் உரை விவாதத்தின் மீது சட்டமன்றத்தில் விளக்கியிருக்கிறார். பிராமணியத்திற்குத்தான் கழகம் - மறுப்பு தெரிவிக்கிறதேயல்லாமல் தனிப்பட்ட பிராமணர்களை ஒழிப்பது என்பது அதன் கொள்கையல்ல என்பதை அண்ணா அவர்கள் திட்டவட்டமாக அறிவித்திருக்கிறார்கள்.

இவ்வாறு நான் 6-7-80 சென்னை முரசொலியில் எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டிருந்தேன்.

பிராமணர்கள் மொத்தமாக எங்களுக்குப் பகைவர்கள் அல்ல! திராவிட முன்னேற்றக் கழகத்திலே பிராமணத் தோழர்கள் இருக்கிறார்கள்!

- என்று கவர்னர் உரை விவாதத்தின்போது கருத்து தெரிவித்த பேராசிரியர் அவர்கள்,

முதலமைச்சராக இருக்கிற எம்.ஜி.ஆர். அவர்களும், எதிர்க்கட்சித் தலைவராக இருக்கிற கலைஞர் அவர்களும் ஒரு அரசியல் கருத்து வேறுபாட்டால் பிரிந்திருக்க நேரிட்டிருக்கலாம். ஒரு குறைபாட்டைச் சொல்லி கண்டிக்க வேண்டிய நிலையில் இருக்கலாம். அவர்கள் இருவரும் ஒருவரையொருவர் எதிர்க்கிற காரணத்தால், யாரோ சில பேர் இதுதான் தங்களுக்குச் சந்தர்ப்பம் என்று நினைத்து தங்களுடைய பேனாவை ஓட்டுவார்களேயானால், அந்தப் பேனாக்களுடைய கருத்துகளைத் தமிழ்நாட்டிலே முறியடிப்பதற்காக தந்தை பெரியார் அவர்கள்மீது

நான் ஆணையிட்டுச் சொல்கிறேன்! என்னுடைய வாழ்நாளை நான் அர்ப்பணிக்கத் தயாராக இருக்கிறேன்.

- எனச் சட்டப்பேரவையில் தெளிவுபட அறிவித்தது இன்னமும் தமிழ் மக்களின் செவிகளில் முழங்கியவாறு இருக்கிறது.

இவையனைத்துக்கும் பிறகு மதுரைக்குச் சென்ற முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள், வேண்டுமென்றே இட்டுக்கட்டி உண்மைக்கு மாறான ஒரு செய்தியினைக் கூறியிருக்கிறார்.

தி.மு.க.வுக்கு பிராமணர்கள் ஓட்டுப் போடவில்லையென்றும், அ.தி.மு.க.வுக்குத்தான் ஓட்டுப் போட்டார்கள் என்றும் நான் பேசியதாக முதலமைச்சர் கூறியிருக்கிறார். நான் பேசாத ஒன்றைப் பேசியதாகக் கற்பனை செய்துகொண்டு, முதலமைச்சர் அவர்கள் மதுரையில் திசை திருப்பும் உரை நிகழ்த்தியிருப்பது அவர் ஏற்றுக்கொண்டுள்ள பெரிய பொறுப்புக்கு அழகல்ல! முறையுமல்ல!

பிராமணியத்தைத்தான் எதிர்க்கிறோம் என்று சட்டமன்றத்தில் பேராசிரியர் பேசிய கருத்தின் தொடர்பாக, பிராமணியம் எல்லா சாதிகளிலும் காணப்படுகிறது. கட்சித் தலைமைகளிலும் காணப்படுகிறது என்று விளக்கமளித்த முதலமைச்சர் அவர்கள், திடீரென்று திராவிட முன்னேற்றக் கழகத்தை ஒரு வகுப்புவாத இயக்கம்போலச் சித்தரித்துக் காட்டி மதுரையிலே பேசியிருப்பது விந்தையிலும் விந்தையான ஒன்றாகும்.

நெல்லையில் திராவிடர் கழகத்தார் நடத்திய பார்ப்பன எதிர்ப்பு மாநாட்டை நான்தான் மறைமுகமாகத் தூண்டிவிட்டதாகவும் முதலமைச்சர் கூறியிருக்கிறார்.

குட்டியைவிட்டுச் சூடு பார்க்கும் குரங்குபோல, திராவிடர் கழகத்தை ஏவி விட்டு நான் திருநெல்வேலி மாநாட்டை நடத்தச் சொல்லியிருக்கிறேனாம்!

குரங்கு என்கிறார், குட்டி என்கிறார், பரவாயில்லை! கோட்டைச் சிம்மாசனத்தில் அமர்ந்திருப்பவர், எதையும் சொல்வார்! இன உணர்வு கொள்கைகளைப் பரப்புவதிலும், செயல்படுத்துவதிலும் திராவிடர் கழகத்தின் அணுகுமுறை வேறு! திராவிட முன்னேற்றக் கழகத்தின் அணுகுமுறை வேறு! இதனைப்

புரிந்து கொண்டிருந்தும் கூட, நெல்லையில் திராவிடர் கழகம் நடத்திய மாநாட்டுக்குக் கருணாநிதிதான் தூண்டுதல் என்பது, என்ன ராஜதந்திரமோ தெரியவில்லை!

1971-ஆம் ஆண்டு எம்.ஜி.ஆர். அவர்கள் தி.மு.கழகத்தின் பொருளாளராக இருந்த காலம்! அப்போது சேலத்தில் பெரியார் நடத்திய ஒரு ஊர்வலத்தில் இராமர் சிலைகள் மற்றும் கடவுளர் சிலைகள் இழிவுபடுத்தப்பட்டன. அதற்குத் தி.மு.கழகம் தூண்டுதல் என்றுதான் எதிரிகள் பிரச்சாரம் செய்தார்கள்! அப்போது எம்.ஜி.ஆர். அவர்களும் சேர்ந்து தானே, இல்லை! நாங்கள் தூண்டவில்லை. அது திராவிடர் கழக அணுகுமுறை! என்று அறிவித்தோம்! அதை எம்.ஜி.ஆர். அவர்கள் மறந்துவிட்டாரா?

தி.மு.கழகத்துக்கும், திராவிடர் கழகத்துக்கும் மனத்தாங்கல்கள் இருந்தபோதுதான் பிள்ளையார் உடைப்புப் போராட்டத்தைப் பெரியார் நடத்தினார். பிள்ளையாரையும் உடைக்க மாட்டோம், பிள்ளையாருக்குத் தேங்காயும் உடைக்கமாட்டோம் என்று அப்போது அண்ணா அறிவித்தார்!

திராவிடர் கழகம், பெரியார் தலைமையிலும் சரி - அதற்குப் பிறகும் சரி - தனக்கெனக் கொள்கைத் திட்டங்களை வகுத்துக்கொண்டு தனித்தியங்கும் வலிமையும் - இயல்பும் கொண்ட ஒரு சமுதாய இயக்கம்!

அந்த இயக்கத்தின் அன்றாட நடவடிக்கைகளுக்கோ - சிறப்பு நடவடிக்கைகளுக்கோ - தி.மு. க.வின் தூண்டுதல்தான் காரணமென்பது, ஒரு முதலமைச்சர் பொறுப்பில் இருப்பவர் பேசுகிற பேச்சாகத் தெரியவில்லை!

யாரோ ஏனோதானாக்கள் - எடுத்தேன் கவிழ்த்தேன் என்று பேசுவோர் - இப்படிப்பட்ட திசை திருப்பும் கருத்துகளை வாரியிறைத்துவிட்டுப் போய்விடலாம்.

ஆனால், ஒரு முதல்வர்? ஒற்றர் படையைத் தன்னிடம் வைத்திருப்பவர் - மனமறிந்து இப்படி ஒரு பொய்யைச் சொல்லக்கூடாது!

நண்பர் வீரமணியைச் சந்தித்துப் பேசுவதுகூட குற்றமா?

அப்படியானால், அந்தக் குற்றத்தை நமது முதல்வர் செய்ததே கிடையாதா?

நாவலர், தனது பிறந்தநாளையொட்டி பெரியார் நினைவிடத்திற்கு மலர்வளையம் வைக்கச் சென்றார். வீரமணி அவரை வரவேற்றார் என்று செய்தி வந்தது. அதை வைத்து நாவலர், வீரமணி அவர்களிடம்,

நான் வெற்றி பெற்ற நெல்லையில் மாநாட்டை வெற்றிகரமாக நடத்துங்கள்!

- என்று தூண்டிவிட்டு வந்தார் என்று முடிச்சுப் போட்டு விடுவதா?

நெல்லை மாநாட்டில் பேசிய திராவிடர் கழகப் பொதுச்செயலாளர் வீரமணி என்ன குறிப்பிட்டிருக்கிறார்?

எங்களுக்கு எதிராக மாநாடு போட்டால் மீண்டும் இங்கு வருவோம். இந்த மாநாட்டுக்குத் தடை விதிக்க எவ்வளவோ முயற்சித்தார்கள். ஆனால், மேலே ஆட்சியில் இருப்பது யார்? எங்கள் சகோதரர்கள். அதனால்தான் உங்கள் ஊர்வலத்துக்குத் தடையும், எங்களுக்கு அனுமதியும் கொடுத்திருக்கிறார்கள். நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

இது நெல்லை மாநாட்டில் - ஆம்! பார்ப்பன எதிர்ப்பு மாநாட்டில் திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் ஆற்றிய உரையின் ஒரு பகுதி! இதை வைத்துக் கொண்டு, முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள்தான் இந்த மாநாட்டை நடத்தச் சொல்லி தூண்டிவிட்டிருக்கிறார் என்று கூறுவது அறிவுடைமையாகுமா?

அதுமட்டுமல்ல, எம்.ஜி.ஆர். அரசின் சார்பில் திராவிடர் கழகப் பொதுச் செயலாளருக்கு எழுதப்பட்டுள்ள கடிதத்தில்கூட, மாநாடு நடத்தாதீர்கள்! என்று அறிவுரையோ - ஆணையோ - எதுவும் கூறப்படாமல்,

எந்தவிதக் கலவரமோ - விபரீதங்களோ ஏற்படாத வகையில் - பொதுமக்களின் மனம் நோகாமல் - ஊர்வலம், ஊர்வலத்தில் சேர்க்கப்பட இருக்கும் நிகழ்ச்சிகள், கொள்கை வெளியீடு, இவை போன்றவைகளில் கவனம் வைத்து எத்தகைய விபரீதங்களும் ஏற்பட இடம் தராமல், உங்கள் கொள்கையை வெளியிட்டு, மாநாட்டு நிகழ்ச்சிகளை நடத்தித் தந்து தமிழக அரசுக்கு ஒத்துழைப்புத் தர வேண்டுமென தமிழக முதல்வர் அவர்கள் விரும்புகிறார்கள்.

- என்றுதான் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

உங்கள் கொள்கைகளை வெளியிட்டு, மாநாட்டு நிகழ்ச்சிகளை நடத்தித் தந்து

- என்று எவ்வளவு அனுசரணையாகக் கடிதம் எழுதப்பட்டிருக்கிறது, அரசின் சார்பாக!

உங்கள் கொள்கைக்கு நாங்கள் குறுக்கே நிற்கவில்லை! ஆனால், விபரீதங்கள் எதுவும் ஏற்படாமல் பார்த்துக்கொள்ளுங்கள்!

- என்றுதானே அரசாங்கத்தின் கடிதத்திற்குப் பொருள் கொள்ளவேண்டும்!

அதை விடுத்து, அரசின் கடிதம்கூட அந்த மாநாட்டுக்கு மறைமுகமாக ஆதரவு காட்டக்கூடிய முறையில்தான் எழுதப்பட்டிருக்கிறது என்று திரித்துக்கூற எவ்வளவு நேரமாகிவிடும்?

பொதுவாக, சமுதாயப் பிரச்சினைகளில் - பெரியாரின் கொள்கைகளை - பேரறிஞர் அண்ணாவின் இலட்சியங்களைப் பரப்புவதில் - திராவிட இன உணர்வின் அடிப்படையில் ஒன்றுபட்டு நிற்கிறோம் என்பதற்காக, திராவிடர் கழகத்தின் செயல்முறைத் திட்டங்களையும் - அணுகுமுறைகளையும் - தி.மு.கழகந்தான் தூண்டி விடுகிறது என்று பேசுவதும் - தி.மு.கழகத்தை, ஒரு வகுப்புவாத இயக்கம் போலப் படம் பிடித்துக் காட்டுவதும் - வன்மையாகக் கண்டிக்கத்தக்க போக்காகும்!

அன்புள்ள,

மு. க.

(15-07-1980)

752. நாவலர் பார்த்துக் கொள்வாராக!

உடன்பிறப்பே,

பதவியெனும் கிரீடம் தலையில் தூக்கி வைக்கப்பட்டு விட்டால், சில பேருக்கு என்ன பேசுவதென்றே தெரியாமல் போய் விடுகிறது! அவர்கள் என்ன பேசினாலும், அதுவே தெய்வ வாக்கு என்று ஏற்றிப் போற்றிப் பிழைப்பு நடத்துவதற்கென்றே சில மனிதர்களும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

அடுத்தவனிடம் கைநீட்டும்போது - முதலிலே ஒருவனிடம் கைநீட்டிப் பெற்றது மறந்து போய் விடுகிறது! அத்தகைய பண்பாளர்கள் (?) நாட்டில் வட்டமிட்டுக் கொண்டிருக்கும் வரையில், நமது முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் என்ன வேண்டுமானாலும் பேசுவார்! எதை வேண்டுமானாலும் செய்வார்!

கருணாநிதி எழுதுகிற கட்டுரைகளை நான் படிப்பதே இல்லை! யாராவது நண்பர்கள் சொல்வார்கள். குறிப்பு வரும். பார்த்துத் தெரிந்து கொள்வேன்.

இப்படி மதுரைக் கூட்டத்தில் மிகுந்த அரசியல் நாகரிகத்துடன் (?) பேசியிருக்கிறார். அவர் பேச்சை நான் ஏடுகளில் படித்துப் பார்த்தேன். நான் சாமான்யன்! அவரோ முதலமைச்சர்! முதலமைச்சரின் திருவாயிலிருந்து வெளி வருகிற முத்துகளைப் படிக்காமல் அலட்சியப்படுத்த முடியுமா?

எதிர்க்கட்சியில் இருப்பவன், முதல்வர் என்ன சொல்கிறார் என்று அக்கறை காட்டுவதுதானே முறை!

அவருக்கு வேண்டுமானால், எதிர்க்கட்சியிலே உள்ள தலைவர்கள் என்ன சொல்லுகிறார்கள், என்ன எழுதுகிறார்கள் என்று அறிந்து கொள்வது தேவையில்லாததாக இருக்கலாம்!

முன்பே ஒருமுறை அவர் சொல்லியிருக்கிறார். மறைந்த தலைவர்களுடைய அறிவுரைகளைத்தான் பின்பற்றுவேனே

தவிர - உயிரோடு இருக்கின்ற தலைவர்களின் யோசனைகளைக் கேட்கத் தேவையில்லையென்று!

முற்றும் உணர்ந்தவர்! மார்க்ஸ் - லெனின் - மா-சே-துங் - போன்றவர்கள் எல்லாம் மண்டியிடத்தக்க அளவுக்குப் புரட்சிகரமான கருத்துகளை வெளியிட்டு, புரட்சிகரமான காரியங்களையும் செய்து புரட்சித் தலைவர் எனப் பொதுவுடமைக் கட்சிக்காரர்களாலேயே போற்றப்படுகிறவர்!

அத்தகைய உச்சியிலே இருக்கக்கூடிய ஒருவர், இந்தச் சாதாரணக் கருணாநிதி எழுதக்கூடிய கட்டுரைகளைப் படிப்பாரா? படிப்பதுதான் அவரது தகுதிக்கும், திறமைக்கும் - அறிவுக்கும், ஆற்றலுக்கும் அழகா?

ஏதோ நான் செய்த பாக்கியம், அவரது நண்பர்கள் சொல்லக் கேட்டு - அல்லது அவரது அரசுத் துறைச் செயலாளர்கள் தருகிற குறிப்பைப் பார்த்து என்னுடைய கட்டுரைகளின் கருத்துகளையாவது கடைக்கண்ணால் நோக்குகிறார்!

மீண்டும் இப்போது ஒரு உதாரணம்! அவர் மதுரையிலே பேசி; மதுரை மாலைமுரசிலே வெளிவந்திருப்பதைத்தான் நான் இந்தக் கடிதத்தில் சுட்டிக் காட்டுகிறேன்.

நான் கையெழுத்திட்டால் அது நடக்கிறது! கருணாநிதி கையெழுத்திட்டால் கடன் வாங்கலாம். அல்லது கடனைத் திருப்பிக் கொடுக்கலாம் அல்லது பொய் எழுதலாம்.

ஆமாம்! முதல்வர் கையெழுத்திட்டால் அது கட்டளையாக மாறி நடக்கிறது! என் கையெழுத்து கடன் வாங்கத்தான் பயன்படும்!

முதல்வர் கையெழுத்து சாமான்யமான கையெழுத்தா? மருத்துவக் கல்லூரி மாணவர் தேர்வுகள் எல்லாம் முடிந்த பிறகு கூடத் தனது இஷ்டத்துக்கு அமெரிக்கத் தமிழர் வீட்டுப் பிள்ளைகள் என்று சில பேரை மருத்துவக் கல்லூரியில் சேர்க்கச் சொல்லி போடப்பட்ட கையெழுத்தல்லவா?

அந்தக் கையெழுத்து மூலம் இடப்பட்ட கட்டளையை நீதிமன்றம் புறக்கணித்துவிட்டதெல்லாம், இப்போது கிளறக்கூடாத விவகாரம்! கிளறினால் அவரது கையெழுத்துக்குரிய மகிமை போய்விடும்!

ஒரு பத்திரிகைக்காரர் - கருணாநிதியின் நண்பர் - தேர்தலுக்குப் பணம் வசூலிக்க அமெரிக்காவுக்குப் போனாராம்! எவ்வளவு பணம் வாங்கினார்கள் - யார் யார் கொடுத்தார்கள் என்று எனக்குத் தெரியாது, கேள்விப்பட்டேன்!

தெரியாத ஒரு விஷயத்தைப் பற்றி முதலமைச்சர் எவ்வளவு தெளிவாக மதுரைக் கூட்டத்தில் கூறியிருக்கிறார் பார்த்தாயா?

அதாவது முதலமைச்சர், மற்றவர்களுக்கு மேடையில் பேச வழிகாட்டுகிறார்!

ஒரு பெரிய குண்டைத் தூக்கிப்போட்டு விட்டு, அப்படிக் கேள்விப்பட்டேன் - அதைப் பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது என்று முடித்துவிட்டால் அது மிகக் கெட்டிக்காரத்தனமான பேச்சு!

எம்.ஜி.ஆரின் நண்பர் - ஒரு பத்திரிகை ஆசிரியர் - அடிக்கடி வெளிநாடுகளுக்குப் போய் எம்.ஜி.ஆரின் அந்நியச் செலாவணி - கறுப்புப் பணக் கமிஷன் விவகாரங்களைக் கவனித்துக் கொள்கிறாராம் - எனக்குத் தெரியாது. கேள்விப்பட்டேன் அவ்வளவுதான்!

இப்படி யாராவது பேசினால், அவர் முதலமைச்சரைப் போலப் பேசுகிறாரே! என்று சபாஷ் போட்டு சர்டிபிகேட் கூடக் கொடுத்து பாராட்டு விழாவும் நடத்தி முடித்து விடலாம்.

சரி! அவரது மதுரைப் பேச்சு பற்றி இத்துடன் நிறுத்துகிறேன்.

இதோ சென்னையில் பெருந்தலைவர் காமராசர் அவர்களின் பிறந்தநாள் விழாவில் நமது முதல்வர் திடீரெனத் தன்னாட்சி முழக்கம் செய்திருக்கிறார் பார்த்தாயா? மாநிலங்களுக்கு தன்னாட்சி வேண்டும்! தனியாட்சி அல்ல! என்று விளக்கம் வேறு அளித்திருக்கிறார்.

மாநிலத் தன்னாட்சி என்பதுதான் மாநில சுயாட்சி! இதைப் பல கூட்டங்களில், பல மாநாடுகளில் தி.மு. க. தலைவர்கள் விளக்கியிருக்கிறார்கள்.

1972-இல் மதுரை மாநாட்டில், மாநில சுயாட்சி தராவிட்டால் ராணுவத்தைச் சந்திக்கத் தயார் என்று, தி.மு.கழகப் பொருளாளராக இருந்த எம்.ஜி.ஆர். கர்ச்சனை புரிந்தார்.

அட்டைக் கத்தியை வைத்துக்கொண்டு ராணுவத்தைச் சந்திப்பாரா? என்று அப்போதைய அனந்தநாயகி அம்மையார்கூட கேட்டார்!

1974-இல் தமிழகச் சட்டப் பேரவையில் தி.மு. க. அரசின் சார்பில் மாநில சுயாட்சித் தீர்மானம் கொண்டு வரப்பட்டது. மாநிலத் தன்னாட்சி கேட்கிறோமே தவிர, தனியாட்சி கேட்கவில்லையென்று அரசின் சார்பில் விளக்கம் தரப்பட்டது! அப்போது சட்டப்பேரவையில் எதிர்க்கட்சி வரிசையில் இருந்த எம்.ஜி.ஆர். கட்சி, மாநில சுயாட்சித் தீர்மானத்திற்கு எதிராக - அதாவது மாநிலத் தன்னாட்சித் தீர்மானத்திற்கு எதிராக - முழக்கமிட்டது!

அண்ணா மாநில சுயாட்சி பற்றிக் கூறவே இல்லையென்று எம்.ஜி.ஆர். கட்சியினர் வாதிட்டனர். மாநில சுயாட்சியை வலியுறுத்தி அண்ணா ஆற்றிய உரைகள், அளித்த பேட்டிகள் அனைத்தும் அப்போது தி.மு.க. சார்பில் சட்டப்பேரவையில் எடுத்து வைக்கப்பட்டன. அதன்பிறகும் மாநில சுயாட்சி (மாநிலத் தன்னாட்சி) தீர்மானத்தை அ.தி.மு.க. எதிர்த்தது!

1980 நாடாளுமன்றத் தேர்தலின்போது நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் - மத்தியில் கூட்டாட்சி - மாநிலத்தில் சுயாட்சி - என்று பேச ஆரம்பித்தார்!

கூட்டணி ஆட்சிக்கும், கூட்டாட்சிக்கும் வேறுபாடு தெரியாமல் ஏதேதோ விளக்கங்களை அளித்தார்!

அவர் சொல்வது தவறு எனத் தெரிந்தும்கூட மாநில சுயாட்சி வீரர்கள் ஆமாம் போட்டுக் கொண்டிருந்தனர். பாவம்! அவர்கள் நிலை அவ்வாறு!

இப்போது சட்டமன்றத் தேர்தல் முடிந்து கடற்கரையில் நடந்த வெற்றிவிழாக் கூட்டத்தில், மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் கேட்கிறேன். மாநில சுயாட்சி அல்ல! என்று ஒரு விளக்கம் கொடுத்தார்.

நேற்று பெருந்தலைவர் காமராசர் விழாவில் - பிரிந்து போகின்ற தனியாட்சி கேட்கவில்லை. அதிக அதிகாரமுள்ள மாநிலத் தன்னாட்சி கேட்கிறோம் என்று ஒரு தெளிபொருள் விளக்கத்தை வழங்கியிருக்கிறார்.

தி.மு.கழகம் எடுத்துக் கூறி வருவதும் இதைத்தான்! 1974-ஆம் ஆண்டில் சட்டப்பேரவையில் மாநில சுயாட்சித் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட போதும் - அதைத் தொடர்ந்தும் இதே விளக்கங்கள்தான் தரப்பட்டு வந்தன!

மாநில சுயாட்சிப் பிரச்சினையில் இடையிலே பல குழப்பங்களுக்கு ஆட்பட்டு மற்றவர்களையும், எம்.ஜி.ஆர். அவர்கள் குழப்பி வந்தார் என்றாலும்கூட, நேற்று - தெளிவாகவும் - திட்டவட்டமாகவும் மாநில சுயாட்சிதான் கேட்கிறோம் - மாநிலத்திற்குச் சுதந்திர ஆட்சியல்ல - என்பதையும் தன்னாட்சி என்பது வேறு, தனியாட்சி என்பது வேறு என்பதையும் விளக்கி, தன்னாட்சி உரிமை வேண்டும் என்பதை (STATE AUTONOMY) வலியுறுத்தியிருப்பதை வரவேற்கத்தான் வேண்டும்!

இந்த விளக்கமும், வலியுறுத்தலும் மீண்டும் குழப்பப்படாமல் - பக்கத்திலிருக்கும் நாவலர் அவர்கள் பார்த்துக்கொள்வாராக!

ஏனென்றால் - தி.மு.க. கேட்கும் மாநில சுயாட்சி என்பது தன்னாட்சியே தவிர தனியாட்சி அல்ல! என்பதை, தமிழக முழுதும் விரிவாக எடுத்துச் சொன்ன பெருமை நாவலர் அவர்களுக்கும் உண்டு!

அன்புள்ள,

மு. க.

(17-07-1980)

753. புலி, தூங்கவில்லை!

உடன்பிறப்பே,

1977-ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டப்பேரவைத் தேர்தலில் அ.தி.மு.க. 126 இடங்களைப் பெற்றது. தி.மு.க. 48 இடங்களைப் பெற்றது. ஆக்கப்பூர்வமான யோசனைகளைச் சொல்லி, அமைதியான முறையில் மக்கள் தொண்டாற்றும் நோக்கத்துடன், பேரவையில் தி.மு.கழகம் ஜனநாயக வழியில் தனது கருத்துக்களை எடுத்து வைத்துக் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டிக் கடமையாற்றியது. ஆனால் ஆளுங்கட்சியான அ.தி.மு.க., எதிர்க்கட்சியான தி.மு.கழகத்தை எரிச்சலூட்டவும் - புண்படுத்தவுமான காரியங்களில் ஈடுபட்டு அதற்கேற்பத் தனது உரைகளையும் நடைமுறைகளையும் வகுத்துக் கொண்டது.

அதைத் தொடர்ந்து தி.மு.கழகச் சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் குறைக்கத் திட்டம் தீட்டப்பட்டது. அந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டு, இரண்டொருவர் தி.மு. க.விலிருந்து விலகி ஆளுங்கட்சி வரிசையில் சென்று அமர்ந்தனர். பதவி ஆசையும் காட்டப்பட்டது. சிலருக்குப் பணப்பையும் தரப்பட்டது. எனவே, எதிர்க்கட்சியை பலகீனப்படுத்தத் திட்டம் தீட்டிச் செயல்பட்ட அ.தி.மு.க.வுக்குப் பதிலடி கொடுக்க வேண்டிய கட்டாயம் தி.மு.க.வுக்கு ஏற்பட்டது.

அமைதியாகப் போய்க் கொண்டிருந்த சட்டமன்ற நடவடிக்கைகளிலும் அடிக்கடி அமளிகள் தோன்றின. தி.மு.க. அமைச்சர்கள் பலர் மீது ஜனாதிபதியிடம் ஊழல் புகார்களைக் கொடுத்த எம்.ஜி.ஆர். அரசு, கப்பல் கப்பலாக செய்த ஊழல்களை சட்டப்பேரவையில் ஆதாரங்களுடன் எடுத்து வைத்தோம்.

மருத்துவக் கல்லூரி ஊழல் - நீதி மன்றத்திற்கு அளித்த ரிக்கார்டுகளில் தேதி முதலியவற்றை ரகசியமாகத் திருத்திய ஊழல் - வீட்டு வாடகை ஊழல் - இப்படிப் பல ஊழல் பட்டியல்கள் வெளியிடப்பட்டன. சுப்ரீம் கோர்ட் நீதிபதி விசாரணைக்குத்

தன்னை உட்படுத்திக் கொள்கிறேன் என்ற உத்தமர் வேடம் கட்டிப் பேசிய எம்.ஜி.ஆர். அந்த விசாரணையென்ற பேச்சை எடுத்தாலே விளக்கெண்ணை குடித்தவர்போல் ஆகிவிடுகிற காட்சியைத்தான் கண்டோம்.

சரி, எல்லாம் முடிந்தது! நாடாளுமன்றத் தேர்தலில் எம்.ஜி.ஆர். கட்சிக்குப் படுதோல்வி! சட்டமன்றத் தேர்தலில் வெற்றி! தேவையான பெரும்பான்மையுடன் வெற்றி! மக்கள் தீர்ப்புக்கு நாம் மதிப்பு அளித்தோம். வென்ற அணிக்கு 90 இலட்சம் வாக்குகள் - வெற்றி பெறாத நமது அணிக்கு 84 இலட்சம் வாக்குகள் - இடையே வித்தியாசம் ஆறு இலட்சம்தான் என்பதை ஆளுங் கட்சியினர் மறந்து விடுகிறார்கள்.

ஆளுநர் உரையின் மீது பேராசிரியர் மிகப் பொறுப்புடன் பேசினார். நமது உறுப்பினர்கள் பேசினார்கள். எதிர்க்கட்சியொன்று ஆற்ற வேண்டிய பணியை அமைதியாக ஆற்றினோம்! நிதி நிலை அறிக்கையில் நானும், நமது உறுப்பினர்களும் பேசினோம்! ஆக்கப்பூர்வமான யோசனைகள்! சுட்டிக்காட்டவேண்டிய குறைபாடுகள்! இவைகள்தான் எங்கள் உரைகளில் நிறைந்திருந்தன.

வெப்பம் இல்லை! ஒளி இருந்தது! ஆனால், வெப்பம் தான் வேண்டுமென்று ஆளுங் கட்சியினர் விரும்புகிறார்கள். அமைச்சர்கள், தேவையில்லாமல் வல்லடி வம்புகளுக்கு வருகிறார்கள். முதலமைச்சரோ, மதுரையில் நடந்த பொதுக் கூட்டத்தில் என்னையும், எதிர்க்கட்சியான நமது கழகத்தையும் குழாயடி பாணியில் தாக்கிப் பேசியிருக்கிறார். காமராசர் விழாவை பயன்படுத்திக் கொண்டு கவர்னர் முன்னிலையிலேயே தி.மு.கழகத்தை வசைபாடியிருக்கிறார். பாவம்! கவர்னரும் அதற்குத் தலையாட்டியிருக்கிறார்.

சட்ட மன்றத் தேர்தலில் தி.மு. க. - இந்திரா காங்கிரஸ் கூட்டணி வெற்றி பெறக்கூடாது என்பதிலே மிகுந்த அக்கறை காட்டிய கவர்னருக்கு, எம்.ஜி.ஆர். தி.மு. க.வை அவர் முன்னிலையிலேயே திட்டுவது கவர்னருக்கு மகிழ்ச்சியாகத்தானே இருக்கும்.

அதுபோகட்டும்! ஆளுங்கட்சிக்கு நல்ல பெரும்பான்மை இருந்துங்கூட எதிர்க்கட்சியான தி.மு.க.விலிருந்து சட்டமன்ற உறுப்பினர்களை இழுக்கும் படலம் ஆரம்பமாகியிருக்கிறது.

சபாநாயகர் அறையிலேயே உட்கார்ந்து கொண்டு ஆளுங்கட்சியைச் சேர்ந்த சில உறுப்பினர்கள், கருணாநிதியை எதிர்க்கட்சித் தலைவர் பொறுப்பிலிருந்தும் கீழே இறக்கி விடுகிறோம் பாருங்கள் என்று சவால் விட்டார்களாம்!

நடக்கட்டும் அந்தக் காரியமும்! வேறென்ன, மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களையா நிறைவேற்றப் போகிறார்கள்? இதையாவது செய்யட்டும்!

தி.மு.கழகத்தின் சட்டமன்றப் பலத்தை இன்னும் கூடக் குறைத்து எங்களை எங்காவது ஒரு மூலையில் உட்கார வைக்கட்டும்!

அந்த மூலையில் இருந்தவாறே, முதலமைச்சரின் முகமூடியைக் கிழிக்கும் பணியைச் செய்வோம்! ஏழை எளிய மக்களை ஏமாற்றி ஆட்சிப் பொறுப்புக்கு வந்துவிட்ட எத்தர்களின் உண்மை வடிவத்தை ஊரறிய உலகறிய எடுத்துக் காட்டுவோம்!

தூங்கும் புலியை இடறினாலே, அது முட்டாள்தனம் என்பார்கள்!

அ.தி.மு.க.வினர், விழித்துக் கொண்டிருக்கும் புலியை இடறிப்பார்க்கிறார்கள்!

பெருந்தன்மையைப் பலகீனமென்றும் - அமைதியாக இருப்பதைக் கோழைத்தனமென்றும் - கருதிக் கொள்கிறார்கள், கடைந்தெடுத்த பைத்தியக்காரர்கள்! அதைமட்டும் இப்போது சொல்லிவைக்கிறேன்!

அன்புள்ள,

மு. க.

(18-07-1980)

754. விவசாயி, விழித்துக் கொண்டிருக்கிறான்!

உடன்பிறப்பே,

பழைய வேடிக்கைக் கதையொன்றுண்டு! சற்றுப் புதிய மெருகிட்டுத் தருகிறேன். விகடகவியொருவன், தனது மன்னனைப் பார்த்துச் சொன்னான். தேவலோகத்து ஆடையொன்று கொண்டு வருகிறேன். அதனை உடுத்திக்கொண்டால் நினைத்ததெல்லாம் நடக்கும். ஆனால் அந்த ஆடையைக்கொண்டு வர, பத்தாயிரம் வராகன் பொன் வேண்டும். விகடகவியின் வார்த்தையை நம்பிய மன்னனும், உடனே அந்த தேவலோகத்து ஆடையைக் கொண்டு வரச் சொல்லிப் பத்தாயிரம் வராகன் பொன்னை, விகடகவியிடம் கொடுத்தனுப்பினான்.

விகடகவி, அந்தப் பொன் நாணயங்களைச் செலவழித்து இரவையும் பகலையும் இன்பரசக் கேளிக்கை வேளைகளாக மாற்றிக் கொண்டு சில மாதங்கள் தனது வாழ்க்கையைச் சொர்க்கமாக ஆக்கிக் களித்தான்.

பழரசங்களென்ன - பாவையர் அணிவகுப்பு என்ன - நித்த நித்தம் படுக்கையறைக் காவியங்கள் என்ன - பத்தாயிரம் வராகன் பொன்னும் மயக்கப் பொருள்களாகவும் - மடியிற் புரளும் மாந்தளிர் மேனி விலைமாதர்களாகவும் - உருவெடுத்து உல்லாசம் பொழிந்து பின்னர் கரைந்து போயின!

ஆட்டபாட்டத்தால் களைப்புற்ற விகடகவியின் நினைவுக்கு, அரசனிடம் திரும்பிச் செல்ல வேண்டிய நாள் நினைவுக்கு வந்தது. அளித்த உறுதிமொழியின்படி, தேவலோகத்து ஆடையைக கொண்டு போய்க் கொடுக்க வேண்டுமே!

மன்னனும் அந்த நாளை அதிக ஆவலுடன் எதிர் பார்த்துக்கொண்டிருந்தான். தேவலோக ஆடை வந்தவுடன் அதனை யார் உடுத்துவது? மன்னவனா? மகாராணியா? அவர்களுக்குள் சிறு பூசல்! அன்பு ஊடல்! பாராளும் மன்னவன் நான்! என் பத்தினி நீ! பட்ட மகிஷி! சீராரும் உன் மேனியையே அந்தச் சிலாக்கியமான உடை அலங்கரிக்கட்டும்! வா கண்ணே கொலு மண்டபத்திற்கு! என அழைத்தான்.

மன்னவனும், ராணியும் கொலு மண்டபம் வந்தனர். விகடகவி அழகான பெட்டி யொன்றுடன் மன்னவன் முன்வந்து, நின்று தலைகுனிந்து வணங்கிப் பின்னர் மண்டியிட்டு எழுந்தான்.

கொண்டு வந்தாயா தேவலோகத்து ஆடையை? என மகிழ்ச்சிப்பெருக்குடன் மன்னவன் கேட்டான். ஆமாம் மன்னவா! என்றவாறு விகடகவி பெட்டியைத் திறந்தான். மண்டபத்தில் இருந்தோரின் விழிகள் அனைத்தும் அந்தப் பெட்டிக்குள் பாய்ந்தன.

பெட்டியில் எதுவுமில்லை! காலியாகத்தான் இருந்தது! விகடகவியோ, பெட்டியிலிருந்து ஆடையை எடுப்பதுபோல் அபிநயம் செய்தான். பதினாறு முழங்கள் எனக் கூறிக்கொண்டே வெறுங்கையால் முழம் போட்டு அளந்து காட்டினான். கொலு மண்டபத்திலிருந்து ஒரே ஒரு குரல் மட்டும் எழுந்தது! ஆடை எதுவும் தெரியவில்லையே! வெறுங் கையை அல்லவா முழம் போடுகிறார்! அந்தக் குரலை எழுப்பியவன் ஒரு சாதாரணக் குடிமகன்!

விகடகவி, மன்னனை நோக்கிச் சொன்னான்! மன்னவனே! என் உயிரையே பணயமாக வைத்து இந்தத் தேவலோக ஆடையைக் கொண்டு வந்திருக்கிறேன். இது எல்லோருடைய கண்ணுக்கும் தெரியாது! உத்தமியான தாய்க்குப் பிறந்தவர்களின் கண்களுக்கு மட்டுமே தெரியும்!

இதை விகடகவி சொன்னதுதான் தாமதம், அங்கு அமர்ந்திருந்த நிமித்தகர் எழுந்து ஆகா! அருமை! அருமை! அபாரமான ஆடை! என் கண்களுக்கு நன்றாகத் தெரிகிறது என்று பாராட்டினார்.

அமைச்சரும், அரசவைப் பிரதானியரும் இதுபோன்ற வனப்பும் வண்ணமும் பொருந்திய ஆடையை எங்கள் ஆயுளில் நாங்கள் கண்டதேயில்லை என்று போற்றிப் புகழ்ந்தனர்.

மன்னனுக்கும் மகாராணிக்கும் குழப்பம்! மகாராணியின் கண்ணுக்கு அந்த ஆடை தெரியவில்லை! இருந்தால் அல்லவா தெரிய?

பிரியே! உனக்குத் தெரிகிறதா? மன்னன், ராணியைக் கேட்டான்!

தெரியாமல் என்ன? தேவலோகத்து ஆடையென்றால் அதற்குத் தனி மகிமையேதான்! சரிகைப் பூக்களின் வேலைப்பாடு மிக நேர்த்தி! முத்துக்களைக் கோர்த்த முந்தானை!

இப்படி மகாராணி வர்ணித்துக்கொண்டே போனாள்! இல்லாவிட்டால் அவள் தாய் உத்தமியா - அல்லவா - என்ற சந்தேகம் வந்துவிடுமே!

மன்னன் சிந்தித்தான்! இத்தனை பேர் கண்ணுக்குத் தெரிவது தனது கண்ணுக்குத் தெரியவில்லையென்றால் தன் தாயின் கற்புக்கே களங்கம் வந்துவிடுமே! எனவே அவன் மெல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல் விகடகவியைப் பார்த்து, தகத்தகாயமாய் ஒளிவிடும் அந்தத் தங்க நிற ஆடையை என் கையில் கொடு! என்றான்! அவனும் கொடுப்பது போல் பாவனை செய்தான்! பாவம்! மன்னனும் அதை வாங்கிக் கொள்வதுபோல் பாவனை செய்திட வேண்டியிருந்தது!

பின்னர் என்ன நடந்திருக்கும்? மன்னனும் ராணியும் அந்தப்புரம் சென்றிருப்பர். மகாராணி! நீ கேட்டவாறு நீயே இதனை முதலில் உடுத்திக்கொள்! முன்பு உடுத்திய ஆடைகளைக் களைந்துவிடு! இந்தா இந்த தேவலோகத்து ஆடையை அணிந்திடுக! என்று கூறியிருப்பான்! மகாராணி, இல்லை மன்னவா! நாடாளும் நாயகனான நீங்கள் உடுத்திக்கொள்வதே முறை! உங்கள் பழைய ஆடைகளைக் களைந்து இந்தப் புனித ஆடையை அணிந்திடுக! என்று கூறி - அவளே, அவன் பழைய ஆடைகளைக் களைய உதவி புரிந்திருப்பாள்!

வேறு வழியின்றி மன்னனும்; அதற்கு இணங்கியிருப்பான்! தேவலோகத்து ஆடை உங்கள் அழகுக்கு மேலும் அழகு ஊட்டுகிறது என்று ராணி பாராட்டியிருப்பாள்! பிறந்த மேனியாக நிற்கும் மன்னனைப் பார்த்து!

அவளும் பாராட்ட வேண்டும்! மன்னனும் ஏற்றுக்கொள்ள வேண்டும்! இல்லாவிட்டால் கொலு மண்டபத்துக் கோமாளியான அந்த விகடகவியின் கணக்குப்படி - அவர்கள், உத்தமியான தாய்களுக்குப் பிறக்காதவர்களாகி விடுவார்களே!

அந்தோ - பரிதாபம் - அந்த மன்னன்! அந்த நேரம் பார்த்து அரண்மனைத் தாதியர்கள் பழரச பானங்களை அங்கே கொண்டு

வந்து விட்டால்? என்ன செய்வது, அதையும் தாங்கிக்கொள்ள வேண்டியதுதான்!

உடன்பிறப்பே! இந்தக் கதையை ஏன் எழுதினேன் புரிகிறதா? உனக்கா புரியாது?

அறுபது கோடி ரூபாய் விவசாயிகளின் கடன் ரத்து என்று பட்ஜெட்டில் அறிவித்தது மட்டுமல்ல - ஊரெல்லாம் டமாரம் கொட்டிப் பேசுகிறார்கள்!

பதினாறு கோடி, தக்காவிக் கடன்! அதாவது வராக் கடன்! வஜா செய்யப்பட்டது போன்ற கடன்! அதை ரத்து செய்து விட்டதாக ஒரு அறிவிப்பு!

சுமார் நாற்பத்தி இரண்டு கோடி ரூபாய் ஐந்து ஏக்கராவுக்குக் கீழேயுள்ள விவசாயிகளுக்குள்ள கடன் ரத்து என்று அறிவிப்பு!

அரசாங்கத்திற்கு வர வேண்டிய கடன் என்றால் பட்ஜெட்டில் நிதி ஒதுக்கீடு செய்யாமல் ரத்து செய்து கணக்குக் காட்டி விடலாம்.

நாற்பத்தி இரண்டு கோடி ரூபாய்,; விவசாயிகளில் ஐந்து ஏக்கருக்குக் கீழேயுள்ள உடமையாளர்கள் - கூட்டுறவு நிறுவனங்களுக்குக் கட்ட வேண்டிய கடன்கள்!

அந்தக் கடனை கூட்டுறவு நிறுவனங்களுக்கு, விவசாயிகட்ட வேண்டாமென்றால் விவசாயிக்குப் பதிலாக அந்தத் தொகையை அரசாங்கம் கூட்டுறவு நிறுவனங்களுக்குத் தந்தாக வேண்டும்! அப்படித் தருவதென்றால், அதற்கு பட்ஜெட்டில் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும். மகாராஷ்டிரா மாநிலத்தில் அப்படித்தான் நிதி ஒதுக்கீடு செய்து விவசாயிகளுக்குச் சுமார் ஐம்பது கோடி ரூபாய் கடன் ரத்து செய்துள்ளார்கள்!

இங்கு நிதி ஒதுக்கீடே செய்யவில்லை! மத்திய அரசைக் கேட்போம் என்கிறார்கள்! மத்திய அரசு கொடுத்தாலும், கொடுக்காவிட்டாலும் மாநில அரசே பொறுப்பு ஏற்குமென்று தேர்தல் நேரத்தில் பேசியவர்கள், இப்போது நிதி ஒதுக்கீடு செய்யாமலே கதையில் வரும் விகடகவியைப் போல வெறுங்கையால் முழம் போடுகிறார்கள்!

அதை நம்பி ஏமாற அந்தக் காலத்து மன்னன் எவனாவது இருக்கலாம்! ஆனால் இந்தக் காலத்தில்.....?

இப்போதும் கூட சில பேர் ஆகா! தேவலோகத்து ஆடை, மிகப் பிரமாதம்! என்ற பாணியில் சிறப்புரை நிகழ்த்திக் கொண்டிருக்கலாம்!

ஆனால், தமிழ்நாட்டில் விவசாயிகள் கடன் ரத்து என்ற பெயரால் இன்றைய நிலையில் வெளியிடப்பட்டுள்ள அறிவிப்பும் - விளக்கமும் - விகடகவி, வெறுங் கையால் முழம் போட்டு அனைவரையும் ஏமாற்றிய கதைதான்!

ஆனால் அந்தக் கதையில் வரும் மன்னனையும் மற்றவர்களையும்போல் தமிழ்நாட்டு விவசாயிகள், தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்ளத் தயாராக இல்லை!

விவசாயி விழித்துக் கொண்டிருக்கிறான்! அவன் சோழா ஓட்டலிலும் - மாரிஸ் ஓட்டலிலும் தங்கிக் கொண்டு, பேண்ட்டும், கோட்டும் போட்டுக்கொண்டு சென்னையில் பேரணி நடத்தினான் என்று எம்.ஜி.ஆர். கட்சி உறுப்பினர்கள் கேலி பேசியது அவன் காதுகளில் விழாமல் இல்லை!

பச்சைத் துண்டுகளை முண்டாசாகக் கட்டிக் கொண்டு - அந்தப் பாடுபடும் பாட்டாளி, நாங்கள் சேற்றில் கால் வைத்தால் தான் நீங்கள் சோற்றில் கை வைக்க முடியும் என்று உருக்கமிகு முழக்கமிட்டானே! அவன் குரலில் தொனித்த உறுதியைக் கிண்டல் செய்து குலைத்து விட முடியாது!

கடன்பட்டுக் கலங்கித் தவிக்கும் அந்த விவசாயி கேட்பது; தேர்தல் வாக்குறுதிகளை நம்பி வாக்களித்தோமே - அந்தத் தேர்தல் வாக்குறுதி என்ன ஆயிற்று என்றுதான்!

அவனிடம் இந்த அரசாங்கம் தேவலோகத்துப் பட்டாடைப் பார்! என்று காட்டுகிறது!

தேவலோக ஆடையும் வேண்டாம்! மண்ணாங்கட்டியும் வேண்டாம் - எங்களுக்குத் தேர்தல் வாக்குறுதி நிறைவேற்றப்பட்டாக வேண்டும்.

இப்படி முழங்குகிறான் விவசாயி! அவன் பிரச்சினையைத் தீர்க்காமல், இனி யாரை எப்படிப் பிடித்தும் அவனை ஏமாற்ற முடியாது!

அன்புள்ள,
மு. க.
(20-07-1980)

755. எழுந்தது பார் இளைஞர் அணி!

உடன்பிறப்பே,

முச்சங்கம் கண்டு முத்தமிழ் வளர்த்த மூதூராம் மதுரையில் நமது கழகத்தின் இளைஞர் அணித் தொடக்க விழா, இலட்சக்கணக்கானவர்க்கிடையே சீருற, சிறப்புமுற, எழுச்சியும் ஏற்றமும் பெருகிடும் வண்ணம் நடைபெற்றிருக்கிறது.

நாடு முழுதும் எல்லாப் பகுதிகளிலும் இந்த அணி அமைந்திட இளைஞர்கள் ஆர்வங்காட்டுகின்றனர். அவர்களின் ஆர்வத்துக்குத் துணை நின்று ஆங்காங்குள்ள கழகச் செயல்வீரர்கள் இளைஞர் அணிகள் தோன்றிடப் பணியாற்றிட வேண்டும்.

திருச்சியில் நடைபெற இருக்கும் கழகப் பொதுக் குழுவில் கழகச் சட்ட திட்டத்திலேயே இளைஞர் அணி அமைப்புக்கான திருத்தங்கள் விவாதிக்கப்பட்டு இடம் பெற இருக்கின்றன.

பதினைந்து வயது முதல் முப்பது வயது வரையில் உள்ளவர்கள் இந்த இளைஞர் அணியில் இடம் பெறுவர்!

ஆலுக்கு விழுதுபோல் இது கழகத்திற்கு ஒரு ஆற்றல்மிகு அமைப்பாகும்.

இளமைப் பருவம் கடந்தோர் - நடுத்தர வயதினர் - முதியோர் - இவர்களது உழைப்பால், தியாகத்தால், அறிவால், ஆற்றலால், இந்த இயக்கம் இடர் பல கடந்து வளர்ந்து நிற்கிறது என்றாலும்; எதிர்கால வளர்ச்சிக்கும், எழுச்சிக்கும் இளைஞர்களையும் ஊக்குவித்து அவர்களது பொறுப்புகளையும் சுட்டிக்காட்டி சமுதாயமும், மொழியும், நாடும், காத்திடும் வீரர்களாக அவர்களை அணிவகுக்கச் செய்வது நமது கடமையன்றோ!

விரிந்து பரந்த தென்னந்தோப்பு! விண்ணை நோக்கி வளர்ந்துள்ள தென்னை மரங்கள்! ஒவ்வொரு மரமும் எத்தனையோ காய்களை, இளநீர்களை, மட்டைகளை,

ஓலைகளை, பாளைகளை, வழங்கி விட்டு இன்னமும் வழங்கிக் கொண்டிருக்கின்றன. அந்த மரத்தில் காணப்படும் நீண்ட வடுக்கள் எல்லாம், மட்டைகளிலிருந்து விழுந்த இடங்கள்! மரத்தில் ஏறுகிறவருக்கும் அந்த வடுக்களே, வாகான படிக்கட்டுகள் போல் உதவுகின்றன!

அந்தத் தோப்பில் புதிய கன்றுகளும் நடப்படுகின்றன. பழைய மரங்களுக்குப் பகையாக அல்ல! தென்னஞ்சோலை பரவலாகப் பெருகி, பயன் அதிகம் விளைவிப்பதற்காக!

அங்கே கன்றுகள் நடுகின்ற பணி! இங்கே கழகத்தின் இளைஞர் அணி!

வலிவுமிக்க அரணாகத் திராவிடர் இயக்கம் திகழ்வதற்கும் - அரசியல் தெளிவு படைத்த பாசறையாகத் திராவிட முன்னேற்றக் கழகம் விளங்குவதற்கும் - தமது இளமைக்காலம் தொட்டு தன்னலம் மறந்து பட்டம் பதவிகளைப் பற்றிக் கவலைப்படாமல் உழைத்து, அடக்குமுறைகளைப் பரவசத்துடன் ஏற்றுக்கொண்டு - வேதனைகளிலும் சோதனைகளிலும் - வெற்றிகளிலும் - தோல்விகளிலும் ஆடாமல் அசையாமல் நிலை குலையாமல் நெஞ்சுறுதி தளராமல் பாடுபட்ட பட்டாளம் ஒன்று, இன்று நடுத்தர வயதுடையதாக அல்லது முதுமை எய்தியதாக - ஆனாலும் தன்மான உணர்வு எனும் இளமை முறுக்கு குன்றாததாக, உலவிக் கொண்டிருப்பதைக் காண முடிகிறது! கண்டுகளிக்க முடிகிறது!

பதினான்கு வயது - இளமைப் பருவத்திலேதான், உடன்பிறப்பே! என்னுடைய கரங்கள் இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து தமிழ்க்கொடியைத் தூக்கிப் பிடித்தன! அந்த உணர்வு பட்டுப் போகாததற்குக் கிடைத்த பரிசுதான் பாளையங்கோட்டை சிறைச்சாலையில் தனிமையில் அடைக்கப்பட்டிருந்த என்னைக் காண வந்த அண்ணா அவர்கள் உகுத்த கண்ணீர்!

டால்மியாபுரம் ரயிலடி என்ற பெயரை மாற்றிக் கல்லக்குடி எனும் பெயரை வைக்குமாறு கேட்டு நடத்தியப் போராட்டத்தில் தண்டவாளத்தில் தலை வைத்துப் படுத்தபோது என் வயது இருபத்தி ஒன்பதுதான்! என்னுடன் அந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டோரில் பெரும்பான்மையோர் என் வயதுடைய இளைஞர்கள்தான்!

அண்ணன் இராமசுப்பையா போன்ற பெரியவர்களும், இளமைத் துடிப்புடன் அந்தக் களம் புகுந்த காட்சியை இன்றைக்கும் மறக்க முடியாது!

எல்லை கடந்தும் புகழ் மணக்கும் தமிழுக்கொரு தொல்லை இந்தியால் வருவதா? எனக் கேட்டு - உயிரைப் பறிகொடுத்து தில்லையிலே சிலையாக நிற்கிறானே, இராசேந்திரன் - அவனும் இளைஞர்களின் கூட்டத்திலிருந்து சிலிர்த்தெழுந்த சிறுத்தைப் புலி தானே!

எட்டுப் பேர் தீக்குளித்தனர்! இந்தித் திணிப்பை எதிர்த்து! அவரெல்லாம் இளைஞரன்றோ? நம் இதயத்தில் என்றும் வாழ்பவரன்றோ?

1965-ஆம் ஆண்டு இந்தித் திணிப்பு எதிர்ப்புப் புரட்சியை நடத்தியதே இளைஞர் பட்டாளந்தானே! மாணவர் பாசறைதானே! அவர்தம் ஆற்றல் கண்டும், வீரம் கண்டும் பேரியக்கங்கள் நடத்திய பெரியோரெல்லாம் வியந்து நின்றிடவில்லையா? போதும்! போதும்!! எனத் தடுத்து நிறுத்திட நமது அண்ணா விடுத்த அறிக்கைகள்தான் எத்தனை! எத்தனை!!

அதே முறைகள் தொடர அல்ல! ஆனால் அதே உணர்வுகள் பட்டுப்போகாமல் இருக்க! அறவழியில் நமது கொள்கை குறிக்கோள்கள் நிறைவேறிட! அமைவதுதான் கழக இளைஞர் அணி!

சமத்துவம், சமதர்மம், ஜனநாயகம், இவற்றைக் காக்கவும் போற்றவும் செயல்படுத்தவும் இளைஞர்கள் முன்வர வேண்டும்.

பிறமொழி ஆதிக்கத்தால் நமது தென்மொழி - தேமதுரத் தமிழ்மொழி வீழ்ந்து படாமல் தடுத்திடும் கேடயமாக இளைஞர் அணி இருந்திட வேண்டும்!

மத்தியில் கூட்டாட்சியும், மாநிலத்தில் சுயாட்சியும் மலர வேண்டுமென்ற நமது கழக குறிக்கோள் வென்றிட இளைஞர் அணி எங்கனும் பரவிட வேண்டும்!

பெரியாரின் கொள்கைகளை - அண்ணாவின் இலட்சியங்களை - தி.மு.கழகத்தின் வழிநின்று பரப்பிட இளைஞர் அணி அயராது பாடுபட வேண்டும்!

சமுதாய விரோதச் செயல்கள் - எங்கு - யாரால் - நடத்தப்பட்டாலும் அவற்றைக் காவல்துறையினர் மூலம் சட்டத்தின் முன்னால் நிறுத்தி சரியான நீதி கிடைத்திட இளைஞர் அணி, விழிப்புடன் தொண்டாற்ற வேண்டும்.

இருட்டறையில் உள்ளதடா உலகம் - சாதி

இருக்கின்றதென்பானும் இருக்கின்றானே!

என்ற புரட்சிக் கவிஞர் அவர்களின் கவிதையைச் சமுதாய சீர்திருத்தக் கலைநிகழ்ச்சியாகவும் -

காண்பதெல்லாம் தொழிலாளி செய்தான் - அவன்

காணத் தகுந்தது வறுமையாம்! பூணத் தகுந்தது பொறுமையாம்!

என்ற கவிதை வரிகளை விளக்கி, சமதர்மப் பொருளாதாரத்திற்கு வாதாடுகிற கலைநிகழ்ச்சியாகவும் -

ஏமாந்த காலத்தில் ஏற்றங்கொண்டோன்

புலி வேஷம் போடுகின்றான் - பொதுமக்கட்குப் புல்லளவு

மதிப்பேனும் தருகின்றானா?

என்ற கவிதை வரிகளைக் கொண்டு அரசியல் நிலை விளக்கக் கலைநிகழ்ச்சியாகவும் நடத்திட - இளைஞர் அணிகள் முயன்றால் முடியாதா என்ன?

இந்த நோக்கங்களுடன் அங்கிங்கெனாதபடி எங்கெங்கும் தோன்றட்டும் இளைஞர் அணி!

அதன் தொடக்க விழாக்கள் தொடரட்டும்!

கழகப் பெரியவர்களின் அரவணைப்பு - இளைஞர்களின் அடக்கம் - இரண்டுக்குமிடையே முகிழ்க்கும் தூய அன்பு - இவை, நமது கொள்கை விளக்கு, குன்றின் மேலிருந்து ஒளிவிட உதவிடுமாக!

அன்புள்ள,

மு. க.

(24-07-1980)

756. சபதம் மேற்கொள்வோம்!

உடன்பிறப்பே,

செய்திகள், செந்தேள்கள் இருதயக் கூட்டுக்குள்ளேயே புகுந்து கொட்டுவது போல வெளிவருகின்றன!

புகைப்படங்களோ நரம்பு மண்டலத்தையே உலுக்கியும், குலுக்கியும் கண்களை மழை பொழிய வைக்கின்றன!

நரபலிக் கொடுமைகள் - கொலைவெறித் தாண்டவங்கள் - கற்பழிப்புகள் - கொள்ளைகள் - எங்கேயோ இருண்டு கிடக்கும் கிராமங்களிலோ பட்டி தொட்டிகளிலோ மட்டுமல்ல! தலைநகரம், மாநகரம், பெரு நகரம், பேரூர், சிற்றூர் - எங்கணும் இந்த அவலம் தொடர்கதையாகிக் கொண்டிருக்கிறது.

காலிகள், கயவர்கள் என்று மாத்திரமல்லாமல், வேலிகளே பயிர்களை மேய்வது போலக் காவல்துறையிலேயே அந்த விலங்கினத்தின் பெருக்கம் வேகமாகிக் கொண்டு வருகிறது!

இதைவிட வேதனை வேறென்ன இருக்க முடியும்!
வண்ண வண்ண மொட்டுகள்!
எண்ணத் தெவிட்டாத
மழலை மொழிப் பெட்டகங்கள்!
கன்னக் கறுப்புகள் மாங்கனியாம்;
அன்னத்தின் தூவிபோல் அழகுருவாம்;
தாயின் மடிமீது குதித்தாடும் மான்குட்டி!
தவங்கிடந்து பெற்றெடுத்த தங்கக் கட்டி!

அம்மவோ! எழுதவே கை நடுங்குகிறது! அந்த இளந்தளிர்களைக் கசக்கிச் சாவுக் கூடையிலே போடுகின்ற சண்டாளத் தனத்தை எப்படித்தான் சகித்துக் கொள்வது?

ஆண்டவனின் பெயரால் நரபலி! மூட நம்பிக்கையின் கோரக் கரங்களில் சிக்கிச் சீரழிந்து சிதறுவதற்கு இந்த சின்னச்சின்ன அரும்புகள்தானா கிடைத்தன? அந்தக் கோரக் கரங்களை முறித்தெறியப் பாடுபட்ட பகுத்தறிவுவாதிகள் அனைவருமே

தலைகுனிய வேண்டிய நிலை! இறை நம்பிக்கையுடையோரும் இந்தப் பயங்கரப் படுபாதகச் செயல்களைத்தான் அன்பே உருவான கடவுள் விரும்புகிறார் என்று வாதிட முன்வரமாட்டார்! ஆனாலும், பச்சிளம் சிட்டுகளின் உயிர்கள் பறிக்கப்படும் நிகழ்ச்சிகள் பரவிக் கொண்டேயிருக்கின்றன.

பகையைத் தீர்த்துக் கொள்ளவும், நகையைத் திருடிச் செல்லவும்கூட மனிதர்கள், தங்கள் இருதயங்களை மிகத் தொலைவில் தூக்கி எறிந்துவிட்டு - கள்ளமில்லாத வெள்ளை மலர்களை - அய்யோ! அந்த கள்ளல்மொழிச் செல்வங்களை - கழுத்தை முறித்துப் போட்டு விட்டுப்போகும் கொடுமைதான் என்னே!

அந்த எழிலார் முத்துக்கள் அம்மா! அப்பா! என்று கதறும்போது கூடவா கருணை பிறக்கவில்லை; அந்தக் கல்நெஞ்சக்காரர்களுக்கு!

வெட்டப்பட்ட கால்கள்!
துண்டிக்கப்பட்ட விரல்கள்!
அறுத்தெறியப்பட்ட தலைகள்!
பிளக்கப்பட்ட உடல்கள்!

யாழ்களையும் - வீணைகளையும் - உடைத்து நொறுக்கி வீசியெறிந்தது போலல்லவா காட்சியளிக்கின்றன!

வீணையின் நரம்பு அறுந்தாலே வேதனைப்படுகிறவர்கள், வீணைகளே தூளாக்கப்பட்டுப் புழுதியில் வீசப்பட்டுக் கிடப்பதை எப்படித்தான் தாங்கிக் கொள்ள இயலும்?

ஆழக்கிணற்றிலே பிணமாக மிதக்க விடப்படுகிறது ஒரு அச்சடித்த பதுமை!

அன்னைக்கு அருகாமையிலேயே குத்துண்டு கிடக்கிறது ஒரு கோமளத் தாமரை!

இப்படி ஒன்றா? இரண்டா? ஒருநாளா? இருநாளா?

குழந்தைகள் கதி இது!

இந்த எண்ணிக்கையை மிஞ்சும் வகையில் கற்பழிப்புக் காண்டங்கள்! ஆசைதீர வெறியைத் தணித்துக்கொண்டு அந்த மலர்க்கொடிகளை மரணப் படுகுழியில் தள்ளிப் புதைக்கும் அநியாயங்கள்! அக்கிரமங்கள்!

தாலி அறுக்கப்பட்டது - தங்கச் சங்கிலி அறுக்கப்பட்டது - நான் தவறினாலும் தவறாமல் வருகின்ற செய்திகள்!

இந்தக் காட்டுமிராண்டிச் செயல்கள், இன்றைக்குத் திடீரென்று வந்து குதித்து விட்டவை அல்ல! நெடுங்காலமாகவே மனிதர்களில் சிலர் மிருகங்களை நல்லவைகளாக ஆக்குகிற அளவுக்குச் சேட்டை புரிந்து கொண்டுதான் வருகிறார்கள்.

ஆனால்!

ஆனால்!!

இப்போது? முன்பு அதிசயச் செய்திகளாக இருந்தவை - இப்போது அன்றாடச் செய்திகளாகிவிட்டன!

அரசும், காவல்துறையும் மட்டும் இந்த சமூக விரோத செயல்களையும், வெறிக் கூத்துகளையும் தடுத்து நிறுத்திவிட முடியாதுதான்!

அதற்காக அவர்கள் கைகளைக் கட்டிக்கொண்டு வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கக் கூடாதல்லவா?

கொலையென்று நடந்துவிட்டால், பத்து நாட்களுக்குப் போலீசார் துப்பறியும் கதைகளைப் பத்திரிகைகளில் எழுதுகிறார்கள்!

சந்தேகப்பட்டவர்களைப் பற்றிய பல புலன் விசாரணைகளையெல்லாம் ஏடுகளுக்குத் தொகுத்துத் தந்து குற்றவாளிகளைத் தங்களையறியாமலே உஷார்படுத்தி விடுகிறார்கள்!

இனியாவது இப்படிப்பட்ட சம்பவங்களில் - பத்திரிகைக்காரர்கள் மர்மக் கதை எழுதுவதற்கான குறிப்புகளைப் போலீசார் வழங்குவதற்குப் பதில், உண்மையான குற்றவாளிகளைப் பிடித்துக் கூண்டிலேற்ற முனைந்திட வேண்டுகிறேன்.

இந்த அளவுக்குக் காவல்துறை பலகீனப்பட்டிருப்பதற்குக் காரணம், அவர்களுக்குரிய நெறிமுறைகள் குலைக்கப்பட்டு விட்டன என்பதுதான்!

எல்லோரையும் குறிப்பிடவில்லை, ஆனால், கவலை தரக்கூடிய அளவுக்கு எண்ணிக்கை பெருகிக்கொண்டிருக்கிறது - அப்படிப் பல காவல் நிலையங்கள், சமுதாய விரோதிகளின் சரணாலயமாக மாறி விட்டிருக்கின்றன!

கள்ளச் சாராயம் வீதிகளில் பெருக்கெடுத்து ஓடிக் கொண்டிருக்கிறது.

அச்சம் ஏதுமின்றி அங்காடிகளில் - பெட்டிக்கடைகளில் - காவலர்கள் சிலருடைய ஒத்துழைப்புடன், ஒவ்வொரு ஊரிலும் அந்த வியாபாரம் பீடுநடை போடுகிறது!

இந்த நிலையில் காவலர்களின் நெறிமுறை - ஒழுங்கு - எப்படிக் காப்பாற்றப்பட முடியும்? அவர்களின் கடமையுணர்வுக்கு இடம் ஏது?

பிறகேன், பிஞ்சுகள் கொலைச் சகதியில் உதிராது?

கொள்ளைகள் எப்படி பெருகாமல் இருக்கும்?

கற்பழிப்புகளும், கலவரங்களும் நிகழாமல் தடுக்க வேண்டியவர்கள் - வேறு வியாபாரத்திற்கல்லவா துணை போய்க் கொண்டிருக்கிறார்கள்!

காவல்துறையில் நேர்மையாளர்கள், கடமையுணர்ந்தோர் இல்லாமல் இல்லை!

இருந்தாலும் இந்தப் புரையோடிய புண்ணை அப்படியே விட்டுக்கொண்டே போனால், போலீஸ் துறை மொத்தமும் அழுகிக்கெட்டு விடாதா?

அதனால் சமுதாயச் சீர்குலைவும் ஏற்பட்டு விடாதா?

மருத்துவமனையில் குழந்தைகள் திருட்டு என்பதிலேயிருந்து - ஒவ்வொரு நாளும் காலையிலும் மாலையிலும் - கேட்கச் சகிக்காத தீய காரியங்கள் அல்லவா அடுக்கடுக்காக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன!

உடன்பிறப்பே! நாம் ஆட்சிப் பொறுப்பில் இருந்தால் இதனை அரசியலாக்கி ஆதாயம் தேடிட ஆர்ப்பரித்திருப்பார்கள்!

நான் இந்தக் கொடுமைகளை அரசியலாக்க விரும்பவில்லை!

ஆனால், அரசின் கடமையை அறிவுறுத்த விரும்புகிறேன்!

சமுதாய ஒழுங்கில் நாட்டமுடைய அனைவருமே பொறுப்பேற்றுக்கொண்டு, இத்தகைய கொடுமைகளைத் தடுத்து நிறுத்த சபதம் மேற்கொள்ள வேண்டுமென்பதையும் நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அன்புள்ள,

மு. க.

(25-07-1980)

757. நெடுங்குன்றும் தூளாய்ப் போகும்!

உடன்பிறப்பே,

ஆகஸ்டு 23, 24 சனி ஞாயிறு நாட்களில் நெல்லை நகரில் நமது கழக மாநாடு! ஆறாவது மாவட்ட மாநாடு!

வீரபாண்டிய கட்டபொம்மன் உலாவிய மண்ணில் - பூலித்தேவன் புதிய புறநானூறு உருவாக்கிய மண்ணில் - செக்கிழுத்துச் சிறைக் கொடுமைக் காட்டப்பட்ட போதும், சுதந்திரக்கனல் தணியாமல் சீறிப் பாய்ந்த சிங்கத் தமிழன் சிதம்பரனார் பவனி நடத்திய மண்ணில் - காடு மணக்க வந்த கற்பூரச் சொற்கோ - நீடு துயில் நீக்கப் பாடி வந்த நிலா என்று புரட்சிக் கவிஞரால் புகழப்பட்ட தேசியப் புதுமைக் கவிவேந்தன் பாரதியார் முழக்கமிட்ட மண்ணில் - விடுதலைவீரன் வாஞ்சிநாதன் வஞ்சினம் முடித்த மண்ணில் - அண்ணா வழிவந்த அணிவகுப்பு! அன்னைத் தமிழ் காக்கும் பாடி வீடு! ஆகஸ்டு 23-24 ஆகிய நாட்களில்!

நெல்லை மாவட்டக் கழகத்தின் செயல் திறம் படைத்த வீரர்கள், மாநாட்டு வெற்றிக்கான கடமையாற்றப் புறப்பட்டுவிட்டனர். முறையாகத் திட்டமிட்டு முனைப்பாகப் பணியாற்ற அவர்கள் பீடுநடை போடும் செய்தி கேட்டு மகிழ்கிறேன்!

நாடாளுமன்றத் தேர்தலில் நமது அணிக்குக் கிடைத்த மகத்தான வெற்றி! அதன் பின்னர் மூன்றரை மாத இடைவெளியில் சட்டப்பேரவைத் தேர்தலில் ஏற்பட்ட எதிர்பாராத தோல்வி!

இந்த இரண்டு நிலைகளுக்குமான காரணத்தைக் கழக உடன்பிறப்புகளால் மிக எளிதில் புரிந்துகொள்ள முடிந்தது!

நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க. - இந்திரா காங்கிரஸ் கட்சிகளுக்கிடையே இருந்த கட்டுப்பாடுமிக்க உறவும்,

ஒற்றுமையும், உத்வேகமும் சட்டமன்றத் தேர்தல் காலத்தில் ஏற்படாமலே போய்விட்டது!

ஏன்? எப்படி? யாரால்? இந்த ஆராய்ச்சிகளில் ஈடுபட்டு - தேவையற்ற கசப்பு உணர்வுகளை வளர்த்துக் கொள்வது இருசாராருக்கும் நல்லதல்ல என்பது மட்டுமல்ல! நாட்டுக்கும் நல்லதல்ல!

சில நேரங்களில், எதிர்பாராத விபத்துகளைப் போல ஒற்றுமையின்மைக்கான சூழ்நிலை உருவாகி விடுகிறது! சில நேரங்களில், சிலரால் அந்த ஒற்றுமையின்மை என்ற நச்சுவிதை மிக நாசூக்காக ஊன்றப்பட்டு விடுகிறது! இந்த வாரம் குமுதம் ஏடுகூட தி.மு.க., ஒரு முள் செடியென்றும், அதனை இந்திரா காங்கிரஸ் என்ற பசுமாடு தின்னலாகாது என்றும் கேலிச்சித்திரம் வரைந்து காட்டி - தனது நெஞ்சத்து விஷத்தைக் கக்கியிருக்கிறது!

இப்படியொரு கூட்டம், இடைவெளியில்லாது தொடர்ந்து தூவிய கலக விதைகளைக் காலால் மிதித்துத் தேய்த்து விட்டுக் கட்டுப்பாடும் - நெஞ்சார்ந்த உறவும் கொண்ட உடன்பாட்டை வெற்றிகரமாக்குவதற்கு, எப்படியோ முடியாமற் போய்விட்டது!

அறிக்கைகள் - பேட்டிகள் - மறுப்புகள் - இவ்வாறு ஆரம்ப கட்டமே மகிழ்ச்சிகரமாக இல்லாத சூழ்நிலையில் சட்டப்பேரவைத் தேர்தலில் நமது தோழமைக்கட்சி அணியினர் களம்புக நேர்ந்தது!

நடந்தவைகள் அனைத்தையும் நிதானமாகத் தொகுத்துப் பார்த்தால் நமது அணியின் தோல்விக்கான காரணங்கள் தெளிவாகப் புரியத்தான் செய்யும்!

இத்தனை இடையூறுகளையும் மீறி நமது அணி, எண்பத்துநான்கு லட்சம் வாக்குகளைப் பெற்றிருக்கிறது! அதாவது வென்ற அணியினரை விட ஆறு லட்சம் வாக்குகள்தான் குறைவு! இன்றுள்ள தேர்தல்முறையினால் 90 லட்சம் வாக்குகள் பெற்ற அணிக்கு 162 இடங்கள் என்றும் - 84 லட்சம் வாக்குகள் பெற்ற அணிக்கு 69 இடங்கள் என்றும் கிடைத்துள்ளன!

தேர்தல் முடிவுக்குப் பிறகு, அடடா! இன்னும் கொஞ்சம் சிரமம் எடுத்துக் கொண்டிருந்தால் - இன்னும் சிறிது ஓய்வின்றி உழைத்திருந்தால் - இன்னும் நமது ஒற்றுமையைக் கட்டிக்

காத்திருந்தால் - இப்படியெல்லாம் களத்தில் நின்ற நமது அணியினர் எண்ணிடத்தான் செய்கின்றனர்!

சரி! நடந்தது நடந்துவிட்டது - அடுத்தது என்ன? தேர்தலுக்காகவே அதன் மூலம் கிடைக்கும் பதவிகளுக்காகவே தொடங்கப்பட்டதா நமது இயக்கம்?

இத்துணைப் பாடுபட்டு இப்படியாகி விட்டதே என்ற மனச்சோர்வு, இரவு பகல் பாராது உழைத்திட்ட உத்தமத் தொண்டர்களுக்கு ஏற்படத்தான் செய்யும்! அதற்காக அந்தச் சோர்விலேயே துவண்டு போய்க் கிடப்பது, பொது வாழ்வில் தன்னலமற்றுப் பணியாற்றுகிறவர்களுக்கு அழகல்லவே!

தமிழ்நாட்டு மக்களின் நல்வாழ்வு - அவர்தம் கலை, கலாச்சாரம், மொழி, இவற்றுக்கான பாதுகாப்பு - சமத்துவம் சமதர்மம் காண்பதற்கான பேருழைப்பு - ஜனநாயக நெறிமுறைகள் வளர்வதற்கான அயராப்பணி - ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என நாம் வகுத்துக்கொண்ட இலட்சியம் -

இவையனைத்தும் நமது தோள்களிலே ஏற்றப்பட்டிருக்கின்றன என்பதை ஒருக்கணம் நினைத்தாலே, தேர்தல் களைப்பு - புயற்காற்றில் பஞ்சாகப் பறந்து போய் விடுமல்லவா?

அதை நினைத்துப் பார்த்திடும் உடன்பிறப்புகள்தான் நெல்லையிலே மாநாட்டை நடத்திட நெஞ்சுயர்த்திக் கிளம்பியிருக்கிறார்கள்!

மதுரையிலே இளைஞர் அணி தொடக்க விழா மாபெரும் வெற்றி!

நெல்லையிலே மாவட்ட மாநாடும் மாநில மாநாடு போல வெற்றிச் செய்தி சொல்லத்தான் போகிறது!

தமிழ்நிலமெங்குமுள்ள உடன்பிறப்புகள் குடும்பத்தாருடன் குழுமிட வேண்டும் நெல்லைத் திருநகரில்!

ஃ தோல்விகளை, வெற்றிமுகட்டை அடைவதற்கான படிக்கட்டுகளாக மாற்றிக் கொள்வோம்!

ஃ சோதனைகளைப் புறங்காண்போம்!

ஃ பழி வாங்கும் செயல்களை முறியடிப்போம்!

தமிழனுக்கு வீழ்ச்சியில்லை; தமிழன் கீர்த்தி
தாழ்வதில்லை! தமிழ்நாடு, தமிழ மக்கள்
தமிழ் என்னும் பேருணர்ச்சி இந்நாள்போலே
தமிழ்நாட்டில் எந்நாளும் இருந்ததில்லை!
தமிழர்க்குத் தொண்டு செய்யும் தமிழனுக்குத்
தடை செய்யும் நெடுங்குன்றும் தூளாய்ப் போகும்!
தமிழுக்குத் தொண்டு செய்வோன் சாவதில்லை.
தமிழ்த்தொண்டன் பாரதிதான் செத்த துண்டோ?

புரட்சிக் கவிஞரின் இந்த எழுச்சிமிகு வரிகள் உடன்பிறப்பே! உன்னை உணர்ச்சிப் பிழம்பாக்கட்டும்!

தமிழர்க்குத் தொண்டு செய்யும் தமிழனுக்குத்
தடை செய்யும் நெடுங்குன்றும் தூளாய்ப் போகும்!

என்கிறாரே, அடடா! அந்த உறுதியுடன் நெல்லைக்குப் புறப்படப் பயணம் தயாராகட்டும்!

அன்புள்ள,

மு. க.

(27-07-1980)

758. சென்றிடுவீர் எட்டுதிக்கும்!

உடன்பிறப்பே,

கழகத்தின் சொற்பொழிவாளர்கள் கருத்தரங்கு, நேற்று (27-7-80) ஞாயிறன்று சென்னையில் நடைபெற்றது.

நமது கொள்கைப் பிரச்சாரம் பட்டிதொட்டிகளிலும் பரவலாக நடந்திட வேண்டுமென்றும் - அதற்கேற்ப, சொற்பொழிவாளர்களின் சுற்றுப்பயண நிகழ்ச்சிகளை முறைப்படுத்திட வேண்டுமென்றும் கருத்துகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

நமது இலட்சியங்களில் ஊறித் திளைத்து, அவற்றைப் பரப்புகிற பணியில் கடும் எதிர்ப்புகளையும் - காராக்கிரக வாசங்களையும் தாங்கிக்கொண்டு - உடல் நலிவையும் பொருட்படுத்தாமல் ஊர்பல சென்று உணர்ச்சி முழக்கமிடும் கழகத்தின் சொற்பொழிவாளர்கள் - பேச்சாற்றல் பெற்றவர்கள் மட்டுமல்ல! செயலாற்றல் மிக்கவர்களும்கூட!

ஒரு இயக்கம் வலிவும், பொலிவும் பெற பல்வேறு வகையான துறையில் பயிற்சி பெற்றவர்கள் தேவை!

ஒருவர் பம்பரம் போல் சுழன்று கருமமே கண்ணாகச் செயல்பட்டுக் கொண்டிருப்பார்!

ஒருவர் மேடையிலே வீசுகின்ற மெல்லிய பூங்காற்று எனக் கொள்கைக் கோட்பாடுகளை கேட்டார்ப் பிணிக்கும் தன்மையிலே பேசிடுவார்!

ஒருவர் கோடையிலே முழக்கும் இடி முழக்கமென நாடி நரம்புகளுக்குச் சூடேற்றி, நமது இலட்சியங்களை எய்திடுவதற்குத் தேவையான அறப்போர்ப் படைக்கலன்களைத் தனது பேச்சின் வாயிலாகத் தயாரித்திடுவார்.

ஒருவர், இசை நிகழ்ச்சி வாயிலாக இயக்கம் வளரப் பாடுபடுவார்!

ஒருவர், கலை - நாடக நிகழ்ச்சிகள் வாயிலாக நாட்டு நிலையை மக்களுக்குப் படம் பிடித்துக் காட்டுவார்!

கிளைகளில் இருந்து மாவட்டம் வரையில் உள்ள அமைப்புகளை முறைப்படி இயங்கச் செய்து, ஆகா! எவ்வளவு அற்புதமான நிர்வாகம்! என்னே அரவணைப்பு! எத்துணை உழைப்பு! என்று பாராட்டப் பெறுகிற பல அமைப்புகளின் நிர்வாகிகளை நானறிவேன்! அவர்களின் எண்ணிக்கை மேலும் பெருகிட வேண்டும்.

அந்த நிர்வாகிகள், ஒவ்வொரு கிளைக் கழகத்திலும் - சார்பு மன்றங்களிலும் - இனிப் புதிதாக அமைய இருக்கிற இளைஞர் அணி அமைப்புகளிலும் நீங்காத் தொடர்பு கொண்டு கழகத்தின் விதிமுறைகளுக்கு ஏற்ப - எல்லா அமைப்புகளையும் பிரச்சாரப் பாசறைகளாகத் திகழச் செய்ய வேண்டும்!

சட்டதிட்டங்கள், விதிமுறைகள் அனைத்தும் கட்டுப்பாட்டுக்காகத்தான் இயற்றப்பட்டுள்ளன.

அது ஒரு கண்ணாடிக் குவளையைப் போன்றது!

அலட்சியமாகப் பிடித்தால் கீழே விழுந்து நொறுங்கிச் சிதறிவிடும்!

மிகவும் அழுத்திப் பிடித்தாலும் கண்ணாடிப் பாத்திரம் நொறுங்குவது மாத்திரமல்ல! கைகளையும் காயப்படுத்தி விடும்!

இதனை மனத்திற்கொண்டு - விட்டுக் கொடுக்கும் இயல்பை இருசாராரும் பெற்றுப் பணிகளை முடுக்கி விட்டால்,

நாடு முழுதும், நாள்தோறும் நமது கொள்கைப் பிரச்சார நிகழ்ச்சிகள் மிகப் பரவலாக நடைபெறும் வாய்ப்பு உண்டு.

மேடை போட்டு, ஒலிபெருக்கி வைத்து, சுவரொட்டிகளை ஒட்டி, தலைவர்களை அழைத்துக் கூட்டம் போட்ட தொண்டனாக இருந்து, வளர்ந்தவன் என்ற முறையில் கூட்டம் நடத்துவதில் உள்ள சிரமங்களும் எனக்குத் தெரியும்!

அழைக்கப்பட்ட பல ஊர்களில் உண்ணச் சோறின்றி - உறங்குவதற்கும் இடமின்றிச் சிரமப்பட்ட சொற்பொழிவாளனாகவும் பயிற்சி பெற்றவன் என்ற காரணத்தால், சொற்பொழிவாளர்களுக்குள்ள சங்கடங்களும் எனக்குத் தெரியும்!

எனவே கூட்டம் நடத்தும் நிர்வாகிகள், கூட்டத்திற்குச் செல்லும் சொற்பொழிவாளர் - இரு சாராருமே தமது கடமையையும் பொறுப்பையும் உணர்ந்து கண்ணியம் காத்து, கட்டுப்பாடு போற்றிட வேண்டுகிறேன்!

மேடையிலே புள்ளி விபரங்களை அள்ளித் தாருங்கள்! நமது கழக அரசின் சாதனைகளை நினைவூட்டிக்கொண்டே இருங்கள்! இன்றுள்ள ஆளுங்கட்சி அளித்த வாக்குறுதிகள் அனைத்தும் வெறும் அறிக்கைகளாகவும் அறிவிப்புகளாகவும் ஆகிவிட்டதை மக்களுக்கு ஞாபகப்படுத்திக் கொண்டே இருங்கள்!

பேச்சில் எழுத்தில் கடுமை இருக்கலாம்! கண்டனங்கள் பொழியப்படலாம்! ஆனால், துளியும் கண்ணியக் குறைவு இருந்திடலாகாது! இழிமொழி கூறுதல் - நரகல் நடையில் எழுதுதல் - இவற்றை நமது எதிரிகள் தமது போர்த் தளவாடங்களாகக் கொள்ளட்டும்! நமக்கு வேண்டாம் அந்தப் பாணி!

சமுதாயத் துறையில் - பொருளாதாரத்துறையில் - அரசியல் துறையில் - தமிழ்நாட்டு மக்களுக்கு விழிப்பு உணர்ச்சி ஊட்டுகின்ற வண்ணம், நமது மேடைகளும், ஏடுகளும் பயன்பட வேண்டும்!

ஆகஸ்டு முதல்வாரம் திருச்சி பொதுக்குழுவுக்குப் பிறகு நமது கொள்கைப் பிரச்சாரப் பணி நாடு முழுதும் தீவிரமாக்கப்பட இருக்கிறது!

அதற்கான ஏற்பாடுகளை நமது பொதுக்குழுவில் விவாதித்து நடைமுறைப்படுத்தப்பட, பொதுக்குழு உறுப்பினர்களும் கருத்துகளை வழங்கிடுவர்!

அதைத் தொடர்ந்து, சென்றிடுவீர் எட்டுத் திக்கும்! சிங்க நடையில் - சிங்காரத் தென்றல் நடையில் - கொள்கை முழக்கம் செய்திடுவீர்!

அன்புள்ள,

மு. க.

(28-07-1980)

759. துண்டு துண்டாகத் துண்டு விழுகிறதே!

உடன்பிறப்பே,

மலையத்தனை அறிவிப்புகளைச் செய்வதும், அவற்றில் கடுகத்தனையைக் கூட நிறைவேற்ற முனையாமல், அவற்றை மக்கள் தானாகவே மறந்துவிடுவார்கள் என்று நினைத்து - அடுத்த அறிவிப்புக் காண்டங்களுக்குச் செல்வதும் அ.இ.அ.தி.மு.க. அரசின் அபூர்வ குணங்களாகும்!

இந்த அரசின் சார்பில் வெளியிடப்பட்ட நிதி நிலை அறிக்கை துண்டுவிழாத ஒன்று என்றும் - அதற்கு மாறாக மொத்தக் கணக்கில் உபரி ஏற்படக்கூடிய ஒன்று என்றும் பெருமையுடன் கூறிக் கொள்ளப்பட்டது.

தேர்தல் நேரத்தில் விவசாயிகள் கடன்கள் அனைத்தையும் ரத்து செய்து விடுவோம் என்று ஆளுங் கட்சியின் தேர்தல் பிரகடனம் கூறியது. அதுமட்டுமல்ல! தி.மு. கழகத் தேர்தல் அறிக்கையில் விவசாயிகளின் கடனை ரத்து செய்ய வழிவகை காணப்படும் என்று கூறி கருணாநிதி, நழுவிக் கொள்ளப் பார்க்கிறார். நான் கறாராகவும், உறுதியாகவும் சொல்கிறேன். விவசாயிகளின் கடனை ரத்து செய்ய மத்திய அரசின் உதவியைக் கோருவோம். மத்திய அரசு இணங்காவிட்டால், மாநில அரசே ஐந்தாண்டுக் காலத்திற்குள் விவசாயிகளின் கடனை ரத்து செய்து விடும் என்று இன்றைய முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள் முழக்கமிடாத மேடைகளே இல்லை!

ஆனால் இன்று நழுவுவது யார்?

ஐந்து ஏக்கராவுக்கு கீழேயுள்ள விவசாயிகளுக்கு மட்டுமே கடன் ரத்து செய்யப்படும்.

அதுவும் அந்த ஐந்து ஏக்கரா அவனுக்குச் சொந்த நிலமாக இருக்க வேண்டும். குத்தகையெடுத்தவனாக இருந்தால் கிடையாது.

அந்த ஐந்து ஏக்கரா என்பது சாதாரண ஏக்கராகவே தவிர, ஸ்டாண்டர்டு ஏக்கரா என்ற கணக்கில் அல்ல.

அதுமட்டுமல்ல, அந்த ஐந்து ஏக்கரா நிலமும் புயலால் வெள்ளத்தால் பாதிக்கப் பட்டதாக இருக்க வேண்டும். இப்படித் திட்டவட்டமாக வரையறுத்து நிதியமைச்சர் தெளிவுபடக் கூறிவிட்டார் சட்டப் பேரவையில்!

அறுபது கோடி ரூபாய் விவசாயிகளின் கடன் ரத்து என்று கொட்டை எழுத்துகளில் செய்திகள்!

அதில் பதினாறு கோடி ரூபாய் தக்காவிக் கடன் ரத்து! தக்காவிக் கடன் என்பது வராக்கடன் என்று எப்போதோ கைவிடப்பட்ட கடன்! கொடுத்தவர்களுக்கும் மறந்து போய், வாங்கியவர்களுக்கும் மறந்து போய்விட்ட ஒன்று! வெறும் கணக்கிற்காக அதைக் கூட்டிக் கொண்டார்கள்!

சரி, அறுபது கோடியில் மீதமுள்ள நாற்பத்தி நாலு கோடி ரூபாய்க்கு பட்ஜெட்டில் நிதி ஒதுக்கீடு உண்டா?

இல்லை! இல்லை! இல்லவேஇல்லை!

மராட்டிய மாநிலத்தில் நாற்பத்தி ஒன்பது கோடி ரூபாய்க்கு அந்த அரசு விவசாயிகள் கடனை ரத்து செய்து அறிவித்தது! வெறும் ஏட்டில் அல்ல! பட்ஜெட்டில் அதற்குரிய நிதி ஒதுக்கீட்டைக் கவனமாகச் செய்துமிருக்கிறது!

ஆனால் இங்கே தமிழ் நாட்டில், உபரி பட்ஜெட் என்றார்கள். நாற்பத்தி நாலு கோடி ரூபாய்க்கு நிதி ஒதுக்கீடே செய்யாமல்!

நாற்பத்தி நாலு கோடிக்கு நிதி ஒதுக்கீடு செய்திருந்தால் உபரி பட்ஜெட் காட்டியிருக்க முடியாது! இப்போது மத்திய அரசின் மீது பழியைப் போடுகிறார்கள். மத்திய அரசு மராட்டிய மாநிலத்து விவசாயக் கடன் ரத்துக்குக் கூட உதவி எதுவும் செய்யவில்லை! அந்தப் பொறுப்பை அந்த மாநில அரசேதான் ஏற்றுக் கொண்டது.

இன்னொரு முக்கிய விஷயம்! தமிழக பட்ஜெட்டில் ஆண்டுத் திட்டத்திற்கு 436 கோடியென்று குறிப்பிட்டிருக்கிறார்கள்!

ஆனால், மத்திய திட்டக்குழு ஏற்கனவே 383 கோடி ரூபாய்க்கான ஆண்டுத் திட்டத்திற்குத்தான் ஒப்புதல் வழங்கியிருக்கிறது மாநில அரசுக்கு!

மத்திய அரசு ஒப்புதல் வழங்கியது 383 கோடி ரூபாய்க்கென்று இருக்கும் போது, 436 கோடி ரூபாய் என்று எந்த நிதி ஆதாரத்தைக் கொண்டு பட்ஜெட்டில் அறிவித்தீர்கள் என்று சட்டப் பேரவையில் நிதி அமைச்சரைக் கேட்டேன்.

அவர்கள் 383 கோடியில் இருக்கிறார்கள். நாம் 436 கோடி கேட்கிறோம். இரண்டுக்கும் இடையே ஏதாவது கிடைக்கும் என்றார் நிதியமைச்சர்!

383 கோடி ரூபாய் ஆண்டுத் திட்டம் என்று ஒப்புதல் வழங்கினாலே பதினைந்து கோடி ரூபாய் பற்றாக்குறை ஏற்படுமென்றும், அதற்கு என்ன நிதி ஆதாரங்களைத் தேடப் போகிறீர்கள் என்றும் மத்தியத் திட்டக்குழு, ஏற்கனவே மாநில அரசைக் கேட்டுள்ளதே - ஒரு வேளை இன்னும், அதிகமாக ஆண்டுத் திட்டத்திற்கான ஒப்புதல் வழங்கப்பட்டால் அப்போது மேலும் பற்றாக்குறை 15 கோடியிலிருந்து 53 கோடியாக ஆகக் கூடுமே! அப்படியேற்படும் பற்றாக்குறை எத்தனை கோடியானாலும் அதற்கு மாநில அரசின் நிதி ஆதார வாய்ப்புகள் என்ன?

அவர், அதுபற்றியெல்லாம் யோசித்து பிறகு அறிவிக்கப்படும் என்று கூறிவிட்டார்.

எனவே, ஆண்டுத் திட்டத்தின் காரணமாக ஏற்படக் கூடிய பற்றாக்குறையும் - அதை நிறைவு செய்ய வேண்டிய நிதி ஆதாரமும் இதுவரை விளக்கப்படவில்லை!

வேலையில்லாத பட்டதாரிகளுக்கு மாதம் ஐம்பது ரூபாய் வீதம் ஒரு லட்சம் பேருக்கு அளிக்கப்படும் என்று உறுதியாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதனை நிருபர்களிடமும் நிதியமைச்சர் தெளிவுபடுத்தியிருக்கிறார். இடையில் வந்த கவர்னர் ஆட்சியில் அத்திட்டம் நடைமுறைப்படுத்தப் படாததையும், ஆளுங் கட்சியும் அதன் தோழமைக் கட்சிகளும் கடுமையாகக் கண்டித்திருக்கின்றன. எனவே மாதம் ஐம்பது ரூபாய் வீதம், ஒரு லட்சம் வேலையில்லாத பட்டதாரிகளுக்கு பட்ஜெட்டில் ஆறு கோடி ரூபாய் நிதி ஒதுக்கியிருக்க வேண்டும். அப்படி எதுவும் ஒதுக்கப்படவில்லை. ஆனால், அறிவிப்பு மட்டும் செய்யப்பட்டுள்ளது.

ஆக மொத்தம் இந்தக் கணக்குகள் வரையில் விவசாயிகளின் கடன் ரத்துக்காக 44 கோடி ரூபாய்!

ஆண்டுத் திட்டத்தில் ஏற்படும் பற்றாக்குறையை நிறைவு செய்ய நிதி ஆதாரம் தேடிட 15 கோடி ரூபாய்க்கு மேல் எத்தனை கோடிக்கு வகை செய்ய வேண்டுமோ தெரியவில்லை!

வேலையில்லா பட்டதாரி உதவித் தொகைக்காக ஒதுக்க வேண்டியது ஆறு கோடி ரூபாய்! குறைந்தது அறுபத்தி ஐந்து கோடி ரூபாய் இன்றளவும் பற்றாக்குறையாகவும், பட்ஜெட்டில் காட்டப்படாமலும் இருக்கிறது!

ஆனால் இந்த பட்ஜெட்டுக்குப் பெயர் உபரி பட்ஜெட்!

துண்டு துண்டாக நிறையத் துண்டு விழும் பட்ஜெட் என்பதுதான் இன்றுள்ள நிலை!

அன்புள்ள,

மு. க.

(02-08-1980)

760. நாலும் மூன்றும் எட்டு!

உடன்பிறப்பே,

ஒருமுறை அண்ணா அவர்களுக்கும் திரு.சி.சுப்பிரமணியம் அவர்களுக்கும் ஒரு சுவையான விவாதம் நடந்தது. திரு. சுப்பிரமணியம் அவர்களின் வாதத் திறமையைப் பாராட்டுகிற பாணியில் அண்ணா பேசினார். எட்டும் ஏழும் பதினைந்து என்று நண்பர் சி. சுப்பிரமணியம் கூட்டிச் சொல்கிறார் - ஒத்துக் கொள்கிறேன். உண்மைதான்! அந்தப் பதினைந்தை இரண்டால் பெருக்கினால் முப்பது வரும் என்கிறார். அதுவும் சரிதான் - மறுக்க முடியாது - ஆனால் இருக்கிற சங்கடமெல்லாம் ஆரம்பத்திலே அவர் சொன்ன எட்டு என்பது, நாலும் மூன்றும் சேர்ந்தால் எட்டு என்று கூட்டப்பட்ட கணக்கு என்பது தான்!

இப்படி அண்ணா தன் பேச்சை முடித்தார்.

அடிப்படை ஒரு தவறான கருத்தை - அல்லது தவறான தகவலை - அல்லது தவறான போக்கினை - வைத்துக்கொண்டு அதன்மீது எவ்வளவுதான் திறமையான வாதங்கள் அடுக்கினாலும், அந்த வாதத்திற்கான தவறான அடிப்படை நொறுக்கப்படும்பொழுது அடுக்கப்பட்ட வாதங்கள் அனைத்தும் பொடிப் பொடியாகி விடுகின்றன.

இப்போது மாற்றார் முகாமிலும் சரி, நம்மை எப்போதுமே பிடிக்காத பத்திரிகைகளிலும் சரி, அண்ணா சொன்னதைப்போல நாலும் மூன்றும் எட்டு என்று கூறிவிட்டு அதன் பிறகு, அந்த எட்டுடன் ஏழைச் சேர்த்து பதினைந்து என்கிற போக்குத்தான் வளர்ந்திருக்கிறது.

கவர்னரையும் மேடையில் வைத்துக்கொண்டு, முதலமைச்சர் தி.மு.கழகத்தை விமர்சித்தது முறையாகாது என்று சமபந்தி போஜன விழாவில் நடைபெற்ற நிகழ்ச்சியைச் சுட்டிக்காட்டித் தந்தி கொடுக்கப்பட்டது.

அந்தத் தந்தியில் பொதுவாகவே முதல்வரும், மற்ற அமைச்சர்களும் அரசாங்க விழாக்களில் அரசியல் கட்சிகளை விமர்சிப்பதையும் குறிப்பிடப்பட்டிருந்தது.

உடனே சில பத்திரிகைகள், வரிந்து கட்டிக் கொண்டு கவர்னரும், முதல்வரும் கலந்து கொண்ட விழா அரசாங்க விழா அல்ல என்று வாதிட முனைகின்றன! ஒரு வார ஏடு என்னைக் கேலி செய்து கார்ட்டூன் படமே கூடப் போட்டிருக்கிறது! பாவம்! அவர்களுக்கு அவ்வளவு எரிச்சல்! ஆத்திரம்!

நான் கொடுத்த தந்தியிலும் சமபந்தி போஜன விழாவை அரசாங்க விழா என்று குறிப்பிடவே இல்லை! கவர்னர் கலந்து கொண்ட விழா என்று மட்டுமே குறிப்பிட்டிருக்கிறேன்.

ஆனால் சிலர், நான் குறிப்பிடாத ஒன்றைக் குறிப்பிட்டதாகக் கூறிக்கொண்டு என்மீது கேலிக் கணைகளை வீசுகின்றனர். சித்திரங்களைத் தீட்டுகின்றனர். இதைத்தான் அண்ணா சொன்னார்! ஆரம்பத்தில் நாலையும் மூன்றையும் எட்டு என்று கூட்டிக்கொண்டு அதன் மீது வாதங்களை அடுக்குகிற திறமையென்று!

இந்த ஒரு விஷயத்தில் மட்டுமல்ல! எல்லாவற்றிலுமே நாம் சொல்லாததை - எழுதாததை - சொல்லியதாக அல்லது எழுதியதாகக் கூறிக்கொண்டு அந்தக் கற்பனைக் கருத்துகளின் மீது அக்கினியாஸ்திரங்களைப் பொழிகிற மேதாவிகள் சிலர் இருக்கத்தான் செய்கிறார்கள்!

பாவம்! அவர்கள் நாலும் மூன்றும் எட்டு எனக் கூறிவிட்டு அதற்கு மேல் கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் - ஆகியவற்றை நடத்துகிற பண்பாளர்கள்!

பரவாயில்லை! மன்னித்து விடுவோம்.

அன்புள்ள,

மு. க.

(03-08-1980)

761. படிக்கற்கள்! பயிற்சி! பக்குவம்!

உடன்பிறப்பே,

திருச்சியில் இரண்டு நாட்கள் நமது கழகத்தின் பொதுக்குழு - ஆம்! தி.மு.க.வின் இதயம் போன்ற பேரவை கூடிற்று, அமைப்புகளின் பணிகள் மேலும் செம்மையாக நடைபெறத் தேவையான கழகச் சட்ட திட்டத் திருத்தங்களும் - நாட்டு மக்களின் பல்வேறு பிரச்சினைகள் பற்றிய தீர்மானங்களும் விரிவாக விவாதிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளன.

தமிழகம், கர்நாடகம், ஆந்திரம், கேரளம் ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த பொதுக்குழு உறுப்பினர்களும், நமது கூட்டணி ஆட்சி நடைபெறும் புதுவை மாநிலத்து பொதுக்குழு உறுப்பினர்களும் மிகுந்த எழுச்சியுடனும், உறுதிவாய்ந்த நெஞ்சத்துடனும் கழகத்தைக் கட்டுக்கோப்புடன் வளர்க்க ஆக்கபூர்வமான கருத்துகளை அள்ளி வழங்கியிருக்கிறார்கள்.

திருச்சி, தீரர்கள் கோட்டம்! அங்கே தென்னகத்து வீரரெல்லாம் இரண்டு நாள் பாசறை கண்டு கலந்துரையாடியதின் காரணமாகக் கழகம், பயன் மிகப் பெற்றுள்ளது எனக்கூறிப் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

பெருகி வரும் காவிரி நீர் கரை கடந்து வீணாகி, விழலுக்கும் பாய்ந்து வீழ்ந்து விடக்கூடாது கடலில் என்றுதானே திருச்சிக்கு அருகில் கரிகாலன், கல்லணை கட்டிக் கழனிகளில் பொன்மணிகளைக் குலுங்க வைத்தான். அலைமோதும் ஆர்வப்பெருக்கு கட்டுக்கடங்காமற் போயின் காட்டாற்று வெள்ளமெனப் பயனற்று விடும் என்பதால்தான், கழகத்திற்கெனச் சட்ட திட்டங்கள், விதிமுறைகள், அமைப்புகள், அந்த அமைப்புகளுக்கு முறைப்படி தேர்தல்கள் - இவையனைத்தும் ஏட்டில் எழுதப்பட்டதோடு நில்லாமல், செயல்படுத்தப்பட்டும் வருகின்றன.

கழகத்தின் துணை அமைப்புகளாக ஏற்கனவே இருந்து வரும் தொழிலாளர் அணி, மகளிர் அணி, மாணவர் அணி, விவசாய அணி, தொண்டர் அணி, இலக்கிய அணி, இவற்றுடன் இளைஞர் அணிக்கான சட்ட திட்ட திருத்தங்களும் திருச்சி பொதுக்குழுவில் வடித்தெடுக்கப் பெற்றுள்ளன.

இளைஞர்களை ஊக்கப்படுத்துவது இயக்கத்தில் உள்ள மூத்தவர்களைப் புறக்கணித்து விடுவதற்காக அல்ல! மூத்தவர்களின் அனுபவமும் - இளைஞர்களின் துடிதுடிப்பும் ஒன்றாகக் கலந்திடும்போது, வரலாற்றைப் படைத்தவர்களும், வரலாற்றைப் படைக்கப் போகிறவர்களும் இணைந்து செயலாற்றுகின்றனர் என்ற களிபேருவகை யேற்படுகிறது!

மூத்தவர்களின் அரவணைப்பும் - இளைஞர்களின் ஆர்வமும், அடக்கமும் - இவை கெடாமல் நமது கழகத்தின் அமைப்புகளும் கழகத்தின் இளைஞர்கள் கூடி ஆங்காங்கு உருவாக்கும் அணிகளும் பணிகளையாற்றிடப் பொதுக்குழுவில் விளக்கங்கள் தரப்பட்டுள்ளன.

எழுச்சி யுகங் காண்பதற்கு எழுந்து வந்த காளைகள்!
வீழ்ச்சியுற்ற தமிழகத்தின் வீர மிக்க இளைஞர்காள்!
ஈட்டியின் முனைகளே! எழுங்கள்!
தீட்டிய கூர்வாட்களே! திட்டமிதோ!
கட்டிய நாய்களல்ல நாம் எட்டிய மட்டும் பாய்வதற்கு!
தட்டிய மாத்திரத்தில் தருக்கர் கொட்டம் அடங்க வேண்டும்.
விருப்பமுள்ளவராம் வெறும் பதவியில் பல பேர் - அவர் வேண்டாம்!
நெருப்பின் பொறிகளே! நீங்கள்தான் தேவை!

என்று முப்பத்தைந்து ஆண்டுகட்கு முன்பு நான் எழுதிய வரிகளை நினைவுபடுத்திப் பார்க்கிறேன். அன்று என் இளம் உள்ளத்தில் எழுந்த உணர்ச்சிதான் - உறுதிதான் - இன்று எத்தனையோ சோதனைகளுக்கும், வேதனைகளுக்கும் மத்தியிலும் தமிழ் இனத்துக்குப் பணியாற்றும் தொண்டனாக என்னை இன்றளவும் வாழ வைத்துக் கொண்டிருக்கிறது!

சித்திரச் சோலைகளே! உமை நன்கு திருத்த இந்தப் பாரினிலே
எத்தனை தோழர்கள் ரத்தம் சிந்தினரோ
உங்கள் வேரினிலே?

என்று சோலைகளைப் பார்த்துப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் கேட்டார். உழைக்கும் வர்க்கத்தின் குருதி எவ்வளவு கொட்டப்பட்டதோ எனப் பெருமூச்சு விட்டார்!

அதே கேள்வி, நமது கழகத்தைப் பார்த்தும் கேட்கத் தோன்றுகிறதல்லவா? செந்நீர் சிந்தியோர் - வியர்வை வடித்துப் பாடுபட்டோர் - கண்ணீர் சிந்தியோர் - இந்த பட்டியலின் பெருக்கமன்றோ கழகத்தை எஃகுக் கோட்டையாக ஆக்கி வைத்திருக்கிறது!

அந்தக் கோட்டை ஓரிரு தேர்தல் தோல்விகளால் உடைந்து நொறுங்கி விடுமென எண்ணிக் களிப்போர் - எதிர்பார்ப்போர் - ஏமாளிகளும், கோமாளிகளுமாகவே இருப்பர்!

அவர்கள் நச்சு நினைப்பில் நெருப்பை அள்ளிக் கொட்டுவதுபோலத்தான் திருச்சி பொதுக்குழுவும் - அதனையொட்டி நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டமும் அமைந்திருந்தன!

நமது கழக நிகழ்ச்சிகளின் வெற்றி எத்தகையது என்பதை, மாற்றார் நடத்தும் ஏடுகளில் வெளிவரும் செய்திகளைப் பார்த்தே அளவிட்டுக் கொள்ளலாம்.

திருச்சி பொதுக்குழுவில் அன்பில் தர்மலிங்கத்தைக் கட்சியை விட்டு விலக்க முயற்சி! மனோகரனை வரவேற்க ஆளே இல்லை! இப்படி இரண்டு ஏடுகளில் இரண்டு செய்திகள் - இரண்டுமே கடைந்தெடுத்த கற்பனைகள்! திருச்சி மாவட்டச் செயலாளர் அன்பில் முன்னின்று நடத்திய பொதுக்குழுவை வந்திருந்தோர் அனைவரும் பாராட்டி, அன்பிலையும் வாழ்த்திப் புகழ்ந்து சென்றனர். நாஞ்சிலார், பொதுக்குழு விளக்கப் பொதுக்கூட்டத்தில் எழுப்பிய முழக்கத்தைக் கேட்டுக் கழகக் கண்மணிகளும் - தமிழ்ப் பெருங்குடி மக்களும் மகிழ்ச்சிக் கூத்தாடினர்!

ஆனால், எரிச்சல்காரர்களுக்கு ஏதாவது ஒரு பொய்யை எழுதி ஏடு விற்க வேண்டும் - தங்கள் காழ்ப்பு உணர்வையும்

காட்டிக்கொள்ள வேண்டும்! நாம் பெறுகிற வலிவையும், பொலிவையும் அவர்களால் தாங்கிக்கொள்ள முடிவதில்லை - அதன் விளைவுதான் இந்தப் பொய்ச்சரக்கு விற்பனை முயற்சி!

உடன்பிறப்பே, மூன்றாம் தேதி இரவு 12.30 மணி அளவில் திருச்சி பொதுக்குழு விளக்கப் பொதுக்கூட்டத்தை முடித்துவிட்டு இரவே புறப்பட்டு திருவண்ணாமலை பயணமானேன் காரில்! நாடாளுமன்ற உறுப்பினர் நண்பர் முருகையன் அவர்களின் மணிவிழாவுக்காக! வழியில் கார் பழுதாயிற்று! வேறு ஒரு காரில் ஏறிக்கொண்டு நாலாம் தேதி காலை எட்டு மணிக்கு திருவண்ணாமலை வந்து சேர்ந்தோம். மணிவிழா மேடையில் நமது புலவர் கோவிந்தனார் அவர்கள் தினமணி ஏட்டினை நீட்டி மராட்டிய முதல்வர் அந்துலே அவர்களும் - தமிழ்நாடு காங்கிரஸ் தலைவரும் - சட்ட மன்றத் தேர்தல் தோல்விக்கான காரணங்களை விவரித்திருப்பதாகச் சுட்டிக்காட்டினார் என்னிடம்!

நான் நண்பர் முருகையன் அவர்களை வாழ்த்திப் பேசிய மேடையில் காங்கிரஸ் கட்சியின் தலைவர்கள், நாடாளுமன்ற, சட்டமன்றக் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் பலர் இருந்தார்கள். தேர்தல் தோல்விக்கான காரணங்களை அறையில் ஆராயாமல், அம்பலத்தில் ஆராய வேண்டுமென்றால் அந்த அறைகூவலையேற்க நான் தயார்! என்று அந்த மேடையிலேயே குறிப்பிட்டேன்!

முதலமைச்சர் யார் என்று முன்கூட்டி அறிவித்ததுகூட ஒரு காரணமாக இருக்கலாம். எப்படியோ, சட்டமன்றத் தேர்தலில் கூட்டணிக்கிடையே கூட்டுறவு மனப்பான்மை நிலவிடவில்லை.

என்று பிரதமர் கூறினார்கள் தேர்தல் முடிவு அறிவிக்கப் பட்டவுடன்!

ஆம் - அது உண்மைதான்! முதல்வர் பதவி காங்கிரசுக்கே இருக்க வேண்டுமென கடைசி வரை போராடிக் கொண்டிருந்தவர்கள், முதல்வர் பதவி தி.மு.க.வுக்குத்தான் என்று அறிவித்ததும் அதிருப்தியடைந்து கூட்டணியில் ஒரு ஒற்றுமையும், நல்லுணர்வும் இல்லாத நிலைமையை உருவாக்கியதோடு பல தொகுதிகளில் மறைமுகமாகக் கூட்டணியின் தோல்விக்காகப் பணியாற்றியதோடு, எதிர் அணிக்கும் வாக்குகளை அளிக்கச் செய்தனர்!

தேர்தல் நேரத்தில் எந்தக் கட்சியிலும் உட்கட்சிப் பிணக்குகள் ஏற்படுவதுண்டு! அதற்குத் தி.மு.கழகமும் விதிவிலக்கல்ல! ஆனால், தமிழ்நாடு இந்திரா காங்கிரசில் சட்டமன்றத் தேர்தலின்போது ஏற்பட்ட பிணக்குகளும் - உட்கட்சிப் போராட்டங்களும் - எந்தக் கட்சியின் வரலாற்றிலும் இல்லாதவைகளாகும்!

அன்று தொடங்கி, நேற்று புதுக்கோட்டை வரையில் அமளியில்லாமல் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சிக் கூட்டங்கள் ஒருநாள் கூட நடைபெற்றதில்லை.

இந்த நிலைமைகளைக் கண்டு கவலையடைந்துதான் பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்கள், தேர்தல் சமயத்தில் கூட்டு மனப்பான்மையில்லை யென்றும் அதனால் ஏற்பட்ட தோல்வியென்றும் கூறினார்கள்!

சமமாகப் பங்கிட்டுக் கொண்டதால்தான் தோல்வி யேற்பட்டது என்று மராட்டிய முதல்வர் அந்துலே, தமிழகம் வந்து விளக்கிவிட்டுச் சென்றிருக்கிறார்!

ஆம்! அதுகூட உண்மைதான்! ஆரம்பத்திலேயே புதுவையைப்போல தி.மு.க.வுக்கு அதிக இடங்களும், காங்கிரசுக்குச் சற்று குறைவான இடங்களும் என்று பங்கிடப் பட்டிருந்தால் - புதுவையில் தி.மு.க., இந்திரா காங்கிரஸ், முஸ்லீம் லீக் கூட்டணி வெற்றி பெற்று ஆட்சி அமைத்திருப்பது போல் தமிழகத்திலும் அமைத்திருக்க முடியும்.

தமிழ்நாட்டைப் பற்றி மராட்டிய முதல்வர் அந்துலே அவர்களிடம், தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர்கள் சில பேர் தந்த தவறான தகவல்களை வைத்து அவர் பேசிவிட்டுப் போய்விட்டார்!

புதுவை மாநிலத்து சட்டமன்றத் தேர்தல்களில் இடங்கள் எப்படிப் பகிர்ந்து கொள்ளப்பட்டன என்ற விபரங்களை அந்துலே அவர்களிடம் யாரும் சொல்லவில்லை போலும்!

உடன்பிறப்பே!

நீ மேடைகளில் பயன்படுத்துவதற்காக இந்த விளக்கத்தை நான் எழுதவில்லை! தி.மு.க. - இந்திரா காங்கிரஸ் உடன்பாடு

இன்னமும் நீடித்துக்கொண்டுதானிருக்கிறது! சட்டமன்றத் தேர்தல் தோல்விக்கான உண்மையான காரணங்கள் எவையென்று பிரதமருக்கு நன்றாகத் தெரியும்!

நமக்கென்று தனியான கொள்கை கோட்பாடுகள் குறிக்கோள் உண்டு! அவற்றைப் பறி கொடுத்து விட்டு யாருடனும் நமக்கு உடன்பாடு இல்லை! இன்றல்ல! எப்போதுமே - 1969 முதல் அதுதான் நமது நிலை! ஏன்? 1967-இல் அண்ணா அவர்கள் கூட்டணி அமைத்து தேர்தலில் களம் புகுந்தாரே அப்போதும் கூட!

எந்தக் கட்சியுடன் உடன்பாடு கொண்டாலும், அந்தக் கட்சியின் வெற்றிக்கு இருதயசுத்தியோடு உழைப்பதே நமது பழக்கம்!

நாமாக எந்த உறவையும் முறித்துக்கொண்டது கிடையாது!

அதே நேரத்தில் ஆட்சி, பதவி, இவைகளைப் பற்றிக்கூடக் கவலைப்படாமல் நமது அடிப்படைக் கொள்கைகளில் நாம் உறுதியாக நின்று அதன் காரணமாகப் பல இன்னல்களையும் ஏற்றுக் கொண்டிருக்கிறோம்.

பின்னர், ஜனதா ஆட்சியின் குளறுபடிகளில் இருந்து இந்தியாவைக் காத்திட, இந்திரா காந்தியின் தலைமையினால் தான் முடியும் என்ற முடிவுக்கு வந்தோம். தமிழகத்தைப் பொறுத்தவரையில், அந்த முடிவு நிறைவேற்றப்பட உத்வேகத்துடன் உழைத்துச் செயலாற்றினோம்! வெற்றியும் பெற்றோம்! பெருமித வெற்றி! கழகமும், காங்கிரசும், மற்ற தோழமைக் கட்சிகளும் ஒற்றுமையுடன் செயல்பட்டதால் ஏற்பட்ட ஒப்பற்ற வெற்றி!

சட்டமன்றத் தேர்தலில் நமது கூட்டணிக் கட்சிகளுக்குள் அந்த ஒற்றுமை நிலவிடவில்லை!

வெற்றி வாய்ப்பு கிட்டவில்லை! நாம் தோற்கடிக்கப் படவில்லை! நாமே தோற்று விட்டோம்!

தோல்வியிலும் நன்மையுண்டு நமக்கு! நமது கூட்டணிக்கு!

நண்பர்கள் சிலரைச் சரியாகக் கணக்குப்போட்டுத் தெரிந்து கொள்ள முடிந்தது அல்லவா?

தோல்விகளைப் படிக்கற்களாக ஆக்கிக் கொண்டு, வெற்றி முகட்டுக்குச் செல்லும் பயிற்சியையும், பக்குவத்தையும் பெற்றதுதான் நமது கழகம்!

ஃ தோல்வியால் மனம் தளர்ந்து விடமாட்டோம்
என்பதை மெய்ப்பித்துக் காட்டியதுதான் மதுரை
இளைஞர் அணி தொடக்கவிழா!

ஃ இதோ திருச்சி பொதுக்குழு!

ஃ அடுத்தது நெல்லை மாவட்ட மாநாடு!

எல்லையற்ற தொல்லைகள் எதிர்ப்பட்டாலும், எதையும் தாங்கும் இதயத்துடன் எங்கள் அண்ணன் வழியில் உழைத்திடத் தயங்கிடோம் எனக் கூறும் உடன்பிறப்புகள், நெல்லையில் கூட இருக்கிறோம். ஆகஸ்டு 23-24 - சனி ஞாயிறு நாட்களில்.

அது குறித்த அழைப்பு மடல் பிறகு எழுதுகிறேன்!

அன்புள்ள,

மு. க.

(07-08-1980)

762. சிரிக்காமல் இருக்க முடியவில்லை!

உடன்பிறப்பே,

கூட்டுறவுச் சங்கங்களின் ஜனநாயகத்துக்கு விடை கொடுத்து அனுப்பி விட்டு, அரசாங்கமே நிர்வாகக் குழு உறுப்பினர்களை நியமிக்கப் போகிறது. ஒன்பது பேர் வரையில் இடம் பெறக்கூடிய அந்த நியமன நிர்வாகக் குழுவில் அரசு அலுவலரும், அலுவலரல்லாதவர்களும் இருப்பார்கள். ஒரு அரசு அலுவலர், எட்டு பேர் அலுவலரல்லாதவர் என்று கூட அரசாங்கம் நியமிக்க வழியுண்டு. ஒன்பது பேரில் ஒருவரை அரசாங்கமே அந்த நிர்வாகக் குழுவின் தலைவராக நியமிக்கும். இந்த நியமனக் குழுவின் தற்காலிக ஆயுட்காலம் இரண்டு ஆண்டுகள். மறுபடியும் அரசு விரும்பினால், இதேபோல ஒரு மசோதாவைச் சட்டசபையில் கொண்டு வந்து தனது தோழமைக் கட்சிகளின் ஒருமித்த ஆதரவோடு இந்த நியமனக் குழுவின் ஆயுட்காலத்தை மேலும் இரண்டு ஆண்டுகள் என்று நீட்டித்துக்கொள்ளும்.

இந்த நியமன உறுப்பினர்களுக்கு ரெமுனரேஷன் தரப்படும் என்று ஆங்கிலத்திலும், ஊதியம் வழங்கப்படும் என்று தமிழிலும் அளிக்கப்பட்டுள்ள சட்ட முன்வடிவுக் குறிப்புகளில் கோடிட்டுக் காட்டப்பட்டிருக்கிறது. அதற்கு அமைச்சர் தரும் விளக்கம், பயணப்படி என்பதாகும்.

இத்தகைய ஒட்டுமொத்தமான நியமன முறை கூட்டுறவுத்துறையில் ஜனநாயகத்துக்குப் புறம்பானது எனக் கூறி தேர்தல் மூலம்தான் அந்த இடங்கள் நிரப்பப்பட வேண்டுமென்று தி.மு.கழகமும், இந்திரா காங்கிரசும், முஸ்லீம் லீக்கும் எடுத்துக் கூறி - அந்தக் கருத்து ஏற்கப்படாத காரணத்தால் வெளிநடப்புச் செய்து தங்களின் அதிருப்தியைத் தெரிவித்துக் கொண்டுள்ளன.

மார்க்சிஸ்ட், இந்திய கம்யூனிஸ்டு, மற்றுமுள்ள ஆளுங்கட்சியின் தோழமைக் கட்சிகள் இந்த ஜனநாயக விரோத மசோதாவை ஆதரிக்கும் வகையில் வாக்களித்துள்ளன.

அது ஒரு புதுவிதமான தோழமை! மத்தியில் ஒருவிதம் - மாநிலத்தில் ஒருவிதம்!

ராஜ்யசபை (டெபுடி சேர்மன்) துணைத் தலைவர் தேர்தல் அண்மையில் நடந்தது சில நாட்களுக்கு முன்பு!

இந்திரா காங்கிரஸ் ஒரு வேட்பாளரை நிறுத்தியது! மார்க்சிஸ்டு, இந்திய கம்யூனிஸ்டு, அர்சு காங்கிரஸ், மற்றுமுள்ள கட்சிகள் இணைந்து அர்சு காங்கிரஸ் சார்பில் ஒரு வேட்பாளரை நிறுத்தின!

தமிழ்நாட்டில் அர்சு காங்கிரஸ் உட்பட மார்க்சிஸ்டு, இந்திய கம்யூனிஸ்டு கட்சிகளுடன் அ.இ.அ.தி.மு.க.வுக்குக் கூட்டு!

ஆனால், அ.இ.அ.தி.மு.க. டெல்லி ராஜ்ய சபைத் தேர்தலில் என்ன செய்தது தெரியுமா? தோழமைக் கட்சிகளின் வேண்டுகோளை அ.இ.அ.தி.மு.க. ஏறெடுத்தும் பார்க்கவேயில்லை! ஏன்? அந்த வேண்டுகோளை விடுக்க டெல்லியில் தோழமைக் கட்சித் தலைவர்கள் சிலர் படாதபாடுபட்டுக் கூட, டெல்லி சென்று இரண்டு நாள் தங்கியிருந்த அ.தி.மு.க. தலைவரை அவர்களால் பார்க்க முடியாமற் போய்விட்டதாம்!

முடிவு என்ன? வலியச் சென்று இந்திரா காங்கிரஸ் வேட்பாளருக்கு அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் வாக்களித்துத் தங்கள் ஆதரவை வழங்கியிருக்கிறார்கள்.

இந்தச் செய்தியை இங்குள்ள தோழமைக் கட்சிகளின் தலைவர்கள் கண்டுகொள்ளவே இல்லை!

அது போகட்டும்! இங்கே கூட்டுறவுத் துறையில் நியமன நிர்வாகக் குழுவுக்கு ஆதரவும், வாக்கும் அளித்தவர்கள் என்ன பேசினார்கள் தெரியுமா?

தி.மு.க. ஆட்சிக் காலத்தில் கூட கூட்டுறவுத் துறையில் நியமனங்கள் இருந்தன! 1976-இல் குடியரசுத் தலைவர் ஆட்சியில் எல்லாக் கூட்டுறவு நிறுவனங்களுக்கும் தனி அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர்.

இப்படி அந்தத் தோழமைக் கட்சியினர் குறை கூறினார்கள்.

தி.மு.க. ஆட்சிக் காலத்தில் கூட்டுறவுத் துறையில் இப்படி ஒரேயடியாக அறவே தேர்தல் முறை புறக்கணிக்கப்பட்டு அங்கிங்கெனாதபடி எங்கெங்கும் நியமன நிர்வாகக் குழுக்கள் அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்டதாக யாராலும் கூற இயலாது!

சரி! வாதத்திற்காக கேட்கிறேன்! அப்படியே ஒன்றிரண்டு அமைப்புகளில் நியமனங்கள் நடைபெற்றது தி.மு.க. ஆட்சிக்காலத்தில் தவறு என்றால் - அந்தப் பரங்கிமலை அளவுத் தவறை இன்றைக்கு அ.இ.அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் இமாலய மலை அளவுக்குச் செய்ய வேண்டுமா? அதற்கு ஜனநாயகம் பேசுகிறவர்கள் ஆதரவு தர வேண்டுமா?

1976-ஆம் ஆண்டு நியமிக்கப்பட்ட தனி அதிகாரிகளின் பதவிக்காலத்தை மேலும் அ.தி.மு.க. அரசு நீட்டிப்பதை எதிர்த்து, உடனடியாகக் கூட்டுறவுத்துறையில் தேர்தல் நடத்த வேண்டுமென்று வற்புறுத்தி அரசின் செயலுக்கு மாறாக வாதாடி, அன்றைய தினம் எதிர்க்கட்சி அணியுடன் நின்ற கட்சியினர் கூட இப்போது - இந்த நியமன நிர்வாகக் குழுக்களை இரு கையேந்தி வரவேற்றிருப்பது விந்தையிலும் விந்தையே ஆகும்!

தவறுகளைச் சுட்டிக் காட்டினால், நீ கடுகளவு செய்தால் - நான் கடல் அளவு செய்கிறேன் என்பதற்குப் பெயர்தானா நீதி? நேர்மை? தர்மம்?

கடந்த காலத்தில் கழக ஆட்சியிலாகட்டும் - 1976-இல் குடியரசுத் தலைவர் ஆட்சியிலாகட்டும் - கூட்டுறவுத்துறையில் ஜனநாயக விரோத நியமனங்கள் இருந்தன என்று சுட்டிக்காட்டுகிற ஆளுங்கட்சியின் தோழமைக் கட்சியினர்,

அந்தத் தவறை நீங்கள் செய்யாதீர்கள்! அதே தவறை நீங்கள் செய்வதை நாங்கள் அனுமதிக்க முடியாது என்று எதிர்ப்பதற்குப் பதிலாக - ஆகா! நீங்களும் தவறு செய்கிறீர்களா! சபாஷ்! பலே! பாராட்டுகிறோம்! கழக ஆட்சியில் சில இடங்களில்தான் நியமனம்! உங்கள் ஆட்சியில் கூட்டுறவுத்துறையில் அடி முதல் முடி வரையில் நியமனம்! நியமனம்! வாழ்க உங்கள் நியமனம்! அந்த நியமனங்களில் எங்கள் கட்சிக்காரர்களையும் மறந்து விடாதீர்கள்! என்றல்லவா வேண்டுகோள் வாழ்த்துப் பாடுகிறார்கள்.

இரண்டு ஆண்டுக் காலத்திற்கு, அரசு விரும்பினால் மேலும் இரண்டு ஆண்டுக் காலத்திற்குக் கூட்டுறவுத் துறையில் நியமன நிர்வாகக் குழுக்களின் மூலம் ஜனநாயகம் (?) தழைத்தோங்கட்டும்! சர்வாதிகாரம் (?) தலைகாட்ட முடியாமல் தரை மட்டமாகட்டும்!

புரட்சிகளில் எல்லாம் பெரும் புரட்சியாகக் கூட்டுறவுத் துறையில் இத்தகைய ஜனநாயக (?) புரட்சியைச் செய்த இந்த அரசைப் புரட்சி அரசு எனக் கூறிடவும் சிலர் இருப்பதைப் பார்த்துச் சிரிக்காமல் இருக்க முடியவில்லை!

அன்புள்ள,

மு. க.

(09-08-1980)

763. முதல்வருக்கு நினைவூட்டுகிறேன்!

உடன்பிறப்பே,

பத்து நாட்கள் உருண்டோடி விட்டால் அதன் பிறகு, தான் பேசிய கருத்தை மாற்றிச் சொல்லி நிருபர்களையும், பொதுமக்களையும் ஏமாற்றலாம் என்பதில் நமது முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்களுக்குத் திடமான நம்பிக்கை!

காமராஜர் பிறந்த நாளையொட்டி நடைபெற்ற சமபந்தி போஜன நிகழ்ச்சியில், கவர்னர் முன்னிலையில், தி.மு.கழகத்தைக் குறைவாகப் பேசினார் முதலமைச்சர் என்பது நமது குற்றச்சாட்டு! அதற்காகக் கண்டனக் குரல் கொடுத்தோம்! சமபந்தி போஜன நிகழ்ச்சி அரசாங்க விழா அல்ல! அதுவும் நமக்குத் தெரியும்!

முதலமைச்சர் சொல்கிறார்! அந்த விழாவுக்குக் கவர்னர் வரவில்லை - பிரபுதாஸ் பட்வாரி வந்தார் என்று!

வேடிக்கையல்ல; நேற்று நிருபர்கள் கூட்டத்தில் முதலமைச்சர் இப்படித்தான் பேட்டியில் கூறியிருக்கிறார்.

கவர்னர் முன்னிலையில் முதலமைச்சர் ஒரு எதிர்க் கட்சியைப் பற்றித் தவறாக விமர்சிக்கலாமா? என்பதுதான் நமது கேள்வி.

அதற்கு முதல்வரின் பதில், நான் எம்.ஜி.ராமச்சந்திரனாகச் சென்றேன். அவர் வெறும் பட்வாரியாகத்தான் வந்தார் என்பதாகும்!

அப்படியானால் அந்த நிகழ்ச்சியில் வரவேற்றுப் பேசியவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே! என்றும் மேதகு தமிழக ஆளுநர் அவர்களே! என்றும் விளித்தது ஏன்?

பெரியவர் பட்வாரி அவர்களே! நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களே! என்றல்லவா அவர்கள் விளித்துப் பேசியிருக்க வேண்டும்!

அப்படிப் பேசவில்லையே! கவர்னர் என்ற நிலையிலும், முதலமைச்சர் என்ற நிலையிலும்தான் இருவரும் அந்த விழாவுக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

பொதுவாக அரசாங்க விழாக்களுக்கு முறைப்படி எதிர்க்கட்சிக்கு அழைப்பு அனுப்பி நம்மைக் கலந்து கொள்ளச் செய்ய வேண்டுமென்ற பெருந்தன்மையை இதுவரையில் கடைப்பிடிக்காத இந்த அரசாங்கத்தின் அமைச்சர்கள், அரசு விழாக்களில் நமது கழகத்தையும், குறிப்பாக என்னையும் தாக்கிப் பேசுவதையே தங்களது தொழிலாகக் கொண்டிருக்கின்றனர்.

கட்சிகளைப் பற்றிய விமர்சனங்களுக்கு அமைச்சர்கள் கட்சிகளின் மேடையைப் பயன்படுத்திக் கொள்ளட்டும்! அதற்கு யாரும் மறுப்பு சொல்லவில்லை!

அரசு விழாக்கள், ஆளுநர் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகள் - இவற்றில் அரசியல் கருத்து மாறுபாடுகளைப் பற்றிய பேச்சுகள் அமையுமானால் - அதை ஆளுநருக்குச் சுட்டிக்காட்ட வேண்டிய பொறுப்பு, பாதிக்கப்படும் கட்சிக்கு ஏற்படுகிறதா இல்லையா?

சமபந்தி போஜன விழாவில் காமராஜ் காங்கிரஸ் கட்சியினர் தங்கள் தனித் தன்மையை இழந்து விடக்கூடாது என்பதைக் குறிப்பிட சில கருத்துகளைச் சொன்னேன். நல்ல கட்சி, கெட்ட கட்சி என்று நான் பேசியதைத் தங்களைக் கெட்டவர்கள் என்று தி.மு.க.வினர் எடுத்துக் கொள்வானேன்? தி.மு.க. கெட்ட கட்சி என்று நான் பேசியதாகச் சொல்ல முடியுமா?

இப்படி முதலமைச்சர் நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் நேற்று நிருபர்களிடம் கூறியுள்ளார்.

எவ்வளவு சாமர்த்தியமாகப் பூசணிக்காயை முழுசாகவே சோற்றில் மறைக்கப் பார்க்கிறார் பார்த்தாயா?

காமராசர் வழியில் உள்ள காங்கிரஸ் கட்சிகள் எல்லாம் ஒன்றாக இணைய வேண்டும். நான் இணைவது என்று சொல்லும்போது தி.மு.க.வைச் சொல்லவில்லை. நல்ல கட்சிகளை மட்டும்தான் சொல்கிறேன்.

இதுதான் சமபந்தி போஜன விழாவில் முதலமைச்சர் கூறிய கருத்து! இது பல ஏடுகளில் வெளியாகியிருந்தது அப்போதே!

ஆனால் நாட்கள் இருபதுக்கு மேல் ஆகிவிட்ட காரணத்தால், எதை வேண்டுமானாலும் மாற்றிச் சொல்லலாம் என்று முதலமைச்சர் நம்புகிறார்!

அதனால்தான் நடந்ததை இப்படித் திரித்துப் பேசுகிறார்.

நான் தி.மு.க.வைச் சொல்லவில்லை! நல்ல கட்சிகளைச் சொல்லுகிறேன்.

என்று முதல்வர் பேசியதற்கு என்ன பொருளாம்?

தமிழகத்தை ஆட்சி செய்த முதல்வர்கள் எல்லாம் திறமை சாலிகள்! நான் எம்.ஜி.ஆர். அவர்களைக் குறிப்பிடவில்லை. திறமைசாலிகளைக் குறிப்பிட்டேன் என்று எதிர்காலத்தில் யாராவது வரலாற்றில் எழுதினால், அதற்கு என்ன அர்த்தம்? முதலமைச்சர் எம்.ஜி.ஆர். திறமைசாலியல்ல என்றுதானே அர்த்தம்!

அதைப்போலத்தான் நான் தி.மு.க.வைக் குறிப்பிடவில்லை! நல்ல கட்சிகளைக் குறிப்பிடுகிறேன் என்ற சொற்றொடரும் ஆகும் என்பதை நிருபர்கள் முதலமைச்சருக்கு நினைவூட்டுவதற்கு மறந்தாலும் - நான் அவருக்கு நினைவூட்டடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அன்புள்ள,

மு. க.

(10-08-1980)

764. வேதனையானது! விரும்பத்தகாதது!!

உடன்பிறப்பே,

சில விஷயங்களைச் சொன்னாலே நமது முதல்வருக்கும், அமைச்சர்களுக்கும் மிகக் கோபம் வருகிறது. சீறிப் பாயும் சின வேங்கைகளாகிறார்கள். மதுரையில் மாநகராட்சி மன்ற மேயரின் பதவிக் காலம் இரண்டு ஆண்டுகள்!

இப்போது அந்த இரண்டு ஆண்டுகள் முடிந்து விட்டன! ஆகஸ்டு எட்டாம் தேதி முறைப்படியும், விதிப்படியும் மேயர் தேர்தல் நடைபெற்றிருக்க வேண்டும்.

ஆகஸ்டு எட்டாம் தேதி வந்து போய் விட்டது. ஆனால் மேயர் தேர்தல் நடைபெற்று மதுரைக்குப் புதிய மேயர் தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டாரா என்றால் இல்லை!

பழைய மேயரின் பதவிக்காலம் முடிந்துவிட்டதால் புதிய மேயர் தேர்தல் நடைபெறும் வரையில் மாநகராட்சி ஆணையாளர்தான் மேயரின் பொறுப்புக்களை கவனித்து வருவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இப்படியொரு அதிகாரி, பொறுப்பேற்றுக் கொள்கிற அளவுக்கு அப்படியென்ன அசாதாரணமான நிலைமை ஏற்பட்டுவிட்டது?

மாநகராட்சி மன்றம் கலைக்கப்பட்டு, மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் அனைவரும் பதவியிழந்து வீட்டுக்கு அனுப்பப்பட்டு விட்டார்களா?

அப்படி எதுவும் நடைபெற்றதாகச் செய்தியில்லை!

ஆனாலும், ஆகஸ்டு எட்டாம் நாள் முறைப்படி நடந்திருக்க வேண்டிய தேர்தல் நடைபெறவில்லை.

இப்போது மதுரைக்கு மேயர் இல்லை! அதிகாரியின் பரிபாலனம்தான் நடக்கிறது!

சரி, மேயரைத் தேர்ந்தெடுக்க வேண்டிய மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் எல்லோரும் வெளிநாடு எங்காவது சுற்றுப்பயணம் சென்றிருக்கிறார்களா? இல்லை! இல்லை! மதுரையம்பதியில்தான் இருக்கிறார்கள்.

மாநகராட்சி மன்ற மொத்த உறுப்பினர்கள் எண்ணிக்கை, நியமன உறுப்பினர்களையும் சேர்த்து எழுபத்து நாலு பேர்!

இந்த எழுபத்தி நாலு பேரில் அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் முப்பத்தி ஏழு பேர்! மார்க்சிஸ்டு கட்சி உறுப்பினர்கள் ஒன்பது பேர்! இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர்கள் மூன்று பேர்! காமராஜ் காங்கிரஸ் உறுப்பினர்கள் இரண்டு பேர்!

ஆக மொத்தம் 51 பேர் அ.தி.மு.க. அணியைச் சேர்ந்த தோழமைக் கட்சியினர்!

மீதமுள்ள இருபத்தி மூன்று பேரில் தி.மு.க. உறுப்பினர்கள் பனிரெண்டு பேர்! இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்கள் ஒன்பது பேர்!

கணக்கு தெளிவாக இருக்கிறது, உள்ளங்கை நெல்லிக் கனிபோல!

இருந்தபோதிலும், ஐம்பத்தி ஒன்று என்ற அளவுக்குப் பெரும்பான்மை பெற்றுள்ள அ.தி.மு.க. அணியின் சார்பில் மேயர் பதவிக்கு ஒரு வேட்பாளரை நிறுத்த முடியாமல், தேர்தலையே நடத்தாமல் அதிகாரியின் பொறுப்பில் மாநகராட்சி நிர்வாகத்தைக் கொடுத்திருக்கிறார்கள்!

இன்னும் என்ன செய்யப் போகிறார்களோ - தெரியவில்லை!

ஒருவேளை சட்டப் பேரவைக் கூட்டம் முடிந்த மறுநாள் அல்லது இரண்டொரு நாட்கள் கழித்து, மதுரை மாநகராட்சி குறித்து ஏதாவது அவசரச் சட்டம் பிறப்பிக்கப் போகிறார்களோ என்னவோ! யார் கண்டது?

இப்படிப்பட்ட ஒரு நிர்வாக முறைகேட்டை, ஜனநாயக முரண்பாட்டை ஒரு எதிர்க்கட்சி சுட்டிக்காட்டக் கடமைப் பட்டிருக்கிறதா இல்லையா?

அப்படிச் சுட்டிக்காட்டினால் அமைச்சரவையில் இருப்போர் ஆத்திரப்படுகிறார்களே! ஏன்?

மதுரை மாநகராட்சியில் பெரும்பான்மை பலத்தை வைத்துக்கொண்டு, குறிப்பிட்ட தேதியில் மேயர் தேர்தலை நடத்தாமல் அதிகாரி வசம் பொறுப்பை ஒப்படைத்தது, வேதனை தரக்கூடியது! விரும்பத்தகாதது!

அன்புள்ள,

மு. க.

(11-08-1980)

765. சிக்மகளூர் சிக்கிக் கொண்டது!

உடன்பிறப்பே,

மத்திய அரசு போதிய அளவு மண்ணெண்ணெய் தமிழ் நாட்டுக்குக் கொடுத்துள்ளது. மேலும் தேவைப்பட்டால் அனுப்பவும் தயாராக இருக்கிறது. இங்கு கள்ள மார்க்கெட்டில் மண்ணெண்ணெய் விற்கப்படுவதாகக் கூறப்படுகிறது. விநியோக முறை சரியாக இல்லாததுதான் இதற்குக் காரணம்.

என்று மத்திய அமைச்சர் வீரேந்திரபட்டேல் அவர்கள் ஓசூரில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியில் குறிப்பிட்டார் என்பதற்காக நமது முதலமைச்சர் உடனடியாக நிருபர்கள் கூட்டத்தைக் கூட்டினார்.

வீரேந்திர பட்டீலுக்கு என் மீது என்ன கோபம் தெரியுமா? சிக்மகளூர் தேர்தலில் இந்திரா காந்தியின் வெற்றிக்காக அ.தி.மு.க. உயிரைக் கொடுத்துப் பாடுபட்டு வீரேந்திர பட்டீலைத் தோற்கடித்து விட்டது. அந்தக் கோபம் அவருக்கு இன்னமும் நீங்கவில்லை எனத் தெரிகிறது.

இப்படி ஒரு ஆவேசமான விளக்கத்தை முதலமைச்சர் தந்தார். முதல்வருடைய இந்தச் சூடான பதிலை எல்லா ஏடுகளும் வெளியிட்டன. சில ஏடுகள் வீரேந்திர பட்டீல் அவர்களை, நரகல் நடையில் அர்ச்சனை செய்து, தங்கள் எஜமான விசுவாசத்தைக் காட்டிக் கொண்டு நன்றிக் கடனாக நவமணியை விருந்தாக்கிக் கொண்டு மகிழ்ந்தன.

முதலமைச்சரின் கடுமையான தாக்குதலுக்கு, வீரேந்திர பட்டீல் அவர்கள் பொறுமையாகப் பதில் அளித்துள்ளார்.

சமீபத்தில் நான் ஓசூரில் நடந்த ஒரு கூட்டத்தில் கலந்து கொண்டேன். எனக்கு முன் பேசிய ஒருவர் மண்ணெண்ணெய் சரியாகக் கிடைக்கவில்லையென்றும், அதிக அளவில் கள்ளமார்க்கெட்டும், பதுக்கலும் நடக்கிறதென்றும் அதனால்,

பொதுமக்கள் அவதிப்படுவதாகவும் கூறினார். நான் பேசும் போது அதற்குப் பதில் கூறினேன். நாட்டில் மண்ணெண்ணெய் நிலைமை திருப்திகரமாக இருக்கிறதென்றும் இங்கு தட்டுப்பாடு இருக்குமானால் அதற்கு விநியோகத்தில் உள்ள கோளாறுதான் காரணமாக இருக்கும் என்றும், தமிழக அரசு கோரினால் மேலும் மண்ணெண்ணெய் அனுப்ப மத்திய அரசு தயாராக இருக்கிறது என்றும் குறிப்பிட்டேன். இந்த நிலையில் தமிழ்நாடு முதலமைச்சர் என் பேச்சுக்கு அரசியல் காரணம் கற்பிக்க முயற்சித்திருப்பது வேதனை தருகிறது. பொறுப்புள்ள முதல் மந்திரி பதவியில் இருப்பவர், பொது மக்கள் நலன் சம்பந்தப்பட்ட ஒரு நிர்வாக விஷயத்தை அரசியலாகத் திரித்துக் கூறுவது சரியல்ல!

இவ்வாறு திரு. பட்டீல் அவர்கள், தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்களுக்குக் கடிதம் எழுதியுள்ளார்.

தமிழ்நாட்டின் தேவைகள் - மண்ணெண்ணெய் மட்டுமல்ல மற்றும் பல கோரிக்கைகளுக்காக நாடாளுமன்றத்தில் நமது கழக உறுப்பினர்கள் குரல் எழுப்பி வருகிறார்கள்.

- சேது சமுத்திர திட்டம்.
- சேலம் இரும்பாலை விரைவுபடுத்தும் திட்டம்.
- நெல் கொள்முதல் விலையை 140 ரூபாய் அளவுக்கு ஆக்கிட வேண்டும்.
- சர்க்கரை விநியோகம்.
- மண்ணெண்ணெய் விநியோகம்.
- ரயில்வேயில் உருவாகும் மாற்றங்களில் தமிழ்நாடு பாதிக்கப்படக்கூடாது என்ற நிலை,

இப்படிப் பல்வேறு பிரச்சினைகளில், தமிழ்நாட்டு மக்களின் நலனுக்காக நமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் டெல்லியில் அழுத்தம் திருத்தமாகக் கருத்துகளை எடுத்து வைத்துள்ளனர். எனவே, தமிழகத்திற்குத் தேவையான மண்ணெண்ணெய் தர வேண்டுமென்று மத்திய அரசை வலியுறுத்துவதில் நமக்குள்ள கடமையுணர்வைப் போலவே அப்படி வழங்கப்படும் எண்ணெய்

கள்ள மார்க்கெட்டுக்கு உட்படுத்தப்படாமல் சீராக விநியோகம் ஆக வேண்டுமென்பதிலும் நமக்கு அக்கறையிருக்கிறது.

சுமார் இரண்டரைக் கோடி ரூபாய் விலையுள்ள பாமாயில் என்ற எண்ணெய், கலப்படம் செய்து விற்பதன் மூலம் சுமார் நாலைந்து கோடி ரூபாய் கொள்ளை லாபம் பெறக் கூடிய நிலையில், ஜூன் மாதம் 20-ஆம் நாளன்று திருவொற்றியூரில் பிடிபட்டது.

ஏதோ கண்துடைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதே தவிர, அந்தப் பதுக்கல் பேர்வழிகள் யார்? அதில் பினாமிகள் யார்? பின்னே ஒளிந்து கொண்டிருக்கும் பெரிய திமிங்கலங்கள் யார்? இந்த விபரங்களுக்குள்ளேயே எம்.ஜி.ஆரின் அரசு நுழையாமல் - திரைபோட்டு மறைத்து விட்ட உண்மை நாட்டுக்குப் பெரும் திகைப்பையல்லவா ஏற்படுத்தியிருக்கிறது!

இவ்வளவு பெரிய பதுக்கல் கொள்ளையில் யாரும் கைது செய்யப்பட்டுச் சிறையில் வைக்கப்படக்கூட சட்டம், தனது கடமையைத் தீவிரமாகவும், உடனடியாகவும் செய்திட முன்வராதது கண்டு யார்தான் வியப்படையாதிருக்க முடியும்?

பாமாயில் எண்ணெயில் நடத்தப்பட்ட பதுக்கல், கறுப்பு மார்க்கெட் போலவே மண்ணெண்ணெய்யிலும் நடைபெற்றிருந்தால் அதைச் சுட்டிக்காட்ட உரிமை கிடையாதா?

உடன்பிறப்பே, மத்திய அமைச்சர் சரியாகவோ அல்லது தவறாகவோ ஏதோ ஒரு தகவலைச் சொல்லி விட்டார் என்றே வைத்துக் கொள்வோம். அதற்கு முதலமைச்சர் பதிலளிக்கக் கடமையும், உரிமையும் பெற்றவர் என்பதை நான் மறுக்கவில்லை. மத்தியில் உள்ளவர்களால் தவறான தகவல்கள் தரப்படுமேயானால், அதனை மறுக்க வேண்டியது மாநில அரசுக்குள்ள உரிமை என்பதில் எனக்கு மாறுபட்ட கருத்தே இல்லை!

ஆனால் நமது முதலமைச்சர் அவர்கள், வீரேந்திர பட்டீல் அவர்கள் மீது வீசிய மறுப்புக்கனை என்ன என்பதை நினைக்கும் போதுதான் வேடிக்கையாக இருக்கிறது.

சிக்மகளூர் தேர்தலில், வீரேந்திர பட்டீலை அ.தி.மு.க.வினர் தோற்கடித்து இந்திரா காந்தியை வெற்றி பெறச் செய்ததால் அவருக்கு எங்கள் மீது கோபம்.

இப்படிப் பாய்கிறது எம்.ஜி.ஆர். அவர்களின் அக்கினியாஸ்திரம்!

பொறுப்புள்ள முதல்வர் பதவியிலிருக்கும் நீங்கள் ஒரு நிர்வாகப் பிரச்சினையை அரசியலாகத் திரித்துக் கூறுவது சரியல்ல!

இப்படி அடக்கத்துடன் ஒரு வர்ணாஸ்திரத்தை விடுத்து வீரேந்திரர், தனது பதிலை முடித்துக் கொண்டுவிட்டார்.

சிக்மளூரில் இடைத் தேர்தலில் இந்திரா காந்தி அம்மையாரின் வெற்றிக்கும், பட்டீலின் தோல்விக்கும் அ.தி.மு.க. உயிரைக் கொடுத்து உழைத்ததாம்!

இதை நம்பச் சொல்லுகிறார், நமது முதலமைச்சர்!

சிக்மகளூரில் அந்தப் பாராளுமன்ற இடைத் தேர்தல் நடப்பதற்கு முன்னால், கர்நாடகத்தில் நடைபெற்ற சட்டமன்றப் பொதுத் தேர்தலில் சிக்மகளூர் சட்டமன்றத் தொகுதியில் அ.தி.மு.க. வேட்பாளர் தனியாக நின்று போட்டியிட்டு பெற்ற வாக்குகள் நானூறு அல்லது ஐநூறுதான்!

அந்தப் பாராளுமன்றத் தொகுதியில் சிக்மகளூர் தவிர்த்த மற்ற சட்ட மன்றத் தொகுதிகளில், தி.மு.க.வுக்கோ, அல்லது அ.தி.மு.க.வுக்கோ எந்தவிதமான அடித்தளமும் கிடையாது.

எனவே அந்தப் பாராளுமன்ற இடைத் தேர்தலில், தி.மு.க.வானாலும், அ.தி.மு.க.வானாலும் ஒரு தார்மீக ஆதரவுதான் தந்திருக்க முடியுமே அல்லாமல், வெற்றி தோல்வியை நிர்ணயிக்கிற வலிமை வாய்ந்த கட்சிகளாக இல்லை என்பது அனைவருக்கும் தெரிந்த உண்மை! திருமதி இந்திரா காந்தி அவர்களுக்கும் அந்த உண்மை தெளிவாகவே தெரியும்.

எம்.ஜி.ஆர். அவர்கள் சிக்மகளூர் தேர்தல் பிரச்சாரத்திற்குக் கூடப் போகாமல் தவிர்த்துக் கொண்டு, ஜனதா அரசிடம் நல்லபிள்ளை என்ற பட்டம் வாங்கிக் கொண்டதும் நன்றாகத் தெரியும்.

சுமார் ஒரு லட்சம் வாக்குகளுக்கு மேல் அதிகம் பெற்று இந்திரா காந்தி அவர்கள் சிக்மகளூர் இடைத் தேர்தலில் வெற்றி பெற்றார். அதில் இந்த நானூறு ஐநூறு வாக்குகளால் தனது வெற்றி

பாதிக்கப்பட்டுவிட்டது என்று எண்ணிக்கொள்ள வீரேந்திர பட்டீல் அவர்கள் அவ்வளவு தெளிவற்ற அரசியல்வாதியல்ல!

எதைச் சொன்னாலும் அது எடுபடும் என்ற நம்பிக்கையில், நமது முதல்வர் அவர்கள் எதையாவது சொல்லி வைக்கிறார்!

கட்டளைக்குக் கை கட்டி நிற்கும் சில ஏடுகள் இருக்கின்றன. அரசின் ஆணையேற்று அதன்படி சிலவற்றைப் பெரிதுபடுத்துவதற்கும் - சிலவற்றை இருட்டடிப்புச் செய்வதற்கும்! பிறகென்ன கஷ்டம்? அதனால்தான் இப்படிச் சிக்மகளூர் சிக்கிக் கொண்டது!

அன்புள்ள,

மு. க.

(13-08-1980)

766. தெரியப்படுத்துக! மறந்துவிடாதே!

உடன்பிறப்பே,

கடந்த பிப்ரவரி திங்கள் சட்டசபை கலைக்கப்படுவதற்கு முன்பு முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் சட்டப் பேரவையிலேயே தனது அரசின் சார்பில் ஒரு பிரகடனத்தை வெளியிட்டார்.

படித்துப் பட்டம் பெற்று, வேலையில்லாதிருக்கும் ஒரு லட்சம் பேருக்கு, மாதம் ஐம்பது ரூபாய் அரசாங்க உதவி அளிக்கப்படும் என்பதுதான் அந்தப் பிரகடனம்.

அந்தப் பிரகடனம் வெளியான சில நாட்களுக்குப் பிறகு, இந்தியாவில் ஒன்பது மாநில அரசுகளுடன் சேர்த்து, தமிழ்நாடு அரசும் கலைக்கப்பட்டது.

வேலையில்லாத பட்டதாரிகள் ஒரு லட்சம் பேருக்குத் தனது அரசு வழங்க இருந்த மாதாந்திர உதவித் தொகை ஐம்பது ரூபாயை வழங்க முடியாமல் மத்திய அரசு தடுத்து விட்டதாக நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் மேடைக்கு மேடை கண்ணீர் விடுத்தார்! கண்டனம் தெரிவித்தார்.

அதுமட்டுமா? கம்யூனிஸ்டுக் கட்சிகளின் தலைவர்கள் எம்.ஜி.ஆர். அவர்கள் அறிவித்த திட்டத்தைக் கவர்னர் ஆட்சியில் நடைமுறைப்படுத்தா விட்டால் போராடுவோம்! என்றும் முழங்கினார்கள்.

தேர்தல் வந்தது! அ.இ.அ.தி.மு.க.வின் தேர்தல் அறிக்கையில் மிகத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருந்தது!

அ.தி.மு.க. ஆட்சியில் வேலையில்லாத பட்டதாரி மாணவர்களுக்கு ஒரு லட்சம் பேருக்கு மாதம் ஐம்பது ரூபாய் உதவித் தொகை வழங்கப்படும் என்ற அறிவிப்பை கவர்னர் ஆட்சியில் நடைமுறைப்படுத்தவில்லை. அ.தி.மு.க. மீண்டும்

ஆட்சிக்கு வந்தால் உடனடியாக ஒரு லட்சம் வேலையில்லாப் பட்டதாரிகளுக்கு மாதம் ஐம்பது ரூபாய் உதவித் தொகை அளிப்போம்!

இதுதான் அ.தி.மு.க.வின் தேர்தல் அறிக்கை!

அ.தி.மு.க. ஆட்சி மீண்டும் ஏற்பட்டு, எம்.ஜி.ஆர். அவர்களும் முதலமைச்சராகி ஜூன் திங்கள் கடந்து, ஜூலை திங்களும் முடிந்து, ஆகஸ்டு திங்களும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதுவரையில் அந்தத் திட்டம் பற்றி அரசாங்கம் வாயைத் திறக்கவேயில்லை!

பட்ஜெட் கூட்டத் தொடரில் அதுபற்றித் தி.மு.கழகத்தின் சார்பிலும், இந்திரா காங்கிரஸ் சார்பிலும் பலமுறை வலியுறுத்தி நினைவூட்டப்பட்டது.

இன்னமும் அந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டதாகத் தெரியவில்லை.

ஒருவேளை, வேலையில்லாத பட்டதாரிகளுக்கு அந்த உதவித் தொகையை இரகசியமாகக் கொடுக்கிறார்களோ? என்னவோ!

அப்படிக் கொடுத்திருந்தால், இதுவரையில் வெளியே தெரியாமல் இருக்குமா என்ன? ஒருவரா? இருவரா? ஒரு லட்சம் பேர்களாயிற்றே! உடன்பிறப்பே! உனக்குத் தெரிந்து யாராவது அப்படி அரசின் உதவித்தொகை பெற்ற வேலையில்லாத பட்டதாரி இருக்கிறாரா?

இருந்தால் எனக்கு எழுது! இல்லாவிட்டால் அவரைக் கேள்! மாதம் ஐம்பது ரூபாய் வந்து கொண்டிருக்கிறதா என்று!

கம்யூனிஸ்டு கட்சித் தலைவர்களும், ஆளுங்கட்சியின் மற்ற தோழமைக் கட்சிகளின் தலைவர்களும் வாயை மூடிக் கொண்டிருப்பதைப் பார்த்தால், ஒருவேளை இந்த உதவித் திட்டம் செயல்படத் தொடங்கிவிட்டதோ என்றுதான் யூகிக்க வேண்டியிருக்கிறது!

இல்லாவிட்டால் கவர்னர் ஆட்சியின் போது இந்தத் திட்டத்திற்காகப் போராட்டம் நடத்தப்போகிறோம் என்று கொடி உயர்த்தியவர்கள், இன்று மௌனமாக இருப்பார்களா?

அவர்களுடைய மௌனத்தை வைத்து எதையும் கணக்கிட்டு விடமுடியாது!

எதற்கும், உடன்பிறப்பே! நீ தயவு செய்து உனக்குத் தெரிந்த, வேலையில்லாத பட்டதாரிகள் யாராவது இருந்தால் அவர்களைக் கேட்டு உண்மையை எனக்கு எழுது!

அத்துடன், ஒவ்வொரு வீட்டுக்கும் ஒருவருக்குக் கட்டாயமாக வேலை தரப்படும் என்ற நமது முதலமைச்சரின் திட்டம் செயல்படுகிறதா? என்பதையும் -

வறுமைக் கோட்டுக்குக் கீழே வேலையில்லாத வயது வந்த ஆண், பெண் இருபாலார்க்கும் ஒருநாளைக்கு ஒரு ரூபாய் தரப்படும் என்று நமது முதலமைச்சர் அறிவித்திருக்கிறார் - அதன்படி உங்களூரில் அல்லது உங்கள் தெருவில் எத்தனை பேருக்கு அந்தப் பயன் கிடைக்கிறது என்பதையும் -

நன்றாக விசாரித்தறிந்து எனக்குத் தெரியப்படுத்துக! மறந்துவிடாதே!

அன்புள்ள,

மு. க.

(14-08-1980)

767. வாழ்க அந்த மானமனிதன்!

உடன்பிறப்பே,

அதிக விளம்பரமோ, ஆர்ப்பாட்டமோ இல்லாத நீண்டகாலச் சுயமரியாதை வீரர் ஒருவர் நேற்று நீங்காத்துயிலில் ஆழ்ந்து விட்டார்!

நெடிய செம்மேனி! நிமிர்ந்த நோக்கு! நேர் கொண்ட நடை! சீர் கொண்ட செந்தமிழில் பழம் பாடல்களை பாடிக்காட்டும் சிங்கக் குரல்! தன்மானக் குன்றம்! தலைதாழாத் தமிழன்!

ஆம்! கம்பராசபுரம் இராசகோபால் மறைந்து விட்டார். அவர் மறைந்த செய்தி மனத்தைக் கலக்க உடனே விரைந்து சென்றோம்! அந்த ஊருக்கு!

சவமாகப் படுத்திருந்த நிலையிலும், அவரது சாகாத கம்பீரத்தைக் கண்டேன். செத்து விட்டேன் பார்த்தாயா! என்று எங்களையெல்லாம் நோக்கிக் கேட்பது போல் வணங்காமுடியாக காட்சியளித்தார்!

இந்த இயக்கத்தை வளர்ப்பதற்காக - அதிலும் கழகத்திற்கு வலுவூட்டுவதற்காக - எத்தனையோ முறை சிறைவாசம்! ஓராண்டு காலம் ஆடாமல், அசையாமல், சிறிதும் தளராமல் வேலூர் சிறைக் கோட்டத்தில் மிசா வாசம்!

ஓரிரு ஆண்டுகளுக்கு முன்பு காஞ்சிபுரத்தில் நீதி தேவன் மயக்கம் நாடகத்தில் நடித்தார்! அண்ணா எழுதிய அற்புதப் படைப்பு! அண்ணா ஏற்று நடித்த இராவணன் பாத்திரத்தில் கம்பராசபுரம் இராசகோபாலைக் கண்டேன். கம்பராக நமது சி.வி.எம்.! அந்தக் காட்சி என் நெஞ்சை விட்டு அகலவில்லை.

கம்பராசபுரத்தில் பிறந்து கம்பரைக் கடாவுகின்ற இராவணனாக, நாடகத்திலே மட்டுமல்ல - வாழ்க்கையிலும் கடைசிவரை உறுதியாக இருந்தவர் அந்த மறைந்த மறத்தமிழர்!

எதிரே வந்து நின்றால், உச்சிச் சூரியனைப் பார்ப்பது போல் அவர் முகத்தை அண்ணாந்துதான் பார்க்கவேண்டும்! அவ்வளவு உயர்ந்த உருவம் மட்டுமல்ல! அந்த உள்ளமும் அப்படித்தான்!

நெஞ்சில் பட்டதை நறுக் என்று சொல்வதில் - இன்னல்கள் எத்தனை அடுக்கடுக்காக வரினும், தடைக்கற்கள் உண்டெனினும் தடந்தோள்கள் உண்டெனச் சிரித்து இலட்சியப் பயணத்தை நிறுத்தாமல் தொடர்வதில் - ஒழுங்கு, கட்டுப்பாடு, இவற்றைத் தன் வாழ்க்கையில் கடைப்பிடிப்பதில் - நிகரற்று விளங்கிய கழகத் தூண் ஒன்றை மரணச்சூறாவளி இடித்துக் கீழே தள்ளிவிட்டதே!

சட்டப் பேரவையில் அவர் பணியாற்றிய போதும் - செங்கற்பட்டு மாவட்டத்தில் செல்வாக்கு பெற்றுத் திகழ்ந்தபோதும் - கொண்ட கொள்கைகளுக்கெனவே அவர் வாழ்ந்தார்! எளிமைக்கோர் எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தார்!

தீவிரமான சுயமரியாதைக்காரர்! அவர் இதயத்தில் இடம் பெற்ற கொள்கைக்கும், அந்தக் கொள்கைகளுக்காக அவர் ஏற்றுக்கொண்ட தலைவர்களுக்கும் இம்மியளவு இழுக்கு ஏற்படுத்த எவர் முனைந்தாலும், அவர்களை அவரது சொற்சாட்டை, பதம் பார்க்காமல் விடாது!

விரசமாக அல்ல - விளக்கமாக! வேகமாக அல்ல - விவேகத்துடன்!

அந்த வீரரைத்தான் இந்தக் கழகம் இழந்து விட்டது!

செம்மாந்து செந்தமிழில் இயக்க முழக்கம் செய்து கொண்டிருந்த செம்மலை சாய்ந்து விட்டது!

கண் மூடித்துயில் கொண்டுவிட்ட அந்தப் பெருமிதமான ஏறு நடை மனிதனின் இறுதி முகதரிசனத்தை நான் கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டேயிருந்தேன்!

இன்னமும் அந்தத் துணிவுமிக்க தூயமனிதன், என் நெஞ்சில் நிழலாடிக் கொண்டுதானிருக்கிறான்.

எப்போதும் இருப்பான்!

வாழ்க அந்த மான மனிதன்!

அன்புள்ள,

மு. க.

(17-08-1980)

768. நம் குலம் விளங்கக் கூடுகிறோம்!

உடன்பிறப்பே,

இன்னும் இடையிலே நான்கே நாட்கள்தான்!

நெல்லைச் சீமை அழைக்கிறது, உன்னையும் என்னையும்!

குடும்பத்துடன் பயணம் புறப்படத் தயாராகிக் கொண்டிருப்பாய் என்பது எனக்குத் தெரியும்.

நெல்லை, தொடர்ந்து நடக்க இருக்கிற நமது மாவட்ட மாநாடுகளுக்குத் தொடக்க விழா நடத்துகிறது.

உன் எழுச்சிப் பவனியை அங்கே கண்டிடவும், உணர்ச்சி முழக்கத்தைக் கேட்டு ஊக்கம் பெற்றிடவும் - உன் எஃகு உள்ளத்தையும், அந்த உள்ளத்திலிருந்து ஒளிவிடும் உறுதியையும் சோர்வெலாம் போக்கிடும் மாமருந்தாகப் பெற்று மகிழ்ந்திடவும் நெல்லைக்குப் புறப்பட நான் துடித்துக் கொண்டிருக்கிறேன்.

மே திங்கள் இறுதியில், நெல்லை மாவட்டத்தில் இலட்சோபலட்சம் மக்கள் குழுமிய கூட்டங்களில் உன் நம்பிக்கை நிறைந்த முகத்தைப் பார்த்துத் திரும்பியவன் நான்!

தேர்தல் முடிவுகளால் நீ அதிர்ச்சியுற்றிருப்பாய் - கலக்கத்திற்கு ஆளாகியிருப்பாய் - இப்படி ஆகி விட்டதேயெனக் கை பிசைந்து நிற்பாய் - குழப்பம் மிகுந்திடும், கூடாரம் காலியாகி விடும் - என்றெல்லாம் எதிர்பார்த்தோர்தான் இன்று ஆச்சரியத்தால் விழிகளை அகலத் திறந்துகொண்டு நிற்கிறார்கள்!

தேர்தல் முடிவு கண்டு நீயும் நானும் திகைத்து நிற்கவுமில்லை! திசை தெரியாத கப்பலாகி விட்டதே கழகமெனத் திடுக்கிட்டுப் போகவுமில்லை! காரணம், நாம் தேர்தலுக்காக மட்டுமே கட்சி நடத்திக் கொண்டிருப்பவர்கள் அல்லர்!

சித்தன்னவாசல் சிற்பம்போல் சிதையாமல் - அஜந்தா ஓவியங்கள் போல் கலையாமல் - எல்லோரா, மாமல்லபுரத்தில் ஏற்படும் சின்னஞ்சிறு இடிபாடுகள் கூட நிகழ்வதற்கு இடமில்லாமல் - இலட்சியத்தைச் சிற்பமாக இதயத்தில் வடித்துக்கொண்ட உடன்பிறப்பு நீ என்பதையும் - கொள்கையெனும் மங்காத ஓவியத்துக் கருவூலமாக உன் நெஞ்சம் விளங்குகிறது என்பதையும் நானறிவேன்!

பதவி வரின் அதனைப் பணியாற்றும் வாய்ப்பாகக் கருதுபவர்களே தவிர, அது எந்த வீட்டு வாசலில் வந்து விழும் என்று வாய்ப்பிளந்து நிற்கும் நிலையிலே உள்ளவர்களல்ல, நிலை மாறாத என் உடன்பிறப்புகள் என்று கணக்கிட்டே நான் வைத்திருக்கிறேன்.

வற்றாத ஜீவநதி ஓடிக்கொண்டேயிருக்கிறது! அதிலிருந்து துள்ளும் மீன்கள் தவறிப்போய்க் கரைகளில் விழுந்து காய்ந்து போய் விடுகின்றன! ஆனாலும், அந்த நதி ஓடிக்கொண்டேயிருக்கிறது! சில மீன்கள் வலையில் சிக்குகின்றன - சில மீன்கள் தூண்டிலில் துடிக்கும் புழுவை விழுங்கப் பாய்ந்து தூண்டில்காரனின் வயிற்றுக்குள் போகின்றன.

ஆயிரம், பதினாயிரம், இலட்சம், கோடியென்று எண்ண முடியாத அத்துணைத் துளிகளைக் கொண்டது தான் அந்த நதிப் பிரவாகம்!

அந்த நதியிலிருந்து தண்ணீர்த் துளிகளைக் களவாடுவது கூட, பெரிய நெற்களஞ்சியத்திலிருந்து குருவிகள் சில நெல்மணிகளைக் கொத்திக்கொண்டு போவது போலத்தான்!

சிறு துளிகள் பெருவெள்ளமாகி, அந்தப் பெருவெள்ளம் வற்றாத நதியாகிக் கரைபுரண்டு ஓடிக்கொண்டிருக்கும் காட்சி காணப்பிடிக்காத எரிச்சல்காரன்தான் - அதோ அந்த மீன்கள் துள்ளியோடி விட்டன - அல்லது தூண்டிலில் சிக்கிவிட்டன - என அகமகிழ்ந்து, அதனால் அந்த ஆறு அழகிழந்தது எனக் கூறுவான்! அவனே தன் கைநிறைய ஆற்று நீரை அள்ளி எடுத்துக் கொண்டு ஆகாகா! ஆற்றையே வற்ற வைத்துவிட்டேன் என்று ஓங்காரக் கூச்சலிடுவான்!

அந்தப் பைத்தியக்காரனைப் பற்றிக் கவலைப்படாமல் அந்த ஜீவநதி ஓடிக்கொண்டேதானிருக்கிறது!

அந்த நதிதான் நமது கழகம்! அந்த நதியை உருவாக்கிய துளிகள்தான் கழகத்துக் கண்மணிகளாம் உழைக்கும் உடன்பிறப்புகள்!

அந்தச் சிறு துளிகளால் பெருகி வரும் ஜீவநதியை வற்றிடச் செய்வோம் என்போர், நமது வலிமை அறியாதோர்!

தேர்தலை மட்டும் வைத்து நமது பலத்தைக் கணிப்போர் ஏமாந்து போவார்! தியாக வேள்வியில் சுடர்விட்டுப் பிரகாசிப்பது இந்த இயக்கம் என்பதை அவர்கள் மறந்திடுவதால் ஏற்படும் குறைபாடு அது!

நதிப் பெருக்கை நெல்லையிலே ஊர்வலமாகக் காட்டிடுவோம்!

மாநாடாகக் கண்டு தெளிவீர்! எங்கள் மாநதியாம் கழக வலிமையென உணர்த்திடுவோம்!

ஆகஸ்டு 23, 24 - வழக்கம்போல் ஊர்வலத்தில் இருந்தவாறே என் உயிரினும் மேலான உடன்பிறப்பே! உன்னைத் தேடுவேன்! மாநாட்டுப் பந்தலில் நீ எங்கே அமர்ந்திருக்கிறாய் என ஆவலுடன் பார்ப்பேன்!

ஆருயிர் உடன்பிறப்பே! நானழைத்து நீ வராமல் இருந்ததுண்டா?

வா! வா! குடும்பத்துடன் நெல்லை நோக்கிப் புறப்படு!

நம் குலம் விளங்கக் கூடுகிறோம்; நம் கொள்கை வென்றிடக் கூடுகிறோம் - வா! வா! வா!

அன்புள்ள,

மு. க.

(18-08-1980)



1924 - 2018

நூல் கிடைக்குமிடம் :

கௌரா புத்தக மையம்
9, செ. ஜான் சர்ச் வணிக வளாகம்,
ராக்கின்ஸ் சாலை, திருச்சி - 1.
gowraputhagamaiyam@gmail.com

கௌரா ஏஜென்ஸீஸ்
1, சாமி தெரு, திருவல்லிக்கேணி,
சென்னை - 5. gowra09@gmail.com.
www.facebook.com/gowrabookcentre

கௌரா
பதிப்பகக் குழுமம்

அட்டை : ஜே.ஜே டிசைன்ஸ்

GO 2300
ரூ.300

செப்டம்பர் 2022